கலைமகள்

தொகுதி ௨௫] தாரண ௵ ஆடி ௴ :: ஜூலை 1944 [பகுதி ௧௫௧

படிக்காதே!

"வெட்டு, நூற்றுக்கு எழுபது வீதம் காகித உபயோகத்தை வெட்டு" என்று முன்பு இந்திய அரசாங்கத்தார் உத்தரவு போட்டார்கள். அந்த உத்தரவு வந்தாலும் வந்தது, காகிதம் ஸாக்ஷாத் பகவானைப் போல எங்கெங்கோ ஓடி ஒளிந்துகொண்டுவிட்டது. அதைப் பிடித்துக் கிடைத்த காகிதத்தைக்கொண்டு புஸ்தகமோ, பத்திரிகையோ போட்டு ஜனங்களுக்கு அறிவு விருந்தை அளித்துவந்தார்கள். இப்போது அந்த முப்பது சதவிகிதத்திற்கும் சனியன் பிடித்திருக்கிறது. "அதையும் வெட்டு; அதிலும் 70% குறை!" என்று பூதத்தைப்போன்ற உத்தரவு ஒன்று ஜூன் மாதம் 12-ஆம் தேதி பிரசவமாகிப் பயமுறுத்துகிறது. அதாவது முதலில் 30 சதவிகிதம் இருந்தது; அதிலும் 30 சதவிகிதமென்றால், பழைய நிலையில் 9 சதவிகிதந்தான் உபயோகிக்க வேண்டும்!

யுத்தகாலத்தில் மற்றத் தேசங்களிலெல்லாம் பொது ஜனங்களுடைய அறிவும் ஒழுக்கமும் தடுமாறாமல் இருப்பதற்குப் பிரம்மப்பிரயத்தனங்கள் செய்துவருகிறார்கள். யுத்தத்திற்குப் பிறகு நாட்டில் அமைதியும் சுபிக்ஷமும் நிலவவேண்டுமானால் இப்பொழுதிருந்தே அஸ்திவாரம் போடவேண்டுமென்று உலகமுழுவதும் நிபுணர்கள் கூடிக் கூடி மூளையைக் குழப்பிக்கொண்டு என்ன என்னவோ திட்டம் போடுகிறார்கள். இங்கே, என்னடா என்றால் அரசாங்கத்தார் "படிக்காதே" என்று உத்தரவு போடுகிறார்கள். ஆம்! இப்போது வந்திருக்கும் காகிதக் கட்டுப்பாடு மறைமுகமாக ஜனங்களை, "படிக்காதே!" என்று சொல்வது போலத்தான் அமைந்திருக்கிறது.

(1) பொதுவாக இந்த உத்தரவை வெளியிடுவதற்குமுன் தொழிலில் சம்பந்தப்பட்டவர்களைக் கலந்துகொண்டு ஆலோசனை செய்யாமல் ரிஷிகர்ப்பம் போல அவசர அவசரமாக இது பிறந்திருக்கிறது.

(2) பிறந்த க்ஷணமே இது உலவத் தொடங்கிவிட்டது. பொது ஜனங்களுடைய ஆக்ஷேபங்களையும் ஆலோசனைகளையும் கொஞ்சமாவது எதிர்பார்ப்பதாக இருந்தால் இந்த உத்தரவை இவ்வளவு கெடுபிடியாக அமலுக்குக் கொண்டுவர வேண்டிய அவசியமே இல்லை.

(3) காகிதச் சிக்கனத்தைப்பற்றி நன்றாக ஆலோசனை செய்திருந்தால் அரசாங்கத்தார், பல துறைகளில் வீணாக்கும் காகிதத்தைக் கட்டுப்படுத்தலாம். புஸ்தகத்தின் அளவு, எழுத்தின் அளவு முதலிய விஷயங்களில் சிக்கனம் செய்ய ஆலோசனை கூறியிருக்கலாம்.

(4) உள்நாட்டுக் காகிதச் சிக்கனத்தால் விளையும் கொடுமையான விளைவுகளைத் தடுக்க, வெளிநாட்டிலிருந்து வந்து வீணாகக் கிடக்கும் பத்திரிகைக் காகிதம் (News-print) முதலியவற்றைப் பகிர்ந்து கொடுக்க ஏற்பாடு செய்யலாம். இந்தமாதிரி உருப்படியான வகை ஒன்றும் இன்றி, புஸ்தகமானாலும் சரி, பத்திரிகையானாலும் சரி, ஒரே வெட்டாக 30 சதவிகிதத்துக்கு வெட்டும்படி உத்தரவு சொல்கிறது.

புஸ்தகத்துக்கு மொத்தக் காகிதச் செலவில் குறைக்கவேண்டும் என்று உத்தரவு சொல்கிறது. பத்திரிகைகளுக்கோ, பக்கங்களைக் குறைக்கும்படி கட்டளையிடுகிறது: ஜூன் மாதம் 12-ஆம் தேதிக்கு முந்திய ஆறு மாதங்களில் வெளியான பக்கங்களின் கணக்குப்படி சராசரி ஓர் இதழுக்கு வரும் பக்கங்களில் நூற்றுக்கு முப்பது விதமே - மூன்றில் ஒரு பங்குக்குக்கூடக் குறைவு - அச்சிட வேண்டுமாம்! கலைமகள் விளம்பரம் உட்பட 24 பக்கங்களே வெளியிடலாம்!

கலைமகள் முன்பெல்லாம் 120, 112, 108 பக்கங்கள் உடையதாக வெளி வந்தது. காகிதப் பஞ்சத்தை நன்கு உணர்ந்து வரவர நாங்கள் பக்கத்தைக் குறைத்துவந்தோம். வாசகர்களுடைய அறிவுப் பசியைத் தீர்ப்பதற்கு எழுத்தாளர்களும், பதிப்பாளர்களும் இருந்தும் இடையே இந்த உத்தரவுகள் வந்து பாதிப்பதற்கு மிகவும் வருந்தினாலும் பக்கங்களை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்து வெளியிட்டோம். ப்ளாக்குகள், எழுத்து முதலிய பலவகையில் என்ன என்னவோ தந்திரங்களைச் செய்து கூடியவரையில் கலைமகளின் பொலிவு குறையாமல் வெளியிட முடிந்தது. இதிலும் "கடுமையாகக் குறைப்பது" என்பது எப்படி முடியும்?

பத்திரிகைகளில் எத்தனையோ விதம் இருக்கின்றன. அப்பொழுதே படித்துத் தூர எறிவனவும் உண்டு. புஸ்தகத்தைப்போலவே வைத்துப் பாதுகாப்பனவும் உண்டு. கலைமகளைப் போல இலக்கிய சேவையைச் செய்து வரும் பத்திரிகைகள் இரண்டாவது வகையைச் சேர்ந்தன. தமிழ் நாட்டுப் புஸ்தகசாலைகளில் கலைமகள் தொகுதிகள் இருந்துவருவதே இதற்குச் சாட்சி. நிலையான உபயோகம் இருப்பதனால் இந்தப் பத்திரிகையைப் பைண்டு செய்து வைத்துக் கொள்கிறார்கள். அதை உணர்ந்தே இதை நல்ல காகிதத்தில் வெளியிடலானோம். இப்பொழுதோ பத்திரிகைத் தாள் (News-print) உபயோகிப்பவர்களுக்குப் பல மைல் தூரத்திலிருந்து காகிதம் வந்து கொண்டிருக்க, நமக்கோ அருகில் விலையும் சரக்குக்கும் 'வல்லடி' வந்துவிட்டது. இதைக் காட்டிலும் விநோதமான நிலை வேறு உண்டா?

24 பக்கத்தில் விளம்பரம் போக 16 பக்கத்தில் கட்டுரைகளை நிரப்பிக் கலைமகளை அனுப்பினால், முன்னாடியே போதுமானபடி பசியடங்காத வாசகர்களுக்குக் கடைவாய்க்குக் கூடப் போதாதே! "நாங்களும் பத்திரிகை நடத்துகிறோம்; நீங்களும் வாங்கிப் படியுங்கள்" என்ற கேலிக்கூத்தினாலா பொது ஜனங்கள் அறிவுவிளக்கம் பெறுவார்கள்? யுத்தத்திற்குப் பிறகு நாடு முன்னேற வேண்டுமென்று போடும் திட்டம் இதுதானா?

இப்போது வந்த உத்தரவினால் விளையும் விபரீதங்களைச் சுருக்கமாகச் சொல்லிப் பார்க்கலாம்:

(1) பத்திரிகைக்காரர்கள், பிரசுரகர்த்தர்கள் தங்கள் தொழிற்சாலையைப் பூட்டிவிடுவார்கள்; அல்லது பேருக்குத் தொழில் நடத்துவார்கள்.

(2) ஏழைத் தொழிலாளர் பலருக்கு உத்தியோகம் போய்விடும்.

(3) உலகத்தைத் தங்கள் பேனாவால் ஆளுவதாகப் பெருமைப்படும் உரிமைபெற்ற எழுத்தாளர்கள் பேனாவை ஒடித்துப் போட்டுப் படுக்கையைத் தட்டிப் போட்டுக்கொள்வார்கள்.

(4) பொது ஜனங்கள் கலையறிவு முதலியவற்றை வளர்க்கவேண்டுமென்ற ஆசைக்கு விடைகொடுத்துவிட்டுச் சிட்டாட்டத்தில் புகுந்துவிடுவார்கள்.

(5) புஸ்தகசாலைகள், பள்ளிக்கூடங்கள் - புஸ்தகங்கள் இருக்கவேண்டிய இடங்கள் எல்லாம் இடம் காலியாகித் தட்டு முட்டுச் சாமான்கள் வைக்க உபயோகப்படும்.

(6) தேவைக்கு ஏற்ற காகிதம் இல்லை என்ற நிலைபோய், காகித வியாபாரிகளிடம் வெள்ளைக் காகிதம் ஒரு பக்கம் குவிந்து கிடக்க, ஒரு பக்கம் கையில் விலங்குபோட்ட மனிதன் பசியால் துடித்தாலும் பக்கத்தில் உள்ள சாப்பாட்டை உண்ணமுடியாத நிலையில் இருப்பதுபோலப் பிரசுராலயத்தினர் தலைவிதியை நினைந்து இரங்குவார்கள்.

இவ்வளவும் நேர்ந்தால் "படிக்காதே!" என்று தனியே சொல்ல வேண்டுமா என்ன?

இந்த மாதம் 11-ஆம் தேதி பம்பாயில் நடக்கப்போகும் கூட்டத்தில், எழுத்தாளர்களும் பிரசுரகர்த்தர்களும் அச்சுத்தொழில் முதலாளிகளும் ஏற்கனவே செய்துகொண்டுள்ள விண்ணப்பங்களை ஆலோசித்து, அரசாங்கத்தார் இந்தச் சங்கடமான நிலையை மாற்ற ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறோம்.

ஆசிரியர்

அன்பே சிவம்

புத்தனேரி ரா. சுப்பிரமணியன்



1

மாங்குடி என்னுமோர்
நாடத லைச்சிறு
மன்னன் ஒருவனும்
ஆண்டு வந்தான் ;
பாங்கன் எனும்பெயர்
கொண்டவனும் ; அவன்
பார்மிகு செல்வம்
படைத்தவனும்.

2

கொற்றவன் செல்வம்
அனைத்தினை யும்சிவன்
கோவில் அமைத்திடத்
தான் கொடுத்தான் ;
உற்றவர் கட்டிட
வேலை துவக்குதற்
கூரினில் ஆட்களைத்
தேடினரே.

3

செங்கல் குவித்தனர் ; சுண்ணும்பு சேர்த்தனர் ;
தேக்கு மரங்கள் அடுக்கினரே ;
கங்குலி லும்பல காளைகள் வண்டியில்
கல்மணல் கொண்டு சுமந்தனவே.

4

கொல்லரும் தச்சரும் கூலிக ளும்பல
கொத்தரும் கூடி உழைத்தனர்காண் ;
அல்லலுற்று மணல் வண்டி இழுத்ததால்
அங்கம் மெலிந்தன காளைகளும்.

5

என்பு தெரிந்திடப் பாரம் இழுத்திழுத்
தேங்கி வரும் அந்தக் காளைகள்பால்
அன்பு செலுத்தியே ஓர் கிழவி தினம்
அளித்தனள் புல்லுத்தண் ணீருடனே.

6

கோயிலைக் கட்டி முடிக்கும்வரை அவள்
கொண்டனள் இந்தப் பணிவிடையே ;
வாயிலாப் பிராணிகள்மீதி லவள்கொண்ட
வாஞ்சையின் மாண்பினை என்ன சொல்வேம் !

7

மன்னவன் பாங்கன் பெயரினை யேபொன்னில்
மாண்புறத் தீட்டிக்கல் லிற்பொதிந்து
உன்னத மாயந்தக் கோவில் முன் னேவைத்தே
ஊரவர் மகிழ்ச்சி உற்றனரே.

8

மாலை கழிந்ததும் கோவில் முகப்பினில்
மன்னன் பெயரினைக் காணவில்லை !
வேலைசா லன்பு முதியவ ளின்பெயர்
மேலே தெரிவதைக் கண்டாரம்மா !

9

மன்னவன் கண்டு வியப்புட னேபெரு
வாட்டமுற் ருன் ; கடுங் கோபமுற்ருன் ;
'என்ன புதுமை !' என் றெல்லவ ரும்அதை
எறிட்டுப் பார்த்து வியந்தனரே !

10

"கல்லைப் பிடுங்கி எறிந்திடுங்கள்" என்று
காவலன் ஆணை கொடுத்தவுடன்,
"நில்லுங்கள் !" என்ருெரு பேரொலி வானத்தில்
நீடித் தொனித்திடக் கேட்டனரே !

11

"மன்னவ ! நீஅம் முதியவளின் உயர்
மாண்பை அறிந்திட மாட்டாயே !
அன்னவள் அன்பின்
பெருமையி லேஎன் றன்
ஆலயம் எழுந்த
தாகுமப்பா !"



12

கூனற் கிழவியின்
அன்புப் பணியினை
வானொலி சொல்லிடக்
கேட்டரசன்
ஞான நிலையினைக்
கண்டவன் போலஅவன்
நாவினுள் "அன்பே
சிவ"மென்ருன்.

காலத்தின் போக்கு

டாக்டர் தி.சே.சௌ.ராஜன்

வைதிகக் கோட்டையை உடைக்கும் முயற்சியை நான் நிறுத்தவில்லை. எனது தொழிலும் எனக்கு இம் முயற்சியில் பலம் கொடுத்தது. வறுமை யுற்றவர்களுக்கு இலவசமாக வைத்தியம் செய்துவந்தேன். பலனை எதிர்பாராமல் நான் ஏழைகளுக்கு உழைத்ததால் என் பெயர் மக்களிடத்தில் அதிவேகமாகப் பரவியது. சில ஏழைகளுக்குச் செய்த உதவி பல தனவான்களை என்னிடம் கொணர்ந்தது. எனது தொழிலும் வெகு வேகமாக விரிவுற்றது. வருவாயும் அதிகரித்தது. சர்க்கார் அதிகாரிகளும், ஜில்லா உத்தியோகஸ்தர்களும், பல்வேறு மதத்தினர்களும் என் உதவியை நாடினார்கள். அதனால் ஜன சமுதாயத்தில் ஒரு செல்வாக்கு உண்டாயிற்று. உள்ளூர்க் கட்சிச் சண்டைகளுக்கு எனது அபிப்பிராயத்தையும் எனது சக்தியையும் பயன்படுத்த வைதிகர்கள் முன்வந்தார்கள். ஆனால் எனது சமரச நிலையை அவர்கள் ஆதரிக்கவில்லை.

அகோபில மடம் வடகலை வைஷ்ணவர்களில் பெரும்பாலோருக்குக் குரு பீடம். அகோபிலம் என்பது கர்நூல் ஜில்லாவில் நல்ல மலைத் தொடரின் தென்பகுதியில் இருக்கிறது. ஆழ்வார்களால் பாடப்பெற்ற புனித க்ஷேத்திரம் அது. மலைக்கு மூன்று மைலுக்கு மேலிருக்கும் காட்டில் பெரிய அகோபிலம்; அடிவாரக் காட்டில் சின்ன அகோபிலம். இரண்டு கோவில்களும் மிகப் பெரியன. எந்தக் காலத்தில் எந்த அரசர்கள் இப்பெரிய கோவில்களையும், அவற்றினுள் அடங்கியிருக்கும் சிற்பக்கலைகளையும் உண்டாக்கினார்கள் என்பதைப் பற்றிய விவரம் எனக்குத் தெரியாது. ஒரு சமயம் விஜயநகரம் சமஸ்தானம் உச்சநிலையை அடைந்திருக்கும் காலத்தில் உண்டானதாக இருக்கலாமென நினைக்கிறேன். இப்பெரிய காடுகளிலும், மலைகளிலும் நரசிம்மப் பெருமாளுக்காக மகத்தான பெரிய கோயில்களைக் கட்டினவர்களுடைய எண்ணம் ஏதாக இருக்கக்கூடும் என்னும் சிந்தனை எனக்குத் தோன்றியதுண்டு.

அறநிலையங்களுக்குப் பொறுப்பாளியாக மந்திரிப் பதவி வகித்தபொழுது அகோபிலம் காட்டில் ஒரு நாளிரவு தங்கியிருந்தேன். என்னுடன் எனக்கு வழிகாட்டியாக வந்திருந்த காட்டிலாகாத் தலைமை அதிகாரி எனது கூடாரத்தில் ஒரு புறம் குளிர்காய்ச்சலுடன் போராடிக்கொண்டிருந்தார். வைத்தியன் என்ற முறையில் அவர் நோயைப் பற்றி விசாரித்தேன். "இந்தக் காட்டில் நாங்கள் வருஷம் முழுவதும் அலைந்து திரிந்துகொண்டிருக்கிறோம். ஓர் இரவு தங்கினால் போதும். உடனே இந்தப் பாழும் காய்ச்சல் வந்துவிடும். மூன்று வருஷங்களுக்குமேல் இந்தக் காடுகளில் வேலை செய்ய முடியாது. தீராத காய்ச்சல் கட்டி வயிற்றில் உண்டாகிவிடும். காட்டிலாகாவில் உள்ளவர்கள் படும் அவதிகளில் இதுவும் ஒன்று" என்று மிகுந்த துயரத்துடன் சொன்னார். எனினும் அக்காட்டில் வசிக்கும் செஞ்சு ஜாதியார் எப்படி அங்கே வசிக்கிறார்கள் என்ற எண்ணம் என் மனத்தில் உதித்தது. அதைப் பற்றியும் அவரைக் கேட்டேன். "தலைமுறை தலைமுறையாக அவர்கள் இக்காட்டிலேயே புலி, கரடி, பாம்பு, சிறுத்தை இவைகளின் நடுவே வாழ்வை நடத்திவருகிறார்கள். மலைக்கொசு கடித்துப் பழக்கமாகி, இறந்தவர்கள் போக மிகுதியிருக்கிறவர்கள் இந்த நோயால் அதிகம் பாதிக்கப்படுவதில்லை. அவர்களுடைய குழந்தைகளுக்கெல்லாம் வயிற்றில் காய்ச்சல் கட்டி இருக்கும். இவைகளுக்குத் தப்பிப் பிழைத்துவிட்டால் அவர்களுக்கு இந்த நோயினின்றும் ஒரு காப்பு ஏற்பட்டுவிடுகிறது" என்றார்.

இந்தக் காடு ஜாதியார்களுக்காகவா இங்கு நடுக்காட்டில் இறைவன் கோயில் கொண்டு நரசிம்மமாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறான்? அதுவும் கேவலமான கோயிலா? எவ்வளவு லக்ஷம் ரூபாய் செலவழிந்திருக்கவேண்டும்? எவ்வளவு லக்ஷம் உயிர்கள் தியாகம் செய்து இத் திருப்பணியில் ஈடுபட்டிருக்கவேண்டும்! இந்த இரண்டு கோயில்களையும் கண்டு,

தரிசனம் செய்து பக்தியின் மேலீட்டினால் மனமாரப் பாடின ஆழ்வார்கள் அங்கே கண்ட காட்சி என்ன? பெரிய ஊர்களைக் காணவில்லை. காட்டைத்தான் பார்த்தார்கள். மக்களைக் காணவில்லை. கோயிலைத்தான் தரிசித்தார்கள். கோயில் உண்டான காலத்தில் அந்த இடம் ஒரு பெரு நகரமாக இருந்திருக்கலாமா என்ற சந்தேகம் என் மனத்தில் எழுந்தது. அன்றிரவு எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. என்னுடன் வந்திருந்த சர்க்கார்ச் சேவகனுக்கு விடியற் காலத்தில் குளிரும் காய்ச்சலும் கண்டுவிட்டன. சென்னை வந்து இரண்டு மாதம் காயலாக இருந்து நொந்துபோனான்.

அந்தக் கோவில்களுக்குப் பூஜை, நைவேத்தியம் செய்வதற்குத் தெலுங்கு வைஷ்ணவர்கள் பாம்பரையாக இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தால் அவர்களும் செஞ்சு ஜாதியாரைப்போல எனக்குக் காணப்பட்டார்கள். அவர்கள் காய்ச்சலினால் அவதிப்படும் காலத்துக் காட்டுச் செஞ்சுக்கள்தாம் பூசை செய்ய வேண்டி நேரிடும். அப்பூசைகளையும் நரசிம்ம மூர்த்தி அங்கீகாரம் செய்துகொண்டுவருகிறார். நரசிம்மஜயந்தி காலத்தில் ஆயிரக்கணக்கான செஞ்சுக்கள், நல்ல மலையின் பல பாகங்களிலிருந்து இக்காடுகளில் கூடித் திருவிழாக்கள் நடத்துகிறார்கள். இக்கோயில்களுக்கு இன்றைக்கும் நிர்வாகிகள் எங்களுக்கு ஆசாரியாக இருக்கும் அகோபில மடம் சுவாமிகள். ஆனால் சுவாமிகள் தங்களுடைய தலைமை ஸ்தானமாகிற அகோபிலத்தில் வசிப்பதில்லை. ஆனால் அகோபிலத்தில் அர்ச்சாவதாரமாகக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானை, உத்ஸவ மூர்த்தியைத் தம்முடன் கூட எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, 'ராமர் இருந்த இடமெல்லாம் அயோத்தி' என்று சொல்வதுபோல, லக்ஷ்மிநரஸிம்மன் இருக்குமிடமெல்லாம் அகோபிலம் என்று சொல்லும் முறையில் சஞ்சாரம் செய்து வருகிறார்கள். அகோபிலமும் லக்ஷ்மீநரஸிம்ம சுவாமியின் மூர்த்தியும் தமிழ் நாட்டில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் சந்நியாசியிடம் எப்படி வந்தன என்பதை வெளியிடும் சரித்திரம் ஒன்று உண்டு.

பதினாறாவது நூற்றாண்டில் மைசூர் சம்ஸ்தானத்தைச் சேர்ந்த மேல்கோட்டை அல்லது திருநாராயணபுரம் என்னும் க்ஷேத்திரத்தில் ஒரு வைதிக குலத்தில் பிறந்து, வேத அத்தியயனம், சாஸ்திரப் பயிற்சி, இவைகளுக்குரிய ஒழுக்கம், சீலம் நிறைந்த ஒரு பிரம்மசாரி வைஷ்ணவர் இருந்தார். ஒரு நாள் இரவில் அவருடைய கனவில் நரசிம்மமூர்த்தி பிரசன்னமானார். "நான் அகோபிலம் காட்டில் பூஜை நைவேத்தியம் இல்லாமல் இருந்து வருகிறேன். நீ அங்கு வந்து என் பூஜைப் பொறுப்பை எற்றுக்கொண்டு லக்ஷ்மீநரஸிம்மனுடன் சஞ்சாரம் செய்து, வைஷ்ணவ மதத்தைப் பிர்சாரம் செய்ய வேண்டும்' என்று சொன்னதாக அறிந்து அகோபிலம் அடைந்தார். அங்கே பூஜையை எற்று, நரசிம்ம ஸ்வாமியை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு பல இடங்களில் வைஷ்ணவ மதத்தைப் பிரசாரம் செய்தார். அவருடைய பெயர் சடகோபன். குரு பாரம்பரையில், "ஆதிவண் சடகோப யதீந்திர மகாதேசிகன்" என்பது அவர் பெயர். தென்னிந்திய வைஷ்ணவர்கள் பலர் சீடர்களானார்கள். பல இடங்களில் மடமும் சொத்துக்களும் எற்பட்டன. தென்கலை, வடகலை இரு திறத்தார்களிலும் சீடர்கள். இப்பொழுது அந்த யதி பீடத்தில் அமர்ந்திருப்பவர் நாற்பத்து நான்காம் பட்டம். வருஷம் ஒன்றிற்கு லக்ஷத்திற்கு மேலாகச் சொத்துக்கள் மூலம் வரும்படி உண்டு. இப்பொழுது இருக்கும் சந்நியாசியும், அவருக்கு முன்பு இருந்த பீடாதிபதிகளும் நல்ல படிப்பாளிகள். சீலமும் ஒழுக்கமும் நிறைந்தவர்கள். நவீன நாகரிக உணர்ச்சியே இல்லாதவர்கள். லக்ஷ்மீநரசிம்மன் பூஜையொன்றையே பிரதானமாகக் கருதுபவர்கள். இவர்களுடன் சஞ்சரிக்கும் விக்கிரகம் அகோபிலம் கோவிலைச் சேர்ந்தது.

நான் போய்த் தரிசிக்கும் காலையில் அந்தக் கோயிலில் உத்ஸவ மூர்த்தி இல்லை. அழகியசிங்கர் என்ற பட்டப் பெயர் பூண்ட அகோபில மடம் சுவாமிகளோடு சஞ்சாரத்திற்காக எழுந்தருளிவிட்டபடியால் மூல மூர்த்தி மட்டிலும் காட்சி கொடுத்துக் கொண்டிருந்தார். உத்ஸவமூர்த்தி இல்லாதது தங்கள் மனத்திற்கு வருத்தமாக இருக்கிறதெனவும் அந்த மூர்த்தி இல்லாததால் மலைகளில் மழை குறைந்துவிட்டதெனவும் நான் கண்ட செஞ்சுக்கள் என்னிடம் முறையிட்டார்கள். இப்பொழுது கோயம்புத்தூர் ஜில்லாவில் அகோபில மடம் சுவாமிகள் சஞ்சாரம் செய்துகொண்டிருக்கிறார். இப்பொழுது இருக்கும் சுவாமிகளுக்கு இரண்டு தலைமுறைக்கு முன்பாகத் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த காரைக்குறிச்சி என்னும் கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெரியார்

பீடாதிபதியாக இருந்தார். அவர் ஸ்ரீரங்கம் வந்து பெரிய பெருமாளைத் தரிசிக்க வேண்டுமென ஆவல் கொண்டு எழுந்தருளினர். ஸ்ரீரங்கத்தில் அகோபில மடம் பெரியதாகக் கட்டப்பட்டிருக்கிறது. பல தோட்டங்கள், நிலங்கள் முதலிய சொத்துக்கள் உண்டு. இதற்கெல்லாம் ஒரு காலத்தில் என் பாட்டனாரும், சிறிது காலம் என் தகப்பனாரும் அகோபில மடம் ஏஜெண்டுகளாக வேலை பார்த்து வந்திருக்கிறார்கள்.

இந்த மடாதிபதிகளுக்கு அவரவர்கள் பீடத்திற்குத் தகுந்தபடி ஹிந்து சம்ஸ்தானங்களிலும் தேவாலயங்களிலும் மரியாதைகள் நடத்துவது வழக்கம். வைஷ்ணவ ஸ்தலங்களுக்குள் மிகப் பெரியதும் புராதனமுமான ஸ்ரீரங்கம் அகில இந்திய வைஷ்ணவர்களுக்கெல்லாம் ஒரு புனித க்ஷேத்திரம். எந்த மடாதிபதியும், முக்கியமாக வைஷ்ணவ மடாதிபதிகள், தங்கள் ஜீவிய காலத்திற்குள் ஒரு முறையாகிலும் வந்து ஸ்ரீரங்கநாதனைச் சேவிக்காமல் இருக்க மாட்டார்கள். அவர்கள் வரும் காலத்தில் அவர்களுக்கென்று கோவிலில் ஒரு தனி மரியாதை நடத்துவார்கள். அரசர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மரியாதையைக் காட்டிலும் மடாதிபதிகளான சந்நியாசிகளுக்கு நடத்தும் மரியாதை உயர்ந்தது. அகோபில மடம் சுவாமிகள் வடகலைச் சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர். ஸ்ரீரங்கம் கோவில் தென்கலையாருடையது என்பது அந்தக் கலையாருடைய கட்சி. ஆகையால் வடகலை நாமம் போட்ட சின்னங்கள், யானை, குடை, எடுபிடி சாமரங்கள் - இவைகளுடன் ஸ்ரீரங்கத்திற்குள்ளேயே நுழையக்கூடாது என்பது தென்கலையாருடைய கட்சி. அதைப் பின் பற்றி ஓர் ஆங்கில ஜில்லாக் கலெக்டர் நூறு வருஷங்களுக்கு முன்பாக ஸ்ரீரங்கம் தென்கலையார்களுடையது எனவும், வடகலையார்கள் யாதொரு பாத்தியமும் கொண்டாடக்கூடாது எனவும் ஒரு தடை உத்தரவு பிறப்பித்திருந்தார். அதுதான் தென்கலையாருடைய உரிமைக்கு மூல சாதனம்.

நான் ஸ்ரீரங்கத்தில் இருக்கும்பொழுது அகோபில மடம் சுவாமிகள் ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளினர். பல வருஷங்களாக நடத்திய கோர்ட்டு நடவடிக்கை மூலம் ஸ்ரீரங்கம் வீதிகள் பொதுத் தெருக்களென்று தீர்ப்பு உண்டான பிறகு சுவாமிகள் தம் மடத்திற்கு வருவதற்கு ஏற்பட்டிருந்த தடை நீங்கிவிட்டது. ஸ்ரீரங்கத்திற்கு வந்தும் தமக்குள்ள மரியாதைகளுடன் ஸ்ரீரங்கநாதனுடைய தரிசனம் கிடைக்காமற் போனால் அந்த ஊருக்குள் வந்துதான் என்ன பயன் என்பது சுவாமிகளுக்கு அபிப்பிராயம்: வடகலைக் கோஷ்டியார்கள் என்னிடம் வந்து எப்பாடுபட்டாகிலும் சுவாமிகளுக்குத் தகுந்தபடி சேவை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிச் செய்தால் வடகலைக் கோஷ்டியாருக்கும் மடத்திற்கும் பெருமையும், எனக்கு வைதிக சமூகத்தில் நன்மதிப்பும் உண்டாகுமென வற்புறுத்தியதன் பேரில் எனது செல்வாக்கை உபயோகப்படுத்த இசைந்தேன். ஜில்லா ஸப் ஜட்ஜ் உத்தரவின் பேரில், போலீஸ் பாதுகாப்புடன் நடக்க வேண்டிய மூன்று நாள் மரியாதைகளும் நடந்தன. நானும் உடனிருந்து கலவரம் இல்லாமல் நடத்திவைத்தேன். மூன்றாவது நாள் மரியாதை நடந்த பிற்பகல் சென்னை ஹைகோர்ட்டிலிருந்து ஒரு தடை உத்தரவைத் தென்கலையார் பெற்றார்கள். அதற்குள்ளாக மரியாதைகள் நடந்துவிட்டன. ஸ்ரீரங்கத்திலும் யாதொரு புரட்சியும் உண்டாகித் தடைப்பட்டதாகக் காணப்படவில்லை.

அகோபில மடம் ஜீயர் சுவாமிகள் இரண்டு மாத காலம் அந்த ஊரிலேயே தங்கியிருந்தார். சிஷ்ய கோடிகள் எல்லோரும் வரவேற்றுக் கைங்கர்யம் செய்தார்கள். நான் மடத்துச் சேனை இருந்து இவ்வளவு உதவி செய்தும் சுவாமிகள் என்னைத் தம்மிடம் வருமாறோ என் உபசாரங்களைப் பெறவோ விரும்பவில்லை. என் தகப்பனாரைச் சுவாமிகளுக்கு நன்றாகத் தெரியும். என் தகப்பனார் அவரிடம் இரண்டு மூன்று தடவை சென்று, ஆசாரியன் என்கிற முறையில் தமக்குப் பரந்யாஸம் (சரணாகதி) செய்து வைக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார். பரந்யாஸம் அல்லது சரணாகதி, அதிருஷ்டம் என்கிறது வைஷ்ணவர்களுக்குள் ஒரு தத்துவம். இதன் அடிப்படையான கொள்கை நான் அறிந்த மட்டில் இதுதான்: சாமான்ய மனிதன் குருவின்றி மோக்ஷத்தை அடைய முடியாது. இவனைக் கை தூக்கி விடுவதற்குக் குரு ஒருவரால் தான் முடியும். குருவும் தாமாக ஒன்றும் செய்ய முடியாது. பகவானாக விளங்கும் ஸ்ரீமந் நாராயணனிடத்துத் தம் சிஷ்யனைக் காண்பித்து, "இந்த ஜீவாத்மா விடுதலை

கோருகிறது. அதற்காக என்னை வந்து அடைந்து வழிதேடுகிறான். நான் தங்களிடம் அவனைக் கொணர்ந்திருக்கிறேன். திருவருள் புரிய வேண்டும்'' என்று பிரார்த்திப்பார். இதனால் ஸ்ரீமந் நாராயணன் கருணை கூர்ந்து வைகுண்டத்தில் இந்த ஜீவனுக்கு இடம் கொடுக்க இசைந்து விடுகிறான். இது வைஷ்ணவர்களுக்கு உண்டான மோக்ஷ சாதனம். சீடன் பரிபக்குவமடைந்து, நல்ல சீலனாகவும், வருணாசிரம தர்மத்தைக் கடைப்பிடித்து வாழ்க்கை நடத்துபவனாகவும் இருந்து குரு கடாக்ஷத்திற்குப் பாத்திரன் ஆகும்படி நடந்து, கடைசியில் இந்த அதிருஷ்டப் பதவியைப் பெற வேண்டும். இந்தச் சீடனுக்கு உய்யும் வழி பெற யோக்கியதை உண்டு இல்லை என்பதற்குக் குருவே முடிவான அதிகாரி. அவர் என்ன நிபந்தனைப் பிரகாரம் நடக்க வேண்டுமென்று சொல்லுகிறாரோ அப்படியே நடந்து, பிறகு அவரது அநுக்கிரகத்தைப் பெறவேண்டும். இந்த மோக்ஷ சாம்ராஜ்யத்திற்கு ஆண், பெண் இருவரும் தகுதி உடையவர்கள். பாபியான சீடனைப் பகவானுக்குச் சிபார்சு செய்தால் அந்தச் சீடனுடைய பாவங்கள் எல்லாம் குருவிற்குச் சேரும். ஆகையால் உத்கிருஷ்டமான மனிதனுக்குத்தான் இந்த வழியைக் குரு காண்பிக்க வேண்டும். மனிதன் பிறவி எடுத்ததற்கு இதைக் காட்டிலும் உயர்ந்த பதவி இல்லை.

ஆனால் நடைமுறை வேறு. பரந்யாஸம் செய்துகொள்ளப் பிரியப்படுபவர்கள் முதல் நாளே வைதிக சின்னங்களோடு மடத்துச் சுவாமிகள் முன்னிலையில் சென்று இடைவிடாது ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்துகொண்டிருக்க வேண்டும். சுவாமிகளின் கவனத்தைப் பெற்று அவர் போதுமென்று சொல்லிய பிறகு நமஸ்காரத்தை நிறுத்திக்கொண்டு, பரந்யாஸம் ஆகவேண்டுமென்று பிரார்த்தனை செய்ய வேண்டியது. இதற்காகக் குறைந்த தொகை பத்து ரூபாய் மடத்திற்குச் செலுத்தவேண்டும். கணக்குப் பிள்ளையிடம் பணம் செலுத்தி உத்தரவு பெற்று மறுநாள் காலையில் சுவாமிகள் லக்ஷ்மீநரசிம்மனுக்கு ஆராதனம் செய்யும் வேளையில் கோஷ்டியில் காத்திருந்து, பிறகு சுவாமிகளிடத்துச் சென்று தன்னந்தனியே அவருடன் இருந்து உபதேசத்தைப் பெற்று அதற்குப் பிறகு ஆசாரியனைத் திருப்திப்படுத்தும் விதமாக நடந்து கொள்ள வேண்டும். பொருள் கொடுக்கக்கூடியவர்கள் பொருளைக் குருவின் மனம் குளிரும்படி கொடுக்க வேண்டும். மடத்துச் செலவுகளை ஒரு நாளோ அல்லது தங்களால் எவ்வளவு நாட்கள் முடியுமோ அவ்வளவு நாட்களோ ஏற்றுக்கொள்ள வேண்டும். லக்ஷ்மீநரசிம்மனுக்கு உத்ஸவங்கள் செய்விக்கவேண்டும். ஒன்றுக்கும் செயல் இல்லாதவர்கள் அன்றைத்தினம் மடத்தில் இனாமாகச் சாப்பிட்டு ஆசாரியன் அநுக்கிரகத்தைப் பெற்றுப் போக வேண்டும். ஆதிகாலத்தில் நியமம், நிஷ்டை, ஆசாரம், ஒழுக்கம், வைஷ்ணவ பத்ததி இவைகளைப் பின்பற்றிவந்த காலத்தில் நடந்த முறை வேறு. தற்சமயம் இது ஒரு சடங்காக, வியாபார முறையில் நடந்துவருகிறது. நல்லவர்கள், கெட்டவர்கள், ஒழுங்கீனர்கள், போக்கிரிகள் எல்லோருக்கும் பரந்யாஸம் நடக்கிறது. இதற்குப் பழி, காலத்தின் பேரில். காலம் கலியுகம் அல்லவா? இவ்வளவு மட்டிலாவது ஆசாரியனிடத்தில் வர வேண்டும், அதிருஷ்டம் பெற வேண்டும் என்று ஓர் எண்ணம் இருப்பதே மேல். இதை வைத்துக்கொண்டு வைஷ்ணவ மதத்தைக் காப்பாற்றினால் போதாதா என்பதுதான் சுவாமிகளின் எண்ணம். மேலும் பெரும்பாலான சீடர்களின் நன்மதிப்பைப் பெறவேண்டுமென்கிற ஆவல். முக்கியமாகத் தனவந்தர்கள், சர்க்கார் உத்தியோகத்தில் பெரிய பதவிகளை வகிக்கும் சீடர்கள், மடத்தின் சக்தியைத் தாங்கள் பங்கிட்டுக்கொள்ளும் முறையில் மடத்திற்கு உழைக்கும் ஏழை வைதிகர்கள் என்கிற நாமதாரிகள் இவர்களுடைய ஆதிக்கத்தில் மடமும் ஆசார்யனும் நடக்க வேண்டிய காலமாக இருக்கிறது.

ஆகையால் என் தகப்பனார் கோரியபடி பரந்யாஸம் செய்தால் தமக்கு ஆதரவாக இருப்பவர்கள் என்ன சொல்வார்களோ என்கிற பயம் சுவாமியின் மனத்தில் உண்டாயிற்று. ஆகையால் பரந்யாஸம் செய்வதற்கு முன்பாக, ''நீர் சேது ஸ்நானம் செய்துவிட்டு வாரும். பிறகு பரந்யாஸம் செய்து வைப்பதைப்பற்றி யோசனை செய்வோம்'' என்று உத்தரவு கிடைத்தது. என் தகப்பனார் முன்கோபி. தாம் ஸ்ரீரங்கத்து மடத்து ஏஜெண்டாக இருந்த காலத்தில் இப்பொழுது சந்நியாஸியாக இருப்பவர் மடத்தில் பூஜை செய்பவராக அமர்ந்திருந்தார். இன்று சுவாமியாகப் பீடத்திலமர்ந்து தம் கோரிக்கைக்கு ஒரு விதி ஏற்படுத்துகிறார் என்ற கோபம் உண்டாயிற்று.

அதை அடக்கமுடியாமல் அவரிடத்தில் கடுமையான பேச்சுக்களைப் பேசிவிட்டார். "ஓய்! உம்மை எனக்குத் தெரியாதா? இன்று ஆசாரியராகிவிட்டீர். ஆராதனம் பண்ணிக்கொண்டிருந்த ஜமாச்சாரியார் தானே நீர்? நான் என்ன பாவம் செய்ததற்காக எனக்குச் சேது ஸ்நானம் விதிக்கிறீர்? நான் இருமுறை இதற்கு முன்பாகச் சேதுஸ்நானம் செய்திருக்கிறேன். கங்கை, யமுனை, சிந்து முதலிய புனித தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்திருக்கிறேன். இமயமலை முதல் கன்னியாகுமரி வரையில் எல்லா க்ஷேத்திரங்களுக்கும் சென்று திரும்பியிருக்கிறேன். தினந்தோறும் வைதிக கர்மங்களை விடாமல் செய்துவருகிறேன். எவ்விதத்திலும் என் வாழ்வில் குறை சொல்வதற்கு இடமில்லை. என்னைக் காட்டிலும் பலவிதப் பாவங்களைச் செய்துவருபவர்களுக்கெல்லாம் நிபந்தனையின்றிப் பரங்யாஸம் செய்துவைத்துவருகிறீர்கள். நான் ஏதோ மகாபாதகம் செய்தவன் போல எனக்கு விதி ஏற்படுத்துகிறீர். இது என்ன நியாயம்?" என்று கூச்சலிட்டார். அதற்குச் சுவாமிகள் மனவருத்தத்துடன், "சேஷையங்காரே, நீர் பாவம் செய்பவரல்ல என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் சீமைக்குப் போய்விட்டு வந்த மகனோடு வாழ்ந்துவருகிறீர் என்கிற அபவாதம் உமக்கு இந்த ஊரில் இருக்கிறது. அதை மீறி உமக்குப் பரங்யாஸம் செய்விக்க எண்ணிச் சேது ஸ்நானம் செய்ய விதிக்கிறேன்" என்று பதிலளித்தார்.

"சரி, சுவாமி. சீமைக்குச் சென்று திரும்பிய என் மகன் உதவியினால்தான் நீங்கள் இந்த ஊருக்கு வந்து நூறு வருஷங்களாகப் பெறாத மரியாதைகளையெல்லாம் கோயிலில் பெற்று இன்று மடத்தில் எழுந்தருளியிருக்கிறீர்கள். இது என் மகனுடைய செல்வாக்கினால் உங்களுக்கு நடந்தது. அவன் தங்களிடத்துப் பரங்யாஸம் கோரவில்லை. நான் என் மகனிடத்தில் வசிக்காமல் எங்கே போவது? என் மகன் துன்மார்க்கமான செயல் ஒன்றிலும் ஈடுபட்டவன் அல்ல. அவனுடன் தங்குவது பாவமென நீங்கள் கருதினால் பரங்யாஸம் ஆனபிறகும் நான் அவன் கூடத்தானே இருக்கவேண்டும்? ஆகையால் பரங்யாஸம் எனக்குத் தேவை இல்லை" என்று சொல்லிவிட்டு நடந்த சங்கதிகளை என்னிடம் தெரிவித்தார். எனக்கு மனம் திடுக்கிட்டது. யார் பேரில் குறை கூறுவதென்பது எனக்கு விளங்கவில்லை. வேண்டுமென்று தேடிச்சென்று, ஆசாரியரிடம் கோபித்துக்கொண்டு வந்துவிட்ட தகப்பனார்மேல் வருத்தப்படுவதா? அல்லது ஆசாரியருடைய கதியற்ற தன்மையைப் பற்றி வருந்துவதா? சரி, இனியாகிலும் இம்மாதிரியான தொல்லைகளில் மாட்டிக்கொள்ளாமல் காலத்தை நடத்துவதென்று தீர்மானித்து, என் தகப்பனாரிடம் அவர் நடந்துகொண்டது சரியல்ல என்று மரியாதையுடன் சொன்னேன். ஆனால் அதற்காக அவர் என்னைக் கோபிக்கவில்லை. மோக்ஷத்திற்குச் சீட்டுப் பெறுவதைக் காட்டிலும், என்னுடன் வசிப்பது மேல் என எண்ணிய தந்தையின் உள்ளத்தை நான் போற்றாமல் என்ன செய்வது? இவரல்லவோ என் அருமைத் தந்தை என அவரிடம் பக்தியும் மதிப்பும் அதிகம் கொண்டேன். அன்று முதல் அகோபில மடத்திற்கும் எனக்கும் உள்ள குரு சிஷ்யத் தொடர்பு முறிந்தது என மனத்தில் உறுதிகொண்டேன். இதற்காக வைஷ்ணவ மதத்தைக் கோபிப்பதா, அல்லது வைஷ்ணவ சமூகத்தாரிடம் உள்ள பக்தியை வெறுப்பதா, அல்லது ஆசாரியன் போக்கைப்பற்றிக் குறை கூறுவதா?

இது நடந்து சில வருஷங்களுக்குப்பின் அகோபில மடம் ஜீயர் பரமபதம் எய்தினார். அவர் ஸ்தானத்திற்கு அவரைப் போலவே படித்தவரும், வேதவிற்பன்னரும், நல்லொழுக்கம், சீலம், உயரிய வாழ்வு உடையவரும், செல்வருமான திருநெல்வேலி வீரவநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெரியார் எழுந்தருளினார். பரம வைதிகர். உலகப் போக்கைப்பற்றி ஒன்றும் அறியாதவர். எனினும் மடத்தை நன்கு பரிபாலித்துவந்தார். அவர் தேச சஞ்சாரம் செய்யும் முறையில் ஸ்ரீரங்கத்திற்கு வந்து கோவில் தரிசனம் செய்ய முற்பட்டார். உடனே பழைய சண்டைகள் கிளம்பிவிட்டன. கோர்ட்டு வியவகாரம், தடை உத்தரவு எல்லாம் முறையே அடுத்தடுத்து ஏற்படவே, ஸ்ரீரங்கம் புக விரும்பாமல் திருச்சிக்குப் பத்து மைல் மேற்கே அகண்ட காவேரியின் தென்கரையிலுள்ள திருப்பராய்த்துறை என்ற கிராமத்தில் வசித்து வந்தார். எவ்விதத்திலாயினும் ஸ்ரீரங்கம் வந்து கோவிலில் தரிசனம் செய்துவிடவேண்டும் என்கிற அவா அவர் மனத்தில் குடிகொண்டது. ஸ்ரீரங்கம் வைதிக கோஷ்டியார் இந்தத் தடவை என்னை அண்டவில்லை. முன்பிருந்த சந்நியாசி என்னையும் என் தகப்பனாரையும் நடத்

திய விதம் அவர்கள் ஞாபகத்தில் இருந்ததால் ஒதுங்கி நின்று கோர்ட்டில் நடக்கும் நடவடிக்கைகளை நடத்திவந்தார்கள். கிட்டத்தட்ட இரண்டு வருஷம் திருப்பராய்த்துறையில் இந்தச் சுவாமி தங்கியிருந்தார். 144 தடையுத்தரவைத் தாண்டிய பாடில்லை. இதற்குள்ளாக வக்கீல்களும், கட்சிக்காரர்களும், ஸ்ரீரங்கம் கோஷ்டியார்களுமாகச் சுமார் பத்தாயிரம் ரூபாய் வரையில் செலவு செய்துவிட்டார்கள். சுவாமிகளுக்கு மனத்தில் கவலை அதிகரித்தது. ‘தடை உத்தரவைத் தாண்டப் பத்தாயிரம் செலவானால் இனி நமது உரிமையைப் பெற எவ்வளவு செலவாகும்?’ என்று சிந்தித்தார். லக்ஷ்மீநரசிம்மன் சொத்தை உபயோகமற்ற விவகாரங்களில் செலவழிப்பதில் அவருக்குப் பிரியமில்லை. கடைசியாக, மடத்தின் முக்கியக் காரியஸ்தரை என்னிடம் அனுப்பித் தம்மை வந்து பார்க்கும்படி சொல்லியனுப்பினார். நான் இதில் தலையிட விரும்பவில்லை. இரண்டு மாதங்கள் கழிந்தன. மறுமுறை தாமே என்னைப் பார்க்கவேண்டுமென்பதாகக் கடிதம் தம் கைப்பட எழுதி அனுப்பினார். நான் இரு முறை அவரிடம் சென்று, நிலையை அவரோடு பரிசீலனை செய்து, முடிவாக விவகாரத்தை வளர்க்கக் கூடாதென்று வற்புறுத்தி எதிர்க் கட்சியாருடன் சமரசமாக ஏற்பாடு செய்யவேண்டிய அவசியத்தை எடுத்துக் காண்பித்து அதற்கான முயற்சியைச் செய்வதாக முடிவு செய்தேன்.

ஸர் டி. தேசிகாசாரியாருடன் கலந்து சமரச ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கைகள் நடந்தன. ஸ்ரீரங்கத்தில் தென்கலையார்களுக்குள் செல்வாக்குள்ளவரும், கோவில் தர்மகர்த்தாவுமான சிங்கம் ஐயங்காருடன் சமரச ஏற்பாடுகளைச் செய்து, இனி ஸ்ரீரங்கத்திற்கு ஹிந்து மதத்தைச் சேர்ந்த மடாதிபதிகள் தரிசனத்திற்கு வரும்பொழுது எல்லோருக்கும் ஒரே விதமான மரியாதை வழங்க வேண்டுமென்று இரு கட்சியாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய முறையில் கோர்ட்டில் ஒரு தீர்ப்புக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்து அதன்படி கோர்ட்டுத் தீர்ப்பும் கிடைத்தது. அகோபில மடம் சுவாமிகள் ஸ்ரீரங்கம் எழுந்தருளி, தகுந்த மரியாதைகளைப் பெற்றுத் தம் வாழ்நாட்களை ஸ்ரீரங்கத்திலேயே கழித்து, அந்தப் புண்ணியப் பூமியிலேயே தம் பூத உடலை நீக்க உறுதிகொண்டு, கொள்ளிடக் கரையிலுள்ள கோவிலில் தங்கிவிட்டார்.

எனக்கும் அவர்களுக்கும் நட்பு அதிகரித்தது. என் வீட்டிற்கு எழுந்தருளி என் பாதசமர்ப்பணையை ஏற்றுக்கொண்டு, லக்ஷ்மீநரசிம்மஸ்வாமியின் உத்ஸவாதிகள் எல்லாம் நடத்தி என்னைக் கௌரவித்தார். மடத்திலிருக்கும் வைத்தியர் சுவாமிகளுக்கு மருந்து கொடுத்ததன் மூலமாகக் கடுமையான நோய்வாய்ப்பட்டு என்னிடம் சிகிச்சை செய்துகொள்ள உடன்பட்டார். சாஸ்திரீய முறையில், அவருடைய ஆசாரத்திற்கும் ஆசிரம தர்மத்திற்கும் குறைவு வராத முறையில் மருந்து உண்டார். ஒரு நாள் இரவு நோய் அதிகரித்துக் கவலைக்கிடமான நிலை ஏற்பட்டது. தமக்குப் பின் யாராகிலும் ஒருவரை இந்தப் பீடத்திற்கு ஏற்பாடு செய்யாமல் பிராணனை விட்டால் மறுபடி கோர்ட்டு வியவகாரங்கள் உண்டாகி, மடத்துச் சொத்து விரயமாகிவிடுமென்று பயந்தார். அன்றிரவு நானும் சுவாமிகளோடு இருந்து, அவர்கள் இஷ்டப்படி அவருக்கு அடுத்தபடி வரவேண்டியவருக்குக் காஷாயம் முதலியன கொடுத்து விடியற் காலையில் அவருக்கு இளவரசுப் பட்டமும் சூட்டப்பட்டது. சர்க்கார் ரிஜிஸ்திரார் முன்னிலையில் தக்க சாட்சிகள் வைத்துக்கொண்டு இந்த நியமனம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இந்தப் பட்டம் தங்களுக்குக் கிடைக்குமென மனோராஜ்யம் செய்துகொண்டவர்கள் பலர் ஏமாந்துவிட்டார்கள். சட்டப்படி வேலை நடந்துவிட்டது.

அன்றுமுதல் சுவாமியின் நோய் குணமடையவே, அவர் திருநாட்டிற்கு (வைகுண்டத்துக்கு) எழுந்தருளவில்லை. பத்து வருஷ காலம் உயிரோடிருந்து ஸ்ரீரங்கத்திலேயே இரண்டு சந்நியாசிகளாக மடத்தில் இருந்துகொண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பாகத்தான் அவர் மறைந்தார். இளவரசாக இருந்த சுவாமிகள் வெகு நாள் காத்திருந்து கடைசியாகப் பட்டம் பெற்றார். இவரும் பெரிய வேதவிற்பன்னர், சீலர், பரமவைதிகர், வைஷ்ணவ தத்துவத்தில் நிபுணர். பழைய முறைகளை விட்டு அணுவேனும் மாறுதல் செய்ய இடம் கொடுக்கமாட்டார். சமீபத்தில் மதுராந்தகத்தில் ஓர் இலவச சம்ஸ்கிருதக் கல்லூரி ஏற்படுத்தியிருக்கிறார். என் நண்பராக இருந்த சுவாமி என் தாயாருக்குப் பரந்யாஸம் செய்துவைத்தார். தகப்பனார் விரும்பிக் கிடைக்காத நிகழ்ச்சி என் தாயாருக்குக் கிடைத்தது.

1932-ஆம் வருஷத்தில் மகாத்மா காந்தி ஹரிஜன இயக்கம் தொடங்கினார். தமிழ்

மாகாணத்தில் ஹரிஜன இயக்கத்திற்கு நான் தலைவனாக இருக்கவேண்டுமென ஸ்ரீ ராஜாஜி கொடுத்த உத்தரவின்படி அப்பதவியை நான் ஏற்றேன். தீண்டாமையை ஒழிப்பது, கோவில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விடுவது, ஹரிஜன நிதி சேர்ப்பது முதலிய முயற்சிகளில் ஈடுபட்டேன். நான் ஏற்றுச் செய்துவரும் தொண்டு என் நண்பராகிய அஹோபில மடம் சுவாமிகளுக்கு விருப்பமில்லை. ஆனால் அதைப் பற்றித் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்தது தவிர அவர் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அன்று முதல் எனக்கும் அவருக்கும் உள்ள சிநேகம் குறைந்துவிட்டது. என் பேரப்பிள்ளைகளுக்கு உபநயனம் செய்ய முயன்ற பொழுது, வைதிகர்களைக் கொண்டு எவ்வளவு இடையூறு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்தார். என் வீட்டில் நடக்கும் வைதிக கர்மங்களுக்குக் கோஷ்டியாரும் மற்றவரும் வாராமல் தடை செய்துவிட்டார். நான் இந்திய சட்ட சபைக்கு அங்கத்தினனாக இருக்க விரும்பித் தேர்தல் நடந்த காலத்தில், ஆஸ்திக வைதிகர்கள் எல்லோரும் ஐதராபாத் ராஜா பகதூர் கிருஷ்ணமாசாரியாருக்கு வாக்குக் கொடுக்கவேண்டுமென்று சிடர்களுக்கு அறிவித்தார். மடத்து ஊழியர்கள் எல்லோரும் வாக்கு எடுக்கும் தினத்தன்று ஸ்ரீரங்கத்தில் எனக்கு விரோதமாக வேலை செய்தார்கள். இந்தச் சம்பவங்களுக்குப் பிறகுதான் மிகுந்திருந்த வைதிகப் பற்றும் என்னை விட்டு ஒழிந்தது. பொருள் புரியாத சடங்குகள், உயிரில்லாத பல அனுஷ்டானங்கள், பரிகசிக்கக் கூடிய பழக்க வழக்கங்கள் முதலியவற்றைக் கைவிட்டேன்.

நான் செய்ய எத்தனித்தது என்னால் முடியாத வேலை. செய்யக்கூடும் என்ற குருட்டு நம்பிக்கையாலும், முரட்டுத் தைரியத்தாலும் செய்தேன். நல்ல புத்திமதி ஏற்பட்டது. என்னால் முடியாத வேலையைக் காலம் செய்துவருகிறதை நான் தினந்தோறும் கண்கூடாகக் கண்டுவருகிறேன். என்னுடைய அறிவீனத்தைத் தவிர வேறு யாரை நொந்துகொள்வது? என் எண்ணங்களுக்கும் முயற்சிக்கும் எனது இளம்பிராயத்தில் என் மனத்தில் வேரூன்றிய சில நிகழ்ச்சிகள்தாம் காரணம். வைதிக குலத்தில் பிறந்தது, வைதிகக் கோட்டையான ஸ்ரீரங்கத்தில் வளர்ந்தது, வளரும் வயதில் கோயில் முறைகளை ஊன்றிக் கவனித்து வந்தது, என் பெற்றோர்களின் மனப்பான்மை - இவைகள் மூலம் சில எண்ணங்கள் மனத்தில் குடி கொண்டு, ஆங்கிலப் படிப்பில் ஈடுபட்டும், ஐரோப்பா முதலிய நாடுகளில் வருஷக்கணக்காகச் செலவழித்தும், என்னை விட்டு அகலவில்லை. கடைசியாக நான் அநுபவித்த நிகழ்ச்சிகளால் பல வருஷங்கள் கடந்தபிறகுதான் வைதிகப் பற்று மறைந்தது.

கனம் ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் நமது மாகாணத்திலும் அகில இந்தியாவிலும் போற்றத்தக்க ஒரு பெரியார். சீர்திருத்தக்காரர் என்று பெயர் பெற்றவர். ருதுமதி விவாகம் சட்டபூர்வமாகவேண்டுமெனப் பாடுபட்டவர். உலகம் முழுவதும் நல்ல அந்தஸ்துடன் பெரிய பதவி வகித்துச் சுற்றிப் பார்த்தவர். இப்படிப்பட்ட ஒரு மகான் ஹரிஜனங்களின் ஆலயப் பிரவேச மசோதா சட்டமாக்க இருக்கும்பொழுது சென்னை மேல் சட்டசபையில் வெகு உருக்கமாகப் பேசி அதை எதிர்த்தார். அவருடைய அரிய மொழிகள் என் மனத்தை விட்டு அகலவில்லை. "நாம் நாட்டை இழந்தோம். அரசியல் துறையில் தாழ்வு அடைந்தோம். நமக்குள்ள செல்வம் எல்லாம் மகரிஷிகளால் அளிக்கப்பட்ட கலைகள். அக்கலைகளுக்கு அறிகுறியாக எஞ்சியிருப்பவர்கள் நம் நாட்டிலுள்ள ஏழை வைதிகர்கள். அவர்கள் மனம் புண்படும்படியான மசோதா இது. இதை நான் அங்கீகரிக்க முடியாது" என்று மிகுந்த சோகத்துடன் பேச்சை முடித்தார். அதற்கு ராஜாஜியின் பதிலும் அதே முறையில்தான் இருந்தது. "நம் மூதாதைகளாகிய மகரிஷிகளுடைய பெயரையும் புகழையும் நிலைநிறுத்தவேண்டியது அவர்களுடைய சந்ததியார்களாகிய நமது கடமை. மனித சமூகத்தைப் பிளவுபடுத்தி, ஒரே மதத்தைச் சேர்ந்த, குற்றமற்ற, பெரும் பகுதியினரைப் பிறவிக் குற்றமென்ற கற்பனையால் ஒதுக்கிவைத்துப் பகவானைத் தரிசிக்க அவர்களுக்கு உரிமை இல்லை என ஒரு காலத்திலும் ரிஷிகள் சொல்லியிருக்க மாட்டார்கள். சொல்லவும் இல்லை. அப்பெரியார்களின் நற்பெயர் ஓங்கவேண்டியே இம்மசோதாவை நான் கொணர்ந்துள்ளேன்" என்று பதில் அளித்தார். மசோதா சட்டமாயிற்று. மூன்று தமிழ் ஜில்லாக்களில் அனுஷ்டானத்திற்கு வந்துவிட்டது. ஹிந்து மன்னராகிய திருவாங்கூர் மகாராஜா தீண்டாமையைத் தம் சம்ஸ்தானத்தை விட்டு அறவே ஒழித்து, அழியாப் புகழ் அடைந்துவிட்டார். இது காலத்தின் போக்கு; மக்களின் பெருமை.

பரிசு

ஜயலக்ஷ்மீ ஸ்ரீநிவாஸன்

அந்தத் தந்தியைக் கண்டதும் அன்று ராமஸ்வாமி ஐயர் அகத்தில் ஒரே கோலாகலம் குடிகொண்டது. கல்யாணமான கையுடன் கணவன் வீட்டிற்குச் சென்ற லலிதா, ஐந்து வருஷம் கழித்துப் பிறந்தகம் வருகிருள். லலிதாவின் விஷமச் சிரிப்பும் குறும்புத்தனமும் இன்றி இதுகாறும் இல்லம் கலகலப்பில்லாமல் ஏங்கிக் கிடந்தது. அந்த வீட்டின் மஹாலக்ஷ்மி, குத்துவிளக்கு, அருமைக் குழந்தை - இவ்வளவு வருஷத்திற்குப் பிறகு வருகிருளென்ருல் அந்தக் குடும்பத்தினருக்கு உண்டான ஆனந்தத்தைக் கேவலம் சொற்களால் விவரிக்க இயலுமா? "அக்கா வருகிருள். அக்கா வருகிருள்" என்று குழந்தைகள் எல்லோரும் ஆரவாரித்த வண்ணம் ஆனந்தத் தாண்டவமாடினர். அவள் பெற்ருேர்களின் ஆனந்தத்தின் நடுவில் ஒரு விதத் திகைப்பும் அச்சமும் லேசாகப் படர்ந்திருந்தன.

கண்ணுன குழந்தை, கலைமகளின் பூர்ண அருளும், ரதி தேவியின் எழிலும் ஒருமிக்கத் திரட்டிக் குழைத்துச் செய்த அழகிய பதுமை போன்ற அருமைச் செல்வி, அன்று வீட்டை விட்டு அகன்ருள். அக்கணமே மூதேவி தாண்டவமாடிக்கொண்டிருந்த அந்த வீட்டில் ஸ்ரீதேவி புகுந்து அருள் புரிந்தாள் வறுமைப் பிணியில் சிக்குண்டு பரிதவித்த பெற்ருேர்கள் தங்கள் கண்மணி லலிதாவை ஒரு சாண் வயிற்றுக்காகக் கிழவனுக்குக் கொடுத்தார்கள்; இல்லை, விற்ருர்கள் என்ருலும் பொருந்தும். அவர்கள் வயிறு என்னவோ நிறைந்துவிட்டது; வீடு சுபிக்ஷமாக விளங்கியது. ஆனுல், ஆனுல்......லலிதாவின் கதி? அவள் மனம் வெதும்பியவளாய்க் கிழவனுக்கு மாலையிடவேண்டி வந்தது. அவள் தன் இளமையில் எண்ணி எண்ணி மகிழ்ந்த இன்பக் கனவுகளெல்லாம் அக்கணமே சிதைந்து சுக்குநூருயின கிடக்கிறது, அவள் இளமையில் கண்ட கனவில் ஒரு சிறிதாவது பலிக்கக்கூடாதா? அவள் கனவில் மாத்திரந்தான் பல அழகிய குழந்தைகளுக்குத் தாயாக விளங்கினுளே தவிர இப்போது மலடியானுள். தொண்டு கிழவனுக்கு வாழ்க்கைப் பட்டதன் பயன் போலும்!

சிறுபிராயத்திலிருந்தே அவளுக்குக் குழந்தைகளிடத்தில் அலாதிப் பிரியம். அக்கம் பக்கத்துக் குழந்தைகள் எல்லாம் அவள் இன்சொற்களில் சிக்குண்டு தேனை ஈ மொய்ப்பதுபோல், "அக்கா, அக்கா" என்று அவளை எப்பொழுதும் சூழ்ந்துகொண்டிருப்பார்கள். ஒரு குழந்தையாவது பிறந்திருந்தால் அவளுக்கு எவ்வளவோ ஆறுதல் அளித்திருக்கும். அதுவும் இல்லையே! அவள் நாளுக்கு நாள் வேதனையால் மெலிந்து போனுள். ஆனுல் அவள் அழகும் வனப்பும் மிகுந்த தேகக்கட்டு நாளுக்கு நாள் செழுசெழுவென்று பொங்கி மிளிர்ந்தது. அந்த அழகுத் தேவதையானவள் உலகத்தையே வெறுத்தாள். அவள் கணவர் அவளை மிகமிகப் பிரியமாக நடத்திவந்தார். அவள் உடம்பு நிறைய வைர ஆபரணங்களால் இழைத்தார். லக்ஷாதிபதிக்கு இது ஒரு சிரமமா? ஆனுல் அவள் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதற்கு அவரால் சாத்தியப்படவில்லையே!

இவ்விதமாக ஐந்து வருஷங்கள் கழிந்தன. லலிதா தன் பெற்ருேர்களின் தன்னலச் செய்கையை நினைந்து நினைந்து மனம் வெதும்பி, அவர்கள் எவ்வளவோ அழைப்புக் கடிதங்கள் விடுத்தும் பிறந்தகம் சென்றுவரப் பிரியப்படவில்லை. ஆனுல் ரத்த பாசம் அடியோடு அற்றுப் போகுமா? ஐந்து வருஷங்களுக்குப் பிறகு அவளுக்குப் பிறந்தகம் சென்று பெற்ருேரைப் பார்த்துவரவேண்டுமென்ற ஆசை உதித்தது. அவள் கணவர்தாம் அவள் காலால் இட்ட வேலையை

உடனே தலையால் நிறைவேற்றுவதற்குக் காத்திருக்கிறாரே. லலிதா தன் விருப்பத்தைத் தெரிவித்தவுடனே அவர் தம் மாமனாருக்கு ஒரு தந்தி அடித்துவிட்டு, மனைவியுடன் வேட்டகத்திற்குப் புறப்பட்டுவிட்டார். லலிதாவின் கணவர் டெல்லியில் ஒரு பெரிய வியாபாரி. அவள் தகப்பனார் கரூரில் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர்.

* * *

தாங்கள் இவ்வளவு வருஷங்களாகப் போட்ட கடிதம் ஒன்றுக்காவது பதில்கூட எழுதாத பெண் தங்களைப் பார்க்க வருகிறாள் என்றால், பெற்றோர்களின் ஆனந்தத்தைக் கேட்கவும் வேண்டுமா? வீட்டில் ஒரே பரபரப்பு. ஐயர் பணக்கார மாப்பிள்ளையும் பெண்ணும் வரும்போது வெறுமனே உட்கார்ந்திருப்பாரோ? மேலும் கோடைக் காலமாதலால், பள்ளிக்கூடமும் சாத்தியிருந்தது; அவருக்கு ஒழிவாகவும் இருந்தது. தந்தி கிடைத்த அடுத்த நாளே கூலி ஆட்களை நியமித்து வீடு முழுவதும் வெள்ளை அடிக்கச் செய்தார். வீட்டிலுள்ள அறைகளிலெல்லாம் பெரியதும், விசாலமானதும், காற்றோட்டம் உள்ளதுமான அறையை அவர்களுக்காக ஒழித்துவிட்டு, அதில் கட்டில், மெத்தை, நாற்காலிகளை நிரப்பி ஜோடித்துச் சீர்படுத்தினார்.

தாய் ஜானகி விதவிதமான பக்ஷண வகைகளைத் தயாரித்து வைத்தாள். லலிதா திரும்பிப் புக்ககம் செல்லும் பொழுது, அவளுடன் அனுப்புவதற்காகத் தினுசு தினுசாக அப்பளம், வடகம், ஊறுகாய் என்று தயாரித்து வைத்த வண்ணம் இருந்தாள். அன்றி, தன் கணவருடன் கூடக் கலந்து ஆலோசித்துப் பெண்ணுக்கு அபூர்வமான ஒரு பரிசையும் கொடுப்பதற்காகத் திட்டம் போட்டுக்கொண்டிருந்தாள்.

லலிதா வரும் நாள் நெருங்க நெருங்க, வீட்டில் குதூகலமும் பரபரப்பும் அதிகரித்தன. "அக்கா நேக்கு நாலு பட்டுச் சித்தாடைகள் வாங்கிண்டு வராளாமே" என்பாள் கமலம். "நேக்குப் பௌண்டன் பேனா, திருகு பென்ஸல் எல்லாம் கொண்டுவராளே ஏ ஏ ஏ!" என்று குதிப்பான் சீனுப்பயல். "நேக்குக் கலர் ரிப்பன், பொம்மை எல்லாம் கொண்டுவருவாளே!" என்று பெருமை பீற்றிக்கொள்வாள் ஸரோஜா. "ஏண்டீ மன்னீ! குழந்தை இவ்வளவு நாள் கழித்து வராளே. அண்ணாவிடம் சொல்லி நல்லதாய் ஒரு ஜதை புடைவை சோமன் வாங்கிண்டு வரச் சொல்லேன்" என்றாள் விதவை அத்தை சங்கரி. 'சாகுந்தலத்'தில் சகுந்தலை ஏழு வருஷங்களுக்குப் பிறகு கண்வமுனிவரின் ஆசிரமத்திற்கு வந்தபொழுது ஆசிரமத்தில் ஏற்பட்ட சந்தோஷப் பரபரப்பை எத்தனை அழகாகக் கவி வருணித்திருக்கிறார்! அதைவிடப் பன்மடங்கு ஆனந்த கோலாகலத்துடன் விளங்கிற்று ராமஸ்வாமி ஐயரின் இல்லம்.

* * *

வீட்டு முன்புறம் டாக்ஸியொன்று வந்து நின்றது. லலிதா கணவரோடு பிறந்தகம் வந்துவிட்டாள். வீட்டு முன்புறமே அவளது வரவை எதிர் பார்த்த வண்ணம் ஏற்கனவே தயாராகக் காத்திருந்த அனைவரும் அவர்களை ஆசையுடன் வரவேற்று வீட்டினுள் அழைத்துச் சென்றனர்.

லலிதா பெற்றோருக்கும் அத்தைக்கும் நமஸ்காரம் செய்துவிட்டு எழுந்தாள். அச்சமயம் கூடத்தில் கட்டியிருந்த தூளியின் மீது அவள் பார்வை விழுந்தது. அதனுள்ளிருந்து சின்னஞ் சிறு குஞ்சுக் கால்கள் இரண்டு தென்பட்டன.

"அம்மா!" என்றாள் லலிதா ஆச்சரியத்துடன்.

"அவன் பிறந்து மூன்று மாதமாச்சுடீ, லல்லூ! ஆனால் உங்கப்பாவும் அம்மாவும் சங்கோசப்பட்டுண்டு உனக்கு எழுதவில்லை" என்றாள் அத்தை.

உடனே லல்லுவின் தாய் ஓடிப் போய்த் தூளியிலிருந்து குழந்தையை எடுத்து வந்து அவள் கையில் கொடுத்து, "இந்தா அம்மா லல்லூ, இது இனி உன் குழந்தை" என்றாள் உணர்ச்சி மிகுந்த குரலில். குழந்தை தங்கவிக்கிரகம்போல் இருந்தான். அக்காவைப் பார்த்து அழகாகச் சிரித்தான். அந்த மோகனச் சிரிப்பில் சொக்கிப்போனாள் லலிதா. பல நாட்களாக அவள் இதழிடையிலிருந்து மறைந்துபோயிருந்த புன்னகை மறுபடியும் பூத்துப் பொலிந்தது.

"அட, என் கண்ணே!" என்று குழந்தையை அளவுகடந்த வாத்ஸல்யத்தோடு மார்புடன் தழுவி முத்தமிட்டுக்கொண்டாள். உடனே குழந்தையுடன் கணவரை அணுகி, "இங்கே பாருங்கோன்னா, அம்மா நேக்குத் தந்த பரிசை!" என்றாள்.

அவரும் குழந்தையின் மோகனச் சிரிப்பிலும் அழகிலும் சொக்கிப் போனவராய், "நிஜமாகவா?" என்று குழந்தையை வாங்கி உச்சிமோந்தார்.

"ஆமாம் மாப்பிள்ளை, இனி அவன் உங்கள் குழந்தைதான்" என்றார் ராமஸ்வாமி ஐயர். அவர் முகத்தில் அசட்டுச் சிரிப்பு ஒன்று தோன்றி மறைந்தது.

கெட்டிச் சுவரும் ஈரச் சுவரும்

"என்ன இருந்தாலும், யௌவனம் போய்விட்ட பின்பு ஒரு யுவதியை மணப்பது கொஞ்சம் வெட்கங்கெட்ட காரியமாகத்தான் இருக்கிறது; இதில் சந்தேகமே இல்லை. பெண் இயற்கையிலேயே வெட்கம் கொண்டவள். கெட்டுப்போன பெண்களின் விஷயம் வேறு; ஆனால் பொதுவாகப் பெண் ஆணை விட எவ்வளவோ அடக்கமுள்ளவளாகத்தான் இருக்கிறாள். தனக்கு இணையானவன் கணவனாக வாய்க்கப்பெற்றவள், வேறு புருஷனுடன் பரிகாச விளையாட்டுகள் செய்தாலுங்கூட அவள் மனம் சுத்தமாகத்தான் இருக்கும். இணையில்லாதவனுடன் மணம் முடியுமாயின், அவள் யாரையும் கண்ணெடுத்துப் பாராமலே இருந்தாலும் சரிதான், அவள் மனம் துன்பமுற்றுத்தான் கிடக்கும். அது கெட்டியான சுவர்; கடப்பாரை அதை ஒன்றும் செய்ய முடியாது. இது ஈரச் சுவர்; எதுவரையில் கடப்பாரையினால் இடிக்கப் படாமலிருக்கிறதோ, அதுவரையில்தான் இது நிலை நிற்கும்!"

—பிரேம்சந்த்.

பாரதியாரின் 'மூன்று காதல்'

யதுகிரி அம்மாள்

புதுச்சேரியில் ஒவ்வொரு வியாழக் கிழமையும் கடற்கரையில் துய்ப்ளெக்ஸ் சிலையின்முன் பாண்டு வாத்தியம் வாசிப்பது வழக்கம். வாத்தியக்காரர் எல்லாரும் நின்றுகொண்டு இங்கிலீஷ் நோட் ராகத்தில் ஒருமணி காலம் வாசிப்பார்கள். வெள்ளைக்காரக் குழந்தைகள் அதைச் சுற்றிக் கூத்தாடுவார்கள். பார்வைக்கு அழகான காட்சி அது.

பாரதியாருக்குக் கும்பலில் உட்காருவது பிடிக்காது. எங்களை அழைத்துக்கொண்டு மணலுக்குப் போனார்.

"அப்பா, இவர்கள் ராகம் இப்படி இருக்கிறதே. கீச்சுத் தொண்டையில் பாடுகிறார்கள். அப்படி நாம் பாடினால் நன்றாக இருக்குமா?'' என்று கேட்டாள் தங்கம்மா.

பாரதியார்: அது ஒருவகையான சங்கீதம். கீழ் ஸ்தாயியிலிருந்து மேல் ஸ்தாயிக்கு ஒரே அடியாய்த் தாவுகிறது. படிப்படியாக மேலே ஏறிச் செல்வது நம் வழக்கம். அவர்கள் ஒரே அடியாய் மேல் ஸ்தாயியில் செல்வது நமக்கு விநோதமாகக் காண்கிறது.

தங்கம்மா: நாம் அதைப்போல் பாடினால் நன்றாக இருக்குமா?

பாரதியார்: பாடும் வகையில் பாடினால் நன்றாக இருக்கும்.

தங்கம்மா: நாளைக்கு ஸரஸ்வதி பண்டிகை. ஸரஸ்வதியின்மேல் இந்த ராகத்தில் ஒரு பாட்டுப் பாடப்பா!

பாரதியார்: ஆகட்டும்.

"லக்ஷ்மியின்மேல் பாடினால் நன்றாக இருக்கும்'' என்றேன் நான்.

முதல் ராகம் முடிந்து வேறு ராகத்தில் பாண்டு ஆரம்பித்தார்கள்.

பாரதியார்: யதுகிரி, நீ சொன்னபடி இந்த ராகத்தில் லக்ஷ்மியின்மேல் ஒரு பாட்டுச் செய்கிறேன்.

செல்லம்மா: கல்கத்தா, காசி அங்கெல்லாம் துர்க்காபூஜை செய்வது போல, சக்தியை நீங்கள் பாடினால் நம் கஷ்டம் விடியும்.

அப்பொழுது பாண்டில் கீழ்ஸ்தாயியில் நான்கடி, மேல் ஸ்தாயியில் நான்கடியாக வாசித்தார்கள்.

பாரதியார்: செல்லம்மா, நீ சொன்னது சரி. தங்கம்மா ஸரஸ்வதியின் மேல் பாடச்சொன்னாள்; யதுகிரி லக்ஷ்மியின்மேல் பாடவேண்டுமென்று கேட்டாள்; நீ காளியின்மேல் பாடச் சொன்னாய். இங்கு அவர்கள் மூன்று ராகம் பாடியிருக்கிறார்கள். நாளைக்கு மூன்று ராகங்களிலும் பாடிக் காண்பிக்கிறேன், பாருங்கள்.

தங்கம்மா: என்ன அப்பா! மூன்று ராகங்களையும் எப்படி ஒன்றாகப் பாடுகிறது?

பாரதியார்: முதலில் ஸரஸ்வதி, இரண்டாவது லக்ஷ்மி, மூன்றாவது காளி. மூன்று பேர்களையும் மூன்று ராகங்களில் பாடினால் போச்சு.

தங்கம்மா: நீங்கள் செய்யும் பாட்டுக்களெல்லாம் நொண்டிச்சிந்து, காவடிச்சிந்து, ஆனந்தக் களிப்பு - ஆண்டிகள் பாடும் மெட்டில் பாடிவிடுகிறீர்கள். ஒரே ராகம் என்றால் எனக்குப் பிடிப்பதில்லை.

பாரதியார்: உங்களுக்கு எந்த மெட்டு வேண்டுமோ அதைப் போட்டுக் கொடுக்கிறேன்.

தங்கம்மா: முதலில் லக்ஷ்மி, ஸரஸ்வதி, காளி மூன்று பாட்டுக்களும் எங்களுக்குப் பிடித்தால் அப்புறம் மேலே கேட்கிறோம்.

மறுநாள் மூல நக்ஷத்திரம். ஸரஸ்வதி பண்டிகையைச் சிலர் நக்ஷத்திரத்திலும், சிலர் மகாநவமியன்றும் கொண்டாடுவது வழக்கம். அன்று எங்களுக்கு ஸரஸ்வதி பண்டிகை. கொலு சாமான்கள் அதிகமாக இல்லாததால் சாஸ்திரத்திற்கு இரண்டு பொம்மைகள் வைத்திருந்தோம். நாங்கள்

பாட்டுப் பாடிவிட்டுக் கொலுவுக்கு ஆரத்தி எடுக்கும் சமயம். பாரதியார் வந்தார்.

"யதுகிரி, உன் கொலுவுக்கு நான் புதிய பாட்டுப்பாடுகிறேன். அப்புறம் உன் சாஸ்திரம் நடக்கட்டும்" என்றார்.

எல்லாரும் வரிசையாய் உட்கார்ந்தோம். பாரதியார் பாடினர்.

'மூன்று காதல்' என்ற தலைப்பில், ஸரஸ்வதி காதலைப்பற்றி நான்கு பாட்டுக்களும், லக்ஷ்மி காதலைப்பற்றி மூன்று பாட்டுக்களும், காளி காதலைப்பற்றி இரண்டு பாட்டுக்களும் கம்பீரமாகப் பாடினர். எங்களுக்கெல்லாம் மெய் சிலிர்த்தது. எனக்கு ஒருதரம் சொல்லிக் கொடுத்தார். இதில் அவருடைய வாழ்க்கை லக்ஷ்யத்தைச் சித்திரித்துக் காண்பித்திருக்கிறார். இதற்கு அப்புறம் பல பாட்டுக்களைக் கும்மியடிக்கும் மெட்டிலும், ஹிந்துஸ்தானி மெட்டிலும், கீர்த்தனங்களின் மெட்டிலும் செய்திருக்கிறார். இப்பொழுது எவ்வளவோ கெட்டிக்காரர்கள் பல ராகங்கள் போட்டுப் பாடினாலும், பாரதியாரின் ராகமும், கம்பீரமும், தாமே அநுபவித்துக்கொண்டு சொல்லும் பாவமும் இல்லை.

பெண்ணின் வேதனை

"இளவேனிற்காலம்; காலைப்போது மனோரம்மியமாய் விளங்கியது. சூரிய கிரணங்கள் வாதநாராயண மரத்தின் கிளைகளூடே பாய்ந்து, நிழலும் வெயிலும் வராந்தாவில் படிந்திருந்தன. அணில்கள் வாலைத் தூக்கிக்கொண்டு அப்படியும் இப்படியும் அலைந்துகொண்டிருந்தன. புள்ளினம் யாவும் கூடி, முடிவில்லாமல் இன்னிசை பாடின. பரந்த உலகிடை, தளிரும் நிழலும் வெயிலும் அடர்ந்த இந்த மூலையில், உணர்வும் இன்பமும் பொங்கி வழிந்தன; ஆயினும், அப்பேதைக்கு இயற்கையின் இந்த லீலைகள் ஒன்றுமே விளங்கவில்லை. எல்லாம் - ஏன், அவள் வாழ்வே - சிக்கலான புதிராக இருந்தது. என்ன நடந்தது? ஏன் இப்படி நிகழவேண்டும்? இந்த மெல்லிளங்காலை ஏன் ரஸமற்று இருக்கவேண்டும் அவளுக்கு? இந்த வீடு - இந்த உலகமே - வெறிச்சென்று இருப்பது ஏன்? ஒன்றுமே அறியாத அப்பெண்ணுக்குத் தன்னைத் திடீரென்று எங்கோ இருட்டில் கொண்டு விட்ட மாதிரி இருந்தது; இப்படித் தீவிர வேதனையில் அவளை உழலச் செய்தது யாரோ? உயிரும் உணர்வும் பெற்று விளங்கும் இக்காட்சிகளிடையே - விலங்குகளும் புள்ளினமும் மெய்ம்மறந்து கூவும் இவ்வின்ப உலகிடையே - அவளைக் கொண்டு செலுத்துவார் எவரும் இல்லையா?"

—ரவீந்திரநாத் டாகுர்.

பேய் பிடித்த பெண்

சியாமளா பாலகிருஷ்ணன்

1

"அம்மா, சாப்பிட வரவில்லையா?" என்று சமையற்காரியின் குரல் கேட்ட பின்தான் அவள் என் எதிரில் இருந்ததை உணர்ந்தேன். அப்பொழுதுதான் ஒரு பிரஸவ கேஸைப் பார்த்துவிட்டு வந்ததில் என் உடம்பு சோர்ந்திருந்தது. அவளுக்குப் பதில் உரைக்காமல் கண்களை மூடிக் கொண்டே சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தேன்.

"அம்மா!"

"என்ன தொல்லை! வருகிறேன், போ."

"... இல்லே ... நம்ம வீட்டு எதிரே புளியமரம் இருக்கே; அதுலே பேய் வந்திருக்குன்னு சொல்லறா. நீங்க வீட்டிலே இல்லாதப்போ தனியா இருக்கப் பயமா இருக்கு."

"குப்பனை நான் இல்லாதப்போ வீட்டிலேயே இருக்கச் சொல்லு... தட்டைப் போடு. வறேன்."

சாப்பிட்டுவிட்டுப் பழைய இடத்திலேயே வந்து உட்கார்ந்தேன். புளிய மரத்துப் பேயின் ஞாபகம் வந்தது. அதிலிருந்து என் மனம் நான்கு வருஷங்களுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்திற்குச் சென்றது.

2

அன்று நான் குளித்துவிட்டு என் அறையில் உட்கார்ந்திருந்தேன். இருபத்தாறு வயசு என்று மதிப்பிடக்கூடிய ஒருவர் பரபரப்புடன் என் அறைக்குள் நுழைந்தார்.

"அந்த நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுங்கள். என்ன?"

"என் மனைவிக்கு நேற்று ராத்திரி ரெண்டு தரம் மயக்கம் வந்தது..."

"உம்."

"பேசிக்கொண்டிருக்கும் போதே திடீர் திடீர்னு மயக்கமாய் விழுந்துடறா. எத்தனை தரம் கூப்பிட்டாலும் தெரிகிற தில்லை. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தானாகவே எழுந்துவிடுகிறாள்."

"வயசு என்ன?

"பதினெட்டு."

"கல்யாணமாகி எத்தனை வருஷம் ஆகிறது?"

"ஒண்ணரை வருஷம் ஆகிறது."

"குழந்தை இருக்கா?"

"இல்லே."

"சரியாக ஸ்நானம் செய்கிறாளா?"

"உம்."

"ஏன் அவளை அழைத்து வரவில்லை?"

"வழியில் மயக்கம் வந்துவிடுமோன்னு பயம். நீங்கள் வந்து பார்க்கிறீர்களா?"

"சரி."

3

மோட்டாரில் ஏறினேன். "உங்கள் விலாஸம் என்ன?" என்று அவரை விசாரித்தேன்.

"வீடு கிட்டத்தான் இருக்கு. நீங்கள் நேரே போங்கள். திரும்பும் இடத்தைக் காட்டுகிறேன்."

"உங்கள் பெயர் என்ன?"

"கோபாலன்."

"இதோ இந்தச் சந்தில் திரும்புங்கள். அந்த நாலாவது வீடு; வேப்பமரம் வாசல்லே இருக்கே, அது."

வீட்டின் திண்ணையில் ஒரு பெரியவர் ஜபம் செய்துகொண்டிருந்தார். முக ஜாடையிலிருந்து அவர் கோபாலனின் தகப்பனர் என்று அனுமானித்தேன்.

என்னை முதல் அறையில் உட்கார்த்தி விட்டுத் தம் மனைவியை அழைத்துவருவதாகச் சொல்லிக் கோபாலன் உள்ளே சென்றார்.

அவர் உள்ளே சென்றதும் பின்வரும் சம்பாஷணை என் காதில் விழுந்தது:

"அம்மா, டாக்டரைக் கூட்டிண்டு வந்திருக்கேன். அவள் எங்கே?"

"என்னை ஒரு வார்த்தை கேக்காமே நீ ஏன் டாக்டரைக் கூட்டிண்டு வந்தே? உங்க அப்பா பூசாரியை வரச்சொல்லி இருந்தாம். நீ அந்தண்டே போனதும், அவன் வந்து பார்த்துட்டு, பேய் பிடிச்சிருக்குன்னு சொன்னான்..."

"...பெலக்கப் பேசாதே. டாக்டர் பக்கத்து உள்ளே இருக்கார்..மாலதி..."

அதன் பிறகு ஏதோ தணிந்த குரலில் வாக்குவாதம் நடந்தது. அது என் செவிகளில் சரியாக விழவில்லை.

பிறகு கோபாலன் தம் மனைவியுடன் முன்னறைக்கு வந்து அவளை எனக்கு அறிமுகப்படுத்தினர். நான் அவளை என் எதிரிலிருந்த நாற்காலியில் உட்காரச் சொன்னேன்.

"அம்மா, உன் பெயர் என்ன?"

"மாலதி."

"வயசு?"

"பதினெட்டு."

"உனக்கு நேத்திலேருந்து உடம்பு என்ன பண்ணறது?"

"ஒண்ணுமில்லே..."

"வெட்கப்படாதே சொல்லு. மயக்கம் வாரத்துக்கு முன்னடி அது வரப்போறதுன்னு தெரியறதா?"

அவள் முகம் சிவந்தது; தலையைக் குனிந்துகொண்டாள்.

"மயக்கம் தெளிஞ்சதும், அது வந்திருந்ததுன்னு தெரியறதோ?"

"உம்."

"அப்போ உன் மனஸு எப்படி இருக்கு? சாதாரணமா, எப்பவும் போல இருக்கா? இல்லே, ஒரு மாதிரி இருக்கா?"

"வருத்தமா இருக்கு. அது கொஞ்ச நாழி அப்படித்தான் இருக்கு."

அவள் உடம்பு முழுவதையும் பரிசோதனை செய்தேன். அவ்வளவு நேரமும் அவள் கவலையுடன் என் முகத்தையே கவனித்துக்கொண்டிருந்தாள்.

"கவலைப்படாதே. சீக்கிரத்தில் உனக்குச் சரியாகிவிடும். இப்போ போனதும் மருந்து அனுப்பறேன். அதை ஒரு நாளைக்கு மூணு வேளை சாப்பிடு. நாளைலேருந்து நீயே மருந்து வாங்கிக்க வா.

"உடம்பு முழுக்க என்னவோ பண்ணறது. அப்புறம் எனக்கு ஒண்ணும் தெரியறதில்லே."

"என்னவோ பண்ணறதுன்னு?"

"அது... எப்படின்னு சொல்லறது?"

தினம் பரிசோதிச்சுட்டு மருந்தும் தரேன். கொஞ்ச நாளில் சரியாகிவிடும்."

"நான் உங்களோட மருந்து வாங்கிக்க வரட்டுமோ?" என்று வினவினர் கோபாலன்.

"வாங்கோ. நாளேலேருந்து அவள் வாட்டும்."

"எப்போ? காலேயிலேயா, சாயந் தரமா?"

"சாயந்தரம் வாட்டும்."

வாசலில் அதே இடத்தில் பெரியவர் உட்கார்ந்திருந்தார். நாங்கள் வெளியில் வந்தபொழுது அவர் எங்களைக் கவனியா தவர்போல் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டார். வீட்டிற்கு வருகை யில் எனக்கு அந்தப் பெண்ணின் நினைவா கவே இருந்தது. மா நிறமாக இருந் தாலும் அவள் அழகாய் இருந்தாள். சரி யான உயரம்; அதற்கேற்ற உடம்பு; குறு குறு என்று வசீகரமான முகம். நானும் ஒரு காலத்தில் அப்படித்தான் இருந்தேன். என் கணவரின் பிரிவு தாங்காமல் நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன்! அந்தப் பிரி வினால் எனக்கும் இந்த மாதிரிதானே மயக்கம் வந்துகொண்டிருந்தது? இவ்விதம் ஒரு நிமிஷம் தோன்றிற்று. மனக்கிளர்ச் சியை மறக்க நான் படிக்க ஆரம்பித்திருக் காவிட்டால் என் மயக்கமும் நின்றிருக் காது; பைத்தியமும் பிடித்திருக்கும். இவைகளை நினைத்துப் பார்த்தபொழுது என்னை அறியாமல் என் உடம்பு நடுங் கிற்று.

வீட்டு வாயிலில் இரண்டு ஸ்திரீகள் காத்துக்கொண்டிருந்தனர். அவர்களை ஐந்து நிமிஷம் உட்கார்ந்திருக்கச் சொல்லி விட்டு, கோபாலனிடம் மருந்தைக் கொடுத் தேன். அவர் தயங்கினர்.

"பயப்படும்படி ஒண்ணுமில்லே. கொஞ் சம் நரம்புத் தளர்ச்சி; அவ்வளவுதான். அவள் சிறிது காலம் ஓய்வாக இருக்கணும். அவள் மனசு புண்படும்படியான வார்த்தை களோ செய்கைகளோ இருக்கக்கூடாது. தினம் கொஞ்ச நாழி அவளோடே எனக் குப் பேசணும். இது மருந்தினாலே மட்டும் குணமாகிற வியாதி இல்லே. நாளை மத்தி யான்னம் வரை மருந்து கொடுத்திருக் கேன். சாயங்காலம் வரச் சொல் லுங்கோ."

"சரி, நான் போயிட்டு வறேன்."

4

மறுநாளிலிருந்து மாலதி தினம் சாயந் தரம் என்னைக் காண வரத் தொடங் கினாள். நான் அவளைப் பரிசோதித்துப் பார்த்து மருந்து கொடுத்துக்கொண்டிருக் தேன். தினம் சிறிது நேரம் இருவரும் ஏதாவது பேசிக்கொண் டிருப்போம். நாலைந்து நாட்களில் அவளுக்கு என்னிடம் இருந்த சங்கோசம் பயம் எல்லாம் போய்விட்டன. முடிவில் அவளுக்கு என்னை விட்டு வீட்டிற்குப் போவதென்றால் மனசாகாது. தன் குடும்பத்தைப்பற்றி எல் லாம் என்னிடம் அந்நியோந்நியமாய்ச் சொல்லுவாள். எனக்கும் அவளிடத்தில் ஒரு தனிப் பாசம் ஏற்பட்டிருந்தது. அவளைக் காணும்போது நானும் அவளைப் போல் சின்ன வயசில் கஷ்டப்பட்ட தாலோ என்னவோ, என் சகோதரி போலத் தோன்றிற்று. ஒருநாள் அவளைப் பரிசோதித்துக்கொண்டிருக்கும் பொழுது அவள் முகம் வாடி இருந்ததைக் கவனித் தேன்.

"என்ன மாலதி, ஒரு மாதிரி இருக்கே?"

"இன்னிக்கு எங்க மாமியாருக்கு ரொம்பக் கோபம்."

"ஏன்?"

"எனக்குப் பேய் பிடிச்சிருக்காம். அதுக்குச் சூடு போட்டு, பட்டினியாய் வச்சு, பூஜை எல்லாம் பண்ணினாத்தான் எனக்குச் சரியாய்ப் போகுமாம். இப்படி டாக்டர் டாக்டர்ன்னு சொல்லிண்டிருந்தா வீடே குட்டிச்சுவராப் போய்விடுமாம். இன்னிக்கு முழுக்க அவர் என்னை வைது கொண்டே இருந்தார். 'உன்னால் வீடே துடைத்துப் போய்விடும். உங்காத்துக்குப் போ' என்கிறார்."

"என்ன மாலதி, ஏதோ பெரியவா சொல்றான்னு நீயும் அதை நம்பறயா?"

"சும்மா ஒத்தர் சொல்லிண்டே இருந்தா..."

"சீ, அதெல்லாம் ஒண்ணுமில்லே, அசடே. வா, தோட்டத்துலே போய் உட் காரலாம்."

அங்கே போய் உட்கார்ந்ததும் நான் மறுபடி என் பேச்சைத் துவக்கினேன்.

"ஆமாம்; உனக்கு எத்தனை நாளாக இந்தப் பயம்?"

"இப்போதான், ரெண்டு மூணு நாளா."

"நான் கேட்கறத்துக்கு எல்லாம் சரி யாய்ப் பதில் சொல்லணும். உனக்கே உன் வியாதியின் காரணம் தெரிந்து விடும்."

"உம்."

"முதல்லே உனக்கு மயக்கம் வந்தது ஞாபகம் இருக்கா?"

"உம்."

"அப்போ நீ என்ன பண்ணிண்டி ருந்தே? எனக்கு ஒண்ணு விடாதே விவர மாய்ச் சொல்லணும்."

"படுத்துண்டிருந்தேன். ராத்திரி மணி ஒன்பதரை இருக்கும். ரெண்டு பேருமா ஏதோ பேசிண்டிருந்தோம். அன்னிக்கி அவர் எங்கிட்டே ரொம்பப் பிரியமாய் இருந்தார். அப்போ அவர் அப்பா அவரை எதுக்கோ கூப்பிட்டார். அவர் உடனே எழுந்து போனார். கொஞ்ச நாழிக்கெல்லாம் எனக்கு மயக்கம் வந்துடுத்து."

"அவர் எழுந்து போனப்போ உனக்கு என்ன தோணித்து? நன்னா யோசித்துச் சொல்லு."

"உங்க கிட்டே எப்படிச் சொல்லறது?"

"பரவாயில்லே. நான் உன்னோடே அக்கா மாதிரி இல்லையா? நாம்பதான் இப்போ ரொம்ப சிநேகமாப் போய்விட்டோமே."

"அது ஒரு கதை மாதிரி இருக்கும்."

"தேவலை, சொல்லு."

"இவர் என்னைக் கல்யாணம் செஞ்சுக்கறத்துக்கு முந்தி ஒரு பெண் மேலே ஆசை வச்சிருந்தாராம். அவளுக்கு இவர் கிட்டே அன்பு இருந்ததாம். அது தெரிஞ்சதும் இவர் அவளுடைய தாயார் தகப்பனாருடைய சம்மதத்தைக் கேட்டாராம். ரெண்டு பேரும் ஜாதி வித்தியாசம் கூடவே கூடாதுன்னு தலெகீழே நின்னு தடுத்துட்டாளாம். கொஞ்ச நாள் கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னாராம். அப்புறம் எப்படியோ சொல்லிச் சொல்லி அவர் அப்பா அவருக்கு என்னைக் கல்யாணம் பண்ணி வச்சார்."

"அப்போ கோபாலன் உன் கிட்டே அவ்வளவு அன்பா இருக்கிறதில்லையா?"

"சே, சே, பாவம்! அதெல்லாம் ஒண்ணுமில்லே. அவர் இப்போ அதெப்பத்தி நெனைக்கறதே இல்லே. ஏதோ ஆகல்லேன்னு விட்டுவிட்டார். எங்கிட்டே அவருக்கு உசுரு."

"ஒனக்கு இதெல்லாம் யார் சொன்னா?"

"அவர்தாம் சொன்னார். அவரெப் பத்தி எனக்கு முழுக்கத் தெரிஞ்சிருக்கணும்னு சொன்னாராம்."

"இதெல்லாம் பத்தி அப்போ நெனச்சுண்டையா?"

"அவர் அப்பா கூப்பிட்டதும், இப்போ கூப்பிடறாரேன்னு தோணித்து. அப்போ உடனே, நம்பகிட்டேயிருந்து இவர் கொஞ்ச நாழி பிரியறதை நம்மால் தாங்க முடியவில்லையே; அவளிடமிருந்தோ, ஆயுள் முழுக்க நாம்தானே அவரைப் பிடுங்கிக் கொண்டோம்னு தோணித்து.... அப்போ வாசப்படியிலே ஒரு அழகான பெண் நின்னுண்டு 'மாலதீ, எனக்கு அவரைக் கொடுக்கமாட்டையா?'ன்னு கெஞ்சற மாதிரி இருந்தது. அதுக்கு மேலே என்னாலே தாங்க முடியல்லே..."

மாலதியின் கண்களில் ஜலம் துளித்தது.

"சீ அசடே, இதை எல்லாம் இப்போ எண்ணுவாளா? ஏதோ அப்போ ஒரு சமாசாரம் நடந்துதான்னா, அதுக்கும் இப்போ இருக்கிறதுக்கும் என்ன சம்பந்தம்? உன் மனசுலே இருக்கிற அன்புதான் உன்னை இப்படி எல்லாம் ஆட்டறது. நீ இதெல்லாம்பத்தி யோசிக்கவே கூடாது. அப்போ உன் உடம்புக்கு ஒண்ணுமே வராது, பாரு. இது உங்க மாமியார் சொன்னமாதிரி பேய் இல்லே. உன் உணர்ச்சிப் பேய்தான் உன்னை ஆட்டறது" என்று அவளுக்கு எடுத்துரைத்துச் சமாதானம் செய்தேன்.

அச்சமயம் உணர்ச்சிப் பேயின் கேலிக் கூக்குரல், "உன்னையும் நான் விடவில்லை!" என்று என் கணவரின் உருவத்தை என் முன் கொண்டுவந்து நிறுத்தியது. என் உடம்பை ஒரு விநாடி ஒரு மின்சாரப் பிரவாகத்தின் வேகம் குலுக்கியது.

"நம் நாட்டில், ஒரு தடவை விவாகம் ஆன பேர்வழிகள் மறு மணம் செய்துகொள்ளக் கொஞ்சமும் தயங்குவதில்லை. நர மாமிசத்தை ஒரு முறை ருசி பார்த்த புலி, மனிதனைக் கண்டால் சும்மா விடுமா? அதுபோலத்தான் பெண்டாட்டி விஷயத்திலும்!"

—ரவீந்திரநாத் டாகூர்.

புதிய போர்முறைகள்

என். ஆர். ஸுப்பையர்

இப்போது நடைபெறும் இரண்டாவது உலகப் போரில் மேற்கொள்ளப்படும் முறைகள், இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் நடந்த ஐரோப்பிய மஹாயுத்தத்தின் முறைகளிலிருந்து முற்றும் வேறுபட்டிருக்கின்றன. சாதாரணமாகப் பத்திரிகைகளில் இம்முறைகள் சம்பந்தமாகச் சில புதிய வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் உபயோகப் படுத்துகின்றனர்.

முதலாவதாக, இப்போருக்குப் 'பெட்ரோல் சண்டை' (Oil War - எண்ணெய்ச் சண்டை) என்று பெயரிட்டிருக்கிறார்கள். காரணம் என்ன? இதற்கு முன்னெல்லாம் சேனைகளையும் யுத்தச் சாமான்களையும் போர் முனைகளுக்கு அனுப்ப ரெயில் பாதை தான் மிக அவசியமாயிருந்தது. ஆகையால் இருப்புப் பாதை சௌகரியங்கள் ஏராளமுள்ள இடங்களில்தாம் போர்க்களத் துருப்புகள் திரட்டப்பட்டு வந்தன. ஒரு தேசத்து ரெயில்வே படத்திலிருந்து எந்த எந்த இடங்களில் போர்க்களங்களை அமைக்கக் கூடுமென்று முன்னதாகவே எதிரி ஊகித்து அறியக்கூடும். மேலும் சேனைகள் முன்நோக்கிச் செல்ல வேண்டுமானால் இருப்புப் பாதைகளை அமைத்துக்கொண்டே போக வேண்டும்.

இப்போரிலோ ரெயில்வேக்களின் பிராதான்யம் குறைந்துபோய்விட்டது. அநேக வித ஆகாயவிமானங்களும், கரடுமுரடான பிரதேசங்களில் கூட அதிவேகமாகச் செல்லக்கூடிய 'டாங்கிகள்' என்று சொல்லப்படும் மோட்டார்வண்டிப் பட்டாளங்களும் சேனைகளின் முக்கிய உறுப்புகளாக ஆகிவிட்டன. இவைகள் எல்லாம் பெட்ரோல் சக்தியால்தான் ஓடக்கூடியவையாதலால் இச்சண்டையைப் 'பெட்ரோல் சண்டை' என்று சொல்வது சரியானது. இது காரணமபற்றியே எண்ணெய்ச் சுரங்கங்கள் இருக்கும் இடங்களின் பேரிலேயே எதிரிகள் கண்ணாக இருக்கின்றனர். தோற்றுப்போய்ப் பின்வாங்கும்படி நேரும்போதும் எண்ணெய்ச் சுரங்க யந்திரசாலைகளை உடைத்து அழித்துவிட்ட பிறகுதான் பின்வாங்குகின்றனர்.

டாங்கி

இரண்டாவதாக, ராணுவப் பயிற்சி பெற்ற ஆடவர்கள் மாத்திரமே சண்டை செய்யக் கடமையுள்ளவர்கள் என்று நினைப்பது தவறாகும். ஏனெனில் யந்திர சக்தி இப்போது முன்னிலும் பதின்மடங்கு விருத்தியடைந்திருக்கிறது. ஆயுதங்களும் மற்ற யுத்தச் சாமான்களும் அபரிமிதமாய் வெகு சீக்கிரத்தில் உண்டாக்கப்படுகின்றன. உண்டுபண்ணப்பட்ட ஆயுதங்கள், குண்டுகள், பீரங்கிகள் முதலியவைகளையும் போர்க்களங்களுக்கு அதிசீக்கிரத்தில் கொண்டு போகச் சௌகரியங்கள் ஏற்படுத்தப்

பட்டிருக்கின்றன. இவ்விதம் கணக்கிடமுடியாத போர் உபகரணங்களை உண்டுபண்ணும் முக்கிய கடமையை ஸ்திரீகள் இப்போது வகித்துவருகிறார்கள். விமானத்தாக்குகள், குண்டு வீழ்ச்சி முதலிய விபத்துக்களிலிருந்து தேசத்தைக் காத்துவரும் பொறுப்பு ராணுவத் துருப்புகள் கையிலிருந்து அந்த அந்தப் பிரதேசப் பிரஜைகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதாவது சண்டையின் அவசர நிமித்தமாகவும் தேசப் பாதுகாப்புக்காகவும் ஒவ்வொரு பிரஜையும் ஆண், பெண் வித்தியாசமில்லாமல் தன் உடலையும், சொத்துக்களையும் சர்க்காருக்கு அர்ப்பணம் செய்யவேண்டிவருகிறது. இப்பாதுகாப்பு வேலையில் பங்கு எடுத்துக்கொள்பவரை உள்நாட்டுப் போர்ச் சேனை என்று சொல்லலாம். மேற்சொல்லிய காரணங்களினால் இப்போது நடைபெறும் யுத்தத்தை 'சமஸ்த குடிப் போர்' (Total War) என்று சொல்வது முற்றும் ஏற்றதாகும்.

மூன்றாவதாக, வெகுதூரத்திலிருந்து சத்துருக்களைக் கண்ட க்ஷணத்தில் கொல்லக்கூடிய துப்பாக்கிகளும், பீரங்கிகளும் உபயோகத்திற்கு வந்தது முதல் போர்க்களங்கள் தரைமட்டத்திற்கு மேல் அமைவதில்லை. ஆழமான கிடங்குகளை வெட்டி அவைகளுக்குள் கோட்டைகள் முதலியவைகளைக் கட்டிப் பட்டாளங்களை மறைத்துவைத்துப் போர் செய்துவந்தனர். இம்மாதிரியான போருக்குக் 'கிடங்குச் சண்டை' என்று பெயர். உதாரணமாக, பிரான்ஸ் தேசத்துக் கிழக்கு எல்லையின் நெடுநீளத்திற்குக் கிடங்குகளை வெட்டி அநேகத் தெருக்களையும் இருப்புப் பாதைகளையும், கோட்டைகளையும் இக்கிடங்குகளில் அமைத்துச் சத்துருக்கள் நெருங்கக்கூடாத மாதிரியில் போர்முனையைத் தயாரித்திருக்கின்றனர். இதற்கு 'மாஜினோ லைன்' என்று பெயர். இதே மாதிரியே ஜர்மானியரும் தங்கள் எல்லைக்குள் கிடங்கு வரிசைகளை ஏற்படுத்தினார்கள்.

ஆனால் புதுமாதிரியான போர் முறைகள் கையாளப்பட்டது முதல் கிடங்குச் சண்டை ஏற்பாடுகள் பயனற்றவை ஆயின. ஏனெனில், எதிரியின் போர் முனையில் பலக்குறைவான இடத்தைத் தந்திரமாய் அறிந்துகொண்டு பெரிய சேனையைத் திரட்டி, 'மின்னலை'ப்போல் (Bleitzkrig) எதிரியின் சைனியத்தைத் தாக்கும்போது ஆங்காங்குக் கிடங்குவரிசைகள் உடைந்து துருப்புகள் கொஞ்சங்கொஞ்சமாக நெளிந்து கொடுக்க வேண்டிவருகிறது. இங்ஙனம் ஏற்படும் இடைவெளி வழியாகச் சத்துரு ராணுவப்படைகள் திருட்டுத்தனமாய் ஊடுருவிச் சென்று (Infiltration), நம் துருப்புகளுடன் கலந்து மெதுவாகச் சேனையின் பின்பக்கம் சிறிய கூட்டங் கூட்டமாகப் போய்ச் சேர்ந்து பாலங்களை உடைத்து, மரங்களை வெட்டிப் போட்டுப் பாதைகளில் தடை செய்து, மற்றும் பல கேடுகளையும் விளைவிக்கின்றனர்.

பின்னிருந்து எதிரி இப்படிச் சண்டைபோடுவது நமது சேனைக்குப் பெரிய அபாயமாக முடிகிறது. மேலும் துருப்புகளை விமானங்களில் ஏற்றிக்கொண்டு போய், பலூன்களின் உதவியால் எதிரியின் சைன்யத்தின் பின்பாகத்தில் இறங்கும்படி செய்துவருகின்றனர். இவைகளுக்குப் 'பாரா படைகள்' (Para Troops) என்று பெயர்.

மேற்சொல்லிய சூழ்ச்சிகள் வெற்றிபெறவேண்டுமானால் பட்டாளம், கம்பெனி, பிரிகேட், டிவிஷன் என்று அழைக்கப்பட்ட பழைய மாதிரி போர்ப்படை அணிகளுக்குப் பிராதான்யம் கொடுக்காமல், பத்துப் பன்னிரண்டு பேர்களையுடைய சிறிய கூட்-

ரேடியோ கேட்கும் வீரன்

டங்களாகப் படைகளைப் பிரித்துப் போர்க்களங்களின் வெவ்வேறு பாகங்களுக்கு அனுப்பவேண்டிவருகிறது (Group Warfare). இக்கூட்டங்களில் சேர்ந்த ஒவ்வொரு வீரனும் மேலதிகாரியின் உத்தரவை எதிர் பாராமல் சமயோசிதமாகப் புத்தியைச் செலுத்தி எதிரியைத் திக்குமுக்காடச் செய்யும் திறமை படைத்தவனாய் இருக்கவேண்டியது அவசியமாகிறது. படைத் தலைவர்களுக்கு, தனக்குக் கிடைத்த சமாசாரங்களை உடனே தெரிவிக்கும்படியாகவும், அவர்களுடைய கட்டளையை அப்போதைக்கப் போது பெறும்படியாகவும் இக்கூட்டத்தில் சேர்ந்த ஒவ்வொரு போர் வீரனுக்கும் ஒரு 'ரேடியோ' ஸெட்டு கொடுத்திருக்கின்றனர். இதைப் படத்தில் காணலாம்.

மேற்சொல்லிய முறைகளை உபயோகிப்பதனால் கிடங்குகள் பயனற்றுப் போய்விட்டன. முன் போல் படைகள் கிடங்குகளில் மறைந்து நின்று கொண்டு சண்டைபோடுவதை விட்டு விட்டுத் திறந்த வெளிகளில் 'டாங்கிகள்' என்று சொல்லப்படும் பீரங்கி வண்டிகளில் ஏறிக்கொண்டு பட்டாள வரிசையில் போர்புரிந்துவருகின்றனர். இது ஒரு பெரிய மாறுதல். டாங்கிப் படைகள்தாம் இப்போது நடக்கும் போருக்கு மிக அவசியமாக இருக்கின்றன. ஆயிரக்கணக்கான 'பான்ஸர் டாங்கிப் படைகள்' மேடுபள்ளத்தைச் சற்றும் சட்டை செய்யாமல் அதிவேகமாகச் சென்று எதிரி ஸ்தலங்களைத் தாக்குகின்றன. இங்ஙனம் டாங்கிகள் முன் சென்று எதிரிச் சேனைகளை முறியடித்த பிறகுதான் காலாட்படைகளும் மற்றவைகளும் முன் செல்லக்கூடும். ஆகவே இந்நாள் போரில் வெற்றி பெற வேண்டுமானால் விமானப் படை டாங்கிப் படை இவை இரண்டின் பலந்தான் அதிகமாக இருக்கவேண்டும்.

கடைசியாக, கடற் போரில் புதிய ஏற்பாடு ஒன்று கையாளப்பட்டுவருகிறது. யுத்த ஆரம்பத்தில் எதிரியின் யூ போட்டுகளால், அதாவது நீரில் மூழ்கிச் செல்லும் கப்பல்களினால் நேசக் கட்சிக் கப்பற்படைக்கும் வியாபாரக் கப்பல்களுக்கும் பெரும் விபத்துக்கள் நேரிட்டன. இவ்விபத்துக்களை விலக்க, தகுந்த உபாயத்தை நேசக்கட்சியார் கண்டுபிடித்துக் கையாண்டுவருகிறார்கள். இப்புதிய ஏற்பாட்டின்படி நேசக் கப்பல்கள் தன்னந்தனியாகப் போவதில்லை. பதினைந்து முதல் இருபதுவரையில் கப்பல்களை ஒன்றுகூட்டி அந்தக் கூட்டத்திற்கு முன்னிலும் இரண்டு பக்கங்களிலும் பீரங்கிகள் ஏற்றியுள்ள சண்டைக் கப்பல்களைப் பாதுகாப்புக்கு உடன் செல்லும்படி திட்டம் செய்திருக்கின்றனர். ஆகாயத்திலிருந்து கப்பல்களுக்கு அபாயம் நேரிடாமலிருக்க, நேசக் கட்சியாரின் விமானங்கள் அவரவர்களின் பிரதேசங்களிலுள்ள விமானத் தலைமை ஸ்தலங்களிலிருந்து கண்காணித்துவருகிறார்கள். இந்த ஏற்பாட்டிற்கு, 'கான்வாய்' (Convoy) என்று பெயர். இது உபயோகத்தில் வந்தது முதல் யூ போட்டுகளின் தொந்தரவு பாதிக்கு மேல் குறைந்துவிட்டது. சேனைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்களும், தளவாட சாமான்களும் ஏராளமாக அட்லாண்டிக் மஹாசமுத்திர "சந்துகளின்" வழியாகப் பத்திரமாய் வந்து சேருகின்றன. மொத்தத்தில், முடிவாக, இப்புதிய முறைகள்தாம் நேசக் கட்சியாரின் வெற்றிகளுக்கு முக்கிய காரணங்களென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

"மனிதன் பொருளைவிடப் பொருளற்றதையே உயர்வானதாக மதிப்பிடுகிறான்; பொன்னைவிடப் பேச்சையே, உயிரைக் காட்டிலும் மானத்தையே, தன்னைவிடத் தன் பெயரையே பெரிதென்று எண்ணுகிறான்."

—ரவீந்திரநாத் டாகூர்.

வாழ்க்கைத் தீ

மா. ரா. ராஜகோபாலன்

1

"ஏண்டா பயலே, இவ்வளவு அளகான கண்ணு ஒனக்குன்னு எங்கடா அந்த ஐயனரு வைச்சிருந்தார்? என்னடா, குறும்புப்பார்வை பார்க்கறே. ஒங்கப்பனுக்குப் பெரியவனுப் போனுக் கஞ்சித்தண்ணி ஊத்துவயா? ஏ பொன்னுத்தா, பயலுக்கு என்ன பேரு வைக்கலாம்னு யோசனே?"

"புள்ளக்கி ஒரு பேரு வைக்கத் தெரியாமே அப்பன்னு வந்துட்டேயே! அவனைப் போய், கஞ்சித்தண்ணி ஊத்துவியான்னு கேக்கிறியே, உனக்கு வெக்கமா இல்லே? அவன் அரிசிச் சோறுல்ல சாப்பிடப்போருன்? மூல ஊட்டுப் பேச்சியம்மா சாயங்காலம் வந்துச்சு. கொளந்தை கண்ணைப் பாத்து அப்படியே சொக்கிடுச்சு. 'கண்ணன்'னு பேரு வக்கச் சொல்லிருக்கு. எனக்கும் அதுதான் பிடிச்சிருக்கு."

"பயலுக்குச் சரியான பேருதான். இவனைப் படிக்கவச்சு 'துரை வேலை'க்கு (அவர்கள் பாஷையில் குமாஸ்தா வேலை) உடணும்னு எனக்கு ரொம்ப ஆசையா இருக்குது. ஒரு எளுத்துத்தெரியாமெ என்னெப்போல எப்பப் பாத்தாலும் அவனே மாடு மாதிரி ஓளெக்கப் பண்ணிடக்கூடாது. இன்னிக்கு அவனைக் கஷ்டம் தெரியாமெ வளத்தம்னு நாளைக்கு அவன் துரை வேலை பண்ணி நமக்குக் கட்டாயம் 'சுடுசோறு' போடுவான்."

"எல்லாம் பொளச்சிக்கடந்து ஆவட்டும். இப்பப் புடிச்சு ஏன் கோட்டை கட்றே?"

இது மில் கூலி பண்டாரத்திற்கும் அவன் மனைவி பொன்னுத்தாளுக்கும் நடந்த சம்பாஷணை. குழந்தை இல்லாமல் நாற்பது வயசுக்கு மேற்பட்டுப் பிறந்ததனுல் புத்திரவாஞ்சை அவனை இப்படியெல்லாம் கோட்டை கட்டத் தூண்டிற்று.

கசக்கிப் பிழியும் மில்லில் தங்கள் குழந்தை கண்ணனின் எதிர்கால வெற்றிக்காகச் சிரமத்தைப் பாராமல் உழைக்கும் இரு ஆத்மாக்கள். மாலை வேளையில் வேலைக் கஷ்டத்தை மறக்க இவ்வளவு நாள் கள்ளுத்தண்ணீர் பண்டாரத்திற்கு உதவியது. ஆனுல் பொன்னுத்தாளின் கட்டுப்பாட்டினுல் அதை மறந்ததோடு அல்லாமல் குழந்தை கண்ணனின் குறுகுறுப்பான விளையாட்டில் தன் மனத்தைச் சந்துஷ்டிக்கச் செய்தான். கண்ணன் பிறந்து மூன்று வருஷங்கள் பறந்து விட்டன. ஊரெல்லாம் ஓடி விளையாடினுன். பொன்னுத்தாளும் பண்டாரமும் வெற்றியின் கடைசிப் படியையும் தாண்டிவிட்டதாகவே எண்ணினுர்கள்.

2

விதி யாரை விட்டது! விலைவாசிகள் கட்டுக்கு அடங்காமல் உயர்ந்து கொண்டே சென்றன. கூலிகளின் ரத்த வேர்வையால் இதைச் சமாளிக்க முடியவில்லை. முதலாளிகளின் இரும்புப் பெட்டிக்கு ஒரு பூட்டுதான். ஆனுல் திறக்க முடியாத அவர்கள் இருதயத்திற்கு இரண்டு பூட்டு. கூலிகள் தங்கள் ஒரே ஆயுதமான வேலை நிறுத்தத்தைப் பிரயோகித்தனர்.

பண்டாரத்திற்கு இப்படியும் போக முடியவில்லை. அப்படியும் போக முடியவில்லை. ஒரு பக்கம் தன் கூட உழைக்கும் மனித யந்திரங்கள். மற்ருெரு பக்கம் தன் கண்ணனின் எதிர்கால வாழ்க்கை. கடைசியில் தன் சகபாடிகள் பக்கம் சேர்ந்து வேலைக்குச் செல்லாமல் வீட்டில் தங்கினுன்.

மில்லில் அன்று பெரிய களேபரம். அதிகாரவர்க்கம் தன் பூர்ண ஆட்சியைச் செலுத்திக்கொண்டிருந்தது. போலீஸாரின் தடியடிக்கு ஒரு தலையும் தப்பவில்லை. பண்டாரத்திற்கு இதையெல்லாம் பார்க்காமல் வீட்டில் இருப்புக்கொள்ளுமா? என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க அவன் மனம் துடித்தது.

'தீ, தீ' என்ற கூக்குரல். பண்டாரம் நின்றுகொண்டிருந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் அக்கினிதேவனும் வாயுபகவானும் ஓடிப்பிடித்துக் கொண்டிருந்தனர். மில்லில் பாதிக்கு மேல் அவர்கள் விளையாட்டுக் கருவியாகிவிட்டது. போலீஸார் அகப்பட்டவரை எல்லாம் கைது செய்தனர். பாவம், பண்டாரத்தின் தலையிலும் அது எழுதியிருந்தது.

பொன்னுத்தாளின் வயிறு அந்தப் பாழும் மில்லை விட அதிகமாகத்தான் எரிந்தது. ஆனால் அதை அணைக்க அங்கு யாரும் காத்துக் கிடக்கவில்லை.

பதினைந்து நாட்கள் சென்றன. கோர்ட்டில் எள் போட்டால் எள் விழாது. அவ்வளவு கூட்டம். ஏன்! தெரியாதா? மில்விற்குத் தீ வைத்த கேஸிற்கு அன்று தீர்ப்புக் கூற வேண்டிய கட்டம். ஒவ்வொருவராய் விசாரிக்கப்பட்டார்கள்.

பண்டாரம் கூண்டில் நிறுத்தப்பட்டான். அட கடவுளே! இதென்ன அநியாயம்! அவன்தான் தீ வைப்பதற்குத் தலைமை வகித்தானாம். சாட்சி ஒருவர் அல்ல, இருவர் அல்ல, ஐம்பது பேர்கள். பாவம்! ஏழைப்பண்டாரத்திற்குக் கண் இருக்கும் கடவுளே சாட்சி சொல்ல மாட்டாரே! கேவலம் இந்த மனிதர்களா அவனுக்குச் சாட்சி சொல்லி மீட்கப்போகிறார்கள்? போலீஸாரின் சாட்சிகளின் முன் அவன் வாய் திறக்க முடியவில்லை. அட்வகேட் ஜெனரலைப்போல் குறுக்கு விசாரணை செய்ய அவன் சட்டம் படித்திருக்கிறானா? எழுத்தறிவு இல்லாத ஓர் ஏழை மில் கூலிதானே அவன்?

நீதிபதி தம் தீர்ப்பை வாசித்தார். போலீசாருக்குத்தான் வெற்றி. பண்டாரத்திற்குப் பன்னிரண்டு வருஷக் கடுங்காவல்.

கோர்ட்டு வாசலில் பொன்னுத்தாள். ஜனங்கள் பேசிக்கொண்டு போவது அவள் காதில் விழவில்லை. போலீசார் இருவர் பண்டாரத்தைக் கைவிலங்குடன் அழைத்து வரும் போதுதான் அவள் தலை பக்கத்தில் இருக்கும் கல்லில் 'டணார்' என்று மோதியது. மனித உள்ளத்தை அறியும் சக்தி மனிதருக்கே இல்லாத பொழுது கேவலம் உணர்ச்சி அற்ற அந்தக் கல்லிற்கா பொன்னுத்தாளின் இருதயக் கோட்டை இடிந்தது தெரியப் போகிறது!

"பொன்னுத்தா, கொளந்தை கண்ணுக்காகவாவது தைரியமாச் சகிச்சுக்கோ. கடவுளுக்குக் கண் இருக்கு. ஆனா, பாக்காமே இருக்காரு. வர்றகஷ்டத்தை அநுபவிச்சுத்தானே ஆவ

னும்? அத பாரு, கொளந்தை விளையாடரான். அவனைக் கைவிட்டுடாதே. கூளோ, கஞ்சியோ கொடுத்து முன்னுக்குக் கொண்டாந்துடு. அப்பனைப் பத்தி அது கிட்டச் சொல்லாதே. பொளச்சுக் கடந்தா, வந்து பாக்கறேன். அவன் பெரியவனாப் போனா நம் கஷ்டமெல்லாம் விடிஞ்சிடும்'' என்று கண்ணில் பொங்கிவரும் நீரை அடக்கிக்கொண்டே பண்டாரம் மொழிந்தான்.

பாழும் கிணற்றில் விழுந்து சாகும் மனிதனுக்கு அறுந்த வேர் ஆறுதலை அளித்ததுபோல் அவனுக்குக் கண்ணனிடம் ஓர் அசைக்க முடியாத நம்பிக்கை.

போலீஸார் எங்கோ கண்காணாச் சீமைக்குப் பண்டாரத்தைக் கொண்டு சென்றுவிட்டனர். பொன்னுத்தாள் அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

3

பதினொரு வருஷங்கள் ஆய்விட்டன. பொன்னுத்தாள் கவலையினாலேயே கிழவியாய்ப் போய்விட்டாள். பண்டாரத்தின் வரவை எதிர்பார்த்துப் பார்த்து அவள் பார்வைகூட மங்க ஆரம்பித்தது. அன்றாடம், கஞ்சியைக் குடித்தோ, பட்டினி கிடந்தோ கண்ணனை எட்டாவதுவரை படிக்கவைத்து விட்டாள். பண்டாரத்தைப்பற்றி அவனிடம் அவள் ஒன்றும் சொன்னதில்லை. பண்டாரத்தின் ஆசையைப் பூர்த்தி செய்யத் தன் மகனை இன்னும் மூன்று வகுப்பு படிக்கவைக்கவேண்டும் என்பது அவள் எண்ணம். ஆனால் உழைப்பினால் இரும்பு யந்திரங்களே சக்தியை இழக்கும்போது அவள் எம்மாத்திரம்? இருந்ததையெல்லாம் முன்பே விற்றுக் கண்ணன் படிப்புக்கு அர்ப்பணம் செய்துவிட்டாள்.

கண்ணன் தன் நிலையை உணர ஆரம்பித்தான். தாயை இனியும் உழைக்க விட்டால் பிறகு தான் இந்த உலகில் ஆதரவற்றுப்போக வேண்டியதுதான் என்று கண்டுகொண்டான். பொன்னுத்தாளிடம் மெதுவாகத் தான் வேலை சம்பாதிக்கப் போவதாகத் தெரிவித்தான். அவள் மனம் துடித்தது. அதைச் சாண் அகல வயிறு எப்படி அறியும்? கண்ணன் வேலைக்குப் புறப்பட்டான்.

அவன் பார்க்காத இடமோ ஏறாத படியோ இல்லை என்றே கூறிவிடலாம். எங்கே போனாலும் பரிகாசமும் ஏச்சுக்காட்டுமே அவனை வரவேற்றன. ஒரு நாள் ஆயிற்று. இரண்டு நாள் ஆயின. இன்னும் எத்தனையோ நாட்களும் ஆயின. அவற்றில் முக்கால் வாசி நாள் அவன் பட்டினி.

ஆலையில் போயாவது ஏதாவது வேலைகேட்போம் என்று அவன் மனத்தில் ஓர் எண்ணம். முதலாளியைப் போய்ப் பார்த்தான்.

“நீ யார்ரா?”

“என் பெயர் கண்ணன் ஸார்!”

“அது சர்தாண்டா, ஒங்கப்பன் பேரு?”

“பண்டாரம்னு சொல்லுவாங்க.”

“ஓ! பண்டாரம் மவனா நீ! சீ, வெக்கமில்லெ, வேலை கேக்க வந்துட்டியே! வெளியே போடா.”

கடைசி வழி பிச்சை எடுப்பதுதான் என்று முடிவு செய்தான். தாய்க்குத் தெரிந்தால் அவள் உள்ளம் உருகி விடுவாள் என்பது அவனுக்குத் தெரியும். ஆகையால் அவளுக்குத் தெரியாமல் இது நடந்தது. எங்கே போனால் என்ன? எல்லாம் ஒரே மண் தானே! பெரிய ஏமாற்றம். செல்லமாய் வளர்க்கப்பட்ட அவன் இவ்வளவு சகித்துக்கொண்டதே ஆச்சர்யம்.

தாய் தன்னை வேண்டிக்கொண்டு போகச்சொன்ன ‘ஓட்டுக்கொள ஐயனாரி’ன் மேல் அவனுக்கு ஆத்திரம் பொங்கியது. அதை உடைத்துவிட்டுத் தான் மறுகாரியம் பார்ப்பது என்று கிளம்பினான். அங்கே போனதும் என்ன நினைத்தானோ என்னவோ! கள்ளிச்செடிகளை ஒன்று விடாமல் ஒடித்து அவற்றின் பாலை ஒரு கொட்டாங்கச்சியில் ஏந்திக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தான். அவன் வாய்மட்டும் ஐயனார் வழி காட்டிவிட்டதாக முணுமுணுத்தது.

“அம்மா, முடிவிலே பிச்சை எடுத்தும் பாத்துட்டேன். ‘ஏண்டா கண்ணையும் கையையும் கௌங்குமாதிரி வச்சுக்கிட்டுப் பிச்சை எடுக்க வந்துட்டே?’ என்கிறாங்க. ஐயனாரு நமக்கு வழிகாட்டிட்டாரு'' என்றான்.

பொன்னுத்தாள் பலஹீனத்தால் படுத்திருந்தாள். அவன் சொன்னதைக் கேட்டு அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பில்தான் எவ்வளவு கலகலப்பு!

உள்ளே முனகல் சப்தம் கேட்டது. பொன்னுத்தாளுக்குப் பயமாய்விட்டது. பசி மயக்கம் என்று தூக்கிப் பிடித்தாள் கண்ணனை. அவன் முகத்தைப் பார்த்ததும் அப்படியே நிலை குலைந்துவிட்டாள். அவன் கண்கள் கள்ளிப்பாலின் விஷம் தாங்காமல் ரத்தம் சொரிந்தன. இந்த உலகத்தில் நடக்கும் அநியாயங்களை அவன் இனியும் பார்க்க விரும்பாததே அதற்குக் காரணம்.

"உன் கண்ணைத்தானேடா ஊன்றுகோலாய் நம்பியிருந்தேன். இப்படி மோசம் பண்ணிவிட்டாயே!" என்று பொன்னுத்தாள் கதறினாள்.

"அம்மா, அழாதே. என் கண்கள் தான் நம்ம ரெண்டுபேருக்கும் இனிமே ஊன்றுகோல். என் கண்களில் குளி விளுந்தாலும், பெத்த உன் வயத்திலே குளி விளறத்தை என்னால் பாக்க முடியலே. இத்தனை நாளா இந்தக் கண்கள் இருந்து என்ன உபயோகமா இருந்தது? இனிமே மூடி இருக்கிற அவற்றை நாலு பேரிட்டக் காட்டி எங்கம்மாவைக் காப்பாத்தணும். கண்ணற்ற கபோதிக்குப் பிச்சை போடுங்க என்றால் அப்பொழுதாவது அவர்கள் மனம் இரங்காதா? என் கண் போனாப் பரவாயில்லே. உன் வயிறு காயப்படாது" என்று அவள் கண்ணீரைத் துடைத்தான் கண்ணன்.

கண்கள் இருக்கும்போது மனிதர் பார்ப்பதில்லை; ஆனால் கண்கள் போன பிறகு கண்ணன் உலகத்தை நன்றாகப் பார்க்கக் கற்றுக்கொண்டான். இது தான் அந்தக் கல்லில் இருந்த ஐயனார் அவனுக்குக் காட்டிய வழி.

4

பன்னிரண்டு வருஷங்கள் முடிந்ததும் பண்டாரம் விடுதலை அடைந்தான். ஜெயிலுக்குப் போய் வந்த ஆட்கள் நிலைமை தெரிந்ததுதானே? ஆகையால் அவனை நாம் அடையாளம் கண்டுகொள்ளாததில் ஆச்சரியம் இல்லை.

பண்டாரம் ஊருக்குக் கிளம்பினான். எதற்கு என்று நினைக்கிறீர்கள்? கண்ணன் 'துரை' வேலையில் இருப்பதைப் பார்க்கத்தான். பொன்னுத்தாள் 'சுடு சோறு' தின்றுகொண்டிருப்பாள் என்று அவன் நிச்சயமாய் நம்பினான். ஊருக்கும் வந்துவிட்டான். எங்கெல்லாமோ சுற்றி அலைந்து தன் மகனையும் மனைவியையும் தேடியாய் விட்டது. ஒருகால் செத்து மடிந்து விட்டார்களோ என்று அவன் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றிற்று. மறு கணம், 'சே, சே, கண்ணன் கௌரவமான இடத்தில் தன் வேலைக்கு ஏற்றபடி தன் தாயுடன் குடியிருப்பான்' என்று தன் மனத்தைத் தேற்றிக்கொண்டான். வழியில் இருக்கும் பிச்சைக்காரர்கள் அவன் கண்களில் படவில்லை. அவர்களைப்பற்றி அவன் ஏன் நினைக்கவேண்டும்? மகன் வீட்டில் 'சுடு சோறு'தானே அவன் வேண்டுவது?

"ஐயா, கண்ணில்லாத கபோதிப் பிள்ளைக்கு ஒரு காலணாக் கொடுங்க!" பண்டாரம் திரும்பினான். பின்னால் ஒரு பெண்பிள்ளை. இல்லை! இல்லை! கிழவி ஒருத்தி பதினைந்து வயசுக் குருட்டுப் பையனுடன் கையேந்திக் கொண்டிருந்தாள்.

பையில் பீடிக்காக வைத்திருந்த கடைசிக் காலணாவை எடுத்து அவள் கையில் வைத்தான். கிழவி அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

திடீரென்று, "நீ பண்டாரந்தானே?" என்றாள் கிழவி.

"ஆமாம், அதெப்பத்தி உனக்கு என்ன?"

"இவனைத் தெரியலியா?"

"இல்லியே!"

"கண்ணன்."

"சீ, பேமானிக்களுதே, பிச்சக்காரப் பொர்ணமே, வாய்த் துடுக்கைப் பாரு. வந்துட்டா அங்கிருந்து. அப்பால்போ, மூதேவி. எம்பேரெத்தெரிஞ்சுக்கிட்டு ஏமாத்தப் பாக்கிறியே! என் கண்ணன் எங்கே! இந்தக் குருட்டுப்பயல் எங்கே! என் கண்ணு, துரைவேலை செஞ்சுக்கிட்டு அவன் ஆயி பொன்னுத்தாளுக்குச் 'சுடு சோறு'ல்ல போட்டுக்கிட்டிருப்பான்? நான்தான் கொளந்தையெப் பாக்க முடியலே" என்று கூறிவிட்டு, நீள நடந்தான்.

"ஐயோ, கண்ணனுக்குத்தான் கண் இல்லாமல் போச்சுன்னா கடவுளுக்குமா கண்ணில்லாமெப் போகணும்!" என்று அவள் கண்ணீர் வடித்தாள்.

பண்டாரத்தின் நம்பிக்கையைக் கிழவியின் கண்ணீரால் அழிக்க முடியுமா? நீங்களே சொல்லுங்கள்.

கம்பர் - ஒரு வழக்கறிஞர்

என். சுப்பராமன்

ஆங்கிலக் கவிச்சக்ரவர்த்தியான ஷேக்ஸ்பியரைப்பற்றிக் குவிந்திருக்கும் ஆராய்ச்சிகள் பல. கவியரசரின் சிறப்பில் ஈடுபட்டு மயங்கிப் பல்வேறு குயுக்தியான வழிகளில் ஆராய்ச்சி புகுந்திருப்பதாகச் சிலர் குறை கூறுவதுண்டு. வைத்தியம், சிற்பம், பௌதிகம் முதலிய இன்னும் பல சாஸ்திரங்களிலும் ஷேக்ஸ்பியர் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்று எண்ணி அவ்வித முறைகளில் நாடகங்களின் ஆராய்ச்சியில் புகுந்திருப்பவர்களைப் பற்றிச் சிலர் இங்ஙனம் குறை கூறுவதிலும் சிறிதளவு உண்மையுண்டு.

தமிழ்க் கவிச்சக்கரவர்த்தியைப் பற்றிய ஆராய்ச்சியில் புதுவிழிப்பும் புத்துணர்வும் ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில், மேற்கூறிய சில ஆங்கில ஆராய்ச்சியாளரைப் போல் நானும் சிந்தனையில் ஆழ்ந்தது வியப்பல்லவே. ஷேக்ஸ்பியரைப்பற்றி உள்ள ஆராய்ச்சி எவ்விதம் இருப்பினும், கம்பரைப் பொறுத்த மட்டில் இச்சிறு ஆராய்ச்சி குறை கூறும் ரகத்தைச் சேர்ந்ததல்ல என்பதே என் தாழ்மையான அபிப்பிராயம்.

'நியாயவாதி' அல்லது 'வழக்கறிஞ'னுக்கு உள்ள முக்கிய அம்சங்கள் இரண்டு. முதலாவது, நியாயத்தில் அல்லது சட்டத்தில் தேர்ச்சி. இரண்டாவது, வாதிக்கும் திறன்—அதாவது ஆங்கிலத்தில் 'Advocacy' என்று கூறப்படுவது. இரண்டாவது அம்சத்தையே முக்கியமாகக் கொண்டு இச்சிறு ஆராய்ச்சி தரப்பட்டது.

'Advocacy' அல்லது 'நியாயவாதம்' என்பது ஒரு கலை என்றே சொல்ல வேண்டும். நம் நாட்டிலும் மேல் நாடுகளிலும் சிறந்த வழக்கறிஞர்களின் வாதத்தைக் கேட்டவர்கள் அப்படியே அபிப்பிராயப்படுகிறார்கள். சுருக்கமாகக் கூறுமிடத்து, தன் கக்ஷியின் சார்பில் உள்ள கேஸையும், அதிலுள்ள நியாயத்தையும் எடுத்துச் சொல்லும்போது சட்ட விரோதமின்றியும், கேஸில் இருதிறத்தாரின் சார்பிலுள்ள உண்மைகளையும் யதார்த்தங்களையும் ஒளியாது உரைத்தும், தன் பாகத்தில்தான் ஸத்தியமும் நியாயமும் இருக்கின்றன என்று கேட்போரும் மன்றத் தலைவரும் நம்பி ஆமோதிக்கும்படி வசீகரத்துடன் எடுத்துச் சொல்வதே நியாயவாதத்தைக் கலை ஸ்தானத்தில் வைக்கும் தனிச்சிறப்பாகும்.

இத்தகைய வாதத்தில் கம்பர் அசாதாரணமான தேர்ச்சி பெற்றவரென்று கம்பராமாயணத்திலிருந்து தென்படுகிறது. கம்பரும் தம் காலத்தில் நீதி மன்றங்களுக்குச் சென்று சிறந்த வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டு அநுபவித்ததுமல்லாமல் சட்டத்தின் சில நுட்பங்களையுங்கூட அறிந்திருக்கக்கூடுமென்றும் தெரிகிறது.

உதாரணமாக, வாலிவதைப் படலத்தை எடுத்துக் கொள்வோம். அதைச் சுற்றித் தொன்றுதொட்டு நடந்துவரும் 'தர்மாதர்ம' வழக்கைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. கம்பரின் வாலி இராமபிரானை நோக்கிக் கூறும் கவிதைக் கொத்தானது சிறந்த நியாய வாதத்தின் சிகரம் என்றே சொல்லவேண்டும். நியாயம், தர்மம், மனச்சாட்சி (Justice, Equity and Good conscience) என்று முப்பிரிவுகளாகப் பிரித்திருக்கும் நமது தற்காலச் சட்ட முறையைத் தழுவியே ஒவ்வோர் ஆணி வாதத்தையும் எடுத்துச் சொல்கிறான் வாலி.

"வாய்மையும் மரபுங் காத்து
மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்த னேநீ
பரதன்முன் தோன்றி னாயே

தீமைதான் பிறரைக் காத்துத்
தான்செய்தாற் றீங்கன் ருமோ
தாய்மையு மன்றி நட்பும்
தருமமும் தழுவி நின்ருய்''

என்று கூறும் முதற் கவியானது நியாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாதம்.

"குரக்கினத் தரசைக் கொல்ல
மனுநெறி கூறிற் றுண்டோ?''

என்பது சட்ட பூர்வமான வாதம்.

"இரக்கமெங் குகுத்தாய் என்பால்
எப்பிழை கண்டா யப்பா?''

என்பது தர்மநியாயத்தை அடிப்படையாகக் கொண்ட வாதம். இந்த வாதம் அமைந்திருக்கும் சொற்களின் வசீகரந்தான் என்னே! இன்னும்,

"இறைவனீ யென்னைச் செய்த
தீதெனி லிலங்கை வேந்தன்
முறையல செய்தா னென்று
முனிதியோ முனிவி லாதாய்''

என்ற வரிகள் நல்ல மனச்சாட்சியைச் சார்ந்த வாதம்.

இன்னும் வழக்கறிஞர்கள் எதிர்க் கட்சிகளின் பாகத்தை எடுத்துரைக்கும்போது கேஸில் எதிர்க் கட்சியின் சில செய்கைகளின் அடிப்படையான காரணங்களை ஊகத்தால் எடுத்துரைத்துத் தம் கேஸைப் பலப்படுத்திக் கொள்வார்கள். சிறந்த வக்கீல்களின் வாதத்தைக் கேட்டவர்களுக்கு இது நன்ருகத் தெரியும். அத்தகைய வாதத்தைக் கம்பரின் வாலி கையாளுகிருன்.

"ஆவியைச் சனகன் பெற்ற
அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னர்த்
திகைத்தனை போலும் செய்கை!''

இந்தக் கவித்தொகுதியை வாசிக்க வாசிக்க, அதன் வாதச் சுவையை நன்கு அநுபவிக்கலாம். எவ்வளவு அழகான வாதச்சிறப்பு! எவ்வளவு வசீகர நடை! எத்தனை அழுத்தம்! ஒவ்வொரு கவியும் ஒவ்வொரு நுட்பமானதும் ஆணித்தரமானதுமான சங்கதியை எடுத்துச் சொல்கிறது. இந்த வாதத்தைக் கேட்டபின் இந்த 'வாலி - ராமன்' கேஸுக்கு எப்படித் தீர்ப்புச் சொல்ல முடியும்? இன்று வரையிலும் பின்னத் தீர்ப்புக்களாகவே இருந்துவருவதில் வியப்பு என்ன இருக்கிறது?

கம்பரின் நியாய வாதத்திறனைத் தெளிவுபட உலகத்தாருக்கு உணர்த்த வந்தவன் இராவணனே என்று தோன்றுகிறது. இராவணனே பெரிய நியாயவாதி; மகாபுத்திசாலி. அதிலும் பலக்குறைவான கேஸை எடுத்து வாதிப்பதில் சிறந்த வழக்கறிஞர்களில் இராவணனைவிடச் சிறந்தவர் இல்லை என்றே சொல்லலாம். அத்தகைய வழக்கறிஞனை இராவணன் கம்பரது தமிழில் சிக்கிக் கொண்டுவிட்டால் வேறு என்ன வேண்டியிருக்கிறது? சுந்தரகாண்டம் "நிந்தனைப் படல''த்தில் இராமனைத் தான் கொல்லாததன் காரணத்தை எடுத்துக் கூறுகிருன் சீதைக்கு:

"ஒன்றுகே ளுரைக்க நிற்கோ
ருயிரென வுரியோன் றன்னைக்
கொன்றுகோ விழைத்தா னீநின்
னுயிர்விடிற் கூற்றங் கூடும்
என்றனு ருயிரு நீங்கு
மென்பதை யியைய வெண்ணி
அன்று நான் வஞ்சஞ் செய்த
தாரெனக் கமரி னேர்வார்.''

இது ஒரு மறுக்கமுடியாத வாதமல்லவா? வழக்கறிஞனின் எவ்வளவு சமயோசிதமான வாதம்!

இன்னும் யுத்தகாண்டம் மாயா சனகப் படலத்தில் சீதை தன்னுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்தால் அது தவருகாதென்றும் கூறி உடன் தானே சட்ட ரிபோர்ட்டுகளைப் புரட்டி, மிகவும் பொருத்தமான மேற்கோள் (Authority) எடுத்து எவ்வளவு அழகாக வாசித்துவிடுகிருன்!

"அந்தரம் உணரின் மேனுள்
அகலிகை என்பாள் காதல்
இந்திரன் உரத்தை நல்கி
யெய்தினுள் இழுக்குற் ருளோ?''

நியாய வாதத்தில் மேற்கோள்களின் அவசியத்தைக்கம்பர் நன்குணர்ந்திருக்கவேண்டும்.

அடுத்தபடியாக 'இராவண - விபீஷண' வாதத்தைப் பற்றிப் பார்ப்போம். இதுவும் ஒரு வாதச் சிறப்பின் சிகரம் என்று சொல்லலாம். சென்ற பங்குனி இதழில் ஸ்ரீமான் சேதுப்பிள்ளையவர்கள் எடுத்துக் காட்டியபடி,

"வரங்கொள் வாலிபால் தோற்றனன்
மற்றும்வே றுள்ள
குரங்கெ லாம்எனை வெல்லுமென்று
எங்ஙனம் கோடி?''

"குரங்கு வாலி என்னை வெல்ல வில்லை; வரம் பெற்ற வாலி வென்றான்" என்று சொல்லும்பொழுது வழக்கறிஞர்கள் சட்டத்தின் பிரிவுகளைச் சமயத்திற்கு ஏற்றவாறு பதம் பிரித்துப் பொருள் கூறும் ஆற்றலைக் கண்டு வியக்கிறோமல்லவா?

'இந்திரசித்து - இராவண' சம்வாதத்திலும் இதே வாதச் சிறப்பைக் காண்கிறோம்.

" வென்றில னென்ற போதும்
வேதமுள் ளளவும் யானும்
நின்றுள னன்றோ மற்றவ்
விராமன்பேர் நிற்கு மாயின்
பொன்றுத லொருகா லத்துந்
தவிருமோ பொதுமைத் தன்றோ
இன்றுளார் நாளை மாள்வார்
புகழுக்கு மிறுதி யுண்டோ?"

இந்த வாதத்தின் தன்மையும் சுவையும் சிறந்த வழக்கறிஞரின் வாதங்களைக் கேட்டு அநுபவித்தவர்கள்தாம் உணரமுடியும். இந்த வாதமானது உடனே இந்திரஜித்தின் கேஸைத் தோற்கடித்துவிடுகிறது அல்லவா? சில வழக்கறிஞர்கள் சில சந்தர்ப்பங்களில் அதிகமாகப் பேசாமல் குயுக்தியான ஒரே ஒரு வாதத்தில் கேஸை ஜயித்து விடுவது போல அல்லவா இருக்கிறது?

விபீஷணனைக் கூட்டிக்கொள்ளலாமா கூடாதா என்ற பிரச்னையைப் பற்றிச் 'சொல்லின் செல்வனு'கிய அநுமான், யுத்தகாண்டத்தில் கூறியிருக்கும் கவிகளில் சொற்றிறமை, நுட்பமான அநுமானம், அநுபவ முதிர்ச்சி ததும்பும் காரணங்கள், தர்க்கப் பண்பு, உண்மையை ஊன்றி உணரும் சக்தி முதலிய வாதச் சிறப்புக்களும் நியாயத்தைச் சீர்தூக்கிப் பகுத்தறியும் நீதிபதியின் மனப்பாங்கும் மிளிர்ந்திருப்பதைப் பார்க்கிறோம்.

சட்டத்திற்கு அஸ்திவாரமாக இருக்கும் 'ருஜு' என்ற விஷயத்தைப் பற்றியும் கம்பருக்கு வழக்கறிஞன் போலுள்ள பரிசயம் இருந்திருக்க வேண்டும். நேர்முறையான ருஜுவே (Direct Evidence) முக்கியமானதென்று அறிந்தவர் ஆதலின்,

" கண்டனன் கற்பினுக்
கணியைக் கண்களால்"

என்றார். இன்னும் தற்காலக் கிரிமினல் சட்டத்தில் முக்கியமான "சந்தர்ப்ப ருஜு" (Circumstantial Evidence) வைப்பற்றியும் அதன் உண்மையை உள்ளபடி எடுத்துக் காட்டும் தன்மையைப் பற்றியும் கம்பர் நுட்பமாக அறிந்திருந்தார். தான் இலங்கையில் இயற்றிய வீரச் செயல்களைக் கூறுதிருந்த அநுமானைப் பார்த்து வானர நண்பர்கள் எல்லாரும்,

" பொருதமை புண்ணே சொல்ல
வென்றமை போந்த தன்மை
உரைசெய வூர்தீ யிட்ட
தோங்கிரும் புகையே ஓதக்
கருதலர் பெருமை தேவி
மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதர வுணர்ந்தோம்......"

என்று சொல்வதில் சந்தர்ப்ப ருஜுவின் உண்மைத் தத்துவத்தைக் கம்பர் நன்கு அறிந்திருக்கவேண்டும் என்று விளங்குகிறதல்லவா?

" புஸ்தகங்கள் என் மனசில் அனந்தகோடி புதிய உருவங்களை, உணர்ச்சிகளை, சிற்சில சமயம் ஆனந்தத்தை, ஆனால் பெரும்பான்மையாக ஆழ்ந்த, ஆழங் காண முடியாத முடிவற்ற சோகத்தை உண்டாக்கி என்னைத் துயரத்தில் ஆழ்த்தின. 'வெர்டரின் துயரங்கள்' சாதாரணக் கதைதான். ஆனால் அதில் பலவிதமான எண்ணக் கலவைகள். இதுவரை தெளிவுபடாத பல விவகாரங்களில் புதிய அர்த்த புஷ்டிகள் முதலியன பொதிந்து கிடந்தன. சாதாரண வாழ்க்கை; ஆனால் சிகரம் தாவும் சிந்தனைகள், உணர்ச்சிகள்!"

—மேரி ஷெல்லி.

?

'ஸேஷா'

இமாலயச் சாரலில் தேவதாரு வனம் ஒன்று. அதன் நடுவே ஒரு சிறு வெளியில் ஏழு பர்ணசாலைகள். சூரியோதய வேளையாகையால் ஓமப் புகையும் வேத கோஷமும் நிரம்பி இருந்தது அவ்விடம்.

வெயில் ஏறியது. ரிஷிபுத்திரர்கள் ஒவ்வொருவராக ஆசிரமப் பசு மாடு கன்றுகளை ஓட்டிக்கொண்டு சமித்துச் சேகரிக்கக் காட்டுப்பக்கம் சென்றார்கள். குடில்களில் ரிஷிபத்தினிகள் கிருக காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் முனிவர்கள் அங்கே இல்லை.

தொலை தூரத்தில் மேடான ஓர் இடத்தில் ஒரு பெரிய விருக்ஷத்தின் நிழலில் அமர்ந்து அத்திரி, பிருகு, குத்ஸர், வசிஷ்டர், கௌதமர், காசியபர், ஆங்கிரஸர் என்ற ஸப்த ரிஷிகளும் தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் பனி தோய்ந்து வெண்மையாகத் திகழ்ந்தது இமயசிகரம். அதற்கு மேலே வானவெளியின் கருநீலம்.

வசிஷ்டர், "அண்டசராசரத்தில் நாம் எந்த மூலை?" என்று பேச்சை எடுத்தார்.

"அவ்வளவு தூரம் போவானேன்? இந்தப் பனிமலையின் கீழ் இருக்கும் போதே நாம் அணுமாத்திரமாய்க் காண்கிறோமே!" என்றார் ஆங்கிரஸர்.

எல்லோரும் சிகரத்தை உற்று நோக்கினார்கள். மெய் சிலிர்த்தது. பரமசிவன் உறையும் பர்வதம் அல்லவா? கரங்குவித்து நின்றனர் சிறிது நேரம்.

மீண்டும் தத்துவ விசாரணையில் இறங்கினார் வசிஷ்டர். "இந்தப் பிரபஞ்சத்தில் நிலையான பொருள் எது?" என்பதுதான் விஷயம்.

அத்திரி: சூரியனே; அவனால்தானே எல்லா ஜீவராசிகளும் வாழ்கின்றன.

குத்ஸர்: இல்லை. சந்திரன்தான். ஔஷதிகளுக்கு அரசனல்லவா அவன்? உடல் நலங் கெடாதிருக்க அவை உதவுகின்றன; அவனுக்கு அமிருத கிரணன் என்று பின் ஏன் பெயர் வந்தது?

கௌதமர்: ஊஹூம். அதெல்லாம் இல்லை. வாயுதான் அழியாத பொருள். காற்று இல்லாவிட்டால் எப்படி நாம் பிழைத்திருப்போம்?

ஆங்கிரஸர்: இல்லவே இல்லை. இதோ பனிவரையில் வீற்றிருக்கும் மகாதேவனே நிலையானவன். அவன் பாதத்தைத்தானே தினமும் வணங்குகிறோம்?

காசியபர்: சிருஷ்டி கர்த்தா இருப்பதால்தானே நாம் இப்படியெல்லாம் பேச முடிகிறது? அப்பேர்ப்பட்ட பிரமனை மறந்துவிட்டீர்களே!

பிருகு: அப்படிச்சொன்னால், அந்தப் பரந்தாமன் வயிற்றில் உதித்தவன் தானே பிரம்மதேவன்; மகாவிஷ்ணு தான் அழியாப் பரம்பொருள். இதை நான் நேரில் பரீக்ஷித்துப் பார்த்திருக்கிறேன்.

மற்ற ரிஷிகள்: எப்படி?

பிருகு: ஒரு சமயம் பிரம்மாவிடம் போயிருந்தேன். நான் வந்திருப்பதைக் கூடக் கவனியாமல் ஸரஸ்வதியோடு ஸரஸமாடிக்கொண்டிருந்தான், ஐயா!

முனிவர்கள்: அப்புறம்?

பிருகு: அப்புறமா! எனக்குச் சீ என்று ஆகிவிட்டது. கைலாசத்துக்குப் போனேன். அங்கே நான் கண்ட காட்சி!—அப்பாடா!

முனிவர்கள்: என்ன ஸ்வாமி?

பிருகு: என்னைப் பார்க்கக்கூடச் சக்தி இல்லாமல் சாம்பற் குவியலில் புரண்டுகொண்டிருந்தான் பரமசிவன். கண் எங்கேயோ செருகிக்கொண்டு போயிருந்தது. இந்த அலங்கோலத்தைக் காணச் சகியாமல் வைகுண்டம் போனேன்.

முனிவர்கள்: அங்கேயும் அதே அழகுதானா?

பிருகு: கேளுங்கள்: பள்ளிகொண்டிருந்தான் ரங்கநாதன். லக்ஷ்மி தேவி காலைப் பிடித்துக்கொண்டிருந்தாள்.

இந்தச் சிருங்கார கக் காட்சியைப் பார்த்ததும் எனக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை. ஓங்கித் தரையில் ஓர் உதை விட்டேன். தூங்கிக்கொண்டிருந்தவன் எப்படியோ தெரிந்துகொண்டு சட்டென்று எழுந்து என் கால் இரண்டையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். நான் திடுக்கிட்டுப்போனேன். அதோடு விட்டானா? "அபசாரம்! அபசாரம்!" என்று தன் தேவி எதிரிலேயே மன்னிப்புக் கேட்டான். எனக்கு அவமானமாகிவிட்டது. நான் முதலில் கண்டது வெறும் மாயை என்று அப்போதுதான் எனக்குப் புரிந்தது. இதற்கு மேல் என்ன அத்தாட்சி வேண்டும், அவன்தான் நிலையானவன் என்பதற்கு?

வசிஷ்டர் சற்று நேரம் மௌனமாக இருந்தார்.

"ஏன் தாங்கள் மட்டும் ஒன்றுமே சொல்லவில்லை?" என்று கேட்டார் பிருகு.

"நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? இன்னும் அவ்வளவு பரிபக்குவமாகவில்லை என் மனம்" என்று நிதானமாக மொழிந்தார் வசிஷ்டர்.

மற்றவர்கள் இதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்தார்கள். 'என்னடா இது! இவருக்கே இன்னும் விளங்காதிருக்கும்போது நாம் ஏதோ வாய்க்கு வந்ததையெல்லாம் உளறிக்கொட்டினோமே!' என்று லஜ்ஜையும் வேறு அவர்களுக்கு.

அன்று பகல் அதோடு விவாதம் நின்றது. இரவு வானம் துல்லியமாக விளங்கியது; அமாவாசையானதால் மற்ற நாட்களை விடப் பளிச்சென மின்னின தாரகைகள். ஆசிரம வாயிலில் ஸப்த ரிஷிகளும் மறுபடியும் கூடினார்கள். மத்தியான்னம் நடந்த ஸம்பாஷணையில் மனம் ஒன்றியிருந்தார்கள். அவர்கள் சந்தேகம் இன்னும் தெளிந்தபாடில்லை. எல்லோரும் மௌனமாக வானத்தை நோக்கியபடி இருந்தனர்.

திடீரென்று வசிஷ்டர், "அதோ பாருங்கள்" என்றார். வடதிசையிலே அவர் சுட்டிய இடத்தை மற்ற ரிஷிகள் கவனித்தார்கள். சாமான்யமான ஒளியுடைய ஒரு நக்ஷத்திரம் தெரிந்தது. ஒன்றும் புரியாமல், "அதில் என்ன விசேஷம்?" என்றார்கள்.

"அதை முன்னால் பார்த்திருக்கிறீர்களா?" என்று வினவினார் வசிஷ்டர்.

சிலர், "ஞாபகம் இல்லையே!" என்றார்கள்; சிலர், "பார்த்திருக்கிறாற் போல்தான் தோன்றுகிறது" என்றனர்.

வசிஷ்டர், "சரி. இன்று அதை இராத்திரி முழுதும் கவனிக்கலாம்" என்றார்.

அப்படியே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நிலை பெயராமல் அதே இடத்தில் ஒளிர்ந்தது அந்த விண்மீன். ரிஷிகளின் ஆச்சரியத்தைச் சொல்லி முடியாது.

அப்போது வீணையின் இன்னிசை கேட்டது; சிரித்த முகத்துடன் யாழேந்திய கரத்தினராய் நாரத முனிவர் தோன்றினார்.

"வர வேண்டும், வர வேண்டும். ஏது இவ்வளவு தூரம்?" என்று ஸப்த ரிஷிகளும் அவரை வரவேற்றார்கள்.

"துருவலோகத்துக்குப் போய்த் திரும்பி வந்து கொண்டிருந்தேன். வழியில் உங்கள் குரல் கேட்டது. உங்களையும் பார்த்துப் பேசிவிட்டுப் போகலாமென்றுதான் வந்தேன்."

"அது எங்கே ஸ்வாமி இருக்கிறது? இது வரையில் கேள்விப்பட்டதே இல்லையே" என்று வியப்புடன் கேட்டார்கள் முனிவர்கள் ஏழுபேரும்.

"அதோ தெரிகிறதே; அதுதான்" என்று வசிஷ்டர் சுட்டிய நக்ஷத்திரத்தையே நாரதரும் காட்டினார்.

"இப்போது அதைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம், ஸ்வாமி" என்றார்கள் மற்ற முனிவர்கள்.

"அங்கேதான் துருவன் இருக்கிறான்—ஓ! உங்களுக்குத்தான் தெரியாது என்றீர்களே; சொல்லுகிறேன் விஷயத்தை: உத்தானபாதன் என்று ஒரு ராஜா இருந்தான். அவனுக்கு இரண்டு ராணிகள். மூத்தவள் பெயர் சுநீதி; இளையவள் பெயர் சுருசி. சுநீதியின் பிள்ளைதான் துருவன். இளையவள் பிள்ளையான உத்தமனை மடியில் வைத்துக்கொண்டு ஒரு நாள் ராஜா கொஞ்சிக்கொண்டிருந்தான். துருவன் சிறு பையன்; அவனுக்கும் தகப்பனிடம் போக வேண்டுமென்று ஆசை. சுருசி 'சீ' என்று தட்டித் துரத்தவே துருவன் மனம் நொந்து தன் தாயிடம்

போனான். ராஜா இளையாள் மோகம் பிடித்தவன்; அவன் ஒன்றும் சொல்ல வேயில்லை. சுநீதி பிள்ளையை எவ்வளவு தேற்றியும் அவன் அழுகை ஓயாது போகவே, 'ஸ்ரீமந் நாராயணனைத் தியானி. அவர் அருளைப் பெற்றால் உனக்கு ஒரு குறைவுமில்லை' என்றாள். உடனே காட்டுக்குப் புறப்பட்டுவிட்டான் பையன். வழியில் அவனைக் கண்டேன். 'திரும்பிப்போ, குழந்தாய். பெரியவர்களாலேயே அவனை அடைய முடியவில்லை ; உன்னால் முடியுமா?' என்று எவ்வளவோ தரம் சொல்லிப் பார்த்தேன். ஆனால் அவன் பிடிவாதத்தைக் கலைக்கவே முடியவில்லை!''

வசிஷ்டர், "இந்த இடத்தில் உங்கள் வேலை பலிக்கவில்லை என்று ஒப்புக் கொள்ளுங்களேன்!" என்று குறும்பாகப் புன்னகை செய்தார்.

நாரதரும் சிரித்த வண்ணம், "சரி; அப்படித்தான் இருக்கட்டுமே. அப்புறம் அவனுக்கு மந்திரோபதேசம் செய்தான்; அந்தச் சிறுவன் தவமகிமையால் பகவான் அவனுக்கு இகத்தில் மட்டுமன்றிப் பரத்திலும் நிலையான புகழைக் கொடுத்திருக்கிறார்" என்று முடித்தார். பிருகுவைத் தவிர மற்ற முனிவர்கள் துருவனை வணங்கி நின்றார்கள்.

நாரதர் இதைக் கவனித்து, "ஏன் ஸ்வாமி, நீர் மட்டும் அவனை வணங்கவில்லை?" என்று பிருகுவைக் கேட்டார்.

பிருகு: இதிலிருந்து என் அபிப்பிராயந்தான் சரியென்று உறுதியாகிறது.

நாரதர்: எப்படி?

பிருகு: அந்தப் பரந்தாமனைத் தியானித்ததனால்தானே துருவன் இந்த நிலையை அடைந்தான்?

நாரதர்: ஆனாலும் துருவன் ஒருவன் பிறந்ததால்தானே ஸ்ரீமந் நாராயணனுடைய மகிமை நமக்குப் பிரத்தியக்ஷமாகத் தெரிகிறது?

பிருகு: அதற்கும் அந்தப் பகவான் தானே காரணம்? அவன் நினைக்காதிருந்தால் துருவன் ஏன் பிறக்கப் போகிறான்?

வசிஷ்டர்: மகரிஷே! இந்த மாதிரி வாதத்திற்கு முடிவே ஏற்படாது; கடைசியில் எல்லாம் சூன்யம் என்று நாஸ்திகத்தில்தான் போய் நிற்கும்!

பிருகு தலை குனிந்தார்.

பிறகு ஏழு பேரும் நாரதரைப் பார்த்து, "மகரிஷே! அந்த அழியாப் பேறு அடைய எங்களால் முடியுமா?" என்று வினவினார்கள்.

"அதோ உங்களுக்கு ஆதர்சமாக அவன் விளங்குகிறான். அவனைச் சுற்றி வந்து, 'உன் நிலையை நாங்கள் எய்துவது எப்படி?' என்று பிரார்த்தியுங்கள். அதுதான் வழி" என்று உபதேசித்தார் நாரதர்.

அன்று தொட்டு ஸப்தரிஷிகளும் விசும்பின் வட திசையிலே துருவனை வலம் வந்து, 'எப்படி? எப்படி?' என்று கேட்ட வண்ணம் இருக்கின்றனர்.

இன்னும் விடை கிடைக்கவில்லை!



களத்திர தோஷம்

'மாயாவி'

ராமலிங்கமையருக்கு அந்த வீட்டிற்குள் நுழைவதற்கே வெட்கமாக இருந்தது. ஐந்து வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள், 'இனி என் உயிர் போனாலும் இந்த வீட்டில் இனிமேல் காலடி எடுத்து வைக்கமாட்டேன்' என்று வீராப்புப் பேசிவந்த அவர், இன்று சந்தர்ப்பங்களால் நிர்ப்பந்திக்கப்பட்டு அவ்வீட்டிற்குள் நுழைந்துகொண்டிருந்தார்.

சாதாரண சமயமாக இருந்தால்கூடப் பிரமாதமில்லை. அவருக்கு முற்றும் எதிரான காரியங்கள் மிகுந்த கொம்மாளத்துடன் நடந்துகொண்டிருக்கும் அச்சமயத்திலுங்கூட, விதி தம்மை இவ்விதம் உந்தித் தள்ளிவிட்டதை நினைக்கும்போது அவருக்குக் கண்ணீர்தான் வந்தது.

வீட்டில் எங்கும் குதூகலம் நிறைந்திருந்தது. ஸ்திரீகளும் குழந்தைகளும் அலங்காரச் சின்னர்களாகக் குறுக்கும் நெடுக்கும் போய்க்கொண்டிருந்தனர். வீட்டுத் திண்ணையில் சிலர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் அச்சமயத்தில் ராமலிங்கமையரை அங்குக் கண்டதும் ஆச்சரியத்தால் திகைத்தனர். அவர்கள் சம்பாஷணை திடீரென்று முற்றுப்புள்ளி பெற்றது. சிலர் முகத்தில் பயமும், சிலர் முகத்தில் கோபமும், இன்னும் சிலர் முகத்தில் எக்காளமும் தொனித்தன.

அவர் இவர்களில் ஒருவரையும் கவனிக்கவில்லை. வாசற்படியண்டை ஒரு நிமிஷம் ஆலோசித்தவாறு நின்றார். பிறகு ஏதோ வேகத்தால் தள்ளப்பட்டவர்போல, விறு விறு என்று உள்ளே நடந்தார். அவரைத் தொடர்ந்து திண்ணையிலிருந்த கூட்டமும் உள்ளே ஓடிற்று. வேலையாகவும், விருதாவாகவும் குறுக்கும் நெடுக்கும் போய்க்கொண்டிருந்த அனைவரும் ஒரு விநாடி திகைத்து அவரைப் பின் தொடர்ந்தனர்.

ரேழி வரையில் போய் நின்றார் அவர். அவரைச் சுற்றி ஒரு சிறு கூட்டம் ஆச்சரியத்தோடு அவர் முகத்தைப் பார்த்து நின்றது. சிறிது நேரத்திற்கு ஒருவரும் வாய் திறக்கவில்லை. அவர் கண்கள் மட்டும் அக்கூட்டத்தினிடையே ஓர் ஆத்மாவைத் தேடிக்கொண்டிருந்தன.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு கூட்டத்தை விலக்கிக்கொண்டு முப்பது வயசு உள்ள வாலிபன் ஒருவன் வந்தான். ஓடி வந்ததால் அவனுக்கு மூச்சு வாங்கிக் கொண்டிருந்தது. வந்தவன் நேராக ராமலிங்கமையரிடம் நெருங்கி, "என்ன விசேஷம்? எங்கே வந்தீர்கள்?". என்று படபடப்பாகக் கேட்டான். அவன் கேள்வியில் கோபமும் வேகமும் அதிகமாக இருந்தன.

ராமலிங்கமையர் சாவதானமாக, "பாலுவைப் பார்க்க வேண்டும்" என்றார்.

"அவளை இப்பொழுது பார்க்க முடியாது."

"இல்லை, அவளைப் பார்த்து ஒரே ஒரு நிமிஷம் பேசிவிட்டுப் போய்விடுகிறேன்."

"அவளைப் பார்க்க முடியாது என்றால் பார்க்க முடியாதுதான். பேசுவதற்கும் இப்பொழுது சமயமில்லை."

ராமலிங்கமையர் பின்னும் சாவதானமாக, "அப்பா கோவு! சமயம் சரியில்லைதான். அதை நான் நன்றாக அறிவேன். ஆனால் சந்தர்ப்பங்களின் நிலை மாறியிராவிட்டால், நான் இச்சமயம் வந்திருக்கமாட்டேன். தயவு செய்து அவளைக் கூப்பிடு. அவளிடம் ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போய்விடுகிறேன்" என்றார்.

கோவுவின் முகத்தில் கோப ஜ்வாலை பின்னும் அதிகமாக வீசியது. "இதெல்லாம் என்ன புரளி, ஐயா? யாரிடம் காது குத்துகிறீர்? சமயமாம், சந்தர்ப்பமாம்! போமையா போம். இங்கே கலாட்டா பண்ணவா வந்தீர்?" என்றான்.

ராமலிங்கமையர் இம்மாதிரி பேச்சுக்களுக்கு எல்லாம் தம்மைத் தயார் செய்துகொண்டுதான் வந்திருந்தார். ஆகவே அவர் சாந்தமாகவே, "தெய்வ சாக்ஷியாய் எனக்கு அப்படி ஓர் எண்ணமும் இல்லையப்பா. அவளுக்குக் கொடுத்த ஒரு வாக்குக்காகத்தான் இப்பொழுது அவளைப்

பார்க்க விரும்புகிறேன். இல்லாவிட்டால் இது போன்ற ஒரு சமயத்தில் நான் மானத்தை விட்டு இங்கே வரமாட்டேன்'' என்றார்.

"அவன் கிட்டே என்ன சொல்லணுமாம்? அதெ ஒங்ககிட்டத்தான் சொல்லிடட்டுமே'' என்று கூடத்தில் இருந்தவாறு ஒரு ஸ்திரீ பேசினாள். அவளுக்குச் சுமார் இருபத்தைந்து வயசு இருக்கும்.

ராமலிங்கமையர் குனிந்திருந்த தலையை நிமிர்த்தி அந்த ஸ்திரீயைப் பார்த்தார். "யாரடியம்மா, மீனாக்ஷியா பேசுகிறது? ஆமாம், உன்னைப்போல அவளும் இவ்வீட்டில் சம அதிகாரம் வகிக்க வேண்டியவள்தான். விதி, அவள் இடத்தைப் பறித்து, இன்று வேறொருத்திக்குத் தத்தம் செய்கிறது. நான் அதைத் தடை செய்ய வரவில்லை. அவள் இன்று அல்ல, ஐந்து வருஷங்களுக்கு முன்பே அபாக்கியவதியாக்கப்பட்டுவிட்டாள். இனிமேல் அவள் அந்தப் பழைய பாக்கியங்களை அடையப் போவதில்லை. நான் உங்கள் சந்தோஷ சமயத்தில் குறுக்கிடவில்லை. பாலுவிடம் நேருக்கு நேர் ஒரே வார்த்தை பேசிவிட்டால் போதும். நான் போய்விடுவேன்'' என்றார்.



"நீ என், கண்டதுகளிடமெல்லாம் பேச்சுக் கொடுக்கிறாய்? அவர் சண்டைக்கு என்று கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருக்கிறார். நானும் சளைத்தவனல்ல. ஒரு கை பார்த்துவிடத்தான் போகிறேன்'' என்று உரத்துக் கத்தினான் கோவு.

"யாராது இந்தச் சமயத்தில் சண்டைக்கு வந்திருக்கிறது? அவர் மூஞ்சியைக் கொஞ்சம் பார்க்கலாம்'' என்று கூறியவாறு மற்றொரு பெரியவர் ராமலிங்கமையர் முன்பாக வந்தார். அவருக்கு வயசு ஐம்பதுக்கு மேல் இருக்கும். அவர்தாம் இன்று அவ்வீட்டின் சம்பந்தியாக விளங்குபவர்.

ராமலிங்கமையர் அவர் முகத்தையும் நிமிர்ந்து பார்த்து, "கோபாலையரே, நான் இங்கே சண்டைக்கு வரவில்லை. உம்முடைய பெண்ணின் கல்யாணத்தை நிறுத்திவிடுவேனோ என்ற பயமும் உமக்கு வேண்டாம். நான் வேண்டுவதெல்லாம் மாப்பிள்ளை பாலுவை ஒரு முறை பார்க்க வேண்டும் என்பதே'' என்றார்.

கோபாலையர் சீறி விழுந்து, "மாப்பிள்ளையாம் மாப்பிள்ளை! யாருக்கு யாரையா மாப்பிள்ளை? சண்டைக்கு வரவில்லையாம். பின் சமாதானத்திற்கு வந்தீரோ, தாலி கட்டுகிற சமயத்தில்?'' என்று கத்தினார்.

ராமலிங்கமையர் பழைய சாந்தத்துடனேயே, "கோபப்படாதேயும், கோபாலையரே. என் நிலைமை உமக்குத் தெரிந்தால் உம் மனசும் கரையும்'' என்றார்.

"என்னவோ 'நிலைமை நிலைமை' என்கிறீரே. என்ன நிலைமையாம் அதிசயமாக இன்று? ஐந்து வருஷங்களாக இருந்த நிலைமைதானே இன்றும் இருக்கிறது?'' என்று கூடத்திலிருந்த ஓர் அநாமதேயப் பேர்வழி சப்தம் போட்டான்.

"யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் சொல்லிவிட்டுப் போங்களப்பா. என்னை ஆளுக்கு இரண்டு அடிகள் வேண்டுமானாலும் அடியுங்கள். ஆனால் பாலுவைப் பார்ப்பதற்கு மட்டும் எனக்கு இப்பொழுது அவகாசம் கொடுங்கள்'' என்றார் ராமலிங்கமையர் பதிலுக்கு.

"அடியும் வேண்டாம், உதையும் வேண்டாம். பாலுவிடம் என்ன வேண்டுமாம் அவருக்கு?''

ஆம், பாலுவே அவர் எதிரில் வந்து நின்றான்.

இருபத்தைந்து வயசிற்குள்ளான சுந்தர வாலிபன் அவன். மணக் கோலத்தில், சேலம் பட்டு ஒன்றைப் பஞ்சகச்சம் கட்டிக்கொண்டு, கண்களுக்கு மை தீட்டி, கையில் கங்கணக் கயிற்றுடன் காட்சியளித்த அவனைக் கண்டதும் ராமலிங்கமையர் மனத்தைத் துக்கம் 'குபீர்' என்று கௌவிக்கொண்டது. வாய் பேச முடியாதபடி ஒரு நிமிஷம் நின்ற பிறகு அவர், "அப்பா பாலு, நீயே வந்தாயா? இதோ, நீ தெய்வ சாக்ஷியாக மனைவியென்று கை பிடித்த ருக்மிணியின் ஒரே கோரிக்கையைச் சொல்லிவிடுகிறேனப்பா. பாலு, நீ மற்றொரு பெண்ணைக் கைபிடிக்குமுன்பு, உன்னைக் கண் குளிரப் பார்த்து உன் பாதங்களில் சிரசைத் தாழ்த்தித் தன் கடைசி வந்தனத்தைத் தெரிவிக்க எங்குகிறாளப்பா உன் மனைவி. நீ ஒரு நிமிஷம் என்னுடன் எங்கள் வீட்டிற்கு வர முடியுமா?" என்றார்.

"முடியாது முடியாது", "சூழ்ச்சி", "போகவே கூடாது", "பயலை நம்பாதே" என்ற பலவிதக் குரல்கள் கூட்டத்திலிருந்து கிளம்பின.

ஆரவாரம் சிறிது ஓய்ந்ததும், அதை ஊர்ஜிதம் செய்யும் விதம், "நான் வரப் போவதில்லை. இதுதான் என் பதில். போய்ச் சொல்லிவிடும்" என்று சிறிதும் பதற்றமில்லாமல் கூறினான் பாலு.

"வரமாட்டாயா? தொட்டுத் தாலி கட்டி ஒன்றிரண்டு வருஷங்கள் அளவளாவிய மனைவியின் இறுதிக் கோரிக்கையைப் பூர்த்தி செய்யமாட்டாயா? உன் பாதங்களில் தன் சிரசைக் கவிழ்த்து, பாபங்களைப் போக்கிக்கொள்ளத் துடிக்கும் அவள் ஆசையை நிறைவேற்றமாட்டாயா?"

"போதும் போதும், நிறுத்து. நீ இங்கிருந்து போகப் போகிறாயா இல்லையா?" என்று கண்கள் சிவக்க இரைந்தான் கோவு.

"பாலு, கடைசி முறையாக உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன். என்னுடன் வரமாட்டாயா?" ராமலிங்கமையரின் குரல் துக்கத்தின் கனத்தால் தடைப்பட்டது.

"வரமாட்டேன், வரப்போவதில்லை."

"நான் போக வேண்டியதுதானா?"

"இதோ, இதுதான் வழி."

ராமலிங்கமையர் திரும்பி நடந்தார். சீட்டியடிப்பும், எக்காளக் குரல்களும், கனைப்பும் சிரிப்பும் அவரை வழியனுப்பின. கண்களில் மல்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவர் வாயிலைக் கடந்து சென்றார்.

* * *

ராமலிங்கமையர் கங்கைகொண்டானின் சாதாரண குடும்பஸ்தர்களில் ஒருவர். ஊருக்கெல்லாம் நல்லவர்தாம். ஆனால் கோவுவின் குடும்பத்தாருக்கு மட்டும் சில வருஷங்களாக வேண்டாதவராகிவிட்டார்.

ராமலிங்கமையர் சந்தான பாக்கியத்தில் அவ்வளவு விருத்தி அடைந்திருக்கவில்லை. அவருக்குப்பின் குடும்பப் பெயரைப் பாதுகாக்க ஒரு பிள்ளைகூட அவருக்கு இல்லை. அவருடைய ஒரே செல்வம் ருக்மிணிதான். பெண்ணாயிருந்தாலும் 'ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு' என்று இருந்ததால், ராமலிங்கமையரும் அவர் மனைவி கோமதியம்மாளும் ருக்மிணி மீது உயிரையே வைத்திருந்தார்கள்.

ருக்மிணியின் கல்யாண விஷயத்தில் ராமலிங்கமையர் அளவுக்கு மிஞ்சிச் சலிக்கத்தான் செய்தார். எற்கனவே ஜோஸ்யம், மாந்திரிகம் இவைகளில் நம்பிக்கை இல்லாதவராயிருந்தபோதிலும், ருக்மிணிக்கு வரன் பிடிக்கும் விஷயத்தில் சிறிதும் சளையாமல், மூன்று வருஷங்கள் தேடி, கடைசியாக உள்ளூரில் பாலுவுக்குக் கொடுப்பது என்று நிச்சயம் செய்தார்.

பாலுவின் குடும்ப வரலாற்றையும் ஐவேஜி வகைகளையும் ராமலிங்கமையர் நன்றாக அறிவார். குண விசேஷங்களிலும் பாலுவைப்பற்றியோ, அவன் அண்ணா கோவு (கோவிந்தன்) வைப்பற்றியோ அவர் சிறிதும் கவலை கொள்ளவில்லை. மொத்தத்தில், மூன்று வருஷப் பிரயாசைக்குப் பிறகு அவர் சரியான வரனையே தேர்ந்தெடுத்திருந்தார்.

பாலுவுக்கு அக்கா தங்கைகள் தொந்தரவு இல்லை. பெற்றோரும் சிறு வயசிலே போய்விட்டபோதிலும், கோவுவும் அவன் மனைவி மீனாக்ஷியும், அவனை உயிருக்கு உயிராய் வளர்த்துவந்தார்கள். அந்தச் சகோதரர்களுக்குள் இருந்த ஒற்றுமையைக் கண்டு அவ்வூரே அதிசயித்தது. பாலு மெட்றிகுலேஷன் வரையில் படித்துவிட்டு அண்ணாவுக்கு உதவியாக வீட்டோடு இருந்தான்.

இவ்வளவு இருந்தும் கோமதிக்கு இவ்வரன் பூரண திருப்தி அளிக்கவில்லை. ஜாதகங்கள் சிலாக்கியமாகப் பொருந்தியிருந்த

போதிலும், ஒன்றிரண்டு ஜோஸ்யர்கள் பையனின் ஜாதகத்தில் சிறிது 'களத்திர தோஷ'த்தின் ஜாடை இருப்பதாகத் தெரிவித்ததே அவள் அதிருப்திக்குக் காரணம்.

"மூன்று வருஷங்களாக வெயிலென்றும் மழையென்றும் பாராமல் அலேந்தீர்கள். கடைசியில் களத்திரதோஷ ஜாதகனுக்குத்தானு நிச்சயிக்க வேண்டும்?" என்று அடிக்கொருதரம் அங்கலாய்த்துக் கொண்டாள்.

ராமலிங்கமையர் ஜாதக விஷயத்தில் நம்பிக்கை இல்லாதவராதலால், மனைவியின் வார்த்தைகளை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. மேலும், ஜாதகப் பொருத்த விஷயமாகச் சில ஜோஸ்யர்கள் லஞ்சம் பெறுவதை நேரில் பார்த்திருந்ததனுல், இந்தத் தோஷமும் அவர்கள் சூழ்ச்சியின் சிருஷ்டியாகவே இருக்குமென்று அவர் தீர்மானித்தார்.

கோமதியின் அங்கலாய்ப்பு, கல்யாணச் சந்தடியின்போதுதான் சிறிது மறைந்தது. ருக்மிணிக்கும் பாலுவுக்கும் கல்யாணம் நடந்தேறிவிட்டது. நான்கு மாதங்களுக்குள்ளாகவே ருக்மிணியும் புக்ககம் போய்ச் சேர்ந்தாள். சரியாக ஒன்றரை வருஷங்கள் பாலுவும் ருக்மிணியும் சந்தோஷமாக இல்லறம் நடத்தினர்.

* * *

கோமதி இந்தக் களத்திரதோஷத்தை மறந்துவிட எவ்வளவு முயன்றும், அது அடிக்கடி அவள் மனத்தில் பயங்கர எண்ணங்களைத் தோற்றுவித்துக்கொண்டே இருந்தது. நாளடைவில் இவ்வெண்ணம் கொஞ்சம் கொஞ்சமாகச் சாசுவதமான இடம் பெற்றுவிடவே, "அடி பெண்ணே, உன்னைச் சந்தோஷமாகப் பிள்ளைகுட்டிகளுடன் நானும் பார்ப்பேனு?" என்றெல்லாம் அவள் கற்பனை செய்துகொள்ளத் தொடங்கினுள்.

ராமலிங்கமையருக்கு அவள் மனப்பயம் நன்ருகத் தெரிந்துதான் இருந்தது. "போடி பைத்தியம், களத்திரமாவது தோஷமாவது! இதெல்லாம் ஜோஸ்யர்கள் பணம் பறிப்பதற்காகக் கற்பிப்பதல்லவா? நல்லதோ, கெட்டதோ எதுவும் நம் இச்சைப்படி நடக்கப்போவதில்லை. விதியின் போக்கைத் தடுக்க இந்த ஜாதகத்தாலும் ஜோஸ்யர்களாலும் ஒன்றும் நடக்காது. நீ எதற்காக மனசை வீணுய்ப் புண்படுத்திக்கொள்கிருய்?" என்று சமாதானம் சொல்வார்.

கோமதியின் மனப்பேய் இவ்வார்த்தைகளால் ஒடுங்கிவிடுவதாயில்லை. "ஐயோ, அதற்குச் சொல்லவில்லையே. ஏதோ நல்லதன்றிப் பொல்லாதது நேர்ந்துவிட்டால், அவளுக்குக் குழந்தையாவது ஒன்று இருக்குமானுல் நமக்குச் சிறிது ஆறுதலாக இருக்குமே" என்பாள்.

"அசடு என்ருல் வடிகட்டின அசடுடீ! ஏதோ வேண்டாதவற்றையெல்லாம் சிந்தித்துக்கொண்டு பிள்ளைகுட்டி என்கிருயே. பிள்ளையும் குட்டியும், நம் இச்சைக்கும் ஆசைக்கும் பயந்து பிறந்துவிடுமோ என்ன?" என்று சொல்லிச் சிரிப்பார் ராமலிங்கமையர்.

"நான் சொல்வதைத் தெரிந்துகொள்ளாமல் பேசுகிறீர்களே. அவளும் ஒன்றரை வருஷமாகத்தான் புக்ககத்தோடு இருக்கிருள். எட்டு வருஷங்களாகியும் மீனுக்ஷிக்கும் குழந்தைகள் இல்லை. ஒருவேளை அவர்கள் குடும்பத்தில் தோஷம் ஏதாவது இருந்தால் பார்த்துப் பரிஹாரமாவது செய்யச் சொல்லக்கூடாதா? எனக்கும் என் செல்வத்தைக் குழந்தையுடன் பார்க்க ஆசை இராதா?" என்று வாதாடுவாள் கோமதி.

ராமலிங்கமையர் சிரித்துக்கொண்டே, "கோமதி, உனக்கு நல்ல பைத்தியந்தான் பிடித்திருக்கிறது. மறுபடியும் தோஷம் பாபம் என்று ஏதேதோ கொண்டுவந்து இணைக்கிருயே. ஏண்டி, அவளுக்கு என்ன வயசாகிவிட்டதா? வருகிற சித்திரைக்குத்தானே பதினுறு நிறையப் போகிறது? அதற்குள் அவள் தலையில் குழந்தையின் பாரத்தையும் கட்டிவிட வேண்டுமோ என்ன?" என்று கோபித்துக்கொள்வார்.

இதிலொன்றும் கோமதி சமாதானமடைந்துவிடமாட்டாள். "அடியம்மா, இருந்தாலும் புருஷர்களுக்கு இவ்வளவு கல் மனசு ஆகாதுதான்! என்னவோ என் பெண் உள்ளம் உருகுகிறது. ஈச்வரன் தான் அவளுக்கு நல்வழி விடவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு செல்வாள்.

கணவனுல் தன் உள்ளக்கிடக்கை உருவாகாது என்று அறிந்ததும், அவள் பாலுவைக் குடும்பதோஷத்தைப் பார்த்து ஏதாவது சாந்தி செய்யும்படி ருக்குவிடம் சொல்லியனுப்பினுள்.

ருக்கு பாலுவிடம் ஒரு நாள் தயங்கித் தயங்கி இவ்விஷயத்தைக் கூறினுள்.

பாலு சிரித்துக்கொண்டே, "ஊஹூம். நான் மாட்டேன். அதற்குள் எனக்கு ஒரு

பங்காளியைச் சிருஷ்டித்துக் கொள்ள மாட்டேன்'' என்றான்.

அவன் சூசக வார்த்தைகளை ருக்கு அறிந்துகொள்ளவில்லை. ''பங்காளியா? அப்படியென்றால்.........? எனக்கு அர்த்தமாகவில்லையே?'' என்று கையை விரித்தாள்.

''ஆமாம், இப்பொழுதே நீ குழந்தையும் கையுமாகிவிட்டால், என்மேல் இருக்கும் அன்பெல்லாம் குழந்தையிடம் அல்லவா போய்விடும்? அப்படியானால் அது என் பங்காளி அல்லவா?''

''அடேயப்பா, எங்கெல்லாம் வளைத்துப் பிடித்துப் பேசுகிறீர்கள்! குழந்தை பிறந்து விட்டால், உங்கள்மீது இருக்கும் அன்பு குறைந்துவிடும் என்று சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லையா?''

''நான் சொல்வதென்ன, பொய்யா? குழந்தை பிறந்துவிட்டால், அதைக் கவனிக்கத்தானே உனக்குப் பொழுது சரியாக இருக்கும்? நாம் இப்பொழுது இருப்பது போல் உல்லாசமாக இருக்க முடியுமா? அப்பப்பா! இந்தப் பெண்களுக்குத்தான் என்ன அவசரம்? புருஷன் வீட்டிற்கு வந்ததும் வராததுமாய், 'குழந்தை எங்கே?' என்றுதான் கேட்கிறார்கள்.''

''உங்களுக்குப் பதில் சொல்லும் திறமை எனக்கு இல்லை. என் தீர்மானங்களெல்லாம், நிமிஷத்தில் உங்கள் வார்த்தைகளில் அடிபட்டு மறைந்துவிடுகின்றன. இருந்தாலும், அம்மாவுக்குத் திருப்தி உண்டாவதற்காகவாவது எனக்கு ஒரு குழந்தை வேண்டும்போல இருக்கிறது. அவள் சொல்வதிலும் சிறிது உண்மை இருக்கத்தானே இருக்கிறது? கொஞ்சம் ஆலோசித்துப் பாருங்கள்: மதனி இங்கே வந்து எட்டு வருஷங்கள் ஆகவில்லையா? நமக்கென்று இல்லாவிட்டாலும் அவர்களுக்காவது ஒரு குழந்தை பிறக்க வேண்டாமா? இதில் ஒன்றும் மோசம் போய்விடவில்லையே? இரண்டு ஜோஸ்யர்களிடம் கலந்து குடும்பத்தில் தோஷம் ஏதாவது இருந்தால் அதற்கு வேண்டியவைகளைச் செய்யலாமே.''

''போதுமடி போதும். எட்டு வருஷங்களாகியும், அவர்களே இன்னும் குழந்தைக்கு ஆசைப்படவில்லையாம். அதற்குள் இவள் 'குழந்தை குழந்தை' என்று துடிக்கிறாள். எல்லாம் பிறக்கும்போது தன்னாலேயே பிறக்கும் பேசாமலிரு, அசடே'' என்று அவள் கன்னத்தில் அன்பாகத் தட்டிவிட்டுப் போனான் பாலு.

ருக்கு இவ்விஷயத்தை அவ்வளவு தீவிரமாக எடுத்துக்கொள்ளவில்லையாதலால், இப்பேச்சு இதனுடன் நின்றுவிட்டது.

இங்கும் கோமதியம்மாளின் தாபம் தீர வழி ஏற்படவில்லை. ஆனாலும் அவள் முயற்சியைக் கைவிடாது மீனாக்ஷியிடம் இவ்விஷயமாகத் தூபம் போட்டாள். ''எண்டி மீனாக்ஷி, இப்படிப் பேசாமலிருக்கிறாயே. புக்ககத்திற்கு வந்து எட்டு வருஷங்களாகப்போகின்றன. இன்னும் ஒரு குழந்தைக்கு உண்டான 'சோடே' காணவில்லை. அவளுக்கும் ஒன்றரை வருஷமாக ஒன்றுமில்லை. அவளாவது சின்னஞ் சிறிசு. உனக்கு வயசாகவில்லையோ? உங்கள் ஜாதகங்களைப் பார்க்கச் சொல்லி, ஏதாவது பரிஹாரம் செய்யச் சொல்வதுதானே? வீட்டிற்குப் பெரியவளான நீ இப்படிச் சும்மா இருக்கலாமோ?'' என்று அவள் மனசைக் கரைத்தாள்.

மீனாக்ஷிக்கும் குழந்தையில்லாத் தாபம் இல்லையென்று சொல்ல முடியாது. ஏற்கனவே இவ்விஷயமாக என்ன செய்வது என்று ஆலோசித்திருந்த அவளுக்குக் கோமதியம்மாளின் புத்திமதிகள் வழி காட்டியாக உதவின. கோமதியம்மாளின் காரியம் ஜயம் பெற்றுவிட்டது. அதனால் நன்மை அடையக்கூடியவர்கள் அடைந்தார்கள். ஆனால் அவளுக்கு அது விபரீதமாகவே முடிந்தது.

(தொடரும்)

அகத்தின் அழகு

எஸ். எஸ். ராமசாமி

கலிங்கதேசத்தின்மீது போர்தொடுக்க அரசன் உறுதி கொண்டுவிட்டான். சேனைகளைத் தயார் செய்வதில் சேனாதிபதியும் முனைந்துவிட்டான். இதுவரையில், துருப் பிடித்திருந்த ஆயுதங்களுக்கு மெருகு போடுவதில் போர்வீரர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தினார்கள். அமைதி நிலவிய காலத்தில் இன்ப வாழ்க்கை நடத்திவந்த காதலிகளுக்குத் தங்களுடைய காதலர்களின் பிரிவைக் குறித்து மிகுந்த வருத்தம் ஏற்படுவது இயல்பு தானே? இருந்தாலும் போர்த் தொழிலுக்

குப் பயந்துபின்வாங்கும் சுபாவம் நம் பண்டை நாட்டுப் பெண்களுக்கு இல்லை. வீரவாழ்க்கையில் பெண்களும் ஈடுபட்டார்கள், பிரிவைக் குறித்து வருந்தினாலும் தங்கள் கணவன்மார்களுக்கு உற்சாகமூட்டி அவர்களை யுத்தகளத்திற்கு அனுப்புவார்கள். அதுவும் தங்கள் நாட்டு மன்னனுடன் யுத்தத்திற்குச் சென்றால் தவறாமல் வெற்றிமாலை சூடித் திரும்புவார்கள் என்ற மனோதிடமே அப்பெண்களின் வாழ்க்கையில் பெரிதும் துணைநின்று உதவியது.

காதலனொருவன் தன்னையும் அறியாமல் மனங்கலங்கிய காதலியைத் தேற்றுகிறான். அதுவும் கீர்த்தி வாய்ந்த தங்களுடைய அரசனோடு சென்றால் தங்கள் பங்கில் தான் ஜயம் என்று திண்ணமாகக் கூறுகிறான். காதலியும் ஒருவாறு மனந்தேறித் தன் கணவன் யுத்தகளத்திற்குச் செல்ல வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் தன் கையாலேயே செய்து முடிக்கிறாள். வீரக் கழலை அணிவித்து அம்பறாத்தூணியை எடுத்து மாட்டுகிறாள். தன் கணவனுடன் சல்லாபம் செய்துகொண்டே, யுத்தம் முடியும் காலவரையறையைப்பற்றியும் அவள் விசாரித்துத் தெரிந்துகொள்ள ஆவல் கொள்கிறாள். காதலனும் இரண்டு ஆண்டுகளில் வெற்றி முழக்கத்தோடு திரும்புவதாகக் கூறி அவளைத் தேற்றிவிட்டுச் செல்கிறான்.

* * * *

யுத்தம் கடுமையாக நடக்கிறது. காதலி ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு யுகமாகப் போக்குகிறாள். கணவன் வெற்றிமாலை சூடித் திரும்ப வேண்டுமென்று தினமும் தன் குலதெய்வத்திற்குப் பூஜை செய்கிறாள். தன் தோழிமூலம் அப்போதைக்கப்போது யுத்தகளத்திலிருந்து வரும் செய்திகளை ஆவலுடன் தெரிந்துகொள்கிறாள். மழைக்காலம் வருகிறது. உயிரெல்லாம் யுத்தகளத்தில்தான் உலவுகிறது. உடல் மாத்திரம் மாளிகையில் தங்குகிறது. இவ்விதமாக 'அங்குயிரும் இங்குடலும் ஆன' மழைக்காலமும் ஒருவாறு கழிந்துவிட்டது. தன் கணவன் திரும்புவதாகக் கூறிச் சென்ற நாளும் நெருங்கியது. 'இன்று சென்றது. நாளையும் முடியும்' என்று நாட்களை எண்ணிக்கொண்டே இருக்கிறாள்.

கடைசியாகத் தன் கணவன் திரும்புவதாகக் குறிப்பிட்டுச் சென்ற தினமும் வந்தது. காதலியின் முகத்தில் அன்று ஓர் அலாதியான தேஜஸ் ஏற்பட்டது. தோழி தன்னைப் பரிகாசம் செய்யும்பொழு

தெல்லாம் புன்முறுவல் தோன்றி அவளுடைய அழகைப் பின்னும் மிகைப்படுத்திற்று. அன்று முழுவதும் அவளுடைய நெஞ்சில் இன்ப அலைகள் மோதிக்கொண்டிருந்தன. இன்பக் கனவிலேயே மிதந்தாள்.

மாலை நேரம் வந்ததும் தன்னைப் பல விதமாக அலங்கரித்துக்கொண்டாள். நறுமணம் கமழும் மல்லிகைப் பூவைச் சூடினாள். நெற்றியில் குங்குமப் பொட்டுத் திகழ்ந்தது. அறுசுவை உண்டிகளைத் தயார் செய்துவிட்டு, 'வழிமேல் விழி வைத்து'த் தன் காதலன் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கிறாள். நடு ஜாமம் வரையில் அவன் வரவில்லை. ஒவ்வொரு விநாடியும் தன் கணவன் தன்னை நோக்கி வந்துகொண்டிருக்கிறான் என்ற இன்ப உணர்ச்சியிலேயே மனம் லயித்துவிடுகிறது. தன்னையும் மீறித் தூக்கம் அவளை ஆட்கொள்ளுகிறது.

இந்த நிலையில் பகைவரை முறியடித்து, வெற்றி பெற்ற பெருமிதத்தோடு, போர் வீரனாகிய காதலன் தன் நகரை நோக்கி வந்துவிட்டான். நேரே தன் மாளிகைக்குச் சென்று கதவைத் தட்டுகிறான். தூக்க மயக்கத்திலிருந்த காதலியும் தன் காதலனை வரவேற்க ஓடோடியும் வருகிறாள். அந்த நிலையிலும் சிதைந்த அலங்காரத்தைச் சீர்படுத்திக்கொண்டே விரைந்து செல்கிறாள். ஒரு கையினால் சரிந்த கூந்தலை எடுத்துச் செருகிக்கொள்கிறாள். மற்றொரு கையினால் நெகிழ்ந்த ஆடைகளைச் சரிப்படுத்துகிறாள். தூக்கக் கலக்கத்திலும் பிரிந்திருந்த காதலன் வந்துவிட்டான் என்றதும் அவன் நினைவாகவே இருந்த முகமும், சூரியனைக் கண்ட தாமரையைப் போல் மலர்ச்சி அடைகிறது.

வீரர் வாழ்க்கையில் ஏற்படும் இது போன்ற நிகழ்ச்சியொன்றைக் கவிஞரொருவர் நமக்கு ஒரு பாட்டின் மூலம் விளக்குகிறார். இப்பொழுது கவியைப் படியுங்கள் :—

'சோருது கோந்தளகம் ஒருகை மேலலைய
ஒருகை கீழலைசெய் துகிலோடே
திருக னந்தலினும் முகமலர்ந்து வரும்
தெரிவை மாதர்கடை திறமினோ'

[அளகம் - கூந்தல்; அனந்தல் - தூக்கம்.]

கலைஞர்கள் மக்களின் இதயமாகிய வீணையில் தோன்றும் உணர்ச்சி பேதங்களையெல்லாம் நமக்கு மிக எளிதில் விளக்கிக் காட்டும் ஆற்றல் வாய்ந்தவர்கள். சித்திரக் கலைஞன் ஒருவன் மேலே கூறிய பெண்ணின் நிலையை வர்ண ஜாலங்களினால் நமக்குப் புலப்படுத்திவிடுவான். கலிங்கத்துப்பரணி பாடிய ஜயங்கொண்டார் 'சப்த சித்திரம்' ஒன்றை நமக்குச் சிருஷ்டித்துத் தந்திருக்கிறார். சுவை ததும்பிய இப்பாடலை நாம் சிறிது ஊன்றிப் படித்துப் பார்த்தால், பண்டைக்காலத்து வீரப் பெண்மணிகள் நடத்திவந்த வாழ்க்கையின் ஓர் அம்சமும், போரின் நிமித்தம் பிரிந்திருந்த காதலர்கள் திரும்பியதும் அவர்களை மனப்பூரிப்போடு வரவேற்கும் காட்சியும் நம் மனக்கண்முன் தோன்றுகின்றன. 'அகத்தின் அழகு' முகத்தில் பிரதிபலிப்பதை ஒரு கவியில் படம் பிடித்துக் காட்டுகிறார் கலிங்கத்துப்பரணி பாடிய தமிழ்க்கவிஞர்.

"ஆண் மக்களில் ஒவ்வொருவனும் தன் மனைவி, மக்கள் பதிவிரதைகளாக இருக்கவேண்டும் என்பதில் எத்தனை ஆவலோடு இருக்கிறானே, அத்தனை ஆவல் இதர ஸ்திரீகளின் பாதிவிரத்யத்திலே காட்டுவதில்லை. ஒவ்வொருவனும் ஏறக்குறையத் தன் இனத்து ஸ்திரீகளைப் பதிவிரதை என்று நம்புகிறான். ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் உண்மையாக இருந்தால் நன்மை உண்டாகும். பதிவிரதைக்கு அதிக வீரமும் சக்தியும் உண்டு. ஆனால், பதிவிரதை அல்ல என்பதற்காக, ஒரு ஸ்திரீயை வதைத்து ஹிம்சை பண்ணி அடித்து ஜாதியை விட்டுத் தள்ளி ஊரார் இழிவாக நடத்தி அவளுடன் யாவரும் பேசாமல் கொள்ளாமல் தாழ்வுபடுத்தி அவளைத் தெருவிலே சாகும்படி விடுதல் அநியாயத்திலும் அநியாயம்."

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

போராட்டம்

—ஆர்வி—

மனிதனுடன் மனிதன் போராடிக் கொண்டு வாழ்க்கை நடத்தும் இந்த அதம உலகத்தில் யாரைத்தான் நம்ப முடிகிறது? மித்திரர்களையும், பந்துக்களையும், மனைவியையும், குழந்தைகளையுங்கூட நம்பி உயிர் வாழ முடியாத ஒரு வாழ்க்கை நிலையில் காலம் ஓடிக்கொண்டிருக்கும்போது, மனிதன் மனிதனாகவே எப்படி இருப்பான்? உலகத்திலே ஆறறிவும் படைத்த உயர்ந்த வர்க்கமே இல்லாமல் போய்விட்டதோ என்று சங்கிக்கும் சந்தர்ப்பத்தில், யுவதியான சியாமளாவினால் - அதுவும் தன்னந்தனியாகப் போராடித் தன் எதிர்கால வாழ்க்கையை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தால் - தனியாக உட்கார்ந்து இயற்கையின் பின்னணியில் விசித்துப் புலம்பாமல் என்ன செய்யமுடியும்?

விசித்து விசித்து அழுதாள். ஜீவராசிகளிலே உயர்ந்த படைப்பென்பதே இல்லாமல் போய்விட்டதோ என்ற எண்ணம் அவள் மனசில் வெகு விரைவில் பரவியது. உடனேயே தானும் அந்த மட்டரகப் பிராணியின் இரைக்கு ஒரு பலியாகிவிட்டோம் என நினைத்தாள். அந்த நினைப்பு வந்ததோ இல்லையோ, அவள் பின்னும் ஆத்திரத்துடன் கண்களினின்றும் நீரைக் கக்கினாள்.

நீரைக் கக்கிய அவள் கண்களுக்கு எப்படி எல்லாமும் மொத்தையாகத் தோன்றியதோ அப்படித்தான் அவளுக்கு உலகமும் மொத்தையாக, கலங்கலாகத் தோன்றியது.

அந்தக் கலங்கலான உலக மேடையில் அவள் தன்னையும் ஒரு சிருங்கார வேஷமிட்டு நடிக்கப்போகும் யுவதியாகப் பார்த்தாள். தன்னுடைய குலுக்கையும் மினுக்கையும் கண்டதும் அவளுக்கே லஜ்ஜையாய் இருந்தது. ஆடவர்களின் விழிகளனைத்தும் பல கோணங்களிலிருந்து தன்னையே பார்வை இலக்காகக் கொண்டிருப்பதைப் பார்த்தபோது அவள் ஏனோ தன் முகத்தைப் பின்புறமாகத் திருப்பிக்கொண்டாள்.

'சீ! இதுவும் ஒரு ஜன்மமா?' என்ற வார்த்தைகள் வறண்ட நெஞ்சின் வழியே வெளிவரப் பார்த்தன. ஆனால் வார்த்தைகளை உமிழ்நீராக மாற்றி, அடித்தொண்டையால் காறி ஆத்திரத்துடன் கீழே உமிழத்தான் வேண்டியதாயிற்று. சற்று நேரத்தில் அவள் தன்னைத் தேற்றிக்கொள்ளப் பார்த்தாள். உணவும் நித்திரையும் வேப்பங்காய்போலக் கசந்த அவளுக்கு எதனாலும் தன்னைத் தேற்றிக்கொள்ள முடியவில்லை. ஆகவே நிலைகுத்திப் போய் ஒரே இடத்தில் உட்கார்ந்திருந்தாள். பழைய சம்பவங்களை உருட்டிப் பார்த்தாலாவது மனத்தேர்ச்சி பெற முடியுமா? கண்டிப்பாக முடியாது. அப்படியென்றால் எதிர்காலத்தைத் தான் யோசித்துப் பார்ப்போமே என்று அவள் மனம் ஓடிற்று. தீர்க்க தரிசிகளும் தத்துவ ஞானிகளும் தோன்றிய மனித குலம் இன்று ஒன்றையொன்று கொன்று பிழைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கையில் அபலையால் எதிர்காலத்தைப் பற்றி என்னதான் யோசித்துத் தெரிந்துகொண்டுவிட முடியும்?

ஆனாலும் அவள் சிந்தனை செய்யப் போவதாகத் தீர்மானம் செய்துகொண்டாள். மறுபடியும் நன்றாக ஒருதரம் கண்களைத் துடைத்துக்கொண்டாள். கண்ணைத் திறந்துகொண்டு தியானிப்பது சாத்தியமா என்று தலை நிமிர்ந்தபோது அவள் திடுக்கிட்டுப்போனாள். எதிரே எவ்வளவு நேரமாக நிற்கிறார் இவர்?

* * *

சியாமளாவின் சிந்தனை வெகு வேகமாகச் சடசடவென்று மாறியது. எழுந்திருக்க முயலாமலே, "எவ்வளவு நேரமாக நிற்கிறீர்கள்?' என்றாள்.

"அப்பொழுது ரொம்ப நாழிகையாகவே நீ இப்படித்தான் இருக்கிறாயா?"

அவள் பல்லைக் கடித்துக்கொண்டாள்.

"நிற்பானேன்?" என்றாள் பிறகு.

"நீ அழுவானேன்?"

எங்கிருந்தோ அவளுக்கு உத்ஸாகம் வந்ததுபோல, "வருகிறவர் இப்படி நிற்கும்படி ஆகிவிடுகிறதே என்று தான் அழுதிருப்பேன்" என்றாள், சிரிப்பை வருவித்துக்கொண்டு.

அவன் மேலாகச் சிரித்தான்.

"சியாமளா!" என்றான் பிறகு.

அவள் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"உள்ளதைச் சொல். நீ ஏன் இப்பொழுது அழுதுகொண்டிருந்தாய்?"

"இதோ, பாருங்கள்! நான் பொய் சொல்லப் போவதில்லை. என் மனம் படும் வேதனையை நான் உங்களிடம் தெரிவிக்க இஷ்டப்படவில்லை. என் மனவேதனை என்னுடனேயே இருக்கட்டும். அதில் உங்களுக்கும் பங்கு வேண்டியதில்லை. யௌவன தசையை, அதன் வேட்கை வேதனைகளை, நான் எப்படியோ சமாளித்துவிட்டேன். இனி எனக்கு அவ்வளவாகக் கஷ்டமாயிராது. இன்னமும் நான் தனியாகவே இருந்துவிடுகிறேன். என்னை விட்டுவிடுங்கள்......" என்றாள் சியாமளா. அவள் குரல் உணர்ச்சி மிகுதியால் தடுமாறியது.

"இதன் அர்த்தம் என்ன, சியாமளா?"

கணநேரம் அவள் பேசாமல் அவன் முகத்தையே கூர்ந்து நோக்கினாள். வாளிப்பான உடல் சற்று நேரம் தன் நிலைப்பின்றி நடுங்கியது.

"என்னால் பிறருக்குக் கஷ்டம் நேரக்கூடாது என்பதுதான்" என்றாள் திட மனத்துடன்.

அவன் வெகு சிரமப்பட்டு, "கஷ்டமென்ன இதில்?" என்றான்.

"கஷ்டமில்லையா? திரஸ்கரித்த ஒரு மனைவியுடன் மறுபடியும் கூடி வாழ்வதென்றால்? அதுவும் இரண்டாம் மனைவியும் கூட இருக்கும்போது சம்சாரத்தை ஓட்டிக்கொண்டு போவது அவ்வளவு லேசா என்ன?"

"நான் சொல்வதைக் கேள், சியாமளா! நீ வீணாகப் பயம் கொள்ளுகிறாய். சென்றதை இருவரும் மறந்துவிட்டால் நடக்கவேண்டியது சுலபமாகவே நிறைவேறிவிடும். நான் நிர்ப்பந்தப் படுத்தவில்லை. என் கடமையைச் செய்கிறேன். நீ யோசித்து உன் முடிவைப் பிறகு சொல்."

இப்படிச் சொல்லிவிட்டு அவன் எழுந்து வெளியே நடந்தான்.

சியாமளா அவன் போவதையே பார்த்தாள். அவன் வெளிக்கதவைத் தாண்டியதும் ஏனோ அப்படி வாய்விட்டுக் 'கடகட'வென்று சிரித்தாள்.

படம் எடுக்குமுன் நடக்கும் ஒத்திகைகளில் அவள் இப்படிச் சிரிக்க நன்றாக அப்பியசித்திருந்தாள். ஆனால் அடுத்த கணமே அவள் முகம் சுண்டியது. செத்தவள் மீண்டும் வீட்டுக்குள் வருவதைப் போலத்தான் அவர்களுடைய யோசனை இருந்தது. சுதந்தரமாய்க் கழித்த அவளுடைய வாழ்க்கையில் அடிமைத்தளையைப் போட்டுப் பூட்டுவது எவ்வளவு சிரமமான காரியம்? மீண்டும் அவள் சிந்தனை செய்தாள். இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதை அவள் அநுபவத்தில் கண்டுவிட்டாள். தன்னை இறுகப் பிணைக்கும் குடும்ப வாழ்வை அவள் உதறியபோது அக்கரை - அதாவது தற்போது நடத்தும் வாழ்க்கை - பச்சையாக, குளுமை

யாக இருந்தது. வெகு எளிதிலேயே அவள் இங்கே பசுமையின் உள்ளே கிடக்கும் பயங்கரத் தோற்றத்தைக் கண்டுவிட்டாள். அந்தப் பயங்கரம் அவளுக்கு ஏராளமான ஐசுவரியத்தைக் கொடுத்தது உண்மைதான். சுக போக வாழ்வைக் கொடுத்ததும் உண்மைதான். ஆனால் ஏன்? அவளைப் பலி கொள்வதற்காகத்தான். இதைத் தெரிந்துகொண்டபோதுதான் அவள் தான் ஏற்கனவே நின்றிருந்த கரையை நிமிர்ந்து பார்த்தாள். பசுந்தளிர் அவளை 'வா, வா' என்று அழைப்பதைப் பார்க்கும்போது அவள் மனம் குளுகுளுத்தது. இந்தக் கரையிலுள்ள பயங்கரத்தைவிட அந்தக் கரையிலிருந்த உப்புச்சப்பற்ற பசுமை எவ்வளவோ மேல் என்று தோன்றியது. ஆனால் அங்கேயும் ஏமாற்றமும் சுயநலமும் தாண்டவமாடுகின்றன என்பதை மறுபடியும் கண்டபோது அவளால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. மனித ஜன்மம் மிருக ஸ்வபாவத்தைக் கொண்டு விலங்காக மாறிவிட்டிருந்தால் ஒவ்வொருவரும் அதற்குப் பலியாக வேண்டுமென்று என்ன கட்டாயம்? அவர்களும் பலி கொள்ளக்கூடும் அல்லவா? ஆகவே எதிர்கால வாழ்வை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றால் அவள் போராடித்தான் ஆகவேண்டும். ஆனால் அதற்காகத் தனியே உட்கார்ந்து விசித்து விசித்து அழுவது கூடாது. சிரிக்கத்தான் வேண்டும், சிரித்துக் கொண்டே போராடித்தான் ஆகவேண்டும். எனவே அவள் சிரித்தாள். வயிறு வலிக்கும் வரையில் வாய்விட்டுச் சிரித்தாள்.

* * *

"ஏன் அப்படிச் சிரிக்கிறாய், சியாமளா?"

அவளுடைய பலஹீனம் அங்கே வெளிப்பட்டது. அவள் சிரிப்பை மறைக்க முயன்றாள்.

"என்னவோ நினைவு வந்தது. சிரிக்கிறேன்" என்றாள், மழுப்பினாற்போல.

ஆனால் அவளுக்கே தன் சிரிப்புக்குக் காரணம் தெரியவில்லை. பெரிய குற்றம் செய்துவிட்டது போலக்கூட இருந்தது அப்படிச் சிரித்தது.

ஆனால் அவன் கிண்டிக் கிண்டிக் கேட்கவில்லை.

"சரி" என்றான். ஒரே வார்த்தை.

அவளது சர்வாங்கமும் ஏனோ ஒடுங்கிப் போயின. பிறகு, "உட்காருங்கள்" என்றாள், சமாளித்துக்கொண்டு.

"இருக்கட்டும், - சியாமளா. யோசித்து முடிவுக்கு வந்திருப்பாய் என்று நினைக்கிறேன். இல்லையா?"

அவளால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. தன்னை வேண்டாம் என்று தள்ளி வைத்து வீம்பாக உடனே மறுமணம் செய்துகொண்ட கணவன் முன்னிலையில் அவள் இப்பொழுதும் தலைகுனிந்தாள்.

முகம் இறங்க, "என்னை மறுபடியும் சம்சாரத்தில் மாட்டிக்கொண்டு உழலச் சொல்கிறீர்களா?" என்று தைரியம் இழந்து கேட்டாள்.

ஆணின் வீரியத்துக்குப் பெண்மை மண்டியிடுவதுபோல இருந்தது அக்காட்சி.

"ஆமாம், சியாமளா; ஆமாம். என் மனைவி நீ. உன் கஷ்ட நஷ்டத்தில், மான அவமானத்தில் எனக்கும் பங்கு உண்டு. நீ மனவேதனைப்படுவதைப் பார்க்க எனக்குச் சகிக்கவில்லை."

கணநேரம் புருஷனுடைய இந்த வார்த்தைகளில் அவள் பரவசம் கொண்டாள். மெய்ம்மறந்து போய், "என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" என்றாள் கடைசியாக.

"ஒரு வார்த்தைதான்: சம்மதம் என்று."

அவள் சற்று நிதானித்தாள். "வீணாக நீங்கள் என் நிமித்தம் கஷ்டத்திற்கு உள்ளாகிறீர்கள்" என்றாள் மறுபடி.

"கஷ்டமென்ன இதில், சியாமளா?"

"திரஸ்கரிக்கப்பட்ட, திரண்ட ஐசுவரியமுடைய பெண் நான். இரண்டாம் மனைவியை வைத்துக் கொண்டு நீங்கள் கண்டிப்பாகக் கஷ்டந்தான் அடைவீர்கள். இதை யோசிக்கவில்லையா நீங்கள்?"

"சியாமளா! நான் யாவற்றையும் யோசித்தாகிவிட்டது. என் வரைக்கும் ஒரு கஷ்டமும் ஏற்படாது. அவள் தான் - அவளுக்கு ஒத்துப் போவது முடியாமலிருந்தால் வெளியில் போகட்டும்........" என்றான் அழுத்தமாய்.

சியாமளாவுக்குப் 'பகீர்' என்றது. கணவன் - மனைவி - தள்ளி வைத்தல் - எல்லாம் அவளை வாழ்க்கையில்

மறுமுறையாகத் திடுக்கிட வைத்தன. அவள் கண்கள் சிவந்தன. வீறுடன் எழுந்தாள், தன்னை அடக்கிக் கொண்டு.

"ஒரு வார்த்தை: உள்ளதைச் சொல்வீர்களா?"

"கேள் தாராளமாய்."

"நீங்கள் என்னை விரும்புவது என் மேல் விருப்பம் கொண்டா, என் பொருள்மேல் விருப்பம் கொண்டா?"

அவன் திகைத்துப் போனான்.

அவள் மறுபடியும் கேட்டாள்: "ஏன் அப்போது மட்டும் என்னைத் தள்ளி வைத்துவிட்டு மறுவிவாகம் செய்துகொண்டீர்கள்?"

அவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். "நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. எனக்காகவோ என் சொத்துக்காகவோ நீங்கள் மறுபடியும் இன்னொரு பெண்ணைக் கெடுக்க வேண்டாம். இந்தாருங்கள்; என் செல்வம் யாவையும் அவளுக்குக் கொடுத்துவிடுகிறேன். நீங்கள் வெளியே செல்லுங்கள். என் வீட்டில் அடி எடுத்துவைக்க வேண்டாம். போய் வாருங்கள். நமஸ்காரம்" என்று சொல்லிவிட்டு அவள் விறு விறு என்று உள்ளே போய் விட்டாள்.

வெகு நேரம் கழித்து அவன் திரும்பினான். அவள் பெருமூச்சு விட்டாள். "ஆஹா...இன்றுதான் இந்தத் தொல்லையான போராட்டம் முடிந்தது. எனக்கு இந்தக் கரையும் வேண்டாம்; அந்தக் கரையும் வேண்டாம். ஊழியம் செய்து இந்தச் சாண் வயிற்றை வளர்க்கக்கூட முடியாமலா போய் விடும்?" என்று சொல்லிக்கொண்டாள்.

வீடுகள்

'நாணல்'

கல்லாய்க் கிடந்தேன்; மறைந்தேன்; காட்டு
முல்லைக் கொடியின் முறுவலில் நின்றேன்;
எல்லை யிலாத பெருவெளி யதனில்
நில்லா தொருநிலை தேடி அலைந்தேன்.

தும்பிச் சிறையுள் துடித்தேன்; சேற்றில்
விம்மி மலர்ந்திடும் தாமரை யானேன்;
கொம்பும் குளம்பும் கொண்டிருள் வனத்தில்
பம்பிப் பதைத்த விலங்கில் உறைந்தேன்.

நீடிய கால நெறியிலே பிறப்பெனும்
பீடுயர் வானவன் போனான்; அவன்பின்
ஆடி நகைத்தனன் அழிவெனும் அமரன்;
வீடுக ளெனக்கிங் கெத்தனை யேயோ!

எண்ணரும் காலம் அழிந்தது; இன்று
திண்ணிய சிந்தையில் தீப்பொறி மூட்டி,
விண்ணும் ஒளிபெற விந்தை சமைக்கும்
மண்ணவன் மாயவன் மானிடன் ஆனேன்.

உறுதி இதுவெனக் கண்டேன்; ஓயாப்
பிறவிச் சிற்பியின் பொன்மனை எதுவும்
இறுதி உற்றிடும் போதெலாம், அதனின்
அறுதி விரிந்த அகன்மனை கொண்டேன்.

இன்றுள வீட்டினும் எழில்மனை உளதோ
என்றுளம் மயங்குவன்; எனினும் பழங்குடில்
பொன்றிடப் பொன்றிடப் புதுமனை வகுத்த
விந்தை அருளும் வியந்தது வேயோ?

நாடிய வீடெலாம் நலிந்தன; இன்று
கூடிய வீடும் குலைவுறும்; அதன்பின்
வீடெனக் குண்டு, வியன்மனை; இலையேல்
வீடிலா தமைவது வே வீடன்றோ?

அபராஜிதா

எப். டபிள்யூ. பெயின்

மொழி பெயர்ப்பு: இ. சாவித்திரியம்மாள்

(சென்ற இதழ் 368-ஆம் பக்கத் தொடர்ச்சி)

5

கேசவன் சென்றபிறகு அபராஜிதா தனியே சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள். காதல் உணர்ச்சியால் அவள் உள்ளம் விளக்கம் அடைந்ததுபோல் அவள் தேகத்திலும் மாலை வேளையின் செந்நிறமான காந்தி படிந்திருந்தது. அவள் கண்கள் பளபளவென்று பிரகாசிக்க அவள் இதழ்களில் அடிக்கடி புன்னகை அரும்பியது.

"ஆஹா! என்ன கம்பீரம்! என்ன ஒளி முகத்தில் விளங்குகிறது! க்ஷத்திரிய குலத்தின் வீரமெல்லாம் ஒருங்கே சேர்ந்து உருவெடுத்து வந்தது போல அல்லவோ தோன்றுகிறார்! ஆயினும் குழந்தைபோல என்ன பேதைமை! இளமைக்கும் இயல்பிற்கும் விரோதமாய் ஒரு துறவியின் வாழ்க்கையைப் பின்பற்ற முயலுவது மிகவும் விந்தை! பண்டிதர்களாம்! அப்பண்டிதர்களின் சொற்களை அவைகளின் பொருள் விளங்காமலே கற்றுக்கொண்டு கிளிப்பிள்ளையைப்போல் ஒப்பித்துக்கொண்டிருக்கிறார். என் அழகு அவரை முற்றும் கவர்ந்துவிட்டதென்று தெரிகிறது. ஆனால் அதை அவரே சரியாய் அறியவில்லையே! பகைவனுடன் போர்புரியத் தொடங்கும்பொழுதே கையில் இருந்த படைகள் எல்லாம் ஒடிந்து, பாதுகாப்புக்காக அமைந்திருந்தவை யாவும் இருந்த இடம் தெரியாமற் போனதைப் பார்க்க, அவர் பாவம், திகைத்தே போய்விட்டார்! ஆனால் அதை ஒப்புகொள்வதற்கு மட்டும் அவர் விரும்பவில்லை. தமக்கு வாய்த்திருக்கும் பகைவன் எளியனல்லன் என்று தெரிந்தால் இவ்வளவு அவமானப்படவேண்டாம்.'' இவ்வாறு தானே கூறிக்கொண்டு அவள் தன்னைப் பார்த்துக்கொள்வதற்காக நீரின் அருகே குனிந்தாள். பொழுது சாய்ந்து எங்கும் இருண்டிருந்தபடியால், முகம் நன்றாய்த் தெரியும் பொருட்டு அவள் நீரின் மீது அப்படியே கவிழ்ந்துகொள்ளும்படி ஆயிற்று.

"எங்களிருவருக்குந்தான் ஒப்புமை இருக்கிறது. எனக்கு ஏற்ற அழகு வாய்ந்த புருஷர் அவர்தாம். என் சௌந்தரியத்தைக் கண்டு அவர் மயங்கினார் என்றால், ஏன், நானுந்தான் அவர் ரூபத்தைக் கண்டு மயங்கிவிட்டேன். நாங்கள் ஒருவரையொருவர் விலங்கிட்டுக் கொண்டவர்போல் இருப்பினும் இருவரும் வெற்றியும் அடைந்திருக்கிறோம். கடவுள் எங்களைத் தான் ஒருவருக்கொருவர் இணையாகச் சிருஷ்டித்திருக்கிறார். சொல்லும் பொருளும்போல் ஒன்று சேர்ந்திருக்கும் எங்களை இப்பொழுது சந்திக்கச் செய்திருப்பது தெய்வச் செயலே என்பதில் என்ன

அபராஜிதா சந்தோஷத்தோடு அவரை முத்தமிட்டாள்.

சந்தேகம்? எனக்குப் பொருள் அவர்; அவருக்குப் பொருள் நான். வெகுகாலமாக நான் அவிழ்க்க முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த புதிருக்கு அவர் விடை போல் விளங்குகிருர். இப்பொழுது தான் நான் எதற்காகப் பிறந்திருக்கிறேன் என்பது எனக்கு நன்ருய் விளங்குகிறது. இனிமேல் அவருக்கு விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் என்னிடம் மறுபடியும் திரும்பி வருவதற்கான வழியைப் பார்க்கவேண்டும். அவர் மட்டும் திரும்பிவந்தால் அப்புறம் என்ன கவலை? ஏனெனில் திரும்பி வந்தாலே அது தோல்வியடைந்ததைக் காட்டும் அல்லவா? அணைக்கட்டைத் துளைத்துக்கொண்டு ஜலம் வெளியே செல்லத் தொடங்கி விட்டால், பிறகு வெள்ளம் எல்லாவற்றையும் அடித்துச் செல்லாமல் இருக்குமா? பிரேமையின் பெருக்கில் அகப்பட்டு அப்படியே முழுகிப் போக வேண்டியதுதான்" என்று அவள் தானே கூறிக்கொண்டாள்.

இவ்வாறு மேலே என்ன செய்வதென்று அவள் மௌனமாய் யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும்பொழுது மெல்ல மெல்ல எங்கும் இருள் பரவியது. அவ்

விருட்டில் அவள் வெண்மையான தேகம் நடுநிசியில் உன் தந்தையான ஹிமவானின் பனி தோய்ந்த சிகரத்தின் வளைந்த பாகம்போலத் தோன்றிற்று. திடீரென்று ஒரு தவளை கத்திற்று. அதைக் கேட்டுத் திடுக்கிட்ட அபராஜிதா பிறகு உடனே புன்னகை புரிந்து கொண்டாள்.

'அப்பா! தவளைதானே கத்திற்று! காமரூபன்தானோ என்று பயந்துவிட்டேன். ஏனெனில் அவன் குரல் தவளை கத்துவது போலத்தான் இருக்கிறது. அவன் நாசமாய்ப்போக! அவன் திரும்பி வராமல் இருக்கமாட்டான். ஒவ்வொரு தரமும் ஏதாவது சத்தம் கேட்கும்பொழுது அவன்தானோ என்று திடுக்கிட்டுப் போகிறேன். ஐயோ! இது என்ன கஷ்டம்! எனக்கு யார் வேண்டுமோ அவர் வருவதில்லை. எவன் வேண்டாமோ அவன் வருகிறானே! அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் மாறியிருந்தால் -?'

இப்படி நினைக்கும் பொழுது அவள் திடீரென்று எழுந்து நின்றாள். "ஆஹா! ஒரு வழி கண்டு பிடித்துவிட்டேன். இனிக் கஷ்டம் இல்லை" என்று கூறியவண்ணம் கைகளைக் கொட்டி மகிழ்ந்தாள்.

'கடைசியில் காமரூபனும் மிகவும் உயர்ந்துவிட்டான். அவனால் தான் அக்காரியம் ஆகவேண்டும். இப்பொழுதே என் தந்தையைப் போய்ப் பார்த்து அவர் உதவியைக் கேட்கவேண்டும். ஏனெனில் என் காரியம் நிறைவேறுவதற்கு வேண்டியவைகளை அவர்தாம் செய்ய முடியும்.'

இப்படி யோசித்ததுதான் தாமதம், உடனே அவள் நீரில் முழுகி நீந்தியபடியே பாடல தேசத்தை அடைந்தாள். அங்கே தன் தந்தையின் இருப்பிடம் சென்றதும், அவர் ரத்தினங்கள் இழைத்த கட்டிலில் ஏதோ படங்கள் வரைந்த வண்ணம் படுத்துக்கொண்டிருப்பதைக் கண்டாள்.

"அப்பா! நான் உங்களைத்தான் சரணமடைந்திருக்கிறேன்" என்று வேகமாய்க் கூறிவிட்டு, அபராஜிதா அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். கூடு விட்டுக் கூடு பாய எனக்கு ஏதாவது மந்திரம் உபதேசியுங்கள்" என்று அவள் கூற, அவள் தந்தை கையில் பிடித்த எழுதுகோலுடன் அவளை ஆச்சரியத்தோடு நோக்கினார். பிறகு சிரித்துக்கொண்டு, "அபராஜிதா, இது என்ன வேடிக்கை! கூடுவிட்டுக் கூடுபாய்ந்து என்ன செய்ய வேண்டும் என்கிறாய்? உன் அழகிய சரீரமே உனக்குப் போதாதா? அதை விட்டு வேறு சரீரத்தை அடைவதில் உனக்கு என்ன பயன் உண்டாகப்போகிறது?" என்றார்.

"நான் எல்லாம் கூறுகிறேன். கேளுங்கள். நான் கூறி முடியும் வரை நடுவில் என்னை ஒன்றும் கேட்கவேண்டாம்" என்றாள் அபராஜிதா. பிறகு அவள் ஆதி முதல் எல்லாவற்றையும் கூறித் தன் யோசனையையும் தெரிவித்தாள்.

அவள் கூறி முடித்ததும் அவள் தந்தை அவளைப் புன்னகையுடன் நோக்கி, "ஓஹோ! கடைசியில் உனக்குக் கல்யாணம் செய்து கொள்ளும் எண்ணம் உண்டாயிற்று? போகிறது! அது நல்லது தான். ஆயினும், போயும் போயும் இந்த மனிதன்தானா அகப்பட்டான்? அவன் அரசனாயிருந்தாலும் என்ன பிரயோசனம்? நம் இனத்து அரசர்களையெல்லாம் வரவழைக்கிறேன். உனக்கு யார் பிரியமோ அவனைத் தேர்ந்தெடுத்துக்கொள்" என்றார்.

"அவர்கள் எல்லாம் கிடக்கட்டும். எனக்கு ஒருவரும் வேண்டாம். இந்த அரசனைத் தவிர வேறு யாரையும் நான் கணவனாக வரியேன்" என்றாள் அபராஜிதா.

அவள் ஒரே உறுதியாக இருப்பதைக் கண்டதும் அவள் தந்தை

சிரித்துக்கொண்டார். "சரி. உன் இஷ்டப்படியே இருக்கட்டும். நீ என்றும் காற்றைப்போல் ஒருவர் கட்டுக்கும் அடங்காதவள். இருந்தாலும் நான் இப்பொழுதே சொல்லுகிறேன். நீ இம்மாதிரி விவாகம் செய்துகொள்வது கொஞ்சமேனும் சரியன்று. வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர் இருவர் மணம் செய்துகொண்டால் அது நீடித்திராது. ஏனெனில் அலுத்துப்போய் நீ அவனை விட்டுச் செல்லாமற் போனாலும் அவன் சீக்கிரத்தில் உன்னைத் தனியே விட்டு இறந்துபோவான் என்பது நிச்சயம். மானிட அரசர்களுக்கும் நாககன்னிகைகளுக்கும் எங்கேனும் சம்பந்தம் உண்டா? அதுதான் போகட்டும் என்றால், அவன் இறப்பதற்குள் நரையும் திரையுமுள்ள ஒரு கிழவனாகிவிட மாட்டானா?" என்றார்.

"நரையையும் கிழத்தன்மையையும்பற்றி எனக்கு என்ன ஆகவேண்டும்? இப்பொழுது அவர் மிகவும் இளமையோடு இருக்கிறார். கிழத்தன்மையைப்பற்றி அப்புறம் யோசித்துக்கொள்ளலாம். அவரை விட்டு என்னால் ஒரு கணமும் உயிர்தரிக்க முடியாது. அவர்தாம் என் இஷ்ட தெய்வம்; என் நாடு, உறவினர், என் பிராணன் எல்லாம். எனக்கு அம்மந்திரத்தைச் சொல்லுங்கள். அதைக்கொண்டு அவரை என்னுடையவராகச் செய்துகொள்ளுகிறேன். இதைச் செய்தால்தான் நீங்கள் உண்மையில் என்னைப் பெற்ற தந்தையாவீர்கள். நானும் இருமுறை பிறந்த கடனை உங்களுக்கு ஆற்றுவேன்" என்றாள் அபராஜிதா.

இவ்விதம் அவள் அவரைப் பலவிதமாய்க் கெஞ்சிக் கொஞ்சிக் கேட்கவும் கடைசியில் அவர் மனமிசைந்து அவளுக்கு ஒரு மந்திரத்தை உபதேசம் செய்தார்.

"மந்திரத்தை மட்டும் சரியாய் ஞாபகம் வைத்துக்கொள். இம்மந்திரங்கள் எல்லாம் நெருப்பைப் போன்றவை. ஜாக்கிரதையாய்ப் பிரயோகம் செய்யாவிட்டால் உபயோகிப்பவர்களையே எரித்துவிடும். அஜாக்கிரதையாய் இருப்பவர்கள், வழி தெரியாமல் தாம் வெட்டிய குழியிலேயே விழுந்து மடியும் மனிதர்களைப் போன்றவர்களாவார்கள். இறந்தவர்களின் உடலில் புகுந்தவர்கள் பிறகு வெளியே வரமுடியாத நிலைமைக்கு வரக்கூடும் அல்லவா? நான் கூறியதுபோல் உன்போன்ற ஒரு பெண்ணுக்கு இம்மந்திரங்களினால் எல்லாம் என்ன ஆகவேண்டும்? இம்மூன்று உலகங்களிலும் தேடினாலும் இவ்வளவு எழில் பொருந்திய சரீரம் உனக்கு வேறு கிடைக்குமா?"

இவ்வாறு தந்தை கூறவும், அபராஜிதா சந்தோஷத்துடன் அவரை ஒரு முத்தமிட்டாள். "அப்பா, கவலைப்படாதீர்கள். இம்மந்திரத்தை நான் எனக்காகக் கேட்கவில்லை. எந்தச் சரீரமும் என்னுடைய சரீரத்துக்கு இணையாகாதுதான். ஏனெனில் உலகில் தொலைந்தால் போதும் என்று நினைக்கக்கூடிய சரீரங்கள் எவ்வளவோ இருக்கின்றன அல்லவா?" என்றாள்.

௬

இதற்கிடையில் காமரூபன் அபராஜிதா அவனை இகழ்ந்து தன் முன்னிலையை விட்டுத் துரத்தியதும் எப்படியோ ஒருவிதமாய்த் தன் வீடு சேர்ந்தான். அவனுக்குத் தன் உயிரையே பின்னால் விட்டு வந்திருப்பதுபோலத் தோன்றியது. அவன் பேசாமல் எதிரிலிருந்த சுவரைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். ஆயினும் அப்பொழுதெல்லாம் அச்சுவரில் படம் எழுதினாற்போல அபராஜிதா அவன் கண்முன் தோன்றிய வண்ணம் இருந்தாள். அவள் குரலும் சிரிப்பும் அவன் காதுகளில் இடைவிடாமல் ஒலித்துக்கொண்டே இருந்தன. அவளே அவன் உடலில் பிரவே

சித்து அவனை முற்றும் தன் வசமாக்கிக்கொண்டது போல் இருந்தது. சாப்பிடுவது, தூங்குவது யாவற்றையும் விட்டு, அவன் ஒரே ஏக்கத்தில் ஆழ்ந்துவிட்டான். அவன் உடலில் கேவலம் உயிர் மட்டுமே இருந்தது.

தன் நிலைமையை உணர்ந்ததும், அவன் மனம் மிகவும் வருத்தத்துடன் பின்வருமாறு எண்ணமிட்டது:

'நாட்கள் எவ்வளவோ செல்லுகின்றன. ஆயினும் மாறுதல் மட்டும் ஒன்றும் காணவில்லை. இப்பொழுது நான் இருந்து என்ன பயன்? அவளைப் போன்ற ஒரு பெண் இத்தகைய ரூபவானான என்னை எப்படிக் கண்ணெடுத்தேனும் பார்ப்பாள்? அவளே அப்படி என்னிடம் கூறவில்லையா? அவளுக்குக் கோபம் வராமல் இருக்கும் பொருட்டு எங்கேனும் தூரத்தில் அவளை அறியாமல் மறைந்திருந்து ஒரு முறை பார்ப்பதற்கு ஒரு ஜன்மம் அல்ல, நூறு ஜன்மங்களாயினும் எடுக்கத் தயாராக இருப்பேன்.'

இவ்வார்த்தைகள் திடீரென்று அவன் இருண்ட உள்ளத்திற் புகுந்து ஒளி பெறச் செய்தாற்போல அவன் இரைந்து ஒரு கூச்சலிட்டான்.

'ஆஹா! ஏன், அப்படிச் செய்தால் என்ன? நான் செய்யக்கூடிய காரியம் இதைத் தவிர வேறில்லை. அவள் சமீபம் மெதுவாய், சப்தம் செய்யாமல் சென்று, எங்கேனும் ஒரு மறைவிடத்தினின்றும் அவள் அறியாமல் அவளைக் காணும் இன்பத்தைப் பெறுவேன். என்னை ஒருவரும் தடுக்க முடியாது. ஏன், அவளுக்குத் தெரியாமல் செய்தால் அவளேதான் என்னை என்ன செய்வாள்? நானும் தினமும் அவளைப் பார்த்துக்கொண்டிருப்பேன்!'

இவ்வாறு நினைக்கும்பொழுதே அவன் உள்ளம் ஒரே களிப்பில் ஆழ்ந்து தான் நினைப்பது கனவோ என்று பிரமிக்கத் தொடங்கியது. தான் எண்ணியது மிகச் சுலபமாய் நிறைவேறும் என்பதனாலேயே அது மிகவும் அசாத்தியமாகவும் தோன்றலாயிற்று. திடீரென்று உள்ளத்தில் உதித்த இந்த எண்ணம் நிராசையென்னும் படுகுழியில் விழுந்து தத்தளித்துக்கொண்டிருந்த அவனை ஒரே இன்பமயமான லோகத்துக்கு அழைத்துச் சென்று, கிட்டாதென்று அவன் கைவிட்ட பொருளை அடையும் பாக்கியத்தை அவனுக்கு எடுத்துக் காட்டுவதுபோல் இருந்தது. அவன் உடனே அவசரமாய்த் தன் முன்னே தீண்டாமல் கிடந்த அன்னத்தை ஒரு கவளம் எடுத்து விழுங்கிவிட்டு, ஒரே ஓட்டமாய் அபராஜிதாவின் பொய்கையை நோக்கிச் சென்றான். பொய்கையின் சமீபம் நெருங்கும்பொழுது, இன்னும் வேகமாய் ஓடவேண்டும் என்ற அவன் ஆசையையும் மீறி அவன் கால்கள் மெதுவாகத் தொடங்கின. கடைசியில் அவன் மிகவும் ஜாக்கிரதையாய்ச் சப்தம் செய்யாமல் மரங்களுக்குப் பின் மறைந்தபடியே ஊர்ந்து செல்லத் தொடங்கினான். அவளைக் காண அவன் துடித்துக்கொண்டிருந்த போதிலும், எங்கே அவள் தன்னைப் பார்த்துவிடுவாளோ என்ற பயத்தில் அவனுக்கு மூச்சு விடக்கூடத் தைரியம் இல்லாமலிருந்தது.

அவன் மறைந்தபடியே நின்று குளக் கரையைப் பார்த்தான். ஆஹா! அபராஜிதா முன்பு தான் பார்த்த இடத்திலேயே இருப்பதைக் கண்டான். அவள் குளக் கரையோரமாக இருந்த பாறைமீது கால்கள் இரண்டையும் நீரின்மீது தொங்கவிட்டுக்கொண்டபடி உட்கார்ந்திருந்தாள். அவளைப் பார்க்கும் பொழுது அமிருதத்துக்கு இருப்பிடமான சந்திரனுடைய ஒரு கலைதான் இவ்வாறு அழகெல்லாம் ஒருங்கே உருவெடுத்து ஒரு பெண் வடிவத்தில் வந்ததோ என்று

எண்ணும்படி இருந்தது. அவள் அப்பொழுதுதான் வெண்கடலினின்றும் எழுந்தவள்போல் தோன்றினாள். சற்று முன்புதான் குளத்தில் நீராடிவிட்டு வந்திருந்தாள்; ஆகையால், அவள் நனைந்த கூந்தல் உடம்பில் படிந்து அவளுடைய அங்கங்களின் லாவண்யத்தை மறைக்க முயன்றும் முடியாமல் இருப்பது போல் விளங்கிற்று. அபராஜிதா, வெள்ளிபோன்ற ஒரு மீன் நீரில் துள்ளி விளையாடிக்கொண்டிருப்பதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவளைக் கண்டவுடன் காமரூபனது உள்ளமானது பறையடிப்பது போல் அடித்துக்கொள்ள, எங்கே அச்சப்தம் அவள் காதுகளுக்கே எட்டிவிடுமோ என்று அவன் பயந்தான். அவன் உடல் முழுவதும் அவன் வசத்தில் இல்லாமல் நடுங்கிக்கொண்டிருந்தது. நிற்க முடியாமல் கீழே விழுந்துவிடுவோமோ என்று தோன்றவும் அவன் தன்னை அறியாமல் ஓர் உலர்ந்த குச்சியை மிதித்துவிட்டான். அது மளுக்கென்று முறிந்தது. அச்சப்தம் காதில் படவும் அபராஜிதா தலை நிமிர்ந்து அவனை நோக்கினாள். காமரூபன் நடுங்கிப்போய்விட்டான். அவனுடைய உடம்பெல்லாம் ஜில்லென்று வியர்த்துப்போயிற்று. ஆனால் பாதி உயிர் போனவன் போல் நிற்கும் அவனை அபராஜிதா பரிவுடன் அருகில் அழைத்ததும் அவனுக்கு உண்டான வியப்பு இவ்வளவென்று கூற முடியுமோ?

"ஹா! காமரூபரா? இப்படி வந்து என் அருகில் உட்காரும். என் மீன் ஜலத்தில் துள்ளி விளையாடுவது எவ்வளவு விநோதமாக இருக்கிறது! சற்றுப் பாரும். ஒருவராக இருப்பதைக் காட்டிலும் இருவர் சேர்ந்து பார்ப்பது எப்பொழுதும் நன்றாக இருக்கும்" என்றாள் அபராஜிதா.

அவள் கூறிய வார்த்தைகளைக் கேட்கவே, காமரூபன் திகைப்படைந்தான். அவனுக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. அவள் கூறியபடி செய்யாமல் கையும் களவுமாய்ப் பிடிபட்ட குற்றவாளி போல் தண்டனையை எதிர்பார்த்துக்கொண்டு நின்றான். அவன் பேசாமல் இருக்கவே அவள் மறுபடியும், "ஏன், நான் அழைத்தது காதில் படவில்லையா? தைரியமாய் என் அருகில் வாரும். பயப்பட வேண்டாம். இம்முறை உம்மைப் பார்த்து நான் கொஞ்சங்கூடச் சிரிக்கமாட்டேன்" என்றாள்.

இவ்வாறு கூறிவிட்டு அவள் ஒரு சிறு புன்னகை புரியவும், காமரூபனின் உள்ளம் தாங்காமல் அப்படியே வெடித்துவிடும் போல் இருந்தது. அவன் மெல்ல அருகில் வந்ததும் அவள் அன்புடன் அவனை நோக்கி, "இப்படி என் பக்கத்தில் உட்காரும். நாம்இருவரும் சேர்ந்து மீன் விளையாடுவதைப் பார்ப்போம். என் தனிமையை அகற்றி எனக்கு விநோதம் உண்டாக்கும் தோழன் இந்த மீன்தான். ஆயினும் - என்ன சமாசாரம்? நீர் என்னைக் கண்டு பயப்படுவதுபோலத் தோன்றுகிறதே? நான் என்ன உம்மைக் கடித்துத் தின்றுவிடுவேனா?" என்றான்.

"என்ன! உன் பக்கத்தில் உட்காருவதா?" என்று காமரூபன் நடுங்கிய குரலில் கேட்டான்.

"ஏன் கூடாது? அதில் என்ன பயம்? ஒருவேளை இங்கு என்னுடன் உட்கார்ந்து உம்முடைய பொழுதை வீணாக்க நீர் விரும்பவில்லையோ?"

"ஆஹா! என்னைப் போன்ற ஒரு குரூபி அழகெல்லாம் உருவெடுத்து வந்தவள் போன்ற உன் பக்கத்தில் உட்காருவதென்றால் அது மிக்க அவமானமாக அல்லவா இருக்கிறது? அது நியாயமா?"

"உமக்குச் சந்தோஷமுண்டாக்க எண்ணினேனே தவிர வேறல்ல. சென்ற தடவை நாம் சந்தித்த பொழுது நீர் மிகவும் பணிவுடன்

இருந்தீர். நான்தான் சற்றுக் கடுமையாய் நடந்துகொண்டேன். இல்லையா?" என்று அபராஜிதா வினவ, காமரூபனின் கண்களில் நீர் நிறைந்தது.

"என்னவோ, எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே. இதுவரையும் என்னை ஒரு பெண்ணும் இப்படிப் பிரியமாய் அழைத்துப் பேசியதில்லையே! நான் ஒருவேளை கனவு காண்கிறேனோ?" என்றான்.

"கனவு ஒன்றுமில்லை; வாஸ்தவந்தான்" என்றாள் அபராஜிதா; "நீர் காமரூபர் அல்லவா? நான்தான் அபராஜிதா. நான்முகன் அநியாயமாய் ஸ்திரீகள் கண்ணெடுத்துப் பார்க்க விரும்பாத உருவத்தை உமக்கு அளித்துவிட்டார். சாதாரணமாய் ஸ்திரீகள் எப்பொழுதும் தோற்றத்தையே பெரிதாய் நினைக்கிறார்கள். ஆகையால் எந்தப் பெண்ணும் உம்மை இந்த உருவத்தில் விரும்புவது சற்றுச் சிரமமே! அதற்கு நீர் உமது ரூபத்தைத்தான் குறை கூறவேண்டும்."

அம்மொழிகளைக் கேட்டு அந்தத் துரதிருஷ்டம் பிடித்த நாவிதன் ஒரு பெருமூச்சு விட்டான்.

"அந்தோ! நீ கூறுவது என் காதுகளுக்கு நாராசம்போல இருப்பினும் மிகவும் உண்மை. ஆஹா! இவ்வுடலைக் களைந்து இப்பொழுது எனக்கு வேறு கிடைப்பதாயிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அது அல்லவா எனக்குப் பெரிய அவமானமாயும் கஷ்டமாயும் இருக்கிறது!"

"உலகில் எல்லாக் கஷ்டங்களுக்கும் மரணத்தைக் காட்டிலும் வேறு பரிகாரம் இருக்கிறது. நான் உம்மைப் பார்த்த பிறகு தனியே யோசனை செய்து உமது கஷ்டம் என்ன என்பதை அறிந்துகொண்டேன். நான் உம்மை இப்பொழுது இங்கு அழைத்ததும் அதற்காகவே. ஒருவேளை என்னால் உமக்கு வேறு அழகு வாய்ந்த சரீரம் கிடைக்கலாம். நானே பார்த்துக் காதல் கொள்ளும்படியான ரூபம் வாய்ப்பதாக இருந்தால் உமக்குச் சம்மதந்தானே?"

இவ்வாறு அபராஜிதா கூறியதைக் கேட்க, ஒன்றும் விளங்காமல் காமரூபன் ஒரே திக்பிரமை அடைந்தான். வியப்பினால் அவன் முகம் முன்னிலும் கோரமாய் விளங்கிற்று. சற்று நேரம் அவன் அவளையே விழித்து நோக்கிப் பிறகு மெதுவாய், "சம்மதமா? வேறு உருவமா?" என்று தடுமாறிய வண்ணம் கூறினான். பிறகு திடீரென்று உரத்த குரலில், "ஆஹா! அப்படியா? வேறு உருவம் என்றா சொல்லுகிறாய்? நீ எப்படியோ அறிந்துகொண்டுவிட்டாயே! வேறு உருவம் எனக்குக் கிட்டுவதாக இருந்தால் கோடி ஜன்மங்களாயினும் எடுக்கத் தயாராக இருப்பேனே! இல்லை; நீ கேவலம் என்னைப் பரிகசிக்கிறாய் என்று நினைக்கிறேன்" என்றான். விம்மலுடன் அவனுக்கு அழுகை வந்தது. "ஐயோ! அது சாத்தியமா? அவ்வாறு எப்படி நடக்கும்?" என்று வருத்தத்துடன் கூறிக் கீழே உட்கார்ந்துகொண்டான்.

"காமரூபரே!" என்றாள் அபராஜிதா பரிவான குரலில். "ஏன் அவ்வாறு நடக்காது? உமக்கு ஏன் அவ்வளவு அவநம்பிக்கை? ஆயினும் இரைந்து பேசவேண்டாம். யார் காதிலாவது படப்போகிறது. அது போகட்டும். நான் ஒன்று கேட்கிறேன். இவ்வூர் அரசனை நீர் பார்த்திருக்கிறீரா?"

"ஏன், நான்தான் தினமும் அவனைப் பார்த்துக்கொண்டிருக்கிறேனே!" என்றான் காமரூபன்.

"அவருடையது போன்ற உருவம் உமக்குக் கிடைத்தால் திருப்தி தானே? உம்முடைய சரீரத்துக்குப் பதில் அவருடைய சரீரம் உமக்கு வாய்த்தால்?—இப்பட்டணத்து ஸ்திரீகள் எல்லாரும் அவர்

மீது காதல் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். நான் அவரைப் பார்த்ததில்லை யாகையால் அது எவ்வளவு தூரம் உண்மை என்பது எனக்குத் தெரியாது. அவர் என்னவோ பதிலுக்கு மிகவும் வெறுப்புடனும் இகழ்ச்சியுடனும் இருப்பதாகவும் கூறுகிறார்கள். அப்படியானால் கடவுள் சிருஷ்டியிலேயே பெரிய தவறு நேர்ந்திருப்பதாகத்தான் சொல்லவேண்டும். உமக்கு நல்ல இருதயம் இருக்கிறது. அதற்குத் தகுந்த சரீரமோ அவருடையதாக இருக்கிறது. உம்முடைய உருவம் அவருக்கு இருந்தால் அவர் மனம்போல் இருக்கச் சௌகரியமாக இருக்கும். ஒரு பெண்ணும் அவரைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டாள். எப்படியோ உங்கள் இருவருடைய உள்ளமும் உடலும் மாறிப்போயிருக்கின்றன. உமக்கு இருக்கவேண்டிய உடல் அவருக்கும் அவருக்கு இருக்க வேண்டிய உள்ளம் உமக்கும் தவறி வாய்த்து விட்டன என்றுதான் ஊரில் எல்லோரும் சொல்லிக் கொள்கிறார்கள்.''

"ஆம். நீ கூறுவது யாவும் உண்மையே. அவன் சாக்ஷாத் மன்மதனைப்போலத்தான் விளங்குகிறான். அவனைக் கண்டு உள்ளம் பறி கொடுக்காத பெண் ஒருவரும் இல்லை'' என்றான் காமரூபன்.

"வாஸ்தவத்தில் அவ்வரசனை ஒரு கள்வன் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் மன்மதனுடைய உடலைத் தாம் எடுத்துக் கொண்டு பெயரை மட்டும் உமக்கு அளித்திருக்கிறார் அல்லவா?'' என்று கூறி, அபராஜிதா ஒரு புன்னகையுடன் அவன் சமீபம் நகர்ந்து தன் மிருதுவான கையை அவன்மீது வைத்தாள். தன் அகன்ற கண்களால் அவள் தன்னைப் பரிவுடன் நோக்குவதைக் காமரூபன் கண்டான். அவள் கூந்தலின் நறுமணம் அவனை ஒரே மயக்கத்தில் ஆழ்த்தியது.

அபராஜிதா ரகசியமாய் அவன் காதில், "அவர் உருவம் உமக்குக் கிடைக்கும் வழியை நான் கற்றுக் கொடுத்தால் உமக்குச் சந்தோஷந்தானே? இவ்வூரிலுள்ள பெண்கள் எல்லாம் அவர் உருவத்தைக் கண்டு காதல் கொள்ளுகிறார்கள் என்றால், நானும் ஒருவேளை அவரைக் கண்டு காதல் கொண்டாலும் கொள்ளலாம். அவர் உருவம் உமக்குக் கிடைத்தால் அப்பொழுது நானே உம்மைக் கண்டு காதல் கொள்ளலாம் அல்லவா?'' என்றாள்.

(தொடரும்)

"உலகம் வெள்ளத்தோடு கூடவே ஓடிக்கொண்டு போகவேண்டியதுதான். அந்தப் பிரவாகம் அதை எங்கே கொண்டுவிட்டாலும் சரியே. உடை, கல்வி, உணவு, விவாகம் - எந்த விஷயத்தில் பார்த்தாலும், அதிகமான ஜனங்கள் வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டவர்களைப் போலவே நடந்து கொள்கிறார்கள். 'வெள்ளத்துக்கு எதிர்த் திசையில் நீந்துவதுதான் வாழ்க்கை' என்ற கருத்து அவர்களுக்குப் புரிவதுகூட இல்லை."

—வி. ஸ. காண்டேகர்

பெருமை

'வல்லிக்கண்ணன்'

ஞாயிறு சொன்னது :

"நான் இல்லாவிட்டால் இந்த உலகம் ஏது? அண்டங்கள் தோறும் உயிர் பிறக்க எனது ஸ்பரிசம் தேவை. என் கையால் தொட்டால் பொன் முலாம் மிளிர்கிறது. உஷையின் மலர்க் கண் சிவப்பும், சந்தியாவின் மேனிவண்ணமும் என் ரச்மி சக்தியால் ஜொலிப்பன. காலையில் ஒரு வனப்பு. பகலில் ஒரு பளபளப்பு. அந்தியில் தனி மினுமினுப்பு. வானத்தின் வர்ணவிஸ்தாரம் அனைத்தும் என் கதிர் விரல் நுனிகள் தீட்டும் மாயாஜாலம்.

"இதோ என் முதல் கிரணத்தை விட்டெறிகிறேன். எவ்வளவு ஒளி விந்தை! பின் நான் தலை நிமிர நிமிர, தகதகாயந்தான். தூங்கிக் கிடந்த உலகத்தில் உயிர் புகுத்தும் பிரமா நான். அழகுக்கு அழகு செய்யும் கவிஞன் நான். என்னைக் கண்டு பூலோகக் கவி புளகிக்கிறான்.

"கலகலப் புள்ளோசைகளிடையே, மக்களின் மகிழ்வுக்கிடையே, பூக்களின் புன்னகை என் வரவைப் போற்றுகிறது.

"இதுவரை குவிந்து கிடந்தது அந்த முகை, உலகத்தின் சோகத்தைக் கண்டு சாம்பிக் கூம்பிய கலைஞனின் உள்ளம் போல. நான் தொடுகிறேன் என் பொன் விரலால். அதில் ஜீவன் நெளிகிறது. கவிதை மின்னுகிறது. இயற்கை மனம் நிறைந்து கக்குகின்ற சிரிப்பின் சாயையாக மலர்கிறது அந்தத் தாமரை.

"நான்தான் பெரியவன். இன்னுமா சந்தேகம்?"

இந்தப் பேச்சு அம்புலியின் காதில் பட்டது. அது பெருமூச்செறிந்து முணுமுணுத்தது :

"ஐயோடி, என்ன பெருமை! எவ்வளவு கர்வம்! ஹூம், என்ன இருந்தாலும் இவ்வளவு தலைக் கனம் ஆகாதம்மா!

"சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கலாம். ஆனால் தானேதான் அழகுத் தேவதை எனப் பிதற்றுகிறதே! அதன் ஒளியில் அதனோடு பார்வையே மழுங்கிவிட்டதா என்ன?

"தாமரை மலர் நிலையைச் சுட்டிக் காட்டியதே. அதன் அருகில் கூம்பித் தலைகவிழ்ந்த ஆம்பலின் கதியை ஏன் கவனிக்கவில்லை?

"ஆம்பல் நல்ல ரஸிகை. மணமுள்ள மல்லிகை இனமும் அப்படித்தான். இந்த ஞாயிற்றின் ஜம்பம் அதனிடம் பலியாது. இதன் ஸ்பரிசம் அவற்றைத் தீய்த்துவிடும். அவை என் முத்தத்தினால் முறுவல் பூக்கின்றன.

"என் பாலொளி எங்கும் குளுமையை மட்டுமா பரப்புகிறது? ஆனந்தம் அள்ளி வழங்கும் அமுதப் பிரவாகம் இல்லையா என் புன்னகை? மினுமினுப்பாம், பளபளப்பாம்! என் நோக்கால் உலகமே - மண்ணும் விண்ணும், சாகரமும் சர்வமும் - மோகன ஜோதியில் ஆழ்கிறதே. அதைப் பாராது வீட்டிற்குள் அடைபட்டுக் கிடந்து தற்பெருமை பேசுகிறது ஆதவன்.

"நான் எழில் ராணி. அழகுத் தெய்வம். என்னைக் கண்டு கவி கூத்தாடுகிறான். மக்கள் சோர்வு அகல்கின்றனர். காதலர் களிக்கிறார்கள். அதோ, சாகரம் ஆனந்த நடமிடுகிறது, காதலியின் வரவறிந்த காதலன் உள்ளம்போல.

"யார் பெரியவர் என்று இன்னுமா தெரியாது போகும்?"

இவற்றை எல்லாம் செவிமடுத்த இருள் மோனப் புன்னகை புரிந்து, நக்ஷத்திரப் போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு, புரண்டு படுத்தது. அதன் மனத்திலும் ஓர் எதிரொலி :

'பேத்தல்! வீண் பெருமைதான். இந்த அம்புலியின் ஜீவநாடி ஆதவன் ஒளி என்பதை இது மறந்துவிட்டது. ஞாயிறுதான் என்ன! நான் இல்லாவிட்டால் அதற்கு ஏது மகிமை? இல்லை, 'இந்தச் சந்திரனுக்குத்தான் மதிப்பு எங்கே! உண்மையை உணர முடியாத ஜடங்கள். 'பெரியவர்' என்று பெருமை பேச வந்துவிட்டன. பெரியவராவது, சின்னவராவது! ஹூம்!'



வீணன் வெட்டிய ஆறு

தே. வீரராகவன்

சோழநாட்டைத் தஞ்சாவூரில் இருந்து பல சோழ அரசர்கள் ஆண்டார்கள்; அவர்களில் விஜயாலயன் என்பவன் ஒருவன். குடிகளுக்கு அவன் ஒரு துன்பமும் செய்யமாட்டான். ஆனால் அவன் எப்போதும் தன் இன்பங்களை அதிகமாக்கிக் கொள்வதிலேயே கவனம் செலுத்திவந்தான்; குடிகளின் இன்ப துன்பங்களை நோக்கவே இல்லை.

அக்காலத்தில் வீணன் என்ற ஓர் ஏழை தஞ்சாவூரில் வசித்துவந்தான். அவன் ஏழையாயினும் சிறந்த அறிவாளி. தஞ்சாவூர்க் கடைவீதியில் அவனுக்கு ஒரு சிறு பலசரக்குக்கடை இருந்தது. சில நாட்கள் அவன் ஓர் அவசர காரியமாக வெளியூருக்குப் போயிருந்தான். அந்தச் சமயத்தில் சில திருடர்கள் அவன் கடையினுள் புகுந்து, சாமான்களையும் பணத்தையும் களவாடிச் சென்றுவிட்டனர்.

ஊரிலிருந்து மீண்ட வீணனுக்குத் தன் கடையைப் பார்த்ததும் வயிறு 'பகீர்' என்று ஆயிற்று. தனக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தைக் குறித்து அரசனிடம் முறையிட்டுக்கொள்ள அரண்மனைக்குச் சென்றான். அரசனிடம் சொல்லி அழுதான். ஆனால் குடியிலும் ஆடல் பாடல்களிலும் ஈடுபட்டிருந்த அரசன் காதுகளில் வீணன் வார்த்தைகள் விழவில்லை. வருத்தத்துடன் திரும்பினான்.

மறுநாள் காலை தூங்கி எழுந்ததும், வீணன் தஞ்சாவூரின் நடுவே நான்கு பாதைகள் கூடும் ஒரு நாற்சந்தியில் வந்து நின்றுகொண்டான்; அவ்வழியாகச் செல்லும் வண்டிகளையும் மனிதர்களையும், "நில்! இப்படிப் போ! அப்படிப் போ" என்று சிறிது நேரம் நிறுத்தியும் வழிகளை மாற்றியும் செல்ல விட்டான்.

அரசனுடைய உத்தரவின்பேரில்தான் வீணன் அப்படிச் செய்வதாக எல்லோரும் எண்ணிக்கொண்டு அவன் காட்டிய வழியே சென்றார்கள். இப்படிச் சில மாதங்கள் சென்றன.

வீணன் இதற்கு மேலும் ஒரு யுக்தி செய்தான். அதாவது, அவன் நிற்கும் நாற்சந்தி வழியாகச் செல்லும் கட்டைவண்டிகள், கைவண்டிகள், குதிரை வண்டிகள், சவம், தலைச்சுமை இவற்றிற்கெல்லாம் ஒருவிதக் கணக்குப்படி சுங்கவரி வாங்க ஆரம்பித்தான். இதுவும் அரசனுடைய கட்டளைப் படியே இருக்கவேண்டுமென்று ஜனங்கள் எண்ணினார்கள்; யாரும் மறுக்காமல் வரியைச் செலுத்திவிட்டுப் போனார்கள்.

இதனால், தினமும் வீணனுக்குச் சுங்க வருமானம் அதிகரித்தது. அதைக் கணக்குப்படி வாங்கி வைத்துக் காவல் செய்ய ஒரு சுங்கச் சாவடியையும், பல குமாஸ்தாக்களையும் நியமித்தான். இந்த வேலை பல மாதங்கள் நடந்து வந்தது. ஒரு நாள் சோழ அரசனின் மந்திரி இறந்துவிட்டான். அவனுடைய சவத்தைத் தூக்கிக்கொண்டு ஒரு பெரிய கூட்டம் நாற்சந்து வழியாகச் சென்றது; அரசன் அந்தக் கூட்டத்தில் முதல் வரிசையில் வந்தான். அப்போது வீணன், "சவத்துக்கு உரிய சுங்கத்தைக் கொடுத்தால்தான் சவம் அப்பால் செல்லக்கூடும்" என்று சொல்லிச் சவத்தைத் தடுத்துவிட்டான். கூட்டத்தில் இருந்த அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் சோழ அரசனுக்கும் இது புதிதாகத் தெரிந்தது.

"உன்னை யார் சுங்கம் வசூலிக்க ஏற்படுத்தியது?" என்று அரசன் கேட்டான்.

"ஒருவரும் இல்லை; நானாகவே இவ்வாறு செய்கிறேன்."

"ஏன் இப்படிச் செய்தாய்?"

"தாங்கள் குடிஜனங்களை அதிகமாகக் கவனிக்கவேண்டும் என்ற எண்ணத்தால் இப்படிச் செய்தேன்."

"நான் குடிமக்களைக் கவனிப்பதில்லையா?"

"இல்லை."

"இது உனக்கு எப்படித் தெரியும்?"

வீணன் சில வருஷங்களுக்குமுன் நடந்த தன் வரலாற்றை எல்லோர் முன்னிலையிலும் எடுத்துக் கூறினன். அரசன் வெட்கம் அடைந்தான். அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை; "சரி. நீ தினமும் என் பெயரால் ஏராளமாக வரி வசூல் செய்துவருகிருயே. அந்தப் பணமெல்லாம் எங்கே? நீ வசூல் செய்துவரும் தொகைக்குக் கணக்கு வைத்திருக்கிருயா?" என்று கேட்டான்.

வீணன் பக்கத்திலிருந்த பெரிய சுங்கச் சாவடிக்கு அரசனை அழைத்துச் சென்றான். கணக்குகளை எல்லாம் காட்டித் தான் சேமித்து வைத்திருந்த அவ்வளவு பொருளையும் அரசன் முன்னிலையில் கொட்டினன். எதிர்பாராமல் கிடைத்த பெருஞ் செல்வத்தைக் கண்டு மகிழ்ந்த அரசன் வீணனைப் பார்த்து, "இந்தப் பணத்தை நீயே எடுத்துக்கொள்" என்றான்.

"இது தங்களுக்குச் சொந்தமானது. எனக்கு வேண்டாம்."

"பாதியாவது எடுத்துக்கொள்."

"ஒரு சல்லிகூட வேண்டாம்."

"பின் இப்பொருளைக் கொண்டு என்ன தருமம் செய்யலாம்? அதையாவது சொல்."

"கூடுமானல் இவ்வூருக்கு அருகில் செல்லும்படி காவிரியிலிருந்து ஒரு கிளைநதி வெட்டுங்கள்."

அரசன் அவன் இஷ்டப்படியே சில நாட்களுக்கெல்லாம் காவிரியிலிருந்து ஒரு கிளை வெட்ட ஏற்பாடு செய்தான். அதற்கு வீணன் பெயரையே வைத்து, 'வீணன் ஆறு' என்று அழைத்தான். அதுதான் இக்காலத்தில் விண்ணாறு என்றும் வெண்ணாறு என்றும் மருவி வழங்குகிறது.

[கர்ணபரம்பரையாக வழங்கும் கதை.]

தொகுதி ௨௯
பகுதி ௧௫௨

தாரண ௵ ஆவணி ௴
ஆகஸ்ட் 1944

கலைமகள்

சருகு

'துறைவன்'

துளிரென வானை நோக்கித் தகதக என்ன மின்னிக்
குளிர்மழை குலவிக் காற்றின் கூந்தலை வருடி மேவும்
அளியினந் தமக்கு வான்தோய் அன்பெனக் கவரி வீசிக்
களியுற்ற காலம் அன்று; கவல்வதோர் காலம் இன்றே.

சிலிர்த்தது வாடை சீறச் செந்தளிர் மேனி யெல்லாம்
சலித்தது; வானை நோக்கிச் சடைத்ததால் ஐயோ வென்றே
ஒலித்தது சருகு; 'நாமே உயர்த்தி'யென் றுன்னி, விந்தை
சொலித்தது போக இன்று சோர்வதோ கூளந் தன்னில்.

கொழுந்தெனக் குழைந்த தெல்லாம் குலைவுறப் புதுமை குன்றி
அழுந்திட அமைந்தேன்; செய்த அழிமதி யாதோ காணேன்.
செழுந்தளிர் மேனி வற்றச் சேர்ந்தனன் மண்மேல்; ஆங்கே
'எழுந்திரு, குழந்தாய்' என்றே எழுப்பினன் காற்றுத் தேவன்.

'பருகிய துயர மெல்லாம் பரிதிமுன் பனியில் தேய
கருகிய உறுதி மீண்டும் கவையுறத் தளிர்ப்ப, வன்மை
பெருகிய நெஞ்சு விம்மப் பெருநிலை உய்ப்பன்; வெற்றுச்
சருகெனக் கலங்கி ஓயும் சஞ்சலம் தவிர்க' என்றான்.

பிறக்கலாம் என்னும் ஆசை பிடர்பிடித் துந்த, மீண்டும்
சிறக்கலாம் என்னும் எண்ணம் சிந்தையில் அமுதம் பெய்யத்
'துறக்கலாம் வாழ்வை இன்று துணிவதே கருமம்' என்றே
'இறக்கலாம். இளப்பம் இல்லை' என்பதோர் தெளிவு கண்டேன்.

அறிவிப்பு

காகிதக் கட்டுப்பாட்டு உத்தரவின் விளைவாக இந்த இதழில் 48 பக்கங்களே வெளியிட முடிந்தது. பக்கங்களை அதிகப்படுத்த எங்கள் கட்சியைத் துரைத்தனத்தாருக்கு எடுத்துரைத்திருக்கிறோம். அடுத்த மாதம் முதல் இன்னும் அதிகப் பக்கங்கள் வெளியிடலாமென்று நம்புகிறோம். கலைமகள் அன்பர்களுடைய ஆதரவையும் அன்பையும் பக்கபலமாகக்கொண்டு இந்த நிலை மாறுவதற்குரிய முயற்சிகளைச் செய்துவருகிறோம்.

—ப-ர்.

அட்டைப் படம்: தேசில வெங்கும் பொழிந்தது கண்டீர்
—விழிக்
....
கோணத்தைக் கொண்டு நிலவைப் பிடித்தாள். —பாரதியார்.

பழைய காங்கிரஸும் காந்தியும்

டாக்டர். தி.சே.சௌ. ராஜன்

"என்ன டாக்டர், காங்கிரஸுக்குப் பிரதிநிதிகள் தேர்தல் செய்து பட்டியல் அனுப்பும்படி கடிதம் வந்திருக்கிறது. கூட்டம்போடத் தேதியும் நேரமும் குறிப்பிட்டு விளம்பரம் செய்தேன். என்னைத் தவிர வேறு ஒரு பிராணிகூடக் கூட்டத்திற்கு வரவில்லை. இப்படி இருக்கும் இந்த ஊரிலிருந்து காங்கிரஸ் பிரதிநிதிகள் எப்படி அனுப்ப முடியும்? உங்களுக்குப் பிரதிநிதிப் பத்திரம் கொடுக்கிறேன். நீங்களாவது போய் வாருங்கள்" என்று புகையிலை அடைத்துக்கொண்டிருக்கும் வாயில் எச்சில் ததும்பப் புன்சிரிப்புடன் ஸ்ரீமான் ராதாகிருஷ்ணையர் ஒரு நாள் சாயங்காலம் தெருவில் போய்க்கொண்டிருந்த என்னிடம் சொன்னார். ராதாகிருஷ்ணையர் ஒரு பி.எ., பி. எல். அவர் ஒரு வக்கீல் என்று சொல்லத் தேவையில்லை. நல்ல குணமுள்ளவர். தாழ்ந்த குரலில் பேச அவருக்குத் தெரியாது. வசீகர முகமுள்ளவர். திருச்சி ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்குச் செயலாளர். அதற்கு அறிகுறியாகக் காங்கிரஸின் சொத்து என்று சொல்லக்கூடிய ஒரே ஒரு நோட்டுப் புத்தகத்தைக் கையில் தாங்கிக்கொண்டு சாயங்கால நேரத்தில் திருச்சி டவுன் ஹாலை நோக்கிப் போய்க்கொண்டிருப்பார்.

பெயரளவில் காங்கிரஸ் கமிட்டியென்று அந்தப் புத்தகத்தில் சில நண்பர்களின் பெயர்கள் வரைந்திருக்கும். வருஷத்திற்கு ஒரு முறை பிரதிநிதிகள் அனுப்பப் போடப்பட்ட கூட்டமும், தேதியும், பிரசன்னமாகாத சில பிரதிநிதிகளைப் பொறுக்கி எடுத்த ஜாப்தா ஒன்றும் காணப்படும். நான் முதல் முதலாக இந்த அரிய கிரந்தத்தைப் பரிசிலனை செய்தது 1914-ஆம் வருஷத்தில்தான். அப்பொழுது காங்கிரஸ் சபை நிதானக் கட்சியாருடைய ஆதிக்கத்தில் இருந்தது. அவர்கள் கொள்கைக்கு உடன்பட்டவர்களே பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுக் காங்கிரஸுக்குச் சென்று நடவடிக்கைகளில் கலந்துகொள்ளலாம். பிரதிநிதிகளாகச் செல்வதற்கு முன்பு உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்துச் செய்த பிறகுதான் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். இந்த நிலையில் நானும் ஓர் உறுதிமொழிப் பத்திரம் ராதாகிருஷ்ணையரிடமிருந்து பெற்று, சென்னையில் நடக்க இருக்கும் அவ்வருஷத்திய காங்கிரஸுக்குப் போக முடிவு செய்தேன்.

நிதானக்கோஷ்டியாருடைய அரசியல் கோட்பாடுகளை அறவே வெறுக்கும் மனப்பான்மையுடைய நான், உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திட இசைந்தது என் கொள்கைக்கு ஒரு குறைவு. எனினும் காங்கிரஸில் சேர்ந்து அதை என் மனத்திலுள்ள தேசவிடுதலைக்கான சுதந்தரம் பெறும் கட்சியாக மாற்றவேண்டுமென்பதற்காகவே சேர்ந்தேன். என் போன்றவர்கள் அநேகர் பிரதிநிதிகளாகவே வரவும் இசைந்தார்கள். ஆனால் அந்தக் காலத்தில் உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்டு வருஷம் ஒருமுறை காங்கிரஸ் நடக்கும் இடங்களுக்குப் போவதைத் தவிர வேறு அரசியல் தொண்டு ஒன்றும் இராது. காங்கிரஸிலும் பேச்சு வன்மை ஒன்றேதான் பலருக்குப் புகழும் பெருமையும் அளித்தது. நல்ல சொற்பொழிவாளர்கள் பேசுவதை எதிர்பார்த்துக் கூட்டம் காத்துக்கொண்டிருக்கும். நல்ல பிரசங்கிகளே தேசீயத் தலைவர்களாக விளங்கினார்கள். கேட்பவர் மனம் குளிர நல்ல ஆங்கிலத்தில் அழுத்தந்திருத்தமாகப் பேசுபவர்கள், பெரிய தொகை நன்கொடை அளித்தவர்கள், ஹைகோர்ட் ஜட்ஜ்கள், பெரிய சர்க்கார் அதிகாரிகள் இவர்கள் காங்கிரஸ் மேடையில் அமர்ந்து காட்சி கொடுத்த காலம் அது. சென்னைக்குப் பல காரணங்களையொட்டி மக்கள் திரள் திரளாக டிசம்பர் மாதக்கடைசியில் கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களில் வந்து கூடினார்கள். அநேகர் சென்னையிலேயே பிரதிநிதிகளாகச் சேர்ந்துகொண்டார்கள்.

கல்கத்தாவில் ஸொலிஸிட்டர் வேலையில் ஈடுபட்டிருக்கும் பூபேந்திரநாத் வசு தலைமை வகித்தார். நடை, உடை, பாவனை, பேச்சு எல்லாம் ஆங்கிலமயம்.

அவர் ஆங்கிலப் பிரசங்கம் மிகவும் அருமையாக இருந்தது. தீர்மானங்கள் எல்லாம் ஆங்கிலத்தில்தான். தலைவரின் கருணையினாலும், தயவாலும் ஒன்றிரண்டு தமிழ்ப் பிரசங்கங்களுக்கும் இடம் கிடைத்தது. தொண்டர்படைத் தலைவரின் தயவால் எனக்குக் கேட்கக்கூடிய தூரத்திற்குள் இடம் கிடைத்தது. அந்தக் காலத்தில் ஒலி பெருக்கி முதலிய வசதிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. நன்றாக உரக்கக் கதறக் கூடியவர்களின் பிரசங்கந்தான் கவனிக்கும்படி இருந்தது. "இன்று பிற்பகல் பாபு சுரேந்திரநாத் பேசுவார்" என்று விளம்பரம் செய்தால் அதற்காகக் கூட்டம் அதிகமாக வரும். எல்லாம் பேச்சுப்போட்டிக் களஞ்சியமாக விளங்கியது. தீர்மானங்கள் வழக்கம்போல எல்லா விதமான கோரிக்கைகளுடன், ராஜபக்திப் பிரமாணத்துடன், பேசி நிறைவேற்றப்பட்டன. காங்கிரஸ் நடவடிக்கைகள் ஒவ்வொரு பத்திரிகையிலும் அதனதன் போக்கிற்குத் தகுந்தபடி பிரசுரமாகி, ஒரு வாரத்திற்குப் படிப்பவர்களின் சிந்தனைக்கு உணவு கொடுத்தன.

இந்தக் காங்கிரஸ் நடவடிக்கைகளைக் கவனித்த பிறகு இதனால் பொதுமக்களுக்கும் தேசத்திற்கும் அதிக நலன் ஏற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை. அடிமைப்பட்டிருக்கும் ஒரு கூட்டத்தாருக்கு இன்றியமையாத சிற்சில சங்கடங்களை விளம்பரப்படுத்தவும், அதிகார வர்க்கத்தினர் மனத்தில் நம் நாட்டினரிடத்துத் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கை ஒருவாறு வலியுறுத்தவும் பயன்பட்டதாகவே எனக்குத் தோன்றியது. காங்கிரஸ் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தவர்களில் பலர் அரசாங்கத்தாரிடம் பெரிய பதவிகளைப் பெற்றார்கள். அப்பதவிகளுக்கு அவர்கள் உரியவர்களல்ல என்று சொல்ல முடியாது. நம் சமூகத்தினரிடையில் நன்மதிப்பும் செல்வாக்கும் பெற்றவர்களே காங்கிரஸ் தலைவர்களாக அக்காலத்தில் மதிக்கப்பட்டார்கள். அதுமாத்திரம் அல்ல. சர்க்காரிடத்தில் களங்கமற்ற பக்தியும் மதிப்பும் பெற்றவர்களாக இருந்தால்தான் இந்தப் பதவிக்கு விரும்பி எடுக்கப்பட்டார்கள். சர்க்காரிடத்து இவர்களுக்கு மதிப்பு எவ்வளவு அதிகமாக இருந்ததோ அதற்குத் தகுந்தபடி காங்கிரஸ் தீர்மானங்களும் நல்ல செல்வாக்குடையனவாக இருக்கும் என்னும் எண்ணமும் காங்கிரஸை நடத்துபவர்களின் மனத்தில் குடிகொண்டிருந்தது. மக்களைத் தட்டி எழுப்பி, அவர்கள் உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் தேசிய உணர்ச்சியைத் தேச விடுதலையின் சார்பாகக் கிளப்பி உருப்படுத்தக்கூடிய சக்தி காங்கிரஸுக்கு இல்லை. முறையிடும் துறையிலே, அதிகாரிகளுடைய மனம் நோகாமல், நியாயத்தைப் பக்குவமாக எடுத்து உணர்ந்து வாதாடும் தோரணையைக் கைப்பற்றி வந்தது. ஆங்கிலம் படித்தவர்களைத் தவிர மற்றவர்கள் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு முடியாமற் போய்விட்டது. காங்கிரஸில் சேர்ந்தவர்களில் பெரும்பாலோர் வழக்கறிஞர்களாகத் தொழில் நடத்தும் வக்கீல்கள். ஆங்கிலத்தில் பேசும் திறன் அவர்களுக்குத் தொழில் முறையில் ஏற்பட்டுவிட்டதால், காங்கிரஸ் நடவடிக்கைகளிலும், கோர்ட்டு நடவடிக்கைகளைப்போலவே விவாதித்து முடிவுகட்ட அந்த அநுபவம் அவர்களுக்கு உதவியாக இருந்தது. மேலும் அந்தக் காலத்தில் வக்கீல் தொழில் சர்க்காருக்கு அடிமைப்பட்டு, ஓர் எஜமானனுடைய நன்மதிப்புக்கு ஈடுபட்டு நடத்தும் தொழிலாகக் கருதப்படவில்லை. தேச சேவைக்கு உரிய சுதந்தரம் பொருந்திய தொழிலென்றே எல்லோரும் அதைப் போற்றி வந்தார்கள். ஆனால் இந்த எண்ணம் இன்று முற்றும் மறைந்துவிட்டது. அதிகாரிகளோடு போர் புரியும் முறையில் காந்திஜி சட்டமறுப்பு இயக்கம் தொடங்கியவுடன் வக்கீல் தொழிலின் அடிமைத்தனம் வெட்ட வெளிச்சமாகிவிட்டது. சுதந்தர இயக்கம் வலுவடையவே வக்கீல்களின் தொகை காங்கிரஸ் இயக்கத்தில் மெலிவடைந்தது. வழக்கறிஞர்களாக இருந்தாலும், நீதிமன்றங்களைத் துறந்து ஏழைமக்களுக்காகத் தொண்டாற்றிய பெரியோர்களே காங்கிரஸ் இயக்கத்தை நடத்த முன்வரும்படியாயிற்று.

சென்னையில் நான் கண்ட முதல் காங்கிரஸ் எனக்கு ஏமாற்றத்தை அளித்தது. இதற்கு என் மனப்பான்மையே காரணம். தீவிர அரசியல்வாதியாக, புரட்சிகளை உண்டாக்கி, மக்களை ஒருமித்து எழும்படி செய்து, அந்நியர்களை நாட்டை விட்டு ஓட்டிச் சுதந்தரம் அடையவேண்டுமென்ற கட்சியில் சீனமயில் இருக்கும்பொழுது ஈடுபட்ட எனக்கு இந்த முடிவு ஏற்பட்டது ஆச்சரியமல்ல. ஆனால் நாட்டின் நிலைமையைக் கருதாது, ஒரு சிறிய கொள்கையை மட்டும் சிந்தித்து, மனக்கோட்டை கட்டி வருந்துவதில் பயனில்லை. அதற்கேற்ற

தியாகத்தை நான் மட்டும் செய்தால் போதாது என்ற ஓர் எண்ணம் உண்டு. உண்மையில் எனக்குள்ள பயங்கொள்ளித் தனத்தினால்தான் இந்த மனோபாவம் உண்டாயிற்று. சுதந்தரம் வேண்டுமென்றால் உயிரையும் தியாகம் செய்து அதைப் பெறவேண்டும். தியாகம் செய்யும் பொழுது நான் ஒருவன் மட்டும் செய்தால் காரியம் சித்திபெறுமா என்று எண்ணுவது கோழைத்தனம். காந்தியடிகள் அடிக்கடி சொல்வதுபோல, ஒவ்வொருவனும் தான் விரும்பும் பொருளை அடைய, சகலவிதமான தியாகத்தையும் செய்யவேண்டும். தன்னைப்பற்றிய மட்டில் தனது பரிபூரணத் தியாகமே தனக்கு விடுதலை அளிக்கும் என்கிற தத்துவத்தின் உண்மை ஒப்பற்ற ஒரு வீரன் மனத்தில்தான் உதிக்கும். போரில் ஈடுபடும் ஒவ்வொரு வீரனும் நான் ஒருவன் மட்டும் இறந்தால் ஜயம் கிடைக்குமா என்று நினைத்தால் யுத்தத்தின் முடிவு எப்படியாகும் என்பதை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். எந்தக் கிளர்ச்சியும் ஒரே காலத்தில் எல்லோர் மனத்திலும் உதயமாவதில்லை. புத்திக் கூர்மையும் உணர்ச்சியும் பொருந்திய ஒருவன் மனத்தில் தோன்றும் புனித எண்ணங்களே பெருவெள்ளமாக மாறி, மனித சமூகத்தைப் புரட்டி அமைக்கும். அந்த மனிதனது தியாகத்தின் பயனைப் பலர் தியாகம் செய்ய முன் வருகிறார்கள். ஆற்றைக் கடந்து அக்கரை சேர விரும்பும் ஒவ்வொருவரும், தண்ணீரைக் கண்டு மயங்கி நீந்த முற்படாவிட்டால் தண்ணீரை எப்படித் தாண்டுவது? அது போன்றனவே உலக வியவகாரங்களும்.

உலகப்பற்று என்பது எல்லா மானிடர்களுக்கும் இயற்கை. இந்தப் பற்றுதல் பலவிதமாக உலாவுகிறது. உயிரின்மேல் பற்றுதல் எல்லோருக்கும் உண்டு. இது குடும்பவாழ்க்கையின் மூலம், சமூகத் தொடர் மூலம், தேசபக்தியின் மூலம், விரிவடைகிறது. அப்படி விரிவடையும் பொழுது படிப்படியாகச் சுயநலம் குறைந்து தியாக உணர்ச்சி மேலிடுகிறது. ஒரு தனி மனிதன் தன் ஆத்மா முக்திபெறும் பொருட்டுச் சர்வசங்க பரித்தியாகம் செய்கிறான். பற்றுக் குறையக் குறைய, அவனது கோரிக்கை ஈடேறுகிறது. தன் தனி ஆத்மாவின் நலத்துக்கே இவ்விதத் தியாகம் வேண்டியிருந்தால், ஒரு நாட்டின் விடுதலைக்கு எவ்வளவு அரும் பெரும் தியாகங்கள் செய்யவேண்டும்! அதிலும் சோனி, சப்பை, குருடு, நொண்டியாக இல்லாமல், மனத்திடமும், அஞ்சா நெஞ்சமும் உடையவராகி, தியாகத்தின் நிமித்தம் தம் உயிரை உள்ளங்கையிலேந்தி, பலிகொடுக்கப் போட்டிபோடும் வீரர்கள் பலர் வேண்டும். அப்படியிருக்க என் போன்றவர்கள் கோடிக்கணக்காக இருந்தும் என்ன பயன்? நமது சக்திக்கு ஏற்ற பலன்தான் நமக்குக் கிடைக்கும்.

உலகெல்லாம் சுற்றித் திரிந்து தமிழ் நாட்டுக்கு நான் திரும்பியதும் வைதிகப் போர் தொடங்கிவிட்டேன். அதிலும் நிதானமாகவே போர் புரிய முயன்றேன். முயற்சி பலிக்கவில்லை. சமூகத்தை விட்டு வெளியேறுவது சுலபமாகத் தோன்றியது. அப்படிச் செய்வதனால் சமூகம் முன்னேற மாட்டாது. அதனுள் இருந்து நாளடைவில் இடைவிடாது போராடிச் சற்றுத் தாமதமாகவே சிறிது பலன் உண்டானதாக நினைக்க இடம் ஏற்பட்டது. இவ்வ போன்ற எண்ணங்களே அரசியலிலும் என் மனத்தில் குடிகொண்டன. எனினும் என்னுடைய செய்கையே எனக்குப் பிடிக்கவில்லை.

1914-ஆம் வருஷத்தில் காந்திஜி சென்னைக்கு வந்தார். தென் ஆப்பிரிக்காவில், ஜர்மனியுடன் நடந்த மகாயுத்தத்தில் ஆங்கில அரசாங்கத்திற்கு உதவிபுரிந்தார். காயம்பட்டவர்களுக்கு உடன் உதவி செய்யும் இந்தியப் படையொன்று திரட்டி, அதில் தாமும் பங்கெடுத்து உதவி, இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கே நோய் வாய்ப்பட்டுப் படையில் சேரமுடியாமல், அங்கிருக்கும் டாக்டர்கள் அபிப்பிராயத்திற்கு இணங்க, அந்தக் குளிர் தேசத்தை விட்டு இந்தியா வந்து சேர்ந்தார். உடல் நிலை குணமடைந்தவுடன் தம் அரசியல் குருவாகிய கோபால கிருஷ்ண கோகலேயின் ஸ்தாபனமாகிய "இந்திய ஊழியர்கள் சங்க"த்துக்குச் சென்று பார்வையிட்டு விவரம் தெரிந்தவுடன், அந்த ஊழியத்தின் நிபந்தனைகளுக்கும் தம் மனப்பான்மைக்கும் நீக்கமுடியாத அடிப்படையான மாறுபாடுகள் இருக்கக் கண்டு, அதில் சேராமல் தமது விருப்பத்துக்கும் தத்துவங்களுக்கும் இடையூறு இல்லாமல் வேலை செய்ய ஒரு தனி ஸ்தாபனம் நிறுவ முடிவு செய்து இந்தியாவின் பல பாகங்களைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார். இந்தச் சுற்றுப் பிரயாணத்தின்பொழுது தாமும் தம் மனைவியுமாகச் சென்னை வந்து சேர்ந்தார்.

அப்பொழுது அவர் "மகாத்மா" ஆக வில்லை. தென் ஆப்பிரிக்காவில் சத்தியாக்கிரகம் செய்து, தலைவர் ஸ்மட்ஸ் துரையுடன் அங்கே குடியேறியுள்ள இந்தியர் விஷயமாக உடன்படிக்கை செய்து கொண்ட தேசபக்தர் அவர் என்பது, அயல் நாட்டில் உள்ள இந்தியரின் விஷயங்களைக் கவனித்துவரும் சிலருக்கே தெரியும். நாட்டுப் பொதுமக்களுக்கு அவரைப் பற்றி ஒன்றுமே தெரியாது. சென்னையில் அவரை அறிந்த நண்பர்கள் வெகு சிலர். அவர்களுள் ஸ்ரீமான் ஜி. ஏ. நடேசன் காந்திஜிக்கு நண்பர். அப்போது சேலத்தில் வக்கீலாக இருந்த சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியாரைப் பெயரளவில் கடிதப் போக்குவரத்து மூலம் தெரியும். சென்னையில் ஜி. ஏ. நடேசன் வீட்டில் காந்திஜி தங்குவதாக ஏற்பாடு ஆயிருந்தது. நடேசனும் அவருடைய நண்பர்கள் சிலரும், பத்திரிகை நிருபர்களும் சென்னை ஸெண்ட்ரல் ஸ்டேஷனில் அவரை வரவேற்பதற்காகச் சென்றிருந்தனர். ஆங்கில உடை தரித்து, உயர்தர வகுப்பு வண்டிகளில் பிரயாணம் செய்யக்கூடிய பெரிய மனிதர் என்ற உணர்ச்சியினால், இச்சிறிய வரவேற்புக் கூட்டம் முதல் இரண்டாம் வகுப்பு வண்டிகள் நிற்கவேண்டிய இடத்தில் பிளாட்பாரத்தில் மாலையும் கையுமாகக் காத்திருந்தது. வண்டி வந்து நின்றதும் அவர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள். காந்திஜியைக் காணவில்லை. ஆகையால் வண்டிகளினின்று இறங்கும் பிரயாணிகளை உற்றுக் கவனிக்க அங்கும் இங்கும் ஓடினார்கள். கடைசியாக மூன்றாவது வகுப்பில் அடைந்து கிடந்த பிரயாணிகளுடன், மூட்டையும் முடிச்சுமாக, தாமும் தம் மனைவி கஸ்தூரிபாயும் இறங்குவதைக் கண்டு முதலில் திடுக்கிட்டார்கள். பிறகு வியப்படைந்தார்கள். தமது இனிய, சிரித்த முகத்துடன் காந்திஜி அவர்களுடன் சிறிது நேரம் பேசிவிட்டு, நடேசனுடைய காரில் வீடு சேர்ந்தார். ஆங்கில உடை இல்லை. அசல் குஜராத்திப் பனியா தலைப்பாகை, பொத்தலில்லாத பழைய காலத்து நாடா கட்டி முடியும் ஒரு ஜிப்பா, அரையில் கச்சம் வைத்துக் கட்டிய வேஷ்டி, யக்ஞோபவீதமாக அணிந்திருக்கும் யோக வேஷ்டி - இவற்றுடன் காட்சி அளித்தார். தம் சாமான்களை அவரும் அவர் மனைவியும் எடுத்துக் கொண்டு கூலிகளின் உதவியில்லாமலே வண்டியேறினார். அன்று சாயங்காலம் சென்னைப் பத்திரிகைகளில் காந்திஜி வந்து இறங்கின விநோதம் பிரசுரிக்கப் பட்டிருந்தது.

அன்று பிற்பகல் நான் ஜி. ஏ. நடேசன் வீட்டில் காந்திஜியைச் சந்தித்தேன். அவருக்கு என்னை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. லண்டன் நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்தவே பிறகு என்னை அறிந்து கொண்டார். "நான் இனிமேல் தென்னாப்பிரிக்கா போகப்போகிறதில்லை. தாய் நாட்டில் விடுதலையின்பொருட்டு உழைக்க எண்ணி வந்துவிட்டேன். சத்தியாக்கிரக தத்துவத்தைக் கடைப்பிடித்து என் வாழ்நாளை நடத்துவதையும், என் அஹிம்ஸா முறைகளை நம் நாட்டினருக்குப் பரப்புவதையும் என் பணியாகக் கொண்டிருக்கிறேன். அஹமதாபாத் நகரத்துக்கு அருகிலுள்ள ஸாபர்மதி நதிக்கரையில் ஆசிரமம் நிறுவித்தர ஒரு நண்பர் இசைந்திருக்கிறார். அங்கே சென்று தங்குவதற்கு முன்பாக இந்தியா முழுதும் சுற்றிப் பார்த்துவர எண்ணி வந்திருக்கிறேன். உனக்கு என்னுடன் உழைக்கப் பிரியம் இருந்தால், என்னோடு ஆசிரமத்தில் வந்து தங்கி வேலை செய்யலாம்" என்றார். எனக்கு இருக்கும் கஷ்டங்களை அவருக்கு எடுத்துச் சொன்னேன். "தாயை இழந்த மூன்று மக்கள் பாதுகாப்பொரின்றி இருக்கிறார்கள். அவர்கள்பால் என் கடமையைச் செய்யவேண்டும். அதற்குப் பணம் தேவை. ஆகையால் தொழில் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. எனினும் தாங்கள் நாட்டின் பணியேற்று வேலை செய்யும் காலத்தில் என்னைச் சேர விரும்பினால் அப்பொழுது எவ்விதமான தியாகத்துக்கும் நான் முன்வருகிறேன்" என்றேன். எனது உறுதிமொழியை அன்புடன் ஏற்றுக்கொண்டு எனக்கு விடை அளித்தார். அன்று சாயங்காலம் சென்னைப் பிஷப் தலைமையின்கீழ் ஒய். எம். ஸி. ஏ. கட்டிடத்தில் தென் ஆப்பிரிக்கா இந்தியர் நிலைமையைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். பிறகு அஹமதாபாத் திரும்பி விட்டார். சென்னையைப்பற்றிய மட்டில் காந்திஜி விஜயம் ஒரு சிறிய தினசரிச் சம்பவமாக இருந்தது.

ரிஷி கர்ப்பம்

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

“மூச்சு” என்னும் பத்திரிகைக்கு நான் உதவி ஆசிரியராக வந்து, மூன்று வருஷங்கள் ஆகியிருந்தன. ஒரு நாள், பத்திரிகை ஆசிரியரான மூர்த்தி, திடீரென்று என்னைக் கூப்பிட்டனுப்பினார். இதழ் வெளியாகி இரண்டு நாட்கள் ஆயின. எழுத்தாளர்களுக்குச் சம்மானமும் அன்றுதான் அனுப்பியாயிற்று. ஆகவே, அடுத்த இதழ் விஷயமாகத்தான் அவர் கூப்பிட்டிருக்க வேண்டும் என்று ஊகித்தேன்.

ஆசிரியர் பீடத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்த மூர்த்தி என்னைக் கண்டதும் புன்முறுவலோடு வரவேற்று, “இப்படி உட்காருங்கள், மிஸ்டர் கீர்த்தி” என்று எனக்கு ஆசனம் தந்தார்.

நான் அசையாமல் நாற்காலியில் அமர்ந்து அவரைக் கூர்ந்து பார்த்தேன். தமக்கு உலகிலேயே வேறு ஆப்தன் இல்லை போலவும், தம் இருதயத்திலுள்ள ரகசியங்களை யெல்லாம் என்முன்னால் கொட்டிவிட விரும்புபவர் போலவும் அவர் தோற்றினார். ஷட்ஜத்திலே ஆரம்பிக்கும் சங்கீதத்தைப்போல மெதுவாகப் பேச்சைத் தொடங்கினார்: “கேளுங்கள், கீர்த்தி. இனி நாம் விதவிதமான விசித்திரக் கதைகளை எழுதவேண்டும். இன்றை உலகம் ஒரே போட்டிமயமாக - பந்தய மைதானமாக - இருக்கிறது. எல்லாம் அவசரம்; ஓட்டம். கடிகார முள்ளோடு உலகம் ஓடுகிறது. இந்த ஓட்டத்தில் ஒரு செகண்டு பின் தங்கியவன் வாழ உபயோகமற்றவனாகிவிடுகிறான். உங்கள் பேனா முனையினால் நீங்கள் ஓர் இரவில் பல மாய உலகங்களைச் சிருஷ்டித்துவிடவேண்டும். நொடிப் பொழுதில் வீசி மறையும் மின்னல் அகில உலகத்தையும் ஒளிமயமாக்கிச் செல்வதுபோல, உங்களுடைய நிமிஷநேர சிருஷ்டியில் உலக உண்மைகள் ஒளிவீச வேண்டும்...”

“சரிதான், உங்கள் அவசரம் எனக்குப் புரிகிறது ஒவ்வோர் இரவுக்கும் ஒரு கதை எழுதிவிடவேண்டும் என்கிறீர்கள். ரிஷி கர்ப்பந்தான்! ஆனால், உலகத்தைப் பாராமல், செக்குமாடுபோல நாள் முழுதும் உங்களைச் சுற்றியே சுழன்றுகொண்டிருந்தால் எங்கிருந்து புது அநுபவங்கள் வரும்? கற்பனை எப்படி உதயமாகும்?”

“இன்றையிலிருந்து எத்தனை நாளைக்கு வேண்டுமானாலும் உங்களுக்கு விடுமுறை தருகிறேன். நீங்கள் எங்கு வேண்டுமானாலும் சுற்றிப் புது அநுபவங்களைப் பெற்று அருமையான கதை எழுதிக் கொடுங்கள். அதுவரை என் முகத்தில் விழிக்க வேண்டாம்” என்று ஆத்திரத்தோடு கூறினார். உடனே மானேஜருக்கு எனக்கு வேண்டிய அளவு பணம் கொடுக்குமாறு கடிதம் எழுதிப் பையனிடம் கொடுத்தனுப்பினார். நான் அவரிடம் விடைபெற்று வீடு திரும்பினேன்.

* * *

கல்கத்தாவுக்கு டிக்கெட் கிடைக்கவில்லை. பஞ்சத்தினின்றும் தப்பிய நண்பர்களையாவது பார்த்துவரலாம் என்ற என் எண்ணத்தில் மண் விழுந்தது. இரண்டாம் வகுப்புக் ‘கௌண்டரி’ல் இருந்த குமாஸ்தா, “ஸார், எங்களுக்கு டிக்கெட் கொடுக்க உத்தரவு இல்லை. ஒரு காலத்தில் நாங்களே, ‘புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்துப் புண்ணிய மூட்டைகளைக் கட்டுங்கள்; புனித நதிகளில் நீராடி உங்கள் பாவ அழுக்கைக் கழுவுங்கள்; நாட்டின் இக்கோடியிலிருந்து அக்கோடிவரையில் வியாபாரம் செய்யுங்கள்; ஒன்றும் இல்லாவிட்டால், எங்கள் ரெயிலில் பிரயாணம் செய்து, பிழைப்புக்கு வேண்டிய பலவழிகளைக் கற்றுக்கொள்ளுங்கள்’ என்றெல்லாம் விளம்பரம் செய்துவந்தோம். இன்று ‘பிரயாணம் செய்யாதீர்கள்’ என்று சொல்ல வேண்டிய காலமாக இருக்

கிறது. நாங்கள் என்ன செய்வது?'' என்று நீண்ட பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். அவருடைய சட்டைப்பையில் கனத்தை ஏற்றி, டிக்கெட் வாங்க எனக்கு மனமில்லை. ''பெஜவாடாவுக்கு ஒரு டிக்கெட் கொடுங்கள், போதும். அங்கிருந்து பிறகு பார்த்துக் கொள்கிறேன்'' என்றேன். டிக்கெட் பெற்று வண்டியில் அமர்ந்தேன். இரண்டாம் வகுப்பிலும் கூட்டம் இல்லாமலில்லை.

மெயில் புறப்பட்டது. அன்றெல்லாம் அலைந்த ஓய்ச்சலில், கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். 'பேஸின் பிரிட்ஜை'த் தாண்டி, வண்டி பாய ஆரம்பித்தது. 'ஆசிரியர் மூர்த்தி சொன்னது உண்மையே. எல்லாம் அவசரம்; ஓட்டம்; ரிஷி கர்ப்பம். டிரைவருக்குப் பயந்து, இந்த வண்டி ஒரே இரவில் பிசாசு போல ஓடி நூற்றுக்கணக்கான மைல்களைத் தாண்டிவிட வேண்டும். விமான நிலயத்திலிருந்து விமான ஓட்டிக்கு உத்தரவு வருகிறது: பொழுது விடியுமுன் அவனுடைய விமானம் இலங்கையில் இருக்க வேண்டும். ஒரு 'காம்பி'ல் வீரர்கள் நிச்சிந்தையாகத் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். படைத் தலைவனிடமிருந்து திடீரென்று கட்டளை பிறக்கிறது. 'திமு திமு' வென்று எழுந்து அந்தப் படை அணிவகுத்துச் செல்கிறது. சில மணி நேரத்தில் எதிரியின் சைனியம் சின்ன பின்னமாகிவிடுகிறது. காலவேகத்தோடு பூமிகோளம் சுழலுகிறது. போராட்டங்களின் வேகத்தில் வாழ்க்கை மாறுகிறது..' என்று நினைக்கலானேன். வண்டியின் ஓட்டம், 'ரிஷி கர்ப்பம், ரிஷி கர்ப்பம்' என்று தாளமிடுவதுபோல இருந்தது. ஆகாயத்தில் திரயோதசிச் சந்திரன் உதயமாகியிருந்தான். பனியோடையில் 'மெயில்' மிதந்து ஓடுவதுபோலத் தோற்றியது. 'இந்தக் கிரகங்கள் மட்டும் என்ன? அவற்றின் ஓட்டத்திலிருந்து, உலக மாறுதல்களையும் கிரகணங்களையும் வான சாஸ்திரிகள் எவ்வளவு சரியாகக் கணக்கிட்டு விடுகிறார்கள்! அந்த ஓட்டத்தில் ஏதாவது ஒரு கிரகம் ஒரு ஸெகண்டு தவறினால், அவ்வளவுதான்! அண்ட கோளங்கள் உருளும்; மகாப்பிரளயம் வந்துவிடும்!' என்று எண்ணிக்கொண்டிருக்கையில் என்னையும் அறியாமல் கண் அயர்ந்தேன்.

வண்டி ஏதோ ஒரு ஸ்டேஷனைத் தாண்டி விரைந்து சென்றுகொண்டிருந்தது. நிலவு என் கண்ணின் புறமாக ஜில்லென்று வீச, கண் விழித்தேன். என் தலைப்புறம் மெத்தென்று இருந்தது. ஒரு சுகந்தக் குவியலின் நடுவே இருக்கும் அநுபவம் எனக்கு உண்டாயிற்று. பலவருஷங்களாக நான் பெற ஏங்கியிருந்த வெப்பத்தை உணரலானேன். இரண்டு கண்களையும் விழித்துப் பார்த்தேன்: ஒரு சுந்தரியின் மடியில் நான் கிடந்தேன். கருமுகிலையொத்த அவள் கூந்தல் முன்புறத்தில் இரு மருங்கிலும் நாகம்போல நெளிந்து அலையலையாக விளைந்திருந்தது. நீண்ட கரிய பின்னல் மார்பினிடையே தொங்கியது. அதன் உச்சியில் வெண்மலர்கள் தலை நீட்டிப் பார்த்தன. சந்திர மண்டலத்தில் அவள் வதனத்தைக் கண்டேன். அந்தப் பேரொழிலைக் கண்டு கண் கூசியது. மீண்டும் கண்ணை மூடிக்கொண்டேன். அவளை எங்கோ பார்த்த ஞாபகமாக இருந்தது. 'எங்கே? போன ஜன்மங்களிலா, அழகிய ஓவியங்களிலா, அல்லது இந்திரஜால மாயத்திலா?' நான் இந்த நினைப்பில் இருந்தபோது, ''நான்தான்; பயப்படாதீர்கள்!'' என்றாள் அவள். யுகயுகாந்தரங்களாக, ஜன்ம ஜன்மாந்தரங்களாக, வாழ்வின் கேளிக்கைகளிலும் துயரங்களிலும் இந்தக் குரலைக் கேட்டிருப்பது போன்ற அநுபவம் எனக்கு உண்டாயிற்று; அவள் வசத்தில் என்னைப் பறி கொடுத்தது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று.

வண்டியில் என் எதிரே பலர் இருந்தார்கள்: கிழவர்கள்; இளைஞர்கள்; யுவதிகள். இந்தக் கோலத்தைப் பார்த்து அவர்கள் என்ன நினைக்க மாட்டார்கள்?

மீண்டும் கண் விழித்து அவர்களைப் பார்த்தேன். எல்லோரும் ஆச்சரிய உலகத்தில் இருந்தார்கள். அந்த மங்கையைப் பார்த்தேன். துன்பத் தீயில் கலங்கி மாற்றேறிய முகம். உயர்ந்த வம்சத்தில் பிறந்து வழி வழியாக வந்த கலைப்பண்பு ஜ்வாலை வீசியது. கண்களில் அற்புதமான தூய்மை. நம்பிக்கையே உருவாக அவள் வீற்றிருந்தாள். அவள் மடியில் அல்ல, நம்பிக்கையின் மடியில் நான் கிடந்தேன். அதற்குத் துரோகம் செய்ய என் உள்ளம் இடங் கொடுக்கவில்லை. ''பெஜவாடாவில் நாம் இறங்கவேண்டும்'' என்று மெல்ல முணுமுணுத்தேன். 'சரி' என்பதுபோல, அவள் தலை அசைத்தாள்.

மறுபடி சுற்றுப் புறத்தைப் பார்த்தேன். ஆச்சரியம் [illegible] விட்டது. அவர்கள்

காண நினைத்திருந்த மாய உலகம் மறைந்து விட்டது; ஆனால் நான் மட்டும் மாய உலகத்திலேயே இருந்தேன்.

'புது அநுபவம் வேண்டும் என்று சொன்னாரே உன் ஆசிரியர்; இதை எழுதித் தொலை' என்றது மனம்.

வேதாந்தம் பேசியது மற்றோர் எண்ணம்: 'நீ நைஷ்டிகப் பிரம்மசாரியாக இருக்க விரும்பினாயே; உனக்கு இது சோதனை. ஹநுமான் சீதையைத் தேட ராவணனுடைய அந்தப்புரத்தில் புகுந்தார்; காணத்தகாத காட்சிகளைக் கண்டார். புதுமையைத் தேடி நீ இந்த மெயிலில் நுழைந்தாய். அநுபவி புது விஷயத்தை. "பெண்மை நலத்துக்கு அணி என்ப நாணம்" என்று அந்நாளில் படித்தாயே. இந்த அநுபவத்தில் நாணம் மங்கியிருக்கிறது; ஆகையால் பெண்மை நலம் இல்லை என்று நீ சொல்வாயா?'

'உண்மையைக் காணச் செய்வதுதான் கல்வி. உண்மையைக் காண்பதற்குப் பொறுமை வேண்டும்' என்று உபதேசித்தது, காதலி சொல்லில் பிறந்த உயர்மதம்.

குறித்த நேரத்தில் 'மெயில்' பெஜவாடா ஸ்டேஷனுக்கு வந்து நின்றது. எனக்கு முன்பே எழுந்து, என் கைப்பையை எடுத்துக்கொண்டு அவள் கீழே இறங்கினாள். மகுடியின் காந்தார லயத்தில் ஒன்றிப்போன நாகத்தைப்போல, நான் அவள் பின்னே சென்றேன்.

அந்த நிலவில், அவள் ஸ்டேஷனை விட்டு நதித்தடத்தை நோக்கிச் சென்றாள். அவளிடத்தில் இருந்த ஒரு கவர்ச்சி - என்னிடம் குடிகொண்டிருந்த ஒரு மயக்கம் - என்னை இழுத்துச் சென்றது.

தனிமையில் அவளைப்பற்றிய எல்லாத் தகவல்களையும் ஒரே மூச்சில் கேட்டுவிட வேண்டும் என்ற ஆவல் என் மனத்தில் குமிழியிட்டது. வாயினின்று, "நீ—?" என்ற ஒரு வார்த்தைதான் வினாவாக வெளிப்போந்தது.

அவள் சற்றும் தயங்கவில்லை. பவழத்தில் பூத்த முத்துப்போலப் புன்னகை புரிந்து, "நான் சாவித்திரி, நீங்கள் சத்தியவான்" என்றாள்.

"அப்படியானால், என்னைக் காக்கத்தான்—"

"அல்ல; என்னைக் காத்துக்கொள்ள. நமக்குக் குறுக்கே நிற்கும் யமனிடமிருந்து உங்களை விடுவித்துத்தான்."

"யமனா? யார்?"

கோலமிட்டதுபோல் சென்ற பாதை வழியே அந்த மோகனாங்கி போய்க்கொண்டிருந்தாள். சட்டென்று கழுத்தை வளைத்து, விழிக்கோணத்தினால் என்னைக் கூர்ந்து நோக்கி, "நீங்கள் எப்போதாவது புனலூருக்கு வந்தது உண்டா?" என்றாள்.

நான் சரசரவென்று ஐந்து வருஷங்கள் பின்னால் நழுவினேன். ஓர் இனிய கனவு போல நிகழ்ந்த அந்தச் சம்பவங்கள் ஞாபகத்துக்கு வந்தன. "ஓ! உன் பெயர் மாலினி அல்லவா? இப்போது ஞாபகம் வருகிறது: அன்று ஒரு நாள் சாயங்காலம் நாம் உலாவப் போனோமே. ஐந்து வருஷங்கள் ஆகியும் நீ விவாகம் செய்துகொள்ளவில்லையா?" என்றேன்.

"காதல் என்பது ஆணின் வாழ்க்கையில் ஒரு பகுதி; ஆனால் பெண்ணுக்கோ காதல் ஒன்றுதான் முழு வாழ்க்கை!"

ஒரு மகாகவியின் வாக்கை அவள் தக்க சந்தர்ப்பத்தில் உபயோகித்தாள். ஐந்து வருஷங்களுக்கு முன்னால் நாங்கள் சந்தித்தோம்; ஒருவரை மற்றவர் விரும்பினோம்; வாழ்க்கையாற்றில் ஒன்றாக - இணையாக - நீந்தத் தீர்மானித்தோம். ஆனால், என் தாய் வற்புறுத்திய வரதக்ஷிணைப் பிரச்னை, அவள் சொல்லியதுபோல, யமனாகக் குறுக்கிட்டது. விவாகம் தடைப்பட்டது. நான் பிரம்மசர்ய விரதம் பூண்டேன். என்னை மாலையோடு பார்க்காமலே, தாய் இரண்டு வருஷங்களுக்கு முன் இறந்து போனாள். பளிச்சென்று எல்லா நிகழ்ச்சிகளும் என் ஞாபகத்துக்கு வந்தன.

கிருஷ்ணா நதியின் தடம் நல்லோர்களின் உள்ளத்தைப்போலப் பரந்திருந்தது. நடுவில் அன்னையின் கருணை வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. நிலவின் ஒளியில் அந்த க்ஷீரப் பிரவாகத்தில் என் மனம் கசிந்து உருகியது. ஆயினும் அதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு, "நான் விரதம் பூண்டிருப்பது உனக்குத் தெரியாதுபோல் இருக்கிறது?" என்றேன்.

அவள் துள்ளிக் குதித்து எழும்பி என் திண்டோள்களைப் பற்றினாள். கோபக்கண்களால் என்னைப் பார்த்தாள். கிருஷ்ணாவின் பால்வெள்ளமும் அவளுடைய கோபத்தால் கொதிப்பதுபோலத் தோற்றியது. "கவிமனத்தோடு நான் உங்களைத் தேடி வரவில்லை. 'பாரத நாட்டுப் பெண்மை என்றால் சகிப்புத்தன்மை; கண்ணீர்' என்று ஓரிடத்தில் ரவீந்திரர் கூறினார். எங்கள் சகிப்புத்தன்மையால், பிறந்த நாள்

முதல் சாகும் காலம் வரையில் நாங்கள் கண்ணீர் வடித்தே வருகிறோம். மலைகள் வடிக்கும் கண்ணீர் கடல் ஆகிறது; அந்தக் கடல், மலைகளுக்கு மீண்டும் வடிக்க நீரை வழங்குகிறது. ஆண்களின் அநியாயமோ இன்று எங்கள் சகிப்புத்தன்மையின் கடைசி எல்லையைத் தாண்டிவிட்டது. சிவபிரானைப் பெறத் தவங் கிடந்த பர்வத குமாரியைப்போல, ஐந்து வருஷங்கள் நான் உங்களுக்காகக் காத்திருந்தேன். சென்னையில் இருந்த என் தோழியின் மூலம் உங்களைப்பற்றிய தகவலை அடிக்கடி சேகரித்துவந்தேன். என் பெற்றோர்கள் பிறகு பல இடங்களில் எனக்கு வரன் தேடினார்கள். எந்த இடமும் எனக்குப் பிடிக்கவில்லை. எப்படிப் பிடிக்கும், மனம் உங்களிடத்தில் லயித்த பிறகு? என் உயிர் ஆசை நூலில் ஊசலாடிக்கொண்டிருந்தது. பயங்கொள்ளியாக இருந்து பயனில்லை; சிவனை மிதித்து நடனம் புரியும் காளிகையைப்போல, இனி மாறத்தான் வேண்டும் என்ற சங்கற்பத்தோடு பெற்றோர்களைச் சமாதானப்படுத்திவிட்டுக் கிளம்பினேன். உங்கள் பிரயாணத்தைப் பற்றி அறிந்து, ரெயிலில் தொடர்ந்தேன். எவ்விதத்திலாவது உங்களை மயக்கி வசப்படுத்தி அடைவது; இல்லாவிட்டால், இதோ அமுதப்பாலைச் சுரக்கும் அன்னையின் மடியில்—'' என்று அவள் கூறிய போது என் நெஞ்சம் நெகிழ்ந்தது. என் கை அவள் வாயை மூடியது.

அன்று மாலையில் நான் படித்த பத்திரிகைச் செய்தியொன்று கண்முன் நின்றது. இருபது வயசான இளம் பெண் ஒருத்தி, மதுரையில் குளத்தில் நீராட வந்தாள். அந்தப் பருவம் வரையில் அவளைக் கட்டுவோர் யாருமில்லை. படித்த கலைப்பண்புள்ள இளைஞர்கள் பணத்தை முன்னிட்டுப் பேசினார்கள்; உறவினரைச் சாக்கிட்டுத் தப்பினார்கள். பெண்மைக்கு மதிப்புத்தர, பெண்மைக்கு இவ்வுலகத்தில் இயற்கையாக ஏற்பட்ட இன்பவுரிமையை ஒப்புக்கொள்ள, ஏழைமைக்கும் உலக இன்பத்தில் பங்கு உண்டு என்று சிந்திக்க - எந்த ஆடவனும் முன்வரவில்லை. நாணத்தில் புதையுண்ட அந்த மடமான், பெண்மைக்குச் சமூகம் இழைத்த அநீதியைத் தாங்காமல், அந்தக் குளத்துப் பாசியில் வழுக்கி விழுந்து மூழ்கி மாண்டாள். 'அஜாக்கிரதையினால் ஏற்பட்ட விபத்தின் காரணமாக நேர்ந்த மரணம்' என்று நியாய தேவதை தீர்மானித்தது. "அஜாக்கிரதை =விபத்து=மரணம்'' என்று சுலபமாக அமைந்துவிட்ட இந்தச் சமீகரணத்துக்குப் பொறுப்பாளி யார்? அந்தப் பெண்ணா, அவளுடைய பெற்றோர்களா, அல்லது நம் சமூகமா? இவ்வாறு பலியான ஜீவனின் ரத்த வெள்ளத்தில் தோய்ந்தும் நம் மனம் கரையாதா?

இந்தச் சிந்தனை என் மனத்தைக் கலைத்தது. மாலினியின் கடுந்தவம் என் விரதத்தைக் கலைத்தது. 'முனிவரான பாராசரரைத் தன் ரூபகுண சௌந்தரியங்களின் அபார சக்தியினால் வசிகரித்து, வேதவியாஸரை உலகுக்கு அளித்த மத்ஸ்யகந்தாவைப் போன்ற அழகியர் வாழ்ந்த இந்நாடு; சந்தனுவைப்போன்ற அகண்ட மண்டலாதிபதிகளைப் பொறி கலங்கச் செய்த மோகினிகள் சஞ்சரித்த நாடு; ஒரு ராஜகுமாரிக்குச் சுயம்வர மென்றால், மூலை முடுக்குகளிலுள்ள அரசர்களெல்லாரும் அலறியடித்துக்கொண்டு ஓடிவந்து குவியும் நாடு; கிருஷ்ணனுக்குத் தானே கடிதம் வரைந்து மணஞ் செய்துகொண்ட ருக்மிணியைப்போன்ற ரமணிகள் வாழ்ந்த நாடு - இத்தகைய நாட்டில், மாலினியைப்போல, தம் சௌந்தரிய வெள்ளத்தின் கீழே பணப்பேயை அழுத்திப் புதைக்கும் மங்கைமார் பலர் தோன்றத்தான் வேண்டும்' என்று என் விவேகம் தீர்ப்புச் செய்தது.

சந்திரிகையே விதானமாக விளங்கிய அந்த வானப் பந்தலின் கீழ், கிருஷ்ணையன்னை தன் அலைக்கைகளால் என்னை ஆசீர்வதிக்க, மாலினியின் கரத்தைப் பற்றினேன். 'ஏழு உலகங்களிலும், எந்த ஆபத்திலும் சம்பத்திலும், உயர்விலும் தாழ்விலும், நிறைவிலும் குறைவிலும் இந்த இணக்கைகளை விடாமல், உறுதுணையாக நிற்போம்' என்று பிரதிக்கினை செய்து, நடக்கலானோம்.

*　*　*

ஆசிரியர் மூர்த்தியை எங்களை ஆசீர்வதிக்க அழைத்தேன். கதையைக் கேட்ட அவர், "எல்லாம் ரிஷி கர்ப்பமாய்த்தான் முடிந்திருக்கிறது!'' என்றார்.

இந்த ரிஷிகர்ப்ப யுகத்தில் - வேகச் சுழலில் - எது எங்கே போய் நிற்குமோ, யார் சொல்ல முடியும்?

சிந்தனை

ஜம்புநாதன்

1. ஆவணி மாதம்

ராமக்கௌண்டன் : பேஷ்! இந்த வருஷம் சரியான காலத்தில் மழை பெய்கிறது. நாற்று நன்ருக வளர்ந்திருக்கிறது. தழைக்குப் பதிலாகக் காந்தி ஐயா சொன்னபடி நஞ்சையிலே போட்ட கொளிஞ்சியும் அவுரியும் தினிக்குப் போதும். அவுரியைத் தொட்டியிலே போட்டா நாலு மணங்கு சரக்கு கிடைக்கும். இப்ப வித்தாலே எண்பது ரூபா வரும். இப்போ என்ன செலவு? பணம் இருந்தால் நாட்டுக்கோட்டையான் பிடுங்குவான். அவதான் - ராமி - தங்கைச்சி பெண்ணு, முழுகாம இருக்கு. தம்பி மகனுக்குப் புதிசாக் கலியாணம். மகளை அழைச்சுட்டு வந்து ஆறு மாச மாச்சுன்னு சொல்லி ஏதாச்சும் செலவு வைச்சுடுவான். தம்பி கோவிந்தன், "இங்கே குடு அப்பா. பழைய மாட்டைச் சந்தைலே தள்ளிட்டு, அதையும் இதையும் சேர்த்து மேற்கே போய் நல்ல வண்டி மாடு கொண்டாரேன்" என்பான். அது நல்ல செலவுதான். வேலைக்கி வைச்சிக்கிட்டு அப்புறம் தள்ளிணுக்கூடப் பத்து இருபது லாபத்திலே வித்துடலாம். சின்னப்பயல்ரு, சொக்காய் வேணும், புஸ்தகம் வேணும்னு பிச்சுப்பிடுவான். இதெல்லாம் போக, கம்பத்து ரெட்டி ஸொஸைட்டி பணத்துக்கு வழி என்னடாம்பான். ஆகச்சே, சரக்கு ஆனலும் விக்கப்படாது. 'காந்தி ஐயா' பேச்சைக் கேட்டதுக்கு லாபம் இருந்தாலும், இம்மாங் கஷ்டமுமிருக்கு. ஆமா, அவரு மகாத்மாவே ஜெயிலு ஜெயிலுன்னு சொன்ருரு. டக்குனு மந்திரியும் ராசாவும் வேலை கொடுத்தாரில்லை. அவரு பேச்சைக் கேட்கறதில்லே. கஷ்டமிருந்தாலும் கூடிவருதில்லை? நாத்துக்கூட அவரு சொன்னபடி விட்டிருந்தா —

ராமக்கௌண்டன் மனைவி : என்ன இவருக்கு வந்த மௌசு. சதா இந்தக் 'காந்தி ஐயா'வைக் கட்டிக்கினே அழருரு. அவரு இன்னிக்கித்தான வந்திருக்கிருரு? ஊரிலே வந்துதான் பத்து வருசமாச்சே. படியுங்கடா, குடிக்காதிங்கடா, எல்லோரும் ஒண்ணுடான்னு எல்லாம் சொல்லிக்கிட்டுத் திரிஞ்சாரு. இப்பொ, நெல்லு விதை வேணுமா, கம்பு கேவுரு வேணுமா? நஞ்சைலே பில்லைப் போடு, பிஞ்சைலே நெல்லைப் போடுன்னு தலைகிளா அடிக்கிருரு. இவருந்தானே ஆடருரு? ஆன ஒண்ணு, நானு அம்மாம் புள்ளையா இருக்கறச்சே ஐயா வீட்டிலே கட்டி கட்டியா சாயம் எடுப்பாங்க. அப்ப சண்டைலே அதிலே கோடி கோடியா எல்லாம் சம்பாதிச்சாங்களாம். அந்தச் செடி எங்கிருந்தோ சம்பாதிச்சுக் கொடுத்துட்டாரு. இப்போ சண்டைலே அது நல்லா விக்குமாம். இவருகூட பேச்சுக்குப் பேச்சு, "இருடீ, ஐயா பேச்சைக் கேட்டதிலே நம்மூரிலே நானும் மோட்டுத்தெருக் கந்தனுந்தான் அடிக்கப் போருேம் காசு" எங்கிருரே. அதெல்லாம் சரிதான். காசுவந்ததும், கம்மலை மீட்டுச் சின்னப் பொண்ணுக்குக் குடுத்துடணும். அதுதான் - விருத்தாம்பாள் - இத்தனை வருசம் கழிச்சு உண்டாயிருக்கு. அதுக்கு வீட்டிலே கூட்டியாந்து சேலை எடுத்துக் குடுக்கணும். சின்னப் பயலுக்குக் குப்பன் மகளைப் பிடிச்சுப் போட்டுடணும். கோவிந்தன் சமுசாரம் நல்ல புடவையில்லாமே நிக்குது. அவ அப்பன் வீட்டிலேதான் கையை விரிச்சுட்டாங்களே. நம்ப வீட்டுக்கு வந்தப்பொறம் நாமதானே வாங்கிக்கொடுக்கணும்? இவரு பெரியதனம் பண்ணி எல்லாரையும் ஏமாத்திப்புட்டு கம்பத்தம் வீட்டிலே கொண்டு பணத்தை முடக்காமே பாத்துக்கணம். நாட்டுக்கோட்டையான் வந்தால் அது வேறே.

மகன் கோவிந்தன் : அவுரி தொட்டியிலே நாலு மணங்காவது சரக்கு வரும். கூடி வந்தா நம்ம அதிர்ஷ்டம். இப்பவே வடக்கத்தியான் வரான பாக்கணும். கோடி வீட்டுப் புள்ளையாண்டான் போன மாசமே முப்பது ரூபா விககிதுன்னன். இந்த வருசம் தழை வாங்கிற செலவு இல்லை. அதுக்கு வைச்சிருக்கிற கேவுரு இப்ப விக்கிற விலைக்குப் போட்டா நூறு ரூபா வரும். இதுவும் அதுவும் சேர்த்து ஒண்ணு, அந்தப் பனை மரத்துக்கொல்லை திருப்பணும்; இல்லை, புதிசா ஒரு சோடி மேற்கத்தி மாடு வாங்கிட்டு ஒரு வண்டி கடாவிப்போட்டுடணும். அப்பனும் நானும் இரண்டு தடியனுங்க இருந்திண்டு ஒரு வண்டி வெச்சிட்டு முட்டிக்கிறதா? இப்பத்தான் ஊரிலே வண்டி மாடு இல்லாமை பறக்குது. தினம் ஒரு ரூபாய் காசு கிடைச்சா, குடும்பம் தன்னைக் கட்டிக்கும். வறதை வித்தா கடன் அடஞ்சு போயிடும். பெரியவங்க பணத்தைக் கண்டா சூறையாடிப் புடுவாங்க. தம்பி படிச்சது போதும். ஒண்ணு, அவன் வீட்டிலே இருந்து ஒத்தாசை பண்ணணும்; இல்லை, வேலை கத்துக்கற படிப்பாப் படிக்கணும். இந்தக் கோண எழுத்துப் படிக்கறதிலே பெருமை மிச்சம். அவன் வெள்ளைச் சொக்காய் போட்டுக்கிட்டுச் சுருட்டுப் பிடிக்கிறது

தான் கண்டது. முடிஞ்சா தீபாவளிக்கு எல்லோருக்கும் துணி வாங்கலாம்.

மருமகள்: வீட்டிலே பேசிக்கிற தைப் பார்த்தா இந்த வருசம் எல்லாம் சுகமாக இருக்கும்போலே இருக்கு. செம்பிலிக்கடாவைச் சந்தைலே வித்துட்டு, கூடக் கொஞ்சம் போட்டு நாலு மறி பிடிக்கணும். ஒரு வாத்து வாங்கிட்டாப் போதும். கிடைக்கிற முட்டையை வைச்சிக்கிட்டு வெஞ்சனச் செலவு பாத்துக்கலாம். ஆட்டுக்கிடை பெருகினு பொங்கலுக்கு கோடி எடுத்துக் கட்டிக்கலாம். சின்னத்தம்பி வந்தா பட்டணத்திலேருந்து நல்ல சீட்டியா வாங்கிவரச் சொல்லலாம். உம் - பார்க்கலாம். பணம் மிஞ்சினுத்தானே? பெரியவர் என்ன பண்ணப்போருரோ. எசமானியம்மா வேறே இருக்காங்க. வீட்டுக்காரர் வேறே மாடு, கன்னும் பாரு. நம்ப யோசனை குடும்பத்துக்கு நாலுகாசு கூடிவரணும்னுதான். யாரு கேக்கருங்க?

தம்பி சின்னப்பயல்: நாலு எழுத்து கத்துக்கணு நல்லதுண்ணு பட்டணம் அனுப்பிச்சுட்டாங்க. அப்பாரு ஒழுங்கா எங்கே செலவுக்கு அனுப்புருரா? ஏதாச்சும் சொன்னு மளிகைக்கடை ஐயாகிட்டே சொல்லியிருக்கேண்டாங் கருரு. வாரம் ஒரு சினிமாக்கூடப் பார்க்கமுடியறதில்லே. இந்த லீவுக்குப் போனுச் சொல்லிச் சரிக்கட்டணும், எனக்குச் செலவுக்கு நேராப் பணம் அனுப்பாட்டிப் படிக்கமுடியாதுன்னு. ஊரிலே நான் ஒருத்தன்தானே இங்கிலீஷ் படிக்கப்போறவன்?

படியாள் நல்லான் சாம்பான்: ஐயா தொட்டிபோடப்போருராம். அதிலே சரக்குக் கிடைக்கும். இந்த வருஷம் தினிக்காசு மிச்சம். மோர்க் கொல்லையிலேயும் புலிக்கடிச்சாலேயும் கேவுரு கூடி வந்திருக்கு. மணிலாக்கொட்டை வேறே நாலுபாரம் ஆச்சு. ஆனுப் பாவம், அதைத்தான் அப்படியே செட்டியாரிட்டே கொடுத்து பாண்டைக் கிழிச்சிட்டாரு. காலத்தில் மழை பெய்யறதைப் பார்த்தா, சம்பா கூடி வரும்னு தோணுது. எப்படியாச்சும் சொல்லி ஐயா கிட்டே ரெண்டு பன்னிக்குட்டி வாங்கித் தந்திடச் சொல்லணும். கூட ரெண்டு வாங்கிவிட்டா வாரம் வேணும் கொடுத்திடலாம். பொங்கலுக்குக் கவலையில்லாமே தள்ளிடலாம். சின்ன ஐயா காதிலே போட்டு அப்புறம் பெரிய ஐயாட்டே போகணும். அம்மாரு - ஐயோ வாண்டாம்.

கம்பத்தம் ரெட்டியார்: காலாகாலத்திலே மழை பெய்துட்டது. விலைவாசியும் பரவாயில்லை. இந்த வருஷம் எப்படியாவது பாக்கியில்லாதபடி ஸொஸைடி பணம் வசூலித்தால்தான் நல்லது. இல்லாத போனுல் நம்ம கௌரவம் போயிடும். நம்ப காரியங்களுக்கும் இடஞ்சல். ராமக்கௌண்டன் கொஞ்சம் பகையாயிருக்கிறுப்போலத் தெரிகிறது. அவனிட்ட பூராப் பாக்கியும் ஒரேயடியா வசூல் செய்துடணும். ஷேக் காதர் பாக்கியும் வாங்கிட்டா நல்லது. அவர்களுக்கு வேணும்னு புது 'லோன் ஸாங்கிஷன்' செய்கிறேன் என்று சொல்லி வசூலிக்கணும். இந்த வருஷம் விட்டா அடுத்த வருஷம் எப்படியோ? எலக்ஷன் வேறே வருகிறது.

நாட்டுக்கோட்டை செட்டியார்: வட்டி வட்டின்னு ராமக்கௌண்டன் தலையை மொட்டையடித்துக்கொண்டே வருகிறோம். நல்ல வேளை; அவன் நம்பிப் போறதில் ரசீது போடாதது நல்லதாச்சு. பாழும் கடன் நிவாரணச் சட்டத்திலே எங்கே முழுகிடப்போறேனேன்னு பார்த்தேன். ராமக்கௌண்டன், "ரசீது மட்டும் இருந்தான்ன, செட்டியார் அசல் தொகை அப்படியே கொடுத்துடறேன். என்னுலே பேச்சு மாற முடியாது" என்றது வயிற்றிலே பால் வாத்தது. அவன் மகனும் மச்சானும் பண்ணின ஆர்ப்பாட்டத்திலே நான் பயந்தது அந்த ஈசுவரனுக்குத்தான் தெரியும். இந்த வருஷம் அவனுக்குக் கொஞ்சம் மிச்சம் என்று கேள்வி. கணக்குப் பைசல் பண்ணிப் பிடச் சொல்லணும். அவனுக் கப்புறம் பணம் வசூலிக்கிறதுங்கிறது கல்லிலே நார் உரிக்கிற சமாசாரந்தான்.

மணியகாரர்: அப்பா! இந்த வருசம் அலையாமே வசூல் ஆயிடும். இரண்டாம் மாதத்திலே பாதி. மூன்றும் மாதத்திலே பூஜ்யம் பண்ணிப்பிடலாம். மேலதிகாரிகளுக்கு இந்த வருஷம் பூஜை போட வேண்டாம். ஐமாபந்தி முழிப்புக்கும் தப்பிச்சிக்கலாம்.

2. பொங்கலுக்கு முன்பு

ராமக்கௌண்டன்: கிச்சிலிச்சம்பாவும் மணிலாவும் விளைஞ்சது கஷ்டமாயில்லே போச்சு. விளைஞ்சதுலே எல்வாருக்கும் பொங்கலுக்குக் கைமாத்து, புது நெல்லு கைமாத்துக் கொடுக்கிறதுக்குத்தான் சரியா இருக்கும்போலேயிருக்கு. காந்தி ஐயா பேச்சைக் கேட்டுச் சம்பா போட்டது, பொங்கலுக்கு முன்னே விளைஞ்சு கழுத்தையில்லே அறுக்குது? முத முத வருசத்திலே விளைஞ்சதே தொம்பையிலே கொட்டறதா, எல்லாருக்கும் பங்கிடறதா? அட குடுக்கத்தான் வேணும்! புது நெல்லு பொங்கப்படின்னு

ஒவ்வொருத்தனும் கலம் ஆறு மரக்கால்னா கேட்கிறானுவ! ஏதோ இரண்டு மரக்கால் ஒரு மரக்கால் போட்டுப் பொங்கப்பானை செஞ்சா......அட இழவே! நாட்டுக்கோட்டையான் வேறேன்னா நெல்லுக் கேட்டு இருக்கான். எல்லாம் என் மவன் தர்பார்னு டபாய்த்துக்கிட்டேன். அவன் கண்டிப்பு எனக்கு வராது. இந்த நாட்டுக்கோட்டையானுக்கு என்னா பண்ண? இந்தச் சமயத்திலே யோசனை சொல்ல 'காந்தி ஐயா' கூட ஊரில் இல்லே.

ராமக்கௌண்டன் மனைவி: மணிலாக் கொட்டை வித்துப் பணத்தை முடிச்சு வைச்சிருக்கான் கிழவன். அந்தக் கம்மலை மீட்டு அதோடே நாலு கலம் நெல்லும் பொங்க வரிசையும் சின்னப் பொண்ணுக்கு அனுப்புன்னா பெரிய தம்பியைக் கேளுங்கிறானே! அடேயப்பா! தலையிருக்க வாலாடுமா? என் குடித்தனத்தை இந்த வாண்டா சமாளிச்சு நடத்திடுவான்? சரி, சரி.

மகன் கோவிந்தன்: ஐயோ! இந்தக் கிழவன் தர்பார் பொறுக்க முடியல்லே. கையிலே காசு வைச்சுக்கிண்டு பார்த்துப் பார்த்து ஏங்குறான். சட்டுப்புட்டுன்னு செலவு செய்துடுன்னா கேட்கறதில்லை. கிழவியும் தினம் ஏதாவது செலவு சொல்லி நச்சு நச்சுன்னு ஒண்ணுமிரண்டுமா கிழவன் கைக்காசைக் கரச்சுப்பிடறா. கடனும் அடைய மாட்டேங்கிறது. வீட்டுச் செலவும் உருப்படல்லை. சரி, இன்னிக்கி நாட்டுக்கோட்டையான் கணக்கை மாமனை வச்சிக்கிட்டுப் பைசல் பண்ணி அப்பாரிட்டேருந்து பணத்தை வாங்கிக் கொடுத்துப்பிடணும். கம்பத்தம் கிட்டே கணக்குக் கேட்டா, பணத்தைக் கொண்டா பார்த்துக்கலாம்னு அமத்துவாரு.

மருமகள்: வாத்து முட்டை வித்துச் சேகரிச்ச காசுக்குக் கம்மலை மூட்டணுமாமே. கிழவன் காசே எங்கேயோ போயிடுச்சாம். ஊசிலே குத்தி சேகரிச்ச காசு வேணுமாம் கிழவிக்கு. ரகளை பண்றாளே. ஒத்துமையா இத்தனை வருசம் நான் குடித்தனம் நடத்தாதபோனா இவங்க எல்லாம் சந்தியிலே நிக்கணும். இன்னிக்கி என்னை விரட்டறா கிழவி. அதோ ஆடெல்லாம் பிடிச்சுட்டுச் சந்தைக்குப் போடான்னு மகனை வேறே உலுப்பிக்கிட்டிருக்கிறா. உம்; நன்னியில்லாத ஜன்மங்க. இவரும் தலை மாட்டுறாரு.

கம்பத்தம்: என்ன அநியாயம்! விறைப்பா வந்து கணக்குக் கேட்டான். பணம் கொண்டாடான்னேன். கம்முனு செட்டி கடனை அடைச்சு நிலத்தை மீட்டுட்டானே. சரி, இவன் கொடுக்க வேண்டிய வாய்தா தீந்து ஒரு வருஷமாச்சு. பேசாமே டிக்ரி வாங்க வேண்டியதுதான்.

நாட்டுக்கோட்டை செட்டி: அட பாவி! என்னை மிரட்டியல்லா பசங்க கணக்கைத் தீத்துப்புட்டாங்க. கௌண்டன் கண்ணிலே தென்படவேயில்லை. கொஞ்சம் முரண்டினா கோர்ட்டுக்குப் போகணும் போல இல்லே வந்துடுத்து. கௌண்டன்டே நேரே கணக்குத் தீர்த்திருந்தா இந்த நூறு ரூபாய் நஷ்டமில்லையே. பாவிங்க வந்து மடக்கிட்டானுங்களே. உம்; சரி, சரி; குப்பக்கௌண்டனுக்கு இவன் ஜாமீன் போட்டிருக்கானே, அதைப் பைசல் பண்ணாட்டி கோர்ட்டிலே போட்டுடுவோம். இந்த ரூபாயைக் கொடுத்தா ராஜி. இல்லை, ஒரு கை பாத்துடுவோம்.

தம்பி சின்னபயல்: ஏது பேசாமெ மூட்டையைக் கட்டிக்கினு ஊர் திரும்ப வேண்டியதுதான். அண்ணன் தர்பாரிலே நம்ப கைவரிசை பலிக்காது. ஆனா அண்ணி படிக்கட்டுங்கிறாளே.

3. மாசிமாதம் ஆரம்பம்

ராமக்கௌண்டன்: அட கடவுளே, வருச ஆரம்பத்திலே நான் கட்டின கோட்டை இப்பொ தூள்தூளாப் போச்சுங்களே! ஐயா சொல்வாங்களே: "கௌண்டரே, விளைஞ்சதுன்னு சந்தோசப்படாதே, கஷ்டம் வந்ததுன்னு தலைலே கைவச்சுக்கிட்டு அழாதே. இதுதான் கடவுள் செயல் என்று ஒரே மனசோட பாடு படு. முயற்சி நமது. பலன் கொடுக்க வேண்டியது அவன் பாரம்." எத்தனை தடவை இந்த மாதிரி சொல்லியிருக்கிறாரு. அவரும் தெய்வ சம்மதம் தெய்வ சம்மதம்னுதான் நாளை ஓட்றாரு. நல்ல வேளையா, தப்பி முளைஞ்சு பனை மரத்துக் கொல்லையை மூட்டினான். கேவுரு வித்து வாய்தா கட்டிட்டா இருக்கிற நெல்லு ஆறு மாசத்துக்குப் போதும். அதுவரை குந்திக்கிட்டா உட்காந்திருக்கப் போறேன்? கன்னி வளைவுலே ஆறு மாசத்துப் பருத்தியும் சன்னாசி மூலேலே கேவுரும் மணிலாவும் போட்டுட்டு அந்தக்கொம்புவளைஞ்சான் கோடியெ கவலைலே பூட்டிட்டா ஆடி மாசத்திலே ஆண்டவன் முந்நூறு ரூபாய் கொட்டமாட்டானா? பாப்பம். இத்தனை வருசமா ஊரிலே நல்ல பேரெடுத்துக் காலத்தைத் தள்ளிப்புட்டேன். இப்பொ ரெட்டி ஸொஸைடி பாக்கிக்கு டிக்ரி வாங்கப் போயிருக்கான். செட்டி அந்த ஜாமீன் போட்டதிலே என்னையும் சேர்த்துக் கோட்டுக்கு இழுக்கிறான். சரி சரி,

எல்லாத் தொல்லேயும் தம்பி தலேலே போட்டுட்டு நான் சிவனேன்னு குந்திக்கிறேன். இந்தப் பாளும் காத்து வராட்டி நான் ராசால்லே! உருவி உருவியில்லா பயிரைக் கொட்டிடுத்து? மழை வேறே சேந்துக்கிட்டு அந்த மூலே அடைச்சானே உடைச்சு பாழாக்கிட்டுது! உம். நாம்ப குடுத்து வைச்சதுதானே கிடைக்கும்? அதிகமா ஆசைப்பட்டா?

கௌண்டன் மனேவி: ஐயோ, அடிச் சிக்கிட்டேன் நான். அந்தக் கம்மலே மூட்டுப்புடுங்கோ; இன்னும் நம்ப சனத்துக்குச் செய்ய வேண்டிய வரிசைகளே நல்லாச் செய்துப்புடுங்கோ. எனக்கு ஒரு ஐம்பதுலே ஒரு சேலேயும் மருமகளுக்கு ஒண்ணும் வேணும்னேன். அந்த வெட்டாதுட்டி, இந்தக் கடன்லே எனக்கு வேண்டாம் சேலேன்னு என் வாயில்லேயும் மண் போட்டாச்சு. கிழவன் எல்லாம் சம்பா அறுவடையாகட்டும்னு வாயிதாப் போட்டான். அவன் பண்ணற கஞ்சத்தனம் கடவுளுக்குப் பொறுக்கல்லே. காத்தும் மழையும் விட்டுக் கதிரை உருவிக்கினு போகச் சொல்லிட்டாரு.

மகன் கோவிந்தன்: நல்ல வேளே. இந்த வருசம் நான் குடும்பத்திலே கடுமையாயிருந்ததிலே தலே தப்பிச்சது. அவளும் கொஞ்சம் கரிசனமாத்தான் இருந்தா. அதிலே பெரியவங்களுக்குக் கூடக் கொஞ்சம் வாங்கு. என்ன பண்றது? காலம் மாறிப்போச்சே? ஊரிலே பெரிய மனுசன், கணக்குக் கேட்டால் சொல்லாமே இப்பொ டிக்ரி வாங்க முனையருன். அவன் எண்ணத்தை என்ன சொல்ல? செட்டி ரூபாய் தள்ளிக்குடுத்துட்டு அப்பாரெ அமுக்கப் பார்க்கருன். காத்து மழை வேறே நம்ம தலேலே கைவைச்சுடுச்சு. என்ன பொழைப்பு? படிச்சவங்க கிராமத்துக்குப் போங்க, விவசாயம் செய்யுங்கன்னு எல்லாம் பேப்பர்லே போடருங்க. இங்கே வந்து பார்த்தால்ல தெரியும், குடித்தனக் காரங்க பொழைப்பு? நம்ம உழைச்சாலும் காத்து மழை வெயில் எல்லாம் சேர்ந்தில்லே கெடுத்துடுத்து? ஒண்ணு; காஞ்சு கெடுக்குது, இல்லாட்டி பேஞ்சு கெடுக்குது. எல்லாம் ஆண்டவன் செயல். பின்னே குடுக்கிறதே நமக்கு முன்னே கொடுத்துடுத்து. வருச வருமானம் கிடைச்சுப் போச்சு. அதிகம் வருமுன்னு ஆசைப் பட்டது அரோகரா! தள்ளு சவத்தை. ஆயுசோடெ இருந்தா ஒழைச்சு சம்பாதிச்சுடரும்.

மருமகள்: அவரு எல்லாரு பேச்சையும் தட்டிட்டுச் செஞ்ச காரியத்திலே குடும்பம் மிஞ்சித்து. வாத்துப்பட்டியை வித்ததுலே பதினஞ்சு ரூபாய் லாபம். ஆட்டுக் கிடையிலேதான் ரெண்டு குட்டி செத்துப் போச்சு. இருந்தாலும் அதிலே ஒரு ஐஞ்சு. உம். இப்படிக் குடுத்துப்புட்டு ஐயனுரப்பன் சம்பா வாயிலே மண்ணு போட்டுட்டானே. இஞ்சி லாபம் மஞ்சள்ளே. ஆனு ஒண்ணு லாபம். பெரியவங்க குடும்ப பாரத்தை நம்ப தலேலே போட்டுட்டாங்க. ஒண்ணுமில்லேனுலும் கவலே மிஞ்சும்.

மணியகாரன்: ஊர் வளத்தைப் பார்த்து அலேயாமே வாய்தா பூஜ்யம் பண்ணிடலாம்னு சந்தோஷப்பட்டேன். இந்தக் காத்து நம்ம அலேய வைச்சுடுத்து. நம்ம நிழல் காலடிலேதானே?

கம்பத்தம் ரெட்டி: என்னடாது, இத்தனே வருஷம் குடித்தனம் பண்ணியும் இந்த ஊரிலே நம்ம பேச்சு தாழல்லெ. இப்பொ இந்த ராமக் கௌண்டன் மகனண்ட நம்ப ஜம்பம் சாயாது போலல்ல இருக்கு. டிக்ரி ஆச்சு. காவிலே விழுவான்னு பார்த்தா, மாட்டை வித்துப் பணத்தைக் கட்டிப் பிட்டானே. அதோடே, "சாமி, இன்னும் மூணு மாசம் வெட்டிலே தவிடும் பருத்திக் கொட்டையும் போட்டு மாட்டைக் கொட்டடிலே கட்டணுமேன்னு நினேச்சேன். உங்க புண்ணியத்திலே அதுவும் மிச்சம், கடனும் அடஞ்சதுங்க"ன்னு சொல்லி, பத்துப் பேருக்கு நடுவிலே நம்ப மானத்தை வாங்கிப்பிட்டானே.

நாட்டுக்கோட்டை செட்டி: அட எழவே! உடும்பு வேண்டாம் கையை விட்டாப் போதும்னு இருக்கே. இந்த ராமக்கௌண்டனே எப்படியாவது அமுக்கிப்பிடணும்னு பார்த்தா அவன் மகன் நம்மையே அமுக்கப் பார்க்கிருனே. சின்னப் பயலாயிருந்தாலும் சுட்டி. இவனண்டை நாம்ப ஒழுங்காப் போகல்லேன்னு மானம் போயிடும். குப்பனே வைச்சுக்கிட்டு ராஜி பண்ணிக்கத்தான் வேணும்.

தம்பி சின்னபயல்: பட்டணத்துக் கடையைக் கட்டிக்கிட்டு வந்துட வேண்டியதுதான். அண்ணன்கிட்டே ராசியா இருந்தா எப்பனுச்சுமாவது சினிமாவுக்குப் போகலாம். "அந்தக் குளத்து மேட்டைச் சீர் பண்ணறேன். காய்கறி போட்டு வித்துக்கோ. உன் செலவுக்கு அந்தக் காசு" இன்னுட்டான். அவன் பேச்சைக் கேட்டா அண்ணி கூடப் பிரியமா இருப்பா. நமக்கும் ரெண்டு காசும் கிடைக்கும்.

களத்திர தோஷம்

'மாயாவி'

(சென்ற இதழ் 38-ஆம் பக்கத்தொடர்ச்சி)

கங்கைகொண்டான் சேஷிப்பாட்டியைப் பார்த்தால் சூனியக்காரி மாதிரி இருக்கும். மருத்துவம் பார்ப்பது, விசேஷ வீடுகளுக்குச் சமையல் செய்து போடுவது, உபாதானம் எடுப்பது இவைகள் அவள் வயிற்றுப் பிழைப்புக்கான தொழில்கள். ஆனால் வரும்படியுள்ள இந்தத் தொழில்களைக் காட்டிலும் வரும்படி இல்லாத கோள் சொல்லும் தொழிலில்தான் அவள் பிரசித்தி பெற்றிருந்தாள். நாரதரே கலியுகத்தில் இப்படி ஸ்திரீ ரூபத்தில் பிறந்திருக்கிறாரோ என்று அவ்வூரார் சந்தேகப்படுவதுண்டு. ஆனால் நாரதருக்கும் இவளுக்கும் ஒரே ஒரு வித்தியாசம்: நாரதர் கோள்கள் முடிவில் சுபமாக இருக்கும். சேஷிப்பாட்டியின் கோள்களோ முடிவில் விபரீதத்திலே வந்து நிற்கும்.

கையில் செம்புடன் காலையில் உபாதானத்திற்குக் கிளம்பினாளானால், ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு சமாசாரத்துடனே செல்வாள். இவ்வாறு கிராமத்திலுள்ள பல சண்டைகளுக்கு அவளே காரணமாய் நின்ற போதிலும், கங்கைகொண்டான் ஸ்திரீகளில் ஒருத்திக்காவது அவளிடம் விரோதம் இல்லை. ஏற்கனவே பிறர்வீட்டு விஷயங்களைக் கேட்பதில் ஒரு தனி ஆர்வம் கொண்ட நம் ஸ்திரீகளுக்கு அவள் புதப் புதுச் செய்திகளைக் கொண்டு வந்து தள்ளும்போது அவளை எவ்வாறு விரோதித்துக்கொள்ள முடியும்? அப்படி யாராவது தவறி அவளிடம் விரோதம் பாராட்டினாலும் சேஷிப்பாட்டி அவர்களுக்கு இதமாக ஏதாவது சொல்லி, சிநேகப்படுத்திக்கொண்டுவிடுவாள். மொத்தத்தில் கங்கைகொண்டான் ஸ்திரீகளுக்குச் சேஷிப்பாட்டி இன்றியமையாதவளாகவே இருந்துவந்தாள். இவ்வாறு சேஷிப்பாட்டியிடம் மோகம் கொண்டவர்களுள் கோமதியும் ஒருத்தி.

கோவு தன் மனைவியின் தூண்டுதலின் மேல், தங்கள் ஜாதகங்களைப் பிரசித்தி பெற்ற ஜோஸ்யர் ஒருவரிடம் காட்டி, அவர் போதனைப்படி குடும்ப தோஷ பரிஹாரத்திற்காகச் சில ஹோமங்களும் பிராம்மண சமாராதனை முதலியவைகளும் செய்வதென்று தீர்மானித்தான். இது சம்பந்தமான எத்தனங்களில் ராமலிங்கமையரும் கோமதியும் தலைமை பூண்டிருந்தனர். ஹோமத்தையும் மந்திர கர்மாக்களையும் நடத்திவைக்க மலையாளத்திலிருந்து ஒரு மாந்திரிகன் வரவழைக்கப்பட்டிருந்தான்.

ஹோமம் ஆரம்பிப்பதற்கு முந்திய நாள், சேஷிப்பாட்டி ஒரு விசேஷ சமாசாரத்துடன் கோமதியம்மாளிடம் ஓடோடியும் வந்தாள். "கேட்டாயாடி கோமதி, சமாசாரத்தை? பிள்ளையார் பிடிக்கக் குரங்காய்விட்டதே உன் கதை!" என்று தொடங்கினாள்.

"என்ன விசேஷம் சேஷிப்பாட்டி? யாருக்கு என்ன வந்துவிட்டது?" என்று கோமதியம்மாள் கேட்டாள்.

"எல்லாம் உன்னையேதான் சுற்றிப் பிடித்திருக்கிறது. எல்லோரையும் 'பாம்' என்று நம்பியிருக்கிறாயே. உன் தலையிலே கல் விழ இருந்ததே. சேஷிப்பாட்டி காதில் சமாசாரம் விழுந்ததோ தப்பினாயோ?"

"என்ன பாட்டி? சொல்லுங்கோ. என்னைத் தவிக்க விடாமல் விஷயத்தைச் சொல்லுங்கோ பாட்டி."

"அடியம்மா, இப்படியும் செய்யத்தான் ஒரு பிள்ளைக்கு மனசு வருமா? எண்டி, ஸ்டேஷன் மாஸ்டர் சங்கரையரைத் தெரியுமோல்லியோ, அவர் பாலக்காட்டுக்காரர். அவருக்கு இந்த மாந்திரிகனை நன்றாகத் தெரியுமாம். அவர் வீட்டில்தான் அவன் தங்கியிருக்கிறான். அவனே உண்மையையெல்லாம் சங்கரையரிடம் சொல்லிவிட்டானாம். எண்டியம்மா, இந்தக் காலத்துப் பிள்ளைகள் எதற்கு வேண்டுமானாலும் துணிந்துவிடுவார்கள்போல் இருக்கிறது. ஆனால் உன் மாப்பிள்ளை பாலுவுக்கு விஷயம் தெரியாதா என்ன? தெரிந்

திருந்தால் எப்படித்தான் அவன் மனம் ஒப்பினான்?"

"விஷயத்தைச் சொல்லுங்கோ பாட்டி."

"சொல்கிறேண்டியம்மா. சொல்லத் தான் வாய் வருகிறதா? நீ எப்படியடி உன் கண்மணியைப் பிரிந்திருப்பாய்? இதைக் கேட்டவுடன் நானே பதறியடித்து ஓடி வந்தேனே; நீ எப்படியடியம்மா சகிப் பாய்?"

"சொல்லுங்கோ பாட்டி. என் ருக்கு வுக்கு என்ன?"

"என்னவா, குடும்ப தோஷத்திற்கு அவளைப் பலியிட்டு...!"

"ஹா! என்ன?"

"ஆமாண்டியம்மா ஆமாம், கேளு."

"யார் உங்களுக்கு இதையெல்லாம் சொன்னது?"

"அம்மம்மா, நான் மாட்டேண்டியம்மா. ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்ல மாட்டேன். அதிலேயும் பெரிய கத்துக் காரியங்கள். நாளைக்குச் சேஷிப்பாட்டி இரண்டு அரிசி பிச்சையெடுப்பதும் போய்விடும். உள்ளபடி, நான் இப்பொழுது பிறர் காரியத்தில் தலையிடுகிறதே இல்லை. இருந்தாலும் உன் விஷயம் என்றதும் மனசு கேட்கவில்லை. ஓடோடியும் வந்தேன்."

"அப்புறம் என்ன, சொல்லுங்கள் பாட்டி."

"அந்த வீடு கட்டுவதற்கு முன்னால் முற்றத்திலே ஒரு புளிய மரம் இருந்ததாம். அதிலே ஒரு யக்ஷிணி வாசம் செய்து வந்ததாம். வீடு கட்டுவதற்கு அந்த மரத்தை வெட்டப் போகும்போது, அது ஒரு ஸ்திரீ பலி கேட்டதாம். அதைக் கவனியாமல் அவர்கள் வீட்டைக் கட்டினார்களாம். அதனால் அந்த யக்ஷிணி எழு தலைமுறையாகக் கரையேற்றப்படாமல் அலைந்து கொண்டிருக்கிறதாம். இப்பொழுது எட்டாவது தலைமுறையில் அது இவர்கள் சந்தான விருத்தியைத் தடைப்படுத்தியிருக்கிறதாம். அதற்காக ஹோமம் சாந்தி ஏதேதோ செய்வதுபோல, மந்திர சக்தியினாலே உன் பெண்ணை அதற்குப் பலி கொடுக்கப் போகிறார்களாமடி!" சேஷிப்பாட்டி இவ்வாறு கூறி விட்டு, இரண்டு சொட்டுக் கண்ணீரையும் சிந்தினாள்.

"போதும் பாட்டி, கேட்கச் சகிக்கவில்லையே! இப்படியும் இந்தக் காலத்திலே செய்வார்களா பாட்டி? இது யாரோ கட்டி விட்ட கதை மாதிரியன்றோ இருக்கிறது?"

"கதையோ, உண்மையோ, எனக்குத் தெரியாதடியம்மா. நான் கேட்ட முழு சமாசாரத்தையும் சொல்லிவிடுகிறேன். உன் பெண்ணை இந்த மாந்திரிகன் பார்த்தானாம். ஏராளமான பணம் கொடுத்து விஷயம் ரகசியமாயிருக்க ஏற்பாடு செய்திருந்தபோதிலும், உன் பெண்ணின் பொலிவையும் சாந்தத்தையும் கண்டு மனசு வராமல், எப்படியாவது அவளைத் தப்புவித்துவிட, இந்தப் பூஜை முடியுமட்டும் அங்கிருக்க விடாமல் அழைத்துப் போய்விட வேண்டுமென்றும் சொன்னானாம். எண்டியம்மா, உன் பேரிலுள்ள அபிமானத்தினாலே தப்போ சரியோ, என் காதில் விழுந்ததைச் சொல்லி விட்டேன். நாளைக்குச் சேஷிப்பாட்டியின் தலை வெளியில் உருளாமல் மட்டும் நீ பார்த்துக்கொள்."



"...ஹோமகுண்டத்தின் முன் சாய்ந்துவிட்டாள்."

சேஷிப்பாட்டிக்கு இந்தச் சமாசாரம் யார் கூறினார்களோ, எங்கிருந்துதான் கிடைத்ததோ தெரியாது. ஆனால் அவள் கோமதியின் உள்ளத்தில் ஒரு பெரும் புயலைக் கிளப்பிவிட்டாள்.

கோமதியின் மனம் அலை பாய்ந்தது. 'இப்படியும் நடக்குமா?' என்ற சந்தேகம் இருந்தபோதிலும், சேஷிப்பாட்டியின் சமாசாரத்தில் சிறிதாவது உண்மை இருக்க வேண்டும் என்றே அவளுக்குத் தோன்றியது.

சமாசாரத்தை உடனே அவள் தன் கணவரிடம் கூறினாள். ராமலிங்கமையருக்குப் பிரமாதமான கோபம் வந்து விட்டது. "எண்டி, உன் மட்டித்தனத்திற்கு எல்லையே கிடையாதா? யாரோ என்னவோ சொன்னார்களென்று இதை

யெல்லாம் பறையடித்துக்கொண்டு திரிகிறாயே. வாயை மூடிக்கொண்டு வேலையைப் போய்ப் பார்'' என்று அவளைக் கடிந்துகொண்டார்.

கோமதிக்கு என்னவோ நிம்மதி இல்லை. இரவு மறுபடியும் இவ்விஷயத்தைத் தொடங்கிவிட்டாள். "என்னை முட்டாள் என்றோ பைத்தியம் என்றோ, என்ன வேண்டுமானாலும் சொல்லிவிட்டுப் போங்கள். ஆனால் உங்கள் காலில் விழுந்து கேட்டுக்கொள்ளுகிறேன். என் மனசு சமாதானப்பட, தயவு செய்து நாளைக் காலையில் ஸ்டேஷன் மாஸ்டர் சங்கரையரைக் கண்டு இதைப்பற்றிக் கேட்டுவிட்டுத்தான் வரவேண்டும்'' என்று மன்றாடினாள்.

ராமலிங்கமையருக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. "அடி மௌடிகமே, உன்னைக் கட்டிக்கொண்டு இழவெடுக்க வேண்டியிருக்கிறதே! இதையெல்லாம் எப்படியடி அந்த மனிதனிடம் நான் போய்க் கேட்பது? விஷயம் அவர்களுக்குத் தெரிந்தால் ருக்குவின் கதி என்ன ஆகும்? எங்கிருந்தோ ஒரு சனியனை விலைக்கு வாங்கிக்கொண்டு வந்து, இருக்கிறவன் கழுத்தை அறுக்கிறாயே?'' என்று கத்தினார்.

கோமதிக்கு அழுகைதான் வந்தது. கணவன் தன்னைக் கோபித்துக்கொண்டதற்கல்ல; அவள் மனத்தில் சேஷிப்பாட்டியின் வார்த்தைகள் ஆழமாக வேரூன்றிவிட்டன. இன்று விஷயத்தை விசாரிக்காமல் இருந்துவிட்டு நாளைக்குத் தன் பெண்ணுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்துவிடக்கூடாதே; கணவரும் பிடிவாதமாக இதை விசாரிக்க மாட்டேன் என்கிறாரே என்ற துக்கந்தான் அது.

இரவு முழுவதும் அழுது கதறிக் காரியத்தைச் சாதித்தே விட்டாள். மனைவியின் முட்டாள்தனமான தீர்மானத்தையும் பிடிவாதத்தையும் பொறுக்காதவராய், ராமலிங்கமையர் தலையில் அடித்துக்கொண்டு, காலையில் சங்கரையரைக் கண்டு இதைப்பற்றிக் கேட்டார். சங்கரையர், இது யாரோ விரோதத்தின் மேல் கட்டிய கதையென்றும், அந்த மாந்திரிகன் ஒருபோதும் இம்மாதிரியான காரியங்களில் ஈடுபட மாட்டானென்றும், வம்பர்களின் வார்த்தைகளை நம்பித் தடபுடலாக ஏதும் செய்துவிட வேண்டாமென்றும் சொல்லி அனுப்பினார்.

ராமலிங்கமையருக்கு அவமானமாய்ப் போய்விட்டது. வீட்டிற்கு வந்ததும் தம் மனைவியைக் கண்டவாறு பேசி, இனி இம்மாதிரி அசம்பாவிதமான வார்த்தைகள் எவைகளையாவது தம் காதுகளில் போட்டால், வீட்டை விட்டு ஓடி விடுவதாகப் பயமுறுத்தினார்.

கோமதியின் தாபம் என்னவோ தீரவில்லை. எச்சமயமும் அவள் தன் மகளின் உயிருக்கு ஆபத்தையே எதிர்நோக்கிக்கொண்டிருந்தாள். ஸ்டேஷன் மாஸ்டரையும் கோவு கைக்குள் போட்டுக்கொண்டிருப்பானென்று அவள் நம்பினாள். "அவள் தலையெழுத்து இப்படியும் இருக்க வேண்டுமா? எப்படியாவது வீட்டிற்கு அழைத்து வந்துவிடுவோம் என்றால், இத்தனை முரண்டு பிடிக்கும் புருஷர் அதற்கு இடம் கொடுப்பாரா? ஐயோ ஈசுவரி, நீதான் அவள் உயிரைக் காப்பாற்ற வேண்டும்'' என்று ஏதேதோ புலம்பிக்கொண்டே இருந்தாள்.

* * *

கோமதியின் மனக் கவலையை மிகைப்படுத்திக் காரியங்களைப் பிரதிகூலமாக்க ஒரு சம்பவம் இரண்டு நாட்களில் நிகழ்ந்துவிட்டது. மேலும், அச்சம்பவம் எவ்வளவோ விசால புத்தி படைத்த ராமலிங்கமையரின் கண்களையும் கட்டிவிட்டது.

ஹோமம் முதலியவைகள் மிகவும் விரிவான நடையில் செய்யப்படுவதாகக் கேள்விப்பட்டுச் சுற்றுப் பக்கத்துக் கிராமங்களிலிருந்து அதிதிகள் கங்கைகொண்டானில் வந்து கூடினர். ஹோமம் நடக்கும் எட்டு நாட்களும் அதிதி பூஜை செய்யப்படுவதாக அறிவித்திருந்ததால் ஜனக்கூட்டம் அதிகமாக இருந்தது. கோவுவும் பாலுவும் இவைகளுக்கெல்லாம் சந்தோஷத்துடன் பணச் செலவு செய்யத் தயாராக இருந்த போதிலும், அவர்கள் மனைவியர் இருவருக்கும் ஓய்வு ஒழிவு இல்லாமல் வேலை இருந்தது. சமையல் வேலைகளைச் செய்யவும், மற்றக் காரியங்களைக் கவனிக்கவும் ஆட்களை ஏற்படுத்தியிருந்த போதிலும் அவர்களுக்குத் தேவையான வீட்டுச் சாமான்களை எடுத்துக் கொடுப்பதற்கும் அவைகளை விரயம் செய்யாமல் கவனிப்பதற்கும் அச்சிறு பெண்கள் இருவரும் ஓய்வில்லாமல் ஈடுபடவேண்டியிருந்தது. மேலும் ஹோமம் பூஜை முதலியவை நடக்கும்போது சில கட்டங்களில் அவர்களிருவரும் புகையில் வேறு உட்கார்ந்திருந்து கஷ்டப்பட வேண்டியதாயிற்று. மொத்தத்தில்

இவ்விசேஷத்தை நடத்துவதற்கு மீனாக்ஷியும் ருக்மிணியுந்தான் தூக்கமின்றிக் கஷ்டப்பட்டார்கள்.

மீனாக்ஷிக்கு அப்பொழுது இருபது வயசு தான். இருந்தாலும் அவள் உடல் நிலை இந்தக் கஷ்டங்களையெல்லாம் தாங்கிக் கொண்டு போகக்கூடியதாக இருந்தது. ஆனால் ருக்மிணியின் தேக ஆரோக்கியம் அவ்வளவு திடமாக இருக்கவில்லை. ஏற்கனவே அவளுக்கு ஒற்றை நாடிச் சரீரம். அதிலும் அதிகமான வேலை. இரவு முழுவதும் தூக்கம் இல்லை. பூஜை முதலிய காரியங்களில் ஈடுபடவேண்டியிருந்ததால், வேளையில் ஆகாரம் இல்லை. எப்படியோ சகித்துக்கொண்டு முதல் நாளைத் தள்ளிவிட்டாள். இரண்டாவது நாள் பகற் பொழுதும் கழிந்தது. அன்று மாலை முதல் அவள் உடல்நிலை சரியாக இல்லை. அதனோடு ராத்திரி ஹோமத்தில் உட்காருவதற்காக மாலையில் ஸ்நானமும் செய்தாள். உடற் கோளாற்றை வெளியில் காட்டாமல் பாலுவுடன் ஹோம குண்டத்தின் முன் வந்து உட்கார்ந்துவிட்டாள்.

புகையும் சூடும் அவள் கண்களையும் தேகத்தையும் எரித்தன. அவளால் தலை நிமிர்ந்திருக்க முடியவில்லை. இருந்தாலும் பூஜையின் மத்தியில் எப்படி எழுந்திருப்பதென்று சகித்துக்கொண்டிருந்தாள். அத்தனை உபாதையையும் சகித்துக்கொண்டுவிட வேண்டுமென்ற உறுதி இருந்தாலும் தேகஸ்திதி ஒத்துப் போகவில்லை. ஒரு நிமிஷந்தான். என்னவோ செய்கிறதுபோல இருந்தது. கண்களை இருட்டியது. சமாளித்துக்கொள்ளுமுன்பே ஹோம குண்டத்தின் முன் சாய்ந்துவிட்டாள்.

"ஐயோ பெண்ணே, மோசம் போய்விட்டேனே!" என்ற அலறல், மந்திர சப்தங்களையெல்லாம் பொத்துக்கொண்டு எதிரொலித்தது. எங்கிருந்துதான் பார்த்துக்கொண்டிருந்தாளோ, கோமதி அவ்வளவு கூட்டத்தையும் ஒரே எட்டில் தாண்டி ருக்குவினிடம் ஓடி வந்தாள்.

ராமலிங்கமையரும் அங்கேதான் பூஜையைக் கவனித்துக்கொண்டிருந்தார். அவரும் ருக்மிணியிடம் ஓடி அவளை ஹோம குண்டத்தின் முன்பிருந்து தூக்கிக்கொண்டார்.

கோவு, பாலு, மீனாக்ஷி எல்லோரும் மனம் பதறிவிட்டனர். அவர்களும் எழுந்து போய் ருக்குவைக் கவனிக்க விரும்பிய போதிலும், பூஜையின் நடுவே எழுந்திருப்பது கூடாதென்று உட்கார்ந்திருந்தனர்.

ராமலிங்கமையர் ருக்குவைத் தோளில் சாய்த்துக்கொண்டு பூஜைக் கூடத்தைக் கடந்து வெளியே வந்தார். வீடு முழுவதும் ஒரே புழுக்கமாகவும், புகை சூழ்ந்தும் இருந்தது. ஆகவே அவர் ருக்குவை அதே வரிசையில் சில வீடுகளுக்கு அப்பாலிருந்த தம் வீட்டிற்குக் கொண்டுபோக வெளியே வந்தார். அவரைத் தொடர்ந்து கோமதி அழுதுகொண்டே வந்தாள். சில வேண்டிய மனிதர்களும் அவரோடு வெளியே வந்தனர்.

வெளியே 'ஜில்'லென்ற காற்று வீசியது. நாலைந்து வீடுகள் கடந்து போவதற்குள் ருக்கு பிரக்ஞையடைந்து விட்டாள். உடம்பில் ஏற்பட்டிருந்த பலஹீனம், அவளை அப்படித் தலை சாய வைத்ததேயன்றி அவள் நிலை தவறி மூர்ச்சையடைந்துவிடவில்லை. அவளுக்கு அதன்பின் நடந்தவை யாவும் கனவுபோலத் தெரிந்துகொண்டுதான் இருந்தன. ஆகவே அவள் கண் விழித்ததும், "என்னை எங்கே கொண்டுபோகிறீர்கள்? ஐயோ, பூஜையிலிருந்து என்னை ஏன் தூக்கி வந்தீர்கள்? என்னை அங்கே கொண்டுபோய் விட்டுவிடுங்கள்" என்றாள்.

நல்ல நினைவு இருந்ததாலும், எப்படியும் ஹோமத்திற்குப் பங்கம் வாராமல் நடந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தாலுமே ருக்மிணி இவ்வாறு கூறினாள். ஆனால் அதே வார்த்தை ராமலிங்கமையரின் வயிரம் பாய்ந்த மனத்தைப் பாகாக்கிவிட்டது.

ருக்மிணிக்குப் பதில் ஏதும் கூறாமல், அவளை வீட்டிற்குக் கொண்டுபோய்க் கட்டிலில் கிடத்திய அவர், "கோமதி, உன் பேச்சைக் கேட்காமல் மோசம் போய்விட்டேனே!" என்று கூறி, தலையில் கைகளை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டார்.

ஏற்கனவே மனம் இடிந்திருந்த கோமதிக்கு இவ்வளவு சொல்லிவிட்டால் போதாதா? பெண்ணையே பறி கொடுத்துவிட்டது போன்று, வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு ஓலமிட்டு அழத் தொடங்கினாள்.

ருக்குவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவள் படுக்கையினின்று எழுந்திருக்க முயன்றாள்; முடியவில்லை. தேகத்தில் அசதியும், ஜுரத்திற்குண்டான கோளாறுகளும் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. இருந்தாலும் தன் பெற்றோர்கள் இப்படித் துக்கப்படுவதன் காரணம்

என்ன? "அம்மா" என்று கோமதியம் மாளை விளித்தாள்.

"என்னடி என் கண்ணே, உனக்குச் சுய நினைவும் இருக்கிறதா?"

"அம்மா, எதற்காக அழுகிறாய்? என் என்னை இங்கே கொண்டுவந்துவிட்டீர்கள்?"

கோமதி தன் கணவனை நோக்கி, "பார்த்தீர்களா; பார்த்தீர்களா! அவள் நினைவு முழுவதும் அங்கேதான் இருக்கிறது. மந்திர சக்தி அவ்வளவு பலமாக வேலை செய்கிறது. ஐயோ, என் கண்ணை நான் உயிருடன் பார்க்கப் போகிறேனா? அட சதிகாரர்களா, என் ஒரே குழந்தையையும் பலியிட்டுவிட்டீர்களே!" என்று அழுதாள்.

ருக்மிணி எவ்வளவு ஆலோசனை செய்தும் தாயின் சொற்களை அர்த்தம் செய்து கொள்ள முடியவில்லை. "அம்மா, என்னை ஏன் இப்படிப் பைத்தியமாய் அடிக்கிறாய்? நீ சொல்வது ஒன்றும் எனக்குத் தெரியவில்லையே. யாரைச் சதிகாரர்கள் என்கிறாய்? யார் யாரைப் பலியிட்டுவிட்டார்கள்? யாருக்கு என்ன நேர்ந்துவிட்டது?" என்று கேள்விகளை அடுக்கினாள்.

கோமதி வாய் திறக்குமுன் ராமலிங்கமையர், "நீ பேசாமல் இருடி. அவள் சற்று நிம்மதியாகத் தூங்கட்டும். ருக்மிணி, நீ தூங்கம்மா, காலையில் எல்லாம் விவரமாகச் சொல்லுகிறேன்" என்று கூறிச் சம்பாஷணையை முடித்து வைத்தார்.

ருக்குவுக்கு எப்படித் தூக்கம் வரும்? உடல் வருத்தம் ஒரு புறம் இருந்தபோதிலும் மன வருத்தம் அவளைக் கண்ணயர விடவில்லை. பெற்றோருக்குத் திடீரென்று உண்டான மனவருத்தத்தின் காரணத்தை ஆலோசனை செய்தவாறே கண்களை மூடிக் கொண்டு கிடந்தாள். (தொடரும்)

"நம்மைக் கண்டாலும் ஆண் மக்கள் நிஷ்காரணமாய்ச் சீறி விழுகிறார்கள்; காறி உமிழ்கிறார்கள்; வைகிறார்கள்; அடிக்கிறார்கள்; நாம் நமது இஷ்டப்படி பிறருடன் பேசக்கூடாதென்று தடை செய்கிறார்கள். மிருகங்களை விற்பதுபோல், நம்மை விலைக்கு விற்கிறார்கள். தம்முடைய நூல்களிலும் சம்பாஷணைகளிலும் ஓயாமல் நம்மைத் தூற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மிக இழிவானதென்பதிலும், கூடிய சீக்கிரத்தில் மாற்றித் தீரவேண்டியதென்பதிலும் சந்தேகம் இல்லை. —பாரதியார்.

காதற் கண்ணீர்

'விஜயஸ்ரீ'

அந்தி மயங்கும் நேரம்: வானத் திரையிலே தாரகைகள் ஒவ்வொன்றாக ஜ்வலிக்க ஆரம்பித்தன. சில நக்ஷத்திர மணிகள் அண்டபகிரண்டமாகிய நீல வானிலிருந்து மெல்ல நழுவி ஆகாய வெளியில் பிரயாணம் செய்யத் தொடங்கின. பகலவன் தன் சுவர்ணமயமான கதிர்களால் செடிகொடிகளை அணி செய்து, மலைவாயில் விழும் தருணம். தன் காதலனை காலைக் கதிரவனின் கொடுமையின் முன் பயந்து ஓடிய பனி மெதுவாக உலகத்தைக் கவிய ஆரம்பித்தது. மலய மாருதத்தில் உல்லாஸமாக மிதந்துசென்ற பக்ஷி ஜாலங்கள் வஸந்த கீதத்தை இசைத்த வண்ணம் தத்தம் கூடு நோக்கி விரைந்து பறந்தன.

அதோ, அந்த மல்லிகைப் பந்தல் என்ன ஒய்யாரமாக அசைந்து ஆடுகிறது! நீல வானம் வளைந்து பூமிதேவியை முத்தமிடும் அக் காட்சியைக் கண்ட அவ்விளங் கொடியின் தெள்ளிய மனத்தில் ஒரு கிளர்ச்சி—புயவின் உதயம். மல்லிகை நல்லாளுக்குத் தன் உயிர்க்காதலனது நினைவு வந்தது. தென்றல் அவள் செவிகளிலே பிரேம சங்கீதத்தை இசைத்தது. மல்லிகையின் இருதயத்திலிருந்து அதற்கு எதிரொலி எழுந்தது. மூான்று அணவிக்கொண்டு சென்ற வண்டுகள், "உன் காதலன் சீக்கிரமே வருவான். அவனுடன் கூடி இன்புற்று இருப்பாயாக" என்று நன்மொழி கூறி, அத்தூதுக்கு ஊதியமாகத் தேன் பருகி, மயங்கிச் சென்றன. குயில்கள் தம் கூடுகளில் அமர்ந்த வண்ணம் சோகக் குரலில் உருக்கமாகப் பாடின. மலய மாருதம் மெல்ல மெல்ல அசைந்து சென்றது.

அடிவானத்தைத் தன் காதலன் வரவுக்காகப் பார்த்துக்கொண்டு இருந்த மல்லிகையின் கண்களில் ஒரு புதுக் காட்சி; மனத்தில் பொங்கும் உவகை; இருதயத்தில் தெவிட்டாத இன்பக் கனவுகள்.

ஆம். அடிவானத்துக்கு அருகில் அவளுடைய காதலன் தோன்றியிருந்தான். என்னே அவன் எழில்! பால் போன்ற வெண்மையான வண்ணத்தில் தன் காதலியைச் சந்தித்துச் சரச சல்லாபம் செய்வதை நினைப்பதால் தோன்றிய சிவப்பு.

மல்லிகைக்கோ சந்தோஷம் தாங்கவில்லை. எங்கே தன் அருமைக் காதலன்

தன்னைக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்காமல் போய்விடுகிறானோ என்று எண்ணித் தன் பசுங்கரங்களை மிக்க அழகுடன் ஒய்யாரமாக அசைத்து அந்த மேகத்தை அழைத்தாள். அவனும் சந்தோஷத்தோடு நீலவானில் விரைந்து உலவி வந்தான்.

தன்னை மிக்க லாகவத்துடன் கொஞ்சி அந்த லாவண்ய புருஷன் எவ்வெவ்விதம் சரஸசல்லாபம் செய்யப் போகிறானோ என்று எண்ணி, தன்னையே மறந்து கனவுலோகத்தில் தன்னந்தனியளாய்த் திரிந்து கொண்டிருந்தாள் அந்த மல்லிகை மங்கை.

திடீரென்று காதலியின் கனவு கலைந்தது. மகா கோரமான சிரிப்புச் சத்தம் அவளுடைய மனோகரமான மனக் கோட்டைகளைத் தகர்த்தெறிந்தது.

யார் அந்தக் கரிய அரக்கன்? என் தன் பிரகாசமான பற்களைக் காட்டி அண்டமே நடுங்கும்படி நகைக்கிறான்? அவனைத்தொடர்ந்து வரும் அந்தக் கருந் தடியர்கள் யார்?

வான வெளியிலே ஒரு கருமேகம் தோன்றியது. ரமணீயமாக வீசிக் கொண்டிருந்த தென்றல் சற்றுக் கடுமையாக மாறியது. உலகம் கிடுகிடுக்கும்படி அகோரமான இடி. கண்ணைப் பறிக்கும் மின்னல். பின்னும் சில நீலமுகில்கள்; பிறகும் பல நீருண்ட மேகங்கள். வான வெளி கறுத்தது. அங்குமிங்கும் மட்டும் நீலவானம் எட்டிப் பார்த்தது. தென்றவிலே கடூரம் அதிகரித்துச் சூருவளியாக மாறியது.

வெள்ளிடை மலையென யாவும் விளங்கின மல்லிகைப் பூங் கொடிக்கு. வெகு நாட்களாக வைரம் பாராட்டிவந்த அவ்வரக்கன் தன் கொடுந் தோழர்களுடன் சரியான தருணம் பார்த்துத் தன் காதலனைச் சூழ்ந்துகொண்டதைக் கண்ட தையலின் மனம் அனலிடைப்பட்ட மெழுகெனத் தத்தளித்தது.

பெரிய ஓசையுடன் காற்று மல்லிகைப் பந்தலை அசைத்தது. காதலி ஓலமிட்டாள்; கடவுளைத் தியானித்தாள். அவளுடைய அபயக்குரல் இடியோசையிலே கலந்தது.

கோரமான இடி. பளிச்சென்ற மின்னல். பேய்க் காற்று. மையிருட்டு. காற்றிலே அங்குமிங்கும் அசைந்தாடும் மல்லிகைக் கொடி. கடலலைகள் போல் வான வெளியில் சுழலும் கருமேகத் திரள்கள். மரங்களெல்லாம் பயங்கரமாக அசைந்தாடின. மறுபடியும் இடி, மின்னல். காற்றின் முனகல். அடுத்த நிமிஷம் அடைமழை.



உதயகிரியில் ஜகஜ்ஜோதியாய் ஜனித்தான் சூரியன். பூமியில் அங்குமிங்கும் தேங்கியிருந்த மழைத்தண்ணீரில் சூரியனின் ஒளி பட்டுப் பிரதிபலித்தது.

தன் காதலனது உயிருக்காகப் பிரார்த்தித்த மல்லிகை மெல்லியலாள் மயக்கம் தெளிந்து, வான வெளியை நோக்கினாள். மப்பும் மந்தாரமுமாய் இருந்த ககனத்தைக் கண்ட அதன் இருதயம் கருகியது. சோர்ந்து தலைகுனிந்தாள் அந்தக் காதலி. அவளுடைய காதலனைக் காணவில்லை!

மெதுவாகக் காற்று வீசியது. மல்லிகைக் கொடியின் இலைகள் அசைந்தன. ஓர் இலையின் நுனியில் ஒட்டிக்கொண்டிருந்த மழைத்துளி பூமியை நோக்கிப் புறப்பட்டது. வான வில்லின் ஏழு வர்ணங்களும் மின்னின அத்துளியில்.

அவ்விளக்கொடியின் இருதய ஒலியின் எதிரொலிபோலும் அச்சோகக் கண்ணீர்!

காதல் மனமும் கடல் அலையும்

வி. ஜி. ஸ்ரீநிவாஸன்

கடலுக்கும் அலைகளுக்கும் எவ்வளவு நெருங்கிய உறவும் தொடர்பும் உண்டோ அவ்வளவு மனத்திற்கும் காதலுக்கும் உண்டு. மனத்தை ஒரு பேராழிக்கு ஒப்பிடுவது சாலப் பொருந்தும். கடல் எவ்வளவு ஆழம் கொண்டதோ அவ்வளவு ஆழமுடைத்து மனமும். கடல் பரந்து கிடக்கின்ற அளவிற்கு மனமும் பரந்து கிடக்கின்றது. கடல் காண்பிக்கும் அளவுக்கு மனமும் வண்ண வேறுபாட்டையும் ஜாலத்தையும் காண்பிக்கும். இவ்வளவுதானா? கடல் தன்னுள்ளே எவ்வளவு உண்மைகளையும், ரகஸ்யங்களையும் மறைத்து வைத்திருக்கிறதோ அதைப்போலவே மனமும் தன்னகத்தே பதுக்கி வைத்துள்ளது. கடல்தானா அலைகிறது? மனமும் அலைகிறது. கடல்தான் கொந்தளிக்கிறதா? மனமும் கொந்தளிக்கும். கடற் பரப்பில் வீசும் புயல்போல் மனத்திடையே புயலும் வீசும். கடல் அலைகள் உயரும், தாழும், கிளம்பும், புரளும், விழும், வரும், போகும். மனக் கடலில் எழும் எண்ண அலைகளுக்கும் இவ்வளவு குணங்களும் உண்டு. மனம் அலை கொந்தளிக்கும் 'அட்லாண்டிக்' கடல்போல் இருக்கும் சமயமும் உண்டு; 'பேரமைதிப் பெருங்கடல்' போன்று அமைதிகொள்ளும் நேரமும் உண்டு.

கடல் குதிகொள்வது எப்போது? தன் அலைக் கைகளை உயரத் தூக்கி அரற்றுவது எப்போது? மதியின் குளிர் முகத்தைக் காணும்பொழுதல்லவா? அதனைப்போலவே காதல் மனமும், காதலி அல்லது காதலனின் ஆசை முகத்தை - நினைவுமுகச் சந்திரனைக் கண்ணுறும்போது, அதன் நினைவால் வாடும்போது அலை வீசுகிறது, கொந்தளிக்கிறது, குமுறுகிறது, அமைதியற்றிருக்கிறது. சிந்தனை கிளம்பும்; அகப்போர் நிகழும்; தூக்கம் பிடிக்காது. மதுவைப் பொழியும் சந்திரனும் எரிக்கும்; பால் சுவைக்காது; கோலக்கிளி மொழியும் காதில் குத்தல் எடுக்கும். அந்த நினைவுமுக மண்டலத்திற்கு அவ்வளவு வன்மை!

காதல் கொண்ட மனமும் மிகவும் துணிச்சலுடையதாகத்தான் இருக்க வேண்டும். இந்தக் காதலனுக்குத்தான் என்ன துணிச்சல்! "நெரித்த திரைக் கடலில் நின் முகம் கண்டேன்", "திரித்த நுரையினிடை நின் முகம் கண்டேன்" என்கிறான் காதலன். இதோடு நிறுத்திவிடுகிறானா? காதலியின் மனத்திற்குள்ளும் புகுந்து பார்த்துவிடுகிறான்! அதே உணர்ச்சியோடு, "நீலக்கடல் அலையே உனது நெஞ்சில் அலைகளடீ!" என்று கூறுகிறான். எவ்வளவு துணிவு! "கடலினும் பெரிதெமக் கவரிடை நட்பே!" என்பாள் காதலியொருத்தி!

"காதலென் றிதுவுமோர் கள்ளின் மயக்கமோ?"

* * *

காதலி 'உண் கண்'களை உடையவள்! 'மையுண்ட கண்'கள் என்று கூறுதல் மரபு. ஆனால் காதலனையே உண்டுவிடுவதுபோல் பார்க்கும் கண்களைக் கொண்டவள் என்று கூறுதல் பொருந்தும். அழகு பொங்கி வழியும் - அம் கவிழ் மேனி படைத்தவள். 'பருவ காலத் தருணி' அல்லவா? வயசு அவள் மேனிமீது ஸௌந்தர்யத்தை வாரி இறைத்திருக்கிறது. இளமைக்

காலத்திற்கோர் கோலம் செய்து கணத்திற்கோர் எழில் காட்டுகிறது. இப்படிப்பட்ட நலங்கொள் நாரியைச் சந்தித்திருந்தான் தொண்டித் துறையிலே ஒரு தலைவன். பாவம்! இப்போது பிரிந்திருக்கிறான். பிரிவாற்றாமை புண் செய்தது; காதல் நோய் செய்தது. மதுவைப் பொழிந்து மயக்கங் கொடுத்த மதிநிகர் வதனம் தோன்றி வாட்டுகிறது. பொழுது போகவில்லை. உறக்கமும் ஒழிந்தான்! அருகிலிருந்த அவனுடைய 'பாங்கன்'—நண்பன் இவனைப் பார்த்து, "கண் துயில்கின்றிலை, காரணம் என்ன?" என்று கேட்டுவிடுகிறான். அவனுக்கு விடை பகர்கிறான் காதலன்:

"ஒண்தொடி அரிவை
கொண்டனள் நெஞ்சே
வண்டிமிர் பனித்துறைத்
தொண்டி ஆங்கண்
உரவுக் கடலொலித்
திரையென
இரவி னானும் துயிலறி
யேனே."

—ஐங்குறுநூறு.

[ஒண்தொடி - ஒளி பொருந்திய வளையல். வண்டு இமிர் - வண்டுகள் ஒலிக்கின்ற. உரவு - உலவுதலையுடைய.]

"நண்பா, ஒளி பொருந்திய வளைக் கரங்களைக்கொண்ட ஏந்திழை ஒருத்தி என் மனத்தைக் கொள்ளை கொண்டுவிட்டாள். அவள் மிகவும் அழகு படைத்தவள். 'பொங்கரி படர்ந்த வுண்கண், அங்கலிழ் மேனி' கொண்டவள்! எப்போதும் அவள் நினைவாகத்தான் இருக்கிறேன். காதலுக்குத்தான் கண் என்பது கிடையாதே! அப்புறமல்லவா தூக்கம் என்பதும்? அது சரி. உனக்குத் தொண்டித் துறை நன்கு தெரியுமே! அந்தத் துறை வண்டார்க்கும் ஒலி கொண்டது; குளிர்ச்சி தர வல்லது என்று சொல்ல வரவில்லை. நீ கடலை நன்றாகக் கவனித்திருக்கிறாயா? கடல் எப்போதும் அமைதியிழந்திருக்கிறதல்லவா? எப்போதும் அலைந்து கொண்டே இருக்கிறது. பாவம்! ஓய்வு ஒழிச்சல் என்பதே கிடையாது! பகலில்தான் இப்படியென்றால் இரவிலும் அப்படித்தான். இரவிலும் அலை மோதுகிறது, கொந்தளிக்கிறது, குமுறுகிறது, பொருமுகிறது. ஏதோ வேதனைபோலும்! அந்தக் கடலுக்கும் என் மனத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை இருக்கிறதென்றே சொல்லவேண்டும். இப்போது புரிகிறதா, நான் கண் துயிலாத காரணம்?" என்கிறான் தலைவன்.

*　　*　　*

காதலன், 'ஒரு காலமும் சிதையாமை நல்கும் கல்விப் பெருஞ் செல்வம்' பெறும்பொருட்டோ, அல்லது பொருள் ஈட்டும் பொருட்டோ காதலியைப் பிரிந்துபோயிருக்கிறான். காதலி காதலனை நினைந்து நைந்து உருகுகின்றாள். அவன் நினைவு தவிர வேறு நினைவில்லை. உண்ணும் சோறு, பருகும் நீர் எல்லாம் அவன் நினைவிலே. படுக்கை கொள்ளவில்லை; பாலும் கசந்தது. கவலையற்று உறங்கும் ஊராரை வைகின்றாள். 'ஐயோ, இப்படிக் கவலையற்று, மெய்ம் மறந்து உறங்குகின்றார்களே! சீ! இது என்ன உலகம்? இப்படி ஒருத்தி வேதனைப்படுகிறாளே என்று யாருக்காவது தெரிகிறதா? என்ன இருதயமற்ற உலகம்!' என எண்ணமிடுகிறாள். 'சரி, நமக்கோ தூக்கம் பிடிக்கவில்லை. கடற்கரைக்குச் சென்று உலவி வருவோமே' என நினைந்து கடற்கரை சேர்கிறாள். வீடு கடற்கரை அருகே தான் இருக்கிறது. இள நிலவு காய்கிறது. உலவியதில் பயனில்லை. கடற்கரையில் வளர்ந்திருந்த புன்னை மரத்தடியே உட்கார்ந்தாள். எதிரே அலை வீசும் கடல், பொருமுகின்ற கடல், அமைதியற்ற கடல். இளங்காற்று, புன்னை மலரின் மணத்தையும் கலந்து வீசுகிறது. இவையெல்லாம் இவளது பிரிவாற்றாமை நிலையைப் பெரிது படுத்துகின்றன. தன் மன நிலையும் எதிரே காணும் கடல் நிலையும் எவ்வளவு தூரம் ஒத்து வந்திருக்கின்றன என்று கண்டுகொள்கிறாள்; தன்னைப்போலவே கடலும் துன்பத்திற்குள்ளாகியிருக்க

வேண்டுமென்று அனுமானிக்கிருள். இள நிலவில் கடல் கறுத்துக் காண்கிறது, கடலின் மேனியும் கறுத்து விட்டது. காதல் நோயால் வாட்ட முற்ற தனது மேனி கறுத்திருப்பது என்னவோ, உண்மைதான். இந்தக் கடலுக்கு என்ன நேர்ந்துவிட்டது? இதுவும் இரவு முழுவதும் உறங்காமல் இருப்பானேன்? இவ்வாருக யோசித்துக் கடலைத் தன் 'சகி'யாகக் காண்கிருள். அவள் வாயிலாக ஒரு பாட்டு வருகிறது.

"உன்னையும் நீத்தகன்ருர்
உண்டோ? உடல்கருகிப்
புன்னை கமழும் பொருகடலே—
என்னைப் போல்
நெஞ்சா குலம்பெருகி
நீயும் இரவெல்லாம்
துஞ்சாத தென்கொலோ?
சொல்லு."

—கிளவித்தெளிவு.

"உடல் கருகி, அலை மோதிப் பொருமுகின்ற கடலே! என்னைப்போல நீயும் மன வேதனை கொண்டு இராமுழுதும் உறக்கமின்றி இருப்பது ஏன்? உன்னையும் அகன்று சென்றவர் உண்டோ, என் காதலன் செய்ததுபோல? அப்படிப் பிரிந்தவரை நினைந்துதான் நீயும் என்னைப்போல உடல் கருகி, மனம் நொந்து, பொருமுகின்ருய்போலும்!" எனக் கடலைத் தன் சமதுக்கியாக வைத்துப் பேசுகின்ருள்.

* * *

நளன் தன் காதலியைக் காரிருளில் கானகத்தே கைவிட்டவன்! கலியின் கொடுமையால் 'ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக' அவள் ஆடையில் பங்கீடு செய்துகொண்டு தமயந்தியின் 'இன்னுயிரும், தன்னருளும், பூந்துகிலும் வேருகப்'போயினன்! எங்கெல்லாமோ சுற்றி அலைகிருன். அங்கே சுற்றி இங்கே சுற்றிக் கடற்கரைக்கு வந்து சேர்கிருன். தமயந்தி பற்றிய 'நினைப்பெனும் காற்றசைப்ப நெஞ்சிடையே மூளும் கனல் புகைய வேகின்ருன்' நளன். பிரிவாற்ருமை தாங்க இயலாததாக இருக்கின்றது. தன் நோயைப் பனிக்குருகினிடத்தும், கொக்கினிடத்தும் மொழிகின்ருன். கடலோரமாய் நடந்து வருகின்ருன். அங்கே காணும் ஒவ்வொரு காட்சியும் இவன் நோயை மிகைப்படுத்துகின்றது. இவன் காலடிச் சத்தம் கேட்டு ஓடி ஒளியும் நண்டின் செயல் கண்டு மனம் மாழ்குகின்ருன். இங்கிலையில் எதிரே தோன்றும் கடலையும் கண்டுவிடுகின்ருன்.

கடல் பேரலைகளை எழுப்புகின்றது. சிற்றலைகளை எழுப்புகின்றது. அலைகள் நுரை ததும்பப் பொங்கிப் பேரிரைச்சலுடன் கரையை நோக்கி வருகின்றன. கரையில் மோதியவுடன் சிதறுண்டு போகின்றன. பின்வாங்கித் தம்மை உள் இழுத்துக்கொள்கின்றன. பாய் சுருட்டிக்கொள்வதுபோலச் சுருட்டிக்கொள்கின்றன. மறுபடியும் ஒரு பேரலை; மேடு, பள்ளம், திரை, நுரை - இதே காட்சிதான். போகிறது, வருகிறது. புரள்கிறது, விழுகிறது, இறங்குகிறது. விம்முகிறது, பொருமுகிறது. இவ்வளவுக்கும் என்ன காரணம்? கேள்விமேல் கேள்வி தோன்றுகிறது, நளன் மனத்திடையே. தன் சஞ்சல மனத்துக்கும் கடலுக்கும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதைக் காண்கிருன். தன்னையே தேற்றிக்கொண்டு விடை தெரிந்து கொள்கிருன். கடலைப் பார்த்து நளன் மொழிகின்ருன்:

"போவாய், வருவாய்,
புரண்டு, விழுந்திரங்கி
நாவாய் குழற
நடுக்குறுவாய் - தீவாய்
அரவகற்றும் என்போல
ஆர்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொல்
இன்று!"

("தீவாய் அரவகற்றும் என்போல" - இதிலே நளன் தான் முன்பு கார்க்கோடகனைத் தீயினின்று மீட்டதைக் குறிக்கிருன்.)

"போகின்ருய், வருகின்ருய், புரளுகின்ருய், விழுகின்ருய், இரங்குகின்ருய். ஏன் இந்தச் சஞ்சலம்? நாவும் வாயும் குழறுகின்றன. ஏன் இப்படி உளறிக் குளறுபடி செய்கின்ருய்? ஏன் நடுக்கங்கொள்கிருய்? ஒலிக்கும் கடலே! நீ ஓலமிட்டு அவலமெய்தக் காரணம் என்ன? நீயும் என்னைப் போலவே பெண் ஒருத்தியை இரவிலே பிரிந்துவிட்டாயா என்ன?" என்று கடலை விளித்துக் கேட்கிருன் நளன்.

* * *

காதல் நோய் கொண்ட மனம், சமாதானம் தேடித் தன்னைத் தேற்றிக் கொள்ள முயல்வது இயற்கைதானே! "புண்பட்டவரே புண்வலியறிவர்."

அபராஜிதா

எப். டபிள்யூ. பெயின்
மொழிபெயர்ப்பு: கி. சாவித்திரியம்மாள்

(சென்ற இதழ் 52-ஆம் பக்கத் தொடர்ச்சி)

7

அம்மொழிகளைக் கேட்டபோது, காமரூபனின் தலை சுற்றிற்று. கனவு கண்டு விழித்தவன்போல் அபராஜிதாவை நோக்கியபடியே அசைவற்று உட்கார்ந்துவிட்டான். இரண்டொரு தடவை பேச முயன்றும் அவனுக்குப் பேச்சு எழும்பவே இல்லை. அவள் சொற்களினின்றும் எழுந்த விவரிக்க முடியாத ஓர் இன்ப வெறி அவன் உள்ளத்தில் குடிகொண்டது. மெய்ம்மறந்த நிலையினால் அவன் கண்கள் ஒன்றையும் பார்க்க இயலாமற் போயின. அபராஜிதாவின் குரல் மட்டும் அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தது. கடைசியாக அவன் கனவினின்றும் விழித்தெழுந்தவன்போல் சுயநிலையை அடைந்து எதிரே நோக்கினான். ஆஹா! அபராஜிதா உண்மையில் அவன்முன் நின்றுகொண்டுதான் இருந்தாள். அவள் அவனை நோக்கிக்கொண்டிருந்த விதமானது அவனை மயிர்க்கூச்செறியும்படிச் செய்தது. அவள் இதழ்களில் அரும்பிய புன்னகையோ அவன் உள்ளத்தையே கொள்ளைகொண்டது. ஒன்றும் பேச இயலாமல் கைகள் இரண்டையும் கூப்பிக்கொண்டு மௌனமாய் அவளை நோக்கிக்கொண்டு நின்றான். அப்பார்வை, "என்பால் அருள் புரிந்து நீ கூறியபடி செய். இல்லாவிடில் இப்படியே என்னைக் கொன்றுவிட்டாலும் நல்லது" என்று கூறுவதுபோல் இருந்தது.

சற்றுப் பொறுத்து அபராஜிதா, "காமரூபரே! நான் சொல்வதைக் கேளும்" என்று தொடங்கினாள். "அதோ ஜலத்தில் அம்மீன் எப்படித் துள்ளி விழுகின்றது பாரும். அதுபோல் அநாயாசமாய்க் கூடு விட்டுக் கூடு பாய்வது எப்படி என்பதை நான் உமக்குக் கற்றுக் கொடுக்கிறேன். ஆனால் காரியம் நடப்பது உம்மைப் பொறுத்தது. நீரே தைரியமாய் உம் சொந்த லாபத்திற்காக அதை இப்பொழுதே செய்து முடிக்க வேண்டும். ஆயினும் அரசனுடைய உருவத்தைப் போல் நீரும் அடைய வேண்டும் என்றே விரும்புவதால் பாதிக் கஷ்டம் நீங்கி விட்டதென்று சொல்லலாம். ஆனால் அவர் உயிரோடு இருக்குமளவும் நீர் அவர் உடலை உம்முடையதாக்கிக் கொள்வது முடியாது. உம்மிடம் அவருக்கு நம்பிக்கையை உண்டாக்கி ஒரு நிமிஷமேனும் அவர் தம் உடலை விட்டுப் பிரிந்திருக்கும்படி செய்ய முடியுமானால் நீர் உடனே அச்சமயத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். உங்கள் சொந்த உடலை விட்டு மற்றோர் உடலில் பிரவேசிக்கும் வித்தையை நான் உமக்குக் கற்றுக் கொடுக்கிறேன். அம்மந்திரத்தைச் சரியாய்த் தெரிந்துகொண்ட பிறகு நீர் அரசனை நெருங்கிப் பழகி அவருக்கு இவ்விஷயத்தில் குதூகலம் உண்டாகும்படிச் செய்ய வேண்டும். இது ஒன்றும் அப்படிச் சிரமமான வேலையல்ல; ஏனெனில் ஒரு வேலையும் இல்லாதவர்களாக இருப்பதால், அரசர்களுக்கு ஏதாவது புதிய விநோதம் என்று கூறி விட்டால் போதும்; அதிக உத்ஸாகமுண்டாய் விடும். அதை ஏற்படுத்தும் மனிதனையும் வெகுவாய்ப் பாராட்டுவார்கள். தெய்வம் இம்மாதிரி நடப்பதற்காகவே உம்மைச் சிருஷ்டித்திருப்பதுபோல் தோன்றுகிறது. உமது குரூபமே உமக்குப் பெரிய சக்தியாக அமையும். உண்மையில் அது உமது வஞ்சகத்தைப் பிறர் அறியவொட்டாமலும் செய்துவிடும். அவருக்கு விநோதம் உண்டாக்கிச் சிரிக்கும்படிச் செய்து வெகு சுலபமாய் நீர் அவருக்கு வேண்டியவராகிவிடலாம். அப்படியே கூடு விட்டுக் கூடு பாயும் வித்தையை அறிந்து கொள்ளும் ஆசையில் அவரை மெதுவாய்த் தம் தேகத்தைத் துறக்கும்படி செய்துவிடும். கணப்பொழுதேனும் உம்மால் இதைச் செய்ய முடிந்தால் பிறகு உம் காரியம் நிச்சயம் வெற்றிதான். நீர் வெற்றி அடைந்தவுடன் என்னை வந்து பாரும். அதற்குமேல் என்ன நடக்குமோ, நான் இப்பொழுது சொல்ல முடியாது."

பாதி மூடிய கண்களுடன் அவனை நோக்கியபடியே அவள் தன் மனத்துக்குள் பின் வருமாறு எண்ணமிடலானாள்: 'இச்

சனியன் பிடித்த நாவிதனுக்கு அம்மந்திரத்தை உபதேசிக்குமுன் இவன் ஆத்மா எப்படிப்பட்டது; இவன் உடலைப்போன்றதா; அல்லது அரசன் உடலைத் துறக்கச்செய்யும் குற்றத்தைச் செய்யத் தயங்குகிறதா என்று பார்க்க வேண்டும். நான் கூறியபடி செய்ய இவன் மனம் ஒப்பவில்லை என்றால், பாவம்! போனால் போகிறது என்று இவனை விட்டு விடலாம் என்றே தோன்றுகிறது. ஆயினும் இவனுக்குத் தன்னைப்பற்றிய நினைவில் வேறு ஒன்றும் மனத்திற் படாதென்றே நினைக்கிறேன். ஆம், என்னைப் பார்க்கும்போது இவனுக்கு எல்லாம் மறந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.'

அவள் எண்ணியபடியே தான் காமரூபனின் மனநிலையும் காணப்பட்டது. தன் உடலை விட்டு அரசனது உடலில் எப்பொழுது பிரவேசிப்போம் என்றே அவன் துடித்துக்கொண்டிருந்தான். அதை விட்டு அவனுக்கு வேறு நினைவே இல்லை. அரசனது உருவம் தனக்குக் கிட்டிவிட்டால் அபராஜிதாவும் தன்னைக் கண்டு ஆசை கொள்வாள் என்ற எண்ணமானது அவனை ஒரே இன்பக் கடலில் ஆழ்த்தியது. அந்தக் களிப்பில் முழுகி மெய்ம்மறந்தவனாய் அந்நிமிஷமே அவன் தன் உடலைத் துறக்கத் தயாராக இருந்தான். "கூடு விட்டுக் கூடுபாயும் அம்மந்திரத்தை மட்டும் எனக்கு உபதேசம் செய். மற்ற விஷயத்தைப்பற்றி நான் பார்த்துக்கொள்ளுகிறேன். இனி ஒரு க்ஷணமும் என்னால் காத்திருக்க முடியாதென்று தோன்றுகிறது. ஜன்மம் முழுவதும் ஓர் இருண்ட அறையில் வாசம் செய்தவனுக்குப் பொழுது விடிந்தவுடன் விடுதலை என்றால் எப்படி இருக்குமோ அப்படியே தோன்றுகிறது" என்றான் தாழ்ந்த குரலில்.

"நான் கூறுவதைக் கவனமாய்க் கேட்டு மனத்தில் அப்படியே பதிய வைத்துக் கொள்ளும். ஏதேனும் ஓர் அக்ஷரம் மறந்து போனாலும் பிறகு உம் காரியம் அரைகுறையாய்ப் போய்விடும்" என்று கூறிவிட்டு, அபராஜிதா தன் கைச் சுட்டு விரலை உயர்த்தி, "இதுதான் அம்மந்திரம். உயிரில்லாத உடல் எதுவாயினும் அதன்மீது நன்றாய்த் திருஷ்டியைச் செலுத்தி, 'யதோபதேசம் பூதாவேசம்' என்று இவ்வார்த்தைகளைத் தவறில்லாமல் ஜபிக்க வேண்டும். உடனே உம் உடலை விட்டு நீர் அவ்வுடலில் பிரவேசித்துவிடுவீர். மறுபடியும் உம் உடலில் புகவேண்டும் என்றால், 'கதாஸோரஸ்ய ஸ்மராமிருதாஸ்ய' என்ற வார்த்தைகளைக் கூறியவுடன் பழைய உடலை அடைந்துவிடுவீர். மந்திரத்தை மட்டும் சரியாய்க் கற்றுக்கொண்டு தவறில்லாமல் சொல்லிப் பார்க்க வேண்டும். ஒரு சிறிய தவறு ஏற்பட்டாலும் குடிகெட்டுப் போய்விடும்" என்றாள்.

அவள் கூறி முடிப்பதற்குள் காமரூபன் அம்புபோல் அவ்விடம் விட்டுப் பறந்து சென்றான். அப்படிப் போகும் அவனை வெறுப்பும் இகழ்ச்சியும் கலந்த பார்வையுடன் அபராஜிதா நோக்கிக்கொண்டிருந்தாள்.

'ஐயோ பாவம்! அவனுக்கு நாம் என்ன செய்கிறோம் என்பது தெரியவில்லை. தெரிந்தால் தனக்கு நாசத்தை உண்டாக்கிக் கொள்வதற்கு இப்படி விரைந்து செல்லமாட்டான். அவன் வெற்றியெல்லாம் ஒரு நொடியில் தீர்ந்து போய் ஒரே தாபத்திற்கு இடமாகிவிடாதா? நெருப்புடன் விளையாடுபவர்கள், வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் எல்லோரையும் ஒரே விதமாய் அது எரித்துவிடும் என்பதை மறந்துவிடுவோர்கள் என்று என் தந்தை கூறியது எவ்வளவு சரியாக இருக்கிறது! அவ்வுண்மையைக் காமரூபன் சீக்

கிரத்திலேயே அறிந்து கொள்வான். கூடு விட்டுக் கூடு பாய்வது என்பது ஒன்று; தனக்குப் பிடித்த உடலோடு இருப்பது மற்றொன்று. அவன் என்னை இன்னும் நன்றாய் அறிந்துகொள்ளும்பொழுது மாமலரினின்றும் தேனைச் சுமந்து வரும் வண்டுதான் எனினும், நெருங்கினால் கொட்டிவிடும் என்று தெரிந்துகொள்வான்' என்று அவள் எண்ணினாள்.

சிவபெருமான் இவ்வாறு கூறிக் கொண்டே வருகையில் அம்பிகை திடீரென்று அவரைத் தடுத்து, "இந்த அபராஜிதா ஈவு இரக்கமில்லாத ஒரு சிறுக்கி என்று நினைக்கிறேன். அவள் மனம் கல்லினும் கடினமாக இருக்க வேண்டும். இப்படித் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காகப் பாவம், காமரூபனை ஒரு கருவியாக உபயோகித்துக் கொண்டிருக்கிறாளே! அதற்காக அவனைப் படுகுழியில் தள்ளவும் அவள் யோசிக்கவில்லை. உண்மையில் அவ்வளவு பொல்லாதவள் என்றால் அவள் நீண்ட கூந்தலையே கயிறாகத் திரித்துக் கழுத்தில் சுருக்கிட்டுக் கொன்றாலும் தகும் என்றே தோன்றுகிறது" என்றாள்.

அதைக் கேட்டு மகேசுவரர் உரக்கச் சிரித்தார். "ஆஹா ஹைமவதீ! உன் இனத்தாரின் இயல்பைப்பற்றியே நீ இவ்வளவு வியப்படைகிறாயே! அவ்வளவு ஒன்றும் தெரியாதவளா நீ? அபராஜிதா தன் ஜாதிக்கு ஏற்றபடிதான் நடந்திருக்கிறாள். பெண்களின் குணத்திற்கு ஏதேனும் ஒரு வியவஸ்தை உண்டோ? தன் ஆசைக் காதலனிடம் வெண்ணெயைக் காட்டிலும் வேகமாய் உருகும் உள்ளத்தையுடைய ஒரு பெண் தான் விரும்பாதவர்களிடம் கருங்கல்லினும் கடின சித்தமுடையவளாய் விடுகிறாள். அலைகள் எவ்வளவு மோதினாலும் கற்பாறை அசைந்து கொடுக்குமோ? அதுபோல அப்பெண்ணின் உள்ளமும் தனக்கு விருப்பமில்லாதவர்கள் விஷயத்தில் சற்றேனும் இளகுவதில்லை. மேலும் தன் ஆசைக்குரியவனை அடைவதற்கு அவள் எதுவும் செய்யப் பின் வாங்கமாட்டாள். தன் கண்களில் மொய்த்துக்கொண்டிருக்கும் ஈக்களை வெகு அலக்ஷ்யமாய்ப் பசு காதுகளை ஆட்டி விரட்டுவதுபோல், எவ்விதத் தொந்தரவையும் உடனே அகற்றிவிடுவதற்கு அவள் அஞ்சுவதில்லை. ஆயினும் பாவம்! காமரூபனுக்காக இரங்க வேண்டியதுதான் என்றாலும் அதனால் என்ன பயன்? முற்பிறப்புகளில் செய்த பாவங்களுக்கு அபராஜிதாவின் மூலமாய்த் தண்டனையை அநுபவிக்கும்படி அவன் விதிக்கப்பட்டவன். யாவும் நான் கூறியபடியே நடந்திருக்கும் பொழுது நீ இவ்வற்ப விஷயத்திற்காகக் கதையை நடுவில் நிறுத்திவிட்டாயே! அபராஜிதா செய்தது தவறோ அல்லது சரியோ! உன் திருப்திக்காக வரைந்த சித்திரம்போல் இனி அவளை மாற்ற முடியுமா? கதை கேட்பவர்களின் கடமை, பேசாமல் கேட்டுக்கொண்டிருப்பதுதான் அல்லவா? மற்றொரு பெண் தன்னைக் கண்டு மெச்ச வேண்டும் என்று ஒரு பெண் நடப்பதாயிருந்தால் அவளால் ஒன்றும் செய்ய முடியாது. ஏனெனில் உலகில் ஒவ்வோர் அழகிய மங்கையும் மற்றோர் அழகிய மங்கையின் விரோதியேயாவாள். தன்னைப்போல நடப்பதற்காகவே அவளைப் பெரும் போட்டியாக நினைத்து அவள்மீது கடும் பழி சுமத்துவாள். மற்றொரு மாதைப் பற்றி நன்றாய் அறிந்திருந்தாலும் தன்னைப்பற்றி அவள் தெரிந்து கொள்வதில்லை. பிறர் தன்னைப் பார்ப்பதுபோல் பார்க்கும் சக்தி இல்லாததால் தனக்கும் மற்றவர்களுக்குமுள்ள ஒற்றுமையை அவள் அறியமாட்டாள். ஏன், இவ்வுலகம் தோன்றின நாள் முதல் எல்லாப் பெண்களையும்போன்றவளே நானும் என்பதை எந்தச் சௌந்தரியமுள்ள பெண்தான் அறிந்துகொண்டிருக்கிறாள்? இப்படித்தான், மற்றப் பூனைகளும் சப்தம் செய்யாமல் பாயும் என்று பூனைக்குத் தெரியவே தெரியாதாம். அதுபோல இருக்கிறது நீ கூறுவது."

"சரி, போகட்டும். உங்கள் கதையைக் கூறி முடியுங்கள்" என்றாள் தேவி.

பிறை சூடும் பெருமான் மீண்டும் சிரித்தார். "என்ன அநியாயம்? நீயே தடுத்து விட்டு என்னைக் கோபித்துக்கொள்ளுகிறாயே! காமரூபன்மீது பிறந்த தயை உன் பொறுமையை மிஞ்சிவிட்டதோ? அபராஜிதாவைக் கண்டிக்க வேண்டும் என்ற ஆத்திரத்தில் கதையைக் கடைசி வரையில் கேட்பதற்குக்கூட உன்னால் முடியவில்லை. போனால் போகிறது; கதை சீக்கிரத்தில் முடிந்துவிடும்" என்றார்.

8

இதன் நடுவில் கேசவன் எப்படியோ நடந்து அரண்மனை போய்ச் சேர்ந்தான். அவனை ஏதோ கொடிய மிருகம் தூக்கிச் சென்று கொன்று தின்றுவிட்டது என்று எண்ணிய அனைவரும் அவன் சௌக்கியமாய் வந்து சேர்ந்ததைக் கண்டு ஆனந்த

முற்றனர். காமரூபனைப்போலவே அவனும் தன் உள்ளத்தை அபாராஜிதாவிடமே விட்டு வந்திருப்பதை உணர்ந்தான். அதற்குப் பதில் அவளுடைய நீலோற்பல மலர் அவனிடம் இருந்தது. அவனையும் மீறி அவன் கை அம்மலரை விடாமல் கெட்டியாய்ப் பற்றிக்கொண்டிருந்தது. அது அவன் முன் நின்று, "எங்கே, மலருக்கு உடையவளை உம்மால் மறக்க முடியுமோ பார்ப்போம்" என்று கூறி அவன் உறுதியைப் பரிகசிப்பது போல் இருந்தது. கேசவன் என்ன செய்வான்? அபாராஜிதாவை அவனால் மறக்கமுடியவில்லை. அப்பொழுதுகூட அவனுக்கு அவள் நினைவாகவே இருந்தது. இரவு முழுவதும் அவளைப்பற்றிக் கனவு கண்டுவிட்டுப் பொழுது விடிந்ததும் ஒன்றும் செய்யத் தோன்றாமல் அப்படியே அசைவற்று உட்கார்ந்திருந்தான். அவனால் ஆகாரமும் உட்கொள்ள முடியவில்லை. அபாராஜிதாவின் ஸ்பரிசம் பெற்றவுடனேயே தன் தீர்மானம் அகங்காரம் யாவும் ஒரு நொடியில் இருந்த இடம் தெரியாமற் போனதைக் காண அவன் மிகவும் வெட்கமடைந்தான். உண்மையை ஒப்புக்கொள்ள அவனுக்கே மிக்க அவமானமாக இருந்தது. ஒவ்வொரு சமயம் அவளை அப்படியே கொன்றுவிட வேண்டுமென்ற ஆத்திரம் அவனுக்கு உண்டாயிற்று. ஆயினும் அபாராஜிதா காந்தம்போல் அவனைத் தன்வசம் இழுக்கலானாள். அவள் வசமாவதனின்றும் மானம் அவமானம் இரண்டும் சேர்ந்து அவனைத் தடுத்தபோதிலும் எங்கே தன் உறுதி தளர்ந்துபோய் அவள் அடிபணியும் தாசனுவதை அவன் விரும்பிவிடுவானோ என்று ஒவ்வொரு நிமிஷமும் சந்தேகம் உதித்தது. அந்த நீலோற்பல மலரும் அவன் கண்முன் சதா காட்சி அளித்துக்கொண்டே இருந்தது. அதைப் பார்க்கும் பொழுதெல்லாம் நடந்தவை யாவும் மலரின் உருவத்தில் தோன்றிச் சிறிது வெறுப்புடன், "இதோ பார். உன்னைப் போலவே நானும் மெதுவாய் வாடியுலர்ந்து கொண்டிருக்கிறேன். எல்லாம் நம் இருவருக்கும் ஜீவாதாரமாக இருந்த அக்குளக் கரையை விட்டு என்னைக் கொண்டுவந்ததுதான் காரணம்" என்று அவனை நோக்கிக் கூறுவதுபோல் இருந்தது.

அரசனின் நிலைமையைக் கண்டு மந்திரி முதலானோர் அச்சமுற்றார்கள்.

"அரசர் இப்படி உத்ஸாகம் இழந்து விளங்குவதற்கு என்ன காரணமோ தெரியவில்லையே! காட்டில் ஏதாவது விஷப்பாம்பு கடித்திருக்குமோ? அவரைப் பார்த்தால் உயிர் இருந்தும் உயிர் இல்லாதவர்போல் அல்லவோ தோன்றுகிறார்?" என்று அவர்கள் கவலைப்பட்டனர்.

"அரசர் உடம்பைப்பற்றி நாங்கள்தாம் அறிவோமேயொழிய மந்திரிகளுக்கு என்ன தெரியும்? எல்லாம் அவர் தந்தை செய்த வேலை. அவர் உத்ஸாகமற்று இருப்பதில் என்ன ஆச்சரியம்? மன்மதனே பெண்ணின் காற்றுப்படாமலிருப்பதை யாரேனும் கண்டதுண்டோ?" என்று அரண்மனை வைத்தியர்கள் கூறினார்கள்.

அப்படியே அவர்கள் தம்மைத் தன்வந்தரிகளாகவே நினைத்துக்கொண்டு நகரம் முழுவதும் தேடி மிகவும் ரூபவதியான ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து அரசனின் முன் கொண்டுவந்து நிறுத்தினார்கள். ஆனால் அவர்கள் எண்ணியதற்கு நேர் விரோதமாயிற்று. கேசவன் ஒரே கோபத்துடன் அவர்கள் மேல் சீறி விழவும் அவர்கள் நடுநடுங்கிப் போய் அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்கள். பாவம்! அந்தப் பெண்ணோ பயத்தில் அப்படியே மூர்ச்சித்து விழுந்துவிட்டாள். அவளை எடுத்துப் போய்ச் சிகிச்சை செய்ய வேண்டியது அவர்கள் வேலையாயிற்று. 'ஆஹா! எல்லோரையும்விடப் பெரிய அறிஞர்கள் என்று இவ்வைத்தியர்கள் இறுமாப்புக் கொண்டிருந்தார்கள் அல்லவா? இவர்களுக்கு நன்றாய் வேண்டும். பெண் வாடையே வீசப் பொறுக்காத அரசனிடம் ஒரு பெண்ணைக் கொண்டுவந்து ஆசை காட்டினார்களே?' என்று மந்திரிகள் எண்ணியவர்களாய், ஜோசியர்களிடம் கலந்து ஆலோசித்து வேறு எவ்வளவோ விதமாய் அரசனை விநோதப்படுத்த முயன்றார்கள். மன்னனோ எதிரில் நாட்டியமாடும் பெண்களையாவது பாடகர்களையாவது சிறிதேனும் கண்ணெடுத்தும் பாராமல் ஒரே துயரக் கடலில் ஆழ்ந்தவன்போல் உட்கார்ந்திருந்தான். ஒன்றும் பலிக்காமற் போகவே சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் அம்முயற்சிகளையும் விட்டுவிட்டார்கள். ஆயினும் நகரெங்கும், "அரசனின் வியாதியைக் குணமாக்குபவர்களுக்கு அரசனுடைய நிறைக்குச் சமானமான தங்கம் அளிக்கப்படும்" என்று பறை சாற்றுவித்தார்கள். இச்செய்தி எங்கும் காட்டுத் தீப்போல் பரவியது. பணம் கிடைக்கும் என்ற ஆசையில் ஜனங்களும் கூட்டம் கூட்டமாய் வந்து கூடினார்கள். அதனுடன் மன்னனுக்கு ஏதோ நோய் என்றதும்

அவர்கள் மிகவும் வருத்தமும் அடைந்தார்கள். ஏனெனில் அரசனை ஸாக்ஷாத் மன்மதன் என்றே எண்ணி அவர்கள் அவனைப் பார்க்கும்பொழுதெல்லாம் தங்கள் பிறவிப் பயனைப் பெற்றுவிட்டதாகக் களிப்படைவார்கள்.

இச்செய்தியைக் கேட்ட காமரூபனும் எல்லையில்லாத ஆனந்தமடைந்தான். “அடாடா! எதற்காக மூளை கலங்க யோசித்துப் பிராணனை விட்டுத் தவித்துக் கொண்டிருந்தேனோ அந்தச் சந்தர்ப்பம் இப்பொழுது தானாகவே வாய்த்திருக்கிறதே! என் பிரார்த்தனைகளுக்கு மனமிரங்கி அந்த விநாயகக் கடவுளே இந்த அருள் புரிந்திருக்கிறார் என்பதில் ஐயமில்லை'' என்று தானே கூறிக்கொண்டான். தனக்கு அவ்வாறு அருள் புரிந்தது விநாயகக் கடவுள் அல்ல, அபராஜிதாவே என்று அவன் கனவிலும் அறியவில்லை. இருளில் கண்ணில்லாக் குருடர்கள்போல் அலையும் இம்மனிதர்களின் செயல்கள் தாம் என்ன விசித்திரமாயிருக்கின்றன! அந்தக் காமரூபனாவது அல்லது கேசவனாவது தம் இருவருக்கும் உறவு உண்டாக்கியது யார் என்று கொஞ்சமேனும் சந்தேகிக்கவில்லையே! இல்லையெனில், அரசர்களுக்குச் சாதாரண நாவிதர்களுடன் நட்பு ஏற்படுவது எப்படி? ஒரு வண்டியில் பூட்டிய இரு காளைகள்போல் தம் இஷ்டத்திற்கு மாறாகவே அவ்விருவரும் ஒரே இடத்திற்கு ஓட்டிச் செல்லப்படுவதை அவர்கள்தாம் எப்படி அறிவார்கள்?

வெகு நேரம் யோசனை செய்துவிட்டுப் பிறகு காமரூபன் தலையை மொட்டையடித்துக்கொண்டு காவியுடை தரித்துத் தைரியமாய் அரண்மனை வாயிலையடைந்தான்.

''அரசன் நோயைத் தீர்க்கும் மருந்து என்னிடம் இருக்கிறது. என்னை உடனே ராஜ சமுகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று அவன் வாயில் காப்பாளர்களிடம் கூறினான்.

‘‘யார் இது? காமரூபன் அல்லவா இவ்வாறு மாறு வேஷத்தில் வந்திருக்கிறான்? சூரியனை எங்கேயாவது மேகம் மறைக்க முடியுமோ? ஆயினும் அரசனுக்கு இப்பொழுது நாவிதன் தேவையில்லையே!'' என்று அவர்கள் ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டார்கள்.

அதைக் கேட்டுக் காமரூபன், “அப்படி இல்லை. நாவிதனுக்குத்தான் எல்லாம் தெரியும். எவ்வளவோ சமயங்களில் மூவுலகங்களிலும் உள்ள சிறந்த வைத்தியர்களைக் காட்டிலும் அவனே அவசியமாயிருப்பான். ஏனெனில் வைத்தியர்கள் உடல் நோய்க்குத்தான் மருந்து கொடுப்பார்கள். ஆனால் நாவிதனோ மன நோயையும் கண்டறிந்து கொள்வான். இப்பொழுது நான் அரசன் வியாதியைக் குணமாக்கி விடுகிறேன். எனக்கு வெகுமதி ஒன்றும் தேவை இல்லை. மன்னன் உடலைக் காட்டிலும் எனக்குப் பணம் பெரிதல்ல'' என்றான்.

அதைக் கேட்ட வாயில் காவலர் சிறிது யோசனை செய்து முடிவில், ‘வாஸ்தவந்தான். இவன் கூறியபடி செய்வதில் என்ன தவறு? எவ்வளவோ செய்தும் ஒன்றும் பிரயோஜனம் இல்லாதிருக்கும் பொழுது இவனால்தான் ஏதாவது பயன் ஏற்படுமோ என்று பார்ப்பது நல்லது தானே? யார் கண்டார்கள்? ஒரு வேளை இவன் திவ்விய ரூபத்தைப் பார்க்கும் பொழுது அரசன் மனத்துக்குச் சற்று உத்ஸாகம் உண்டாகலாம்’ என்று எண்ணியவர்களாய்க் காமரூபனை அரசன்முன் அழைத்துச் சென்றார்கள்.

அரசனை எதிரே கண்டதும், கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு காமரூபன் நர்த்தனம் செய்யத் தொடங்கினான். அதனுடன் விரல்களைச் சொடுக்கிக்கொண்டு காக்கையின் குரல்போன்ற கர்ண கடூரமான குரலில் ஏதோ பாட்டும் பாடத் தொடங்கிவிட்டான். அவன் இவ்விதம் கண்டபடி குதிப்பதைக் கண்டு அரசனைச் சுற்றியிருந்தவர்கள் யாவரும் அடக்க முயன்றும் முடியாமல் அரசன் எதிரிலே உரக்கச் சிரிக்கலானார்கள். இச்சப்தத்தினால் உணர்வு பெற்று எழுந்த கேசவனோ மிகக் கோபத்துடன் சுற்று முற்றும் பார்த்தான். காமரூபனைக் கண்டதும் அவனுக்கும் சிரிப்பு அடக்க முடியாமல் வந்துவிட்டது. எல்லோருடனும் சேர்ந்து அவனும் சிரிக்கத் தொடங்கினான். அதனால் மற்றவர்கள் சிரிப்பு இன்னும் அதிகமாக, எல்லோருக்கும் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகி விட்டது.

“ஆஹா! இந்தக் கோர ரூபம் படைத்த நாவிதனுக்குச் சுக்கிர தசை அல்லவா அடித்துவிட்டது? இவன் குரூபமே இவனுக்குப் பெரிய அதிருஷ்டமாய் விட்டதே! அரசன் இனிமேல் இவனுக்குக் கனகாபிஷேகம் அல்லவா செய்வான்!'' என்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள். ஒரே அடியாய்ச் சிரித்ததில் கேசவனுக்குக் கண்களில் ஜலங்கூட வந்துவிட்டது.

வெகு சஷ்டப்பட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டு அவன் காமரூபனை நோக்கி, "இதென்ன விந்தை? நீ யார்? மனிதனா? உன் பெயர் என்ன?" என்று வினவ, தான் யாரென்பதைக் காமரூபன் அவனுக்குக் கூறினான். அதைக் கேட்டுக் கேசவன் மறுபடியும் தாங்க முடியாமல் சிரிக்கத் தொடங்கினான்.

கடைசியாக அவன், "அப்பா! இப்பொழுது எதற்காக இங்கு வந்தாய்? என் வியாதியைப் போக்குவதற்கா அல்லது என்னையே கொன்றுவிடுவதற்கா? அது எப்படியாயினும் கத்திக்கு உறைபோல் உன் பெயர் மட்டும் உனக்கு வெகு பொருத்தமாய் அமைந்திருக்கிறதே. அந்த அதிருஷ்டத்தை என்னவென்று சொல்லுவேன்?" என்றான்.

"மகாராஜா, தாங்கள் உண்மையைக் கூறினீர்கள். ஆனால் அது தங்களுக்குத் தெரியாது. என் பெயர் எனக்கு எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது என்பதைத் தாங்கள் சரியாய் அறிந்துகொள்ளாமலே சொல்லிவிட்டீர்கள். கத்திக்கு எவ்வளவோ உறைகள் உண்டு. அப்படியே காலுக்கு அணிவதற்கும் எவ்வளவோ செருப்புகள் இருக்கலாம் அல்லவா?" என்று காமரூபன் பதில் கூறினான்.

"என்ன? ஏதோ அர்த்தமில்லாத பதில் கூறுகிறாயே! எனக்கு விநோதமுண்டாக்குவதற்கா?" என்று அரசன் கேட்டான்.

"கொட்டாங்கச்சியைக் கண்டு உள்ளிருக்கும் ருசிகரமான தேங்காயை அறிய முடியுமோ? அதுபோல் என் வெளித் தோற்றத்தைக் கண்டு நீங்கள் சந்தேகிக்கிறீர்கள். நான் பார்ப்பதற்குச் சிரிப்பு வரும்படியாயிருந்தாலும், இம்மாதிரியான உருவத்துடன் என்னைப் படைத்த குற்றத்திற்காக நான்முகன் மற்ற எவருக்கும் இல்லாத சில சக்திகளை அளித்து அக் குற்றத்திற்குப் பரிகாரம் செய்துவிட்டார்" என்று கூறிக் காமரூபன் மீண்டும் குரலைத் தாழ்த்தி, "மகாராஜா இச்சைப்படி உருவத்தை மாற்றிக் கொள்ளக்கூடியவன்தான் காமரூபன் என்ற பெயருக்கும் ஏற்றவன் அல்லவா?" என்றான்.

கேசவன் அவனை வெறுப்புடன் நோக்கி, "எதப்பா! ஒரே அடியாய் அடிக்கிறாயே! அது மட்டும் உண்மையாக இருந்தால் நீ முன்பே அவ்வாறு செய்திருக்கமாட்டாயா? இந்த உருவத்தை விட்டு வேறு எந்த உருவம் கிடைப்பதாயிருந்தாலும் உடனே சம்மதித்திருப்பாயே" என்றான்.

"மகாராஜா! அவ்வளவு அவசரப்பட்டுப் பேசி விடாதீர்கள். நீங்கள் இப்படிப் பழிக்கும் இவ்வுருவத்தினால்கூட எவ்வளவோ பயன் உண்டாகலாம். இந்த ரூபத்தின் உதவியால் அல்லவா நான் இப்பொழுது தங்கள் சந்நிதானத்தை அடைந்தேன்? அந்தப் பாக்கியம் ஒன்றே போதுமே எனக்கு. தாங்கள் வேறு எதைக் கண்டு இவ்வாறு சிரித்துச் சந்தோஷித்திருப்பீர்கள்?"

அம்மொழிகளைக் கேட்ட கேசவன், "ஆம்! அது சரிதான்" என்று ஒப்புக்கொண்டான்.

"இதோ பாருங்கள். இந்த உருவமே மற்ற எல்லாவற்றையும்விட எனக்கு அதிகம் பிடித்ததாயிருக்கலாம். அதன் காரணத்தை யார் கண்டார்கள்? அது எப்படியோ போகட்டும். இதை மட்டும் நான் தங்களுக்குக் கூறுகிறேன். என் இச்சைப்படி இவ்வுருவத்தை மாற்றிக்கொள்ள எனக்குச் சக்தி உண்டு என்பது மட்டுமல்ல; இவ் விஷயத்தில் குதூகலமிருந்தால் தங்களுக்கும் நான் அச்சக்தி உண்டாகும்படி செய்கிறேன். ஏதோ சற்று நேரம் பொழுது போவதற்கு அநுகூலமாக இருக்கும். ஆயினும் தங்களுடைய இத்திவ்விய ரூபத்தை விட்டு வேறு எந்த ரூபத்தைத் தான் தாங்கள் விரும்ப முடியும்?"

கேசவன் அவனை ஆச்சரியத்துடன் நோக்கினான். சிறிது பொறுத்து, "மறுபடியும் நம் பழைய ரூபமே வேண்டும் என்றால் உடனே அதை அடைய முடியுமா?" என்று கேட்டான்.

"அவிழ்த்த ஆடையை மீண்டும் அணிவது எவ்வளவு எளிதோ அவ்வளவு எளிதாக அடையலாம்" என்றான் காமரூபன்.

"சரி, ஆனால் அது எப்படி என்பதைச் சொல்" என்று கேசவன் கேட்டான்.

"மகாராஜா! இப்பொழுது இந்த இடத்தில் அதைச் சொல்லலாகாது" என்றான் காமரூபன்; "அது எல்லோருக்கும் சொல்லக்கூடிய ரகசியம் அல்ல. கோடி ரூபாய் கிடைப்பதாக இருந்தாலும் நான் வேறு எவருக்கும் அதைக் கூறவும் மாட்டேன். தாங்கள் இந்நாட்டு அரசர்; என்னைச் சொல்லும்படிக் கட்டளையிட்டால் நான் சொல்ல வேண்டியவன். ஆகையால் இதைத் தங்களுக்குக் கூறுகிறேன். தங்களுக்கு அதனால் உத்ஸாகம் ஏற்பட்டால் எனக்கு அது போதும். தங்கள் இஷ்டம் எதுவோ

தீர்மானமாய்ச் சொல்லுங்கள். மன்மதன் கூடக் கண்டு மோகிக்கும்படியான திவ்விய ரூபத்தையுடைய தாங்கள் வேறு சரீரம் வேண்டும் என்று எதற்காக விரும்பப் போகிறீர்கள்?"

"என்? உன் சக்தியைப் பரீக்ஷை செய்து பார்க்கலாம் என்றுதான். எனக்கும் தற் சமயம் ஒரு வேலையும் இல்லை. நீ வீணே பெருமை யடித்துக்கொள்கிறாய் என்று நினைக்கிறேன். அப்படி இருந்தால் சொல்லியபடி செய்ய முடியாமற் போனதற்காக உனக்கு நல்ல சிறை விதிக்கச் செய்வேன். அப்படிக்கின்றி உண்மையில் உனக்கு அந்தச் சக்தி இருந்தால், அரசனை விநோதப்படுத்தியதற்குத் தக்க கைம்மாறு உனக்குக் கிடைக்கும்" என்றான் கேசவன்.

அவ்வார்த்தைகளைக் கேட்டு, காமரூபனுக்கு ஆனந்தத்தால் உடம்பெல்லாம் நடுங்கிற்று. அதை மறைக்கும் பொருட்டு அவன், "என் உயிரும் உடலும் மகாராஜாவைச் சேர்ந்தவை. அவர் இஷ்டம்" என்றெல்லாம் கூறிக்கொண்டு மறுபடியும் பாடிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் கூத்தாடத் தொடங்கினான்.

(தொடரும்)

★

கம்பன் மலர்

[சென்னைக் கம்பர் கழக வெளியீடு. விற்பனை உரிமையாளர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. மலிவுப் பதிப்பு ரூ. 2—0—0; உயரிய பதிப்பு ரூ. 2—8—0.]

கவிச்சக்ரவர்த்தி கம்பரைப்பற்றியும் வானங்கடந்த அவருடைய காவியத்தைப்பற்றியும் மிகுதியாக அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் சென்ற சில வருஷங்களாகத் தமிழ் மக்களிடையே ஓங்கிவருவது நற்காலத்துக்குரிய அறிகுறியாகும். பல அறிஞர்கள் கம்பராமாயணத்திலுள்ள இன்சுவைகளை விளக்கும் கட்டுரைகளை வரைந்து மக்களின் இந்த ஆர்வத்துக்கு உணவளித்து வந்திருக்கின்றனர். கம்பர் விழாவின்போது வெளியான இந்தக் 'கம்பன் மலர்' அத்தகைய ஒரு முயற்சியே. இந்தத் தொகுதியில், பல கலைஞர்களின் கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன. கம்பர் கலைக்கோயிலில் புகுவதற்கு இது பிரவேச கோபுரமாக அமையும்.

[இந்தக் கட்டுரை யுத்த களத்திலிருந்து வந்திருக்கிறது. இதை எழுதிய சிப்பாய் எழுத்துத் திறமையும் உடையவராக இருப்பதால் துப்பாக்கி பிடிக்கும் கையிலே பேனாவைப் பிடித்து இக்கட்டுரையை எழுதி அனுப்பியிருக்கிறார்.—ப-ர்.]

"சிப்பாயைக் கண்டஞ்சுவார் - இந்த நிலைகெட்ட மானிடரை நினைந்துவிட்டால் - நெஞ்சு பொறுக்குதில்லையே" என்று ஓர் ஆவேசக் கவிஞர் பதைபதைத்தார். அதே நிலை கெட்ட மானிடர் இப்போது சிப்பாயாகவே ஆகிவிட்டாரானால், இதுவும் காலத்தின் கோலந்தானே? "எங்கும் சிப்பாய் மயம் ஜகத்" என்று கூடச் சொல்லிவிடலாம்.

பழங்காலத்திலிருந்தே எங்கள் தொழிலுக்கு ஆதரவு இருந்துகொண்டு வந்திருக்கிறது. ஆனால் ஒரே ஒரு மாறுதல்: அக்கால அரசாங்கம் எங்கள் தொழிலுக்கு வேண்டிய ஆதரவு கொடுத்தது என்றாலும், அத்தனை மதிப்புக் கொடுக்கவில்லை. எங்கோ ஒரு மூலையில், குக்கிராமங்களில் இருந்துகொண்டு, வயிற்றுப் பிழைப்புக்கு மண்ணைக் கிளறிக்கொண்டிருந்த விவசாயிகளுக்கே அளவில்லாத மதிப்புக் கொடுத்தனர் முட்டாள்தனமாக. 'குடி உயரக் கோனுயரும்' என்று அவ்வரசாங்கத்தைப் பின்பற்றிக் கூழுக்குப் பாடும் அண்ணாவிப் புலவர்களும் 'கன்னா பின்னா' என்று உளறிக் கொட்டிவைத்தனர். அத்தனை அசட்டுத்தனமாக எங்கள் அரசாங்கம் நடந்துகொள்ள அதற்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? எங்கள் தொழிலை விருத்தி செய்வதே மாபெரும் குறிக்கோளாகக் கொண்டு, வியவசாயிகளிடமிருந்தே யுத்த நிதியென்ற ரீதியிலாவது வசூல் செய்து எங்களைக் கண்ணியப்படுத்துகிறது. "கத்தி உயரக் காசு சேரும்" என்று புதுமொழி ஒன்றைச் சொன்னாற் கூடக் குடி முழுகிப்போய் விடாது.

எங்கள் தொழில் இத்தனை தூரம் அபிவிருத்தியடைந்ததற்குக் காரணந்தான் என்ன? ஓர் அரைமீசைப் பேர்வழி இல்லாததையும் இருக்கிறதையும் சொல்லிக்கொண்டு சண்டைக்கு வந்தான். அந்த மீசையும் இல்லாத மேதாவி எதிர்த்து நின்றான். சும்மா இருந்த அசடுகளிலிருந்து ஆளுக்கு இரண்டு பேரைத் தங்கள் சிநேகிதர்கள் என்று சொல்லிக்கொண்டு சண்டை போட்டனர். முடிவு என்ன? எங்கள் தொழிலுக்கு அடித்ததே, பார்க்கலாம் ஒரு பெரிய குருட்டு அதிருஷ்டம்! எங்கள் தொழிலுக்கு லாயக்கோ, இல்லையோ, கைக்கு அகப்பட்டவர்களை யெல்லாம், அப்படியும் இப்படியுமாகப் போட்டு, ஒரு மாதிரியாகச் சீர்படுத்தி எங்கள் தொழிலை விதையும் மரமும் போல ஒரேயடியாய் வளர்த்துவிட்டார்கள். அம்மாதிரியான மேன்மை தங்கிய மன்னர்பிரானின் சிப்பாய்களில் நானும் ஒருவன் என்று நினைக்கும்போது அளவிலா ஆனந்தம் பொத்துக்கொண்டு வந்து, என்ன செய்வதென்று தோன்றாமல் விழிக்கிறேன்.

ஆனால் ஒரே ஒரு வருத்தந்தான். எங்களைப்பற்றியும் எங்கள் தொழிலைப் பற்றியும் வெளியில் இருப்பவர்கள் என்ன எண்ணுகிறார்கள் என்று நினைக்கும்போது மட்டும், கொஞ்சம் வெட்கமாகத்தான் இருக்கிறது. சிகரெட்டுப் புகைத்த விஷயமாக அப்பாவோடு சண்டை போட்டுக்கொண்ட மேதாவி முதல் ஊர் சுற்றிய வெற்றியில், பரீக்ஷையில் தோற்ற பிருகஸ்பதிவரை ஒருங்கு சேர்ந்து ஒற்றுமையாயிருப்பது பிறருக்குப் பொறாமையாக இருக்கிறதோ என்னவோ!

'ரேஷன்' அரிசி சரியாகப் பெற முடியாத பாட்டிக் கிழவி எங்களுக்குத்தான் வசை புராண நாம சங்கீர்த்தனம் போடுகிறாள், எங்கள் மானம் காற்றில் பறக்கும் திவ்ய ரீதியிலே. துணி விலையும் அகவிலையும் ஏறிவிட்டால் அதற்கு நாங்கள் என்ன செய்வோம்? அந்தப் பழியும் எங்கள் மேலே வந்து திடீர் திடீரென்று 'பாம்' குண்டைப்போல் விழுகிறது. எங்களைப் பற்றிக் கிராம அரசியல் மகாநாடு முதல் மத்திய சர்க்காரின் அஸெம்பிளி வரையில் மண்டையை உடைத்துக்கொண்டு 'பட்ஜட்' பாட்டுப் பாடுகிறார்கள்.

மிலிட்டரி லாரி இருக்கிறதே, அது யாரையோ சிலரை, யாதொரு செலவுமின்றிச் சுருக்க வழியாக யமலோகத்திற்கு அனுப்பிவிட்டுத் திரும்பிக்கூடப் பாராமல் போய்விட்டதாம். எங்கோ எங்கள் சகோதரர்களிற் சிலர், ஊருக்குள் புகுந்து வேண்டுமென்றே காதல் கொண்டுவிட்டார்களாம். 'பசி வந்தால் பத்தும் பறந்துபோம்' என்ற அருமையான வாசகத்தை விளக்கும்பொருட்டு, எங்களிற் சிலர், பலகாரக்கடையில் பாய்ந்து அங்கே பல நாட்களாகக் காற்றோட்டமின்றித் தவித்த சரக்குகளை, பணங்கொடுத்துக் கடைக்காரரைக் கஷ்டப்படுத்துவானேன் என்ற பெருங் கொள்கையுடன், காலி பண்ணிவிட்டார்களாம். இம்மாதிரியான பல அபிப்பிராயங்கள் நாட்டிலே பரவி எங்கள் மானத்தை வாங்கிக் கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் உண்மையில் எங்கள் தொழில் என்ன செய்யும்?

இவற்றின் பயனாக எங்களை யாரும் கண்டால் அந்தப் பக்கமாகத் திரும்பிக்கொண்டு ஏளனச் சிரிப்புச் சிரிக்கின்றனர். எதிரிலேயே சிரித்தால் லகுவில் விட்டுவிடுவோமா என்ன? சாணிக்கலர்ச் சட்டையின் சக்தியைக் காட்டி எங்கள் தொழிலின் மேன்மையை விளக்கிவிடமாட்டோமா?

ஒரு நண்பர் சொன்னார்: "எங்கள் தொழிலை மேற்கொள்ளுமுன் மூளையைப் பத்திரமாக வீட்டிலே வைத்துவிட்டுப் போக வேண்டும்" என்று. ஆனால் உண்மை இதுவல்ல. உடம்பைவிட மூளைக்குத்தான் அதிக வேலை இருக்கிறது. உடம்பை மட்டும் உபயோகிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. செம்மறியாட்டு ஞானமும் வேண்டும். தலைவர் உத்தரவு போட்டுவிட்டால் அவ்வளவுதான். அது நல்லதோ கெட்டதோ பணிந்துதான் ஆக வேண்டும். "முதலில் உத்தரவிற்குப் பணிந்துவிடு. அதன்பின் அதைப்பற்றி விவாதி" (Obey the order and then complain) என்பதுதான் எங்களுக்கு முதல் முதலில் போதிக்கப்படும் பாடம். சிற்சில சமயங்களில் உத்தரவுகளுக்குப் பணிந்தவிட்டு, அதைப்பற்றி விவாதிக்க மறுவுலகத்திலேதான் வேண்டிய அவகாசம் கிடைப்பது உண்டு. உத்தரவு போட்டவரும் அநேகமாகப் பின் தொடர்ந்து வருவாராதலின் விவாதத்தை அங்கு ஆற அமர வைத்துக்கொள்வதில் என்ன ஆக்ஷேபம்?

மூளையைக் கட்டி வீட்டில் வைத்துவிடுவதற்குப் பதில், சில ஆசாரங்களைப் புதைத்துவிட்டு, எங்கள் தொழிலில் இறங்குவதே சிலாக்கியமாகும். "காலைக்

கடன் முடித்தாயா? குளித்தாயா?" என்ற கேள்விகளுக்கு இங்கு இடமில்லை. "சப்பாத்திக்குப் 'பாலிஷ்' போட்டாயா? க்ஷவரம் செய்துகொண்டாயா?" என்பது தான் கேள்வி. சாப்பிடும்போது சப்பாத்தி அணிந்துகொண்டிராவிடில், அவன் எங்கள் தொழிலுக்குப் பொருந்தாதவன். ஒருவர் கால்மாட்டில் அடுத்தவர் தலையும், அவருடைய தலைமாட்டில் மூன்றாமவர் காலும் வைத்துப் படுத்துக்கொள்வதே எங்கள் முறை. ஏனென்றால் அதுதான் எங்கள் தொழிலின் ஆசாரம்.

எங்கள் தொழிலில் எங்களுக்குக் கிடைக்கும் பாக்கியம் தனிப்பெருமை பெற்றதாகும். எந்தச் சீதோஷ்ண நிலையிலும் சமாளிக்கத் தகுந்த அப்பியாசம் எங்களுக்கு அளிக்கப்படுகிறது. உலகில் எந்த இடத்திலும் வாழும் ஒரு பெரிய உரிமை நாங்கள் வேண்டாமலேயே எங்களுக்குள் திணிக்கப்பட்டிருக்கிறது. எந்த மாதிரியான உணவையும் உள்ளே தள்ளவோ, ஜீரணிக்கவோ எங்களால் முடியும். வெயிலும் மழையும் எங்கள் நண்பர்கள். பசியும் தாகமும் எங்கள் அற்பமான எதிரிகள். சுருங்கக் கூறினால், ரஸ்தாவில் நடமாடித் திரியும் ரோலர்களை எங்களோடு ஒப்பிடத்தக்க உயர்ந்த அந்தஸ்தைப் பெற்று ஆனந்தபரவசத்தில் ஈடுபட்டிருக்கிறோம்.

எத்தனையோ அரிய பழக்கங்கள் எங்கள் தொழிலின் மேன்மையைக் குறிக்கின்றன. இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வரும் பல்வேறு பாஷை பேசும் நண்பர்களோடு கூடிக் குலாவுகிறோம். ஹிந்தி தெரியாது. எனினும் கேள்வி முறையால் உணர்ந்த ஒன்றிரண்டு வார்த்தைகளை வைத்துக்கொண்டு, தலை, கை, கால், கண் முதலியவற்றின் உதவியால் அவர்களோடு பேசும் 'பஸ்கி' எடுப்பது ஆனந்தமாகத்தான் இருக்கிறது. பெரும்பான்மையாக ஆங்கிலம் உதவி செய்கிறது. மாலைநேரங்களில் பார்த்தால், வெவ்வேறு பாஷைகளில், பல்வேறு மெட்டுகளில் அநேக விதமான தொண்டைகளிலிருந்து ஒரே சமயத்தில் ஒலிக்கும் கீதங்களின் கூக்குரலானது நம் காதுக்கு அதிர்ச்சியை உண்டாக்கும். அந்த அதிர்ச்சியிலும் இன்பம் இருக்கத்தான் செய்கிறது.

ஜாதி மத வித்தியாசம் கடுகளவும் எங்கள் தொழிலில் இல்லை. எல்லோரும் ஓர் நிறையாக இல்லாவிடினும் எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் இந்திய மக்கள் என்பதற்கு இணங்க நடந்துகொள்கிறோம். உத்தரவுக்குப் பணியவும், ஒற்றுமையுடன் காரியங்களைச் செய்யவும் எங்கள் தொழில் எங்களைப் பழக்கப்படுத்துகிறது. இம்மாதிரியான பழக்கமே எதிர்கால இந்தியாவிற்குத் தேவையாதலின், எங்கள் தொழிலில் மேன்மையும் இருக்கிறதென்பதை உணரலாம்.

மனித உள்ளம் ஏறக்குறைய எங்கே இருந்தாலும் ஒரே மாதிரியானதுதானே? ஆகவே நாங்கள் எங்கள் வெளியுலக உணர்ச்சியை அறவே புறக்கணித்துவிடவில்லை. எங்கள் தொழில் அதற்கு இடையூறாக நிற்கவும் இல்லை. வீட்டின் மேலும் நாட்டின்மேலும் இருக்கும் பற்று உறுதி பெறுகிறதேயன்றிக் குன்றிவிடாது. "இந்தியாவைக் காக்க எழுந்து வாருங்கள்" என்று யுத்த முன்னணி மேதாவிகள் கூவும் அழைப்பில் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது. எதிர்கால இந்தியா சக்தி பெற எழுந்துவரத்தான் வேண்டும்; ஆம், எதிர்கால இந்தியாதான்.

"வலிமையுற, நோயின்றி உடம்பைக் காத்தல் அவசியம். உடம்பு மிகச் சிறந்த கருவி. அதனிலும் சிறந்த கருவி உன்னிடம் இல்லை. ஆதலால், அதை வலிதாக, நோயற்றதாக வைத்துக்கொள். உனது உடம்பு எஃகைப்போல் வலியதென்று பாவனை செய்துகொள். மெலிந்தோருக்கு விடுதலை இல்லை. மெலிவையெல்லாம் துரத்திவிடு. உடம்பு வலிதென்று அதனிடம் சொல்லு. அறிவு வலிதென்று அறிவினிடம் சொல்லு. உன்னிடத்திலே நீ எல்லையற்ற திடமும் நம்பிக்கையும் கொண்டிரு."

—ஸ்வாமி விவேகானந்தர்.

விதியின் வெற்றி

சாத்தூர் சங்கரன்

[சித்திரை இதழில் பூவாளூர் சுந்தரராமன் எழுதிய "பிரம்மாவின் தலையெழுத்து" என்ற சிறுகதையை வாசித்ததும், எனக்கு இன்னொரு நாடோடிக் கதை ஞாபகத்திற்கு வந்தது. ஸ்ரீ சுந்தரராமன் எந்த நாடோடிக் கதையைத் தழுவி எழுதினாரோ அக்கதையுடனே சேர்ந்ததுதான் இக்கதையும். ஒரு வகையில் இரண்டு கதைகளும் மாறுபாடான பிரச்னைகளை விளக்குகின்றன. 'விதியை மதியால் வெல்லலாம்' என்பதற்கு உதாரணமாக முன் கதையை நாம் கருதினால், அது சாத்தியமல்ல என்று நிரூபிப்பதற்கு இக் கதை உதவும்.]

குவா குவா என்ற சத்தம் கேட்டது. திண்ணையில் உட்கார்ந்திருக்கும் கிருஷ்ண தீக்ஷிதருக்கு மட்டில்லாச் சந்தோஷம். தன் தர்ம பத்தினி ஆண் மகவைப் பெற்றாளென்றால் யாருக்குத் தான் சந்தோஷம் வராது?

கிருஷ்ண தீக்ஷிதர் நன்றாக அத்தியயனம் செய்தவர். தம் ஐம்புலன்களையும் அடக்கித் தவம் செய்தவர். தம்முடைய தவத்தினால் சில அரிய சக்திகளையும் பெற்றிருக்கிறார். மற்றவர்களின் பூர்வ ஜன்மங்கள் எவை என்று அறியக்கூடிய சக்தியும், அவர் அடைந்திருக்கிற அபூர்வ சக்திகளில் ஒன்று.

தமக்கு ஆண் பிள்ளை பிறந்திருக்கிறதைக் கண்டதும், அக்குழந்தையின் பூர்வ ஜன்மம் எது என்று அறிய ஆவல் பிறந்தது. சில மாதங்கள் கழித்து அவர் பத்தினி, அந்த அருமைப்பிள்ளையைத் தன் பர்த்தாவிடம் காட்டினாள். அவர் சில மந்திரங்களை உச்சரித்து, தாம் ஜபம் செய்து வைத்திருந்த புனித தீர்த்தத்தைத் தம் மகவின் மேல் தெளித்தார்.

மந்திர நீர் பட்டவுடன் மூன்று மாதத்து மகவு அதன் தாய் அறியாத பாஷையில் பேசத் துவக்கியது. அந்தப் பாஷையைத் தீக்ஷிதர் அறிந்தவராதலால் அம்மகவுடன் அவர் சம்பாஷிக்கத் தொடங்கினார்.

"நீ யார்? நீ ஏன் எனக்கு மகவாகப் பிறந்திருக்கிறாய்?" என்று வினவினார் தீக்ஷிதர்.

"நான் முன் ஜன்மத்தில் அம்பட்டன். தாங்கள் எனக்குத் தர வேண்டிய பாக்கி ரூபாய் நூறு உண்டு. அதைப் பெற்றுப் போகத்தான் இந்த ஜன்மம் எனக்குப் பிரம்மா அளித்திருக்கிறார்" என்றது பூர்வ ஜன்ம அறிவு படைத்த அந்தக் குழந்தை.

தீக்ஷிதர் மிகவும் தீவிரமாக யோசனை செய்தார். இதுவரையில் பிறந்த குழந்தைக்காக ரூபாய் தொண்ணூறு செலவாகி யிருந்தது. அக்குழந்தையின் போஷணைக்காக அன்றே பத்து ரூபாய் செலவு செய்தார். அன்று மாலை திடீரென்று குழந்தைக்கு மாந்த வலி வந்தது. தீபம் வைக்கும் நேரத்திற்குள் இறந்துவிட்டது. தீக்ஷிதரின் மனைவிக்கு ஆறாத்துயர். தன் பர்த்தா ஏதோ மந்திரம் ஜபித்துத் தன் மகவைக் கொன்றுவிட்டார் என்றுகூட எண்ணலானாள்.

இரண்டு ஆண்டுகள் கழிந்தன. தீக்ஷிதருக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. தீக்ஷிதர் தம் சக்தியைப் பிரயோகித்தார். அப்பெண் மகவு முன் ஜன்மத்தில் வண்ணாத்தி என்றும், வண்ணாத்திக்குச் செல்ல வேண்டிய ரூபாய் ஐம்பதுக்காக இந்த ஜன்மம் எடுத்திருக்கிறதென்றும் தீக்ஷிதர் அறிந்தார். அன்றே அவர் அம்மகவிற்காக ஐம்பது ரூபாய் செலவு செய்தார். அந்தக் குழந்தையும் அன்று சூரியன் அஸ்தமிப்பதற்குள் இவ்வுலகை நீத்தது.

பின்னும் சில ஆண்டுகள் சென்றன. தீக்ஷிதருக்கு இப்பொழுது ஓர் ஆண் மகவு பிறந்தது. தம் மந்திர நீரை அதன்மேல் தெளித்து, அதன் பூர்வ ஜன்மம் யாதென வினவினார்.

"நான் பூர்வ ஜன்மத்தில் ஒரு தீக்ஷிதராக இருந்தேன். அப்பொழுது தங்களிடத்தில் என் குடும்பச் செலவுக்காக மூவாயிரம் ரூபாய் வாங்கினேன். அதைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. அதை உங்களுக்குத் திருப்பிக் கொடுக்கும்படி பிரம்மா எனக்கு இந்த ஜன்மம் அளித்திருக்கிறார்" என்று பதிலளித்தது அந்தக் குழந்தை.

தீக்ஷிதரின் தீக்ஷண்ய புத்தி தீவிரமாக வேலை செய்தது. 'நாம் இந்தக் குழந்தையிடமிருந்து மூவாயிரம் ரூபாய் பெற்றால்தானே இது சாகும்? மூவாயிரம் ரூபாயை வாங்காவிட்டால்?' என்று யோசித்து ஒரு தீர்மானத்திற்கு வந்தார். எக்காரணத்தைக்கொண்டும் தாம் உயிருள்ள வரையில் அந்த மகனிடமிருந்து ஒரு தம்படிகூட வாங்கக் கூடாதென்பதே அத்தீர்மானம்.

அக்குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. குலாசாரப்படி அதற்கு உபநயனம் செய்து, தாமே அவனுக்கு வேதாப்பியாஸம் செய்து வைத்தார்.

வருஷங்கள் பல சென்றன. இப்பொழுது தீக்ஷிதரின் பையன் ராமன் மிகவும் பிரபல வைதிகனானான். தீக்ஷிதரின் ஏற்பாட்டின்படி ராமன் சம்பாதிக்கும் பணம் எதையும் தகப்பனாரிடமும் கொடுப்பதில்லை. குடும்பச் செலவுக்கும் போடுவதில்லை. தான் சம்பாதிக்கும் பணத்தை ஒரு பையில் போட்டு இடுப்பிலேயே கட்டிக் கொள்ள வேண்டியது என்பது தீக்ஷிதரின் கண்டிப்பான கட்டளை. தகப்பனாரின் கட்டளை ராமனுக்குப் பிடிக்கவில்லை. அதன் காரணம் யாதென்று, தகப்பனாரைக் கேட்டான் ராமன். தீக்ஷிதர் சரியான காரணம் சொல்லவில்லை. ஆனால் ராமன் தன் தகப்பனாரின் கட்டளையை அணுவளவும் பிசகாமல் நிறைவேற்றிவந்தான்.

ராமனுக்கு இப்பொழுது இருபத்தைந்து வயசு. வைதிகத்தில் நல்ல பெயர். வருமானமும் நல்ல வருமானம். ராமனின் தாய்க்கு மாத்திரம் வருத்தம். எந்தத் தாய்க்குத்தான் தன் பிள்ளை சம்பாதித்துத் தனக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்ற ஆசை இராது? ஆனால் தன் கணவனின் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து ராமனிடமிருந்து ஒரு தம்படி வாங்குவதில்லை. இதற்கு முன் தனக்குப் பிறந்த சிசுக்களை மந்திரத்தால் கொன்றது போல், இந்தப் பையனையும் அப்படிச் செய்யாது விட்டாரே என்று கணவனிடம் கொஞ்சம் நன்றி அறிதலுங்கூட அவளிடம் இருந்தது.

ஒரு நாள் மாலை. தீக்ஷிதரும் அவர் பையன் ராமனும், பக்கத்து ஊருக்கு ரஸ்தா வழியாகச் சென்றுகொண்டிருந்தார்கள். ராமனுக்கு வயிறு வலித்தது. ஆகையால் தன் இடுப்பிலுள்ள பண மூட்டையை அவிழ்த்துக் கையில் வைத்துக்கொண்டு நடக்கலானான். வழியில் ஒரு பெரிய கிணறு. அதில் ஒரு சிறு பெண் தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்தாள். இவர்கள் கிணற்றண்டை நெருங்கினார்கள். அந்தப் பெண் அஜாக்கிரதையால் கால் தடுக்கிக் கிணற்றில் விழுந்துவிட்டாள். "ஐயோ! அந்தப் பெண்ணை உடனே காப்பாற்று" என்று தீக்ஷிதர் கத்தினார்.

ராமன் நல்ல பலசாலி. தன் கையில் வைத்திருக்கும் பண முடிப்பைத் தந்தையின் கையில் அவசரமாகக் கொடுத்துவிட்டு, பெண்ணைக் காப்பாற்ற அவன் கிணற்றில் குதித்தான். தீக்ஷிதரும், சிறு பெண் கிணற்றில் விழுந்த பதற்றத்தில், பிரதிஞ்ஞையையும் மறந்து பையன் கையிலிருந்து பண முடிப்பைப் பெற்

றுக்கொண்டார். வழியில் சென்ற நாலு ஐந்து செம்படவர்களும் கிணற்றில் குதித்தார்கள். அந்தச் சிறு பெண் கிணற்றிலிருந்து உயிருடன் வெளியே எடுபட்டாள். ஆனால், ராமனுக்கோ கிணற்றில் குதித்த அதிர்ச்சியில் பிராணன் போய்விட்டது. தீக்ஷிதருக்குத் திடீரென்று தம் பிரதிஞ்ஞை ஞாபகத்திற்கு வந்தது. பையன் தந்த பணமுடிப்பை அவிழ்த்துப் பார்த்தார். அதில் சரியாக ரூபாய் மூவாயிரம் இருந்தது. ஒரு சல்லி அதிகமாகவும் இல்லை, குறைவாகவும் இல்லை!

[நாடோடிக் கதை]

ஓர் ஊரில் கறுப்பன் என்று ஒருவன் இருந்தான். அவன் மிகவும் ஏழை. கல் உடைப்பது அவன் தொழில். அவன் தாய்தகப்பனார் மிகவும் கிழவர்கள். அவன்தான் தன் பெற்றோர்களுக்கும் சம்பாதிக்க வேண்டியதாயிற்று.

காலையிலிருந்து சாயங்காலம் வரையில் கையில் ஒரு சிற்றுளி பிடித்து 'லொட், லொட்' என்று கற்களை அவன் உடைத்துக்கொண்டே இருப்பான். கல் உடைத்து உடைத்து அவனுக்குக் கை சோர்ந்துவிடும். கூலியும் அதிகம் இல்லை. மிகவும் பசியினால் வயிறு ஒட்டிக்கொண்டுவிடும். மிகவும் கஷ்டப் படுவான். பொய் சொல்லமாட்டான். திருடமாட்டான். கடவுள் பக்தி அதிகம்.

ஒரு நாள் அவன் வழக்கம்போல் உட்கார்ந்து கல் உடைத்துக்கொண்டிருந் தான். அப்பொழுது, 'எல்லோரும் பணக்காரர்களாய் இருக்கிறார்கள். பட்டுச் சட்டையும் ஜரிகை வேஷ்டியும் அணிந்து ஆகாரக் கவலையில்லாமல் சுகமாய் இருக்கிறார்கள். நான் மாத்திரம் கஷ்டப்படுகிறேனே. நானும் அப்படிப் பணக்காரனாக இல்லையே!' என்று எண்ணினான்.

அப்பொழுது ஒரு தேவதை அவன் தலைக்குமேல் போய்க்கொண்டிருந் தது. அவன் நினைத்தது அதற்குத் தெரிந்தது. "அப்படியே இவனுக்கும் ஆகட்டும்" என்று அது உடனே அநுக்கிரகம் செய்தது. அவ்வளவுதான். கல் உடைக்கும் கறுப்பன் ஒரு பெரிய பங்களாவில் இருந்தான். எங்கே பார்த்தாலும் சோபாவும் மெத்தையும் வெகு சொகுசாக இருந்தன. வயிற் றுக்கு ஒன்றும் இல்லை என்ற கவலை அடியோடு ஒழிந்தது. இப்படிக் கொஞ்ச காலம் அவன் பங்களாவில் சுகமாய் வாழ்ந்துவந்தான்.

ஒரு நாள் அந்த ஊர் ராஜா யானையின்மேல் அம்பாரி வைத்துக் குடை பிடித்துக்கொண்டு பவனி சென்றான். அவனைச் சுற்றிப் பரிவாரங்கள் எல்லாம் தடபுடலாய்ப் போனார்கள். கல் உடைப்பவன் கண்டான். 'நானும் ராஜாவாக இருந்தால் நன்றாக இருக்குமே. ராஜா பாடு ரொம்ப சொகுசு போலிருக்கிறதே!' என்று எண்ணினான்.

முன் வந்து உதவிய தேவதையே இப்பொழுதும் தோன்றி, "அப்படியே ஆகட்டும்" என்றது.

கல் உடைப்பவன் பெரிய ராஜாவாகிவிட்டான். எல்லோரும் அவனுக்குக் கீழேதான்; யார் ஆனாலும் அவன் சொல்லுகிறபடிதான் கேட்க வேண்டும். ராஜா என்றால் தெய்வத்துக்குச் சமானம் என்று எண்ணியிருந்தான்.

ஒரு நாள் அந்த ராஜா அரண்மனை உப்பரிகைமேல் இருந்தான். வெயில் வெகு கடுமையாய் அடித்தது. அவனுக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. மந்திரியைக் கூப்பிட்டு, "இது என்ன இது, உடம்பெல்லாம் வியர்க்கிறது?" என்றான்.

"மகாராஜா, சூரியன்தான் இப்படிச் செய்கிறான்" என்றான். ராஜாவுக்குப் பிரமாதமாகக் கோபம் வந்துவிட்டது. "சூரியனிடம் நான் சொன்னேன் என்று சொல்; வெயில் கடுமையாய் அடிக்கக்கூடாது என்று உத்தரவு செய்திருப்பதாய்த் தெரிவியும்" என்றான்.

மந்திரி சூரியனைப் பார்த்து அப்படியே அரசனின் உத்தரவைத் தெரிவித்தான். ஆனால் சூரியன் இந்த உத்தரவை லக்ஷ்யம் செய்யவில்லை. கல் உடைக்கும் கறுப்பன் பார்த்தான். 'சே! இது என்ன உத்தியோகம்! அரசனைவிடச் சூரியனே மேலானவன் என்று தெரிகிறது. நாமும் சூரியன் ஆகிவிட்டால் நலம்' என்று நினைத்தான்.



அவன் வேண்டுகோளின்படி தேவதையும், "சரி, அப்படியே ஆகட்டும்" என்றது.

அவன் சூரியன் ஆகிவிட்டான். எங்கே பார்த்தாலும் சூரிய கிரணங்களை வீசினான். எல்லாவற்றையும் பொசுக்கினான். மனம் போனபடி எல்லாரையும் பொசுக்கினான்.

இப்படியிருக்கையில், ஒரு மேகம் ஒரு நாள் அவனை மறைத்துவிட்டது. அது அவனிடம், "உன் ஜம்பம் என்னிடம் செல்லாது!" என்று கூறிப் பரிகசித்தது.

உடனே அவனுக்குக் கோபம் வந்தது. 'சூரியன்தான் எல்லாவற்றையும்விடப் பெரியவன் என்று நினைத்தேன். இந்த மேகம் என்று வேறு ஒன்று இருக்கிறதே! நாமும் இப்படி மேகமானால் நல்லது' என்று எண்ணினான்.

அப்பொழுது தேவதை வந்தது; "சரி, மேகமாய்ப் போ" என்றது.

உடனே கல் உடைப்பவன் மேகமாகிவிட்டான். காற்றில் அங்கும் இங்கும் உல்லாசமாய்த் திரிந்தான். எங்கே பார்த்தாலும் மழையாய்க் கொட்டினான். வெள்ளப் பெருக்கு எடுக்கும்படி செய்து நதி, குளம், ஏரி எல்லாம் உடைத்து அல்லோல கல்லோலமாக்கினான்.

'சூரியனால் நம்மை ஒன்றும் பண்ண முடியாது. நம் இடியின் கர்ஜனை உலகத்தை ஆட்ட முடியும்' என்று எண்ணினான்.

ஒரு சமயம் இப்படியே கர்வத்துடன் சஞ்சாரம் செய்துகொண்டிருக்கும் போது ஒரு மலை இந்த மேகத்தைத் தடுத்துவிட்டது. அவன் ஆனமட்டும் அந்த மலையோடு மோதிப் பார்த்தான். மலை அசையவே இல்லை. மேகமாக இருந்த அவன் முக்கி முனைந்து தோற்றுவிட்டான்.

"மேகத்திற்கு மேல் மலை பெரிது" என்று அவனுக்குத் தோன்றிவிட்டது. ஆகவே தானும் மலையாக மாறிவிட்டால் ஈடு இணையற்று இருக்கலாமே என்று ஆசைப்பட்டான்.

இப்பொழுதும் தேவதை உபகாரம் செய்தது; "மலையாய்ப் போ" என்று அருளியது.

உடனே அவன் மறு உருவத்தை அடைந்தான். கம்பீரமாய் ஆகாயத்தை அளாவி நின்ருன். அவன் மட்டற்ற சந்தோஷமடைந்தான். இப்படி இருக்கும்போது ஒரு நாள் ஒரு கல் உடைப்பவன் அந்த மலைக்கு வந்தான். சிற்றுளியால் மலையை உடைக்க ஆரம்பித்தான். 'லொட், லொட்' என்று அவன் மேலும் மேலும் போட்டுக்கொண்டே போனுன். மலையால் ஒன்றும் செய்ய முடியவில்லை. 'எல்லாரிலும் கீழ்ப்பட்ட இந்தக் கல் உடைப்பவன் கையில் கஷ்டப்படுகிறேனே. அவன்போல் ஆனுல்தான் நலம்' என்று மலை எண்ணியது.

உடனே தேவதை சிரித்தது. "பழையபடியே கல் உடைப்பவனுகப் போ!" என்றது. அவன் கல் உடைப்பவன் ஆகிவிட்டான்.

[ஓர் ஆங்கிலக் கதையைத் தழுவியது.]

புதிய புஸ்தகங்கள்

தினமணி வெளியீடுகள். 2. ரவீந்திரநாத டாகூர் - வாழ்க்கையும் கவிதையும் - ஸ்ரீ கி. சந்திரசேகரன் எழுதியது. விலை 8 அணு.

ஒரு கவிஞனுடைய வாழ்க்கையை அவனது கவிதை மூலமாகவும், அவன் கவிதையை அவனது வாழ்க்கை மூலமாகவும் பார்த்து ரஸிக்கவேண்டும். அவனது வாழ்க்கையும் கவிதையும் இணைந்தே செல்லும். அதிலும் ரவீந்திருடைய வாழ்க்கை பெரிது; கவிதை உன்னதமானது. இந்த இரண்டையும் கலைக்கண்களோடு பார்த்து இதன் ஆசிரியர் எழுதியிருக்கிருர். நம் நாட்டுப் பழைய கலைத்தத்துவத்திலிருந்து புதிய மோகன முறுவலோடு டாகுர் கவிதை உருவெடுத்ததென்பதை ஆசிரியர் நன்கு வற்புறுத்தியிருக்கிருர்.

3. கைலாஸம், மானஸ ஸரோவர் - எஸ். வேதாந்தம். விலை 8 அணு.

மானஸ ஸரோவரம்வரை யாத்திரை செய்த ஆசிரியர் இந்தப் புஸ்தகத்தை ஒரு விரிவான டைரியைப்போல எழுதியிருக்கிருர். இப்புஸ்தகத்தால் பல விஷயங்கள் தெரியவருகின்றன. ஆனுலும் வர்ணனைப் போக்கில் இன்னும் விறுவிறுப்பு இருந்தால் புஸ்தகம் சுவையுடையதாக இருக்கும்.

மாளவிகா: சரோஜா ராமமூர்த்தி; சக்தி காரியாலயம், சென்னை. விலை ரூ. 1—4—0.

லார்ட் லிட்டன் எழுதிய 'பாம்பி நகரத்தின் இறுதிக்காலம்' (Last days of Pompeii) என்ற கதையின் தழுவல். தமிழ்நடை இனியது. மாளவிகாவின் செய்கைகள் அவளை இந்தியப் பெண்ணுகக் காட்டவில்லை. கதையின் முடிவு அவசரப்பட்டு முடித்ததுபோல இருக்கிறது.

காதலர் உள்ளம்: வியானர்ட் பிராங்க்; எம். எல். சபரிராஜன் மொழி பெயர்ப்பு; சக்தி காரியாலயம், சென்னை. விலை ரூ. 1—12—0.

உள்ளத்தை உருக்கும் கதை. எத்தனை தடவை படித்தாலும் சலிக்காது. மொழிபெயர்ப்பு மிகவும் நன்ருக இருக்கிறது.

கலைமகள்

தொகுதி உசு :: பகுதி கருரு
தாரண ஹு புரட்டாசிமீ
செப்டெம்பர் 1944

	பக்கம்
ஆகவே...	93
மாசறு கற்பினள் — பெ. கோ. சுந்தரராஜன்	94
பாலையின் அரங்கேற்று மண்டபம் — எஸ். வையாபுரிப்பிள்ளை	100
தாண்டவமூர்த்தி — தி. நா. சுப்பிரமணியன்	102
வல்லம் கோட்டை — எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்	106
எங்கள் ஊர் — வே. ரா. சுந்தரராமன்	109
களத்திர தோஷம் — 'மாயாவி'	114
முலல கிஸலயம் — ச. கு. கணபதி ஐயர்	119
தளுக்கான கண்டிப்பு — பத்மாஸனி அம்மாள்	121
வாத்தியார் ஐயா — கி. வா. ஜகந்நாதன்	125
கவி — ந. பிச்சமூர்த்தி	128
மூலக் கல்வியின் உரைகல் — மகாத்மா காந்தி	132
அபராஜிதா - எப். டபிள்யூ. பெயின் — கி. சாவித்திரியம்மாள் மொழிபெயர்ப்பு	133
பொம்மைக் கொலு — 'காந்தம்'	138

அட்டைப் படம்

பாரதியாரின் அழகுத் தெய்வம்

கலைமகளில் வெளியாகும் கட்டுரைகள் கதைகளிலுள்ள பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே ; அவை யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

ஆகவே...

ஆகவே இப்போது 'நியூஸ் பிரிண்ட்' என்று சொல்லப்படும் 'செய்தித் தாளி'ல் கலைமகளை வெளியிடுவதென்று நிச்சயம் செய்து விட்டோம். துரைத்தனத்தாரிடமிருந்து வேண்டிய அநுமதி பெறுவதற்குள் நாங்கள் பொறுமையைப் பழகிக் கொண்டோம். இந்த இதழ் தாமதமாக வரும்படியாயிற்று. நினைத்தபடி, எங்களுக்குக் கிடைக்கவேண்டிய அளவு காகிதம் கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால்....அதைப்பற்றி இப்போது என்ன? இன்னும் முயற்சி செய்கிறோம். "பொறுத்திருப்போம்; காலம் மாறும்."

ஆனாலும் கிடைத்த பக்கங்களைக் கூடிய வரையில் அதிகமான தோற்றப் பொலிவும், அதிகமான உள்ளுறையும் உடையனவாக ஆக்கியிருக்கிறோம். டாக்டர் ராஜனவர்கள் கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும். பல புதிய அம்சங்களையும் எதிர்பாருங்கள்.

இந்த இதழில் ஸ்ரீ பெ. கோ. சுந்தரராஜ (சிட்டி)னும் ஸ்ரீ பிச்சமூர்த்தியும் எழுதியிருக்கிறார்கள். 'சிட்டி'யின் எழுத்து இப்பொழுதெல்லாம் அத்தி பூத்தாற்போலத்தான் வருகிறது. இயற்கையாக அவர் கதைக்கு உள்ள மதிப்பு இந்த அருமைப்பாட்டால் பின்னும் உயர்ந்துவிடுகிறது. பிச்சமூர்த்தி மாத்திரம் எழுதிக் குவித்துவிடுகிறாரா என்ன? ஆடிக்கு ஒரு தடவை அமாவாசைக்கு ஒரு தடவை எழுதுகிறார்.

ராவ்சாஹேப் ஸ்ரீ வையாபுரிப்பிள்ளையவர்கள் சிலாசாஸனத்திலிருந்து ஓர் அரிய செய்தியைக் கண்டுபிடித்து எழுதியிருக்கிறார். தமிழ்நாட்டில் இலக்கியத்துக்கும் இலக்கிய சம்பந்தமான பொருளுக்கும் இருந்த மதிப்பை அவர் கட்டுரை விளக்குகிறது.

நடராஜ விக்கிரகம் தமிழன் சொத்து. அதை இன்று உலகமே கொண்டாடுகிறது. அதன் சிற்ப நயங்களையும், அர்த்தத்தையும் தி. நா. சு. "தாண்டவமூர்த்தி"யில் சொல்லியிருக்கிறார். இன்னும் கதைகள், கட்டுரைகள்.........மணிக் கணக்காகப் படிக்கலாம், அலுப்புச் சலிப்பில்லாமல்.

ஆகவே, அடுத்த மாதம் சந்திப்போம்.

ஆசிரியர்



மாசற்ற கற்பினள்

வெ. கோ. சுந்தரராஜன்

நதியின் அக்கரையிலிருந்து ஓர் அன்றிலின் எக்கம் ஒலித்துக்கொண்டிருந்தது. கொன்றை மரத்தில் இணைந்த கொடி போல் சாய்ந்துகொண்டிருந்த அகல்யா தன் ஈரக் கூந்தலைக் கோதிவிட்டு உலர்த்திக் கொண்டிருந்தாள். மாலை வெயிலின் ஒளிச் செதில்கள் மா இலைகளின் ஊடே அவள் மேனியில் பாய்ந்து ஒன்றையொன்று ஓடிப் பிடித்து விளையாடின. நிலவினால் எற்படும் நிழலின் மென்மையான கருமை அவளுடைய கண்களில் தேங்கிக் கிடந்தது. அருகே ஓடிக்கொண்டிருந்த கங்கையின் சலசலப்பு அவளுடைய நெஞ்சலைகளின் எதிரொலிபோல் இருந்தது. அவளைச் சுற்றி ஏதோ அடக்க முடியாத களிப்புடன் துள்ளி விளையாடிக் கொண்டிருந்த ஒரு மான் குட்டி சற்று நின்று அவளுடைய கால்களில் தன் உடலைத் தேய்த்துக்கொண்டிருந்தது. அகல்யாவின் இடது கை தானாகவே அந்த மான் குட்டியைத் தடவிக் கொடுத்தது. அவளுடைய முகத்தில் ஒரு முறுவலின் சாயல் தோன்றி மறைந்தது. அவளுடைய பொன் மேனி வெயிலில் வாடக்கூடாதென்ற கவலை கொண்டது போல் ஒரு முகில்துண்டு வானில் விரைந்து வந்து அந்திச் சூரியனை மறைத்தது. அகல்யாவின் முகம் கறுத்தது.

"அகல்யா!"

அவளுக்கு எதிரே சிறிது தூரத்தில் ஆசிரம வாயிலில் புலித்தோலின்மீது அமர்ந்து நிஷ்டையில் ஆழ்ந்திருந்த கௌதமன் புலன்கள் இந்தக் காட்சியைப் பருகிக் கொண்டிருந்தன. இரண்டு நாழிகை நேரமாகத் தன் மனத்தை ஒரு நிலையில் நிறுத்த முயன்ற கௌதமன் மீது புலன்கள் தொடுத்த போரில் அவன் தோற்று விட்டான். ஜபத்தில் ஈடுபட்ட அவனுடைய உணர்ச்சியை அகல்யாவின் கட்டுக்கு அடங்காத இளமையின் லாகிரி தாக்கிவிட்டது. அந்த இன்பப் போதையில் அவள் ஒரு வனதேவதைபோல் மரத்தோடு இணைந்திருந்த தோற்றத்தையே தியானித்துக்கொண்டிருந்தான். அவன் மனத்தில் எண்ணற்ற எண்ணங்கள் கலகமிட்டுக்கொண்டிருந்தன. யௌவனத்தின் உணர்ச்சி முழுவதும் தன்னுடைய ஞானத்திற்கு ஓர் அறைகூவலாக நிற்பதைக் கண்டதும் அவன் மன நிம்மதி கலைந்துவிட்டது. எத்தனையோ நாட்களாகச் சாக்குச் சொல்லித் தட்டிக் கழிக்கப்பட்ட பிரச்னை ஒன்று இன்று அவன் தேகம் முழுவதும் பரவி மூளையைக் குழப்பிக்கொண்டிருந்தது. அவன் ஞானமே அவன் நிம்மதிக்கு ஹானியாக இருந்தது. அறிவின்மைதானே ஆனந்தம்? ஏதோ, பாவம்! பெண்; அவளுடைய உணர்ச்சிக்குத்தான் கொஞ்சம் விடுதலை கொடுப்போமே என்ற வீண் தற்பெருமையில்தான் அப்பொழுது அவளை

அழைத்தான். தான் அவளுடைய ஒளி நிறைந்த தோற்றத்தை அலக்ஷ்யம் செய்ய முடியவில்லை என்பதை அச்சமயம் அவன் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. அவன் குரல் காற்றில் மிதந்துவந்த மலரிதழ் போல் அவளைத் தாக்கிற்று.

"அகல்யா!"

"ஸ்வாமி, இதோ வந்துவிட்டேன்."

அவளுடைய விரைவில் ஒரு சர்ப்பத்தின் வசீகரம் தாண்டவமாடிற்று.

"இங்கே என் அருகில் உட்கார்." கௌதமன் அழைப்பு அவளுக்குச் சற்று வியப்பை அளித்தது. ஆயினும் அந்தப் புதுமையின் ருசியில் அவள் வியப்பை மறந்துவிட்டாள்.

"அகல்யா, இந்த வனத்தில் உனக்குத் தனிமையாக இல்லையா?" இக்கேள்வியின் பயனற்ற தன்மை கௌதமனுக்கு உடனே புலப்பட்டது. ஆனால் அகல்யா அவனுக்கு ஆராய்ச்சி செய்ய இடம் கொடுக்கவில்லை.

"உங்கள் துணை இருக்கும்போது தனிமை என்ன ஸ்வாமி? வனத்தைவிட இயற்கையின் துணை கிடைக்கும் இடம் எது?" இத்தனை நாள் கழித்து இந்தக் கேள்வி பிறப்பானேன் என்ற சந்தேகம் அவளுக்குத் தோன்றாமல் இல்லை; இன்றாவது அது பிறந்ததே என்ற உண்மை அவளுக்கு ஆறுதலளித்தது.

"ஒவ்வொரு சமயம் உன் முகத்தில் ஏதோ கவலை குடி கொண்டிருப்பதுபோல் எனக்குத் தோன்றுகிறது. ஏன்?"

"எனக்குக் கவலை ஏது, ஸ்வாமி?"

"கவலை இல்லையென்றால், நிறைவின் கசப்பா?"

"நிறைவுக்குக் கசப்பு இருந்தால் அதுவே குறைவு அல்லவா?"

"ஆனால் உன் மனத்தில் என்ன எண்ணங்கள் தோன்றி அப்படி உன் முகத்தின் களையை மறைக்கின்றன?"

"ஒன்றும் இல்லையே!" என்று சொல்ல வந்தவள், "ஸ்வாமி, நான் என்ன நினைத்தாலும், என் கருத்து என்னவானாலும், அது உங்களுக்குத் தெரியாமல் இருக்க முடியுமா? வெறும் புலன்களை மீறிய அறிவு படைத்த தாங்கள் கேட்டா தெரிந்துகொள்ளவேண்டும்?"

தன் நெஞ்சில் பெரும் சுமையாக இருந்த ஒரு கவலையைத் தீர்த்துக்கொள்ளும் சமயம் வந்துவிட்டது என்று அகல்யை உணர்ந்தாள். அத்துடன் கௌதமனின் ஞான திருஷ்டியைச் சோதிக்கும் மனப்பான்மையும் போட்டியிட்டது. தன் வாழ்க்கையின் ஒளியில்கூடச் சில சமயங்களில் தோன்றி மறையும் நிழலின் காரணத்தைக் கௌதமன் அறிந்திராவிட்டால் தன் கடமைக்கும் உணர்ச்சிக்கும் எப்படிச் சமாதானம் சொல்வது என்ற கவலைதான் அவளுக்கு அதிகமாயிருந்தது.

கௌதமன் சிரித்தான்.

"அகல்யா, உன் விசுவாசம் எல்லையற்றது. உன் நம்பிக்கை இணையற்றது. இவ்வளவுக்கும் நான் அருகதையுள்ளவன்தானா என்ற சந்தேகம் சில சமயங்களில் தோன்றுகிறது."

"ஏன்? என் மனத்தில் சில சமயங்களில் எழும் உணர்ச்சிகளின் பலனா இது?"

"அவ்வளவு தெளிவாகச் சொல்லிவிட முடியாது. இருந்தாலும் உன் கனவுகள் உண்மையாக இருந்து இந்த வாழ்க்கை உனக்குக் கிடைத்திராவிட்டால்......"

"நாதா, வேண்டாம். வெறும், கேவலம் உணர்ச்சியின் வரம்பற்ற போக்கைக் கனவு என்று பெருமைப்படுத்தாதீர்கள். இந்த மனச் சேஷ்டையிலிருந்து தப்புவதற்காகத்தான் நான் முயல்கிறேன். இதுதான் என் வாழ்க்கைப் போராட்டம். நிறைவின் மிகை ததும்பி வழிவதால் நிலை குலையும் மனோலயம்."

தன் ரகசியக் கவலையைத் தன் பதி உணர்ந்திருந்தது அவளுக்கு ஊக்கத்தைக் கொடுத்தது. அவன் அநுதாபம் அவள் தன் உணர்ச்சியை எதிர்ப்பதற்குப் பலமளித்தது.

"லயித்த மனம் நிம்மதி இழப்பதற்கு நானும் ஒரு காரணம் அல்லவா?"

"இல்லை நாதா, தாங்களும் அந்த லயத்தின் ஆதாரம். என் பக்குவமின்மை தங்களுடைய புனிதமான கர்மத்தையும் பாதிக்கிறது."

"அது என் தவத்தின் பலஹீனம்."

அவளுடைய வனப்பும் வசீகரமும் தன் நிஷ்டையைக் கலைப்பதை அவள் அறிந்துவிட்டாளோ என்று கௌதமன் பயந்தான்.

"அப்படியல்ல ப்ராணபதி; தங்கள் அநுதாபமும் அன்பும் நான் தங்களுக்கு இயற்றவேண்டிய பணியில் துணை புரியவில்லையா?"

"வெறும் அநுதாபம் மாத்திரம் காட்டி என்ன பயன், அகல்யா? உன் இச்சைகளை நீ முளையிலேயே கிள்ளி எறியும்படியான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்திவிடுகிறேனே?"

"இச்சைகள் மனக்கண்ணாடியின் நிழல்கள் தாமே? உண்மை வாழ்க்கையில் கர்ம பூர்த்தியைவிட இச்சைக்குச் சலுகை உண்டா?"

"உன்னுடைய ஊக்கம் என்னைப் பிரமிக்கச் செய்கிறது. ஆனால் இப்படி இன்னும் எவ்வளவு காலம் நீ வைராக்கியமாய் இருக்க முடியும்?"

"என்ன கேள்வி, ஸ்வாமி? எத்தனை நாள்? எவ்வளவு காலம்? உங்கள் ஆதரவில் காலவரையறையைப்பற்றி எனக்கு என்ன கவலை?"

"உன் அறிவின் சக்திதான் உணர்ச்சிக்குத் திரையிட்டு வைத்திருக்கிறது. அந்தத் திரையை விலக்காமலே உணர்ச்சி மங்கி

மாய்ந்துவிடும் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிருய்.''

“திரையும் இல்லே, காட்சியும் இல்லே. வெளியின் வெறுமையில் உணர்ச்சி முறையற்ற சித்திரங்களைக் கிறுக்கிக்கொண்டிருக்கிறது. அதற்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம்?”

“சாமர்த்தியசாலி. ஆனல் உணர்ச்சியை அசட்டை செய்வதால் வென்றுவிட முடியாது, அகல்யா. அணேந்துபோன ஹோம குண்டத்தின் அடியில் கனியும் நெருப்புப்போன்றது அடக்கிய உணர்ச்சி.”

இது அகல்யா அறியாத உண்மையல்ல. இப்பொழுது கௌதமன் மொழியில் இது அத்தாட்சி பெற்றதும் அகல்யாவுக்குத் திடீரென்று பயம் ஏற்பட்டுவிட்டது.

“அவசியம் ஏற்பட்டால் அந்த நெருப்பையும் எடுத்து அணைக்க வேண்டியதுதானே?”

“அதுதான் அகல்யா என் கவலே. எனக்குத் துணையாக ஏற்பட்ட உன்னே உணர்ச்சியற்ற சடலமாக என் தவத்திற்குப் பலி கொடுக்க எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?”

“என்னுடைய சம்மதந்தான். அதுதானே என் லக்ஷ்யம்?”

“ஆம். ஆனல் இப்பொழுதே எனக்குக் கவலே கொடுக்கிறது: இந்தக் கடும் பாதையில் நாம் இன்னும் எவ்வளவோ தூரம் செல்ல வேண்டுமே.”

“எவ்வளவு தொலேவாஞலும் தங்கள் பாதங்களைத் தொடர்ந்து நான் வருவேன்.”

“அதைத் தவிர வேறு ஒன்றையும் நான் உனக்குக் கொடுக்க முடியாதே. தவத்தின் நியதி சிறிதும் இடம் கொடுக்காதே.”

“பாதகமில்லே. அந்தச் சுசுருஷை ஒன்றே என் இச்சைக்குப் பூர்த்தி அளிக்கும்.”

“பெண்மையின் வளர்ச்சி குன்றிப்போய் விடும், அகல்யா.”

“பெண்மைக்குத் தனி வளர்ச்சி இல்லே. விருக்ஷ நிழலில் வளரும் சிறு கொடிகளுக்குத்தான் பசுமை அதிகம்.”

“அகல்யா, நீ இவ்வளவு திடசித்தமுள்ளவளாக இருப்பது எனக்கு ஊக்கமளிக்கிறது. இனி உணர்ச்சிக்குப் பங்கம் ஏற்படாது என்ற தைரியத்தில் என் தவத்தைத் தொடங்குவேன். என் தவத்தில் ஏதாவது குறைவு ஏற்பட்டால் நான்தான் பொறுப்பாளி......”

கௌதமன் சொற்கள் முழுவதும் அகல்யாவின் செவிகளில் ஏறவில்லே. அவள் உடல் சிலிர்த்தது. பெயர் சொல்லாமல் தாங்கள் இருவரும் விவாதித்த பிரச்னேயின் முழு வியாபகத்தையும் கௌதமன் அறியவில்லேயோ? அவனுடைய ஞானதிருஷ்டிக்கு அவன் உணர்ச்சி, திரையிட்டுவிட்டதா? அல்லது அவளுடைய நெஞ்சத்தின் மூலேமுடுக்குகளில் பொதிந்துகிடந்த எண்ணங்களே அவன் வெளியில் அழைக்க இஷ்டப்படவில்லேயா? தன் சாதுர்யத்தால் அவனே ஏமாற்றி விட்டாளோ என்ற குற்றம் தோய்ந்த பயம் அவள் மனத்தில் எழுந்தது. அத்துடன் தன்னே இவ்வளவு மனப்பூர்வமாய் நம்பிக் குறைவின் பொறுப்பு முழுவதையும் தானே ஏற்றுக்கொள்ள முன்வந்த தன் கணவனுடைய செயலின் பெருந்தன்மை அவளே வெட்கச் செய்தது.

“ஸ்வாமி, நான் துரோகி. என் உணர்ச்சிகளே மறைத்தேனே ஒழிய ஒப்புக்கொள்ளவில்லே. என்னே க்ஷமிக்கவேண்டும், ஸ்வாமி. ஒவ்வொரு சமயம் என்னேயே அறியாமல் மதி மயங்கி, நான் தேவராஜனே நினேத்துவிடுகிறேன். வெறும் பேதைமை நாதா! இந்தப் பேதைமை முற்றுமல் என்னே நீங்கள்தாம் காப்பாற்றவேண்டும்.”

இதுவரை, வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல் தாங்கள் விமர்சித்து வந்த இந்திரன் பெயரைச் சொல்லியதும் அகல்யைக்குத் தன் உணர்ச்சிக்குக் குறுக்கே இட்டிருந்த அணே உடைந்தது போல இருந்தது. அவளுடைய உணர்ச்சி வெள்ளம் கண்ணீராகப் பிரவகித்தது.

“கலங்காதே அகல்யா. இனிமேல் பயம் இல்லே. கனிந்துகொண்டிருந்த கனலே இப்பொழுது வெளியில் எடுத்து எறிந்துவிட்டாய். உன் உணர்ச்சியுடன் நீ நடத்தும் போராட்டத்தை நான் அறியாமற்போகவில்லே. அதனல் நான் பொறுப்பாளி என்றேன். என் கடமையிலிருந்து நான் தவறிவிட்டேனே என்று எனக்குச் சந்தேகம் தோன்றுகிறது. இந்த வனவாசத்தை விட்டு இல்லறத்தில் பிரவேசித்தால் உனக்கும்...”

“ஐயோ! வேண்டாம் ஸ்வாமி. வெறும் இல்லறத்திற்காக, எனக்காக, தங்கள் லக்ஷ்யத்தைக் கைவிடாதீர்கள். அந்தப்பாவம் என்னேச் சாரும். இதுவரை என் குற்றம் நிறைந்த நெஞ்சம் தங்களுடைய தூய்மைக்குப் பயந்து கொண்டிருந்தது. இன்று தாங்கள் அளிக்கும் ஆதரவு எனக்குப் பலம் அளிக்கும்.”

“என்ன பயன், அகல்யா? உன் வாழ்க்கையே வீணுகப் போய்விடுமே.”

“இல்லே, பரிபூர்ணமடையும். உணர்ச்சியின் சேஷ்டையை நன்ருய் அறிந்த தங்களுடைய ஞானம் எனக்குத் துணேயாக இருக்கும்.”

“கடினமான பிரமாணம், அகல்யா!”

“ஆம். படுகுழியில் விழுவதுதான் சுலபம். கடினமான மார்க்கத்தில் கால்வைத்த தங்க

ளைப் பின் தொடர்கிறேன். இன்றுவரை என் உணர்ச்சிகள் என்னை ஏமாற்றிக்கொண்டிருந்தன. இன்றுதான் என் பக்குவமின்மையும் தங்களுடைய தூய்மையும் எனக்குத் தெரிந்தன. இனி என் உணர்ச்சிக்கோ, பெண்மை என்ற என் மேற்பூச்சுக்கோ சலுகை வேண்டாம்."

நிம்மதி நிலவிய முகத்துடன் கௌதமன் நிஷ்டையில் ஆழ்ந்துவிட்டான். அந்த அமைதியின் ஒளி அகல்யாவின் முகத்தில் பிரதிபலித்தது. தன்னை மறைந்து தாக்கிக் கொண்டிருந்த உணர்ச்சியுடன் நேர் நின்று போர் புரிந்து வெற்றி பெற்றுவிட்டாள். அதற்குத் தன் கணவன் அல்லவா துணை கொடுத்தான்?

கௌதமன் தவம் பிரணவ வேகத்துடன் வளர்ந்து ஓங்கிற்று. அகல்யாவின் பணிவிடை அவன் தியானத்திற்குச் சுற்றுக்கோட்டு நிலைநிறுத்திற்று. ஒவ்வொரு சமயம் இரவில் புரண்டு படுக்கும்பொழுது தனக்கு ஆறடி தூரத்தில் நித்திரை செய்துகொண்டிருக்கும் கௌதமன் தோற்றம் அகல்யாவின் உறக்கத்திற்குத் தெளிவு கொடுக்கும். சலனமற்ற அவனுடைய முகத்தில் தாண்டவமாடும் ஞானபிம்பத்தையே கருதியவண்ணம் அவள் மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்துவிடுவாள். இயற்கையும் இச்சையும் அவள் வைராக்கிய மதிலைக் கண்டு மயங்கி வீழ்ந்துவிட்டன.

ஆனால் இந்த மயக்கம் தேவேந்திரனுக்கு ஏற்படவில்லை. மதிலின் தோற்றமே அவனுடைய சௌரியத்திற்கு ஓர் அழைப்பாக இருந்தது. முன்னொரு நாள் அவளுடைய உணர்ச்சியின் அலைகளில் திளைத்துக்கொண்டிருந்த அவனுக்கு இப்பொழுது ஏமாற்றம் தோன்றிற்று. வனவாசி, வெறும் முனிவன் - அந்தக் கௌதமன் வாழ்க்கை இவளை அதிகக் காலம் சிறையிட முடியாது என்ற தைரியத்தில் கனவு கண்டு காலங் கழித்த அமரேசனுக்கு அவளுடைய நடத்தை பெரும் புதிராக இருந்தது. கேவலம் ஒரு பெண் தன்னை அசட்டை செய்துவிட்டாள், தன்னை மறந்துவிட்டாள் என்பதை நினைக்க, அவன் அறிவு தடுமாறிற்று. அறிவு நிலைகுலைந்தால் உணர்ச்சிக்கு வரம்பு ஏது?

கௌதமன் தான் புனைந்த மோனத்தில் மூலப்பொருளைத் தியானிக்க, அவனையே அகல்யா தியானிக்கும் தோற்றத்தை இந்திரன் பார்த்திருக்கிறான். கௌதமனைத் தவிர வேறு உண்மை அகல்யாவின் உறுதியில் நிலவ முடியாது என்பதை அறிந்தான்.

காலைச்சிறுபொழுதைப் பட்குரல் பறை சாற்றிற்று. அகல்யா தான் படுத்திருந்த இடத்திலிருந்தே தலையை நிமிர்த்திக் கழுத்தை வளைத்துப் பார்த்தாள். கௌதமன் கமண்டலத்துடன் ஆசிரமத்தை விட்டு வெளியேறினான். அது யாமந்தோறும் நடக்கும் காட்சி. கௌதமன் நதிக்கரையில் ஜபத்தில் ஈடுபட்டிருக்கும் பொழுது அகல்யாவும் அங்கே போய்ச் சேருவாள். இடையில் சிறிது அயர்வது அவள் வழக்கம். ஆசிரம வாசல் கதவை மூடிக்கொண்டு கௌதமன் மறைந்ததும், அகல்யா கண்களை மூடினாள். உறக்கம் பிடிக்கவில்லை. அன்று மாலை கௌதமன் கூறியது அவளுக்கு நினைவு வந்தது. "அகல்யா, உன் சேவை என் தவத்தைவிடச் சிறந்ததாக இருக்கிறது. இன்னும் சிறிது காலந்தான். என் தவம் முடிந்து உன் கணவன் என்ற முறையில் நான் செய்ய வேண்டிய சேவைக்குச் சித்தமாகிறேன்."

தனக்குத் தைரியங் கூறும் இம்மொழிகளை இன்று கௌதமன் சொல்வானேன்? இப்பொழுதுதான் அதைப்பற்றி அகல்யாவுக்குச் சிந்தனைச் சுழல் ஏற்பட்டது. தன் மீதுள்ள அநுதாபத்தால்தான் ஊக்கமளித்தான் என்று சமாதானம் சொல்லிக்கொண்டு படுத்தாள். மறு நிமிஷம், ஆசிரம வாயிற் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டு, படமெடுக்கும் நாகம் போல் தலையைத் தூக்கிப் பார்த்தாள். வாயிலில் கௌதமன் நின்றுகொண்டிருந்தான். வெளியில் வழக்கம்போலப் படர்ந்திருக்கும் உஷக்கால ஒளிப்படலம் இல்லாமல் இருளே நிறைந்திருப்பதை அப்பொழுதுதான் கவனித்தாள். வழக்கத்திற்கு விரோதமாக உடனே திரும்பிக் கௌதமன் தன்னையே உற்றுப் பார்த்துக்கொண்டு நிற்பதை உணர்ந்து எழுந்து உட்கார்ந்தாள். கணவன் தேவை என்னவோ என்று அவள் விசாரிக்க முயல்வதற்குள், கௌதமன் கதவை மூடிவிட்டுத் தன்னை நோக்கி வருவதைக் கண்டாள்.

காலக்கணக்கைக்கூட மறந்துவிட்டாள். எத்தனையோ நாட்களாகத் தனித்தனியாக இருவரும் சயனித்திருக்க, இன்று கௌதமன், தன் அநுஷ்டானங்களையும் மறந்து தன்னை நோக்கி வருவது அவளுக்கு வியப்பா? அல்லது களிப்பா? என்ன என்று சொல்ல முடியாத ஓர் உணர்ச்சி அவள் மேனியில் வியாபித்தது. முந்திய மாலை கௌதமன் கூறியதை மீண்டும் நினைத்தாள். ஏன்? தன்மீது அநுதாபத்தினால் சொன்னாரா அல்லது தன் உணர்ச்சிகளுக்கே சமாதானம் தேடிக்கொண்டிருந்தாரா?

தன்மீதிருந்த பார்வை அகலாமல் அவன் நடந்து வந்து தன் படுக்கையில் உட்காருவதை அடங்கா வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய கடமை உணர்ச்சியும் அறிவும் அவளுடைய களிவியப்பை மீறி நின்றன. சட்டென எழுந்து அவனை நமஸ்கரித்து, "ஸ்வாமி, இதென்ன சோதனை? என் வைராக்கியத்தில் நம்பிக்கை இழந்துவிட்டீர்களா? எனக்காகத் தங்களுடைய - நம்முடைய -

வேள்வித்தலையை இப்பொழுது தளர்த்த வேண்டாம்....'' என்ருள்.

வந்தவன் அடித்தொண்டையிலிருந்து ஒரு சிரிப்புக் குலுங்கிற்று. நின்றவளை அண்ணுந்து நோக்கியவண்ணம் அவள் கையைப் பிடித்தான்.

அகல்யாவின் உயிர் துடித்தது. அவன் ஸ்பர்சம் - அவள் சிறிது எக்கத்துடன் எதிர் பார்த்த, ஆனல் மறுத்த இன்பத்தைத் தர வில்லை. தென்றலினூடே பாய்ந்த அனற் காற்றுப் போல ஓர் உணர்ச்சி அவள் அறிவைத் தாக்கிற்று. சொல்லி முடியாத, தாங்க வொண்ணுத, வெறுப்புக் கலந்த இன்ப உணர்ச்சி அவள் புலன்களில் மோதிற்று. சட்டெனக் கையை உதறிக்கொண்டு விலகினுள்.

மீண்டும் ஒரு முறை ஆசிரமக் கதவு திறக்கப் பட்டது. அங்கு நின்ற கௌதமனைத் தள்ளிக் கொண்டு, போலிக் கௌதமன் விரைவதைக் கண்டாள்.

"அட சண்டாளா!'' கௌதமன் கோபக் குரல் தூரத்த இந்திரன் ஓடி மறைந்தான்.

புத்தியும் பொறியும் கலங்கிப்போன அகல்யா அப்பொழுதுதான் உணர்ந்தாள். தன் கணவனை நோக்கிப் பாய்ந்தாள்.

"ஸ்வாமி!''

"சீ, துரோகி! உன் பசப்பு வார்த்தைகளில் மயங்கிய நான் அல்லவா மூடன்? எவ்வளவு சாதுர்யமாய் என் கர்மத்தைக் கொண்டே என்னை விலக்கி வைத்துவிட்டாய்?''

இவ்வார்த்தைகளின் துன்பம் அவளைப் பாதிக்கவில்லை. அந்த அபாண்டத்தில் அவள் உணர்விழந்து ஸ்தம்பித்துவிட்டாள்.

கோபம் முழுவதையும் வசையில் பொழிந்த கௌதமன் அவள் தன்னையே நோக்கியவாறு நிற்பதைக் கண்டான். கற்சிலை போல் நின்ற அவள் கண்கள் அவனைப் பழித் தன. 'இவ்வளவுதானு உன் ஞானம்? இது தானு நீ கண்ட திருஷ்டி? அட அறிவிலி! இதற்கா இவ்வளவு பாடுபட்டு எல்லாவற்றை யும் துறந்து என் வாழ்வையும் பாழாக்கினுய்?' என்று அலறுவனபோல இருந்தன அவள் கண்கள்.

கோபம் தணிந்து நடந்ததை, நடக்காததை அறிந்த கௌதமனுக்குப் பிரமை பிடித்து விடும் போல் இருந்தது. அவனுடைய ஞானம் மடிந்து திருஷ்டி மங்கிவிட்டது. பைத்தியம் பிடித்தவனைப் போல் தள்ளாடிக்கொண்டு வெளியில் சென்ருன்.

இவர்களை உதாசீனத்துடன் பார்த்து ஏளனம் செய்துகொண்டே சென்றது காலம். அகல்யா உணர்ச்சியிழந்து ஒரு கற்சிலைபோல இயங்கிக் கொண்டிருந்தாள். தன் கணவனுக்குத் தேவை யான பணிகளைச் சூத்திரப்பதுமைபோல் செய்துகொண்டே வந்தாள். கௌதமன் அவளை வெறுத்தபோதும் அவளுடைய சுச்ரு ஷையைத் தடுக்கச் சக்தியற்றவனுய் எதையோ இழந்தவன் போல் ஏக்கத்துடன் அலைந்து திரிந்துகொண்டிருந்தான்.

மரத்தோடு மரமாய், கல்லோடு கல்லாய், அகல்யா நின்றுகொண்டிருந்தாள். அவள் நின்ற நிலையில் இளமையின் இசையும் இல்லை, உணர்ச்சியின் ஒளியும் இல்லை. பருவங்களின் போக்கு அவளைச் சிறிதும் பாதிக்க வில்லை. நடைப்பிணம்போல் நின்றுகொண்டி ருந்த அவளைச் சுற்றித் திடீரென ஓர் ஒளி பரவிற்று. அந்த ஜோதி அவள் கண்களில் தாக்கி அவள் தேகம் முழுவதும் வியாபித்தது. வசந்த காலத்தில் பூத்துக் குலுங்கும் மலர்க் கொடிபோல் அவள் மெய் சிலிர்த்துத் தலை நிமிர்ந்தாள். அருகில் இரண்டு யுவர்கள் வியந்து நின்றனர். அவர்களுடைய சுடரொளித் தோற்றத்தைக் கண்டு நாணித் தலை குனிந் தாள்.

அந்தச் சிறுவர்களருகில் நின்றுகொண் டிருந்த முனிவர், கௌதமனை அழைத்தார்.

அகல்யா உயிர்பெற்ற ஒளியில் கௌதமனும் அறிவுபெற்று நின்ருன். அவனுடைய தீர்க்க தரிசனம் இந்த அற்புதத்தை உணர்வதற்குள் தசரத குமாரனுக்குக் கௌசிகன், வரலாறு முழுவதையும் சொல்லிவிட்டான்.

"கௌதம மகரிஷி, இந்த மாதரசியை ஏற் றுக்கொள்ளுங்கள். இவள் கற்பு மாசற்றது.''

"இப்பொழுதுதான் அறிந்தேன், ராம மூர்த்தி! குரோதத்தினல் தவம் முழுவதையும் இழந்தேன். அறிவும் மறைந்துவிட்டது.''

ஒளிமகள் போல் பூரணப் பொலிவுடன் நின்ற அகல்யாவை ராமன் கைகூப்பித் தொழுதான்.

ஒரு புறத்தில் கௌதமன் கௌசிகனைக் கேட்டுக்கொண்டிருந்தான்: "என்ன கொடுமை! ஏன் இந்த அபாண்டமும் அநுபவமும்?''

கௌசிகன் சொன்னுன்: "கௌதமா, பிர பஞ்ச இயற்கை அது. உன் ஞான திருஷ்டி யால் நீ உண்மையை அறிந்திருந்தால்கூட உலகம் அவளைச் சும்மா விட்டிராது.''

"என்ன உலகம்! என்ன நியதி! ஞானமார்க் கத்தைத் தேடும் நமக்குக்கூடவா இந்தச் சோதனை?''

கௌசிகன் சிரித்தான்.

"முனிசிரேஷ்டா, அதோ உன் பத்தினி யின் பெருமைக்குக் காணிக்கை செலுத்தும் அந்த ராஜகுமாரனுக்கும் உண்டு இந்த நியதி; பிரபஞ்ச நிர்ப்பந்தம்.''

அகல்யா கௌதமன் அருகில் வந்து நின்ருள்.

பாலையின் அரங்கேற்று மண்டபம்

ராவ் சாஹேப் எஸ். வையாபுரிப்பிள்ளை

பட்டினப்பாலை என்பது பத்துப்பாட்டு என்னும் தொகுதியில் ஒன்பதாவது செய்யுள். இதற்குப் பாட்டுடைத் தலைவன் சோழன் கரிகால் பெருவளத்தான். இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். இது 301 அடிகளாலாயது. இந்நூலின் பெருமையைப் பாட்டுடைத் தலைவனாகிய கரிகாலன் உணர்ந்து 16-கோடிப்பொன் கண்ணனாருக்கு அளித்தான் என்று சொல்லப்படுகிறது.

தத்து நீர்வரால் குருமி வென்றதும்
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்
(இராச - 21)

என்று கலிங்கத்துப் பரணி கூறும். சங்கர சோழன் உலாவிலும்,

பாடிய பாக்கொண்டு பண்டு பதினாறு
கோடி பசும்பொன் கொடுத்தோனும் (10)

என இச்செய்தி குறிக்கப்பட்டுள்ளது. பிற் காலத்ததாகிய தமிழ்விடு தூதும்,

பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டால் பதினாறு
கோடிபொன் கொண்டதுநின் கொற்றமே

என்று கூறுகிறது. இவ்வொரு செய்தியே இது வரை அறியப்பட்டது. இப்பொழுது புதுச் செய்தி ஒன்று சாஸனத்தால் வெளியாகின்றது. பட்டினப்பாலையை அரங்கேற்றுவதற்குப் பதி னாறு தூண்கள் அமைந்த பெரிய மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது என ஓர் சாஸனச் செய்யுள் தெரிவிக்கிறது. அச்செய்யுள் வரு மாறு:

வெறியார் தளவத் தொடைச்செய
மாறன் வெகுண்டதொன்றும்
அறியாத செம்பியன் காவிரி
நாட்டி லரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன்செய்
பட்டினப் பாலைக்கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறு
மேயங்கு நின்றனவே.

இச்சாஸனம் திருச்சி ஜில்லாவிலுள்ள திருவெள்ளறையில் செதுக்கப்பட்டுள்ளது. இன்றுகாறும் இது வெளியிடப்படாதது. இதில் சுந்தர பாண்டியனுக்கும் மூன்றாம் ராஜ ராஜனுக்கும் நிகழ்ந்த போர் ஒன்று கூறப் பட்டுள்ளது என்பது சரித ஆராய்ச்சியாளர் கருத்து.

இச்செய்யுளில் கண்ணன் என்றது கடியலூர் உருத்திரங் கண்ணனாரை. அரமியம் என்றது அரண்மனையை. இங்குக் குறித்த போர் நிகழ்ச்சியால் அரண்மனைப் பகுதிகளில் பதி னாறு கால் மண்டபம் ஒன்று தவிர ஏனைய அனைத்தும் அழிவுற்றன. மிகப் பூர்வகாலத்தே பட்டினப்பாலை அரங்கேறிய மண்டபமாதலா லும், அதற்கு அழிவு செய்யின் ஓர் தமிழிலக் கிய ஞாபகச் சின்னத்தை அழித்ததாக முடி யும் ஆதலாலும் அது அழியாது பாதுகாக்கப் பட்டது போலும்! இதனால் தமிழிலக்கியச் சின்னங்களை நம் மூதாதையர் எவ்வாறு போற்றிவந்தனர் என்பது விளங்கும்.

இனி, பட்டினப்பாலைக்கும் பதினாறு என்ற தொகைக்கும் ஓர் இயைபு இருத்தல் நோக்கத் தக்கது. பதினாறு கோடிப் பொன் இந்நூற்குப் பரிசிலாக வழங்கப்பட்டதென்பது வரலாறு. பதினாறு தூண்களுள்ள ஒரு மண்டபத்தின் கண் இந்நூல் அரங்கேற்றப்பட்ட தென்பது இச்சாஸனத்தால் புதுவதாக அறியப்படும் வரலாறு. ஒருகால் பதினாறு கோணங்களிலும் தூண்கள் நிறுவி, ஒவ்வொரு தூணிலும் சில பொற்காசுகளைத் தூக்கியிட்டு, பதினாறு கோடிப் பொன் என அவற்றை வழங்கினர் என்று நாம் கொள்ளலாம். இங்கு, பதினாறு கோடிப்பொன் என வந்துள்ளதும், பதிற்றுப்பத்தில் காப்பி யாற்றுக் காப்பியனாருக்கு 40 - நூறாயிரம் பொன்னும், காக்கைபாடினியார் நச்செள்ளை யாருக்கு 9 - துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசும், கபிலருக்கு நூறாயிரம் பொற் காசும், அரிசில்கிழாருக்கு ஒன்பது நூறாயிரம் பொற்காசும், பெருங்குன்றூர்கிழாருக்கு 32 - ஆயிரம் பொற்காசும் பரிசிலாக அளிக்கப் பட்டன என வந்துள்ளனவும் உயர்வு நவிற்சி என்றே நாம் கொள்ளுதல் வேண்டும். இராச ராசன் உலாவின் கண்ணிதோறும் ஆயிரம் பொன் சொரிந்ததாகக் கூறுவதும் உயர்வு நவிற்சியாகவே கொள்ளத்தக்கது.

> தினைத்துணை நன்றி செயினும்
> பனைத்துணையாக்
> கொள்வர் பயன்தெரி வார் (குறள், 104)

என்ற திருக்குறளைப் பின்பற்றி இவ்வாறு புனைந்து கூறினார்கள்போலும்! அன்றியும் ஒவ் வொரு சிற்றரசனும் தன் நாட்டிலுள்ள யானை முதலியவற்றை முற்காலத்தில் பரிசிலாக வழங்கிவந்தனன். இதற்கு மாறாகப் பொன்னை வழங்கத் தொடங்கியது புலவர்களுக்கு எத் தனையோ அருமையாகத் தோன்றி யிருத்தல் வேண்டும். இவ்வருமைப் பாட்டினைத் தெரி வித்தற்கு இவ்வுயர்வு நவிற்சி ஆளப்பட்டது எனக் கொள்ளுதலும் தகும்.

இஃது எவ்வாறாயினும் மேற் குறித்த சாஸனச் செய்யுள் ஓர் அரிய இலக்கிய வர லாற்றை உணர்த்துகின்றது என்பதற்கு ஐய மில்லை.

பிள்ளையார் இல்லை!

இப்போது தமிழ் நாட்டில் மூலைக்கு மூலை பிள்ளையார் உட்கார்ந்திருக் கிறார். மண்டபத்திலும் மரத்தடி யிலும் தொந்திக் கணபதியைத் தரிசிக் கலாம். ஆனால் 2000 வருஷங்களுக்கு முன் இங்கே பிள்ளையார் வழிபாடு இருந்ததா என்பதே சந்தேகம். ஆச் சரியமாக இருக்கிறதல்லவா? இப் போதுள்ள பழைய சங்க நூல்களில் ஓரிடத்தில்கூடக் கணபதியைப்பற்றிய செய்தி இல்லை. முருகன், சிவபெரு மான், உமாதேவியார், திருமால் எல்லோரும் வருகிறார்கள். முதற் கடவுள் என்று நாம் சொல்லும் ஆனை முகக் கடவுளைப்பற்றி யாரும் மூச்சுக் கூட விடவில்லை.

ஒருவள்!

"குதிரைக்குக் குர்ரம் என்று தெலுங்கில் பெயர்" என்றான் அண்ணா.

"அப்படியானால் ஆனைக்குப் பெயர் நீ சொல்லாமலே தெரியும்" என்றான் தம்பி.

"என்ன?"

"அர்ரம்" என்று வெற்றி மிடுக் கோடு நிமிர்ந்து சொன்னான் தம்பி.

இந்த மாதிரி வந்ததுதான் ஒருவள் என்ற வார்த்தை. ஒரு மனிதனை ஒருத்தன் ஒருவன் என்று சொல்கி றோம். அதே வாய்பாட்டை வைத்துக் கொண்டு ஒரு பெண்ணை ஒருத்தி என்று சொல்கிறோம். ஒருவன் என்ப தைப்போல 'ஒருவள்' என்ற சொல் ஒன்றைச் சிருஷ்டித்து எழுதுகிறோம். ஒருவள் என்று பேசும்போது சொல் கிறோமா? இல்லையே. இலக்கியத் தில் இருக்கிறதா? இல்லை. "ஒருவன் ஒருத்தி" என்றுதான் இலக்கணம் சொல்கிறது. ஒருவள் என்பது தப் பான புது சிருஷ்டி. இது ஆனைக்கு அர்ரமென்று சொல்வதைப் போன் றது என்றால் எப்படித் தப்பாகும்?

தாண்டவமூர்த்தி

தி.நா. சுப்பிரமணியன்

மாலை நேரம் எல்லா ஜீவராசிகளையும் மனோரம்மியமாக்கிப் பரவசப்படுத்தும் சக்தி வாய்ந்தது. ஊருக்கு வெளியே மேய்காலுக்குப் போயிருந்த மாடு வீடு திரும்புகிறது. அதுகாறும் தாயைப் பிரிந்திருந்த கன்று தன் தாயைப் பார்த்தவுடனே ஆனந்தங்கொண்டு நாலுகால் பாய்ச்சலில் துள்ளிக் குதித்து அதனிடம் ஓடுகிறது.

ஆற்றோரம் சலசலவென்று அரித்து ஓடும் நீரிலும், பக்கத்து மணல் மேட்டிலும் சிறுவர்கள் கொம்மாளம் போட்டு விளையாடுகிறார்கள். அந்த விளையாட்டையும் அவர் குதித்து ஆடுவதையும் பார்க்கும் போது நமக்கும் ஒரு பரவச உணர்ச்சி உண்டாகிறது.

ஆற்றோரம் விளையாடும் அதே குழந்தை வீட்டிலே தனக்குப் பக்ஷணம் கிடைக்கவில்லை என்று கோபம் கொண்டு 'தொம், தொம்' என்று குதிக்கிறது.

இவ்விதம் உயிர்வாழும் பிராணிகள் எல்லாம் தங்கள் உள்ளத்தே தோன்றும் உணர்ச்சிகளை வெளியிடக் கூத்தாடுகின்றன. அந்தக் கூத்தைப் பார்த்தாலே அது ஆனந்தக் கூத்தா அல்லது கோபக் குதியா என்பது எளிதில் விளங்கிவிடும்.

எவ்விதமாயினும் அத்தகைய கூத்துக்கள் எல்லாவற்றிலும் ஒரு விதமான ஒற்றுமையைக் காண்கிறோம். அதுவே நாட்டிய சாஸ்திரத்தின் வித்து.

மற்றப் பிறவிகளை விட்டு, மானிடப்பிறவி அடைந்தவர்களை மட்டுமே கவனித்தாலும், உலகத்து மக்கள் எல்லோரிடையேயும் நாட்டியம் அவர்கள் வாழ்க்கையிலே ஒரு முக்கியமான அம்சமாக விளங்குகின்றது. இந்த விஷயத்திலே நாகரிகம் வாய்ந்தவர்களுக்கும், காட்டுமிராண்டிகள் எனப்படும் பூர்விகக் குடிகளுக்கும் வேற்றுமை இல்லை.

எந்த நாட்டினராயினும் அவர்களுள் ஒவ்வொரு ஜாதியினரும ஒரொருவகை நடனத்தைப் பயின்றுவருகின்றனர். அதுதான் வேறுபாடு. ஆனால் நாட்டியத்துக்கு ஒரு முக்கிய ஸ்தானம் கொடுக்காத சமூக வாழ்க்கை எந்த ஜாதியினரிடமும் இல்லை.

மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், அந்த நடனவகைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் தனித்தனியாகத் தோன்றும். ஆனால் ஊன்றிக் கவனித்தால் அவை அடிப்படையான ஒரே தத்துவத்தைப் பெற்றிருப்பதைக் காணலாம்.

மனித சமூக வாழ்க்கை வரலாற்றை ஆராயும் ஆசிரியர்கள் மக்களின் வாழ்க்கைக்கும் அவர்கள் பயிலும் நடனத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைக் கவனித்திருக்கிறார்கள். அது மட்டுமன்று. ஒரு சமூகத்தினர் பயிலும் நடனத்தின் சிறப்பைக் கொண்டே அந்தச் சமூகத்தின் சால்பு மேம்பாட்டை நிர்ணயிக்கிறார்கள்.

உலகத்தையே ஓர் அரங்கம் என்று குறிப்பிடுவர் பெரியோர். அதற்கு ஏற்பவே மக்களின் வாழ்க்கை முறையும் அமைந்திருக்கிறது.

பூர்விகக் குடிகளுள் மனிதனாகப் பிறந்தவனுக்கு அவன் பிறந்ததுமுதல் இறக்கும் வரையில் அவன் வாழ்க்கையில் ஏற்படும் சம்பவம் ஒவ்வொன்றையும் நாட்டியமாடியே கொண்டாடுவர். அவனுடைய பிறப்பு, சமூக வாழ்க்கையில் அவனும் ஓர் அங்கம் வகிக்க முற்படுவதைக் குறிக்கும் ரகசிய உபதேசம், கல்யாணம், இறப்பு முதலியவை முக்கியமான சம்பவங்கள். அன்றி, வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாக நிற்கும் மழை, பிணி, மூப்பு, வீரம் முதலியவற்றை அடையவும் விலக்கவும் அவர்கள் நாட்டியம் பிடிப்பர்.

நடனம் ஆடும் ஒருவன் அந்தச் சமயத்தில் தன்னை மறந்து உணர்ச்சிவசப்பட்டு உன்னத நிலையை அடைகிறான் என்பதை யாவரும் அறிவர். இதை அநுபவத்தால் அறிந்த பண்டை மக்கள் அந்த அந்த வகை உணர்ச்சியை அடைய ஒரு குறிப்பிட்ட நடனத்தை ஆடிவந்தனர்.

ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களில் வசிக்கும பூர்விகக் குடிகள் போருக்கோ வேட்டைக்கோ புறப்படுவதற்கு முதல் நாள் முழுவதையும் நாட்டியம் ஆடியே கழிப்பர். கல்யாண காலங்களில் ஆடும் நடனத்திலின்றும் அது வேறானது. கண்டோர் கதிகலங்கும்படி வீரரஸம் ததும்பும். அதிலே ஈடுபடுவோர் தங்களை மறந்து வீரத்தைப் பெறுகிறார்கள் என்பதே அவர்கள் நம்பிக்கை.

இந்த விதமாகக் காலக்கிரமத்தில் நடன வகைகளுக்குச் சக்தியும் கற்பிக்கப்பட்டது.

அமெரிக்காவில் வாழும் சிவப்பு இந்தியர் எனப்படும் மக்களிடையே ஒருவகை நடனம் உண்டு.

அவர்களுக்கு முக்கிய உணவுப் பொருளான காட்டெருமை கிடைக்காத காலத்திலேயே அதை அவர்கள் மேற்கொள்வர்.

ஒருவன் காட்டெருமைபோலவும், மற்றவன் அதை அம்பெய்து கொல்லும் வேடன் போலவும் நடிப்பார்கள். ஒவ்வொருவனும் தன் சுயநினைவை இழக்கும்வரையிலும் ஆடுவான். ஒருவன் களைத்து வீழ்ந்தால் அவனுக்குப் பதிலாகப் பக்கத்தில் இருப்பவன் அரங்கத்தில் குதித்து அவன் ஸ்தானத்தை ஏற்றுக்கொள்வான். இவ்விதம் அங்கே கூடியுள்ளவர்கள் எல்லோரும் களைத்துப் போகும் வரையில் பல நாட்கள் தொடர்ந்து நடக்கும் இந்த ஆட்டம். இது முடிந்தவுடன் அவர்களுக்கு நிச்சயமாக வேட்டை கிடைக்குமாம்.

உலகத்து மக்களில் மிகப் புராதனமான நாகரிகம் படைத்து, அது இன்றைக்கும் பெருமைபெற்றுத் தலைநிமிர்ந்து நிற்கும்படியாகப் பாதுகாத்துவரும் நம் மக்களிடையேயும் நடனம் பூர்ண அபிவிருத்தி பெற்று விளங்குகிறது. நம் முன்னோர்கள் நாட்டியத்தையே ஒரு கலையாகச் செப்பனிட்டு வளர்த்து வந்திருக்கிறார்கள்.

எந்த வாழ்க்கைச் சம்பவத்தை விளக்க நடனத்தை உருவகப்படுத்தினார்களோ அந்தச் சம்பவத்தை நாம் மறந்துவிட்டோம்; ஆனால் உருவகத்தை மட்டில் இன்றைக்கும் காண்கிறோம். எனினும் நாம் மறந்த சம்பவங்களை நினைவு மூட்டக்கூடிய ஆதாரங்கள் முற்றும் மறைந்துவிடவில்லை.

வாழ்க்கையின் தத்துவத்தை நமக்கு அச்சுறுத்த முன்னோர்கள் தெய்வத்தையும் மனித உருவிலேயே அமைத்து வாழ்க்கை வேறுபாட்டையும் விசித்திரங்களையும் பாவங்களையும் விளக்கிக் காட்டினார்கள். அதனால் மானிட வாழ்க்கையை அடிப்படையாகவும் சார்பாகவும் கொண்டு எழுந்த தேவ வாழ்க்கையிலும் நடனம் முக்கியமான அம்சமாக அமைந்தது.

இவ்விதம் ஏற்பட்டதே தாண்டவமூர்த்தியின் உருவம். இதிலே பலவகைகள் உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாவத்தை விளக்கிக் காட்டுவது.

தென்னாட்டிலே கிடைக்கும் தாண்டவ மூர்த்திகளுள் சர்வ சாதாரணமானது நடராஜ உருவம். அந்த நடனத்தைப் பொதுவாக ஆனந்த தாண்டவம் என்று சொல்லுவார்கள். நாட்டிய சாஸ்திரப்படி அது புஜங்க த்ராஸம் எனப்படும்.

இத்தகைய உருவம் கல்லிலே செதுக்கப்பட்டிருப்பது மிகவும் அரிது. பெரும்பாலும் உலோகத்தால் வார்க்கப்பட்டு இருக்கும். கண்டோரைப் பரவசப்படுத்துவதாகவும் இவ்வளவு லாகவமாகவும் கல்லில் செதுக்க முடியாததே காரணம்போலும்!

திடீரென்று காலடியில் பாம்பைக் கண்ட ஒருவன் தன் காலைத் தூக்கி மற்றொரு காலால் நிற்க முடியாமல் தத்தளிக்கும் நிலையைக் காட்டி நடனம் புரிவதையே நாட்டிய சாஸ்திரத்தில் புஜங்க த்ராஸம் என்பர். நடராஜ விக்கிரகமும் நான்கு கைகளோடு நீறு பூசிய மேனியுடன் அந்த நிலையிலே நிற்கக் காண்கிறோம்.

குப்புறக் கிடக்கும் முயலகன் என்னும் அபஸ்மார புருஷனை மிதித்து அவன் இடுப்பில் ஒரு காலை ஊன்றி மற்றொரு காலைத் தூக்கி நின்று ஆடுகிறார் அவர். காலடியிலே முயலகனுக்குப் பக்கத்தில் ஒரு பாம்பு படம் எடுத்துக் கிடப்பதைக் காணலாம். சில சமயங்களில் முயலகன் அந்தப் பாம்போடு விளையாடுவதேபோல அமைத்திருப்பான் சிற்பி.

ஒரு காலால் நிற்பவன் தன்னைச் சமாளித்துக்கொண்டு நிலைநிற்கத் தன் கையையும் உபயோகித்துக்கொள்வான். அதேபோல நடராஜரும் இடது முன் கையை உடலின் குறுக்காக வலது புறம் நீட்டி அநாயாசமாகத் தொங்கவிட்டிருக்கிறார். இதைக் கஜஹஸ்தம் என்றும் தண்டஹஸ்தம் என்றும் சொல்லுவார்கள். அந்தக் கை நடுவிரலின் நுனி, தூக்கி நிற்கும் பாதத்தைச் சுட்டிக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. இடது பின் கையிலே அக்கினியை ஏந்தி நிற்கிறார் அவர்.

'பயப்படாதே' என்று பக்தனுக்கு அபயம் கொடுக்கும் அறிகுறியாக வலது முன்கையை அபயஹஸ்தம் என்று குறிக்கப்பெறும் முத்திரையில் வைத்திருக்கிறார். வலது பின்கையினால் உடுக்கையை ஒலித்துக்கொண்டிருக்கிறார்.

அந்த நிலையிலே அவர் 'தட்டாமாலை' சுற்றுவதுபோலத் தம்மையே சுற்றி ஆடுவதால் விரித்த செஞ்சடையும் உத்தரீயமும்

நல்லூரில் உள்ள விக்கிரகம் : சதுர நடனம்

காற்றிலே பறந்து நிற்கக் காண்கிறோம். மேல் வேஷ்டியை இடுப்பில் கட்டி ஒரு தோளிலே போட்டிருந்தாலும் அது ஆட்டத்தால் அலையுண்டு பறந்து கிடக்கிறது.

எம்பெருமானும் ஊழிக் கூத்துக்குத் தம்மை அலங்கரித்துக்கொண்டு வந்திருக்கிறார். கை கால்களில் நடு (பாம்பு) விரலைத் தவிர மற்ற விரல்களில் மோதிரம் அணிந்திருக்கிறார். தலையிலே ஜடா மகுடத்தில் மயிலிறகு செருகி அழகு செய்துகொண்டிருக்கிறார். கையிலும் கழுத்திலும் உள்ள பல வேறு ஆபரணங்களோடு சிறு பாம்புகளும் ஒன்றாகச் சுற்றி அவர் உடலில் தவழ்ந்து செல்கின்றன.

முக்கண்; புன்முறுவல் பூத்த முகம்; ஜடாபாரத்தில் சந்திரனும் கங்கையும்-இவ்விதத் திருக்கோலத்துடன் விளங்கும் நடராஜ உருவத்தின் லாகவத்தைக் கண்டு வியக்காதவரே இல்லை.

நாதாந்த நடனம் எனப்படும் இதன் தத்துவத்தைப் பக்தர்கள் பலவிதமாக அநுபவித்துப் பாடியிருக்கிறார்கள்.

இந்தக் கூத்தை ஸந்தியாதாண்டவம் என்றும் சொல்வர். எம்பெருமான் தினந்தோறும் சாயங்காலம் மற்ற எல்லாத் தேவர்களும் கண்டு களிக்கத் திரு நடனம் புரிகிறார் என்று கூறுகிறார்கள். அவர் நடனத்தைக் கண்டு எல்லா ஜீவராசிகளும் கூத்தாடுகின்றனவாம்.

ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் தன்னுள் அடக்கிய பிரளய தாண்டவமாகவே இதைச் சொல்லுவர். அவர் திருநடனம் நின்றுவிட்டால், உலக சக்தியே நின்றுவிடும் என்றும் எண்ணுகிறார்கள். வாழ்க்கையின் அந்தியத்தை உருவகப்படுத்தும் சந்தியா காலத்திலே, அழித்தல் தொழிலையே பிரதானமாகக் கொண்டுள்ள ருத்திரன் ஆடும் தாண்டவத்தை ஊழிக்கூத்து என்று சொல்வது பொருத்தமானதே ஆகும்.



சதுரம் என்னும் நடனவகை. வாதாபிக் குடைவரைக் கோயிலில் உள்ள அர்த்த சித்திரம்.

பற்பல விதமாக விரித்துக் கூறக்கூடிய தத்துவார்த்தங்களை எடுத்துக்காட்டும் நடராஜ உருவம் தமிழ் நாட்டுக்கே சிறப்பான தனி உரிமை பூண்டது. இத்தகைய உருவம் வேறு இடங்களில் இல்லை. சோழ மன்னர்கள் நமக்கு அளித்துச் சென்ற செல்வம்.*

இதன் நிர்மாணம் மிகவும் சிரமமானது என்றே சிற்பிகள் சொல்வர். பரந்த மேற்பாகத்தையுடைய இந்த விக்கிரகத்தை எந்தப் பக்கமும் சாயாமல் ஒற்றைக் காலிலே நிறுத்த வேண்டும் அன்றோ? அதற்காகவே விக்கிரகத்தைச் சுற்றியுள்ள பிரபா மண்டலத்திலே பின் கைகள் இரண்டையும் விரித்த சடைகளையும் உத்தரீயத்தையும் பொருத்திவைத்திருக்கிறார்கள் போலும்!

விக்கிரகத்தையும் பிரபாமண்டலமான திருவாசியையும் தனித்தனியாகப் பிரித்து எடுத்துவிடக் கூடிய முறையில் வார்க்கப்பட்ட உருவங்களும் உண்டு.' அத்தகைய விக்கிரகங்களுக்கு மேற் பாகம் பரந்து காணப்படாது. விரித்த சடையும் உத்தரீயமும் இரா. கட்டு சடை எனப்படும் ஜடா மகுடம் பூண்டே காணப்படும் அந்த விக்கிரகம். அவ்வாறே கால்கைகள் மத்திய ரேகையை விட்டு அதிக தூரம் விலகி இரா.

ராமேசுவரத்தில் உள்ள விக்கிரகம் இவ்வாறே அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய உருவங்களில், ஆனந்த தாண்டவ மூர்த்தியுருவத்தில் உள்ள இயற்கையான வேகத்தைக் காண முடியாது.

நடராஜ உருவங்களுக்குச் சிற்சில சமயங்களில் நான்கு கைகளுக்குப் பதிலாக எட்டுக் கைகளும் பதினாறு கைகளும் இருப்பதும் உண்டு. மற்றும் சில உருவங்களில் நெற்றிக்

---

*பெர்லின் நகரத்துக் கண் காட்சிச் சாலையில் சுட்ட மண்ணால் செய்யப்பட்ட நர்த்தகியின் உருவம் ஒன்று இருக்கிறது. அது கி.மு. நான்காம் நூற்றாண்டில் செய்யப்பட்ட கிரேக்க சித்திரம். அது நாட்டிய சாஸ்திரத்தில் கூறியுள்ள புஜங்கத்ராஸம் என்னும் வகையையே காட்டுகிறது. அந்த நர்த்தகி இடுப்பில் அணிந்துள்ள ஆடையும் புலித்தோலைப் போலவே காண்கிறது. அந்தச் சித்திரத்தைப் பார்க்கும் போது நடராஜ உருவத்தையே நாம் நினைவு கூர்கிறோம். எனினும் நடராஜ உருவத்தின் எழிலும் உணர்ச்சியும் லாகவமும் அந்தச் சித்திரத்திலே இல்லை.

கண் இல்லாமல் இரண்டு கண்களே இருக்கும்.

ஆகமங்களிலே தாண்டவமூர்த்தி நூற்றெட்டு வகைப்படும் என்று கூறப்பட்டுள்ளது. நாட்டிய சாஸ்திரப்படியும் நடனத்திலே நூற்றெட்டு வகை உண்டு. தாண்டவ மூர்த்தி ஆடுவதாகச் சித்திரிக்கப்பட்ட நடன வகைகள் பெரும்பாலும் நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கும் வகைகளையே பின்பற்றியிருக்கக் காணலாம்.

இடது காலை ஸ்திரமாக ஊன்றி, வலது காலை உயரத் தூக்கி, முகத்துக்குச் சமமாகக் கொண்டு ஆடும் உருவத்தைத் தமிழ் நாட்டுக் கோயில்களில் சிற்சில சமயங்களில் காணலாம். ஊர்த்துவ தாண்டவம் என்று அதைச் சொல்லுவார்கள். சக்தியுடன் வாது நடனம் புரிந்த எம்பெருமான் அவளை வெல்லும் வகையறியாமல், இந்த நடன முறையை மேற்கொண்டாராம். பெண்ணைதால் இந்த அபிநயத்தைப் பிடிக்க முடியாமல் சக்தி வெட்கித் தலைகுனிந்து தன் தோல்வியை ஒப்புக்கொண்டாளாம். இவ்விதம் கூறுகிறது ஒரு கதை. நாட்டிய சாஸ்திரத்தில் இவ்வகை நடனத்தை லலாட திலகம் என்பர்.

தஞ்சை ஜில்லா நல்லூர்க் கோவிலில் சதுரம் என்னும் நாட்டிய முறையில் நடனம் செய்யும் எம்பெருமான் உருவம் ஒன்று இருக்கிறது. அது உலோகத்தால் ஆனது. எட்டுக் கைகளுடன் கூடிய அந்த விக்கிரகம் மிக்க அழகாக இருக்கிறது. இதே வகை நடன மூர்த்தியின் திருவுருவம் கல்லில் செதுக்கப்பட்டு வாதாபிக் குடைவரைக் கோயிலில் காணப்படுகின்றது. அது பதினறு கைகளுடன் விளங்குவதாகும். வலது காலை ஸ்திரமாக ஊன்றி, இடது காலைப் பூமியில் விரல் நுனியால் தாக்கிக் குதிகாலைத் தட்டித் தாளம் போடுவதுபோல அமைந்துள்ள இவ்வகை உருவம் பார்வைக்குக் கவர்ச்சியுள்ளதாகத் தோன்றுகிறது. நடனத்தின் உத்வேகம் மிதந்து எம்பெருமான் தம்மை மறந்து நாட்டியமாடுவதுபோலவே காட்சியளிக்கிறர். வாதாபியில் உள்ள அர்த்தசித்திரத்திலே தாண்டவமூர்த்தியின் பக்கத்தில் பிள்ளையாரும் ஆடிக் களிப்பதைப் பார்க்கலாம்.

எல்லோராக் குடைவரைக் கோயிலில் கடிசமம், லலிதம் என்னும் நடன வகைகளை விளக்கும் அர்த்த சித்திரங்கள் உள்ளன.

சாதாரணமாக நின்றுகொண்டு பேசும் போது ஒரு காலைப் பூமியில் நன்ருக ஊன்றி மற்றெரு காலை லேசாக வளைத்து நிற்பது போன்ற நிலையில், இடையின் ஒரு பக்கம் உயர்ந்தும் மற்றெரு பக்கம் தாழ்ந்தும், இரு கால்களையும் ஒன்று சேர்க்காமல் ஒன்றை யொன்று குறுக்கிடும்படியாகக் காணப்படும் விக்கிரகமே கடிசம நிலையில் உள்ளது.

மிகுந்த உத்வேகத்தோடு தாண்டவமாடும் போது எம்பெருமான் தம் இடுப்புக்கு மேற்பட்ட உடலைப் பின்னுல் தள்ளி ஒருபுறம் நன்ருகச் சாய்ந்து இடையை இடது பக்கம் நன்ருக உயர்த்தி வலது குதிக்காலால் தாண்டவத்துக்கு ஏற்பத் தாளம் போடும் நிலையில் இருப்பதைக் காட்டும் உருவமே லலிதம் என்ற வகையைக் குறிக்கிறது.

காஞ்சீபுரம் கைலாசநாதர் கோயிலிலே ஒரு காலை நன்ருக உயரத் தூக்கி, ஓங்கித் தாளம் போட்டுத் தாண்டவமாடும் நிலையில் தலஸஸ்ஸ்போடிதம் என்னும் வகை நடனத்தை ஆடும் உருவம் இருக்கிறது. அதே கோயிலில், மற்றெரு விக்கிரகமும் உள்ளது. தாண்டவமாடி வரும்போது திடீரென்று உட்கார்ந்து வலது காலை வளைத்துப் பூமியில் பாதத்தை ஊன்றுவதோடு இடது காலைப் பின்புறமாக வளைத்து முழங்காலைப் பூமியில் ஊன்றி நாட்டியமாடும் நிலையில் காணப்படும் அந்த உருவம், நாட்டிய சாஸ்திரத்திலே எந்த வகையைக் குறிக்கிறது என்பதை நிர்ணயிக்க முடியவில்லை.

இவைபோன்ற இன்னும் வேறு வகைத் தாண்டவமூர்த்தி உருவங்கள் அங்கங்கே காணப்படுகின்றன. ஆனல் இவ்வகை உருவங்கள் எல்லாம் கல்லிலேதான் அதிகமாகச் செதுக்கப்பட்டுள்ளவை. அன்றி, சோழர் ஆதிக்கியம் ஓங்கி அவர்கள் மகோன்னத நிலையில் விளங்கிய காலத்துக்கு முற்பட்டவை. சோழர்கள் ஆனந்த தாண்டவத்தை விளக்கும் நடராஜ உருவத்தைச் சிருஷ்டித்துப் பிராபல்யமாக்கியவுடன், மற்ற வகைகள் சிறிது சிறிதாக வழக்கொழிந்து மறையலாயின.

கட்டு சடை-ராமேச்சுரம்

வல்லம் கோட்டை

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

திலகரைப்பற்றி ஒரு கதை உண்டு. அவர் ஒரு சமயம் ராயகோட்டை சென்றார்; குன்றின்மீதேறிப் பார்த்தார்; வாடிய மனத்துடன் கீழே இறங்கினர். அவர் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் பெருகியது. அங்கே இருந்த அன்பன் திடுக்கிட்டான்; காரணம் யாதென்று கவலையுடன் கேட்டான். திலகர் சொல்வார்:

"அப்பனே! காரணம் நான் கூற வேண்டுமா? உன் உள்ளம் உடையவில்லையா? நமது மரபின் ஜோதி - வீரசிங்க சிவாஜி - தன்னந்தனியாய் நின்றான்; தோள் இரண்டுமே துணையெனக் கொண்டான்; வல்லரசை வாட்டினன்; சிற்றரசுகளை ஜயித்தான்; தனியரசு கொண்டான்; தரணி எங்கும் புகழ்பரப்பினன்; இங்கே கோட்டையும் காவலும் கொண்டான்.

"அக்கோட்டை கொத்தளங்கள் இப்போது எவ்வாறுள? அழிந்தும் வீழ்ந்தும் கிடக்கின்றன. ஏன் அழிந்தன? எவ்வாறு அழிந்தன? நம்மவர் சிந்தனை செய்தனரா? அழிந்ததைப் புதுப்பிக்க முற்பட்டனரா? ஆதி சரிதத்தையாவது அறிந்தனரா? அறியின், நம்மவர் இங்ஙனம் சோம்பிக் கிடப்பரோ? ஆண்மைகொண்டு கிளம்புவரன்றோ? ஒன்றும் இல்லையே. உறங்கிக் கிடக்கின்றனரே. கோழைபோல் நானும் கண்ணீர் விடுகின்றேன். மகாராஷ்டிர மரபில் பிறந்து என்ன பயன்?''

தமிழகத்திலே இடிபட்டுக் கிடக்கும் கோட்டைகள் ஒன்றா? இரண்டா? பாழ்பட்டுக் கிடக்கும் பேரிடங்கள் கொஞ்சமா? அவற்றை நோக்கின், வீரமகனது உள்ளம் குமுறும்; தேசபக்தனது உடலம் துடிக்கும்.

தஞ்சைமா நகருக்குத் தென்மேற்கே, ஏழு மைல் தூரத்தில் ஓர் ஊர். பார்த்தால் பாழடைந்தும் சிதைந்தும் தோன்றும்; இடிந்த கோட்டையின் குட்டிச்சுவரும் கண்ணை உறுத்தும்; தூர்ந்த அகழியும் நெஞ்சைத் துளைக்கும்; மறைந்த மாளிகையின் சின்னமும் மனத்தை உடைக்கும். சமய பரமாகப் பார்த்தால், அங்குள்ள மூர்த்தியும் தீர்த்தமும் உடல் சிலிர்க்கச் செய்யும்; தலவிசேஷமும் ஞானக்கண்ணைத் திறக்கும். அந்த ஊரே வல்லம் கோட்டை. வல்லம் படுகை என்பது வேறு.

வல்லம் கோட்டையின் சரித்திரம் பார்க்குமுன், புராண இதிகாச விசேஷம் பார்ப்போம். கோட்டை இருந்த இடத்தின் நடுவே புண்ணிய தீர்த்தம் என்று உண்டு. அதனை வஜ்ஜிர தீர்த்தம் என்பர். சிறு குளம் போல் இன்றும் பார்க்கலாம். அதன் ஆழம் ஆண் யானைக்கும் அண்டாது. ஆழத்தை அளவிடவே முடியாது என்பர். ஆதியில் அதனை உண்டாக்கியவன் தேவேந்திரன். அகலிகையை அபகரித்த பாவம் தீர, அங்கு இருந்து இந்திரன் தவம் புரிந்தான்; உடல் முழுதும் போர்த்திருந்த நோயும் நீங்கினன் என்று புராணங்கள் பேசும்.

எனவே வஜ்ஜிர தீர்த்தத்தின் ஆதியும் மகத்துவமும் பிரசித்தம். அந்நாள் முதல் மக்களும் தங்கள் நோயும் பாவமும் தொலைய அத்தீர்த்தத்தில் ஆடத் தொடங்கினர். கார்த்திகை மாதத்திலே ஞாயிற்றுக் கிழமைகளில் நீராடுதல் மிகவும் விசேஷம். மாசித் திங்களிலும் ஒருதினம் புனிதமளிக்கும். புண்ணிய கங்கையின் நீர் மாசிமாதம் அத்தடாகத்தில் தோன்றுவதாக ஓர் ஐதிஹ்யம் உண்டு. அங்குள்ள சிவன் கோயில் மிகவும் புராதனம் வாய்ந்தது. ஆலயத்தின் சுவர்களிலே பல கல் வெட்டுகளைப் பார்க்கலாம்.

வல்லம் கோட்டையில் முகம்மதியர் பலர் வசிக்கின்றனர். அவர்களுக்கும் இந்துக்களுக்கும் ஏதோ மாச்சரியம் ஏற்பட்டது. ஆனதுபற்றி இந்துக்கள் அத் தீர்த்தத்தை அணுகாதிருந்தனர். தற்சமயம் காமகோடி பீடத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் சில ஆண்டுகளுக்கு முன் அந்த ஊருக்கு விஜயம் செய்தார்; மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றின் மகத்துவம் உணர்ந்தார்; இருசாராருக்கும் சமரஸம் உண்டுபண்ணினர். பண்ணவே முன்போல் தீர்த்தமாடத் தொடங்கினர் இந்துக்கள்.

தஞ்சைச் சீமையிலே வாசத்துக்கு மிகவும் வாசியான இடங்கள் இரண்டு. ஒன்று கடலருகேயுள்ள தரங்கம்பாடி அல்லது சடங்கன்பாடி. தரங்கம்பாடியின் உப்பங்காற்று உடலுக்கு உறுதி பயக்கும்; உள்ளத்தினுக்கு உற்சாகம் ஊட்டும். மற்றோர் இடம் வல்லம் கோட்டை. இது சற்றே மேட்டுப்பாங்கான பூமி. இங்கே வீசும் காற்று மிக்க ஆரோக்கியமாக இருக்கும். ஆனதுபற்றியே ஜில்லா கலெக்டர்கள் வல்லத்தில் வசித்துவருகின்றனர்.

வல்லத்தில் முன்னம் விளங்கிய கோட்டை மிகப் பிரமாதமானது, மிக்க வன்மையும் பொருந்தியது என்பார் மில் என்னும் சரித்திர ஆசிரியர். அக்கோட்டை முட்டை வடிவம் வாய்ந்தது. தென் வடலாக அதன் நீளம் சுமார் ஆயிரம் கஜம்; கீழ்மேலாக அகலம் எழுநூற்றைம்பது கஜம். தஞ்சைக்குத் தக்க பாதுகாப்பாக நின்ற அக்கோட்டை எப்போது எழுந்தது என்று புலப்படவில்லை. ஆயினும் ஏறக்குறைய நானூறு வருஷம் அது எடுப்பாக இருந்ததென்றே சொல்லவேண்டும்.

பதினாறும் நூற்றாண்டில் சோழ அரசர் பலங்குன்றிப்போயினர். அப்பால் தென்னிந்தியாவிலே விஜயநகர ஸாம்ராஜ்யத்

தின் செங்கோல் ஓங்கலாயிற்று. அது முதல், ஆங்கிலேயரின் ஆட்சி ஓங்கும் வரையில், அக்கோட்டை குலவி நின்றது. வடநாட்டு இஸ்லாமிய வீரரும் தக்காணத்து முகம்மதிய அரசுகளின் தளகர்த்தரும் அக்கோட்டையைக் கண்டு அஞ்சி ஓட நேர்ந்தது. அதனை முற்றுகையிட்டுத் தகர்க்க முயன்றும் முடியவில்லை.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலே வடநாட்டில் முகம்மதியர் ஆட்சி கொள்ளத் தொடங்கியும், நெடுங் காலம் வரையில் தென்னிந்தியாவிலே கொடி போட அவர்களால் ஆகவில்லை. தக்காணத்தில் முளைத்த பீஜபூர், கோல் கொண்டா முதலிய முகம்மதிய அரசுகளோ தென்னிந்தியாவை எட்டிப் பார்க்க இச்சை கொண்டன. தென்னாட்டையேனும் முகம்மதியரின் பயமின்றிக் காக்க வேண்டுமென்று விஜயநகர ஸாம்ராஜ்யம் வீறுடன் எழுந்தது. எழவே, 1660-ஆம் ஆண்டு வரையில் தெற்கே தலைநீட்ட அவை துணிவு கொள்ளவில்லை.

தலைக்கோட்டை யுத்தத்திலே (1565) அந்த ஸாம்ராஜ்யம் தளர்ந்தது. தளரவே, அதன் சாகைகளான மைசூர், செஞ்சி, தஞ்சை, மதுரை முதலியன சுயேச்சையில் சித்தம் கொண்டன. தலைக்கோட்டையில் தளர்ந்தபோதிலும், விஜயநகர ஸாம்ராஜ்யம் சாய்ந்து அழியவில்லை. இந்நிலையில் ஸாம்ராஜ்யத்தைப் பாதுகாவாமல் சுயேச்சையை நாடித் தாயரசுக்கு விரோதமாகச் சதி செய்தான் மதுரைச் சீமையின் மன்னவனான திருமலை நாயகன்; தன்னுடன் ஒத்துவராத தஞ்சையின்மீது தண்டு கொண்டு வரும் வண்ணம், தக்காண முகம்மதிய அரசுக்குத் தாம்பூலமும் அனுப்பினான்.

தஞ்சையை ஆண்டுவந்த ரகுநாத நாயக்கன் சுத்த வீரன்; சீரிய மதியும் படைத்தவன். ஆதலின், தஞ்சைச் சீமையிலே பற்பல இடங்களில் கோட்டை கொத்தளங்களைப் பலப்படுத்தினான். அவற்றுள் தஞ்சை நகரக் கோட்டையும் வல்லம் கோட்டையும் விசேஷம் வாய்ந்தவை. முகம்மதியப் படைவெள்ளம் புரண்டு வருவது கண்டான் ரகுநாதன்; உடனே, அரசின் பொக்கிஷம் அனைத்தையும் வல்லம் கோட்டைக்கு மாற்றினான்; தஞ்சையில் இருந்துகொண்டு, முகம்மதியருடன் தனிச் சமரும் புரிந்தான். புரியவே, தஞ்சையை அசைக்க எதிரிகளால் இயலவில்லை. அவர்கள் நிற்றே வேசாறி சன்றனர்.

அவ்வேளை பகைவரின் குண்டொன்று வந்து, தஞ்சைத் தளவாயின்மீது தாக்கியது. தாக்கவே அத்தளவாய் தொடை நடுக்கங் கொண்டுவிட்டான். என்ன செய்வான் அரசன்? விதியின்றி அத்தளவாயுடன் சென்று வல்லம்கோட்டையில் தங்கிச் சமர் முறுக்கினான். வந்த முகம்மதியச் சேனை வல்லத்தை வளைய வளைய வந்து தாக்கியும், குண்டு போட்டுத் தகர்த்தும் கோட்டை தளரவில்லை. கொற்றவனும் தளவாயும் கொடுஞ்சமர் ஆற்றினர். ஆயினும் என்ன? யானை தன் பலம் உணராமல் மனிதனுக்குப் பயந்து குற்றேவல் புரியும். அங்ஙனம் அச்சப்பேய்க்கு ஆளாகி விட்டான் தளவாய். அத் தளவாயைக் கொண்டு போரை நடத்துவது எப்படி?

அரசனும் சேனைத்தலைவனுமாக நள்ளிரவிலே கோட்டையை விட்டுப் பயணமாகி இளங்காட்டில் புகுந்தொளித்தனர்.

நாதனற்றுப்போன தஞ்சை, வல்லம் இரண்டும் முகம்மதியரிடம் சிக்கின. அப்பால் மதுரையின்மீது பாய்ந்தது அம் முகம்மதியச் சேனை. கெடுவான் கேடு நினைப்பான் என்பதை அச்சமயம் உணர்ந்து கொண்டான் திருமலை நாயக்கன். தலைக்குக் கொள்ளி விலைக்கு வாங்குவதா என்பர். தமிழகத்திலும் அந்நியர் புகுந்து அட்டகாசம் செய்ய அத்திருமலையின் செயலே முதற் காரணமாயிற்று.

வடக்கேயிருந்து வந்த முகம்மதியச் சேனையின் தலைவன் சிலநாள் வல்லம் கோட்டையில் தங்கியிருந்தான்; அதன் அமைப்பையும் வனப்பையும் கண்டு வியந்தான்; தனது ஆற்றலுக்கு அசையாத கோட்டையைத் தரைமட்டமாக்க வேண்டுமென்று கருதினான். அவ்வளவில் அதன் வளமையும் திண்மையும் அவன் வீரக்கண்முன்னே விளக்கமாக நின்றன. ஆதலின், அக்கோட்டைக்கு ஓர் ஊறும் புரியாமல் வந்த வழிநோக்கி விட்டான். வனம் புகுந்து மறைந்த தஞ்சை வேந்தன் தன் தளவாயுடன் திரும்பிவந்து அரசியலை மேற்கொண்டான். உடனே நாடு நாடாயிற்று.

சிலநாள் சென்றதும் அவ்வேந்தன் காலகதியானான். விஜயராகவன் என்பவன் தஞ்சை வேந்தனாக அரியணையில் அமரலானான். பின்னர், அவனுக்கும் மதுரைநாயக்க மன்னனுக்கும் ஒரு பெண்ணின் நிமித்தம் பெரும்போர் மூண்டது. மதுரைப் படைகள் மண்டி யெழுந்து வந்து, வல்லம் கோட்டையைத் தாக்கின. முகம்மதியனுக்குப் பணியாத கோட்டை மதுரைக்குப் பணியவேண்டுமெனப் பலரும் போர் வேகத்துடன் போர் புரிந்தனர்; கோட்டையைத் தகர்க்கவும் முனைந்து முயன்றனர். எனினும் முடியாது போயிற்று. அப்பால் ஆண்டுகள் பல கழிந்தன. தஞ்சையிலே நாயக்கரின் ஆட்சி மறைந்தது. மகாராஷ்டிரரின் ஆட்சி முளைத்து மும்முரமாகப் பெருகிவந்தது. அக்காலத்திலே இங்கு வர்த்தகம் கருதி வந்திருந்த ஆங்கிலக் கும்பினியாரும் ஆர்க்காடு நவாபும் சேர்ந்துகொண்டு தஞ்சையின் மீது சீறினர். ஆங்கிலேயரின் துணைகொண்டு வல்லம் கோட்டையை வளைத்துக்கொண்டான் ஆர்க்காடு நவாபின் மைந்தன். முற்றுகை கனகடுமையாக நடந்தது. ஆர்க்காட்டு வீரரும் ஆங்கில வீரரும் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். வல்லம் கோட்டையைக் கிட்ட நெருங்க முடியவில்லை.

அதன் பின்னர் 1776-ஆம் ஆண்டு மறுபடியும் கும்பினியார் வல்லம் கோட்டையின் மீது பாய நேர்ந்தது. மகாராஷ்டிர வேந்தன் மூர்க்கமாக எதிர்த்து நின்று, எதிரிகளை விரட்டியடித்தான். கோட்டை விழாவிட்டால், கொற்றவனைக் குலைக்க முடியாதெனக் கண்ட கும்பினியார் தந்திரவலை வீசினர். அவ்வலையில் பட்டு உழன்றான் தஞ்சைத் தளவாய். அதன் விளைவாக அந்தத் தளவாயும் தஞ்சை அரசனும் வல்லத்தை விட்டு அகன்றனர் வேறு நோக்கத்துடன். பாது காவல் இல்லாத சமயம் பார்த்தே கும்பினித் துருப்புகள் அக்கோட்டையில் புகுந்தன. அங்ஙனம் பன்முறை அக்கோட்டை ஒருவருக்கும் அசையாமல் ஆண்மையுடன் விளங்கி நின்றது.

பின்பு, ஹைதர் காலம் என்பார்களே, அக்காலத்தில்தான் வல்லம் கோட்டை அழியத் தொடங்கிற்று. தனி மனிதனுக்கு வாழ்வும் தாழ்வும் வந்துறும். அங்ஙனமே எதற்குமாம். தாழ்வு காலம் வந்ததும் வல்லம் கோட்டை எங்ஙனம் தப்ப முடியும்?

வல்லம் கலப்பை, வல்லம் கலப்பை என்று முன்னம் பெருமையாகப் பேசுவார்கள். அது நாட்டுக் கலப்பைதான். என்றாலும், அது உறுதிமிக்கது; நாள்பட உழைக்கும்; பார்வைக்கும் அழகாக இருக்கும். ஆனது பற்றி, அக்கலப்பை செய்யும் தச்சருக்கும் கருமாருக்கும் அந்நாளில் மதிப்பு அதிகம். வல்லம் கலப்பைக்கு ஈடாக அந்நாளிலே வேறு கலப்பை கிடையாது. இப்போதோ அவ்வல்லம் கலப்பையில் மக்களுக்கு அவ்வளவு மோகம் இல்லை.

இருள் பிரியுமுன் எழுவோர் இன்று அருமையாகிவிடவே பலருக்கும் வாலிப வயசில் கண் பார்வை மங்குகிறது. ஆதலின் மூக்குக் கண்ணாடி தரித்தல் வழக்கமாகிவிட்டது. இப்போதோ அக்கண்ணாடி பில்லைகள் எல்லாம் மேனாட்டிலிருந்து வருகின்றன. முன்னமோ வல்லம் மூக்குக் கண்ணாடி உலகப் பிரசித்தம். அந்தக் கண்ணாடி பில்லை செய்ததற்கான ஸ்படிகக் கற்களும் கூழாங்கற்களும் வல்லத்தில் மிகுதி. பலர் அத்தொழிலில் இறங்கி, ஊதியம் எய்தி வந்தனர். வெளியூர்களுக்கும் வல்லத்திலிருந்து மூக்குக் கண்ணாடிகள் ஏராளமாகப் போயின. இப்போது வல்லம் பில்லைகள் கிடைத்தல் அருமை. என்ன சாபத்தீடு இது!

வல்லம் கோட்டையின் புராதன மக்கள் வல்லம்பர் எனப்படுவர். தற்காலம் ஒரு சிலரே வல்லத்தில் உளர். முன்னம் கொடும் பஞ்சமொன்று நேர்ந்தது. அப்போது அம்மக்களில் பலரும் பிழைப்பை நாடி வேறிடம் போய்விட நேர்ந்தது. திருச்சி, மதுரை, புதுக்கோட்டை இந்த இடங்களில் அந்த மரபார் அதிகம். வல்லம் கோட்டை வேளாளர், வல்லம் தோட்டம் இழந்த வேளாளர் என்று அவர்கள் பெருமையாகச் சொல்லிக்கொள்வர். முற்காலத்திலே அவர்களில் ஒரு சாரார் போர் வீரராகவும், இன்னொரு சாரார் வேழம் பராகவும் வீறு காட்டி விளங்கியதாக அவர்களின் சரித்திரம் கூறும்.



எங்கள் ஊர்

வே. ரா. சுந்தரராமன், எம். ஏ.

எது என்னுடைய ஊர்?

எந்த ஊரைப்பற்றி என்னுடைய ஊர் என்று உரிமை கொண்டாடி எழுதுவது? ஒரு குக்கிராமம் எங்களுடைய புராதன ஊர் என்பதைக் குறிக்க, என் பெயருக்கு முன்னுள்ள இரண்டு எழுத்துக்களுள் முதலாவதை நான் சுமந்துவருகிறேன். ஆனால் சேர்ந்தாற்போல் ஒரு மாதமாவது அங்கிருந்தால்தானே அதைப் பற்றி எழுதலாம்?

என் இளமைப் பருவத்தில் பெரும்பாலும் முதல் பன்னிரண்டு பதின்மூன்று ஆண்டுகளைக் கழித்ததும், நடு நாட்டுப் பழம்பெருந் திருப்பதியுமான திருக்கோவலூர் (திருக்கோயிலூர் என்றும் இப்பெயர் மருவியிருக்கிறது) என்னும் ஊரைப்பற்றி எழுதலாம் என்று துணிந்தேன்.

ஔவையாருடன் தொடர்பு

தென்பெண்ணை நதிக்குத் தெற்கே யுள்ள இவ்வூரில் ஆற்றங்கரையில் குடிசையொன்று போட்டுக்கொண்டு அதில் வசித்துவந்தான் ஓர் இடையன். அவ்வீட்டினுள் ஔவையார் ஒரு சமயம் மழைக்காக ஒதுங்கவேண்டி வந்தது. மழையில் அதிகமாய் நனைந்து விட்டபடியால் குளிரெடுத்து அவளுடைய உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. அவ்விடையனுக்கு இரண்டு பெண்கள். அங்கவை, சங்கவை என்பன அவர்களுடைய பெயர்கள். இச்சிறுமிகள் கிழவியைப் பார்த்து மனமிரங்கி அவளுக்கு ஆடை கொடுத்து, குளிர்காய நெருப்பும் உண்டாக்கி, உண்ண அமுதாக முருங்கைக் கீரையை நெய்யை விட்டுச் சமைத்து அதையும் கேழ்வரகுக் களியையும் கொடுத்தார்கள். உடுக்க ஆடையும் உண்ண உணவும் கிடைத்தால் புலவர்களுக்கு வரும் சந்தோஷத்திற்குக் கேட்க வேண்டுமோ?

“வெய்தாய் நறுவிதாய்
வேண்டளவும் தின்பதாய்
நெய்தான் அளாவி
நிறையிட்டுப் - பொய்யே
அடகென்று சொல்லி
அமுதத்தை இட்டார்
கடகம் செறிந்தகை யால்”

என்னும் பாட்டால் கிழவியின் உத்ஸாகம் வெளியாயிற்று.

இதனுடன் நின்றாளா கிழவி? அப்பெண்கள் வழங்கிய நீலநிறச் சேலையையும் ஒரு பாட்டால் புகழ்ந்தாள். அது வருமாறு:—

“பாரி பறித்த
பறியும் பழையனூர்க்
காரிஅன்று ஈந்த
களக்கொட்டும் - சேரமான்
வாராய் என அழைத்த
வார்த்தையும் இம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர்.”

இந்தப் பாட்டைப் பாடியவுடன் அவ்விடையனுக்குப் பெருத்த செல்வம் கிடைத்ததாம். ஔவையாரின் கைம்மாறு இதனுடன் நின்றுவிடவில்லை. தக்க வயசினரான அவ்விரண்டு பெண்களுக்கும் மணஞ்செய்விக்க ஏற்பாடு செய்தாள்.

“ஒருகொம்பு இருசெவி
மும்மதத்த நால்வாய்க்
கரியுரிவைக் கங்காளன்
காளாய்—பரிவுடனே
கண்ணால வோலை
கடிதெழுத வாராயேல்
தண்ணாண்மை தீர்ப்பேன்
சபித்து”

என்னும் பாட்டைப் பாடி விநாயகக் கடவுளை விளித்து, அவர் வந்தவுடன் தான் சொல்ல அவரை அடியிற்கண்ட மூன்று செய்யுட்களை எழுதச்செய்து அவற்றைத் தமிழ் மூவேந்தருக்கும் ஓலையாக அனுப்பினார்.

சோழனுக்கு—

"புகார்மன்னன் பொன்னிப்
புனனுடன் சோழன்
தகாதென்று தானங்
கிருந்து—நகாதே
கடிதின் வருக
கடிக்கோவ லூருக்கு
விடியப் பதினெட்டாம் நாள்."

பாண்டியனுக்கு—

"வையைத் துறைவன்
மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று
தேம்பாதே—தையலர்க்கு
வேண்டுவன கொண்டு
விடியவீ ரொன்பானுள்
ஈண்டு வருக இசைந்து."

சேரனுக்கு—

"சேரலர்கோன் சேரன்
செழும்பூந் திருக்கோவல்
ஊரளவுந் தான்வருக
உட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள
அரசர் மனமிசைந்தார்
சங்கவையை யுங்கூடத் தான்."

மூவேந்தர்களும் தத்தம் பரிவாரங்களுடன் வந்திருந்து மணத்தை நடத்திவைத்தனர். அவர்கள் தன்னை ஒரு பொருளாக மதித்து அங்கு வர உடன்பட்டதற்கு அவர்களுக்கு வந்தனம் அளித்துவிட்டு, தான் அவர்களுக்கு இட இருந்த எளிய அன்னத்தைச் சாப்பிட்டுப் போம்படி வேண்டினள். அரசர்கள் வேடிக்கைக்காக, "இவ்விடத்திலேயே ஒரு பன நுங்கு உண்டாக்கிக் கொடுத்தால் சாப்பிடுவோம்" என்று சொல்லவே, கிழவி அருகிலிருந்த உலர்ந்த சில பனைமரத் துண்டுகளைப் பார்த்து,

"திங்கட் குடையுடைச் சேரனுஞ்
சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின்
றூர்மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச்
சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி அடிக்கண்
கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தா
வேண்டும் பனந்துண்டமே"

என்ற பாட்டைப் பாடினள். உடனே அப் பனந்துண்டங்கள் தளிர்த்துக் குருத்துவிட்டு வளர்ந்து ஒரு நுங்குக் குலையை ஈன்றனவாம்! அவ்வரசர்கட்கு ஒரு புறம் வெட்கமும் ஒரு புறம் மகிழ்ச்சியும் அங்கிருந்த மற்றவர்களுக்கு ஆச்சரியமும் உண்டாயினவாம். பின்னும்,

"முத்தெறியும் பெண்ணை
முதுநீ ரதுதவிர்ந்து
தத்திய நெய்பால்
தலைப்பெய்து—குத்திச்
செருமலைதெய் வீகன்
திருக்கோவ லூர்க்கு
வருமளவுங் கொண்டாடி வா"

என்று பெண்ணை நதியைப் பாலாகவும் நெய்யாகவும் பெருகும்படியும்,

"கருணையால் இந்தக்
கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன்
கோவல்—திருமணத்தில்
முன்மாரி பெய்யும் முதுவாரி
யைமாற்றிப்
பொன்மாரி யாகப் பொழி"

என்னும் பாட்டால் வருண பகவானையே பொன் மழை பெய்யும்படியும் செய்து இவ்வளவும் நிகழ்ந்த இவ்வூரையும்,

"பொன்மாரி பெய்யுமூர்
பூம்பருத்தி ஆடையாம்
அந்நாள் வயலரிசி
ஆகுமூர்—எந்நாளும்
தேங்குபுக ழேபடைத்த
சேதிமா நாடதனில்
ஓங்கு திருக்கோவ லூர்"

என்று சிறப்பித்துப் பாடினள்.

மணப்பெண்டிர்க்கு இடையர் சாதி வழக்கப்படி சீதனமாகக் கொடுக்க ஓர் ஆடு வேண்டுமென்று கிழவி சேரனை வேண்ட, அவன் பொன்னாலேயே செய்த ஆட்டைக் கொடுத்தானாம். அதற்காக அடியில் வரும் பாட்டால் அவனுக்கு நன்றி:—

"சிரப்பால் மணிமவுலிச்
சேரமான் தன்னைச்
சுரப்பா டியான்கேட்கப்
பொன்னாடொன்று ஈந்தான்
இரப்பவர் என்பெறினும்
கொள்வர் கொடுப்பவர்
தாமறிவர் தங்கொடையின் சீர்."

மற்ற இரு வேந்தர்களையும் நோக்கி,

"ஆயன் பதியில்
அரன்பதிவந் துற்றளகம்
மாயனூ துங்கருவி
ஆனாலும்—தூயமணிக்
குன்றுபோல் வீறு
குவிமுலையார் தம்முடன்நீர்
இன்றுபோல் என்றும் இரும்."

என்ற பாட்டைச் சொல்லி, அப்பெண்களுடன் சுகமாய் வாழச் சொன்னாளாம்.

ஔவையாரே இவ்வளவு பாட்டுக்களைப் பாடி ஞளென்றால் எவ்வளவு மேம்பட்ட ஊர் எங்கள் ஊராகிய இத்திருக்கோவலூர்!

முதலாழ்வார்கள்

ஔவையாரின் அருள் வாக்கை மட்டுந்தானு எங்கள் ஊர் பெற்றது? ஆழ்வார்களும் நாயன் மார்களுங்கூடத்தான் இதைப் பாடியிருக்கிறார் கள். முதல் மூன்று ஆழ்வார்களும் ஒரே சமயத் தில் இங்கே சந்தித்துப் பகவானைப் பாடியிருக் கின்றனர்.

வானம் இருண்டு மின்னலும் இடியுமாய்ப் பெருத்த ஒரு மழைக்கு அடிகோலியிருந்தது. அப்பொழுது இவ்வூரிலுள்ள ஒரு வீட்டு வாச லில் ஒரு வைஷ்ணவ பக்தர் நின்றுகொண்டு வீட்டுக்காரரை நோக்கி, அன்றிரவைப்போக்க அங்கே தமக்குக் கொஞ்சம் இடம் கிடைக்குமா என்று கேட்டார். வீட்டுக்காரர், ஒருவர் மட்டும் படுக்கக்கூடிய அவ்வீட்டின் இடைகழியை அவ ருக்கு ஒழித்துக்கொடுத்தார். பக்தர் படுத்துக் கொண்டார். மற்றொரு பக்தர் அங்கு வந்து சேர்ந்தார். அதற்குள் வெளியே மழைக்காற்று வீச ஆரம்பித்துவிட்டது. இவரும் படுக்க இடங் கேட்கவே, முன் வந்திருந்தவர், "இங்கு ஒரு வர் படுக்கலாம், இருவர் இருக்கலாம்!" என்று சொல்லி எழுந்து இரண்டாமவரை வரவேற் ருர். இருவரும் அங்கு அமர்ந்திருக்கையில் மூன்ருவது பக்தர் ஒருவர் அங்கு வந்து சேர்ந்தார். வெளியே மழையும் காற்றும் பலத்து விட்டன. வந்தவர் தமக்கும் அங்கு இடம் உண்டா என்று கேட்க, முதலில் வந்த இரு வரும், "ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்க லாம், மூவர் நிற்கலாம்!" என்று சொல்லி எழுந்து நின்று இவரையும் வரவேற்றனர். அம் மூவரே வைணவ சமயாசாரியர்களான ஆழ்வார் களுள் காலத்தால் முற்பட்டவர்க ளாதலால் முதலாழ்வார்கள் என்று கூறப்படுவர்; அம் மூவர் காஞ்சியில் உதித்த பொய்கையாரும், மாமல்லபுரத்தில் தோன்றிய பூதத்தாரும், மயிலாப்பூரில் பிறந்த பேயாருமாவர். ஒருவரை யொருவர் அறிந்துகொண்டு திருமாலின் கல்யாண குணங்களைப் புகழ்ந்துகொண்டிருக் கையில் அங்கு நான்காவது ஆள் ஒருவன் உட் புகுந்து இவர்களை நெருக்குவது போல் இவர் களுக்குத் தோன்றிற்று. கும்மிருட்டு. வந்தவன் யாரென்று தெரியவில்லை. அங்கு விளக்கு ஒன்றும் இல்லை. பொய்கையாரும் பூதத்தாரும் பாசுர வடிவில் இரு விளக்குகளை ஏற்றினர். அப்பொழுது மூவரும் அங்கு ஒரு ஜோதியைக் கண்டனர். தங்கள் உடலிலும் ஒருபுதிய உணர்ச் சியை அநுபவித்தனர். வந்தவர் பகவானே என்று மூவருக்கும் விளங்கிற்று.

இம்மூன்று ஆழ்வார்களும் ஒருங்கு சேர்ந் திருந்த இடத்தில்தான் இப்பொழுது இவ்வூரி லுள்ள விஷ்ணு கோயில் இருக்கிறது என்பது ஐதிஹ்யம்.

சங்க காலத்தில் இவ்வூர்

ஆழ்வார்கள் காலத்திற்கும் முற்பட்ட கடைச்சங்க நூல்களிலும் இவ்வூர் குறிக்கப்பட் டிருக்கிறது. சங்க காலத்தில் புலவர்களை ஆத ரித்த பெரியர் எழுபேரைக் கடையெழுவள்ளல் கள் என்று சிறப்பித்துக் கூறுவதுண்டு. இவர் கள் அதியமான் நெடுமானஞ்சி, ஆய், எழினி, கண்டீரக் கோப்பெருநள்ளி, பாரி, பேகன், மலையமான் திருமுடிக்காரி என்போர். இவர் களுள் கடைசியாகக் கூறப்பட்ட மலையமான் திருமுடிக்காரி என்பவன் இவ்வூரைச் சேர்ந்த வன். இவனுடைய ஊர் முதலிய விருத்தாந் தங்களை அகநானூறு என்னும் சங்க நூல் எடுத் துரைக்கிறது. பெண்ணையாற்றங்கரையைச் சார்ந்த மலாடு என்ற மலையமானுட்டின் அரச ஞக இருந்தவன் இவன். இவனுடைய ராச தானிதான் கோவலூர் என்று சங்கநூல்கள் குறிக்கும். சங்கப் புலவர்களுள் கபிலரும் மாறோக்கத்து நப்பசலையார் என்பாரும் இவ னைப் பாடியிருக்கின்றனர். புறநானூறு என் னும் சங்கத்தொகை நூலில் 121, 122, 123, 124 என்னும் நான்கு பாட்டுக்களில் கபிலரும், 126-ஆம் பாட்டில் மாறோக்கத்து நப்பசலையா ரும் இம்மலையமான் திருமுடிக்காரியைப் பாடி யிருக்கின்றனர். முத்தமிழ் வேந்தரான சேர சோழ பாண்டியர் ஒவ்வொருவருக்கும் இவன் வெவ்வேறு சமயத்தில் போரில் உதவியிருக் கிருன். இவன் உதவி எவனுக்கு உண்டோ அவனுடையதுதானும் வெற்றி; அவ்வளவு சூரன் யுத்தத்தில்!

புலவர்களுக்கும் அந்தணர்களுக்கும் இவன் பொருள் வழங்குபவன். இத்திருக்கோவலூ ருக்கு அருகில் முள்ளூர்க்கானம் என்ற பெயர் கொண்டு முன்னுளில் இருந்த ஒரு காட்டைப் பற்றியும் சங்க நூல்கள் மிகச் சிறப்பித்துச் சொல்லும். இவனைப் பாடிய கபிலர் தம் கடைசிக் காலத்தில் இவ்வூரிலேயே தங்கி யிருந்ததாகக் கூறுவர்.

மற்றொரு கடையெழு வள்ளலான அதிய மான் நெடுமானஞ்சி என்பானும் இவ்வூருடன் ஒரு தொடர்பு வாய்ந்தவன். அவன் இவ்வூரைப் போரில் அழித்து வென்றான் என்று புறநா னூறு, 99-ஆம் செய்யுள் கூறுகிறது.

விஷ்ணு கோயில்

ஊரைப் பற்றிய பழங்கதைகளை இதனுடன் நிறுத்திக்கொண்டு ஊருக்குள்ளே சற்றுச் சென்று பார்ப்போம்.

இவ்வூரின் முக்கிய விசேஷம் இங்குள்ள கோவில்களே. மேற்கூறியவாறு முதலாழ்வார்கள் மூவரும் ஒருங்கே கூடிப் பாடியது இங்குக் கோயில்கொண்டிருக்கும் உலகளந்த பெருமாளை. இதுதான் இவ்வூரின் விஷ்ணுகோயில்; ஊரின் நடுமையத்தில் உள்ளது. கோவிலின் முன்னும் பின்னும் இரண்டு கம்பீரமான கோபுரங்கள் உண்டு. கோவிலுக்கு எதிரில் இருக்கும் சந்நிதித் தெருவின் கிழக்குக் கோடியிலும் ஒரு பெரிய கோபுரம் உண்டு. இதற்கு அருகில்தான் தேர் நிலை.

மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களுள் இரண்டு அவதாரங்களின் அம்சம் இங்கு உள்ளது. வாமனவதாரமும் திரிவிக்கிரமாவதாரமும் இவை. எனவே கோவிலில் உள்ள மூலவர் பிரம்மாண்டமான உருவுடன் இங்கு நின்ற திருக்கோலத்தில் விளங்குகிறார். ஒரு காலைக் கீழே மகாபலிச் சக்கரவர்த்தியின் தலைமேல் ஊன்றி, ஒரு காலை விண்ணை அளப்பதற்கென மேலே தூக்கிக்கொண்டிருக்கிறார். பெருமாளுக்குத் திரிவிக்ரமஸ்வாமி என்பது திருநாமம். இதைத் தனித்தமிழில் உலகளந்த பெருமாள் என்பர். வைஷ்ணவ பரிபாஷையில் 'தேஹலீசர்' என்று சொல்வார்கள்.

இது தென்கலை வைஷ்ணவர்கள் ஆதிக்கத்தில் இருக்கும் கோயில். வைஷ்ணவ குரு பரம்பரையில் ஸ்ரீ ராமாநுஜாசாரியாரின் சிஷ்யர்களில் ஒருவரான ஆயனர் என்போருடைய வழியில் வந்தவர்கள் இக்கோயிலுக்குத் தர்மகர்த்தாவாகவும் ஜீயாராகவும் விளங்குகிறார்கள்.

கோயிலில் நாலாயிரப் பிரபந்தம் ஓதுவது காதுக்கு இனிமையாக இருக்கும். ஆனால் அதில் ஓர் அடி மட்டுந்தான் சிறுவர்களான எங்கள் உள்ளத்தில் நன்றாய்ப் பதிந்தது. அது,

"திருக்கோவ லூரதனுள் கண்டேன்நானே"

என்பது. இதற்குக் காரணம் இதைப் பாடியபொழுது ஆழ்வாருக்கு இருந்த பக்தி பரவசம் எங்களுக்கும் உண்டாயிற்று என்பதல்ல. இது வந்தவுடன் அடுத்தபடியாகப் பிரசாதங்கள் விநியோகமாகும் என்பதுதான்!

'பிரம்ம ரதம்' என்னும் ஓர் உத்ஸவம் இவ்வூருக்கே தனிச் சிறப்பை அளிப்பது. அன்று தர்மகர்த்தாவை ஊர்வலமாய்க் கொண்டுவருவார்கள். அதற்குச் சில நாட்கள் முன்பிருந்தே அவர் ஆகாரம் ஒன்றுமின்றி, நெறியாய், கருடபுராணம் முதலிய அபர விஷயத்தைப் பற்றிய கிரந்தங்களைப் படித்து இந்த ரதம் ஏறவேண்டும். ஊர்வலம் முற்றுப்பெறாமலேயே சில ஆதீனகர்த்தர்கள் சமாதியடைந்துவிட்டனராம். அவர்களை நேராக ஆற்றங்கரைக்கு எடுத்துக்கொண்டு போய், இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் ஓரிடத்தில் அடக்கஞ் செய்வது வழக்கமாம். இப்பொழுதெல்லாம் பதினெட்டு ரதங்கள், பத்தொன்பது ரதங்கள் ஏறுவது வழக்கமாக இருக்கிறது.

கோவிலுக்கு வடக்கே மொட்டைக் கோபுரம் என்று ஒரு சிறிய கோபுரம் உண்டு. இது பேயாழ்வாரால் கட்டுவிக்கப்பட்டது. ஓரிரவில் கட்டுவதென்ற உறுதியுடன் ஆரம்பிக்கப்பட்ட இது முடிவதற்குள் பொழுது புலர்ந்துவிட்டபடியால், அபூர்த்தியாகவே விடப்பட்டது என்று சொல்லுகின்றனர்.

சிவன் கோயில்

ஆற்றங்கரையோரமாக இருக்கும் கீழூர் என்னும் பகுதியில் சிவன்கோவில் இருக்கிறது. இது வெகு பழமையானது. நாயன்மார்களால் பாடப்பெற்றது. ஸ்வாமிக்கு வீரட்டானேசுவரர் என்று பெயர். இம்மாதிரி எட்டு இடங்களை வீரட்ட க்ஷேத்திரங்கள் என்று சொல்வார்கள். அவற்றுள் இது ஒன்று. இவை அசுரர் முதலியோரைச் சிவபெருமான் சங்காரஞ் செய்த இடங்கள். இங்கே சங்காரஞ் செய்யப்பட்டவன் அந்தகாசுரன் என்பவன்.

பிருந்தாவனம்

ஆற்றுக்கு வடகரையில் ஏகோத்தம ஸ்வாமிகள் என்ற மத்துவ மதப்பெரியார் அடங்கிய சமாதி ஒன்று இருக்கிறது. அங்கே 'சேவை' செய்ய வெளியூர்களிலிருந்து பலர் வருவார்கள். இவர்கள் முக்கியமாய்ப் பிள்ளையில்லாத பெண்பாலர். ஒரு மாதமோ, நாற்பத்தைந்து நாட்களோ இங்கு வந்து தவங்கிடந்து, ஸ்வப்னத்தில் அனுக்கிரகமான பின்பு ஊர் திரும்புவர். அதற்கு அப்புறம் புத்திர ஸந்தானம் ஏற்படுவது நிச்சயமாம். இவ்விடத்திற்குப் பிருந்தாவனம் என்று பெயர்.

பெண்ணையாறு

கோவில்களுக்கு அடுத்தபடியாக ஊரின் முக்கிய அம்சம் அதையடுத்து ஓடும் தக்ஷிண பினாகினி என்னும் நதிதான். தமிழில் இதைத் தென் பெண்ணை என்றும், பெண்ணையாறு என்றும் சொல்வார்கள். ஆனால் இதை ஒரு மண்ணாறு என்று பொருத்தமாய் அழைக்கலாம். வருஷத்தில் பெரும்பாலான பாகம் இதில் தண்ணீர் கிடையாது. எங்கோ ஒரு மூலையில் மட்டும் சலசலவென்று கொஞ்சம் ஜலம் ஓடும்; அவ்வளவுதான். இதற்கு வண்டிப்பாலம் கட்ட வேண்டுமென்று உத்தேசித்தவர்கள் ஆற்றினுள்ளேயே அதை ஓடும் ரஸ்தாவாக (Causeway) அமைத்ததே இதற்கு ஓர் அடையாளம். ஆனால் வெள்ளம் வந்துவிட்டாலோ இது ஒரு முரட்டுக் காட்டாறாக மாறிவிடும். "வெண்ணெய் உருகு

அது மிகவும் குளிர்ச்சியாக இருக்கிறதல்லவா!

... ஆம், களைப்பையும் போக்குகிறது!

... அதுமட்டுமா—ஆனந்தத்தையும் அளிக்கிறது!

தினசரி வினோலியா சோப்பை உபயோகித்து சுகத்தை விரும்பும் மனிதர்களைக் கேளுங்கள். அவர்கள் இது மிகவும் ஆச்சர்யமாக சுகமளிக்கும் என்றும், கோடைகாலத்தில் ஓர் சிறந்த வரம் போன்றதென்றும் சொல்லுவார்கள். அதனுடைய வெண்மையான நுரை குளிர்ச்சியையும், மலர்ச்சியையும் கொடுக்கிறது. அதனுடைய பிரத்தியேகமான வாசனை குதுகலத்தை அளிக்கிறது. மிகவும் களைப்படைந்த நரம்புகளுக்கு உத்ஸாகத்தை ஊட்டுகிறது.



வினோலியா ஒயிட் ரோஸ் ஸோப்பு

VWR. 18-50 TM

VINOLIA CO., LIMITED, LONDON, ENGLAND

கூந்தலுக்கு

வளர்ச்சி, பிரகாசம், சுகந்தம் வேண்டுமானல்

பாத்கேட்டின் சுகந்தமான ஆமணக்கெண்ணெய்

உபயோகியுங்கள்

உங்கள் மூதாதையர்
உபயோகித்து வந்தது.

போலியைக் கண்டு
ஏமாருதீர்கள்

Bathgate & Co.

CHEMISTS **CALCUTTA**

பாத்கேட் அண்டு கம்பெனி

மருந்து வியாபாரிகள் : : கல்கத்தா

சென்னை டிஸ்டிரிபியூடர்கள் :

ஒக்ளே, பௌடன் அண்டு கோ. (மதராஸ்) லிமிடெட்,
11-12, முதல் லைன் பீச், சென்னை.

முன் பெண்ணை பெருகும்" என்று மட்டும் நாங்கள் இவ்வாற்றைப் பெருமையாய்ச் சொல்லிக் கொள்வோம்.

அநேகமாய் வருஷம் முழுவதும் இதில் ஊற்றுப் போட்டு அதிலிருந்து வரும் ஜலத்தை ஸ்நானபானாதிகளுக்கு உபயோகித்துக்கொள்வார்கள். இது மட்டுமல்ல; வெகு தூரத்திற்கு அப்பாலிருந்து இவ்வாற்றில் ஊற்று இறைத்து, அதை வாய்க்காலாகக் கொணர்ந்து, அதனால் ஏரிகளை நிரப்பிக்கொண்டு, அவைகளைப் பயிர் பச்சைகளுக்குப் பாய்ச்சுவார்கள்.

இவ்வூரிலும் காவேரி!

எங்கள் ஊரில் காவேரியும் உண்டு. அதாவது தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து இங்கு வந்து குடியேறிய குடும்பங்களிலுள்ள ஸ்திரீகள் காலையில் இந்நதிக்கு (பெண்ணையாற்றிற்கு)க் குளிப்பதற்காகப் போகையில் தாங்கள் 'காவேரிக்'குப் போவதாகத்தான் சொல்வார்கள். இவர்கள் ஊரில் உள்ள நதி காவேரியாகையால் இவர்களுக்கு எல்லா நதியும் காவேரிதான்.

இடைச்சி கல்

ஆற்றின் நடுவில் கீழூர் வீரட்டானேசுவரர் கோவிலுக்கு அருகில் ஒரு செங்குத்தான பாறை இருக்கிறது. இது ஒரு பிரம்மாண்டமான உருண்டை வடிவமுள்ள பாறை. இப்பாறை மேல் ஒரு சிறு கோவிலும், அதற்குப் போவதற்கு ஒரு குறுகிய செங்குத்தான படியும் உண்டு. இதற்கு இடைச்சி கல் என்று பெயர். ஆற்றில் நிறைய வெள்ளம் இருபுறமும் கரை புரண்டு ஓடுகையில் இது தண்ணீரின் நட்ட நடுவிலிருந்து அழகிய தோற்றத்தை அளிக்கும். இக்கல்லைப்பற்றி ஒரு கதை வழங்குகிறது. ஓர் இடைச்சி ஆற்றின் அக்கரையிலிருந்து ஊர் திரும்புகையில் திடீரென்று வெள்ளம் வந்ததாம். உடனே அவள் இக்கல்லின்மேல் ஏறிக் கொண்டாளாம். ஜலம் வடிந்த பின்பு இறங்கி வந்தாளாம். அதன் ஞாபகார்த்தமாய் அவள் கட்டி வைத்த கோவில்தானாம் இது. ஆனால் இதில் உள்ள சிவலிங்கத்திற்குக் கபிலேசுவரர் என்று பெயரென்றும் இது தண் தமிழ்ப்புலவர் கபிலரைக் குறிக்கும் என்றும் அறிஞர்கள் கூறுவர். இப்பொழுதெல்லாம் மழை வந்தால் அடியில் ஒதுங்குவதற்கும், ஆவணி அவிட்டத்தன்று சொல்லும் மகா சங்கல்ப மந்திரத்தை வெயிலோ மழையோ உடல்மேல் படாமல் நிழலில் உட்கார்ந்து செய்வதற்கும் இது உபயோகப்படுகிறது.

★ ★ ★

வார்த்தை சொல்லும் கதை

ஆமாம்! கதை கேட்பவர்களுக்கு உலகம் முழுதும் கதை சொல்கிறது. கவிஞர்களுக்கு நீல முகில் தவழும் நீள்வானம் கதை சொல்லுகிறது. வான் முகடு முட்டும் மலை கதை சொல்கிறது. இருண்டு செறிந்த காடும், ஓல்லெனத் தவழும் ஆறும், குதித்தோடித் தாளமிட்டு வரும் அருவியும், மலரும் கனியும், மானும் சிங்கமும், மயிலும், குருவியும் கதை சொல்கின்றன. வான சாஸ்திரிக்கு நக்ஷத்திரம் கதை சொல்கிறது. விஞ்ஞானிக்கு நிலக்கரி கதை சொல்லுகிறது; இரும்பு கதை சொல்கிறது. வைத்தியனுக்குப் புண் கதை சொல்கிறது. குழந்தைகளுக்குப் பாட்டி கதை சொல்கிறாள். ஆராய்ச்சி செய்பவர்களுக்கு வார்த்தைகள் கதை சொல்கின்றன.

குழை என்ற வார்த்தை காதில் அணியும் ஆபரணத்துக்கு வழங்குகிறது. அது எப்படி வந்தது? அது ஒரு கதை.

பழைய காலத்தில் தமிழர்கள் காதில் தளிரை அலங்காரமாகச் செருகி வந்தார்கள். "வண் காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்" என்று காதில் அசோகந் தளிரைச் செருகியிருந்ததாக ஒரு பழைய நூல் சொல்கிறது. தளிருக்குக் குழை என்பது ஒரு பெயர். இக்காலத்தில்கூடத் திருநெல்வேலி ஜில்லாவில் தளிரைக் குழை என்று சொல்வார்கள். குழையைச் செருகியது போய்த் தங்கத்தால் ஆபரணம் செய்து அணிந்த போதும் பொருள் மாறினும் பெயர் மாத்திரம் மாறுமல் குழை என்றே நின்று விட்டது. இதே மாதிரி காதில் தென்னை ஓலையையும் பனை ஓலையையும் சுருட்டிப் போட்டுக்கொண்டிருந்தவர்கள், பிறகு பொன்னால் ஆபரணம் செய்து போட்டுக் கொண்டார்கள். நகை புதிய தங்கமாக இருந்தாலும் பெயர் மாத்திரம் ஓலை யென்று பழையபடியே வழங்குகிறது.

"மொட்டைத் தலைக்கொரு பட்டுக்
குல்லா
மூளிக்காதுக் கொரு பொன் ஓலை!"

களத்திர தோஷம்

'மாயாவி'

(சென்ற இதழ் 74-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்கே இவர்கள் இப்படி வீண்கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில், பாலு, கோவு, அவன் மனைவி மூவரும் ருக்குவின் உடல் நிலையைப் பற்றி உண்மையாகக் கவலைகொண்டனர்.

பூஜை, ஹோமம் இவைகள் முடிவதற்கு இரவு இரண்டு மணி ஆயிற்று. அதன் பிறகு தான் பூஜையில் ஈடுபட்டிருந்த அதிதிகள் அனைவருக்கும் இரவு ஆகாரம். கோவு அவர்களைத் தான் கவனித்துவிட்டுப் பிறகு வருவதாகச் சொல்லி, பாலுவை உடனே ருக்குவைப் போய்ப் பார்க்க அனுப்பினான்.

ராமலிங்கமையரும் அவர் மனைவியும் பாலுவை மௌனமாக வரவேற்றனர்.

"அவளுக்கு எப்படி இருக்கிறது?" என்று கேட்டான் பாலு.

"என்னவோ இந்தத் தடவை உயிர் தப்பி விட்டாள் என்றுதான் நினைக்கிறோம்" என்றார் ராமலிங்கமையர்.

பாலு திடுக்குற்று ருக்கு படுத்திருந்த கட்டிலருகே ஓடினான்.

அவள் விழித்துக்கொண்டு படுத்திருந்தாள். அவனைக் கண்டதும் எழுந்திருக்க முயன்றாள். "வேண்டாம், வேண்டாம். எழுந்திருக்காதே" என்று கூறி, பாலு அவளருகே கட்டிலில் போய் உட்கார்ந்து, அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்து, "உனக்கு என்ன செய்கிறது?" என்று கேட்டான்.

"ஒன்றும் இல்லை; அலுப்பாக இருந்தது. புகை கண்களை வருத்திற்று. மயக்கம் வந்து விட்டது. அவ்வளவுதான். இதைத்தான் அப்பாவும் அம்மாவும் இவ்வளவு பிரமாதப்படுத்தி விட்டார்கள்" என்றாள்.

"நானும் அவர்கள் சொன்னதைக் கேட்டுப் பயந்துவிட்டேன்" என்றான் பாலு.

"உனக்கு விஷயம் தெரிந்தால் நீ எங்களை விட அதிகமாகக் கலவரமடைவாய்" என்றார் ராமலிங்கமையர்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"வேண்டுமென்றுதான் கேட்கிறாயா, அல்லது உண்மையாக உனக்கு ஒன்றும் தெரியாதா?"

"எதைச் சொல்கிறீர்கள்?"

"உன் மனைவியைப் பலியிடுவதைத்தான்."

பாலுவும் ருக்குவும் திகைத்தனர்.

"என்ன? யாரை?" என்று கேட்டான் பாலு.

"ருக்குவைத்தான்!"

"யார்?"

"நீ, உன் அண்ணா, மதனி எல்லோருந் தான்."

"நீங்கள் சொல்வதைச் சற்றுத் தெளிவாகச் சொல்ல முடியுமா?"

பாலு வீட்டிற்குள் நுழைந்தபோதே ஒரு விசேஷ மாறுதல் அங்கே தென்பட்டது. என்றைக்கும் அவன் மௌனமாக அவ்வீட்டில் வரவேற்கப்பட்டதில்லை. அவனைக் கண்டதும் முகம் மலரும் ராமலிங்கமையரும் கோமதியும் அன்று கவலையுடன் காணப்பட்டது ருக்மிணியின் அசௌக்கியத்தால் இருக்கலாமென்று எண்ணினான். ஆனால் பின்னால் அவர்கள் பேச்சில் தொனித்த மாறுபாட்டைக் கண்டதும் வேறு ஏதோ அடிப்படையான காரணம் இருக்க வேண்டுமென்று தோன்றியது. கடைசியில் பேச்சு அவனை நோக்கியே திரும்பியதும் அவனுக்கு அடக்க முடியாத கோபம் உண்டாயிற்று.

"உன்னிடம் சொல்வதற்கென்ன? உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடந்தான் சொல்வது?" என்று தொடங்கிய ராமலிங்கமையர், ஆதியில் தம் மனைவிக்குச் சமாசாரம் எட்டியதும், தாம் அதை நம்பாமல் அவளைக் கோபித்துக்கொண்டதும், இன்று பூஜையின் மத்தியில் ருக்மிணி ஹோம குண்டத்தில் மயங்கி விழப்போனது தம் மனசைச் சிறிது கலக்கியதும், அவளைத் தூக்கிவரும் வழியில் பூஜைக்கு மறுபடி கொண்டு விட்டுவிடும்படி அவள் வற்புறுத்தித் தம் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்யும் வகையில் பேசியதும் கூறி, "பாலு, இந்தப் பூஜை, மாந்திரிகம் இவைகளில் நான் எவ்வளவு நம்பிக்கையுடையவனென்று உனக்குத் தெரியும். ஆனால் நான் இப்பொழுது அவற்றின் சக்தியைப் பூர்ணமாக நம்புகிறேனப்பா. நீ அவளைப் பார்க்க வந்திருப்பதிலிருந்து உனக்கு இவ்விஷயங்களெல்லாம் தெரியாது என்று தான் நிச்சயிக்க வேண்டியிருக்கிறது" என்று கூறி நிறுத்தினார்.

பாலு பொங்கும் ஆத்திரத்துடன் அவர் பேச்சு முழுவதையும் கேட்டுக்கொண்டிருந்தான். ராமலிங்கமையர் பேச்சை முடித்ததும், "யார் இந்த அபாண்டப் பழியைக் கிளப்பியது? இதை உண்மை என்று நிரூபிக்க முடியுமா?" என்று படபடக்கக் கேட்டான்.

"செய்வதையும் செய்து விட்டு நிரூபிக்க வேறு வேண்டுமோ?" என்று ஆத்திரத்துடன் பதில் கூறினாள் கோமதியம்மாள்.

"இதில் நிரூபிப்பதற்கு என்ன இருக்கிறது? எல்லாம் வெட்ட வெளிச்சமாகத்தானே இருக்கிறது?" என்றார் ராமலிங்கமையர்.

"அப்படியானால் வீணர்கள் கட்டிய கதையைக் கேட்டுக்கொண்டு நீங்கள் மனம் போன படி தீர்மானித்துவிடுவதா?"

“அப்பா பாலு, நான் சொல்வதைக் கேள். தவறோ சரியோ, நடந்தது நடந்துவிட்டது. ஈசுவரன் செயலினால் அவளும் உயிர் தப்பிவிட்டாள். இனிமேல் கடந்து போனதைக் கிளப்பி, இருப்பவர்களை மனஸ்தாபப்படுத்துவதில் என்ன இருக்கிறது?” என்று பேச்சைச் சமாதான வழியில் இழுத்தார் ராமலிங்கமையர்.

“அது நடக்காத காரியம். எங்கள் குடும்பத்தில் எவ்வித இழுக்கும் இருக்க நான் சம்மதிக்க மாட்டேன். ஒன்று உங்கள் தீர்மானம் தவறென்று ஒப்புக்கொள்ள வேண்டும்; இல்லையானால் அது எப்படிப்பட்ட முழு முட்டாள்தனமானது என்பதை உங்களுக்கு நான் நிதர்சனமாகக் காட்டுவேன்” என்றான் பாலு.



“பாலு, நீ சிறு பிள்ளை. உலகின் நடையை நீ இன்னும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை.”

“ஆனால் சிறு பிள்ளைகளுக்கு உள்ள புத்தி நிதானங்கூடப் பெரியவர்களான உங்களுக்கு இல்லாதுதானே போய்விட்டது? எது எப்படியானாலும் உங்கள் தவறு தவறுதான். அதை நான் நிரூபிக்கவும் செய்வேன்.”

“எப்படி?”

“ருக்குவை இப்பொழுதே என்னுடன் அழைத்துப் போகப் போகிறேன்.”

“என்ன! முடியவே முடியாது” என்று ஏங்கினாள் கோமதி.

பாலு அவள் பேச்சைக் கவனியாமல், “அவளை அழைத்துப் போய், பூஜை ஹோமங்களை மங்களகரமாக முடித்து, நீங்கள் சொல்வது எவ்வளவு பிரம்மாண்டமான பழி என்பதைக் காட்டியே தீருவேன்” என்றான்.

“பூஜை முடியும் வரை அவளை இங்கிருந்து அனுப்ப நாங்கள் ஒருபோதும் சம்மதிக்கமாட்டோம்” என்றார் ராமலிங்கமையர்.

“அது முடியாது. அவளை வைத்துப் பரீக்ஷை செய்தே உங்களை அவமானமடையச் செய்வேன்” என்றான் பாலு.

“பாலு, நீ இச்சமயத்தில் இப்படி முரண்டக் கூடாது” என்றாள் கோமதி.

“அவள் உயிரைப் பரீக்ஷைப் பொருளாக வைக்கும்படி அவ்வளவு விரிந்த சந்தான விருத்தியைக் கடவுள் எங்களுக்குக் கொடுக்கவில்லை. எங்கள் உயிர் அனைத்தும் அந்த ஒரே ஜீவனில்தான் தொங்கி நிற்கிறது. அவளைப் பரீக்ஷை செய்யவோ, அல்லது இச்சமயம் உன்னுடன் அனுப்பவோ நாங்கள் ஒருபோதும் உடன்படமாட்டோம்” என்றார் ராமலிங்கமையர்.

பாலுவுக்குக் கோபம் பெருகிக் கொண்டிருந்தது. “என்ன? உண்மையாகத்தானா? அவளை என்னுடன் அனுப்பப் போவதில்லையா?” என்று கண்டிப்பாகக் கேட்டான் அவன்.

“இல்லை” என்று திடமாகவே கூறினார் ராமலிங்கமையர்.

“அவள் யாருக்குச் சொந்தம் என்பது உங்களுக்குத் தெரியுமா?”

“தெரியும், உனக்குத்தான். ஆனால் நாங்கள் கண் மூடிய பின்பே. அதுவரையும் அவள் நலனுக்கு நாங்களே ஜவாப்தாரி.”

“நீங்கள் வீண் வழக்குப் பேசுகிறீர்கள். இதனால் வரும் பலனை நீங்கள் சிறிதும் ஆலோசிக்கவில்லை.”

“இப்பொழுது அவள் உயிருக்கு மிஞ்சிய பலன் எதுவும் இல்லை.”

“கடைசி முறையாகச் சொல்கிறேன்: அவளை இப்பொழுது என்னுடன் அனுப்புகிறீர்களா இல்லையா?”

"முடியாது, முடியாது, முடியாது!"

"சரி, இனி அவள் தலைவிதியை நீங்களே பார்த்து அநுபவியுங்கள்." பாலு தன்னை மறந்து இவ்வாறு கூறிவிட்டு வாசலை நோக்கி நடந்தான்.

"நில்லுங்கள், போகாதீர்கள். நான் இதோ உங்களுடன் வருகிறேன்." ருக்குதான் இவ்வாறு கூறியது. பாலு திரும்பிப் பார்த்தான். அவள் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயன்று கொண்டிருந்தாள்.

இதுவரையும் நடந்த சம்பாஷணை முழுவதையும் அவள் கேட்டுக்கொண்டே இருந்தாள். அதே சமயம் அவள் மனம் எவ்வாறு இதைச் சமாளிப்பது என்பதைத் தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தது. கடந்த ஒன்றிரண்டு வருஷம் ஏற்பட்ட நெருங்கிய பழக்கத்திலிருந்து அவளுக்குக் கோவுவின் மீதும் மீனுக்ஷியின் மீதும் விசேஷமான நம்பிக்கையும் பயபக்தியும் ஏற்பட்டிருந்தன. அவர்கள் தங்கள் நலனுக்காகத் தன்னைப் பலியிட முயன்றார்கள் என்ற அபாண்டத்தை அவளால் சிறிதுகூட நம்ப முடியவில்லை. தன் பெற்றோரின் மனசை யாரோ வீணர்கள் கலக்கியிருக்கிறார்கள். அவர்கள் அதில் நம்பிக்கையடையும் விதம், சில சம்பவங்களும் நிகழ்ந்துவிட்டன. இவ்விஷயம் தனக்கு முன்னதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தால் இவ்வளவு விபரீதத்திற்கு இடம் ஏற்படாதபடி தடுத்திருக்க முடியும். ஆனால் காரியங்கள் இவ்வளவு அருவருக்கத்தக்க விதம் நேர்ந்துவிட்ட பிறகு தன் கணவனுடன் செல்வதைவிட வேறு உசிதமான வழி ஒன்றும் அவளுக்குத் தோன்றவில்லை. பாலு இதுபோன்ற சமயங்களில் எவ்வளவு பிடிவாதமாய் நடந்துகொள்வான் என்பதையும், இவ்விஷயங்களைத் தன் மைத்துனரும், அவர் மனைவியும் அறியும்போது அவர்கள் மனசு எவ்வளவு கஷ்டப்படும் என்பதையும், இதனால் எல்லாம் தன் பிற்காலச் சம்சார வாழ்க்கை பாதிக்கப்படலாம் என்பதையும் அவள் எண்ணிப் பார்த்த பிறகே, கணவனுடன் புறப்படச் சித்தமானாள்.

பாலு அவள் பேச்சைக் கேட்டுத் திரும்பினான். ஆனால் எழுந்திருக்க முயன்ற ருக்மிணியை அவள் பெற்றோர்கள் தடை செய்து கொண்டிருந்தனர்.

"எங்கே புறப்படுகிறாயடியம்மா? எங்களை ஒரேயடியாகத் தவிக்க விட்டுப் போய்விடப் பார்க்கிறாயா?" என்றார் ராமலிங்கமையர்.

"அவளா புறப்படுகிறாள்? இதெல்லாம் அந்த மந்திர சக்தி பண்ணுகிற கூத்தன்னா?" என்ற பல்லவியைத் திரும்பவும் தொடங்கினாள் கோமதியம்மாள்.

"ருக்கு, உன் தலைவிதி அவ்வளவுதான்" என்று கூறி, பாலு மறுபடி வெளியே நடந்தான்.

வாயிலில் கோவுவும் மீனுக்ஷியும் விரைந்து வந்துகொண்டிருந்தனர். பாலுவைக் கண்டதும், "எப்படியடாப்பா இருக்கிறது ருக்குவின் உடம்பு?" என்று ஏககாலத்தில் கேட்டனர்.

"நாம் பார்ப்பதற்கு ஒன்றும் இல்லை."

"என்ன?" என்று பதறினர் இருவரும்.

"ஆம், அவள் நம்மவளல்ல. வாருங்கள் போகலாம்" என்று பாலு கூறி வெளியே நடந்தான்.

"நீ என்னடாப்பா சொல்கிறாய்?" என்று அழுதுகொண்டே கேட்டாள் மீனுக்ஷி.

"நாம் அவளைக் கொல்வதற்காக இந்த ஹோமம் செய்கிறோமாம்!"

"என்ன என்ன?"

"ஆமாம், வாருங்கள். எல்லாம் சொல்கிறேன்."

அவர்களும் திரும்பி நடந்தனர்.

ருக்மிணியின் அழுகையும் மூரண்டும் ஒன்றும் பலன் பெறவில்லை. பூஜை முடியுமட்டும் அவளைப் படுக்கையை விட்டே எழுந்திருக்க விடாமல் இராப்பகலாய் ஒருவர் மாறி ஒருவராய், ராமலிங்கமையரும் கோமதியும் கட்டிக் காத்தனர். பேதைப் பெண் ருக்குவின் மனம் துடித்துப் பயன் என்ன?

*　　*　　*

பாலுவிடமிருந்து விஷயங்களனைத்தையும் கேட்டறிந்த கோவு அடைந்த வருத்தத்திற்கு அளவே இல்லை. "போதுமப்பா போதும். எனக்கு ஹோமமும் வேண்டாம், பூஜையும் வேண்டாம். இப்படி ஓர் அபாண்டத்தைக் கிளப்பிய பூஜையை நான் நடத்தவே மாட்டேன். இன்றோடு எல்லாவற்றையும் நிறுத்திவிட்டு வந்திருக்கிறவர்களை மரியாதை செய்து அனுப்பிவிடு" என்று மனம் கசந்து கூறினான்.

இதனால் பாலுவின் வீராவேசம் அதிகமாகத்தான் செய்தது. "இதென்ன வீண் பயம் அண்ணா? யாரோ கட்டிய கதையை நம்பி அவர்கள் மூடத்தனமாக நடந்துகொண்டதற்காக நாம் இவ்வளவு சிறப்பாக நடத்தும் பூஜையை நிறுத்தவா? அதன் பலனை அடைய அவர்கள் கொடுத்து வைக்கவில்லை. அதோடு மட்டுமா? என்றென்றும் மறக்க முடியாத தண்டனையையும் அநுபவிக்கப் போகிறார்கள்."

"நீ சொல்வதன் அர்த்தமென்ன பாலு?"

"ஆம். இனி அவர்களுக்கும் நமக்கும் உள்ள பாந்தவ்யம் அற்றுவிட்டது."

"இதென்ன பேச்சு பாலு! அவர்கள் குற்றத்துக்காக அந்தப் பெண்ணைத் தண்டிப்பதா?"

"அப்படியென்றால் அவள் என்னுடன் புறப்பட்டிருக்க வேண்டாமா?"

''அது அவள் தவறுதான்; சிறு பெண் தானே?''

கோவு மிகவும் நிதான நடையுடையவன். எவ்விஷயத்தையும் சமாதானமாக நடத்திக் கொண்டு போவதில் கைதேர்ந்தவன். ஆனால் ராமலிங்கமையரும் கோமதியும் தாங்கள் நம்பிய செய்தியை ஊரெங்கும் பரப்பி, கோவுவின் பெயருக்கே மாசு ஏற்படுத்த முயன்றதனால், அவனுக்கும் அவர்களிடம் வெறுப்பு ஏற்பட்டு விட்டது. அந்நியோந்நிய பாந்தவ்யம் கொண்டிருந்த அவ்விரு குடும்பங்களுக்குள்ளும், பத்துநாட்களுக்குள்ளாகவே முதிர்ந்த விரோதம் பரவியது.

* * *

பூஜை முடிந்துவிட்ட பிறகும் ராமலிங்கமையருக்கும் கோமதிக்கும் பயம் தீர்ந்துவிடவில்லை. இருந்தாலும் ருக்குவை இனியும் இங்கே வைத்துக்கொண்டிருந்தால் விரோதம் முற்றலாம் என்று எண்ணியவர்களாய், ஒரு நாள் அவளை அங்கே கொண்டுவிடச் சென்றனர்.

அவர்கள் சென்ற சமயம் பாலு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தான்.

ராமலிங்கமையரும் கோமதியும் புன் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, ''உடம்பு சௌக்கியமாக இருக்கிறதாப்பா?'' என்று விசாரித்தனர்.

ருக்கு நாணத்துடனும் பயத்துடனும் பின்னால் நின்றாள்.

பாலு அவர்களிடம் பேசவே இல்லை. அவர்களைக் கண்டதும் அவனுக்கு அருவருப்புத்தான் உண்டாயிற்று. அவர்களுக்குச் சரியான புத்தி புகட்டத் தகுந்த சமயத்தை எதிர்பார்த்திருந்தால், உள்ளே எழுந்து சென்று, வீட்டு வேலையாக இருந்த கோவுவைக் கூப்பிட்டு, ''அண்ணா, காணாமல் கண் பூத்துப் போச்சு என்றாயே, இதோ வந்துவிட்டார்கள்'' என்று ஏளனத் தொனியோடு கூறினான்.

ராமலிங்கமையருக்கு அவ்வார்த்தைகள் சற்று உறைத்தன. இருந்தாலும் சந்தர்ப்பத்தை உத்தேசித்துப் படபடக்காமல், ''அப்பா கோவு, பாலு. நான் நினைத்தது தவறோ சரியோ, எல்லாம் இப்பொழுது சுபமாகவே முடிந்திருக்கிறது. என் தவறுகள் எத்தனையோ இருக்கலாம். என் ஒரே பெண்ணைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆசையால்தான் அப்படி ஏதாவது தவறாக நடந்துகொண்டிருப்பேன். ஆகையால் அவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல், ருக்மிணியை இப்பொழுது ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றார்.

''அப்படி வாருங்கள் வழிக்கு'' என்றான் பாலு.

''பாலு, நீ பேசாமலிரு'' என்று சொல்லிவிட்டு, கோவு ராமலிங்கமையரை நோக்கி, ''ஆமாம், நான் கேட்கிறேன்: அன்று தங்கள் மகளைக் குடும்ப தோஷத்திற்குப் பலியிட இருந்த எங்களிடமே, அவளை எப்படி விட்டுப் போகத் துணிந்துவிட்டீர்கள்?'' என்றான்.

அவர்கள் வாதம் செய்ய விரும்புகிறார்கள் என்பதை உணர்ந்துகொண்டார் ராமலிங்கமையர். ஆனால் இச்சமயம் எதிர்வாதம் செய்தால் இன்னும் சங்கடங்கள் அதிகரிக்கலாமென்று ஊகித்தவராய், ''நான் எண்ணியது தவறாகவே இருக்கலாம். அவைகளைப் பொறுத்துக்கொள்ளுங்கள்'' என்றார்.

''நீங்கள் கிளப்பியிருப்பது பொறுக்கும்படியான அற்ப விஷயமா என்ன? என் உயிருள்ள வரைக்கும் மனசை அறுக்கும் பழியை அல்லவா சுமத்தி இருக்கிறீர்கள்? மானத்தோடு ஊருக்கு நல்ல பிள்ளைகள் என்ற பெயருடன் நடமாடி வந்த எங்களை வெளியே தலை நீட்ட முடியாதபடி செய்ய வேண்டுமென்று எவ்வளவு நாளாய்க் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தீர்?''

''அப்படி ஒன்றும் இல்லையடாப்பா. ஏதோ அப்பொழுது மனசில் தோன்றிய பயத்தைப் போக்கிக்கொள்ள ருக்குவை அழைத்துப் போனேனே தவிர வேறொன்றும் இல்லை.''

''நீங்கள் நினைத்தபோது அழைத்துப் போவதற்கும், அனுப்பும்படி கேட்டபோது மறுப்பதற்கும், உங்கள் இஷ்டம்போல் கொண்டுவிடுவதற்கும் நாங்கள் உடன்பட்டாக வேண்டியதில்லையே?'' என்றான் பாலு.

''அது கிடக்கட்டும். பூஜையின்போது அவளைப் பலியிட்டுவிடுவோமென்று பயந்த அவருக்கு இன்னும் நாம் அவ்வாறு செய்யமாட்டோம் என்பதுதான் எப்படி நிச்சயமாயிற்றாம்?'' என்று தொடர்ந்தான் கோவு.

ராமலிங்கமையரால் அவர்களுக்கு விடை அளிக்க முடியவில்லை. 'சிறு பையன்கள் தானே? அவர்கள் தீவிரமாக ஒன்றும் நடந்து கொள்ளமாட்டார்கள். அப்படி ஏதாவது கூறினால் இரண்டு பசப்பு வார்த்தைகளைக் கூறிச் சமாதானம் செய்துவிடலாம்' என்று எண்ணி வந்தார் அவர். ஒவ்வொரு வார்த்தையிலும் அவர்கள் ஆணித்தரமாய்த் தாக்குவதைக் கண்டதும் அவர் மலைத்துப் போய்விட்டார்.

''அப்பா பாலு, கோவு, மறுபடியும் என் பிழையை எல்லாம் ஒப்புக்கொள்கிறேன். அவைகளை மன்னித்துவிட்டு நம் பாந்தவ்யத்தைத் திரும்ப ஒன்று சேர்த்து வையுங்கள்'' என்றார் அவர்.

''நீங்கள் கூறுகிற பாந்தவ்யம் பலவந்தமாக உங்களாலேயே துண்டிக்கப்பட்டு விட்டது. அதை இனி ஒன்று சேர்ப்பதற்கு நாங்கள்

அசக்தர்களாக இருக்கிறோம். ஆகவே இச் சமயத்தில் மேல் நடக்க வேண்டிய உசிதமான காரியம், நீங்கள் உங்கள் சேமந்த புத்திரியுடன் வந்த வழியே செல்ல வேண்டியதாகும்'' என்றான் பாலு.

''ஆம், அதுதான் உத்தமம்'' என்றான் கோவு.

''இனியாவது பெண்ணை உயிருடன் காத்துக் கொள்ளட்டும். தெரிந்தும் கொலைக்களத்தில் கொண்டு தள்ள வேண்டாமே!'' என்றாள் மீனாக்ஷி. அவள் அடுக்களையில் இருந்தவாறே அவர்கள் தர்க்கத்தைக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

அவர்கள் தீர்மானமான பதிலைக் கேட்டதும், ராமலிங்கமையர், கோமதி, ருக்கு - மூவரும் ஸ்தம்பித்துவிட்டனர்.

''நீங்கள் எல்லோரும் இப்படி ஒரு முடிவாகச் சொல்லிவிட்டால் ருக்மிணியின் கதிதான் என்ன?'' என்று மனம் பதறிக் கோமதி கேட்டாள். ''அது எங்கள் தவறுதான்'' என்றாள் அவள்.

''தவறு என்று ஒப்புக்கொண்டுவிட்டால் போதுமா? அதற்குரிய தண்டனையை அநுபவிக்க வேண்டாமா?'' என்றான் பாலு.

ராமலிங்கமையரின் மனோ விகாரம் பெருகிக்கொண்டிருந்தது. அவர்களுக்குத் தகுந்த பதில் கொடுக்க முடியவில்லை; அவர்களுடைய ஒவ்வொரு வார்த்தையும் அவர் மன நிலையைப் பலமாகத் தாக்கிக்கொண்டிருந்தன. இந்நிலையில் பாலுவின் சொற்களைக் கேட்டதும் அவர் நிலை தெரியாமல் கோபம் கொண்டுவிட்டார்.

''என்ன சொன்னாய்? யார் யாருக்குத் தண்டனை கொடுப்பது? நீயா எங்களுக்குத் தண்டனை கொடுக்கப் போகிறாய்? நேற்று முளைத்த பயல் நீ. எது? இடம் பொருள் தெரியாமல் பேசுகிறாய் போலிருக்கிறது. நாவை அடக்கிப் பேசு. மரியாதை தவறிவிட்டீர்களானால் கோர்ட்டு மூலமாக நியாயத்தைக் கோரப் பின் வாங்கமாட்டேன். ஞாபகம் இருக்கட்டும்'' என்று கத்தினார்.

முற்றும் தவறான வழியைப் பின்பற்றிய அவருக்கே இவ்வளவு கோபம் வந்தால், உண்மையாகப் பாதிக்கப்பட்ட அந்த இளைஞர்கள் கோபம் கொள்வதற்குக் கேட்பானேன்?

''ஓய், அதிகமாகப் பேசாதேயும். உமக்கு இருக்கும் கோர்ட்டு எங்களுக்கும் இருக்கிறது'' என்று பதிலுக்குக் கத்தினான் கோவு.

''கோர்ட்டைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். இப்பொழுது அவர்கள் இங்கிருந்து போகிறார்களா இல்லையா, கேள். இல்லாவிட்டால் இன்னும் மரியாதைக் குறைவான காரியங்களுக்குத் தயாராகச் சொல்லு'' என்று கூவினான் பாலு.

ராமலிங்கமையரின் ஆத்திரம் பின்னும் அதிகமாயிற்று. ''சிறு பயல்களா, நீங்கள் இவ்வளவுக்கு மிஞ்சிவிட்டீர்களா? உங்கள் அகம்பாவத்தை ஒடுக்காவிட்டால் நான் ராமலிங்கம் இல்லையடா'' என்று கத்திக்கொண்டே ருக்குவை இழுத்துக்கொண்டு திரும்பினார்.

ருக்கு தன் பிடியை விடுவித்துக்கொண்டு, ஓடிப் பாலுவின் கால்களில் விழுந்து, ''நான் போகமாட்டேன். உங்களை விட்டுப் போகமாட்டேன். என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்று கதறினாள்.

பாலுவின் மனம் அவள்பால் இரங்குவதற்குள்ளாகவே, ராமலிங்கமையர் அவளைக் 'கரகர'வென்று பிடித்து இழுத்துக்கொண்டு, ''டேய், இந்த வீட்டில் என் உயிர் போனாலும் காலடி எடுத்து வைப்பதில்லையடா. என் பெண் விதவை என்று நினைத்துக்கொண்டு விட்டேனடா!'' என்று வீராவேசத்துடன் கூறி வெளியே நடந்தார்.

ருக்கு அவர் பிடியினின்று விடுவித்துக் கொள்ளத் திணறினாள். கோமதி கண்ணீருடன் அவரைப் பின் தொடர்ந்தாள். தெரு நெடுகிலும் ஜனங்கள் அவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

(அடுத்த இதழில் முடிவுறும்)

எண்ணெய்!

எள்ளிலிருந்து எடுக்கும் எண்ணெய்க்கு இன்று நல்லெண்ணெய் என்று பெயர் வைத்திருக்கிறோம். முதல் முதலில் எண்ணெய் என்றாலே நல்லெண்ணெய்க்குத்தான் பெயராக இருந்தது. எள்ளிலிருந்து எடுக்கும் நெய் எள் நெய் - எண்ணெய் என்று வந்தது. பிறகு எல்லா விதத் தைலங்களுக்கும் பொதுவான பெயராகித் தேங்கா யெண்ணெய், கடலை எண்ணெய், மண் எண்ணெய் என்று சொல்ல ஆரம்பித்துவிட்டோம். ''எண்ணை என்று எழுதக்கூடாது; எண்ணெய் என்று எழுதவேணும்'' என்று வாத்தியார் சொல்லுகிறது சரியென்று இப்போது தெரிகிறதல்லவா?

முசல கிசலயம்

சி. கு. கணபதி ஐயர்

சொட்டையப்பருக்கு அவர் எஜமானர் ஒன்றும் கூறவேண்டுவதில்லை. பாகவகைகளில் எஜமானருக்கு எது எது பிடிக்கும், எந்த எந்த நேரத்துக்கு எதனை எதனை அவர் விரும்புவார் என்றெல்லாம் இவர் அறிந்திருந்தார். விதவிதமான அன்ன வகைகள், வியஞ்சனங்கள் முதலியவைகளைப் பண்ணுவதில் வைணவர்கள் மற்ற எல்லோரிலும் கைதேர்ந்தவர்கள். சொட்டையப்பர் அந்த வகுப்பாரில் ஒருவர்.

இளமையில் இவர் படிக்கவில்லை. கல்வி வாசனை இன்னதென்பதே இவருக்குத் தெரியாது. அதனால் உடலுழைப்புள்ள ஏதாவது ஒரு தொழிலை ஜீவனத்தின் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய அவசியம் வந்தபோது மடைப்பள்ளி உத்தியோகத்தைத் தேர்ந்தெடுத்தார். சில நாளில் அதில் தேர்ச்சி பெற்றார். இவருடைய சமையல் நளபாகம் பீமபாகத்தைவிடச் சிறந்ததாக இருந்ததென்றுகூடச் சொல்லலாம். முற்பிறப்பில் இவர் செய்திருந்த புண்ணியவசத்தினால் வைணவப் பிரபந்தங்களுக்கு வியாக்கியானம் செய்த பெரியவாச்சான் பிள்ளை என்ற பெரியாருக்கு மடைத்தொழில்புரியும் பாக்கியம் இவருக்குக் கிடைத்தது. பெரியவருக்குக் கைங்கரியம் செய்யக் கொடுத்து வைத்திருக்கவேண்டாமா? இந்தத் திருப்தியே சொட்டையப்பரை உண்மைப் பணியாளர் ஆக்கியது. மாத ஊதியத்தை எண்ணி இவர் தம் உழைப்பை விற்றவர் அல்லர்.

பெரியவாச்சான் பிள்ளைக்குப் பிரசங்கம் செய்வது, திருவாய்மொழி முதலிய நூல்களுக்கு வியாக்கியானம் எழுதுவது, திருமாலை ஈடுபாட்டுடன் மூன்று வேளைகளிலும் ஆராதிப்பது இவைகளிலன்றி வேறொன்றிலும் மனம் செல்லவில்லை. அவருக்கு அவசியமான மற்ற எல்லாக் காரியங்களையும் கவனித்துவந்தவர் சொட்டையப்பரே. உக்கிராணத்துக்கு வேண்டிய பொருள்களை வாங்கிவருவது, அவற்றைப் பத்திரப்படுத்தி வைப்பது, எஜமானருக்கு ஆடை முதலியவற்றைத் துவைத்துத் தருவது, பூஜைக்கு அவசியமான மற்ற எல்லாக் காரியங்களையும் கவனித்துவருவது முதலியவற்றை ஒழுங்காகச் செய்துவந்தார். அவருடைய திருமேனியை இவர் தம் கண்ணே போலக் காத்துவந்தார். இக்காரணங்களால் பெரியவாச்சான் பிள்ளைக்கு இவரிடம் தனியே ஒரு பிரீதி இருந்துவந்தது.

ஒரு முறை கல்வி சம்பந்தமான ஒரு கூட்டம் திருவரங்கத்தில் நடைபெற்றது. அதற்குப் பெரியவாச்சான் பிள்ளையும் சென்றிருந்தார். கூட்டத்துக்குத் தலைமை வகித்து நடவடிக்கைகளை நடத்தியவரும் அவரே. அவருடன் அவர்தம் அருமைப் பரிசாரகரும் சென்றிருந்தார். அங்கே இவர்கள் இருந்து வரும் நாட்களில் ஒரு நாள் சொட்டையப்பர் தம் சமையல் வேலையை முடித்துக்கொண்டு எஜமானர் வருகையை எதிர்நோக்கி ஆவலோடு காத்திருந்தார். அவர் வரத் தாமதம் உண்டாகவே, கூட்டம் வழக்கமாகக் கூடும் மண்டபத்தில் ஒருகால் அவர் இருக்கக் கூடுமென்று எண்ணி அங்கே சென்றார். அம் மண்டபம் இவர்கள் தங்கியிருந்த விடுதியை அடுத்தே இருந்தது. இவர் சென்ற வேளையில் அங்கே பெரியவாச்சான் பிள்ளை இல்லை. சபை முடிந்து அவர் பெரியபெருமாளைச் சேவிக்கத் திருக்கோவிலுக்குச் சென்றிருந்தார். இதனைக் கேள்வியுற்ற சொட்டையப்பர் உச்சிக்கால பூஜை முடிந்த பிறகே எஜமானர் கோவிலிலிருந்து வரக்கூடும் என்று எண்ணிச் சிறிது நேரம் அம்மண்டபத்திலே அமர்ந்தார்.

அங்கே ஐந்தாறு பண்டிதர்கள் தத்துவார்த்தங்களைப் பற்றி வடமொழியிலும் மணிப்பிரவாளத்திலுமாக வாதித்து வந்தார்கள். அவர்களில் ஒருவர் பெரிய ஓலைச்சுவடி ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு அதனை அடிக்கடி சுட்டிக்காட்டிக் கம்பீரமான குரலில் மற்றவர்களுடன் சம்பாஷித்து வந்தார். சொட்டையப்பருக்கு அவர் மேல் கண் ஓடிற்று. அவர் தம் எஜமானரைப்போல் பெரிய பண்டிதராக இருத்தல் வேண்டுமென்று எண்ணினார். அவர் யார் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்பது இவர் விருப்பம். ஆனால் அதனை யாரைக் கேட்டு அறிவது? அவரைவிட அவர் கையிலிருந்த சுவடி யாதென்பதை அறிய இவர் எண்ணம் ஓடிற்று.

அக்கூட்டத்தில் இருந்துவந்த இரண்டொருவர் சொட்டையப்பர் தங்களையே கூர்ந்த பார்வையோடு கவனித்துவருவதைக் கண்டுகொண்டார்கள்; ‘எழுத்து வாசனையே இல்லாதவன் ஏன் அதிக வியப்போடு கவனித்து வருகிறான்’ என்றுகூட நினைத்தார்கள்; பைத்தியமாக இருக்கலாமென எண்ணினார்கள். அவர்கள் சம்பாஷணை ஒருவாறு முடிந்தது. அவர்கள் எழுந்து செல்

லும்போது, சொட்டையப்பர் தாம் மதிப்பு வைத்த பண்டித சிகாமணியின் அருகிலே சென்று மிகவும் வணக்கமாக, "ஸ்வாமி, தங்கள் கையில் உள்ள புத்தகம் என்னவோ? சாதித்தருளவேண்டும்" என்று வேண்டினர். அவர் அலக்ஷ்யமாக, "இது முஸல கிஸலயம்" என்று பதில் அளித்துவிட்டு வெளியே சென்றுவிட்டார். சொட்டையப்பர் அவ்வளவில் திருப்தியடைந்து அத்தொடரைப் பலகால் ஸ்மரித்துக்கொண்டு தம் எஜமானர் வந்தவுடன் அவரிடம் அப்பெயருள்ள புத்தகம் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள உத்தேசித்தார்.

* * *

பிற்பகல் வேளை; பெரியவாச்சான் பிள்ளை பகல் போஜனத்துக்குப்பின் சிரமபரிகாரம் செய்துகொண்டு எழுத்து வேலைக்கு ஆயத்தம் ஆகும் சமயம் சொட்டையப்பர் அவர்முன் வந்து அஞ்சலி செய்து நின்ருர்.

"என்ன செய்தி, அப்பா!"

"ஒரு விஞ்ஞாபனம்."

தம் சமையற்காரர் இந்த மாதிரி ஒரு நாளும் வந்து பேசியதில்லை. அதனல் அப்பொழுது இவருக்கு ஏதோ ஒரு குறை இருக்கவேண்டுமென்று ஆசாரியர் நினைத்தார். எதுவாயினும் அதனை முதலில் தீர்த்து வைக்க வேண்டுமென்று உறுதிகொண்டு, "வேண்டியதைச் சொல்லலாமே" என்ருர்.

"ஸ்வாமிகளிடம் முஸல கிஸலயம் என்ற புத்தகம் இருக்கிறதா?"

அந்தப் பெயர் அவருக்குப் புதிதாக இருந்தது. அப்படிப் பட்ட புத்தகம் ஒன்று இருந்தால்தானே அவருக்குத் தெரியும்! முஸல கிஸலயம் என்ற பெயர் சொட்டையப்பருக்குத் தெரியவந்த வரலாற்றை அவர் வினவினர். சொட்டையப்பர் சொன்ன விடையிலிருந்து, அந்த வித்துவான் அப்படிக் கூறியதன் கருத்தை ஒருவாறு உணர்ந்து கொண்டார்.

இந்த விஷயத்தைச் சொட்டையப்பருக்குக் கூறுவதா? அவருக்கு இது பெரிய பிரச்னை ஆயிற்று.

"பதில் கூற எஜமானர் ஏன் தயங்குகிருர்? ஒருவேளை இவரிடம் அப்புத்தகம் இல்லையோ? அவ்வளவு மதிப்புள்ள புத்தகமா அது?" என்று சொட்டையப்பர் எண்ணினர். அத்தகைய கேள்வியைக் கேட்டுவிட்டதற்குத் தாம் வருந்தும் குறிப்பு இவர் முகத்திற் காணப்பட்டது.

'இனிமேல் சும்மா இருப்பதில் பயனில்லை; உண்மையைக் கூறிவிடுவோம்' என்று எண்ணிப் பெரியவாச்சான்பிள்ளை, "அப்பனே! அப்படிப்பட்ட புத்தகம் ஒன்றும் இல்லை; முஸல கிஸலயம் என்பதற்கு உலக்கைக் கொழுந்து என்பது பொருள்; படிப்பில்லாத உன்னை ஏளனஞ் செய்வதற்காக அவர் அப்படிச் சொல்லியிருக்கிருர்" என்று கூறினர்.

சொட்டையப்பர் முகத்தில் ஈயாடவில்லை. அப்பொழுது இவர் கொண்ட வருத்தம் சொல்லத் தரமன்று. சிறிதுநேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார். சிந்தனையில் ஆழ்ந்திருந்து விட்டு ஏதோ ஒன்றை முடிவு கட்டிக் கொண்டவராய்த் தம் எஜமானர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்துத் தமக்கு அன்று முதல் கல்வி புகட்டுமாறு வேண்டினர்.

எஜமானர் ஒழுங்காக இவருக்குக் கல்வி கற்பிக்கும் உபாத்தியாயரும் ஞானசிரியரும் ஆனர். பரிசாரகர் கரண்டி பிடிப்பதை விட்டுவிட்டுச் சுவடிபிடிக்கும் மாணக்கரானர். கல்வி பயிலத் தொடங்கும் போது இவருக்குப் பிராயம் முப்பத்திரண்டு.

இவர் கல்வி கற்று வந்த முறையை நாம் அறியோம். ஆனல், பிற்காலத்தில் சொட்டையப்பர் சொட்டைமணவாள ஜீயர் ஆனர். வாதிகேசரி மணவாளமாமுனி என்பது இவருடைய மறு பெயர். பெரிய வைஷ்ணவாசாரியராக இவர் திகழ்ந்தார். இவர் வடமொழியிலும் தமிழிலும் இருபதுக்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதியிருக்கிருர். தத்துவதீபிகை, பன்னீராயிரப்படி, பகவத் கீதை வெண்பா முதலியவை அவற்றுள் சில. தம்மை ஏளனம் செய்த வித்துவான்கள் முன்னிலையில் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள வடமொழியில் முஸல கிஸலயம் என்று இவரே ஒரு நூலை எழுதி வெளியிட்டார்.

அது ருசிகரமாகவும், திருப்தி அளிக்கக்கூடியதாகவுமிருக்க வேண்டியது ... ஆனால் அது ஊக்கத்தை அளிக்கவும் வேண்டும்!

நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு சமையல் செய்யும்பொழுது எப்பொழுதாவது இதைப் பற்றி யோசிப்பதுண்டா? உணவிற்கு சுவை மாத்திரமிருந்தால் போதாது—அதை உண்பவருக்கு ஊக்கத்தையும் கொடுக்கக்கூடியதாயிருக்கவேண்டும். சில உணவுகள் மற்றவைகளைவிட ஊக்கமளிக்கக் கூடியவை. நாம வழக்கமாக உட்கொள்ளும் பல ஆகாரங்கள் ஊக்கத்தை யளிக்கக் கூடியவைகளல்ல. அவை நம் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல. உண்மையில் அவைகள் முக்கியமாக குழந்தைகளுக்கு கெடுதல் செய்யவும் கூடும். ஆனால் ஆகாரங்களை ஊக்கமுள்ளவையாகச் செய்வது கடினமில்லை. வைடமின் நிறைந்த டால்டாவினால் சமையல் செய்வது ஒரு வழி. டால்டா இயற்கையாய் ஊக்கமளிக்கக் கூடிய சில முக்கிய வஸ்துக்களை அளிக்கிறது. மேலும் டால்டாவைக் காட்டிலும் உணவுகளுக்கு ருசி அளிக்கும் வஸ்து வேறே கிடையாது. நீங்கள் உபயோகித்துப் பாருங்கள்.

ஒவ்வொரு ஸ்திரீயும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்க வேண்டும். டால்டா "குக்-புக்" (ஆங்கிலத்தில் மட்டும் எழுதியுள்ளது) உணவுப் பொருள்களின் தராதரத்தைப் பற்றியும், 150 இந்திய ஆகாரத் திட்டங்களைப் பற்றியும் விவரித்திருக்கிறது. உங்களிடம் ஒரு பிரதி இருக்கவேண்டியதவசியம். Dept. A134 P.O. Box No. 353 Bombay என்ற விலாசத்திற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.

HVM. 33-53-40 TM

HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

பாதுகாப்புள்ளதும் ஊக்க மூட்டத்தக்கதுமான தற்கால சேமிப்பு

இந்திய அரசாங்கப் பரிசுப் பத்திரங்கள்

பரிசுப் பத்திரங்கள் பூரணப் பாதுகாபபுளளவை. அதன் சொந்தக்காரர்கள் பெரும் பரிசுகள் பெறுவதற்குமச சந்தர்ப்பங்களுண்டு. ரூபா. 100, முதல ரூபா. 5,000 வரை பரிசு வரச்செயயலாம். அவை ஆரம்பமானதிலிருந்து வருஷத்திற்கு இரண்டு முறை பரிசு அடையகூடிய சந்தர்ப்பங்களுண்டு. அதற்கிடையில் போட்டமுதலின் மதிப்பு குறையாதிருக்கும். 1949-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ம் தேதிக்குப் பிறகு பத்திரப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

10 ரூபாய் அல்லது 100 ரூபாய் பத்திரத்தை நீங்கள் வாங்கலாம். இவ்வளவுக்குத்தான பத்திரங்கள் வாங்கலாமென்ற நியதியில்லை.

ஜனவரிமீ 15-ம் தேதியும ஜுலைமீ 15-ம தேதியும் பரிசுகள் சீட்டுக்குலுக்கி எடுக்கப்படுகின்றன. 1945-ம் வருஷம் ஜனவரிமீ 15-ம் தேதி பரிசுச் சீட்டுகள் குலுக்கப்படும்போது 1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் 17-ம் தேதிக்குமுன்னதாக வாங்கப்பட்ட பத்திரங்கள் சேர்த்துக்கொள்ளபபடும்

பரிசுகளாவன

★

எல்லாப் பரிசுத் தொகைகளுக்கும். வருமானவரி, சூபர் வரி, அதிக லாபவரி, நகர சபைவரி, ஆகியவை கிடையாது

★

ஒரு லட்சம் ரூ. 100 பத்திரத் தொகுதி

1 பரிசு	ரூ. 50,000 வீதம்	...	ரூ. 50,000
2 பரிசுகள்	ரூ. 20,000 ,,	...	ரூ. 40,000
2 ,,	ரூ. 5,000 ,,	...	ரூ. 10,000
ஒரு லட்சம் பத்திரங்கள் கொண்ட ஒரு தொகுதிக்கு அவை வருஷத்திற் கொருமுறை வழங்கப்படும் பரிசுத் தொகை		...	ரூ. 1,00,000

முழுதும் விற்பனையான ரூ. 10 கொண்ட ஒவ்வொரு தொகுதிக்கும்

1 பரிசு	ரூ. 2,500 வீதம்	...	ரூ. 2,500
2 பரிசுகள்	ரூ. 1,250 ,,	...	ரூ. 2,500
5 பரிசுகள்	ரூ. 500 ,,	...	ரூ. 2,500
10 பரிசுகள்	ரூ. 250 ,,	...	ரூ. 2,500
ஒரு லட்சம் பத்திரங்கள் கொண்ட ஒரு தொகுதிக்கும் ஒரு அரை வருஷத்தில் கொடுக்கப்படும பரிசுத்தொகை		...	ரூ. 10,000

கிடைக்குமிடங்கள் :— இந்திய ரிசர்வ் பாங்கி, இந்திய இம்பீரியல் பாங்கி, இந்திய அரசாங்க அலுவல்களைச் செய்யும் பிரிட்டிஷ் இந்திய அல்லது இந்திய சமஸ்தான அரசாங்க கஜானாக்களின் எல்லா இந்திய ஆபீசுகளிலும் கிடைக்கும்.

மேற்கண்ட இடங்களில் பரிசுத தொகைகள் வழங்கப்படும். ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி பிப்ரவரி மாதம் 15-ம் தேதி அல்லது அதற்குப் பிறகு முன் கூறிய இடங்களிலும் சப்டிரஷரிகளில அங்கேயும் பரிசுத் தொகைகள் வழங்கபபடும். 1949-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ம் தேதி குலுக்கபபடும் பரிசு வரை ஒவ்வொரு பத்திரமும் சேர்த்துக் கொளளப்படும். 10 ரூபாய்த் தொகுதிக்குக் கொடுக்கப்படும் பரிசுத் தொகைகள் ரொக்கமாகவே கொடுக்கப்படும். 100 ரூபாய்த் தொகுதியில் பாதி ரொக்கமாகவும் பாதி பாதுகாப்பு பத்திரமாகவாவது, அரசாங்கக்கடன் பத்திரங்களாகவாவது பரிசுத தொகைகள் கொடுக்கப்படும். பரிசுகள் குலுக்கி எடுக்கப்பட்ட பிறகு அடுத்து வரும் ஆகஸ்டு 15-ம் தேதி பிப்ரவரி 15-ம் தேதிக்குள இந்தியா கஜெட்டிலும் பத்திரிகைகளிலும் ஜெயிக்கும் பத்திரங்களின் எணகள பிரசுரிக்கபபடும.

இந்திய அரசாங்க நிதி இலாக்கா வெளியிட்டது.

AAA 969 TM

தளுக்கான கண்டிப்பு

பத்மாஸனி அம்மாள்

ஒரு குழந்தைக்குப் பதில் சொல்லி முடியாத தாய்மார்கள் பலர் இந்த நாட்டில் இருக்கிறார்கள், ஆறு குழந்தைகளை வைத்துக்கொண்டு சமாளிக்கும் தாய் இருக்கிறாளென்றால் அவளைத் தெய்வப் பிறவி என்றுதான் சொல்லவேண்டும். அத்தகைய 'அம்மாமி' ஒருத்தியை நேரிலே கண்டு ஆச்சரியப்பட்டவர்களுள் ஸ்ரீமதி பத்மாஸனி அம்மாள் ஒருவர். ஆறு குழந்தைகளானாலும், எட்டுக் குழந்தைகளானாலும் வளர்க்கிறபடி வளர்த்தால் நன்றாகத்தான் இருக்கும். அதற்கு வழி என்ன? கட்டுரையைப் படித்துப் பாருங்கள். —ப-ர்.

"குழந்தை வளர்ப்பு என்றால் லேசில் இருக்கிறதா? அப்பாடா! அதைப்போலத் தாய்மார்களுக்குக் கஷ்டமரன காரியம் வேறு ஒன்றுமே இல்லை" என்று சில தாய்மார்களுக்குத் தோன்றுகிறது. "குழந்தை வளர்ப்பது என்ன பிரமாதம்! எனக்கு ஒன்றும் இது பெரிய காரியம் அல்ல" என்று கண்மூடித் திறப்பதற்குள் மிக லகுவாகப் பேசும் சில தாய்மார்களும் இந்த உலகத்தில் இருக்கத்தான் இருக்கிறார்கள். ஆகையால் குழந்தை வளர்ப்பைப்பற்றிய அபிப்பிராயங்கள் தாய்மார்களின் வாழ்க்கை நிலைமையைப் பொறுத்தவை என்றே எனக்குத் தோன்றுகிறது. பணக்கவலை இல்லாமல் செவிலித்தாய் வைத்துக் குழந்தை வளர்க்கும் தாய்மார்களுக்குக் குழந்தை வளர்ப்பு கஷ்டமாகவும் பாரமாகவும் தோன்றுவதில்லை. குடும்பத்தையும் குழந்தைகளையும் தாமே தனிமையில் பராமரித்துவரும் சாதாரண நிலைமையுள்ள தாய்மார்களுக்குத்தான் குழந்தை வளர்க்கும்போது ஏற்படும் கஷ்டங்களையும் கவலைகளையும் தாமே அநுபவிக்கச் சந்தர்ப்பம் வாய்க்கிறது.

ஐந்து ஆறு வயசுக்குள் குழந்தைகள் படுத்தும் பாடும், குடும்பத்தில் வேலைத் தொல்லையுமாக நடுவில் அகப்பட்டு விழிக்கும்போது தாய்மார்களுக்குக் கஷ்டமில்லாமல் எப்படி இருக்கும்? இந்த நெருக்கடியில் நமக்குக் குழந்தை அருமைகூட மறைந்துவிடுகிறது. ஒவ்வொரு சமயத்தில் அடிக்கவும் நேர்ந்துவிடுகிறது. பக்கத்தில் யாரேனும் பெரியவர்கள் இருந்தால், "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில். இப்படி அடிக்கலாமா? அப்படித் திட்டலாமா?" என்று நமக்குப் புத்திமதி சொல்லவந்துவிடுவார்கள்.

னால், இந்தப் பழமொழி வம்ச பரம்பரையாக, அவரவர் தாத்தா பாட்டியாகிச் சொல்லும் வாய்மொழியே தவிர, நடப்பில் இதன் பிரகாரம் நடக்க முடிகிறதா?

எங்கள் அடுத்த வீட்டில் கொஞ்சநாளைக்கு முன்பு ஒரு குடும்பம் குடிவந்து இருந்தது. சட்டும் சவலையுமாக ஆறு குழந்தைகள். வீட்டில் மாமி வைத்ததுதான் சட்டம். அந்த வீட்டுக்காரர் காலையில் சாப்பிட்டுவிட்டு ஆபீசுக்குப் போனால் ராத்திரிதான் பார்க்கலாம். உடனே சாப்பாடு, படுக்கை. அகத்தில் தங்க முதலில் அவகாசம் இருந்தால் அல்லவோ அவர் குழந்தைகளைக் கவனிப்பார்? சமையல்கட்டுப் பக்கம் இரண்டகத்துக்கும் ஒரு முற்றம். நடுவிலே ஒரு கட்டைச்சுவர். ரகசியம் பேசினாலொழிய இரண்டகத்துப் பேச்சும் காது கேட்கும். அந்த மாமி குழந்தைகளை வளர்க்கும் விதமே அதிசயம்.

குழந்தைகளை அந்த மாமி சாப்பிட வா என்று அழைத்து நான் கேட்டதே இல்லை. எல்லாக் குழந்தைக்கும் தட்டில் பரிமாறிவிட்டு, "சாதம் போட்டாகிவிட்டது; எல்லாரும் வந்து உட்காருங்கள்" என்று கூப்பிட்டாளானால் பெரிய குழந்தை முதல் இரண்டு இரண்டரை வயசுக் குழந்தைவரை எல்லாரும் வந்து, அவரவர்கள் தட்டில் உட்கார்ந்து சாப்பிடுவார்கள். தலை வாரிக் கொள்ளவும், குளிக்கவும் அப்படித்தான். "என்ன மாமி, குழந்தைகளைப் பொம்மைமாதிரி ஆட்டுகிறீர்களே?" என்பேன். "நம் சொற்படிக் குழந்தைகள் கேட்காமல் அவர்கள் சொற்படி நாம் ஆடுகிறதா? சில பேர் குழந்தைகளை, 'சாப்பிட வாயேன், வாயேன்' என்று கூப்பிடுவார்

கள். அவர்கள், 'அப்புறம் சாப்பிடுகிறேனே; சாதம் வேண்டாமே' என்று பசிவேளையாக இருந்தால்கூட விளையாட்டுப் போக்கில் சொல்வார்கள். அவர்கள் யோசனையைக் கேட்டா நாம் குழந்தை வளர்ப்பது? இன்னும் சில பேர், 'அது எண்ணெய் தேய்த்துக்கொள்ள மாட்டேன் என்கிறது', 'தலை அப்புறம் பின்னிக்கொள்கிறேன் என்கிறது' என்று சொல்வார்கள். நாள் முழுவதும் அவர்களுடன் மன்றாடிக்கொண்டு இருப்பார்கள். அவர்கள் இதம் அறிந்து நாம் வளர்ப்பதா, அல்லது அவர்கள் பேச்சைக் கேட்டு நாம் விழித்துக்கொண்டு நிற்கிறதா?" என்று நறுக்குத் தறித்தமாதிரி பதில் சொல்லுவாள் அந்த மாமி. சனி, ஞாயிறு வந்தால் வீடு அமர்க்களந்தான். விளையாட்டும் விஷமமும் சகிக்க முடியா. ஒன்றுக்கு ஒன்று சண்டை; மாமிக்கு மத்தியஸ்தம் செய்து முடியாது.

பையன் அயல் வீட்டுப் பையனோடு சண்டை போட்டுக்கொண்டு வருகிறான். அம்மா என்ன சொல்வாள் தெரியுமா? "என் கண்ணே, காயம், கீயம் பட்டதா? அந்தப் பையனை உதைக்கச் சொல்றேன் பார்" என்பாள். அப்பா, "வேஷ்டி கிழிஞ்சு போச்சாடா?" என்று கேட்பார். அண்ணாவோ, "நீ சரியாகச் சூடு கொடுத்தாயா?" என்று கேட்பான்.

★

"இத்தனை அமர்க்களத்தையும் எப்படித்தான் பொறுத்துக்கொண்டு இருக்கிறீர்களோ?" என்பேன். "முன்பெல்லாம் எனக்கும் கோபமாகத்தான் வரும். ஆனால் இப்போது எல்லாம் சகஜமாகிவிட்டது. குழந்தைகள் என்றால் அப்படித்தான் இருக்கும். அவர்களைக் கட்டுக் காயிதா பண்ணி முடியுமோ? உனக்கும் என்னைப் போல் குழந்தைகள் பிறக்கட்டும். எப்படிப் பொறுத்துக்கொண்டு இருப்பது என்று தானே தெரியும்" என்று பேச வாயில்லாமல் செய்துவிடுவாள்.

அவர்கள் படுத்தும் இத்தனை பாட்டுக்கும் துளிக்கோபம் வர வேணுமே! குழந்தைகளை அந்த மாமி திட்டி நான் கேட்டதே இல்லை. குழந்தைகளைப்பற்றின மட்டில் வேளைக்கு ஆகாரம், அலங்காரம் ஒன்றும் குறையாது. மாமிக்கும் நிம்மதி. வீடும் எப்போதும் அமரிக்கையாகவே இருக்கும்.

குழந்தைகளுக்கு ஆகட்டும், பெற்றவர்களுக்கு ஆகட்டும், இதைவிட வேறு என்ன வேண்டும்? குழந்தைகள் சுபாவமாகவாவது தாயின் கண்டிப்

பிற்குப் பயந்தாவது நம் சொற்படி நடந்துவிட்டால் அடிபடுவதும் இல்லை, வசவு வாங்குவதும் இல்லை. தாயின் கண்டிப்பு என்றால் வாயில் வந்தபடி திட்டுதல், கைபோனபடி அடித்தல் என்று அர்த்தம் அல்ல. அம்மா சொற்படி கேட்கவேண்டுமென்று குழந்தைகள் மனத்தில் பதியவேண்டும். அதற்காகக் கொஞ்சம் ஓங்கிய குரலில் கோபித்துக்கொண்டதாக நடிக்கும் தாய்மார்களின் பாவனை வேண்டும். இதைத்தான் நான் கண்டிப்பு என்று சொல்வது. அதற்காக, "கப் சிப், வாயை மூடு; கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டும்" என்று சொல்லிக் குழந்தைகளைக் கைதியாக்கச் சொல்லவில்லை. அவர்கள் சுயேச்சையாக ஓடி ஆடித் திரிவதை நாம் ஒரு நாளும் கண்டிக்கவே கூடாது. ஆனால் மச்சுப்படியில் போய்க் குதித்து விளையாடிக்கொண்டு இருந்தால் குழந்தை சந்தோஷமாகத்தானே விளையாடுகிறது என்று பார்த்துக்கொண்டு இருக்க முடியுமா? அவர்களுடைய தேகாரோக்கியத்தைப் பாதிக்கக்கூடிய எந்த விளையாட்டாக இருந்தாலும் நாம் அவசியம் கண்டிக்கத்தான் வேண்டும்.

ஒரு நாள் மத்தியான்னம் என் சிநேகிதி மீனாவின் வீட்டுக்குப் போயிருந்தேன். இரண்டு இரண்டரை வயசு உள்ள அவள் பிள்ளை கோபு மீனாவின் தலைப்பைப் பிடித்துக்கொண்டு ஊதல், ஊதல் என்று உருப் போட்டுக்கொண்டு நின்றது. பெரிய பையன் சாமுவுக்கு ஜுரமாம். கஞ்சியும் மருந்தும் ஆகாரம். நடுப்பெண்ணுக்கு அஜீரணம்; வயிற்றுவலிக்கு மருந்து. இந்த லக்ஷணத்தில் வீதியில் விற்கும் கொய்யாப் பழம், பிஸ்கோத்து, மாதுளம் பழம் எல்லாம் வாங்கித் தா என்று சந்தை பாடிக்கொண்டு இருந்தார்கள். இரண்டு கண்ணும் சிவந்துவிட்டன. என்ன சமாதானம் பண்ணினாலும் கேட்கவே இல்லை. சின்னவன் அவர்களுக்குத் தம்பி தானே? ஒடிந்த டப்பா வண்டியில் இரண்டு, ஊதாத

ஊதலில் நாலு, நசுங்கின தகரம், காற்ருடி இத்தனை சாமான் கூடத்தில் இறைந்து கிடந்தன. இத்தனையும் போதாமல், "இன்னும் வாசலில் விற்பதை வாங்கித் தா" என்ற பாட்டேத்தான்.

"என்ன மீனு, இப்படி அழுகிருர்களே? நீயாவது சற்றுச் சமாதானம் செய்யேன்" என்றேன்.

"போகாத ஊருக்கு வழி தேடும் குழந்தைகளை யாரால் சமாதானம் செய்ய முடியும்? ஜுரத்திற்கும் அஜீரணத்திற்கும் கொய்யாப் பழமும் மாதுளம் பழமும் வைத்தியமோ? இவர்கள் ஆகாத்தியத்திற்குப் பயந்து கேட்பதை எல்லாம் வாங்கித் தர முடியுமா?" என்று அவர்கள் அழுகையை அவள் லக்ஷ்யமே செய்யவில்லை.

"உன் குழந்தை ஒன்றுமே உன் பேச்சைக் கேட்காதுபோல் இருக்கிறதே?" என்றேன்.

"அதில் என்ன சந்தேகம்? அடங்காத குழந்தைகளை வைத்துக்கொண்டு ஒரு நாள் போவது ஒரு யுகமாக இருக்கிறது எனக்கு. சனி ஞாயிறுகளில் அவர்கள் அப்பா அகத்தில் இருந்தாரானல் பயப்படுவார்கள். எனக்கும் அப்போதுதான் கொஞ்சம் லகுவாக இருக்கும்" என்று அலுத்துக்கொண்டாள்.

அப்போது என் அடுத்தகத்து மாமியை நினைத்துக்கொண்டேன். ஆனல் இரண்டு பேருக்கும் எணி வைத்தால்கூட எட்டாது. அந்த மாமி குழந்தை வளர்க்கும் சவரணையும் குழந்தைகளின் சமர்த்தும் சொல்லி முடியாது. இத்தனை பெருமைக்கும் காரணம், மாமியின் கண்டிப்புக்குள் குழந்தைகள் அடங்கி நடப்பதுதான். இந்த இரண்டு தினுசையும் பார்த்த மட்டில் குழந்தைகளுக்குக் கண்டிப்பு அவசியம். அதுவும் குழந்தைகள் தகப்பனரிடம் செல்வமாக வளர்ந்தாலும் தாயின் கண்டிப்பில் அடங்கித்தான் வளரவேண்டும். சதா அவர்களுடன் கூடவே இருந்து பணிவிடை செய்து போஷிப்பது தாயா? தகப்பனரா?

எங்கள் வீட்டுச் சமாசாரம் ஒருமாதிரி. என் பிள்ளைக்குத் தாத்தா பாட்டியிடம் செல்லம் அதிகம். குழந்தையை விளையாட்டிற்குக்கூட ஒருவரும் வையக்கூடாது. ஏதாவது பக்ஷணம் சாப்பிட உட்கார்ந்தால், "அப்பிச்சி தா" என்று கையை நீட்டிக்கொண்டு குழந்தை ஓடிவரும். உடம்புக்கு ஆகும் ஆகாது என்பதைக் குழந்தைப் பாசத்தினுல் மறந்துவிடுவார்கள் பெரியவர்கள். குழந்தைக்கு மூக்குப் பிடிக்கத் தினிப்பார்கள். பெரியவர்கள், மரியாதை! கொடுக்கவேண்டாம் என்று சொல்லவும் நமக்குப் பயம். இருந்தாலும் நன்மையை உத்தேசித்தாகிலும், "உடம்புக்கு ஆகுமோ?" என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் உடனே பெரியவர்களுக்குக் கோபம் வந்துவிடும். "ஆமாம், நாங்கள் பார்க்காத குழந்தை! வளர்க்காத பசங்கள்! பச்சைக் குழந்தை கையை நீட்டிக் கேட்கிறது. எப்படிக் கொடுக்காமல் சாப்பிட மனசு வரும்?" என்று என்னை அடக்கிவிடுவார்கள். அதுமட்டுமா? எங்கேயாவது போனல் கூடவே அழைத்துக்கொண்டு போவார்கள். அதுவே பழக்கமாகிவிடுகிறது. யார் போனலும் சமய சந்தர்ப்பம் தெரியாமல் அழ ஆரம்பித்துவிடும். அப்புறம் வாசலில் போகும் சாமான்களை வாங்கித் தருவது. இதுவும் ஒரு கெட்ட வழக்கந்தான். குழந்தைகள் அழுகைக்குப் பயந்து ஒரு நாளைக்கு எதையாவது வாங்கித் தந்துவிடுவார்கள். அதை நினைத்துக்கொண்டு தினசரி வாசலில் விற்பதை எல்லாம் வாங்கித் தா என்று அடிபோடும். அவர்கள் சொற்படி நாம் கேட்கவேண்டும். இல்லாவிட்டால் அழுகையும் அமர்க்களமுந்தான். வெளியில் போகும் மோட்டார், குதிரை வண்டி முதலியவைகளில் இந்த க்ஷணம் ஏற்றிவிடு என்று கத்தும்.

குடும்பத்தில் பொழுது விடிந்தால் இது மாதிரி போகாத ஊருக்கு வழி தேடும் பிடிவாத ஆசைகள் குழந்தைகளுக்கு எத்தனையோ உண்டாகிவிடுகின்றன. நமக்குக் குழந்தைகள் அருமையாக இருந்தாலும், வெளி விஷயங்களிலும் அசல் மனுஷ்யர்கள் சம்பந்தப்படும்போதும் நாம் எப்படி அவர்கள் இஷ்டம்போல் நடந்து அவர்களைச் சமாதானப்படுத்துவது? இந்த மாதிரி சமயத்தில்தான் குழந்தைகளுக்கு மிதமிஞ்சிச் செல்லம் கொடுப்பதன் கெடுதல் நமக்கு நன்ருகத் தெரிகிறது. என்ன பிரயோஜனம்? செல்லமாக வந்த கெட்ட வழக்கம் பிடிவாதமாகக் குழந்தைகளிடம் நிலைத்துவிடுகிறது. மேலும் பெரியவர்களுக்குக் கீழ்ப்படியாமையும் சிறு வயசிலிருந்தே அவர்களுக்குப் பழகிவிடுகிறது. சில குழந்தைகள் பெரியவர்கள் ஆன பின்புகூட நன்மை தீமை தெரிந்துகொள்ள முடியாமலும், சமயோசிதம் தெரியாமலும் அசடுகளாகவே இருப்பதையும் நாம் கண்ணுரப் பார்க்கிருேம்.

உப்பு இல்லாப் பண்டம் குப்பையிலே என்பார்கள். உப்பு மிஞ்சிய பண்டமும் குப்பையில் தான். அதுபோலத்தான் குழந்தை வளர்ப்பும்.

குழந்தைகளிடத்தில் மிதமிஞ்சிய கண்டிப்பும் வெறுக்கத்தக்கதுதான். கண்டிப்பு என்பதே இல்லாமல் குழந்தை வளர்ப்பதும் எனக்கு உசிதமாகப் படவில்லை. குழந்தைகள் சமர்த்தாகவும் சந்தோஷமாகவும் வளரவேண்டுமானால் தாயினிடத்தில் ஓர் அளவு கண்டிப்பு இருக்கவேண்டியதுதான். ஆனால் தாய்மார்களுக்கும் கீழே சொல்லும் விஷயம் மனசில் இருந்துகொண்டே இருக்கவேண்டும். நம்முடைய சௌகரியத்திற்காக ஒருபோதும் நாம் குழந்தைகளைக் கண்டிக்கக்கூடாது. குழந்தைகளின் சௌக்கியத்திற்காகக்கூட நாம் அவர்களை மிதமிஞ்சிக் கண்டிக்கக்கூடாது. கண்டிப்பு என்பது கொஞ்சம் ஓங்கிய குரலோசை. அந்தமட்டோடு நம் கண்டிப்பை நிறுத்திக் கொண்டுவிடவேண்டியதுதான்.

நாம் குழந்தைகளைக் கண்டிப்பு என்னும் கோட்டுக்குள் அடக்கி வளர்க்க வேண்டும். தவறி அவர்கள் அந்தக் கோட்டைத் தாண்டி, வெளியில் போகவே கூடாது. அந்த நிலைமையில் நமக்குக் கோபம் பிரமாதமாக வரும். அப்போது கோபித்துக்கொள்வதில் பிரயோசனம் இல்லை. கோட்டைத் தாண்டிக் குழந்தைகள் மீறிப்போகும் சமயத்திலகூட நாம் நம்முடைய கோபத்தை அடக்கிக்கொண்டு பிறகு மிகவும் ஜாலக்காகப் பேசித்தான் அவர்களை நம் வழிக்குக் கொண்டுவரவேண்டும். இந்த நிலைமைதான் தாய்மார்களுக்குத் தர்ம சங்கடமானது. இப்போதுதான் நமக்குப் பொறுமை அவசியம் வேண்டும்.

இந்த மாதிரி, பேச்சு வாக்கில்தான் குழந்தைகளின் தப்பிதங்களை நாசுக்காகக் கண்டித்தும், அவர்களுக்கு நேரும் சில்லறை ஆபத்துக்களிடமிருந்து காப்பாற்றியும் வளர்க்கவேண்டி இருக்கிறது. இந்தத் தனுக்கான கண்டிப்பு முறைக்கு அவசியம் புத்திசாலித்தனம் வேண்டும். பொறுமையும் புத்திசாலித்தனமும் இருந்தால்தான் குழந்தைகளை விதரணையாக வளர்க்க முடியும்.

இவை இரண்டும் வேண்டுமானால் கடையில் போய் வாங்க முடியுமா? கடனுகத்தான் கேட்டு வாங்கிக் கொள்ள முடியுமா? நம்மைத் தாயாக்கிய பகவானிடந்தான், பொறுமையையும், புத்திசாலித் தனத்தையும் அடைவதற்குப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

பொறுமை வேண்டும் என்று வாயினால் சொல்லிவிடலாம்; ஆனால் நடப்பில் பொறுமையாக இருப்பது என்பது மிகவும் கஷ்டமான காரியந்தான். நாம் குழந்தைகளைத் திட்டக்கூடாது, அடிக்கக்கூடாது என்று மனத்தில் ஒரு சங்கல்பம் செய்துகொண்டு அவர்களிடம் பழகினோமானால் அதுவே நாளடைவில் நமக்குச் சகிப்புத்தன்மையைக் கொடுக்கிறது. நம் மனத்தில் உள்ள உறுதிக்குத் தக்கபடி பொறுமையும் நமக்குச் சித்திக்கிறது.

சாதாரணமாகக் குழந்தைகள், கண்ணாடி, பீங்கான் முதலியவைகளால் செய்த அழகான பொம்மைகளையோ சாமான்களையோ வைத்துக்கொண்டு விளையாடுகிறார்கள். அழகிற்குள் மறைந்திருக்கும் ஆபத்தை நினைத்தாலே நமக்குப் பயம் உண்டாகிறது. கண்ணாடி உடைந்துவிடும், கையில் குத்திவிடும் என்று நேர் முகமாகக் கேட்டோமானால், குழந்தைகள் அதன் மேலுள்ள ஆசையினால் கொடுக்கவே மாட்டார்கள். அப்போது தாய்மார்கள் பொறுமைசாலிகளாக இருந்தால்கூட, காரியம் நடப்பதில்லை. "நீ சமர்த்தோ இல்லையோ? நீயே பத்திரமாக உள்ளே வைத்துவிடு. யாராவது வந்தால் பிடுங்கிக்கொண்டு விடுவார்கள்" என்று வேறு விதமாகக் கெஞ்சிக் கூத்தாடினால், முக்கால்வாசிக் குழந்தைகள் அப்புறம் தாமே கொடுத்துவிடுவார்கள்.

யாராவது திட்டுவதைக் குழந்தைகள் கேட்டுக் கற்றுக்கொண்டுவிட்டால் தமக்குக் கோபம் வரும் போதெல்லாம் யாராக இருந்தாலும், "நீதான் கழுதை. நீதான் முண்டை" என்றெல்லாம் திட்டுவார்கள். குழந்தைகள் திட்டுவதால் நமக்கு ரோஷம் உண்டாவதில்லை. இந்தப் பழக்கம் ஒழுங்காகவும் அழகாகவும் இருக்கிறதா? "திட்டக்கூடாது, ஆகாது" என்று எத்தனையோ சொன்னாலும் அவர்கள் கேட்பதில்லை. உடனே நாம், "உனக்குப் பாடத் தெரியுமா பாப்பா?" என்றோ, ஏதாவது ஒரு விளையாட்டைச் சொல்லி, "உனக்கு அது தெரியுமோ?" என்றோ கேட்கவேண்டும். அதுவும் இல்லாவிட்டால் ஒரு பொம்மைப் புஸ்தகத்தைக் குழந்தைகளுக்குக் காண்பித்து அவர்கள் எண்ணத்தை மாற்றினால், உடனே அந்த வசை மொழியை நொடியில் மறந்துவிடுகிறார்கள்.

அதமன் கோட்டை

வார்த்தைகள் உருமாறி வழங்கும் விசித்திரம் மிகவும் ஸ்வாரஸ்யமானது. தர்மபுரியைச் சார்ந்து 'அதமன் கோட்டை' என்ற இடம் ஒன்று இருக்கிறது. தர்மபுரி பழங் காலத்தில் அதிகமான் என்ற வள்ளலுடைய ராஜதானியாக இருந்தது. தகடூர் என்பது அதன் பெயர். அதிகமான் பெரிய உபகாரி. வீரன். அவன் கோட்டை இருந்த இடம் அதிகமான் கோட்டை என்று வழங்கியது. நாளடைவில் அதமன் கோட்டையாகி விட்டது. தமிழர் போற்றும் உத்தமன் பெயராகிய அதிகமான் இந்தத் 'தேசல்' முறையில் அதமன் ஆகிவிட்டான்!

வாத்தியார் ஐயா

கி. வா. ஜகந்நாதன்

1

"ஊருக்கு இளைச்சவன் பிள்ளையார் கோவில் ஆண்டி; அதற்கும் இளைச்சவன் பள்ளிக்கூடத்து வாத்தியார்" என்ற பழமொழி இக்காலத்தில் எங்கும் வழங்குகிறது. இந்தப் பழமொழி ஏதோ நடுவில் வந்த புது மொழி என்றுதான் தெரிகிறது. ஏனென்றால் நம்முடைய தேசத்தின் கோவில் பூசகர்களையும் உபாத்தியாயர்களையும் இழிவாக நினைக்கும் வழக்கம் பழங் காலத்தில் இல்லை. கோயில் ஒவ்வோர் ஊருக்கும் அவசியம் என்று பழந் தமிழர்கள் நினைத்தார்கள்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஒரு பழமொழி.

"திருக்கோவில் இல்லாத திருவில் ஊர்" என்று அப்பர் சுவாமிகள் சொல்கிறார். கோவில் இல்லாத ஊரில் திருமகளின் விலாசம் இராதாம். அதை மூதேவி பிடித்த ஊர் என்றே சொல்ல வேண்டுமாம்.

இந்த மாதிரியே வாத்தியார் இல்லாத ஊரும் பிரயோசனம் அற்றது என்று சொல்லியிருக்கிறார்கள்;

"கணக்காயர் இல்லாத ஊரும்...
நன்மை பயத்தல் இல"

என்று ஒரு பழைய நூல் சொல்கிறது. உபாத்தியாயருக்கு அந்தக் காலத்தில் கணக்காயர் என்ற பெயர் வழங்கிவந்தது. கணக்கு என்பது நூலுக்குப் பெயர். அதைக் கற்பிக்கிற தலைவர் கணக்காயர். நக்கீரர் என்ற புகழ் பெற்ற சங்கப் புலவருடைய தகப்பனார் மதுரையில் வாழ்ந்த ஒரு சிறந்த உபாத்தியாயர். இப்போதும் மரியாதையாக ஒரு கிராமத்தில் உள்ள உபாத்தியாயரைப் பேர் சொல்லாமல் "வாத்தியார் ஐயா" என்று சொல்வதில்லையா? அதுபோல அவரை எல்லோரும் 'கணக்காயர்' என்றே அழைத்து வந்தார்கள். அதனால் நாளடைவில் அவர் பெயர் மறந்து போகவே 'மதுரைக் கணக்காயனார்' என்ற பெயர் நிலைத்து விட்டது. பழைய புஸ்தகங்களில் நக்கீரர் பேர் வரும் இடங்களில் 'மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்' என்று எழுதியிருப்பதைக் காணலாம்.

இந்தக் காலத்தில் வாத்தியாரையா இளப்பமான வஸ்து ஆகி விட்டார். போதாக்குறைக்கு அவரைப்பற்றி எத்தனையோ கதைகள் கட்டி அவற்றின் மூலமாகவும் அவரைச் சேர்ந்தவர்களுக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். "டாணாக் கூட்டம்" என்றும் அண்ணாவிகளென்றும் சமுதாயத்தின் ஒதுக்குப்புற வாசிகளாக அவர்கள் இருக்கிறார்கள். சமூகத்தில் அவர்களுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அவர்களே ஒருவருக்கொருவர் மதிப்பு வழங்குவதில்லை. வேறு ஒரு வேலையும் கிடைக்கா விட்டால்தான் படித்தவர்கள் வாத்தியார் வேலைக்கு வருகிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் உத்ஸாகமில்லாமல் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுடைய சம்பளந்தான். மற்ற உத்தியோகஸ்தர்களெல்லாம் தொப்பியும் நிஜாரும் அணிந்துகொண்டு டாக் டிக்கென்று உலவும் உலகத்தில் மூலைக்கச்சத்தையும் அங்கவஸ்திரத்தையும், ஈசல் சிறகை விரித்துப் பறப்பதுபோல் பறக்க விட்டுக்கொண்டு செல்லும் வாத்தியார் ஐயா நிலை பரிதாபகரமானதுதான்.

பழைய காலத்தில் வாத்தியார் ஐயா இப்படி இருக்கவில்லை. அவர் ஒவ்வொரு கிராமத்திலும் இளைஞர் கூட்டத்துக்குத் தலைவர்; எதிர்கால சந்ததிகளுக்கு அவரே கடவுள்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்" என்று அதிவீரராம பாண்டிய மன்னர் சொல்கிறார். இறைவன் போன்றவன் என்று சொல்லாமல் இறைவனே ஆவான் என்று சொல்லி

விட்டார். அகக்கண்ணைத் திறந்து வைக்கும் தெய்வம் அவன்தானே? தெய்வம் என்று சாமான்ய மனிதனைக் கண்டால் நமக்கு மதிக்கத் தோன்றுகிறதா? ஊரார் எல்லோரும் ஒரு மனிதனை அப்படி மதிக்க வேண்டுமானால் அதற்கு ஏற்ற காரணம் இருக்க வேண்டும். அந்த மனிதனிடத்தில் அதற்கு ஏற்ற குணங்களும் ஆற்றலும் இருந்தால்தான் ஜனங்களுடைய மதிப்பு நிரந்தரமாக இருக்கும். இல்லாவிட்டால் வெறும் சம்பிரதாயத்துக்காக உபாத்தியாயருக்குப் பூசை செய்யும் நிலைதான் வரும்.

வாத்தியார் ஐயா எப்படி இருந்தார்? எப்படி இருந்தால் வாத்தியார் ஐயா என்ற பட்டம் கொடுக்கலாம்? அவர் குணம், பழக்க வழக்கங்கள், கல்வி, சொல்லிக் கொடுக்கும் முறை முதலியவைகளின் இயல்புகள் என்ன?—இந்த விஷயங்களைத் தமிழர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். அநேகமாக இலக்கண நூல் ஒவ்வொன்றிலும் ஆரம்பத்தில் இந்த விஷயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இலக்கணத்தில் பொதுப் பாயிரம் என்ற ஒரு பகுதி வருகிறது. அங்கே புஸ்தகம் எப்படி இருக்க வேண்டும், அதைச் சொல்லிக் கொடுக்கும் வாத்தியார் ஐயா எப்படி இருக்க வேண்டும், அவர் எப்படிப் பாடம் சொல்ல வேண்டும், மாணாக்கன் எப்படி இருக்க வேண்டும், எப்படிப் படிக்க வேண்டும் என்ற விஷயங்கள் வருகின்றன. இவற்றைப்பற்றிய விரிவான இலக்கணங்களைச் சொல்லும் சூத்திரங்களைப் பழைய நூல்களிலிருந்து உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். அவற்றைக் கொண்டு, வாத்தியார் ஐயாவைப்பற்றித் தெரிந்து கொள்ளக் கூடிய விஷயங்களை இனிப் பார்க்கலாம்.

2

வாத்தியார் முதலில் நல்ல மனிதராக இருக்க வேண்டும். நற்குண நற்செய்கைகள் உடையவராக இருந்தால்தான் பொது ஜனங்களுடைய மதிப்புக்குப் பாத்திரராக முடியும். "நான் சொல்வதை மாத்திரம் கேள்; நான் செய்வதைக் கவனிக்காதே" என்றால் வாத்தியார் ஐயாவை ஒருவாரத்தில் ஊரார் அவமானப்படுத்திவிடுவார்கள். நல்ல ஒழுக்கமும் நல்ல பழக்கங்களும் இருப்பதற்கு, அவர் நல்ல மனிதர்களுடைய குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டும்; இல்லாவிட்டால் நல்ல குருவினுடைய பழக்கத்தை உடையவராக இருக்க வேண்டும். இவ்வளவும் சேர்ந்த ஒரு தகுதியை, 'குலன்' என்று ஆசிரியர்கள் குறிக்கிறார்கள்.

ஆசிரியரைத் தெய்வமாகக் கருத வேண்டுமென்று சொன்னார்களே; அதற்கு ஏற்றவாறு ஆசிரியருக்கும் தெய்வத்தின் குணம் இருக்க வேண்டும் அல்லவா? தெய்வத்துக்கு என்ன என்னவோ விசேஷ குணங்கள் இருப்பதாக வேத சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. பக்தர்களுக்கு அவற்றைப்பற்றிக் கவலையில்லை. கடவுள் நம்முடைய பிரார்த்தனைக்கு இரங்கி அருள்புரிய வேண்டுமென்ற ஒன்றுதான் அவர்களுடைய நோக்கம். அருள் என்னும் குணம் இருப்பதனால்தான் தெய்வத்தை நாம் கொண்டாடுகிறோம்; சிற்றுயிர்க்கு இரங்கும் பேரருளாளன் என்று பாராட்டுகிறோம். குருவுக்குத் தெய்வத்தைப் போன்ற மதிப்பு வேண்டுமானால் அவரிடமும் அருள் இருக்க வேண்டும். பிறருக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்ற நினைவு அருளிலிருந்து பிறப்பதே. அறியாமை நிரம்பிய உலகத்தில் உள்ளவர்கள்பால் இரக்கம் பூண்டு, அறிவு ஊட்டும் சிறந்த தொண்டை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும். அறியாமையால் செய்யும் பிழைகளைப் பொறுக்கும் இயல்புக்கும் அவ்வருளே காரணமாக நிற்கும்.

குலனும் அருளும் ஒருங்கு இயைந்த குருவுக்குத் தெய்வ பக்தியும் அவசியமானது. கல்வியின் பயனே கடவுளை அறிதல் என்ற கொள்கையில் ஊறிய இந்நாட்டில் கடவுளை நினைத்தே கல்வியைத் தொடங்குகிறார்கள். மாணாக்கர்களுக்குக் கல்வி புகட்டி அவர்களுடைய வாழ்நாள் நற்பயன் பெறும்படி செய்யும் வழியை உபதேசிக்கும் ஆசிரியர் தெய்வ நம்பிக்கை உடையவராக இருந்தால்தான் மாணாக்கர்களிடத்திலும் அது வளரும்.

குரு பெருந்தன்மையுடையவராக இருக்க வேண்டும். சிறிய விஷயத்தைப் பெரிதாக்கி வீண் சச்சரவுகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது. வாழ்க்கை முழுவதும் பயன்படும் சாதனைகளை மாணாக்கர்களுக்குப் பயிற்றும் மாபெருந் தொண்டில் ஈடுபட்டவர் உபாத்தியாயர். அவர் சில்லறை விஷயங்களில் கவனத்தைச் செலுத்தினால் அவருடைய குறிக்கோள் சிதறிவிடும்; திண்மை கலங்கும். இந்தப் பெருந்தன்மையை "மேன்மை" என்று இலக்கணக்காரர்கள் குறிக்கிறார்கள்.

குலமும், அருளும், தெய்வங் கொள்கையும், மேன்மையும் ஆகிய உயர் குணங்கள் ஆசிரியர்பால் இருக்க வேண்டுமென்று சொல்லுவதன் மூலமாக இலக்கண நூல்கள், அவர் மனிதருட் சிறந்தவராக இருக்க வேண்டும் என்பதையே வற்புறுத்துகின்றன.

3

வாத்தியார் ஐயா மனிதருட் சிறந்தவராக இருக்கிறார். போதுமா? அவர் நன்றாகப் படித்திருக்க வேண்டும். பல நூல்களை வெறுமனே கணக்குப் பண்ணிப் படித்திருந்தால்

மட்டும் போதாது. படித்ததைத் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். தெளிவு இல்லாமல் அவருக்கே சந்தேகம் இருந்தால் அவரிடம் படிக்கும் மாணுக்கர்கள் உருப்படுவது எப்படி? ஆகவே அவர் கலைகள் பயின்றிருக்க வேண்டும்; பரீக்ஷை கொடுத்துப் பட்டம் பெற்றிருந்தால் இந்தக் காலத்துக்குப் போதுமானது. அந்தக் காலத்தில் இதெல்லாம் பலிக்காது; படித்ததைச் சந்தேக விபரீதமின்றிப் படித்திருக்க வேண்டும்.

நன்ருகப் படித்தவரெல்லாம் வாத்தியாராக முடியுமா? எவ்வளவோ படித்தவர்களைப் பார்க்கிறேம். புஸ்தகத்தில் பிள்ளையார் சுழி முதல் முற்றிற்று வரையில் படித்துத் தெரிந்து கொண்டிருப்பார்கள். ஏதாவது ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்லுமையா என்ருல் ஒரே குழப்பம் வந்துவிடும். முன்னுக்குப் பின் பொருத்தமில்லாமல் உழப்புவார். சொல்லுகிற விஷயம் இன்னதென்றே விளங்காது. கொஞ்சம் விளங்கினுலும் அழுத்தமாகப் பதியாது. உலக அநுபவமும் கல்விப்பழக்கமும் உடைய நமக்கே புரியாதபடி இருந்தால், குழந்தைகளுக்கு அவர் எதைச் சொல்லித் தரப்போகிருர். படிப்பு வேறு; படித்ததைக் கற்றுத் தரும் சக்தி வேறு. இரண்டும் யாரிடம் பொருந்தியிருக்கின்றனவோ அவரே உபாத்தியாயர் வேலைக்குத் தகுதியானவர்.

கலைபயில் தெளிவு வாத்தியாருக்கு வேண்டுமென்று நிறுத்திவிடாமல் மேலே "கட்டுரை வன்மை" வேண்டுமென்று சொல்கிறது இலக்கணம். ஒரு விஷயத்தை, கேட்பவர் உள்ளத்தில் பதியும்படி சொல்லும் திறமைதான் அது. கட்டுரை என்பது ஒரு கலை. அதில் நல்ல வன்மை இருக்க வேண்டும். சும்மா 'என்னைத் தெய்வம் என்று கொண்டாடுங்கள்' என்று வாத்தியார் ஐயா சொன்னுல் ஜனங்கள் கொண்டாடி விடுவார்களா என்ன? உரை கல்லில் உரைத்துப் பார்த்து, 'ஐயா நல்ல மனுஷர்; நன்ருகப் படித்திருக்கிருர்; சாமர்த்தியமாகச் சொல்லித் தருகிருர்' என்று தேர்ந்தால்தான் கிராமத்து ஜனங்கள், "வாத்தியாரையா, நமஸ்காரம்" என்று கும்பிடு போடுவார்கள். இல்லாவிட்டால், "அழுகற் பழம் அண்ணுவிக்கு" என்ற பழமொழியைச் சொல்லிக் குப்பைத் தொட்டியில் போடும் பதார்த்தத்தைத்தான் நிவேதனம் செய்வார்கள்.

இவ்வளவும் சொன்னது போதாதென்று வாத்தியாரை வடிகட்டிப் பார்க்கும் இலக்கணக்காரர்கள், வாத்தியார் இன்ன இன்ன வஸ்துவைப்போல இருக்க வேண்டும் என்று வேறு சொல்லியிருக்கிருர்கள். மிகவும் விரிவாகவும் நுணுக்கமாகவும் சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகச் சொல்வதற்கு, உபமானம் ஒரு நல்ல வழி. உபமானத்தை மனம் போன மட்டும் விரித்துப் பார்த்துக் கொள்ளலாம். வேதாந்தத்தில் வரும் உபமானங்களுக்குக் கணக்கு வழக்கு உண்டா? இந்தத் தந்திரத்தை வேத காலத்து ரிஷிகளும் தெரிந்துகொண்டிருக்கிருர்கள்; ஏசுகிறிஸ்துவும் தெரிந்திருக்கிருர். ராமகிருஷ்ணபரமஹம்ஸரோ உபமானக் கதைகள் சொல்லி விளங்காதவற்றையெல்லாம் விளங்க வைத்துவிடுகிருர்.

வாத்தியார் ஐயாவை எந்த எந்தப் பொருளுக்குச் சமமாகச் சொல்கிருர்கள் என்பதை இனிமேல் கவனிப்போம்.

(தொடரும்)

பிரமாதம்!

"கச்சேரி எப்படி? கூட்டம் பலமோ?"

"அடே அப்பா! பிரமாதமாக இருந்தது. பதினுயிரம் ஜனங்கள் கூட்டம்."

சங்கீதக் கச்சேரி மிகவும் நன்ருக இருந்ததென்பதைத் தமிழர்கள் இப்படிப் பேசிக்கொள்வதனுல் தெரிந்து கொள்ளலாம். ஆனுல் ஸம்ஸ்கிருதம் தெரிந்து தமிழ் புதிதாகக் கற்றுக் கொண்ட ஒருவர் இதைக் கேட்டால் என்ன நினைத்துக் கொள்வார் தெரியுமா? "சங்கீதம் லக்ஷணமற்றதாகத் தவருக இருந்தது; இதற்காக வேலையற்றுப் போய்ப் பதினுயிரம் ஜனங்கள் கூடினுர்கள்" என்று பரிகாசம் செய்வதாக எண்ணிக்கொள்வார். இது அந்தப் பிரமாதம் என்ற பதம் செய்யும் கோளாறு.

பிரமாதம் என்பதற்கு வடமொழியில் தவறு என்று அர்த்தம். அது எப்படி எப்படியோ பல படிகளைத் தாண்டி இப்போது பிரமாதப்படுகிறது. அதன் கதையை ஊகித்துப் பார்க்கலாம்.

யாரோ ஒருவர் ஒரு சிறு பிழை செய்துவிட்டார். அதைப் பெரிதாக ஒருவன் எடுத்துச் சொல்கிருன். கேட்பவர், "என்னவோ தெரியாமல் செய்துவிட்டான்; இதைப் பிரமாதமாக எடுத்துச் சொல்கிருயே!" என்ருர்.

பிறகு சின்னதைப் பெரிதாக்குவதற்கு வந்து, "சின்ன சமாசாரம்; பிரமாதப் படுத்துகிருயே" என்று பேசினுர்கள்.

பிறகு சிறப்பு வாய்ந்தது என்பதைக் குறிக்க வந்துவிட்டது. நேர் விரோதமான யாத்திரை!

கவி

ந. பிச்சமூர்த்தி

இருவரும் ஆப்த நண்பர்கள். "வர வர மோசமாகிக்கொண்டே வருகிறாய்" என்றார் நண்பர்களில் ஒருவரான பத்திரிகாசிரியர்.

"ஏன்?" என்றார் மற்றவர். "படு ஏழை தீபாவளிக்குத் தீபாவளி எண்ணெய் தேய்த்து முழுகுவதுபோல் விசேஷ மலர்களைத் தவிர மற்றக்காலத்தில் எழுதுவதே இல்லை என்று கங்கணம் கட்டிக்கொண்டுவிட்டாய்."

"அப்படி ஒன்றுமில்லை.. நீ என்ன, எல்லா ஆசிரியர்களும் கதை கேட்கிறார்கள். எழுத வரவில்லை. வரவும் வராது. சித்தக் குருவி கவி வெளியில் பாடித் திரிந்துகொண்டிருக்கிறது. கதை கிடைக்காது. கவிதை பத்திரிகைகளுக்குத் தேவை இல்லை."

"அப்படி ஒன்றும் இல்லை. ஒரு கவிதை யாவது அனுப்பேன்."

"உறுதி சொல்ல முடியாது. கவிதை பெண்களைப்போல விரும்பினால் வெட்கிக் கலவரமடைகிறது. நீர்ப்பாம்பு போல் கற்பனை தலையை உள்ளுக்கு இழுத்துக்கொள்கிறது."

"ஆகையினால் கவிதையும் கிடைக்காது என்கிறாய்; அவ்வளவுதானே?"

"அதுவும் சொல்லவில்லை."

"இந்தக் கவிகள் எழுத்தாளர்கள் எல்லோருமே இப்படித்தான். வெயிலில் காய்வதும் இல்லை; மழையில் நனைவதும் இல்லை! உங்களை எல்லாம் நம்பிப் பத்திரிகை போடுகிறோமே!"

"எங்களை நம்பாதே — அதிலும் என்னை நம்பாதே. எழுத்தைக் கொண்டு பிழைப்பதானால் சாக்கஸ்காரன் சவுக்கைக் கண்டு சிங்கம் கூட்டில் நுழைவதும், வெளியில் வருவதும், ஆட்டுடன் பால் குடிப்பதும் போன்ற எழுத்து ஜாலங்கள் நடக்கும். கவிதை சிங்கமல்ல. என்னிடம் சவுக்கும் இல்லை. உலகு பராசக்தியின் லீலை என்றால் எழுத்து என் லீலை. அச்சு யந்திரம் வேலை செய்வதுபோல் கவிதா யந்திரம் வேலை செய்ய இயலாது."

"இனி நான் என்ன சொல்ல? உன் இஷ்டம்."

"அது சரி. இப்பொழுது பஸ்ஸுக்குப் போய் ஊருக்குப் போகிறேன். ஏதாவது எழுதினால் அனுப்பிவிடுகிறேன். வருத்தப் படாதே."

கவி பஸ் நிற்கும் இடத்திற்கு வந்தார். முதல் பஸ் போய்விட்டது. இனி மெயில் பஸ்தான் அடுத்த வண்டி: புறப்பட இரண்டு மணியாகும். எனவே பிரயாணிகள் தங்கும் சாவடியில் போய் உட்கார்ந்தார்.

முதல் பஸ் தவறிவிட்ட வருத்தங்கூடத் தோன்றாதபடி ஓர் எண்ணத் தேனீ கவியின் தலைக்குள் ரீங்கார மிட்டுக் கொண்டிருந்தது. ஒரு முடைப் புழு சிறகு முளைத்து, மண் கூட்டைத் துளைத்து வெளியேறத் தத்தளித்துக்கொண்டிருந்தது.

இக்கவிக் கிளர்ச்சியில் அடுத்த பஸ் வந்தது கூடத் தெளிவாகத் தெரியவில்லை. சாவடியை விட்டு ஜனங்கள் முண்டி மோதிக்கொண்டு பஸ் ஏற முயன்றபொழுதுதான் கவிக்குப் பஸ் நினைப்பு வந்தது. கூட்டத்துடன் கூட்டமாய் இடித்துக்கொண்டு பஸ்ஸில் ஆறு அங்குலம் இடத்தை ஆக்கிரமித்துக்கொண்டார். இடம் கிடைத்ததே என்று பிரயாணிகள் ஆறுதலுடன் பெருமூச்சு விட்டபொழுது விஷமக்காரக் கண்டக்டர் வாயைத் திறந்தான்.

"எல்லாரும் இறங்குங்கோ; உம்! எல்லாரும். தபால் எடுத்துக்கிட்டுத் திரும்பி வரோம். அந்தச் சத்திரத்து முனையில் நில்லுங்கோ. அப்போ ஏறிக்கொள்ளலாம்."

வெட்டுப்பட்ட பலிக்கடாவின் தலையைப் போல் உயிரற்று ஒவ்வொரு பிரயாணியாய்ப் பஸ்ஸை விட்டு இறங்கினார்கள்; கவியும் கூடத் தான்.

ஒரு விநாடிக்குள் பஸ்ஸில் இருந்த கூட்டத்தைத் தெருவில் காணவில்லை. கவி சத்திரத்து வாசலுக்கு வந்தார். பிரயாணிகளில் ஒருவர் கூட அங்கும் காணவில்லை. ஜலம் பட்ட சர்க்கரைப் பொம்மைபோல் மனிதர்கள் கரைய முடியுமா என்று கவி வியந்தார்.

'என்? காபி சாப்பிடப் போயிருக்கலாம். பூ வாங்கப் போயிருக்கலாம். இன்னும் ஆயிரத்தொரு சிறிய காரியங்களைக் கவனிக்கப் போயிருக்கலாம். பஸ் திரும்பும்பொழுது ஆஜரானால் போதாதா?' என்று அறிவு சமாதானம் சொல்லிற்று.

சொன்ன சமாதானத்தில் கொஞ்சம் நியாயம் இருந்ததால் பழைய கவிக்கிளர்ச்சி நீர் நிறைந்த ஏற்றச்சாலைப்போல் மேலே எழுந்தது. ஆனால் எண்ணத் தேனீயின் ரீங்காரத்தைக் காண வில்லை. மலர்க்கிண்ணியில் மது அருந்தும் மோனம் நிறைந்திருந்தது. முட்டைப்புழு பட்டுப்பூச்சியாகி, மண்கூட்டைச் சிதைத்து வெளி வரும் கோலம் தெரிந்தது. சத்திரத்து வாசலில் நின்றபடியே கவி நோட்டுப் புஸ்தகத்தைப் பிரித்துப் பென்ஸிலைக் கையில் எடுத்தார்.

"காதலி! அமுதக் கடலே!
ஈருடல் உருக்கி ஒன்றாய்
சேர்த்திடும் ஊது குழலே!
உதடெனும் தோணி பெற்ற
அக்கரைத் தேனார் சோலைக்
கூட்டிடும் பரிச லோட்டி!
உன்னை நான் கைப்பிடித்து
உன்மத்த மானேன் கண்டாய்.
மாதே! நான் உன்னிடத்தில்
உருவறக் கலந்த வேளை
இரண்டுமொன் றாகமாறும்
அதிசயக் கணக்குச் செய்தாய்.
தாயே! இக் குலவிளக்கு
நோய், நொடி சோகக் காற்றில்
சாயாது சுடர்விடுக்கத்
தாயின்கை அரவணைத்து
உயிர்க்குலம் ஓங்க வைப்பாய்,
அன்னையே! ஆதி சக்தி!......"

திடீரென்று கவித்தேனீ கிளம்பிவிட்டது. தபாலுக்குப் போன பஸ்ஸைக் காணவில்லை. ஆயிரத்தொரு காரியம் செய்யப்போன பிரயாணிகளையும் காணவில்லையே; ஒருவேளை பஸ் போயிருக்குமோ என்ற நினைப்புகள் எழுந்தன.

சத்திரத்துக்கு அடுத்தாற்போன்ற முச்சந்தியில் போலீஸ்காரன் கை காட்டிக்கொண்டு நின்றான். அவன் விஷயத்தை விளக்கக்கூடும் அல்லவா? திறந்த நோட்டும் கையில் பென்ஸிலுமாய்க் கவி போலீஸ்காரனை அணுகினார். "என் ஸார்! தபால் எடுத்துக்கொண்டு பஸ் திரும்பிவிட்டதா?"

"இன்னும் இல்லை."

"வந்தால் எங்கே நிற்கும்?"

போலீஸ்காரன் தனது வலப் பக்கத்தைச் சுட்டிக் காட்டினான்.

போலீஸ்காரன் சைகை பால் வார்த்தாற் போல் இருந்தது. சுட்டிக் காட்டிய பக்கத்துக்

குப் போய்க் கவி அங்கிருந்த திண்ணையைப் பார்த்ததும் பழைய தேனீ திரும்பிவிட்டது. கவி திண்ணையில் ஏறியதும் தேனீ பாடிற்று.

"அன்னையே ஆனபோது
அகிலமும் வாய்புதைத்த
நச்சுவாய் உறவினர்கள்
நெஞ்சத்து மெய்யன்பர்கள்,
பூச்சூட்டிப் பூஜை செய்தார்
தாய்மையைத் தலையில் வைத்தார்.
தருணிநீ தாயதாகிப்
பொறையெழில் ஏறும்போது
புகுந்ததோர் சக்திக்கதிரில்
விளைந்தது வையமுழுதும்.
காதலும் தாயுமானய்,
தாயுடன் தெய்வமானய்.
குழந்தையைத் தந்த தாயே
குவலயம் காத்து வருவாய்.
லீலையே! மூல சக்தி!"

'மூல சக்தி' என்று முடிக்கும் பொழுது பஸ் வரும் ஓசை கேட்டது. பென்விலும் பிரிந்த நோட்டும் கையுமாய்க் கவி தெருவில் இறங்கினன். அதே தபால் பஸ். ஆனல் அங்கு நிற்கவில்லை!

"நிறுத்து, நிறுத்து!" என்று கவி கூவினன். புளி மூட்டையில் பிதுங்கியிருக்கும் ஒற்றைக் கொட்டைபோல் பஸ்ஸுக்கு உள்ளும் புறமுமாக உட்கார்ந்திருந்த ஒரு பிரயாணி கைவிரித்தானே ஒழிய வண்டி நிற்கவில்லை.

தன்னைத் தவிர அவ்வளவு பிரயாணிகளும் வண்டியில் ஏறிவிட்ட மாயம் கவிக்குப் புரியவில்லை. பஸ் கண்டக்டர் சொன்னபடி கவி சத்திரத்து முனையில் நின்றது என்னவோ உண்மை. பின் பஸ் ஏமாற்றியது எப்படி?

திரும்பவும் போலீஸ்காரனைக் கவி அணுகினர்.

"நீங்கள் சொன்னதுபோல, பஸ் நிற்கவில்லையே!"

"பஸ்ஸுக்கென்ன கணக்கா? சத்திரத்துக்குப் பின்புறம் நின்று பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு போய்விட்டது?"

"கண்டக்டர் சத்திரத்து முனையில் இருக்கச் சொன்னரே?"

"முன் பக்கமும் ஒரு முனை, பின் பக்கமும் ஒரு முனை. நீங்கள் என்ன, தூங்கிக்கொண்டிருந்தீர்களா?"

உள்ளபடி தூக்கத்திற்குச் சமானமான ஒரு நிலையில்தான் கவி இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஆயிரத்தொரு காரியம் செய்யச் சென்ற பிரயாணிகள் ஆயிரத்தொரு தடவை திரும்பிவரும் நேரமாகியும் தான் நின்று எழுதிக்கொண்டிருந்த திண்ணையின் அருகில் கூட்டம் சேராததைக் கண்டு எச்சரிக்கை அடைந்திருக்கவேண்டாமா? போலீஸ்காரன் நின்ற முச்சந்தியைக் கண்டுவிட்டு அப்படியும் இப்படியும் ஒரு பத்தடி நடந்து பார்த்திருக்கலாம் அல்லவா? ஆனல் கவிதுரியம் உலகைப் பற்றியவரையில் ஒரு தூக்கமாகவே அமைந்துவிட்டதால் இந்த யோசனை தோன்றவில்லை.

இனிச் செய்வதென்ன? கவி திரும்பவும் பிரயாணிகள் தங்கும் இடத்திற்கு வந்தார். அடுத்த பஸ் சாயங்காலம் நான்கு மணிக்குத்தான். இன்னது செய்வதென்று புரியவில்லை.

முனிவிபாலிடியாரின் தெருக் கடிகாரம் கண்ணில் பட்டது. கடிகார முள் எவ்வளவு மெதுவாக நகர்ந்தது! சொல்லப்போனல் முள் நகரவே காணேம். நிமிஷ வீதியில் பெரிய முள் நின்றுகொண்டே இருக்கும். விநாடிகள் கழியும். ஆனல் விநாடிக்கு விநாடி முள் நகராது. அறுபது அல்லது எழுபது விநாடிகள் ஆகியிருக்கக்கூடும் என்று நினைக்கும்பொழுது திடீரென்று வாய்க்காலைத் தாண்டுவதுபோல் முள் தாண்டும். தூங்குமூஞ்சி வேலைக்காரன் எஜமான் கட்டளையைச் செவியுற்று நடுவில் நடுவில் எழுந்திருப்பது போல் முள் உயிர்த் துடிப்புக் கொள்ளும். செயலற்ற இந் நிலையிலே ஒரு மணி கழிந்துவிட்டது.

ஏதோ நினைப்பு வந்ததும் சட்டை துணி மணிகளைக் கவி மாறி மாறிப் பார்த்தார். பெஞ்சி மேல் திறந்த நோட்டுடன் பென்வில் ஏதோ பேசிக்கொண்டிருந்தது. கவியின் மனம் பஸ்ஸுக்கும் கவிதுரியத்திற்கும் உள்ள முரணைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தது. கவியையும் அறியாமலே கை பென்விலை நாடிற்று. அது சமயம் அடித்த அலைகாற்றில் பென்வில் நோட்டை விட்டு விலகி உருண்டது.

"எச்சரிக்கை! ஊருக்குப் போனபிறகு கவிக் கிளர்ச்சி வரட்டும். இல்லாவிட்டால் அடுத்த பஸ்ஸும் போய்விடும்" என்று மறைமுகமாகச் சொல்வதுபோல் இருந்தது.

கவிக்கு வந்த கோபத்திற்கு அளவில்லை. பென்விலை எடுத்து ஓங்கிக் கூரை அப்படியே தரையில் குத்தினர். கவிக் கிளர்ச்சி சிதைந்தது போலப் பென்வில்நுனி தூள் தூளாகப் பறந்தது.

அதற்குப் பிறகுதான் அடுத்த யோசனை தோன்றிற்று. நேரே அந்த மோட்டார் கம்பெனியின் ஆபீசுக்குச் சென்று, பஸ் தவறிய செய்தியைச் சொன்னர்.

"என்ன செய்ய வேண்டும்?" என்றான் ஆபீஸ் குமாஸ்தா.

"அடுத்த பஸ் எப்பொழுது?'

"நான்கு மணிக்கு."

"அதில் போக இந்த டிக்கெட் போதுமோ இல்லையோ?"

"டிக்கெட் மாற்றப்படமாட்டாது என்று அச்சடித்திருப்பது தெரியவில்லை?"

"தெரிகிறது."

"ஆகையினால் வேறு டிக்கெட் வாங்கவேண்டும்."

"ஒரு பிரயாணியிடம் இரண்டு தரம் பணம் வசூல் பண்ணுவது நியாயமாக இல்லையே?"

"நீங்கள் ஏறப்போவது இரண்டாவது பஸ். ஞாபகம் இருக்கட்டும். ஒரு பிரயாணி என்கிறீர்களே, அதை யார் கண்டார்? உமக்குப் பதிலாக வேறு ஆள் போயிருக்கலாம்."

"அப்பொழுது அவனிடம் டிக்கெட்டுக்குப் பணம் வாங்கிவிடமாட்டார்களா?"

"அதைத்தான் யார் கண்டார்கள்? கண்டக்டருக்கு ஆள் கணக்கே ஒழிய ஆள்மாறாட்டக் கணக்கு அவசியமில்லை. புறப்படுகிற இடத்தில் ரசீதைப் போட்டுவிட்டு, பஸ் பிரயாணிகளை எண்ணும்பொழுது இரண்டும் சரியாக இருந்தால் சரிதான்."

"ரசீது புஸ்தகத்துக்கும் இருந்த ஆளுக்கும் சரியாகப் போய்விட்டதென்று உமக்கு எப்படித் தெரியும்?"

குமாஸ்தாவுக்குக் கோபம் வந்துவிட்டது.

"ஓய், நான் கோர்ட்டில் கிளிக் கூட்டில் நிற்கவும் இல்லை. நீர் வக்கீலும் அல்ல. பஸ்ஸில் மறுபடி ஏற வேண்டுமென்றால் டிக்கெட் வாங்கும். நீங்கள் சொல்கிற கதை நிஜம் என்று எப்படி ஐயா நம்புகிறது?"

இப்பொழுது கவிக்கு ஒரு புறம் கோபமும், மற்றொரு புறம் கதைக் கிளர்ச்சியும் எழுந்தன. குமாஸ்தா கவி சொல்வதைக் கதை என்றார் அல்லவா? கவி மறு பேச்சின்றி ஒரு கிளப்புக்குச் சென்று சாப்பாட்டை முடித்துக்கொண்டார். பென்ஸிலைக் கூர்சீவி நோட்டுப் புஸ்தகத்தில், தலை எடுக்காமல், மூச்சு விடாமல், ஓட்டினார். எழுதி முடிந்ததும் திருப்பிப் படித்துவிட்டுத் தாள்களைக் கிழித்து மடித்துச் சட்டைப்பையில் திணித்துக்கொண்டு தம் நண்பன் வீடு நோக்கிப் புறப்பட்டார்.

நண்பர் ஒரு சிறந்த இலக்கியப் பத்திரிகையின் ஆசிரியர். கவி வந்தபொழுது திண்ணையில் யாரோ ஒரு கனவானுடன் பேசிக்கொண்டிருந்தார். கவியை மறுபடி கண்டதும் திகைத்துத் துள்ளி எழுந்தார்.

"ஆமாம், பஸ்ஸுக்குப் போய் ஊருக்குப் போகிறேன் என்று காலையில் சென்றாயே?"

"ஆமாம், சென்றேன். பஸ் கிடைக்கவில்லை. ஒரு கதை கிடைத்தது; கொண்டுவந்தேன்."

"காலையில் வற்புறுத்திக் கேட்டபோது நீ சொன்ன பதில் ஞாபகம் இருக்கிறதா? எல்லாப் பத்திரிகாசிரியர்களும் இப்பொழுது கதையே கேட்கிறார்கள். எழுத வரவில்லை, வரவும் வராது. சித்தக் குருவி கவி வெளியில் பாடிக் கொண்டிருக்கிறது என்றாய்."

"ஆமாம், சொன்னேன்."

"கவிதையாவது எழுதி அனுப்பு என்றேன். நான் யந்திரம் அல்ல என்றாய்."

"ஆமாம், சொன்னேன்."

"இப்பொழுது?"

"கதையுடன் கவிதை கொண்டு வந்திருந்த போதிலும் அதையேதான் சொல்கிறேன். கவி பெண்ணைப் போல. சொன்னபடி நடக்க வேண்டுமென்ற கட்டுப்பாடு இருவர்களுக்கும் இல்லை."

"ஆகையால் கவிகள் பொய் சொல்லலாம்?"

"இல்லை. கவிகள் என்றும் பொய் சொல்ல மாட்டார்கள். அவர்கள் சொல்லும் உண்மை உலகத்தாருக்குப் புரிவதில்லை. பொய் என்கிறார்கள். கவி என்பது தெரியாமல், காலையில் பஸ் கம்பெனி குமாஸ்தா நான் பொய் சொல்வதாகச் சொன்னான். கவி என்று தெரிந்த நீயும் அப்படியே சொல்கிறாய். நான் என்ன சொல்வது?"

"ஒன்றும் சொல்லவேண்டாம். முதலில் கதையையும் கவிதையையும் கொடு."

கவி தன் சட்டைப்பையில் இருந்த தாள்களை எடுத்து நண்பன் கையில் கொடுத்தான்.

"பஸ் கம்பெனி என்றீர்களே எது?" என்றார் எதிரிலிருந்த கனவான்.

"பஸ் நிற்கும் இடத்திற்குப் பின்னால் இருப்பதுதான்."

"என்ன நடந்தது அங்கே?"

கவி பஸ் தவறிய கதையைச் சொல்லி முடித்தார்.

"இவர் யார் தெரியுமா?" என்று பத்திரிகாசிரியர் கனவானைச் சுட்டிக் காட்டினார்.

"தெரியாது" என்றார் கவி.

"பஸ் கம்பெனிக் கூட்டாளிகளில் ஒருவர்."

"இவர் யார் தெரியுமா?" என்று கவியைச் சுட்டிக் காட்டினார்.

"தெரியாது" என்றார் கனவான்.

"இவரே 'மண்ணும் விண்ணும்' எழுதிய ஆசிரியர். ஒரு கவி."

கனவான் ஒரு நிமிஷம் வியப்பினால் சும்மா இருந்தார்.

"பின் இவரைப் பொய்யர் என்ற முறையிலே பேசினீரே?"

"தமாஷாக, உலக ரீதியில் பேசினேன். காலையில் கதை கேட்டேன், கவிதை கேட்டேன். மூச்சு விடக்கூடாது என்றான் நண்பன். ஆனால் இப்பொழுதோ, இரண்டும் வந்துவிட்டன. கவிகளிடம் எல்லாம் தலைகீழ்!"

"உண்மை அது அல்ல. நீங்கள் யாரைக் கதையோ கவிதையோ வேண்டுமென்று கேட்கிறீர்களோ, அவருக்குப் பதில் சொல்லும் அதிகாரம் இல்லை. ஏனென்றால் எழுதுகிற ஆள் வேறு. மலைக் காற்று எப்பொழுது அடிக்கும் என்று பள்ளத்தாக்கைக் கேட்பதில் என்ன பொருள்?"

"கவியும் எழுத்தும் எப்பொழுது வரும் என்று கவிக்கே தெரியாது என்கிறாய்; அவ்வளவுதானே?"

"அது மட்டுமல்ல. தெரிந்ததுபோலக் கவிக்குள் இருக்கும் நடைமுறை ஆள் பேசிவிடுகிறானே, அதுதான் ஆபத்து."

"ஆபத்து ஒன்றும் இல்லை. கவி முரண் இப்பொழுது விளங்கிவிட்டது. நான்கு மணி பஸ் தவறும் ஆபத்துத்தான் இப்பொழுது எதிர்ப்படுகிறது!"

"நாழிகையாகிவிட்டதா?"

"பாவா இல்லை. நான் தவறாமல் ஏற்றிவிடுகிறேன்" என்று கணவான் எழுந்தார்.

"பிரயாணிகள் பொய் சொல்லப் பிறந்தவர்கள் என்று குமாஸ்தா நினைத்திருக்கிறாரே, அதையும் திருத்திவிடுங்கள்" என்று கவி எழுந்திருந்தார்.

பத்திரிகாசிரியர் கதையைப் படிக்கத் தொடங்கினார்.

அகண்ட காவேரி

அகண்ட காவேரி என்று சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். ஆனால் அதன் காரணம் பல பேருக்குத் தெரியாது. தெரியாததோடு நில்லாமல் தப்பாக வேறு அர்த்தம் பண்ணிக்கொண்டு "அகண்ட கண்", "அகண்ட வானம்" என்றெல்லாம் எழுதத் தொடங்கி விடுகிறார்கள். 'அகன்ற' என்ற பொருளில் 'அகண்ட' என்ற வார்த்தையை உபயோகிப்பது பிழை. காவேரி கொள்ளிடத்திற்குப் பிறகு பலபல கிளைகளாகப் பிரிகிறது; அதற்குமுன் பிரிவதில்லை. அந்த இடத்துக் காவேரி, கண்டப்படாமல், அதாவது துண்டுபடாமல் அகண்டமாக இருக்கிறது. அதனால் அகண்ட காவேரி என்ற பெயர் வந்தது. அவ்விடங்களில் காவேரியின் அகலம் அதிகம். அந்த அகலத்தை எண்ணித்தான் அகண்டம் என்ற பெயர் வந்ததாக நினைத்து, அகலமாக உள்ள பொருள்களையெல்லாம் அகண்டமாக்கிவிட்டார்கள்.

மூலக் கல்வியின் உரைகல்

மகாத்மா காந்தி

'குமுதினி' மொழிபெயர்த்தது

ஒரு பையனுக்கு மூலக்கல்வி சரியாக ஏற்பட்டிருக்கிறதா என்பதைப் பரீக்ஷிக்கும் சமயம் நான் முதல் முதல் அவனுடைய சரீரம் எவ்விதம் இருக்கிறது, தேகத்தை அவன் சுதந்தரமாகவும் நன்றாகவும் வைத்துக்கொள்ளுகிறானா என்பதைப் பார்ப்பேன். அவனுடைய கண், மூக்கு, காது, தலை, ரோமம், நகங்கள் இவைகள் அழுக்கடைந்து, அவன் எழுந்திருப்பது உட்காருவது சரியான முறையில் இல்லாமல் இருந்தால் அவன் மூலக் கல்வியின் முதற் பாடத்தைக்கூடப் படிக்கவில்லை, அது அவனுக்குப் போதிக்கப்படவும் இல்லை என்றே நான் அறிந்து கொள்வேன்.

எவன் திறமைசாலியோ, எவன் தன் கைகால்களைச் சரிவர உபயோகிக்க அறிவானோ, அவனுடைய தேகத்தைப் பார்த்தாலே போதும்; அப்போழுதே அவன் எவ்விதமானவனென்று தெரியவரும்.

இதற்குமேல், நான் அவன் தனது தொழிலைச் செய்யும் சமயம் அந்த வேலையைச் சேர்ந்த சிறியதும் பெரியதுமான எல்லா விஷயங்களையும் அவனுக்குச் சாஸ்திரப்பிரகாரம் செய்யும் வழி தெரிகிறதா என்பதைப் பார்ப்பேன். நூற்றானென்றால் நூலின் சமமான நயத்தைப் பார்ப்பேன். அதனுடன் அவ்விதம் நூல் சமமாக இருப்பதை அவன் உணர்ந்து செய்கிறானா என்பதையும் கவனிப்பேன். இதற்குமேல், அவன் கற்றிருக்கும் கல்வி அவனுடைய வேலையைச் சேர்ந்த விஷயங்களிலிருந்து கற்றிருக்கிறானா என்பதை அறிய முயலுவேன்.

இந்த விஷயங்களிலிருந்து, மூலக் கல்வியின் சரியான சிக்ஷை பெற்றவன் இவன் என்ற சந்தோஷம் எனக்கு ஏற்பட்டால், அதற்குமேல் அவன் தன்னம்பிக்கையும் தன்முயற்சியும் உடையவனா என்பதைக் கேட்கமாட்டேன். ஏனெனில் மூலக் கல்வியின் இந்த முக்கிய சிக்ஷை ஏற்பட்டால் அவன் தன்னம்பிக்கை பெற்றவனாகவே இருப்பான்.

அபராஜிதா

எப். டபிள்யூ. பெயின்
மொழி பெயர்ப்பு: கி. சாவித்திரியம்மாள்

(சென்ற இதழ் 85-ஆம் பக்கத் தொடர்ச்சி)

௧

இதற்கிடையில் அபராஜிதா காமரூபனின் உள்ளத்தில் தான் நட்ட விதை முளைத்து எழுந்து மரமாகிப் பலன் தருவதை ஒரே ஆவலாய் எதிர்பார்த்து அக்குளக்கரையில் காத்திருந்தாள். இப்படிப் பல நாட்கள் சென்றன.

"தரித்திரம் பிடித்த அந்தக் காமரூபனின் தோற்றத்தைப் போலவே அவன் உள்ளமும் இருந்தாலொழிய, அவன் மேற்கொண்ட காரியம் எவ்வாறு தோற்றுப்போகும்? அம்மந்திரமும் பலிக்காமற்போகாது. ஆனால் அதோடு எல்லாம் நிற்கவில்லையே! ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் எனக்குச் சிறிது சந்தேகம் உண்டு. அதை அவனையே பார்த்துக்கொள்ளும்படி விட்டுவிட்டேன். நாட்கள் ஆகின்றன. இன்னும் ஒருவரையும் காணவில்லை. ஒருவேளை அரசனை அணுகுவதற்கே அவனுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையோ என்று தோன்றுகிறது. அதுமட்டும் முடிந்தால் மற்றவை மிகவும் எளிதாய் நிறைவேறிவிடும். ஆனால் அதுதானே பெரிய கஷ்டம்? இப்பொழுது அந்த விக்கினேசுவரர்தாம் எனக்கு அருள் புரியவேண்டும். அவர் திருவுள்ளம் கொண்டால் வளைக்குள் இருக்கும் சிறு எலியும் ஆகாயத்தில் ஜொலிக்கும் சூரியபகவானை அணுகிவிடும் அல்லவா?" என்று அவள் தானே கூறிக்கொண்டாள்.

ஒரு நாள் அவள் இவ்விதம் யோசித்துக் கொண்டிருந்த பொழுது திடீரென்று உற்றுக் கேட்டாள். யாரோ வேகமாய் ஓடிவருவது போன்ற சப்தம் கேட்டது. மரங்களின் இடுக்கு வழியாய் நோக்கியதும் காமரூபன் ஒரே வேகமாய் ஓடி வருவதைக் கண்டாள். உடனே அவள் பரபரப்புடன், "யார் அது? காமரூபன் தான் போலிருக்கிறதே! என் சூழ்ச்சி பலித்ததா அல்லது தோற்றுப் போயிற்றா என்பது இப்பொழுது தெரிந்துவிடும். என் வலது கண் துடிப்பதிலிருந்து காரியம் கைகூடிவிட்டது என்றுதான் தோன்றுகிறது. கைகூடாவிட்டால் இப்படி ஓடி வரமாட்டான். மிகவும் தாமதமாய் வருவான், அல்லது வாராமலே இருந்தாலும் இருப்பான். ஏனெனில் காரியம் கெட்டுப்போனால் பிறகு அவன் திரும்பிவருவதுதான் ஏது?" என்று தானே கூறிக்கொண்டாள்.

பிறகு அவள் விரைவாய் மீண்டும் தன் கற்பாறைமீது சென்று உட்கார்ந்துகொண்டாள். அதே சமயத்தில் ஓடிவந்துகொண்டிருந்த மனிதனும் அவளைப் பார்த்துவிட்டு ஒரே ஓட்டமாய் அவள் காலடியில் வந்து விழுந்தான்.

"ஐயோ! உன் கண்களை நம்பாதே! அவை உன்னை ஏமாற்றுகின்றன. நான் தரித்திரம் பிடித்த நாவிதனாகிய அந்தக் காமரூபன் அல்ல. அரசன் கேசவன். என்ன மாயத்தினாலோ என் உடல் வஞ்சகமாய் அபகரிக்கப்பட்டு அவ்வற்பனுடைய உடல் எனக்கு வாய்த்திருக்கிறது. இப்பொழுது நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும். மற்றவர்கள் எல்லோரும் என்னைக் கைவிட்டுவிட்டார்கள்" என்று ஓலமிட்டான்.

அதைக் கேட்டு அபராஜிதா மிகவும் களிப்படைந்தாள். 'யாவும் நான் நினைத்தபடியே நடந்திருக்கின்றன. அரசனுடைய உடலைக் காமரூபனும் காமரூபனுடைய உடலை அரசனும் அடைந்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன்' என்று மனத்திற்குள் எண்ணிக்கொண்டு வெளிப்படையாய், "நீர் யார்? உம்மை நான் முன்பின் பார்த்ததே இல்லையே! உம் சொற்படி நீர் உண்மையாய் அரசர் என்றால், உம்மைப் பிறர் காப்பாற்றுவதைக் காட்டிலும் நீர் அல்லவா பிறரைக் காப்பாற்றவேண்டும்? அது போகட்டும். நீர் அரசர் என்பதுதான் எப்படி? நான் இவ்வூர் அரசரைப் பார்த்திருக்கிறேன். நீர் அவரல்ல என்று நான் நிச்சயமாய்க் கூறுவேன். நீலோற்பல மலருக்கும் சருகுக்கும் எவ்வளவு ஒற்றுமையோ அவ்வளவு ஒற்றுமைதான் உங்கள் இருவர் உருவத்துக்கும் இடையே காணப்படுகிறது" என்றாள். அம்மொழிகளைக் கேட்டு, அவன் 'ஐயோ!' என்று மிகவும் பரிதபித்து, "நீலோற்பல மலரா? ஆஹா! உன் நீலோற்பல மலர் அல்லவா என்னை இக்கதிக்குக் கொண்டுவந்துவிட்டது? ஐயோ! எனக்குப்

பைத்தியம் பிடித்திருக்கிறதா அல்லது நான் கனவுதான் கண்டுகொண்டிருக்கிறேனா, ஒன்றும் தெரியவில்லையே! நான் அரசன் கேசவனும் அல்லாமல் நாவிதன் காமரூபனும் அல்லாமல் இருவரும் ஒன்றாய் இருக்கிறோம் என்று நினைக்கிறேன். ஆயினும் அது எவ்வாறு சாத்தியமாகும்? நான் தூங்கிக்கொண்டு அத்தூக்கத்தில் மிகவும் பயங்கரமான கனவு ஒன்று கண்டுகொண்டிருக்கிறேன் என்றுதான் தோன்றுகிறது" என்று எக்கத்துடன் மொழிந்தான்.

"நீர் கூறுவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. ஆயினும் நீர் யாராக இருந்தாலும் இவ்வாறு ஓர் எண்ணம் உம் மனத்தில் எழுவதற்கு ஏதோ விசேஷம் நடந்திருக்கவேண்டும். நீலோற்பலம் என்றதும் ஞாபகம் வருகிறது. நான் உமக்கு ஒரு மலரும் கொடுக்கவில்லையே! அரசருக்கு அல்லவா கொடுத்தேன்? அது உமக்கு எப்படித் தெரிந்தது? அவரேதாம் உம்மிடம் கூறியிருக்கவேண்டும். ஆகவே நீர் அரசரல்ல என்று மட்டும் நான் நிச்சயமாய்ச் சொல்வேன்" என்றாள் அபராஜிதா.

10

பிறகு காமரூபனைப் போல் தோன்றிய அவன், "நான் ஆதியோடந்தமாய்க் கூறுகிறேன், கேள்" என்று சொல்லத் தொடங்கினான்:

நான் அரசன்தான். அது முற்றும் உண்மை. என்னையும் மீறி இம்மோகவலையில் சிக்கிவிட்டேன். நான் கூறி முடித்த பிறகு நீயும் என் கதையை நம்பவில்லை என்றால், அந்த க்ஷணமே இக்குளத்தில் முழுகிப் பிராணனை விட்டுவிடுவேன். இரண்டு நாட்கள் முன்பு, கையில் அந்த நீலோற்பல மலருடன் என் சொந்த உருவத்தில் நான் இங்கிருந்து சென்றபொழுதுதான் இவ்வற்ப நாவிதன் என் உடலை அபகரித்ததுபோல் என் உள்ளத்தையும் கொள்ளைகொண்டுவிட்டாய் என்று அறிந்தேன். ஆகவே உயிரற்ற வெறும் உடலுடன் உன்னைத் தவிர வேறு உருவமொன்றும் கண்ணிற்படாதவனாய்க் காலம் போவதே தெரியாமல் தன்னந்தனியே உட்கார்ந்திருந்தேன். திடீரென்று எனக்கு என் நினைவு உதித்தது. என்னைச் சுற்றி எல்லோரும் ஒரே அடியாய்ச் சிரித்துக்கொண்டிருப்பதைக் கண்டேன். எதிரே நோக்கியபொழுது நீ பார்த்துக்கொண்டிருக்கும் இவ்வுருவமானது ஆடிக் குதித்துக்கொண்டிருந்தது. திடீரென்று எல்லோருடைய சிரிப்பும் என்னையும் பற்றிக்கொண்டதுபோல் இருந்-

தது. என் துயரமெல்லாம் ஒரு நிமிஷத்தில் களிப்பாக மாறியதுபோல் அவர்களுடன் சேர்ந்து சிரிக்கத் தொடங்கினேன். அவன் தன் பெயர் காமரூபன் என்று சொன்னான். என் துரதிருஷ்டம், நான் அவனுடன் பேசத் தொடங்கியதும் காமரூபன் என்ற பெயருக்குச் சரியாய், தனக்கு இஷ்டமான உருவத்தை எடுத்துக் கொள்ளும் சக்தி வாய்ந்தவன் என்று தானே பெருமை அடித்துக்கொண்டான். அவன் கூறியது எவ்வளவு உண்மை என்று இப்பொழுது அல்லவா தெரிகின்றது! அவன் அந்த ரகசியத்தை எனக்கும் கற்றுக்கொடுப்பதாய்க் கூறினான். அது வெறும் பொய் என்று எண்ணிய நான் அவன் பெருஞ் சூதை அறியாமலே அதற்கு ஒப்புக்கொண்டேன்.

அந்தப்பாவியை நம்பி மோசம் போய் அவன் சொற்படி எல்லோரும் காட்டில் வேட்டையாடச் சென்றோம். மற்றவர்களை எங்களுக்காகக் காத்திருக்கும்படி சொல்லிவிட்டு நாங்கள் இருவரும் மட்டுமே தனியாய்ச் சென்றோம். எங்கேயோ கிடந்த ஓர் அற்ப நாவிதனைத் திடீரென்று நான் ஆகாயத்தில் தூக்கிவைத்ததைக் காண அவர்கள் அனைவருக்கும் பொறாமை மண்டிக்கொண்டது. "ஆஹா! பிறந்தாலும் இப்படிப்பட்ட அதிருஷ்டத்துடன் அல்லவா பிறக்கவேண்டும்? இவன் குரூபமே இவனுக்குப் பெரிய யோகமாய் அடித்துவிட்டதே" என்று அவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள்.

நான் காமரூபனை மட்டும் அழைத்துக் கொண்டு காட்டினுள் சென்றேன். நான் குதிரைமீது ஏறிச் செல்ல, அவன் என் பக்கத்தில் ஓடிவந்துகொண்டிருந்தான். அவன் திணறிக்கொண்டு ஓடிவருவதைக் காண எனக்கு வேடிக்கையாக இருந்தது. வேண்டும் என்றே முட்புதர்களின் வழியாய்ச் சென்று அவன் என்னிடம் வீண்ஜம்பம் அடித்துக்கொண்டதற்காக முன்னதாகவே அவனைத் தண்டிக்க விரும்பினேன். ஆனால் அப்பொழுதெல்லாம் அந்தக் கோரரூபி, 'ஆஹா! திரும்பிப்போகும் பொழுது தெரியும், காமரூபன் குதிரைமீது செல்ல, கேசவன் காலில் முட்கள் தைக்க ஓடிவரும்படி அல்லவா ஆகும்?' என்று தனக்குள்ளேயே நினைத்துச் சிரித்துக்கொண்டிருந்திருப்பான். இவ்வாறு நாங்கள் போய்க்கொண்டிருக்கையில் திடீரென்று ஒரு திறந்த வெளியான இடத்திற்கு வந்துசேர்ந்தோம். அங்கு இரண்டு கவரிமான்கள் இறந்த சில கிளிகளை வைத்துக் கொண்டு ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அச்சண்டையில் நாங்கள் வந்ததைக்கூட அவைகள் முதலில் அறியவில்லை. ஆனால் எங்களைப் பார்த்ததும் அவை பயந்துபோய் அவ்விடத்திலிருந்து ஓட்டம் பிடித்தன.

உடனே காமரூபன், "மகாராஜா! நாம் இனிப் போகவேண்டாம். பரீக்ஷை செய்து பார்ப்பதற்கு இதுவே சரியான இடம். நமக்கு வேண்டியதெல்லாம் ஒரு மிருக சரீரந்தானே! அதை அந்த அப்பாவிக் கவரிமான்கள் நமக்கு ஒரு சிரமமும் கொடுக்காமல் தாமே நம் காலடியில் கொண்டுவந்து போட்டிருக்கின்றன. செத்த உடல் ஒன்றுதான் நமக்குத் தேவையாதலால் இந்தக் கிளிகளில் ஒன்றே இப்பொழுது நம் காரியத்திற்குச் சாதகமாகும்" என்று கூறிவிட்டு அவ்வுயிரற்ற கிளிகளில் ஒன்றை அருகிலிருந்த ஒரு பெரிய மரத்தடியில் கொண்டுபோய் வைத்தான். பிறகு என்னைப் பார்த்து, "மகாராஜா, கீழிறங்கிக் குதிரையை அந்த மரத்தில் கட்டிவிட்டு வாருங்கள்" என்றான்.

நான் அவன் கூறியபடி செய்தேன்.

அவன் மறுபடியும், "மகாராஜா! மலையுச்சிக்குச் செல்லவேண்டுமென்றால் பறவைகள் போல விர்ரென்று பறந்து செல்லமுடியுமா? அடிவாரத்திலிருந்து ஒவ்வோர் அடியாய் வைத்து மெல்ல மெல்ல ஏறவேண்டும் அல்லவா? அவ்விதமே தங்களைப்போல் மந்திரவித்திகள் பெற்ற வித்தியாதார்களாகவேண்டும் என்று விரும்புபவர்கள் ஒரே க்ஷணத்தில் அவ்வாறு ஆக முடியாது. அதற்கு வேண்டிய மந்திரதந்திரங்களைக் கற்று எவ்வழியாய்ப் பிரவேசிக்க வேண்டுமோ அவ்வழியாய்த்தான் மிக அடக்கத்துடன் பிரவேசிக்கவேண்டும். கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையை நான் தங்களுக்கு இப்பொழுது செய்து காட்டுகிறேன். உயிருடன் இருக்கும்பொழுதே எப்படி வேறு சரீரங்களில் பிரவேசிப்பது என்பதைப் பிறகு பார்த்துக் கொள்வோம். கடைசியில் என்னைப் போல் இச்சைப்படி எந்த உருவம் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளும் திறமை உங்களுக்குக் கிட்டிவிடும். மகாராஜா, இதோ என்னைக் கவனித்துப் பாருங்கள். இந்தச் செத்த கிளியின் உடலில் நான் இப்பொழுது பிரவேசிக்கப் போகிறேன். தங்களுக்கு நம்பிக்கை உண்டாகும் பொருட்டு அந்தக் கிளியின் உருவத்தில் பேசுவேன். பிறகு இம் மரத்தைச் சுற்றிப் பறந்துவிட்டு மீண்டும் என் உருவத்தை எடுத்துக்கொள்ளப் போகிறேன்" என்றான்.

இவன் நம்மை எப்படி ஏமாற்றுவான், பார்ப்போம் என்று இகழ்ச்சியுடன் நோக்கிக்கொண்டு நின்றேன். தான் கூறியபடியே செய்துவிடுவான் என்று நான் அப்பொழுது கனவிலும் நினைக்கவில்லை. அவன் அவ்விறந்துபோன கிளியின் உடலின்முன் நின்றுகொண்டு அதை

உற்று நோக்கிய வண்ணம் ஏதோ மந்திரத்தை உச்சரித்தான். என்ன ஆச்சரியம்! ஒரு நிமிஷத்திற்கெல்லாம் அவன் உடல் கீழே பொத்தென்று விழுந்ததும் அதே நிமிஷத்தில் அவன் கூறிய படியே தரையில் கிடந்த கிளி உயிர் பெற்று எழுந்தது. அது என்னை நோக்கி வணங்கி விட்டுக் காமரூபனின் குரலுடன், "மகாராஜா! இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கூறியது. பிறகு மரத்தைச் சுற்றிப் பறந்துவிட்டு மீண்டும் தன் இடத்திற்கு வந்து சேர்ந்தது. உடனே வேறொரு மந்திரத்தை ஜபித்ததும் மீண்டும் பழையபடி செத்த கிளியாக மாறியது. உயிரற்றுக் கிடந்த காமரூபனின் உடலோ மீண்டும் உயிர்பெற்று எழ, அந்தக் கிளியைப்போலவே அவனும் என்னை நமஸ்கரித்துவிட்டு, "மகாராஜா, என்ன சொல்லுகிறீர்கள்? எவ்வளவு எளிதாக இருக்கிறது பார்த்தீர்களா? எல்லாம் உங்கள் கண் முன்னேயே நடந்திருக்கிறது. நான் தங்களிடம் கூறிய வார்த்தையை மெய்ப்பித்துவிட்டேன். ஆயினும் தங்களுக்குப் பயமாக இருந்தால் நான் இத்துடன் நிறுத்திவிடுகிறேன்" என்றான்.

என் ஆச்சரியத்தை அடக்கிக்கொண்டு அவனை ஒரே கோபத்தோடு பார்த்தேன். "அட அம்பட்டப் பதரே! உன்னைப்போன்ற ஓர் அற்பன் செய்வதைச் சூரியவம்சத்தில் தோன்றிய ஒரு க்ஷத்திரிய மன்னன் செய்யப் பயப்படுவான் என்று நினைக்க உனக்கு அவ்வளவு கொழுப்பா? எனக்கு அந்த மந்திரம் தெரியாது. இல்லாவிடில் நீ இவ்வாறு பேசியதற்கு உன் தலையை உடனே துண்டித்திருப்பேன். எங்கே! இப்பொழுதே அம்மந்திரத்தை எனக்குச் சொல்; நான் உன் கண்முன்பே அவ்வித்தையைச் செய்து காட்டுகிறேன். மீண்டும் என் பழைய உருவத்தை அடைந்தவுடன் உன்னை நையப் புடைக்காமல் விட்டால் அதனுடன் அதிருஷ்டம் என்று அறிந்துகொள். உன்னைப்போன்ற ஓர் அற்பன் பிறரிடம் தக்கபடி பேசுவதற்கும் நடப்பதற்கும் எவ்வாறு அறிவான் என்ற காரணத்தினாலேயே உன்னை மன்னிக்கிறேன்" என்றேன்.

அந்தோ! அந்தப் பாவி செய்ய இருந்த படுமோசத்தை அறியாமல் அவ்வாறு பேசினேன். அவனை அப்பொழுதே கண்டதுண்டமாய் வெட்டிக் கொன்றிருக்கலாகாதா? தான் விரித்த வலையில் என்னை விழும்படிச் செய்வதற்காக அவன் அவ்வளவு தந்திரமாய்ப் பேசினான். அது எனக்கு இப்பொழுது அல்லவா நன்கு விளங்குகின்றது? என் மொழிகளைக் கேட்டு அவன் ஏதோ பயத்தினால் நடுங்கியதாய்த் தோன்றியது. ஆனால் தன் காரியம் கைகூடிவிடும் என்றுதான் அவன் சந்தோஷித்திருப்பான் என்பது நிச்சயம்.

"மகாராஜா! கோபித்துக்கொள்ளக்கூடாது. தாங்கள் தங்கள் திவ்விய ரூபத்தை விட்டுவேறு ரூபத்தை அடையவேண்டும் என்பது இந்த அடிமையின் உத்தேசமல்ல. என்னைப்பொறுத்த மட்டில் இவ்வுருவத்தை விட்டு நான் வேறு எதை அடைந்தாலும் எனக்கு லாபமேயாகும். இம்மந்திரங்களினால்தான் அத்தகைய மாறுதல்கள் சாத்தியமாகின்றன. அவைகள் எவ்வளவோ காலத்திற்கு முன்னாலிருந்து பெரிய ரிஷிகளின் வாய்மொழியாய் நமக்கு வாய்த்திருக்கின்றன."

இவ்வாறு கூறிவிட்டு அவன் கூடுவிட்டுக் கூடு பாய்வதற்குரிய அவ்விரண்டு மந்திரங்களையும் வாய்விட்டுச் சொல்லி என்னையும் தவறில்லாமல் கற்றுக்கொள்ளும் பொருட்டு அநேக முறை ஜபிக்கும்படிச் செய்தான். பிறகு அவன் என் பக்கத்தில் வந்து மிகுந்த கலவரத்தோடு கூடிய குரலில், "மகாராஜா! ராஜ சின்னங்களுடன் கூடிய தங்கள் உடல் என்னுடையது போல் வெறும் தரையில் விழுவது அழகல்ல. ஆகையால் அது விழும்பொழுது நான் தாங்கிக் கொண்டு ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்கிறேன்" என்றான்.

ஐயோ! முழுமூடனான நான் அப்பொழுதும் அறிந்துகொள்ளவில்லை. என்னுடைய ஆவலில் அம்மந்திரத்தைத் தவிர வேறு எல்லாவற்றையும் மறந்துவிட்டேன். அந்தக் கிளியின் உடலை உற்று நோக்கிக்கொண்டு அம்மந்திரத்தை உச்சரித்தேன். அவ்வளவுதான். அடுத்த க்ஷணம் அந்தக் கிளியின் உருவத்தை அடைந்துவிட்டேன்.

அதே சமயத்தில் நான் உச்சரித்த மந்திரமே இடி முழக்கம் போன்ற குரலில் உச்சரிக்கப்படுவது என் காதுகளில் விழுந்தது. "யதோபதேசம் பூதாவேசம்." நான் வியப்புடன் நோக்கியதும் என் சரீரத்திற்குப் பதில் காமரூபனின் சரீரம் பூமியின் மீது விழுவதைக் கண்டேன். என் உடலோ உயிர்பெற்று என்முன் எழுந்து நின்றது. இன்னும் ஒன்றும் விளங்காமலே நான் அதை ஆச்சரியத்துடன் நோக்கிக் கொண்டிருந்த பொழுது அந்தப் படுபாவி காமரூபன் பழிவாங்குவது போன்ற ஆத்திரம் நிறைந்த மகிழ்ச்சி தாண்டவமாடும் குரலில் என் தேகத்தினின்றும் பேசுவதைக் கண்டேன். அவன் தன் உடலை உதைத்துத் தள்ளிவிட்டு, "மகாராஜா! நான் கோரியது நிறைவேறிவிட்டது. எனக்கு ஒன்றும் தங்கள்மீது கோபம் இல்லை. தங்கள் உடலுக்குப் பதில் என் உடலைத் தங்களுக்கு அளித்துவிடுகிறேன். அது எவ்வளவு மட்டமாக இருந்தாலும் ஒரு செத்த

கிளியின் உடலைக்காட்டிலும் நல்லதல்லவா? ஆயினும் மகாராஜாவின் இஷ்டம்'' என்ருன்.

இவ்வாறு கூறிவிட்டு அவன் என் அருகில் தன் கோர உடலைப் போட்டுவிட்டு, என் குதிரைமீது ஏறி வெகு வேகமாய்ச் சென்று விட்டான்.

11

அவன் சென்றபிறகும் அந்தக் கிளியின் உடலில் சிறைப்பட்டவனுய் இடிவிழுந்தவனைப் போல் அசைவற்று உட்கார்ந்திருந்தேன். வெகு நேரம் வரையிலும் எனக்கு ஒன்றும் தோன்ற வில்லை. அந்தத் துரோகி காமரூபனின் வஞ்சகம் எனக்கு அப்பொழுதுதான் தெளிவாய் விளங்கலாயிற்று.

"ஐயோ! இப்படிபாவியின் வலையில் என்னை அறியாமல் நன்ருய்ச் சிக்கிக்கொண்டேனே! என் பிறவி, குலம் யாவற்றையும் இழந்ததுடன் என் சொந்த உடலையும் அல்லவா இழந்துவிட்டேன்! இனி என்ன செய்வது? என்ன என் அறியாமை! அந்தப் பயலுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்முன்பே அவன் தலையைத் துண்டித்துப் பழிதீர்த்துக்கொள்ளாமற் போனேனே! அவன் விரித்த வலையில் நன்ருய் அகப்பட்டுக் கொண்டபிறகு அவ்வாறு செய்ய முடியுமா?'' என்று புலம்பினேன். சமீபத்தில் தரையில் கிடந்த அந்தக் கோர உடலை ஒரு தரம் நோக்கியதும் என் சரீரம் வெறுப்புடன் குலுங்கிற்று, மனம் பொறுக்காமல்.

'தலைவிதியே! அவன் எறிந்துவிட்டுப் போன உடல்தானு இனி எனக்குக் கதி? ஆனல் நான் வேறு என்னதான் செய்ய முடியும்? இந்தக் கிளியின் உருவத்தில் இருப்பதைக் காட்டிலும் மற்ற எதுவும் மேன்மைதான் அல்லவா? ஒருவேளை, யார் கண்டார்கள், மிகவும் அழுக்கேறிய அசுத்தமான வஸ்திரத்தை அணிந்திருப்பதுபோல, சிறிது நேரத்திற்குத்தான் இவ்வற்ப உடலில் வாசம் செய்யும்படியாக இருக்குமோ என்னவோ? அது எப்படியாயினும் அவன் உருவத்துடன் நான் அரண்மனை திரும்பிச் சென்று அவனைக் கண்டு என் உடலை என்னிடம் மீண்டும் அளித்துவிடும்படிச் செய்வேன்' என்று எண்ணினேன். இந்த எண்ணம் தோன்றவும் எனக்குத் தைரியம் பிறந்தது. அம்மந்திரத்தை ஜபித்தேன். அடுத்த நிமிஷம் பாழும் காமரூபனின் கோர உருவத்தைப் பெற்றுவிட்டேன்.

இம்மாறுதலைக் கண்டதும் எனக்கு அழுகை வந்தது. "ஐயோ! கேசவனுக இருந்தவன் இப்பொழுது காமரூபனுய்விட்டேனே. அரசனுக இருந்த நான் இவ்வீன ஜாதியிற் பிறந்த அற்ப நாவிதனுய்விட்டேன்'' என்று வருந்தினேன். திடீரென்று எனக்கு ஆத்திரம் மண்டிக்கொண்டது. எவ்வளவு விரைவில் அரண்மனை போய்ச் சேர்ந்தாலும் நல்லது என்று எண்ணி அங்கிருந்து ஒரே வேகமாய் ஓடினேன். வழியில் என்னை ஓடவேண்டாம் என்று தடுப்பதற்காக, வேண்டும் என்றே குறுக்கிட்டவைபோன்ற முட்புதர்கள் என் ஆடைகளைக் கிழித்து என் உடலிலும் ரத்தக் காயமாக்கின. மிகவும் சிரமப்பட்டு ஒருவழியாய் என் ஆட்கள் எனக்காகக் காத்திருந்த இடத்தை அடைந்து பார்த்ததும் அங்கு ஒருவரையும் காணவில்லை. மெள்ள நடந்து அரண்மனை வாயிலை அடைந்ததும் என்ன சொல்வேன்! வாயிற் காப்பவர்கள் என்னைத் தடுத்து, "அடே குரூபி! உன்னை உள்ளே விடக்கூடாதென்று மகாராஜாவின் உத்தரவு. நீ காட்டிற்குக் கூடச் சென்ருயே. அங்கு ஏதாவது தவறு செய்துவிட்டாயோ? அரசர் வெகு கோபமாயிருக்கிருர். அவர் தயவு எவ்வளவு வேகமாய்க் கிடைத்ததோ அவ்வளவு வேகமாய்ப் போய்விட்டது போல் இருக்கிறதே!'' என்ருர்கள்.

அவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் எனக்குப் புத்தி சிதறிவிட்டது. "மடையர்களே, அரசன் நான் அல்லவா? அவன் ஒரு திருடன். என் உருவத்தில் வந்திருக்கிருன்'' என்று கோபத்தோடு கத்தினேன்.

அதைக் கேட்டு அவர்கள் அனைவரும் சிரித்தார்கள். இதற்குள் என்னைச் சுற்றி ஒரு கூட்டம் கூடிவிடவே, அவர்கள் சினமுற்று அங்கிருந்து போக மறுத்த என்னை, "இவன் பிதற்றலைக் கேட்டுக்கொண்டு நாம் ஏன் நிற்கவேண்டும்? அரசர் தயவினலோ அல்லது காட்டில் வெயிலில் அலைந்ததனலோ இவன் மூளை கலங்கிப் பைத்தியம் பிடித்துவிட்டதுபோல் தோன்றுகிறது'' என்று கூறியவண்ணம் என்னை அடித்து அங்கிருந்து துரத்தினர்கள். அவர்கள் என்னைப் பிடித்துத் தள்ள, மண்ணையும் கற்களையும் என்மீது வீசி எறிந்துகொண்டு கூட்டமாய் ஜனங்கள் என்னைப் பின்தொடர்ந்தார்கள். புதிய அரசன் என்று சிலர் என்முன் கேலியாக விழுந்து நமஸ்கரித்து மரியாதை செய்யலானர்கள். ஆனல் எவ்வளவு நேரந்தான் அவர்கள் என்னை அவ்வாறு அவமதிக்க முடியும்? கடைசியில் சலிப்புற்று ஒவ்வொருவராய்த் தம் தம் காரியத்தை நோக்கி அவர்கள் சென்றதும் நான் தனியே போக்கிடமில்லாமல் தெருவிலேயே விழுந்துகிடந்தேன்.

(தொடரும்)

பொம்மைக் கொலு

'காந்தம்'

வழக்கம் போலக் கிண்ணம் நிறையப் பாலைக் குடித்தும், பூனைக்குப் பசி ஆறவில்லை. எல்லோரும் தூங்கிய பின்பு, பாதி ராத்திரியில் அது மெதுவாகச் சமையலறைக்கு நழுவியது. ஓர் எலியை யாவது பிடித்துத் தின்னலாம் என்று நினைத்தது. அதற்குத்தான் என்ன அதிருஷ்டம்! சமையற்காரன் தான் கடைசியில் குடிக்கவேண்டுமென்று வைத்திருந்த பாலை, வேலை மிகுதியால் மறந்து போய், அப்படியே மூடாமல் வைத்து விட்டுப் படுத்துத் தூங்கிவிட்டான். பூனை மிகவும் மகிழ்ச்சியோடு அந்தச் சர்க்கரை சேர்த்த பாலை ஆவலோடு நக்கி நக்கிக் குடிக்க ஆரம்பித்தது.

அப்போது சமையலறையின் கதவைத் திறந்துகொண்டு ஒருவன் உள்ளே வந்தான். மின்சார விளக்கை ஏற்றினான். பூனை அவனை வெறித்துப் பார்த்தது. பார்ப்பதற்கு அவன் சமையற்காரனைப் போலவே இருந்தான். அவன் மெதுவாக நகர்ந்து, அந்த அறையிலிருந்த வெள்ளிப் பாத்திரங்களை எல்லாம் தன் அங்கவஸ்திரத்தில் மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு, விளக்கை அணைத்தான். புழைக்கடை வழியாக வெளியே நடந்தான்.

அவன் வெளியே போவதைக் கண்டு, பூனைக்குச் சந்தேகம் உண்டாயிற்று. செட்டியார் வீட்டுக் குச்சுநாய் கூடத்தில் உறங்கிக்கொண்டிருந்தது. அதற்கும் பூனைக்கும் எப்பொழுதும் சண்டைதான். இருந்தாலும் செட்டியாரின் சொத்தைக் காப்பதற்காக அந்த விரோதத்தை மறந்துவிட வேண்டும் என்று பூனை தீர்மானித்தது. மெல்லச் சென்று நாயை எழுப்பியது. அது உடனே 'ளொள்' என்று குரைத்து, அதன் மேலே பாய்ந்தது.

மாடியில் படுத்திருந்த செட்டியார், நாய் எதனாலோ தூக்கத்தில் விழித்துக்கொண்டதாக நினைத்து, இந்தப் புறத்திலிருந்து அந்தப் புறமாகப் புரண்டார்.

பூனை, "ஒரு முக்கியமான ரகசியம்! இங்கே பேசினால் எஜமான் எழுந்து வருவார்" என்று சொல்லி, நாயை வீட்டின் பின் பக்கமாக அழைத்துப்போய் நடந்த விஷயத்தைக் கூறியது.

காவற்காரன் வாசல் திண்ணையில் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். அவனை எழுப்புவதென்றால், அதற்குள்ளே திருடன் ஓடிவிடுவானே! ஆகவே, தாமே திருடனைப் பிடித்துவிடுவதென்று நாயும் பூனையும் தீர்மானித்தன.

நாய் பூனையைப் புகழ்ந்து, அதன் தோளில் கைபோட்டுக்கொண்டே சந்தடி செய்யாமல், திருடன் பின்னாலேயே சென்றது. அடர்ந்த காட்டின் நடுவே அவை போய்க்கொண்டிருந்தன. முழு நிலா வீசிக்கொண்டிருந்தது. ஒரு புறம் நீரோடை சலசலவென்று ஓடிக்கொண்டிருந்தது.

சற்று நேரத்துக்கெல்லாம் காட்டின் நடுவில் சென்றதும், திருடன் ஒரு குகைக்குள்ளே புகுந்து, மேலே பாறையை மூடிவிட்டான். நாய்க்கும் பூனைக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை.

வெகு தூரத்தில் குதிரைக் குளம்புகளின் ஓசை கேட்டது. அரசனும் மந்திரியும் புலியையும் சிங்கத்தையும் மான்களையும் வேட்டையாடித் திரும்பி வருவதை அவை நிலா வெளிச்சத்தில் தூரத்திலிருந்தே பார்த்தன. நாய் வேகமாக மந்திரியின் அருகில் ஓடிப்போய், பலமாகக் குரைத்தது. அந்தக் குச்சுநாயை எங்கோ பார்த்த ஞாபகம் மந்திரிக்கு வந்தது. அவர் அதன் பின்னாலேயே சென்றார். குகையின் வாசலுக்கு வந்ததும் நாய் நின்றது. அது அந்தக் குகையைச் சுற்றிச் சுற்றி வந்தது. பூனையும் குகையைப் பார்த்துக் கத்தியது. மந்திரி தம் படைகளை விட்டு அந்தக் குகையைச் சோதனையிட்டார். கள்ளனும் அவன் கொள்ளையிட்ட பல பொருள்களும் கிடைத்தன.

செட்டியார், ஊரை உழக்காக அளந்து கொள்ளை லாபம் சம்பாதிப்பவர். அவர் வீட்டில் திருட்டு நடந்திருப்பதை மறுநாள் காலையில் கண்டுபிடித்தார்கள். போலீசில் பிராது கொடுத்தார்கள். செட்டியார் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டார். "ஐயோ! இவ்வளவு சொத்தும் கொள்ளை போய்விட்டதே!" என்று புலம்பினர்.

மந்திரி திருடனைப் பிடித்த விஷயம் பின்னால் ஊர் முழுவதும் பரவியது. விசாரணை நடந்தது. திருடனுக்கு ஐந்து வருஷம் கடுங்காவல் தண்டனை கிடைத்தது.

செட்டியார் மந்திரிக்கு ஏற்கனவே தெரிந்தவர். ஆகையால், போலீசார் அவ



ருடைய சொத்தைக் கண்டுபிடித்து அவரிடமே ஒப்பித்தார்கள். நாயும் பூனையும் செய்துள்ள உதவியைப்பற்றியும் கூறினர்கள். செட்டியார் அவைகளைத் தட்டிக் கொடுத்து, அவற்றின் கழுத்தில் தங்கச் சங்கிலிகள் கட்டி மகிழ்ந்தார். இனி அநியாயமாக வியாபாரம் செய்வதில்லை என்றும் நிச்சயம் செய்தார்.

தன் காரியம் முடிந்து, திருடன் அகப்பட்டுக்கொள்ளவே, நாய்க்கு மிகவும் சந்தோஷம் உண்டாயிற்று. அது மறுபடியும் பூனைமேல் பொருமை கொண்டது. செட்டியார் பூனையைப் புகழ்வது அதற்குப் பிடிக்கவில்லை. அது பூனையோடு தாராளமாக விளையாடுவது போலப் பாசாங்கு செய்தது. ஒரு நாள் திடீரென்று அதன் கழுத்தின்மேல் தாவி அதைக் கவ்விப் பிடித்தது. 'மியாவ், மியாவ்' என்று பூனை அலறியது.



இந்தக் கனவைக் கண்ட ஸவிதா விழித்துக்கொண்டு, "ஐயோ! அந்த நாய் பூனையைக் கொன்றுவிடுமே" என்று முணுமுணுத்தாள். பக்கத்தில் படுத்திருந்த அவள் தாய், "என்னடீ ஸவிதா, தூக்கத்தில் பயந்து கொண்டு இப்படி அலறுகிருயே?" என்று கேட்டவண்ணம் விளக்கை ஏற்றினுள். அப்போது கொலுவறையில் 'மியாவ், மியாவ்' என்று பூனை கத்தியது.

ஸவிதா நேரே கொலுவறைக்குப் போனுள். அவளுடைய தாயும் பின்னுலேயே சென்ருள். அவர்களைக் கண்டதும் பூனை ஓடிவிட்டது. இல்லாவிட்டால் அது எல்லாப் பொம்மைகளையும் உருட்டித் தள்ளியிருக்கும். ஸவிதா பார்த்தாள்: அரசனும் மந்திரியும், சிங்கமும் புலியும் மானும், குச்சு நாயும் பூனையும், காவற்காரனும் தொப்பைச் செட்டியும் - எல்லாப் பொம்மைகளும் அவள் வைத்த இடத்திலேயே அசையாமல் இருந்தன. ஒரு கையில் துடுப்பும் கரண்டியும் இன்னெரு கையில் பொடி டப்பியுமாக, புன்முறுவல் பூத்தபடியே சமையற்காரனும் அவைகளின் நடுவில் நின்றுகொண்டிருந்தான்.

'சுவற்றில்'

"சொவுத்துக் கீரையை வழிச்சுப் போடடி சொரணை கெட்ட வெள்ளாட்டி - என்றுதானே சொல்கிருர்கள்? அதனுல் 'சுவற்றில்' என்று எழுதினேன்."

"சுவற்றில் என்று சொல்லவில்லையே! சொவுத்தில் என்றுதானே சொல்கிருர்கள். போட்டால் அதை அப்படியே அல்லவா போடவேணும்?"

"அதைத் திருத்திப் போட்டேன். வச்சிருக்கு என்ருல், வைத்திருக்கிறது என்று மாற்றவில்லையா? அது மாதிரி அதைத் திருத்திச் சுவற்றில் என்று எழுதினேன்."

"அப்படி வாருங்கள் வழிக்கு; சுவத்தில் என்பதன் திருத்தமான உருவம் உங்களுக்கு வேண்டியிருந்தது. சுவற்றில் என்று ஊகித்தீர்கள். அதை எழுதினீர்கள். இன்னும் சிறிது ஆராய்ந்திருந்தால் சுவரில் என்றே எழுதியிருக்கலாம். சுவர் உயரமாக இருக்கிறது என்றுதானே சொல்கிருேம்? சுவர் என்பதுதான் சரியான உருவம். சுவத்தில் என்பதைச் சுவற்றில் என்று மாற்றும் வரையில் செல்லும் முயற்சியைச் சுவரில் என்னும் திருத்தமான வார்த்தை வரையில் செலுத்துவது நல்லதுதானே?"

கலைமகள்
ஸ்தாபிதம் — 1932.

காலேஜ் பெண்

'சீதா'

[வீட்டில்]

அம்மா: காலேஜ் பெண்தானே! அதை என் கேட்கிறீர்கள்? எங்கள் வீட்டிலேயும் ஒண்ணு இருக்குது. அடடா, அது படுத்தகிற அமர்க்களம்! விடிஞ்சு மணி எட்டாயிடுத்து. இன்னும் படுக்கையை விட்டு எழுந்திருந்த பாட்டைக் காணோம் திருப்பள்ளியெழுச்சி நாமாவளி ஆரம்பிக்க வேண்டியதுதான். (உரக்க) பேபி, பேபி! அம்மா பேபி!

தேவகி: (விழித்துக்கொண்டாள். என்றாலும் எழுந்திருக்கவில்லை.)—(மனத்திற்குள்) இந்த அம்மாக்களே இப்படித்தான். பேபியாம் பேபி! நான் ரெண்டு வயசுக் குழந்தையா என்ன? தேவகின்னு அழகாக் கூப்பிடட்டுமே.

அம்மா: பேபி, எழுந்திருந்து வாடியம்மா.

தே: (மனத்திற்குள்) அப்பப்பா! ராத்திரி பூரா குளிர் கொல்றது. விடிஞ்சப்பறந்தான் நன்னாத் தூக்கம் வருது. இந்த நேரத்திலே எழுப்பிக் கஷ்டப்படுத்தறது. குரல் குடுக்காம பேசாம படுத்திருப்போமே.

அப்பா: ஏண்டி, பேபியை ஏன் இப்போ தொந்தரவு பண்றே? இன்னும் சித்தே தூங்கட்டுமே.

அம்மா: நன்னாருக்கு நீங்க குடுக்கற செல்லம். பொண்ணா லக்ஷணமா, காலங் காத்தாலே எழுந்திருக்க வேண்டாமோ?

அப்பா: எல்லாம் அவ குடித்தனம் வச்சப்புறம் கோழி கூவும்போது எழுந்திருப்பா. இப்ப என்ன அவசரம் வந்துடுத்து? நீ படிக்கும் போது பகல் பன்னிரண்டு வரைக்கும் தூங்குவியாமே! மறந்து போச்சோ?

அம்மா: நான் ஒண்ணும் அப்படித் தூங்கு மூஞ்சியா இருக்கலை. தூக்கத்துக்கு அப்பாவை அப்படியே கொண்டிருக்கு பொண்ணும்.

அப்பா: போடி, போயி காரியத்தைப் பாரு. குழந்தை ராத்திரி பன்னிரண்டு மணி ஒரு மணி வரை படிச்சுட்டுத் தூங்கியிருக்கா. அவளைத் தொந்தரவு பண்ணாதே. காலேஜ் படிப்புன்னா லேசா?

அம்மா: கொஞ்சம் கனந்தான். எப்ப வேணும்னாலும் எழுந்திருக்கட்டும்.

தே: (மனத்திற்குள்) ஒரு மணி வரைக்கும் எங்கே படிச்சேன்? புஸ்தகத்தைத் திறந்தவுடனேதான் கண் தானா மூடிடறதே. அச்செழுத்துக்கும் இந்தக் கண் இமைக்கும் ஏதோ சம்பந்தம் இருக்குதுபோலத் தெரியுது. நல்ல வேளை. அப்பா என் துணைக்கு வந்தார். இன்னும் அரைமணி நேரம் தூங்கலாம். இல்லை. தூங்கறதுபோலப் பாசாங்கு செய்யலாம். 8½ மணிக்கு எழுந்தாப் போறது. காலேஜ் 10½-க்குத்தானே?

அம்மா: என்னா, நம்ம பேபி ராப்பகலாப் படிச்சு உடம்பு இளைச்சுண்டு வராளே. டாக்டர் கிட்ட காமிச்சு ஏதாவது டானிக் வாங்கிக் குடுக்கிறதுதானே?

அப்பா: அதெல்லாம் நான் கவனிக்காம இருக்கேன்னு நினைச்சுண்டியா? போன வாரம் பேபியை டாக்டரண்டை அழைச்சுண்டு போயிருந்தேன்லே? 87 ராத்தல்தான் இருக்கா அவ. அடுத்த மாசத்திலே ஏதாவது நெறையிலே குறைஞ்சிருந்தா மருந்து கொடுக்கறதாச் சொல்லியிருக்கார் டாக்டர்.

அம்மா: இந்தக் காலத்துப் பொண்ணுக எங்கே சாப்புடறதுகள்? ஏவி கொறிக்கிறாப்லெ சாதத்தை ரெண்டொண்ணை வாயிலே போட்டுட்டுப் புஸ்தகமும் கையுமா பறந்துவிடறதுகள்! சாப்பிட்டாலல்லே உடம்பு தேறும்?

தே: (மனத்திற்குள்) என் உடம்பைப்பத்தி எவ்வளவு கவலை எடுத்துக்கிறா பாத்துக்கோங்கோ. எனக்கு ஒண்ணும் உடம்பும் இளைச்சு வரலெ. எடையிலேயும் குறையலே. பெண்களுக்கு உடம்பு மெல்லிசாத்தானே இருக்கணும்? பேகன்கூட ஓர் இடத்திலே சொல்லியிருக்காரே.

அம்மா: போன மாசம் கண்ணாடி வேறே போட்டாச்சு.

அப்பா: என், நீயும் வேணும்னா ஒண்ணு போட்டுக்கோயேன். உப்புக்குப் பதிலா சர்க்கரையைச் சாதத்திலே போடாம இருக்கலாமோன்னோ?

அம்மா: அப்படி ஒண்ணும் தட்டுக் கெட்டுப் போயிருக்கலை. நீங்களும் உங்க பொண்ணும் கண்ணாடி மாட்டிண்டு முழிச்சாப் போதும்.

தே: (மனத்திற்குள்) கண்ணாடி போட்டது கண்ணுக்குன்னு அம்மா நெனைச்சுண்டிருக்கா. நான் அழகுக்காகன்னா போட்டிருக்கேன்! கண்ணாடி போட்டிருந்தா இன்னொரு சௌகரியமும் இருக்கு. காலேஜிலே கொட்டுக் கொட்டுன்னு நம்ம கண்ணைப் பாக்க வர்ற ஆண் ஜனங்கள் கண்ணாடியைப் பாத்துட்டுப் போயிடுவானுக. நாம் எழுந்திருக்க வேண்டியதுதான். நேரமாயிடுத்து.

அப்பா: அதோ, பேபி சத்தம் மாடியிலே கேக்குதே. எழுந்திருச்சுண்டாப் போல் இருக்கு.

அம்மா: பேபி, பேபி!

தே: இதோ வந்துட்டேம்மா. Coming (வந்துகொண்டிருக்கிறேன்.) (மனத்திற்குள்) காபின்னா எனக்கு உசிர். காப்பியாலேதான் நம்ம உசிர் நிலைச்சிருக்கு. நன்னா நினைச்சுப் பார்த்தா காப்பிக்காகத்தான் இந்த ஜன்மமே எடுத்தோம்னு கூடச் சந்தேகம் வந்துடுது. (உரக்க) அம்மா, காபி குடம்மா.

அம்மா: பல்லைத் தேச்சு முகத்தை அலம்பிண்டு வாடி.

தே: இல்லைம்மா. இப்பத்தான் வேணும்.

அப்பா: பேபிக்கு பெட் காபி கொடுக்க வேண்டாமோ?

அம்மா: நல்ல பெட் காபி வந்துது! நீங்கள்தான் பெட்காபி, பெட்காபின்னு அசத்தா இருக்கேள். அதைப் பொண்ணுக்கும் பழக்கி வச்சிட்டேளான்னோ? போடி தடிப் பெண்ணே! அந்தக் கெட்டில்லே டிகாக்ஷன் வச்சிருக்கேன். குமுட்டி அடுப்பிலே பால் காயுது. போயி கலந்துக்கோ.

தே: அப்பாடா. காபி குடிச்சவுடனே கொஞ்சம் மயக்கம் வரத்தான் செய்யுது. இந்தச் சோம்பேறி நாக்காலி எங்கே போச்சுது?

காபிக்கு அடுத்தபடியா ஈஸிசேரிலே படுத்து எழுந்திருக்காத போனா எனக்கு எப்படியோ இருக்கும்.

(சற்று நேரம் கழித்து)

அப்பா: பேபி, எம்மா, காலேஜுக்கு நேரமாகலே?

தே: சரிப்பா.

அம்மா: பேபி, போய்க் குளிச்சுட்டுச் சுருக்க வா. பலகாரம் ஆறிப் போயிடும்.

தே: இண்ணைக்கு என்ன அம்மா பலகாரம்?

அம்மா: ஏன்? இட்லிதான்.

தே: என்னம்மா, தினந்தோறும் இட்லி தானா? அது யாருக்கு வேணும்?

அம்மா: ஏண்டியம்மா, நேத்தைக்குத் தோசை; முந்தாநாள்,—

அப்பா: அவளுக்குப் பிரியம் இல்லேன்னா ஹோட்டல்லே போயி ரெண்டு ரவா தோசை வாங்கிண்டு வந்து குடுக்கச் சொல்லேன்?

தே: (மனத்திற்குள்) பெண்களை அம்மாதான் உசிராக வச்சிருப்பான்னு சொல்றா. எங்க வீட்டிலே எனக்கு அப்பாதான் பிடிச்சிருக்கு. அப்பா என்னைக் கோபிக்கறதே இல்லே.

அம்மா: ஈஸிசேரிலே படுத்துப் படுத்து முதுகு கேள்விக் குறி மாதிரி ஆயிடுத்து. அதுலே போயி படுக்காதபடி, கூடமாட ஒத்தாசையா வீட்டுக் காரியங்களைப் பாத்தால்ல உடம்புக்கு நல்லது?

அப்பா: அவ எதுக்கடி வீட்டு வேலை செய்யணும்? வேலைக்காரி பத்தாதா?

தே: எனக்குப் போது இல்லேம்மா! இல்லாதுபோனா செய்யமாட்டேனா? நேத்துக்கூட காலேஜிலே Debating Society (விவாத சபை)லே இதைப்பத்திப் பேசினேனே?

ரேணுகா: ஹலோ தேவகி! குட் மார்னிங். நேத்தைக்குப் பேசினதைப் பத்தித்தானே சொல்றே?

தே: குட் மார்னிங் ரேணு.

அம்மா: ரேணுகாவா? வாடியம்மா. இந்தா பேபி, ரேணுகாவைப் பாரு. குளிச்சுட்டுத் தலை வாரிப் பின்னி நெத்திக்கு இட்டுண்டு காலேஜுக்கு ரெடியா வந்துட்டா. நீ என்னடான்னா இன்னும் பல்லே விளக்கல்லே.

தே: ரேணு, அம்மாகிட்ட சொல்லு, நான் பேசினதை.

ரே: கேளுங்க அம்மாமி. "ஆண்களை அமரர்களாக்குபவள் பெண். சாதல் மூப்புக் கெடுக்கும் அமிருதம் பெண். துன்பம் நீக்கும் சுதந்தரப் பேரிகை பெண். மானிட ஜாதி செய்த தவப்பயன் பெண். அவள் மலர்த் திருவாயின் மொழிந்த சொல் நாரதர் கானம்; கண்ணன் வேய்ங்குழலின்பம். வேதமே பொன்னுருவாக வந்தவள் பெண். தொண்டு செய்து அடிமைச் சுருளைத் தீயிலிட்டுப் பொசுக்க வந்தவள் பெண். நேர்மையை நிலைநிறுத்த வந்தவள் பெண். பொன்மலர் மென் சிறுவாயில் அன்பு கூற அவதரித்தவள் பெண். அன்பு கனிந்த கனிவே பெண். சோம்பர் கெடுக்கும் துணிவே பெண்." இப்படிப் பேசினா, அம்மாமி.

அம்மா: நல்லாத்தான் பேசியிருக்கா. ஆனா எங்க பேபிக்குச் சாதம் வடிக்கறதுக்குக்கூட இன்னும் தெரியாதே?

தே: சாதம் வடிக்க எதுக்குத் தெரியணும்? அது தெரியணும்னா காலேஜுக்குப் படிக்கப் போவானேன்? ரேணு, சித்தே இரு. Five minutes (அஞ்சு நிமிஷத்திலே) குளிச்சிட்டு ரெடியா வந்துடறேன். மணி எத்தனை?

ரே: Nine-Thirty. (ஒன்பதரை.)

தே: Still ample time. (இன்னும் நாழி கெடக்கு) இதோ வந்துட்டேன். இந்த வீட்டிலே இதுதான் தொல்லை. சோப்பைக் காணோம், டவலைக் காணோம், டூத் பேஸ்டைக் காணோம், பிரஷைக் காணோம். அம்மா, அம்மா! சோப்பு எங்கேம்மா? அடடா, இப்பத்தான் ஞாபகம் வருது. நேத்தைக்குக் குளிச்சுட்டு அப்படியே பாத் ரூம்லேயே வீசிட்டேன் போலிருக்கு. டவல். டவல் மாடிலே இருக்கும்னு நினைக்கறேன். பேஸ்ட், பிரஷ் இதையெல்லாம் எடுத்தண்டு போகு முன்னாலே மணி பத்தை நெருங்கிட்டுதே.

அம்மா: தலையை நன்னா உலர்த்தடி. நன்னா இருக்கு. அதுக்குள்ளே எண்ணெய் தேச்சுட்

டியா? பின்னே என் தலைவலி வராது? ஜல தோஷம் வராது?

தே: எனக்கு ஒண்ணும் வராதம்மா. காலே ஜுக்கு நேரமாயிட்டுதே.

அம்மா: நேரமாகும்னு தெரியுமே; என் சீக்கிரம் எழுந்திருக்கக்கூடாது?

தே: (மனத்திற்குள்) இந்தக் கேள்வி யெல் லாம் அம்மாவை யார் கேட்கச் சொன்னு? பி.எ. கேள்விகளுக்குக்கூட answer (விடை) பண்ணி டலாம். அம்மா கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியலே. இன்னும் என்னைச் சின்னப் பொண்ணு மாதிரி நடத்தறது கட்டோடே பிடிக்கலே. அப்பாதான் நல்ல அப்பா.

ரே: தேவகி, நேரமாயிட்டுதேடி. சீக்கிரம் புறப்படு.

தே: ரேணு, நேத்தைக்கு எந்த saree (சேலை) கட்டிண்டு வந்தேண்டி? வாயிலா, ஜார்ஜெட்டா?

ரே: Printed voil (அச்சிட்ட வாயில்) தானே கட்டியிருந்தே?

தே: ஆமடி, இப்பதான் ஞாபகம் வருது. இதோ பாருடி. இந்த லேட் புளூ வில்க்கை இண்ணைக்குக் கட்டிண்டு வரப்போறேன். டேடே, மறந்தே போயிடுத்து! இதக்கு மாட்சு பண்றாப்ல Blouse (ரவிக்கை) இல்லேடி. போன மாதம் டோபி அதைத் தொலைச்சுட்டான்.

ரே: தேவகி, இந்த ஜார்ஜெட்டைக் கட் டிண்டு வாயேன்.

தே: ஆமாம்; அதுதான் சரி. ரேணு, அதோ மேஜையிலே இருக்கு பாரு பெட்டி. அதுலே இந்த ஸாரிக்கு மாட்சு பண்றாப்பல உள்ள வளையல்கள்லே நாலு ஜதை எடேன்.

ரேணு: உன்னோட நிறத்துக்கும் கட்டிண்டு இருக்கிற Yellow saree (மஞ்சள் சேலை)க்கும் நன்னு இருக்குடீ. அம்மா, அம்மா! கொஞ்சம் கனகாம்பரம் வேணும்; நீலக் கனகாம்பரம். ரேணு, முகத்திலே பவுடர் conspicuous (வெளிப்படை) ஆ இல்லியே?

ரே: இல்லேடி, சரியாத்தான் இருக்கு.

தே: இந்த நேரத்திலே பாத்து ஸ்லிப்பரைக் காணோம். சாமானுக வச்ச இடத்திலே இருக்க வேண்டாமோ? அம்மா, என் ஸ்லிப்பரைக் காணுமே?

அம்மா: (தூரத்திலிருந்து) எங்கடி போகும்? நேற்ம அதை வச்சு வராந்தாவிலே ஒரு ஆணி அடிச்சுண்டிருந்தியே?

தே: அம்மா, புரூச் எங்கேம்மா?—இங்கே இருக்குது. இங்கே இருக்குதம்மா.

அம்மா: என்னடி அம்மா, நீ காலேஜ் போற துக்குள்ளே வீடே திமிலோகப்பட்டுடும்போல் இருக்கே.

அப்பா: பேபி, ரேணுகாவை அழைச்சுண்டு சீக்கிரம் வா. பஸ்ஸுக்கு நேரமாயிடுத்து.

அம்மா: அவ புடவை ஸெலக்ட் பண்றதுக் குள்ளே பஸ் போயிடுமே!

தே: பாரு, ரேணு! நாம் என்ன அப்படியா நேரங் கடத்தறோம்? காலேஜுக்குப் போறோம். நாலு புரொபஸர் வாரா. பையனுக மோட்டான்மாதிரியா முழிப்பானுக. நாம நன்னு டிரஸ் பண்ணிக்க வேண்டாமோ? நாம நன்னருந்தா அம்மாவுக்கும் அப்பாவுக் குந்தானே நல்லது?

அம்மா: அடி அம்மா ரேணுகா. பேபியை இழுத்துண்டு வாடி கீழே. அதோ பஸ் வந் துடுத்து.

தே: பஸ்ஸு போனுப் போகட்டும், ரேணுகா. ஸைகிள் இருக்கவே இருக்குது. உன்னைப் பின்னுலே காரியர்லே வச்சு நான் விட்டுண்டு போகமுடியாதா என்ன?

ரே: வா, வா. போவோம். எல்லாம் முடிஞ் சுதில்லே?

தே: புஸ்தகம் எடுக்கலேடி.

ரே: ஷேக்ஸ்பியரும், Lamb's essays (லாம்ப் எழுதிய கட்டுரைகள்) மட்டும் எடுத் துக்கோ, போதும்.

தே: Trignometry (திரிகோணமிதி)?

ரே: இண்ணைக்கு Saturday order (சனிக் கிழமை முறை) டி.

தே: சரி, கிளம்பு. இன்னும் டிலே பண்ணு அம்மா கோவிச்சுக்குவா.

ரே: கண்ணாடியை மறந்துட்டியே. எடுத் துண்டு வா.

அம்மா: அப்பாடி. ஒரு வழியாக் காலேஜுக் குப் போயாச்சு.

அப்பா: இப்போ போகணும் போகணும்னு தடபுடல் பண்றே. சாயங்காலம் பேபி காலேஜி லிருந்து எப்போ வருவான்னு வாசலுக்குப் பத்துத் தடவை அலைஞ்சுவியே.

[காலேஜில்]

தே: ரேணு, ஏண்டி நமக்கு இப்படித் தனியா வீட் (ஆசனம்) கொடுத்திருக்கா?

ரே: நமக்கு இல்லேடி. ஆண்களுக்குத்தான் தனி வீட். பாரு, அவங்களைத்தான் ஒதுக்கி வச்சிருக்கு.

தே: போடி பே. இந்தப் புரொபஸர்களும் சரி, லெக்சரர்களும் சரி. பையன்களைப் பாத் துத்தானே பேசறா. நம்ம பக்கம் திரும்பவே மாட்டேங்கறாளே. சுத்தக் கோழைகள்; அசடு கள்.

ரே: பாருடி தேவகி, அதோ ராதா கிருஷ்ணன் முழிக்கிற முழியைப் பாரு. உன் தலையிலே இருக்கிற கனகாம்பரத்தையே பாக்கறான்.

தே: பாத்துட்டுப் போகட்டும்டி. அதுலே வாசனைகூடக் கிடையாதே. வேணும்னு கேட்டான்னு இரண்டு பூ கொடுத்துடறேன். ஏன் இப்படி முழிக்கணும்? போடாப்பா, கண்ணு. நீ இந்த வருஷம் பாஸ் பண்ணினுப்பலதான். [சிரிக்கிருள்.]

ரே: (சிரித்து) ஆனு சப் ஜட்ஜ் மகன் சுந்தரத்தைப் பாரு. தேமேன்னு டெஸ்க்கிலே தூங்கருன்.

தே: அப்பா சம்பாதிக்கிறதைக் காலி பண்ணவேண்டாமா?

ரே: அதுக்கில்லேடி. தூக்கத்தைப்பத்தி நாளைக்கு Debating Society (விவாத சபை)லே பேசப்போருனும். அதுக்காகத் தூங்கருன். (சிரிப்பு.)

தே: ரேணு, பேசாதே. எல்லோரும் நம்மையே பாக்கரு. புரொபஸர்கூட நம்மைப் பார்க்காததுபோலக் கடைக்கண்ணுலே பாக்கிருர் பாரு.

ரே: அவர் கண்ணுடி பிரேம்லே இடி விழ! அப்பாடி! க்ளாஸ் (வகுப்பு) முடிஞ்சுட்டுதேடி. போவோம் வா.

தே: இந்தப் பரம சாதுக்கள்ளாம் முன்னுலே போகட்டும்டி. அன்னநடைங்கறது பெண்ணுக்குத்தான் உண்டுன்னு சொல்ரு. ஆனு, காலேஜ் முடியறப்போ பெண்களைப் பார்க்கணும்னு இந்தப் பிள்ளைக அன்ன நடை நடந்து போறதை யாரும் கவனிக்கலே போல் இருக்கு.

ரே: வாயேன், நாமும் மெதுவாப் போவோம்.

தே: ரேணு, மறந்தே போச்சுதடி. லைப்ரரிலே புஸ்தகம் எடுக்கணும்.

ரே: இந்த நேரம் ஒரே தேனீக் கூட்டமா இருக்குமே!

தே: அந்தத் தேனீ எல்லாம் workers (தொழிலாளிகள்) தானே. ராணிஈ போயிட்டு தன்னு அதெல்லாம் வழி விட்டுடும். நீ வாடியம்மா. பெண்களுக்கு எவ்வளவு சக்தி இருக்குதுங்கறதைக் காமிக்றேன், பாரு.

[லைப்ரரியில்]

ஒரு மாணவன்: ஸார் லைப்ரேரியன், Boswell's Johnson (பாஸ்வெல் எழுதிய ஜான்ஸன் சரித்திரம்) கொடுங்கோ. அரை மணி நேரமாச்சுதே ஸார் நான் வந்து. தினசரி இப்படித் தவம் செய்ய வேண்டியிருக்கு.

இன்னொரு மாணவன்: லைப்ரேரியன் ஸார், Birkenhead Famous Trials (பர்க்கென்ஹெட்: பிரசித்த விசாரணைகள்) வேணும். சீக்கிரம் கொடுங்கோ. Train (ரெயில்) ஐப் பிடிக்கணும்.

ஒ. மா: லைப்ராரிலே இருக்கறவா கொஞ்சம் சுறுசுறுப்பா இருந்தால்ல நல்லது?

லைப்: பொறுங்க ஸார். ஒவ்வொண்ணு எடுத்துத்தானே ஆகணும்? உங்களுக்கு என்ன ஸார், Gibbon's Roman Empire (கிப்பன்: ரோம சாம்ராஜ்யம்) ஆ? மிஸ்டர் ஜயராமன், உங்களுக்கு? உங்க சீட்டு எங்கே? ஓ, இங்கே இருக்கு!

ஒ. மா: Roman Empire (ரோம சாம்ராஜ்யம்) என்ன ஸார் அவசரம்? ஜான்ஸனைக் குடுங்க.

இ. மா: நான் சொன்ன புஸ்தகத்தை மறந்துட்டயள்போல் இருக்கே.

(தேவகியும் ரேணுகாவும் வருகிருர்கள்.)

லைப்: ஒண்ணும் மறக்கலே ஸார். இதோ வந்துட்டேன். ஓ! மிஸ் தேவகியா, உங்களுக்கு என்ன வேணும், மிஸ் தேவகி? மிஸ் ரேணுகா, உங்களுக்கு?

ஒ. மா: (மெதுவாக) பாருடா, நம்மைக் கவனிக்காமல் அங்கே தாவிட்டான்.

இ. மா. உலகம்ப்பா, உலகம்!

தே: மிஸ்டர் லைப்ரேரியன், எனக்கு Carlyle Sartor Resartus. (கார்லைல்: ஸார்ட்டர் ரிஸார்டஸ்) ரேணுகாவுக்கு Hazlitt's Table Talk. (ஹாஸ்லிட்: ஒழிவு நேரப் பேச்சு.)

லைப்: Thanks. (நன்றி.) வந்துட்டேன். (சற்றுக் கழித்து) இந்தாங்க, மிஸ் தேவகி. இது உங்களுக்கு. இது ரேணுகா. Excuse me (மன்னியுங்கள்.) மிஸ் ரேணுகாவுக்கு.

தே: Thank you. (நன்றி.) ரேணு, வாடி போகலாம்.

ஒ. மா: என்ன ஸார், லைப்ரேரியன், நாங்கள்ளாம் உங்களுக்கு மனுஷ ஜன்மமாப் படலே போல் இருக்கே. ஜான்ஸனே வந்திருந்தாக்கூட வெளியிலே நிப்பாட்டியிருப்பியளோ?

இ. மா: நம்ம மானம் போச்சு. (பாட்டு) மானமெல்லாம் போனபின்பு வாழ்வதொரு வாழ்வாமோ?

ஒ. மா: பிரின்ஸிபால் கிட்டச் சொல்ல வேண்டியதுதான்.

லைப்: என்ன மிஸ்டர், அதுக்குள்ளே கோவிச்சிக்கிட்டா என்ன பண்றது? இதோ உங்களுக்குத் தந்துடறேன்.

ஒ. மா: அதுக்குள்ளே யாராவது ஒரு மிஸ் சாரதாவோ, இல்லே ஒரு ஜானகி, ஒரு பரிமளாவோ வந்தா எங்க பாடு மறுபடியும் ஆபத்துத்தான்.

[இரவு-வீட்டில்]

அப்பா: சினிமாவுக்குப் போய்ட்டு வந்துபேபி படுத்துண்டாளா?

அம்மா: இல்லை போலிருக்கே. அவ ரூம்லே விளக்குத் தெரியுதே. (உரக்க) பேபி, போதும்டியம்மா படிச்சது. இப்படிக் கண் முழிச்சுப் படிச்சா உடம்பு என்னத்துக்கு ஆகும்? அழகைக் கெடுத்துண்டு என்ன படிப்பு வேண்டியிருக்கு?

தே: (மெதுவாக) கல்வி ஓர் ஆபரணம்னு யாரோ சொன்னது ஞாபகமிருக்கு. அம்மா என்னடான்னு இப்படிச் சொல்றளே.

அம்மா: பேபி, பேபி!

தே: இன்னும் ஒரு பத்துப் பக்கம் இருக்குது அம்மா. அதை முடிச்சுட்டுத் தூங்கிடறேன். பரீட்சைக்குப் படிக்க வேண்டாமோ?

அம்மா: பரீட்சை பரீட்சைன்னுதான் கண்ணைக் கெடுத்துண்டியே. அது போதாதா? என்னு, உங்களைத்தானே; குழந்தையைப் படுக்கச் சொல்லுங்கோ. மணி ஒண்ணுகப் போறது.

அப்பா: பேபி, போதும்மா. புஸ்தகத்தை மூடிட்டு லைட்டை அணைச்சுட்டுப் படுத்துக்கோ. நாழி ஆயிட்டுதே பாரு. இப்படி ஒரே மூச்சிலே படிச்சா மனசிலே ஒண்ணும் ஞாபகம் இருக்காது.

தே: சரிப்பா. (மனத்திற்குள்) ஞாபகம் எதுக்கு வேணும்? துப்பறியும் நாவல்னு படிச்சுண்டிருக்கேன். காலேஜ் பாடம் காலேஜோடே சரி. வீட்டிலேயும் படிக்கிருங்களா? எட்கர் வாலெஸ், கானன் டாயில், போ நாவல்களுக்குப் பஞ்சம் வந்தப்பறம்லே காலேஜ் பாடம் வீட்டிலே படிக்கணும்?

[பரீக்ஷை முடிவு தெரிந்த அன்று வீட்டில்]

அம்மா: ஏண்டி? பேபி, என் இப்படிக் கண்ணைக் கசக்கிண்டு நிக்கறே?

தே: ஒண்ணுமில்லேம்மா. பரீட்சையிலே -

அம்மா: பெயில் ஆயிட்டதோ? அதுக்கென்னடி! இதுக்கா இப்படி அசடுபோல அழறது? எழுந்திருந்து முகத்தை அலம்பிண்டு காபி சாப்பிட வா.

தே: வர்றேன். (மனத்திற்குள்) அப்பா எனக்குச் செல்லம் குடுத்து வளர்த்தார். அவர் கஷ்டப்பட்டு எனக்குக் கஷ்டமே தெரியாம படிக்கவச்சார். புடவைக்குப் புடவை, ஜாக்கட்டுக்கு ஜாக்கட், சம்பளம்னும் புஸ்தகம்னும் பச்சை நோட்டாக் கொண்டு கொட்டினேன். இதுக்கு நான் செய்த கைம்மாறு இது தானு? அப்பா என்ன சொல்லுவாரோ தெரியலே? அவமானமா இருக்கு.

[சாயங்காலம் அப்பா வந்தவுடன்]

அம்மா: அவளைக் கோவிச்சுக்காதேங்கோ. அழுது அழுது கண்ணெல்லாம் வீங்கிப் போயிடுத்து.

அப்பா: இப்படி அவமானம் கொண்டு வர்றதா இருந்தா பத்தாவது பாஸ் பண்ணினப்பவே அந்தத் தஞ்சாவூர் வானுக்குக் கட்டிக் கொடுத்திருப்பேன். இந்தச் சனியன்களுக்கெல்லாம் படிப்பு எப்படி வரும்?

தே: (மனத்திற்குள்) அப்பா இப்படிக் கோபிப்பார்னு நான் கனவிலேகூட நினைக்கலே. என் உடம்பே வெலவெலத்துப் போச்சு. எவ்வளவு அருமையா இருந்தவங்களுக்கு நான் பாஸ் பண்ணுததாலே இப்படி ஆயிடுத்து. பாடங்களைப் படிக்காமே நாவல் படிச்சுண்டிருந்தேன். புரொபஸர் சொல்றதைக் கேளாம வம்பு பேசிண்டிருந்தேன்.

அம்மா: போதும், போதும். நிறுத்துங்கோ பரீட்சையில் பெயில் ஆனு அதோடே செத்துப் போவாங்களா? தோல்விங்கறது ஜயத்துக்குப் படிக்கட்டுதானே?

அப்பா: ஆமாம். உனக்கு இருக்கிற மூளை தானே உன் பெண்ணுக்கும் இருக்கும்? தெரிஞ்சும் படிக்க வைச்சேனே. யாராவது ஒரு மளிகைக் கடைக்காரனுக்குக் கட்டிக்கொடுத்துடறேன். போய்ச் சட்டி சுரண்டட்டும். அப்பத்தான் புத்தி வரும்.

அம்மா: போதும், போதும். நீங்க பி.ஏ.க்கு மூன்று வருஷமா எம்.எஸ்.எம். போட்டது ஞாபகம் இல்லியோ?

அப்பா: அது என்னடி எம்.எஸ்.எம். ?

அம்மா: மார்ச்சு, ஸெப்டம்பர், மார்ச்சு, ஸெப்டம்பர்னு பணத்தைக் கரியாக்கினது மறந்து போச்சோ?

அப்பா: (சிரிக்கிருர்) உனக்கு யாரடி சொன்னது?

தே: (மனத்திற்குள்) எனக்கும் சிரிப்பு வந்துவிட்டது. அம்மா இப்படிச் சரியான சமயத்தில் இந்தக் குண்டைத் தூக்கிப்போட்டு அப்பாவின் கோபத்தைத் தணித்துவிட்டாள்.

அம்மா: பேபி, கீழே இறங்கி வாடியம்மா.

அப்பா: சரி, சரி. ஸெப்டம்பருக்கு எழுதச் சொல்லு.

தே: (மனத்திற்குள்) நானும் எம்.எஸ்.எம். போட வேண்டியதுதானு? இந்த வாழ்க்கை பரீட்சையில் பாஸ் ஆவதிலும் பெயில் ஆவதிலுமா இருக்கிறது? அடுத்த தடவை பார்த்துக்கொள்கிறது. பெண்கள் குடியும் குடித்தனமுமாகப் போய்க் கஷ்டப்படுகிறதைவிடப் பெற்றோர்களின் ஆதரவில் காலேஜ் பெண்ணுகவே இருந்துவிட்டால் நல்லதென்று தோன்றுகிறதல்லவா உங்களுக்கும்!

தமிழிலே பேசுதல்

டாக்டர் தி. சே. சௌ. ராஜன்

காங்கிரஸ் மகாநாட்டிற்கு வருஷந் தோறும் ஏன் போகவேண்டும்? அதிகச்செலவு செய்துகொண்டு, தொழிலையும் நிறுத்திவிட்டு, நல்ல குளிர்காலத்தில் இந்தியாவின் பல பாகங் களில் நடைபெறும் காங்கிரஸிற்கு நான் தவறாது போய் வந்துகொண்டிருந்தேன். எனக்கு இருக் கும் தேசபக்தி உணர்ச்சியைப் பிறர் அறியக் கூடிய வகையில் இந்தப் பிரயாணத்தின் மூலந் தான் அக்காலத்தில் காண்பிக்க முடிந்தது என் பது என் அபிப்பிராயம். பல நண்பர்களை ஒரே சமயத்தில் சந்திப்பது, நமது நாட்டின் பல பாகங் களையும் சுற்றிப்பார்ப்பது, புண்ணிய தீர்த்தங் களில் நீராடிக் களிப்புறுவது, புராதனக் கலைச் சின்னங்களைக் கண்டு நாட்டின் பண்டைப் பெருமையை ஒருவாறு ஊகிப்பது - இவைகளை எல்லாம் வருஷத்திற்கு ஒருமுறை பல்வேறு இடங்களில் சென்று அறிந்துகொள்வதற்கு எனக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் என நான் எண்ணினேன். 1919-ஆம் வருஷம் வரையில் காங்கிரஸ் ஒ. உல்லாசப் பிரயாணமாக இருந் தது. நான் யாருடைய பிரதிநிதி? நான் ஓட்டு செய்யும் அபிப்பிராயத்தை எவ்வளவு பெயர்கள் எங்கள் ஊரில் ஆதரிக்கிறார்கள் என்ற கேள்வி அக்காலத்தில் எழவில்லை. என்னை நீ ஏன் இப்படிப்பட்ட தீர்மானத்தைப் பிரதிநிதி என்ற முறையில் ஆதரித்தாய் என்று கேட்ப வர்களும் இல்லை. ஒருவரும் கேட்காதவரையில் எல்லோருடைய சார்பாகவும் என் இஷ்டம் போலத் தீர்மானங்களை ஆதரித்துக் கையைத் தூக்கவோ அல்லது பேசவோ செய்து காங்கிர ஸில் என் ஓட்டுப்பதிவு செய்துவந்தேன்.

காங்கிரஸில் தலையிட்டு வேலை செய்பவன் என்கிற முறையில் பொதுக் கூட்டங்களில் பேசவேண்டும் என்கிற ஆர்வம் உண்டாயிற்று. சீமைக்குப் போய்த் திரும்பிய ஒரு மகிமை அக் காலத்தில் அதிகம். தமிழ்நாட்டில் என்னைப் போல வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியவர் வெகு சிலர். பள்ளி மாணவர்கள் பிரசங்கங்கள் கேட்பதில் இப்பொழுதுபோல அப்பொழுதும் விருப்பமுற்றவர்களாகவே இருந்தார்கள். எனக்கு எப். ஏ. வகுப்பில் உபாத்தியாயரும் அச்சமயம் அர்ச். சூசையப்பர் (St. Joseph's) கல்லூரித் தலைவருமான பெட்ராம் பாதிரியார் (Fr. Bertram) என்னிடத்தில் தனியான அன்பு பாராட்டினார். கல்லூரி மாணவர் சங் கத்தில் நான் பேசவேண்டுமென என்னை நேரில் கண்டு கூப்பிட்டார். "எனக்கு என்ன தனி மகிமை இப்பொழுது வந்துவிட்டது? நான் தங்கள் வகுப்பில் கடைசிப் பெஞ்சுக் குத்தகை எடுத்திருந்தவன்தானே?" என்று பணிவுடன் அவரிடம் பதில் சொல்லியபொழுது, "உன் னைப் போலத் தென்னிந்தியாவிலிருந்து லண் டன் சென்று சிறப்பாகப் பரீக்ஷைகளில் தேர்ச்சி பெற்றுத் திரும்பியவர் யார் இருக்கிறார் என்று நீ சொல்லு. ஒருவரும் இல்லையென எனக்குத் தெரியும். ஆகையால் உனக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு என்பதனால்தான் மாணவர்கள் விரும்பு கிறார்கள். நீ வந்து பேசவேண்டும்" என்று பதிலளித்தார் பெட்ராம் சாமியார். கூட்டத் திற்கு அவரே தலைமை வகிப்பதாகவும் கூறினார். இந்தக் கூட்டத்தில்தான் முதல் முதலாகப் பேச ஆரம்பித்தேன். பேச்சு ஆங் கிலத்தில்தான் என்று நான் சொல்லவேண்டிய தில்லை. சபைக்கூச்சம் என்பது முதலில் சபைகளில் பேசுவோர்களுக்கு நன்கு தெரியும்.

அந்தக் கூச்சம் எனக்கும் நிறைய இருந் தது. அதைத் தீர்ப்பதற்காகவும், கல்லூரி மாத வெளியீட்டில் அச்சில் பிரசுரமாவதை எண்ணியும் எனது சொற்பொழிவை எழுதி முடித்து, உளறிக்கொட்டாமல் கூடியமட்டில் நிதானமாகவே படித்து அன்று அரங்கேற்றி விட்டேன். ஆனால் சிறுவயசு முதல் அசட்டுத் துணிச்சல் அதிகமென்று பெயர் பெற்ற நான்

எனது குணத்தை என் முதல் சொற்பொழிவிலும் காண்பித்துவிட்டேன். நான் பேசும இடத்தையும், அந்த ஸ்தாபனத்தை நிர்வகித்து நடத்திவரும் கூட்டத்தாருடைய மனப்பான்மையையும் முற்றும் மறந்துவிட்டேன். மேல்நாடுகளில் கண்டவற்றில் எடுத்துரைக்கக் கூடிய விஷயங்கள் பல இருப்பினும், அன்று அவைகளை மறந்துவிட்டு, அந்நாட்டினருக்கு இருக்கும் மதப் பற்று எவ்வளவு என்பதைப் பற்றியும், கிறிஸ்துவ மதத்தின் உண்மைத் தத்துவங்கள் நடைமுறையில் அவர்களால் பின்பற்றப்படாததையும் பற்றிக் கட்டுரையை எழுதி முடித்துவிட்டேன். அர்ச். சூசையப்பர் கல்லூரிப் பாதிரிமார்கள் தன்னலமற்ற தியாகிகள். கிறிஸ்துவ மதத்தின் பிடிப்பினால் தங்கள் நாட்டைத் துறந்து, உற்றார் உறவினர்களை விட்டு, இறக்கும் மட்டில் நமது நாட்டில் நம் மக்களுக்குக் கிறிஸ்துவ மதபோதனையைத் தங்கள் வாழ்நாளின் கடமையாகக் கருதி, தீக்ஷை பெற்றவர்கள். அவர்கள் ஆதரவில் நடக்கும் கல்லூரி மாணவர்களிடையே எனது சொற்பொழிவு பொருத்தமற்றது. உண்மையைச் சொன்னதாக நான் நினைத்தபோதிலும், என் ஆசிரியர்களாகிய பாதிரிமார்களுக்கு உகந்ததாக இல்லை. கடைசியாகப் பேசின பெட்ராம் சாமியார் தம்மால் இயன்ற அளவு என் கட்டுரைக்கு மாறான அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

அர்ச். சூசையப்பர் கல்லூரியிடத்து எனக்கு அளவற்ற பிரேமை. பாதிரிமார்களின் தன்னலமற்ற தியாகம் என் மனத்தைச் சிறுவயசு முதல் கவர்ந்தது. நான்காவது வகுப்பு முதல் எப். ஏ. வகுப்பு முடிய, சுமார் பன்னிரண்டு வருஷகாலம் நான் வேறு பள்ளியில் படித்ததில்லை. இப்பொழுது நடைபெறும் பள்ளிக்கூடங்களினாலும், ஆசிரியர்களாலும், மாணவர்கள் மனத்தில் தீவிர நல்லெண்ணங்கள் உதிக்கக்கூடுமானால் என் மனத்தில் உதித்த நல்லெண்ணங்கள் அந்தப் பேராசிரியர்களையே பொறுத்தது. இன்றும் அப்பெரியார்களிடத்து என் மனம் நாடிநிற்கிறது. எனது சொற்பொழிவால் அவர்களுடைய மனம் துன்புறவில்லை என்பது எனக்கு நிச்சயம். ஏனெனில் இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவர்களுடைய நட்பும் நல்லெண்ணமும் என்பால் குறைவடையாதது மட்டுமல்லாமல் மேன்மேல் பெருகி வளர்ந்து வந்திருக்கின்றன. 1915-16-ஆம் வருஷங்களில் தான் நான் தமிழில் பேசும் பழக்கம் சற்றுப் பெற்றேன். சிவாஜி மகாராஜாவின் பிறப்பு விழாவை முதல் முதலில் திருச்சியில் ஏற்பாடு செய்தேன். அன்று நடந்த பொதுக்கூட்டம் எனக்கு எதிர்பாராத ஊக்கத்தையும் தன்னம்பிக்கையையும் அளித்தது.

அன்று பிற்பகல் அதி உக்கிரமான வெயில். நான் சீமையில் இருக்கும்பொழுது அதிகச் செலவில் தைத்து உபயோகித்துவந்த என் உடைகள் பெட்டியில் பல மாதங்களாகத் தூங்கிக் கொண்டிருந்தன. அன்றைத்தினம் முக்கியச் சொற்பொழிவாளராக என்னைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். பொதுக்கூட்டத்தில் நான் தமிழில் பேசப் போகிறேன் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. எனக்குத் தாய்மொழியில் சொற்பொழிவு ஆற்றும் திறன் உண்டென்று எனக்கே தெரியாது. அன்றைவரையில் ஆங்கிலத்தில்தான் சொற்பொழிவு ஆற்றியவன். அந்நிய பாஷையில் பேசியதாலேயே பொதுக்கூட்டங்களுக்கு மக்கள் அதிகம் வருவதில்லை. ஊக்கமற்று ஆங்கிலம் பயின்று வாழ்வு நடத்தும் சிலரும், துடியான சில மாணவர்களுமே வருவது வழக்கம். ஆனால் அன்றைத்தினம் நான் எதிர்பாராதபடி திருச்சி டவுன் ஹால் கட்டிடத்தில் கூட்டம் நிரம்பியிருந்தது. பெட்டியில் தூங்கியிருந்த குளிர்காலத்து ஆங்கில உடைகளை நவீன முறையில் தரித்து, வெயிலின் கடுமையும் கூட்டத்தின் நெருக்கமும் ஒருங்கே சேர, உடைகளுக்கிடையில் வெதும்பிக்கொண்டு என் சொற்பொழிவை வீட்டில் பேசும் தமிழில் ஆரம்பித்தேன். பேசப் பேச என்னை அறியாமலே எனக்கு ஓர் ஆர்வம் உண்டாயிற்று. ஜனநெருக்கம் அந்த ஹால் கொள்ளவில்லை. கூட்டம் அதிகரிக்கவே, வெளியேயுள்ள மைதானத்திற்குப் பிரசங்க மேடையை மாற்ற வேண்டியதாயிற்று.

சுமார் ஒரு மணிநேரத்துக்கு அதிகமாகவே பேசினேன். அன்றைத் தினம் கூடியிருந்தவர்களிடம் இரண்டே எண்ணங்கள் உண்டாயிருந்தன. ஒன்று, சீமைக்குச் சென்று திரும்பிய தமிழன் தாய்மொழியில் தன் உணர்ச்சியைப் பிறர் அறியச் சொல்லக் கூடியது. இரண்டாவது, சிவாஜி மகாராஜாவின் தீரச் செயல்களும், நாட்டைக் காப்பாற்ற முன்வந்த சுதந்தர சரித்திரத்தின் பகுதியும். அன்று என்னைப் புகழாதார் இல்லை. ஆனால் அதன் காரணமாக எனது மண்டை வீக்கமுற்றதென்று சொல்லமுடியாது. அரைகுறையாகப் பண்டிதத் தமிழ் முறைகளுக்குப் பொருந்தாததாக இருந்தாலும். மக்கள் அறியக்கூடிய விஷயமாகவும், சொற்பொழிவாளர் உள்ளத்தில் ததும்பும் உணர்ச்சி கேட்போர் மனத்திலும் தாக்கும்படியாகவும் இருந்தால், அதுவே பிரசங்க மேடைகளுக்குத் தேவை என உள்ளம் எனக்கு நன்கு விளக்கிற்று. பன்முறை சிறை செல்ல நேர்ந்து, சிறையிலும் தனிக்காவல் செய்து வைக்கப்பட்ட எனக்குத் தமிழ்மொழிப் பயிற்

சியைப் பல நூல்களிலிருந்து அறியச் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. எனினும் தமிழில் அதிக வன்மை பெற்றவனாகவில்லை என்பதும் எனக்கு நன்கு தெரியும். அன்றுமுதல் அரசியல் சம்பந்தமான பல நிகழ்ச்சிகளும் நமது தாய்மொழியில் பொதுமேடைகளில் நடக்கத் தலைப்பட்டன.

ஆனால் நான் தமிழில் பேசும் முறையில் பள்ளி மாணவர்களிடத்து ஆதரவைப் பெறவில்லை. ஆங்கிலம் பேசிக் கேட்பதிலேயே அவர்களுக்கு மோகம். தஞ்சாவூர் ஜில்லா மாணவர்கள் சங்கம் ஒன்று திருச்சியில் அக்காலத்தில் இருந்தது. ஒரே கல்லூரியில் படிக்கும் மாணவர்களிடத்தில், தமிழர்களிடத்தில், பல ஜில்லாக்களினின்றும் வந்திருந்த போதிலும் தனிச் சங்கங்கள் எதற்காக இருக்கவேண்டும் என்பதன் காரணம் எனக்கு விளங்கவில்லை. சங்கத்தின் அங்கத்தினர்களுக்கும் விளங்கவில்லை. அது சில காலங்களில் திடீரெனப் பரவி மறையும் தொத்துநோய் போன்றதென நினைக்கிறேன். பெரிய கல்லூரிகள் இருக்கும் நகரங்களில் எல்லாம் இம்மாதிரி சங்கங்கள் நிலவிவந்தன. நல்ல வேளையாக இப்பொழுது அந்தச் சில்லறைச் சங்கங்கள் மறைந்துவிட்டன.

தஞ்சாவூர் ஜில்லா மாணவர் சங்கத்தின் ஆதரவில் நான் பேசவும், என் நண்பர் திவான்பகதூர் ராமஸ்வாமி சாஸ்திரிகள் தலைமை வகிக்கவும் நேரிட்டது. அப்பொழுது எனக்குத் தமிழ் வெறி அதிகரித்திருந்த காலம். அக்கூட்டத்தில் கேட்போர்களின் ஆதரவையும், தலைவருடைய உத்தரவையும் கோராமலே தமிழில் பேச ஆரம்பித்துவிட்டேன். மாணவர்களுக்குத் திகைப்பும், சற்று வெறுப்பும் காணப்பட்டன. அதைப் பொருட்படுத்தாது என் பிரசங்கத்தை முடித்தேன். கூட்டத்தாருடைய மனத்தைக் கவர்ந்ததென்பதே எனது உணர்ச்சி.

தலைமை வகித்த சாஸ்திரியார் ஆங்கிலத்தில் நீண்ட நேரம் சொற்பொழிவு நிகழ்த்தினார். அன்றைத்தினம் முதல் மாணவர் சங்கங்களில் என்னை அழைப்போர்கள் இல்லை. அடிமைப் படிப்பிற்கு இதைவிட வேறு அறிகுறி ஒன்றும் தேவை இல்லை. நல்ல வேளையாக இதற்கு விமோசனம் இல்லாமற் போய்விடவில்லை. ஆங்கில அரசாங்கம் நூற்றைம்பது வருஷ காலம் ஆட்சி புரிந்திடினும் ஆங்கிலம் கற்றவர்கள் தொகை மிகக் குறைவு. தென்னிந்தியாவிலும் வங்காளத்திலும் சற்று அதிகமாக இருக்கலாம். மொத்தத்தில் நமது ஜனத்தொகையில் நூற்றுக்கு இரண்டு சதவிகிதத்திற்கு மேல் ஆங்கிலம் தெரிந்தவர்கள் இல்லை. இனி இருக்கவும் முடியாது. தேசிய உணர்ச்சி நாளடைவில் வளர்ந்துவருகிறது. தாய்மொழியிடத்து அன்பும் பெருகிவருகிறது. இனி, பாஷை அடிமைத்தனம் வளர்வதற்கு இடமில்லை. அந்நியநாட்டுக் கலைகளைத் தமிழ்மொழியில் கொணர்ந்து சேர்க்கும் முயற்சியும், அதற்குரிய ஆதரவும் தமிழ்மக்களிடத்துத் தலைப்பட்டுவிட்டன. இனி விடுதலையைப்பற்றிப் பயமில்லை. தமிழ்த் தாய் தனது ஈனத்தனத்திலிருந்து விடுதலை அடைந்துவருகிறாள்.

தமிழில் பேசாத சிறுமை மாணவர்களோடு நின்றுவிடவில்லை. தமிழ் மாகாண அரசியல் மகாநாடுகளிலும் இந்தக் கோரமான நிகழ்ச்சி பரவியிருந்தது. நடவடிக்கைகள் எல்லாம் ஆங்கிலமயம். இது எந்தத் தெய்வத்திற்குப் பிரியமோ எனக்குத் தெரியவில்லை. அரசாங்கத்தாருக்குத் தேவையில்லை. நாம் பேசுவதில் உரமும் ஊக்கமும் இருந்தால் அரசாங்கத்தார் தேடிவந்து நாம் சொல்வதை எழுதிக்கொண்டு போவார்கள். சாரமற்ற இலக்கண ஆங்கிலம் நம்மவர்கள் பேசுவதை யாரும் கவனியார்கள் என்பதைச் சமீபத்தில் ஸர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அமெரிக்கா சென்று திரும்பிய பிரசங்கமூலம் நாம் நன்கு தெரிந்துகொள்ளலாம். சொல்லில் உண்மையும், பேச்சில் வன்மையும் இருந்து, நாட்டினருக்குத் தங்கள் சுயமரியாதையையும் சுதந்தரத்தையும் காப்பாற்றத் திறமையும் இருந்தால், நமது மொழியை உலகமே ஊன்றிக் கவனிக்கும். இல்லையேல் நமது பேச்சு வெறும் சத்தமே தவிர வேறில்லை.

மாகாண மகாநாடுகளில் நான்கு தமிழர்கள் ஆங்கிலத்தில் பேசிய பிறகு ஐந்தாவதாகத் தமிழில் பேசுபவருக்குத் தயவாக உத்தரவு கொடுப்பது அந்தக் கால வழக்கம். எனினும் அந்த மகாநாடுகளிலும் தமிழில் பேசியே வந்தேன். என் பேச்சைக் கேட்ட ஆங்கிலவாதிகளில் யாரும் என்னை அவமதிக்கவோ குறை கூறவோ முன்வரவில்லை. தலைவர் உரை, தீர்மானங்களின் நடை தமிழில் இருக்க வேண்டுமென நான் முயன்றும் பயன்படவில்லை. நாளடைவில் பொதுமக்கள் உணர்ச்சி அதிகரிக்க, அரசியல் கூட்டங்களின் நடைமுறையில் தாய்மொழிக்கு உரிய இடம் கிடைத்துவிட்டது. ஆங்கிலத்திற்கு உள்ள மகிமை அதிகார வர்க்கத்தின் செல்வாக்கைப் பொறுத்தது. இன்றும் அதிகாரவர்க்கத்தின் சக்தி குன்றாமல் வளர்ந்துவருகிறது. ஆகையால் ஆங்கிலத்தின் மகிமை அவ்விதமே வளர்ந்துவந்தாலும், பொது மக்களிடத்து அதற்கு இடம் இல்லை. கல்லூரிகளிலும் கோர்ட்டுகளிலும் மாத்திரமே அதற்கு இடம். தேசிய வளர்ச்சிக்குத் தாய்மொழியின் வளப்பம் ஓர் அளவுகோலாகும்.

களத்திர தோஷம்

'மாயாவி'

(சென்ற இதழ் 118-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோர் செய்த பெரும் பிழைக்காகப் பேதைப் பெண் ருக்மிணி தண்டிக்கப்பட்டு விட்டாள். தண்டனை என்றால் எளிதான தண்டனையா? ஒவ்வொரு விநாடியும் உள்ளத்தை உருக்கும் கொடிய சிறைவாசத் தண்டனையல்லவா அது? அதிலும் ஒன்றிரண்டு வருஷங்களா? அவள் தானாக அந்தத் தண்டனையிலிருந்து விடுபட்டுப் போக முழுக்க முழுக்க ஐந்து வருஷங்கள் வேண்டியிருந்தன.

முதல் வருஷம் மனப்பிணியுடன் கழிந்தது. இரண்டாவது வருஷம் தொடங்கி உடல் பிணியும் சேர்ந்தது. பெற்றோர் கண்களும் திறந்து கொண்டன. இளம் கன்னியான தம் பெண்ணுக்குப் பெருநரகைச் சிருஷ்டித்துவிட்டதை எண்ணிக் கண்ணீர் வடித்தனர். ஆனாலும் என்ன, யார் மனசு கரைய வேண்டுமோ அது கல்லாக இருந்தது.

எது ருக்மிணியை இந்நிலைக்குக் கொண்டுவரக் காரணமாயிற்றோ, அதே ஹோமந்தான் அன்று ருக்குவுக்கு ஸ்வர்ண விக்கிரகம்போன்ற ஓர் ஆண் குழந்தையை அளித்திருந்தது. அங்கே அவர்கள் களித்தனர். இங்கே இவர்கள் துடித்தனர். "ஈசுவரி, ஒரு குற்றமும் அறியாத என்னை ஏன் இக்கொடுமைக்கு உள்ளாக்கினாய்?" என்று ஏங்கினாள் ருக்மிணி.

தெருவழியாக அவன் போவான், வருவான். ஒரு சமயமாவது அவன் திருஷ்டி தன் மேல் விழாதா? தன் சோபை இழந்த வதனத்தை அவன் பார்க்கமாட்டானா? - என்று ஜன்னலண்டை உட்கார்ந்து வீதியை நோக்கிக் காத்துக்கிடப்பாள். ஹூம். அவன் திரும்பிப் பார்க்கவே மாட்டான். 'ஓடிப் போய் அவர் காலடியில் விழுந்துவிடுவோமா?' என்று மனம் எண்ணும்; உடல் நகராது. முதல் வருஷ அநுபவம் இது.

இரண்டாவது வருஷம் முதல் அவள் மனநிலை மாறிவிட்டது. அதிலும் தன் வியாதியைப்பற்றி அவள் அறிந்த பிறகு, இந்நிலைக்குச் சிறிதுகூட வருந்தவில்லை. இன்று அவள் பிரார்த்தனை முற்றும் மாறுபட்டிருந்தது.

"தேவி, க்ஷயரோகம் பிடித்த பிறகு நான் பிழைக்கமாட்டேன்; பிழைக்கவும் விரும்பவில்லை. என்னைச் சீக்கிரம் உன்னிடம் அழைத்துக்கொள். இந்தக் கடையாள் உயிருடன் இருக்கும் வரையில் அவர் வாழ்வு பிரகாசிக்கப் போவதில்லை. அவர் வாலிபம் வீணாய்ப் போகும் வரையில் இந்த உதவாக்கரையை உயிருடன் வைக்காதே." இதுதான் அவளுடைய தினசரி வேண்டுகோள்.

வருஷங்கள் ஓடின. வியாதி அவள் உடலைத் தின்றதேயன்றி உயிரைத் தின்ன முன்வரவில்லை. நடமாட்டம் நின்று படுத்த படுக்கையாகியும் ஆறு மாதங்கள் பறந்துவிட்டன. இன்னும் கொஞ்ச நாட்கள்தாம். 'இன்றைப் பொழுதாவது எனக்குக் கடைசியாக இருக்குமா?' என்று எண்ணுவாள் கண் விழித்ததும்.

அந்தத் தினமும் வந்தது.

அவள் அதிகமாக விரும்பும் பூபாள ராகத்தின் இனிய நாகஸ்வர ஒலி காதில் விழ, ருக்மிணி அன்று கண் விழித்தாள். பக்கத்தில் அன்னையும் தந்தையும் கண்ணீர் சொரிய நின்றதை அவள் பார்க்காமல் இல்லை. ஆம், அவர்கள் அழத்தான் செய்வார்கள். வைத்தியர்கள் தன்னைக் கைவிட்டு மூன்று நாட்களாகியும் தான் உலகை விட மறுப்பது அவர்களை ஒவ்வொரு நிமிஷமும் துக்கிக்கச் செய்வதற்குத்தானே?

கண்களை மூடிக்கொண்டே நாகஸ்வர கீதம் முடியும் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தாள். திடீரென என்ன தோன்றிற்றோ அவளுக்கு, "அம்மா, அம்மா" என்று விளித்தாள். எங்கேயோ கிணற்றுக்குள்ளிருந்து சப்தம் வருவதுபோல் இருந்தது, அந்த உயிர் பிரியும் சடலத்திலிருந்து எழுந்த குரல்.

"என்னடி என் கண்ணே!"

"அம்மா, எங்கே என்ன விசேஷம்? நாகஸ்வர சப்தம் கேட்கிறதே?"

கோமதி பேசவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டு தேம்பி அழுதாள்.

"உனக்கு அந்தக் கவலையெல்லாம் இப்பொழுது எதற்கு? சற்று நிம்மதியாகத் தூங்கேன்" என்றார் ராமலிங்கமையர்.

ஆம், எதற்கும் கவலையில்லாத நிலையைத்தான் அவள் எட்டிக்கொண்டிருந்தாள். இருந்தாலும் நாகஸ்வரத்தின் இனிமை காரணத்தை அறியத் தூண்டியது.

ருக்கு அதன் பிறகு ஒன்றும் கேட்கவில்லை. பேசாமல் படுக்கையில் கிடந்தாள். சிறிது நேரத்தில், தாயும் தந்தையும் அவள் தூங்குவதாக நினைத்துப் போய்விட்டனர்.

ருக்குவின் கடைசிச் சிந்தனைகள் நாகஸ்வர கீதத்தில் இருந்தன.

யாரோ இரண்டு அயலூரார்கள், ராமலிங்கமையர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் சம்பாஷணை படுக்கையில் கிடந்த ருக்மிணியின் காதுகளில் விழுந்துகொண்டிருந்தது.

அவள் இப்பொழுது வீட்டு ரேழியில் இருக்கவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்பே அவள் திண்ணைக்கு அடுத்தாற்போல் இருந்த குச்சிலுக்குக் கொண்டு வரப்பட்டு விட்டாள். சிறிது சிறிதாக வீட்டை விட்டு வெளியேறப் போவதற்குள்ள அடையாளம்போலும் அது!

சிறிது நேரத்தில் வழிப்போக்கர்களின் சம்பாஷணை ருக்மிணியின் முழுக் கவனத்தையும் கவர்ந்தது.

"என்ன ஓய், இந்தக் கல்யாணப் பிள்ளைக்கு மூத்த தாரம் இவ்வூர்தானாமே? உயிரோடு வேறு இருக்கிறாளாமே?" என்றார் ஒருவர்.

"ஆமாம் ஆமாம். அவளை அவன் விலக்கி வைத்து ஐந்து வருஷங்களாகிவிட்டனவாம்" என்றார் மற்றவர்.

"காரணம்?"

"அது பெரிய கதை ஓய். அசம்பாவிதமான சம்பவங்களைச் சிருஷ்டித்துக்கொண்டு பெண்ணின் தகப்பனார் அவளைப் புருஷன் வீட்டுக்கு அனுப்ப மறுத்துவிட்டாராம்."

"என்ன என்ன, விவரமாகச் சொல்லும்."

அவர் அந்தப் பழைய கதையைப் புதிய மெருகுடன் மற்றவருக்கு எடுத்துரைத்தார். சாகப் போகுமுன் ருக்மிணியும் அதை ஒரு முறை கேட்டுக்கொண்டாள். அதைக் கேட்டபொழுது அவள் வெதும்பிய மனம் துடிக்கத்தான் செய்தது. 'நான் அபாக்கியவதி. என் வாழ்வைப் பாழடித்துக்கொண்டதோடல்லாமல் அவரையும் ஐந்து வருஷங்களாகக் கஷ்டப்படச் செய்தேன். பாவம், அவர் இனியாவது சுகமாக இருக்கட்டும்' என்று எண்ணினாள்.

இவ்விஷயத்தில் ருக்மிணி இயற்கையிலிருந்து மாறுபட்டே இருந்தாள். மரணப் படுக்கையில் இருக்கும் எந்த ஸ்திரீயும் கணவன் வேறு கல்யாணம் செய்துகொள்கிறான் என்பதைக் கேட்டுக் களிப்படைய மாட்டாள். ருக்மிணி மனப்பூர்வமாக அன்று சந்தோஷம் கொண்டாள். ஆம், அவள் பிரார்த்தனையே அதுதானே?

இனி அவள் நிம்மதியாகக் கண்மூடத் தயாராகிவிட்டாள். இருந்தாலும் ஒரே ஓர் ஆசை. தன் கணவனை மணக்கோலத்தில் ஒரு முறை பார்க்க விரும்பினாள்.

ஆனால் அது நிறைவேறுமா?

அதை அவள் ஆலோசியாமலில்லை. தன் இறுதி ஆசை ஒருகால் நிறைவேறும் என்று எதிர்பார்த்தாள்.

"அப்பா......"

நடையில் இருந்த ராமலிங்கமையர், அவள் குரலைக் கேட்டதும் ஓடோடியும் வந்தார்.

"என்ன வேண்டும் ருக்கு?"

"நான் ஒன்று சொல்வேன். செய்வீர்களா? கட்டாயம் செய்வீர்களா?"

ராமலிங்கமையர் ஒன்றல்ல, ஆயிரம் வேண்டுமானாலும் அவளுக்காகச் செய்யத் தயாராக இருந்தார். தம் தவறுதலினால் மகளின் பிராணன் பிரிகிறது என்பதை உணர்ந்தது முதல் அவர் உயிரைத் தத்தம் செய்தாகிலும் தம் பிழையை நிவர்த்தித்துக்கொள்ள விரும்பினார்.

"என்ன வேண்டும் கண்ணே, உனக்கு?"

"அப்பா, என் ஆசை நிராசையானாலும் ஆகி

விடலாம். இருந்தாலும் ஒரு முறை அவர் வீட்டுக்குப் போய், அவரை நான் தரிசிக்க விரும்புவதாகச் சொல்லி அழைத்து வரமாட்டீர்களா? அப்பா, எனக்கு எல்லாம் தெரியும். அவருக்கு இன்று கல்யாணம். அவர் சந்தோஷத்தில் மூழ்கியிருப்பார். ஆனாலும் உள்ளத்தின் ஒரு மூலையிலாவது என்னைப்பற்றிய நினைவு ஒளிந்திராமல் இராது. அவருடைய சந்தோஷ முகத்தை ஒரே ஒரு முறையாவது பார்த்து நமஸ்காரத்தைச் செலுத்திவிட்டேனானால், என் மனப்பாரம் நீங்கிவிடும். அப்பா, இம்மாதிரி ஒரு சந்தர்ப்பத்தில் நான் உங்களை அங்கே போகச் சொல்லக்கூடாததுதான். இருந்தாலும் என் ஆசையை நிறைவேற்றமாட்டீர்களா?"

ருக்மிணி ஒரே மூச்சாக இவ்வளவு வார்த்தைகளையும் கொட்டிவிடும் நிலையில் இல்லை. விட்டு விட்டு, கோவை இல்லாமல், தன் ஆசையை வெளியிட்டாள். ஆனால் ராமலிங்கமையர் புரிந்துகொள்ளச் சிரமப்படவில்லை.

"இதுதானே வேண்டும் ருக்கு? இதோ போகிறேன்" என்று புறப்பட்டார் அவர்.

* * * *

ராமலிங்கமையர் போகும் இடத்தில் தமக்கு ஏற்படப் போகும் அவமானத்தை வழி நெடுகச் சிந்தித்துக்கொண்டு செல்லவில்லை. அவர் முழு மனசும், எவ்விதம் நடந்துகொண்டால் பாலுவை அழைத்து வர முடியும் என்பதையே சிந்தித்துக்கொண்டிருந்தது. உண்மையில் ராமலிங்கமையர், அச்சமயம் அவர்கள் அடித்தாலும் மிதித்தாலுங்கூடச் சகித்துக் கொள்ளத் தயாராக இருந்தார். இருந்தாலும் அவன் வருவானா என்பது சந்தேகமாகவே இருந்தது.

வெறுங்கையோடு திரும்பியபோது, இந்தத் தோல்வி அவரைப் படுவேகமாகத் தாக்கியது. 'அவள் நல்ல நாட்களையெல்லாம் பாழடித்துவிட்டேன். கடைசியில் பேதை, கணவனை ஒரு முறை பார்க்க விரும்பினாள். அதைக்கூடச் செய்து முடிக்க அசக்தனாய்விட்டேனே. அவளிடம் இதை எப்படி எடுத்துச் சொல்வேன்?' என்று எண்ணி வழி நெடுகக் கதறிக்கொண்டே சென்றார்.

ஆனால் ருக்மிணி அவருக்கு அந்தக் கஷ்டத்தையும் கொடுக்கவில்லை.

வீட்டை நெருங்கும்போதே கோமதியின் அலறலும் அழுகையும் அவர் உள்ளத்தைப் பிளந்தன.

முற்றும்

உட்கார்!

தமிழன் வாழ்க்கை புதிய பொருள்களால் பொலிவுறுகிறது. தமிழ்ப் பாஷைகூட அத்தகையதுதான். உயிருள்ள பாஷைகள் எல்லாம் புதிய புதிய வார்த்தைகளைச் சேர்த்துக் கொண்டு வளர்ந்து வரும்.

'உட்கார்' என்ற வார்த்தையை நாம் நாளைக்கு நூறு தடவை சொல்கிறோம். இது புதிதாக வந்த வார்த்தை. 'இருந்தான்' என்ற பதத்திற்கு அந்தக் காலத்தில் உட்கார்ந்தான் என்று அர்த்தம். இப்போது சூனியமின்றி உள்ள பொருளாக இருந்தான் (existed) என்ற பொருளில் வழங்குகிறோம். 'உட்கார்' என்ற புதிய வார்த்தை வந்துவிட்டபடியால் அந்தச் சொல் வேறு பொருளில் வழங்குகிறது.

'உட்கார்' என்பதன் பழைய உருவம் 'முள்கார்'. குந்தியிருப்பதை, அதுவும் குரங்கைப்போலக் குந்தியிருப்பதை, அந்தச் சொல்லால் குறிப்பது வழக்கம். "முசுப்போல முள்கார்ந்திருப்பார்" என்பது ஒரு பாட்டு. அந்த 'முள்கார்' என்பதே மாறி இன்று 'உட்கார்' ஆகிவிட்டது. "குந்துங்க" என்று சொன்னவர்கள் "உக்காருங்க" என்று சொல்கிறார்கள்.

மோவாய்

சில சமயங்களில் பேசும்பொழுது பிழையில்லாமல் சொல்லும் வார்த்தையை எழுதும்பொழுது பிழையாக்கி விடுகிறார்கள். 'மோவாய்க் கட்டை' என்று நாம் பேசுகிறோம். மோவாய் என்பதுதான் சரியான சொல். 'பருஉ மோவாய்ப் பதுமனார்' என்று ஒரு பழைய புலவருக்குப் பெயர் உண்டு. 'மோவாய்' என்றுதான் பழைய நூல்களில் வழங்கும். அது தவறென்ற அபிப்பிராயத்தின்மேல் 'முகவாய்' ஆக்கிவிட்டோம்.

"கசக்கி மோந்து பார்க்கலாமா?" என்று பேசுகிறோம். 'மோந்து' என்பது தவறென்று யார் மோப்பம் பிடித்து அறிந்தார்களோ தெரியவில்லை. அதை எழுதும்போது 'முகர்ந்து' என்று மாற்றிவிடும் வழக்கம் சிலருக்கு வந்திருக்கிறது. மோ என்னும் பகுதியடியாகப் பிறந்தவை, மோத்தல், மோப்பம், மோந்து என்று வரும் வார்த்தைகளெல்லாம். முகர்தல் என்பது பிழை.

வான வெளியில்

ஆ. சு. கிருஷ்ணன்

நாம் தினந்தோறும் பழகும் பொருள்களின் மீது நமக்கு ஒருவித உதாசீனம் ஏற்படுவது சகஜம். கடற்கரையிலேயே சதா வாசம் செய்துவரும் ஒருவனுக்குக் கடலின் தோற்றமும் காம்பீர்யமும் யாதொரு வியப்பையும் அளியா. இதுபோல, புத்தி தெரிந்தது முதல் நாம் தினம் கண்டுவரும் வானமும், விண் மீன்களும், சூரிய சந்திரரின் சஞ்சாரங்களும் நமக்குச் சற்றும் வியப்பு அளிப்பதில்லை.

நிர்மலமான ஓர் இரவில் ஒரு குழந்தை வானத்தைப் பார்க்குமானால், அதை உலகத்திற்கு ஒரு மேற்கட்டி என்றும், அங்கு விளங்கும் நக்ஷத்திரங்கள் அந்த மேற்கட்டியை அலங்கரிக்க ஏற்பட்ட மணிகள் என்றும் நினைக்கும். ஆதி மனிதர்களுக்கும் வானம் முதல் முதல் இந்தத் தோற்றத்தையே அளித்திருக்கவேண்டும். வானமும் விண்மீன்களும் தாங்கள் கண்டு களிக்க ஏற்பட்ட அலங்காரப் பொருள்கள் என்றே அவர்கள் கருதியிருப்பார்கள். ஆனால், ஆராய்ச்சி மனப்பான்மை கொண்ட சிலர் மட்டும், பலநாட்கள் வானத்தைக் கவனித்து வந்ததில், கொஞ்சம் கொஞ்சமாகப் பல உண்மைகளைக் கண்டறிந்தனர். இந்த உண்மைகள்தாம் நமக்குக் கிடைத்திருக்கும் "உடு சாஸ்திரம்."

இந்த உடு சாஸ்திர ஆராய்ச்சி செய்த பூர்விகர்களில், ஹிந்துக்கள், சாலதேயர் (Chaldeans), எகிப்தியர், சீனர், கிரேக்கர் இவர்கள் தலைசிறந்து நின்றனர். நமது நாட்டில் வேதகாலம் தொட்டே, உடு சாஸ்திரப் புலமை இருந்துவந்தது. சுமார் 15 நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த வராக மிஹிரரைப்பற்றி நாம் எல்லோரும் அறிவோம். அவருடைய "பிரஹத்ஜாதக"மும், "பிரஹத் ஸம்ஹிதை"யும் இன்றும ஜோதிஷ வான சாஸ்திரங்களுக்குப் பிரமாணமாகத் திகழ்கின்றன.

பிற்காலத்திலும் வானசாஸ்திரம் நமது நாட்டில் பிரபலமாக இருந்து வந்தது. ஆனால், இந்தச் சாஸ்திரம் சோதிடத்திற்கு ஒரு கருவியாக மட்டும் கொண்டதனாலோ என்னவோ, சோதிடத்திற்கு வேண்டிய அளவே கற்கப்பட்டு வந்ததுடன், ஆராய்ச்சியும் அதிகமாகச் செய்யப்படவில்லை. ஆயினும் சென்ற தலைமுறை வரை, சுமாராக எல்லோரும் 'நாள் நக்ஷத்திரம்' பார்க்கக் கற்றிருந்தனர்.

மேல் நாடுகளில் நாகரிகம் வலுக்கவே, விஞ்ஞான மேதாவிகள் பலர் தோன்றினர். அவர்களில் உடு சாஸ்திர விஷயமாகப் பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய கலீலியோ என்னும் மகாநிபுணர், தாம் புதிதாக நிறுவிய தொலை நோக்கிக் கருவியின் (Telescope) மூலம், அகில விசுவத்தின் வியக்கத்தக்க பல உண்மைகளைக் கண்டு வெளியிட்டார். நவீன உடு சாஸ்திரத்திற்குக் கலீலியோவையே தந்தை என்று கொள்ள வேண்டும். பிற்காலத்தில், முக்கியமாகச் சென்ற நூற்றாண்டில், மேல் நாடுகளில் நமது பிரபஞ்சத்தின் தன்மை, அங்கு இயங்கும் கோளங்களின் இயல்பு என்பவை பலவாறு ஆராயப்பட்டுப் பல தத்துவங்கள் வெளிவந்துள்ளன.

அகில விசுவம்

மேக சஞ்சாரம் இல்லாத ஓர் அமாவாசை இரவில், நாம் வானத்தை உற்று நோக்கினால் முதலில் கறுப்பாகக் காணப்படும் வானம் உற்றுப் பார்க்கப் பார்க்க, எல்லையற்ற வெளியின் தோற்றத்தை அளிக்கும். உண்மையில் நாம் எல்லையில்லாத பிரபஞ்ச வெளியைத்தான் காண்கிறோம். இந்த வெளியில், நக்ஷத்திரங்களையும் கிரகங்களையும் தவிர, அநேகமாகப் பொருண்மையே (Matter) இல்லை. எல்லை கணக்கிட முடியாத இந்த வெளியில், இதுவரை மிகவும் சக்திவாய்ந்த தொலைநோக்கி மூலம் கண்டது 25 கோடி ஒளி ஆண்டு தூரம் மட்டுமே.

ஒளி ஆண்டு (Light year)

ஒளி ஆண்டு (Light year) என்றால் என்ன? உடு சாஸ்திரத்தில் கணக்கிட வேண்டிய தூரம் சாதாரண மைல்களில் எத்தனையோ கோடிக்கணக்கானது. ஆகவே இந்த உடு சாஸ்திர தூரத்தைக் கணிப்பதற்கு ஒரு தனி மூல அளவை வேண்டி வந்தது. இந்த மூல அளவைக்குத்தான் ஒளி ஆண்டு என்று பெயர். அதாவது ஒளி ஓர் ஆண்டில் பாயும் தூரம். ஒளி நிமிஷத்திற்கு ஒரு கோடியே பத்து லக்ஷம் மைல் தூரம் பிர

யாணம் செய்கிறதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே ஓர் ஆண்டில் ஆறு லக்ஷம் கோடி மைல் தூரம் ஒளி பாய்கிறது. இவ்வாறு, ஓர் ஒளி ஆண்டு என்னும் தூரம் ஆறு லக்ஷம் கோடி மைல்கள். நாம் இதுவரை கண்டிருக்கும் தூரம் பதினைந்து கோடிக் கோடிக் கோடி மைல்கள். இதைச் சாதாரணமாகச் சொல்லுவது வெகு அசௌகர்யமானதால், சுலபமாக 25 கோடி ஒளி ஆண்டுகள் என்று சொல்லிவிடலாம்.

இந்தப் பிரம்மாண்டமான வெளியில் பல பெரும் கோளங்கள் சுழன்றுகொண்டும், ஒன்றையொன்று சுற்றிக்கொண்டும், கூட்டங் கூட்டமாக மற்றக் கூட்டங்களைச் சுற்றிக்கொண்டும், பித்துப் பிடித்தவை போலச் சதா சலித்துவருகின்றன.

அகில விசுவத்தின் உற்பத்தி

இந்த அகில விசுவத்தின் உற்பத்தியை ஆராய்ந்தபொழுது ஏற்பட்ட ஒரு சித்தாந்தமாவது: காலத்தின் தொடக்கத்தில், இந்தப் பிரபஞ்சம் முழுவதும், இப்பொழுது நாம் காணும் திணிபொருள்களும் (Solid Matter), பாய் பொருள்களும் (Fluid Matter) இன்றிப் பரமாணுக்களது குழுமபாக இருந்தது. அதில் பொருட் கவர்ச்சி சக்தி (Gravitational Force) என்னும் அற்புத சக்தி பிரவேசித்து, பரமாணுக்களைத் திரட்டிப் பெரும் கற்றைகள் ஆக்கிற்று. இந்தக் கோளங்கள் பல பிரிவுகளாகப் பிரிந்தன. இவ்வாறு பிரிந்த கோளங்களில் சூரியனும் ஒன்று. சூரியனைக்காட்டிலும் எத்தனையோ மடங்கு பெரிய வேறு பல கோளங்களும் உண்டாயின. இவ்வாறு பிரிக்கப்பட்ட சூரியனும் நக்ஷத்திரங்களும் பிரபஞ்ச வெளியில் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் பொழுது, சுமார் 20 கோடி அல்லது 30 கோடி வருஷங்களுக்கு முன், சூரியன் தன்னைவிடப் பெரிய நக்ஷத்திரம் ஒன்றின் சமீபத்தில் சற்று முட்டாள்தனமாகவே வந்திருக்க வேண்டும். பெரிய நக்ஷத்திரத்திற்குச் சிறியது தீண்டாத வஸ்து. அருகில் வந்தால் உடனே தகுந்த சிக்ஷை விதிக்கப்படும். பெரிய நக்ஷத்திரம் தனது கவர்ச்சி சக்தியால் சூரியனுக்குக் கொடுத்த அடியில், சூரியனிடமிருந்து ஒரு பகுதி விண்டு ஓடிவிட்டதென்று சொல்கிறார்கள். இவ்வாறு பிரிந்த பகுதி ஒரு தாமரையிதழின் வடிவத்தை ஒத்திருந்தது. அதாவது, நடுவில் அகலமாயும், இரண்டு ஓரங்களிலும் குறுகியும் இருந்தது. இப்படிப் பிரிந்த பகுதி, இன்னும் பல பகுதிகளாகப் பிரிந்து, சூரிய மண்டலம் அல்லது ஞாயிற்றுத் தொகுதி என்ற கூட்டமாகச் சூரியனைச் சுற்றி வருகிறது. இவ்வாறு சூரியனிலிருந்து தோன்றிய கிரகங்களில் நமது பூமியும் ஒன்று.



நக்ஷத்திரக் கூட்டங்கள்

இந்தப் பூமியிலிருந்து நாம் வான வெளியைப் பார்க்கிறோம். முதலில் ஒரு விதநியதியுமின்றி நக்ஷத்திரங்கள் தூலப்பட்டிருப்பதாகத் தோன்றும். கொஞ்சம் ஊன்றிக் கவனித்தால், விசித்திரமான தோற்றங்களுடைய தனித்தனிக் கூட்டங்கள் பலவற்றைக் காணலாம். இந்தக் கூட்டங்கள் சஞ்சரிக்கும் பொழுது ஒன்றைவிட்டு ஒன்று விலகாமற் செல்கின்றன. ஆகவே, தனித்தனிக் கூட்டங்களுக்குத் தனித்தனிப் பெயர்கள் வைக்கப்பட்டன.

நம் முன்னோர்கள் வானத்தில் சூரியனது பாதையை 12 பிரிவுகளாக்கி, மேஷம், ரிஷபம் முதலிய பெயர்களும் அளித்தனர். இந்த 12 ராசிகளிலும் உள்ள 27 பிரதான நக்ஷத்திரங்களுக்கும் நக்ஷத்திரக் கூட்டங்களுக்கும் அசுவினி முதல் ரேவதி ஈருகப் பெயர்கள் அளிக்கப்பட்டன. அவைகளின் ரூபங்கள் ஒருவாறு சொல்லப்பட்டிருப்பதால், அவைகளை நாம் எளிதில் காணலாம். மேல்நாட்டு நாகரிகம், கிரேக்க நாகரிகத்தை மூலமாகக் கொண்டது. ஆகவே, மேல்நாட்டு முறைப்படி நக்ஷத்திர மண்டலங்களுக்கு, கிரேக்க வீரர்கள் தெய்வங்கள் இவற்றின் பெயர்களே வைக்கப்பட்டிருக்கின்றன. பெர்ஸியூஸ் என்னும் கிரேக்க வீரன், அன்ட்ரோமேடா என்னும் கன்னிகையை ஒரு கடல் மிருகத்தினிடமிருந்து விடுவிக்கும் கதை, ஒரு பெரும் நக்ஷத்திரக் கூட்டத்திற்குப் பெயர் வைக்கப் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

கதை மட்டுமல்ல, சரித்திரமும் ஒரு நக்ஷத்திரக் கூட்டத்திற்குப் பெயர் அமைக்க உதவிற்று. மூன்றும் டாலமி (Ptolemy III) என்னும் எகிப்திய சக்கரவர்த்தியின் மனைவி பெரினீஸ் (Berenice) என்பவள் கூந்தலழகிற்குப் பேர்பெற்றவள். அவள் கணவன் யுத்தத்திற்குச் சென்றிருந்த பொழுது, அவன் க்ஷேமமாகத் திரும்பிவருவதற்காகத் தனது கூந்தலையே காணிக்கை செலுத்துவதாகச் சபதம் செய்தாள். கணவன் திரும்பிவந்தான். தெய்வங்களை ஏமாற்ற முடியாமல், தான் செய்த சபதப்படி தனது முடியைத் தெய்வங்களுக்கு அர்ப்பணம் செய்தாள்.

தன் கணவன் கோபிக்காதபடி, வானத்தில் காணும் ஒரு தவிட்டுக் கூட்டத்தைக் (nebula) காண்பித்து, தெய்வங்கள் உண்மையாகவே தனது முடியை அங்கீகரித்தன என்று அவனைச் சமாதானப்படுத்தினாள். இந்தத் தவிட்டுக் கூட்டம் சப்தரிஷி மண்டலத்தின் அருகில (Coma Berenices) பெரினிஸின் கூந்தல் என்னும் பெயருடன் விளங்குகிறது.

இந்த நக்ஷத்திரக் கூட்டங்களை நாம் பார்க்கும் பொழுது, இவை பூமியைச் சுற்றி வருவனபோல் தோன்றுகின்றன. மாலையில் நாம் கிழக்கே பார்க்கும் கூட்டங்கள் கொஞ்ச நேரத்தில் உச்சத்திற்கு வந்து, பிறகு மேற்கே மறைந்துவிடுகின்றன. பூமி தன்னைத் தானே சுற்றி வருகிறது என்று தெரிந்த பிறகு, பூமியின் சுழற்சியினால் இப்பேர்ப்பட்ட தோற்றம் உண்டாகிறது என்று அறிகிறோம்.

பரஸ்பர தூரம்

பூமியில் நாம் ஓரிடத்திலிருந்து ஒரு நக்ஷத்திரக் கூட்டத்தைப் பார்த்துவிட்டு, பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள வேறோரிடத்திலிருந்தும் அதே நக்ஷத்திரக் கூட்டத்தைப் பார்ப்போம். அந்த நக்ஷத்திரக் கூட்டத்தில் யாதொரு மாறுதலும் காணாது. ஆனால், வெகு தூரத்திலுள்ள இரண்டு இடங்களிலிருந்து, இரு கிரகங்களைப் பார்ப்போமானால், அவற்றின் பரஸ்பர நிலை வேறுபட்டுக் காண்கிறது. இதன் காரணம், நக்ஷத்திரங்கள் கிரகங்களைக் காட்டிலும் பூமிக்கு வெகு தூரத்தில் உள்ளன.

பூமிக்கு மிகவும் சமீபத்தில் உள்ள நக்ஷத்திரம் ப்ரக்ஸிமா ஸெஞ்சுவரி (Proxima Centuari) என்பது. இதன் தூரம் $4\frac{1}{2}$ ஒளி ஆண்டுகள்; அதாவது 25 லக்ஷம் கோடி மைல்கள். இதனுடன் ஒப்பிடும்பொழுது, சூரியன் வெகு சமீபத்தில் உள்ளது. 9 கோடியே 30 லக்ஷம் மைல் மட்டும் கொண்டது. சந்திரன் இதோ அடுத்த வீடு; 2 லக்ஷத்து 30 ஆயிரம் மைல் மட்டுமே.

துருவ நக்ஷத்திரம்

ஆகாயத்தில் இலக்குக் கண்டுபிடிக்க ஆதாரமாக எடுத்துக்கொள்ளத் துருவ நக்ஷத்திரம் வெகு சுலபமானது. துருவ நக்ஷத்திரம் உத்தர துருவத்திற்கு நேர் உச்சியில் உள்ளது. நேர் வடக்குத் திசையைக் காண்பிப்பதற்கும் உதவுகிறது. இந்தத் துருவ நக்ஷத்திரத்தைப் பற்றிய வேடிக்கை என்னவென்றால், இது மாறிக்கொண்டே வருகிறதாம். அதாவது, 5000 வருஷங்களுக்கு முன், நமது உத்தர துருவம் த்யூபான் (Thuban) என்று இப்பொழுது சொல்லப்படும் நக்ஷத்திரத்திற்குக் கீழ் இருந்ததாம். அப்பொழுது இந்த "த்யூபான்" நக்ஷத்திரம் துருவ நக்ஷத்திரமாகக் கருதப்பட்டிருக்க வேண்டும்.

பிரஸெஷன்

இதன் காரணம், பூமி சூரியனுடைய கவர்ச்சியினால் பிணிக்கப்பட்டிருக்கிறது. பூமி பழுதற்ற கோளமாக இருந்தால், இந்தச் சூரியனின கவர்ச்சி பூமியின எல்லாப் பாகங்களையும் சமமாகப் பாதிக்கும். ஆனால், பூமி கோழி முட்டை வடிவமாக இருப்பதால், பல்வேறு இடங்களில் இந்தக் கவர்ச்சி பலவிதமான பலத்துடன் பாதிக்கிறது. ஆகவே பூமியின் அச்சுச் சாய்வு மாறிக்கொண்டே வருகிறது. இதனால், பூமி சுழலுவதுடன், மது உண்டு மயங்கியவன் போல ஆடிக்கொண்டே வருவதால், அச்சின் நுனி அதாவது வடதுருவம் வட்டமிடுகிறது. இவ்வாறு ஒரு முழு வட்டமிட 25,800 ஆண்டுகள் ஆகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த விநோதத்திற்கு ஆங்கிலத்தில் "பிரஸெஷன்" (Precession) என்று சொல்லுகிறார்கள்.

ஸப்தரிஷிகள்

துருவ நக்ஷத்திரத்தின் சமீபத்தில் பிரகாசமான பெரும் கேள்விக்குறி வடிவத்தில் ஏழு நக்ஷத்திரங்களைக் காணலாம். மேல் நாட்டார் இவற்றைப் பெரும்கரடி (Great Bear - Ursa Major) என்கின்றனர். நாம் இவற்றிற்குப் பூஜ்யஸ்தானம் அளித்து ஸப்தரிஷிகள் என்கிறோம. இவற்றில் ஒன்றை வசிஷ்டர் என்றும் அதன் அருகில் காணும் ஒரு சிறு நக்ஷத்திரத்தை அருந்ததி என்றும் சொல்லுகிறோம். விவாக காலங்களில், புது மணப் பெண்ணுக்குக் கற்பின் ஆதர்சமாகக் காட்டப்படுவது இந்த அருந்ததி நக்ஷத்திரமே. இந்த வழக்கம் தமிழ்நாட்டில் வெகுகாலமாக இருந்துவந்தது என்பதற்குச் சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் சான்று.

ஸப்தரிஷி மண்டலம்



ஓரியன்

ஸப்தரிஷி மண்டலத்திற்குச் சற்றுத் தென்மேற்கில், வானத்திலேயே மிகவும் அழகிய ஒரு நக்ஷத்திரக் கூட்டத்தைக் காணலாம். நடுவில் மூன்று பிரகாசமான நக்ஷத்

திரங்கள், மேலும் கீழுமாகச் சம தொலைவில் இரண்டு பிரகாசமான நக்ஷத்திரங்கள், இவைகளைக் கொண்ட இந்தக் கூட்டத்தை ஓரியன் கூட்டம் என்கின்றனர். நம்மவர் காலபுருஷ மண்டலம் என்று சொல்லுகிறார்கள். இந்தக் கூட்டத்தை ஓர் அரக்கனாகவும் நடு மூன்று நக்ஷத்திரங்களை அவனது அரைக்கச்சையாகவும் பக்கத்திலுள்ள மூன்று சிறு நக்ஷத்திரங்கள் அவனது வாளாகவும், மேலே சற்றுத் தூரத்தில் காணும் நக்ஷத்திரம் - அதாவது திருவாதிரை - அவனது தலையாகவும், கீழே காணும் நக்ஷத்திரம் அவனது பாதமாகவும் கூறப்படுகின்றன. இந்தக் கூட்டத்தின் சமீபத்தில் காணும் மிகப் பிரகாசமான நக்ஷத்திரத்தை அக்கினி நக்ஷத்திரம் என்று சொல்லுவார்கள். ஆங்கிலத்தில் ஸிரியஸ் (Sirius) அல்லது 'டாக் ஸ்டார்' (Dog Star) எனப்படும் இது, வானத்திலேயே மிகவும் ஒளி வீசும் நக்ஷத்திரம். ஆயினும், பூமியிலிருந்து எட்டு ஒளி ஆண்டுத் தூரம் கொண்டது.



கிரகங்கள்

இன்னும் இவைபோன்ற பல நக்ஷத்திரங்களையும் நக்ஷத்திரக் கூட்டங்களையும் வானத்தில் காணலாம். இவை பூமிக்கு வெகு தொலைவில் இருப்பதால், இவற்றின் சஞ்சாரம் நமக்குப் புலப்படுவதில்லை. நமக்கு ஓரளவு பக்கத்தில் இருப்பவை கிரகங்கள். சமீபத்தின் காரணத்தால் இவற்றின் சஞ்சாரம் நமக்கு நன்றாகப் புலப்படுகிறது. ஆகவே, கிரேக்கர்கள் இவற்றிற்குப் ப்ளானெட்ஸ் அல்லது சஞ்சாரிகள் என்று பெயரளித்தனர். சாதாரணமாகக் கிரகத்திற்கும் நக்ஷத்திரத்திற்கும் தோன்றும் வித்தியாசம்: நக்ஷத்திரங்கள் மினுமினுக்கும், கிரகங்கள் அசையாத ஒளி விட்டுக்கொண்டிருக்கும்.

சூரியமண்டலம்

இந்தக் கிரகங்கள் சூரியனிலிருந்து உற்பத்தியானவை என்று சொல்லப்பட்டது. ஆகவே, இவற்றின் தொகுதிக்குச் சூரிய மண்டலம் அல்லது ஞாயிற்றுத் தொகுதி என்று பெயர்.

கிரகங்களது சஞ்சாரம் நமக்கு வெகு நன்றாகப் புலப்படும். நக்ஷத்திரங்கள் அசைவதே தெரிவதில்லை. ஏனெனில், சூரியனைத் தலைவனாகக் கொண்ட இக் குடும்பம், ஒப்பிட்டு நோக்கும் பொழுது ஒன்றிற்கு ஒன்று வெகு சமீபத்தில் உள்ளது. ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள வெளிக் கிரகம் சுற்றும் வட்டத்தின் குறுக்களவு சுமார் 748 கோடி மைல்களே; அதாவது 1/750 ஒளி ஆண்டுமட்டும். ஆனால், நமக்கு வெகு சமீபமான நக்ஷத்திரம் $4\frac{1}{4}$ ஒளி ஆண்டு தூரம் கொண்டது, அதாவது நமக்கும் சூரியனுக்கும் உள்ள தூரத்தைக் காட்டிலும் 2,70,000 மடங்கு தூரம் உள்ளது. ஆகவே ஞாயிற்றுத் தொகுதி ஒரு தனிச் சிறு கூட்டமாக வான வெளியில் இயங்கி வருகிறது. இந்தக் கூட்டத்திற்கும் அடுத்த கூட்டத்திற்கும் உள்ள இடைவெளி மிகப் பெரிது. ஓர் அறையில் ஞாயிற்றுத் தொகுதி அடங்குமானால், அதற்கு மிகப் பக்கத்தில் இருக்கும் நக்ஷத்திரம் சுமார் முந்நூறு மைல் தூரத்தில் இருக்கும். அந்த அறையிலும் சூரியன் ஒரு குன்றிமணியின் அளவும், மற்றக் கிரகங்கள் துகளின் அளவுந்தான் காணும்.

முதலில், கிரகங்களின் சஞ்சாரத்தைக் கவனிக்க, பூமியை அடிப்படையாகக் கொண்டு, கிரகங்கள் பூமியைச் சுற்றுகின்றன என்ற அநுமானத்தின் பேரில் சென்றார்கள். ஆனால் 1543-ஆம் ஆண்டில், காப்பெர்னிகஸ் (Copernicus) என்னும் உடு சாஸ்திரி, சூரியன் இந்தக் கிரகக் கூட்டத்திற்குத் தலைவன் என்றும், பூமியுட்பட எல்லாக் கிரகங்களும் சூரியனைச் சுற்றுகின்றன என்றும் நிரூபித்தார். பிறகு கலீலியோ தமது தொலை நோக்கிக் கருவிமூலம், இந்தச் சித்தாந்தத்தை ஊர்ஜிதம் செய்தார்.

கிரகங்கள் ஒன்பது என்று நம் முன்னோர்கள் கூறிவந்திருக்கின்றனர். அவையாவன ரவி, சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது. மேல்நாட்டார், முதலில் ஐந்து கிரகங்களையே கண்டுபிடித்திருந்தனர். அவைகளாவன மெர்க்குரி (புதன்), வீனஸ் (சுக்கிரன்), மார்ஸ் (செவ்வாய்), ஜூபிடர் (குரு) ஸாடர்ன் (சனி). பிற்காலத்தில் நெப்டியூன், யுரானஸ் என்ற கிரகங்களும், ஆஸ்டிராயிட்ஸ் என்ற கிரகக்

கூட்டமும் கண்டுபிடிக்கப்பட்டன. வெகு சமீபத்தில், 1930-ஆம் ஆண்டில் மார்ச் மாதம் அமெரிக்காவில் ப்ளாக் ஸ்டாப் (Flag-staff) வான ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர் லொவெல் (Prof. Lowell) என்பவர் பதினைந்து ஆண்டுகள் ஆராய்ந்ததன் பயனாக, ப்ளூட்டோ என்னும் கிரகம் கண்டு பிடிக்கப்பட்டது. ஆனால், துரதிருஷ்டவசமாக, இந்தக் கிரகம் நிச்சயமாக நிர்ணயம் செய்யப்படுமுன் ஆசிரியர் லொவெல் காலமானார்.

சூரியன்

இனி இந்தத் தொகுதியின் தலைவனை சூரியனைப்பற்றிச் சில வார்த்தைகள். சூரியன் ஒரு பிரம்மாண்டமான திறனுள்ள (Energy) பொக்கிஷம். இந்தப் பொக்கிஷத்திலிருந்து பூமிக்குக் கிடைப்பது 200 கோடியில் ஒரு பகுதியே. அது மட்டுமே ஒரு சதுர கஜத்திற்கு ஓர் அசுவ சக்தி (Horse Power)ப் பிரமாணம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. சூரியனின் உட்புறம் சதா கொதித்துக் கொண்டும் பல பக்கங்களிலும் தெறித்துக் கொண்டும் உள்ள அனற்குழம்பு. அதனிடமிருந்து உற்பத்தியாகும் திறன் ஒளியாகவும் உஷ்ணமாகவும் நாலு பக்கமும் பரவுகிறது. அதன் மேல்தளத்தில் கிடைக்கும் திறனை அளப்பதானால், ஒவ்வொரு சதுர அங்குலத்திற்கும் 50 அசுவ சக்தி என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு சூரிய கோளத்திற்கு வெளியே தள்ளப்படும திறன், அனல் மலைகளாகவும், மற்றும் விசித்திர ரூபங்களாகவும் சூரிய வட்டத்திற்கு மேல் எழும்புவதாகக் காணலாம்.

தொலை நோக்கி மூலம் பார்க்கும் பொழுது, சூரியனது தளத்தில் சில கரும் புள்ளிகள் காணப்படுகின்றன. இவை திறன்வெள்ளத்தின் சுழல்கள் என்று அநுமானிக்கப்படுகின்றன.

இவ்வாறு திறன் குழம்பான இந்தப் பயங்கர கோளத்தின் அனற்பதம் (Temperature) 4 கோடி கூறுகள் (Degrees). இந்த உஷ்ணத்தில் சூரியனில் கன திரவ வாயு பதார்த்தங்கள் தங்கமுடியாது. எல்லாம் அணுக்களாகவும் பரமாணுக்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த அணுக்கள், உள்ளிருக்கும் கொடிய உஷ்ணத்தால், நாலு பக்கமும் சிதறி விடாமல் காப்பது சூரியனுக்குள் இருக்கும் அழுத்தம் (Pressure). நமது வாயு மண்டலத்தின் அழுத்தத்தைவிட 4 ஆயிரம் கோடி மடங்கு கொண்டது. இந்த அழுத்தம் இல்லாவிட்டால் சூரியன் வெகு சீக்கிரம் வானவெளியில் கரைந்து, தன்னையும் தன் குடும்பத்தையும் அழித்துவிடும்.

சூரியனது குறுக்களவு 8,64,000 மைல், அதாவது பூமியினது குறுக்களவைவிட 109 மடங்கு. பூமியிலிருந்து தூரம் 9 கோடியே 30 லக்ஷம் மைல்.

ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள பிரதான கிரகங்களைத் தவிர, பல உபக்கிரகங்களும் (Satellites) உள்ளன. இவை பிரதான கிரகங்களிலிருந்து பிரிந்து, அவைகளையே சுற்றிச் சுற்றி வருகின்றன. சந்திரன் பூமியின் ஓர் உபக்கிரகமே. குருவிற்கு 9 உபக்கிரகங்கள் உள்ளன. ஆஸ்டிராயிட்ஸ் (Asteroids) என்னும் கிரகக் கூட்டமே, ஒரு பெரும் கோளமாக இருந்து, பிறகு பல சுக்கல்கள் ஆயின.

சனிக் கிரகத்தைச் சுற்றி ஒரு வளையம் காணப்படுகிறது. இந்தக் கிரகத்தின் உபக்கிரகங்கள் - அவற்றின் எண்ணிக்கை மிகப் பல – அதைத் தொடர்ச்சியாகச் சுற்றி வருவதால், இந்த வளையம்போன்ற தோற்றம் ஏற்படுகிறது.

வானசாஸ்திர ஞானத்தினால் சாதாரண ஜனங்களுக்கு என்ன பலன்? உலகில் நாம் எவற்றை மிகப் பெரிது என்று கருதுகிறோமோ, அவை பிரபஞ்சத்தில் இயங்கும் மகத்தான கோளங்களின் முன் அணுப்பிரமாணமாகின்றன. உலகங்களைப் பந்து உருட்டுவதுபோலச் சலிக்கச்செய்யும் மகா சக்தியை நினைக்கும்பொழுது, நமது சிறுமை புலனாகிறது. தவிர, ரூப குணமற்ற இறைவனின் சக்தி பிரபஞ்சத்திற்குக் காரணம் என்பது வேத நூல் துணிபு. வானசாஸ்திரத்தில் நாம் அறியும் பொருட்கவர்ச்சி என்னும் அற்புத சக்தி, ஈசுவரனின் அபரிமிதமான சக்தியை நாம் ஓரளவு உணரச் செய்கிறது. இறைவனுக்கு ரூபம் குணம் இவைகளைக் கற்பித்து, அதன் மூலம் சண்டையிடும் நமது பேதைமையும் சிறுமையும் வெளியாகின்றன. இந்த உணர்ச்சி ஏற்படும்பொழுது, நாமும் "முத்தொள்ளாயிர" ஆசிரியருடன்,

"மன்னிய நாள்மீன் மதிகனலி
என்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப் -
பின்னரும்
ஆதிரையான் ஆதிரையான் என்றென்
றயருமால்
ஊர்திரைநீர் வேலி யுலகு"

என்று உலகைப் பரிகசிக்கத் தோன்றுகிறது.

[மாலையில் உலவப் புறப்பட்டபோது வீதியில் நின்று அழுதுகொண்டிருந்த குழந்தையைக் கண்டு பாடியது.]

1

ஆருடைய குழந்தைஇது
அழுதுகொண்டு நிற்கிறதே
சீருடைய முகம்சிவக்கச்
சிறுகையால் கண்பிசைந்து
விம்மிவிம்மித் தேம்பி
விழிநீர் மிகப்பெருக்கி
அம்மம்மா என்றுசொல்லி
அங்குமிங்கும் பார்க்கிறதே!
(ஆருடைய குழந்தையிது
அழுதுகொண்டு நிற்கிறதே!)

2

மையைப் பொருவும்இருள்
மாய்க்கவரும் ஞாயிறுபோல்
வையத் திருள்வாழ்வை
வளரின்ப மாய்ச்செய்யும்
தெய்வச் சுடர்க்குழந்தை
சிரித்தமுகம் வாடிமிக
நையக்கண் டால்உள்ளம்
நடுங்குகின்ற தென்செய்கேன்!
(ஆருடைய குழந்தையிது
அழுதுகொண்டு நிற்கிறதே!)

3

கன்னத்தில் முத்துதிரக்
கவலையிருள் தான்படர
என்னத்துக்காக இந்த
இளங்குருத்து வாடினதோ
சின்னஞ் சிறுமொட்டு
சிரித்துமகிழ்ந் தாடாமல்
கொன்னி யிதழ்பிதுக்கிக்
குலைகின்ற காரணம்என்?
(ஆருடைய குழந்தையிது
அழுதுகொண்டு நிற்கிறதே!)

4

பூவுலகைப் பார்க்கவந்த
பொன்னாட்டுத் தூதெனவே
மேவுமிளங் குழந்தையழ
விடலாமோ? விண்ணோர்கள்
தாமிதனைச் சகிப்பாரோ?
தடத்தருகே மைந்தனழத்
தேவியரன் தன்னோடும்
தேடியங்குப் போந்திலளோ?
(ஆருடைய குழந்தையிது
அழுதுகொண்டு நிற்கிறதே!)

ஜந்துக்களின் கண்கள்

ஆர். கோபாலையர்

மீன், தவளை, பல்லி, புறு, முயல் முதலிய ஜந்துக்களுக்கும், அவை போன்ற மற்ற முதுகெலும்புள்ள ஜந்துக்களுக்கும் இரு கண்கள் உள்ளன. மனிதனுக்கும் அப்படியே. வெளிச்சம், இருள் என்னும் உணர்ச்சியைத் தெரிவிக்கும் கருவிகள் கண்களேயாகும். அவற்றின் உதவியினாலேயே உலகத்தில் இருக்கும் பொருள்கள் மேற்கண்ட பிராணிகளுக்குப் புலப்படுகின்றன. முதுகெலும்பு இல்லாத அமீபா, ஹைட்ரா, மண்புழு, நத்தை, நண்டு, கிளிஞ்சல், கடமான் போன்ற ஜந்துக்கள் எவ்விதம் வெளிச்சம் இருள் என்ற வித்தியாசத்தை உணர்ந்துகொள்கின்றன என்பதை விளக்குவோம்.

ஜந்து வர்க்கங்கள் ஆயிரக் கணக்கான வருஷத்தில் தேக அமைப்பில் பல விதத்தில் சிறிது சிறிதாக மேம்பாடு அடைந்து தற்கால நிலைமையை அடைந்திருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். ஜந்துக்களில் மிகவும் சிறியதும் தேக அமைப்பில் எளியதுமான 'அமீபா' (Amoebā) வுக்குக் கண்கள் என்று சொல்லப்படும் உறுப்புகள் இல்லை. ஆனால் அவற்றை ஒரு கண்ணாடித் தட்டில் வைத்துப் பூதக்கண்ணாடியின் வழியாகப் பார்த்தால் அதிகம் வெளிச்சமிருக்கும் நடுவிலிருந்து வெளிச்சம் குறைவாக இருக்கும் இடத்தை நோக்கிச்செல்வதைப் பார்க்கலாம். இந்த ஜந்துவுக்கு வெளிச்சம் இருள் என்ற வித்தியாசத்தைப் பகுத்தறியும் தன்மை தேகம் முழுவதிலும் பரவியிருப்பதாக எண்ண வேண்டியிருக்கிறது. அமீபாவுக்குமேற்பட்ட பரமேசியம் (Paramoecium) என்ற ஒற்றையணுப் பிராணி கண்கள் என்று சொல்லும் உறுப்புகள் இல்லாதபோதும் (படம் 4) இருட்டுப் பக்கத்தை விட்டு விலகி வெளிச்சம் இருக்கும் திக்கை நோக்கி நீந்திச் செல்லும் குணம் பெற்றிருக்கிறது. இதனால் இப்பிராணிக்கு இருள் வெளிச்சம் என்ற வித்தியாசத்தை அறிந்துகொள்ளும் உணர்ச்சி உண்டு என்று தெரிகிறது. இதைப் போன்ற மற்ற ஜந்துக்கள் வெளிச்சத்தைக் கண்டு விலகியும், இருளை அணுகியும் சஞ்சரிக்கும் குணமுள்ளன.

இந்த எளிய ஜந்துக்கள் போன்ற யூக்ளீனா (Euglena) என்னும் சில ஜந்துக்களுக்கு (படம் 1) வெளிச்சம் இருள் என்ற வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ளும் உணர்ச்சி இருந்தபோதிலும் சிறிய மைப் பொட்டுப் போன்ற புள்ளி அதன் தேகத்தில் ஒன்றோ அல்லது இரண்டோ காணலாம். இந்த மைப்பொட்டுகளின் நிறம் வெவ்வேறு விதமாக இருக்கலாம். இந்தச் சிறிய உறுப்புகளின் உதவியினால் சாதாரண வெளிச்சத்தை நோக்கிச் செல்லவும், கடுமையான வெளிச்சத்தை விட்டு விலகிச் செல்லவும் சக்தியுள்ளனவாக இருக்கின்றன.

நமது தேகத்தில் உள்ள அவயவங்களுக்கெல்லாம் அமைப்பில் ஆச்சரியத்தைத் தரக்கூடிய அவயவம் நம் கண்களே என்று ஒரு விதத்தில் சொல்லலாம். கண்ணுக்குப் பலவித பாகங்கள் உள்ளன. கண்ணின் ஆரம்பம் இந்தச் சிறிய பொட்டுப்போன்ற உறுப்பு என்றே கூறலாம். என்னே கடவுளின் சிருஷ்டி!

ஜெல்லி மீன் (Jelly fish) என்று சொல்லப்படும் ஜந்துக்கள் குடை வடிவமானவை. இந்த வடிவம் பெற்றிருப்பதனால் நாலு புறங்களிலிருந்தும் வரும் வெளிச்சத்தை உணரும்படி பல கறுப்புப் புள்ளிகளுடையனவாக இருக்கின்றன. ஜெல்லி மீன் போன்றவை சமுத்திரத்தில் அங்குமிங்கும் சஞ்சரிப்பவை. வெளிச்சத்தைத் தெரிந்து கொள்ளும் உணர்ச்சி பலமாக ஏற்பட்டிருப்பது நியாயமாகும். நமக்கு அதிக வெளிச்சத்தைக் கண்டால் எப்படிக் கண்கள் கூசுகின்றனவோ அது மாதிரியே அவற்றிற்கும் ஏற்படும். இந்தக் காரணத்தால் அவை அதிகமான சூரிய வெளிச்சம் படும் நீர் மட்டத்தை விட்டுச் சிறிது கீழேயே பகற்காலத்தில் சஞ்சரித்து, சூரியன் அஸ்தமித்து இருட்டாகும் காலத்தில் சமுத்திரத்தின் மேற்பாகத்திற்கு வரும் குணமுள்ளவை.

இது இப்படி இருக்க, சமுத்திரக் கரையில் மணற்பாங்கான பாகங்களில் மணலில் பதிந்து கிடக்கும் கிளிஞ்சல்களுக்குக் (Bivalves) கண்கள் என்ற உறுப்பே இல்லை. ஏனென்றால் இந்தக் கிளிஞ்சல்கள் மணலில் எப்பொழுதும் புதைந்து கிடப்பதனால் அவைகளுக்கு வெளிச்சம் இருள் என்கிற வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ள அவசியம் ஏற்படவில்லை. எனவே அவற்றிற்குக் கண்கள் அவசியமில்லை என்பது தெளிவாகும்.

கிளிஞ்சல் ஜாதியைச் சேர்ந்த முத்துச் சிப்பியைப்போன்ற இனங்களுக்குத் தேகத்தில் வரிசையாக ஏற்பட்ட பல கண்கள் உள்ளன. இதற்குக் காரணம் இந்த முத்



1



2



3



4

துச் சிப்பி முதலியவை எப்பொழுதும் ஒரே இடத்தில் ஒரு கல்லின் மேல் ஒட்டிக் கொண்டு வசிக்கும் தன்மையுள்ளன. இம்மாதிரியான ஜந்துக்களுக்கு நாலு புறங்களிலிருந்தும் வரும் எதிரிகளினால் உண்டாகும் நிழல் தன்மேல் விழுந்தவுடன் அதை உணர்ந்து உடனே தன்னுடைய மென்மையான தேகத்தைச் சீக்கிரமாக, தேகத்தைப் போர்த்திய ஓடுகளுக்குள்ளே இழுத்துக்கொள்ளும். 'நக்ஷத்திர மீன்' (Star fish) என்னும் ஐந்து கைகள் உள்ள பிராணிக்குக் கை ஒவ்வொன்றின் நுனியிலும் சிறிய கண் பொட்டு உண்டு (படம் 2). பக்கத்தில் கால்கள் போன்று அமைந்திருக்கும் 'பாரபோடியா' என்ற உறுப்புகளினால் வேகமாக ஊர்ந்து செல்லும் பிராணிகள் பல உள்ளன. அவைகளில் "நெரீஸ்" (Nereis) என்ற புழுவைச் சாதாரணமாகச் சமுத்திரத்தில் கற்களினிடையே காணலாம். இந்த ஜந்துவுக்குத் தலையின் இரு பக்கத்திலும் கறுப்புப் பொட்டுப்போல் பக்கத்திற்கு இரண்டு கண்கள் இருக்கின்றன. இவைகளின் அமைப்பு, 3-ஆம் படத்தில் காட்டியிருக்கிறது. வெளிப்புறம் கண்ணாடியைப் போன்ற லென்ஸூம் (Lens) உட்புறம் மையடைந்த அணுக்களால் சேர்க்கப்பட்டு வெளிச்சத்தைத் தெரிந்துகொள்ளும் 'ரெடினா' போன்ற பாகம் ஒன்றும் இருக்கின்றன. இதன் கண்கள் முதுகெலும்பு போன்ற பிராணிகளின் கண்களைப் போல் அமைப்பில் அவ்வளவு உயர்ந்த தன்மையுடையவை அல்ல. 'நெரீஸ்' வர்க்கத்தைச் சேர்ந்த ஜந்துக்கள் பல உள்ளன. அவைகள் தாமே சஞ்சரித்துச் செல்லும் தன்மையுள்ளன. இன்னும் பல (Dasychone) அப்படிச் சஞ்சரிக்கும் வழக்கத்தை விட்டு ஒரே இடத்தில் தங்கித் தம்மால் உண்டாக்கப்பட்ட குழாய் போன்ற வீடுகளில் வசிக்கும் (படம் 5). அடிக்கடி தமது உணவுக்கும், சுவாசிக்கப் பிராணவாயுவுக்கும் தலைப் பாகத்தை வெளியில் நீட்டும். இத்தகைய பிராணிகளுக்கு நாலு பக்கத்திலும் வெளிச்சம், இருள் என்பதைத் தெரிந்துகொள்ளும் சக்தி இருந்தால் பிரயோசனமாகும். அதற்காகவே இதற்கு அணியணியாகக் கண்கள் அமைந்துள்ளன. இதைப் படத்தில் காணலாம்.

நத்தை (Snail) போன்ற ஜந்துக்களுக்குக் கண்கள் நீளமான இரண்டு காம்புகள் மேல் ஏற்பட்டுள்ளன (படம் 6). இக்கண்களின் அமைப்பு 'நெரீஸ்' என்ற

பிராணியின் கண்களைக் காட்டிலும் சிறிது உயர்வான அமைப்பு என்று சொல்ல வேண்டும். நமக்குக் கண்கள் கூசும்போது கண்களை மூடிக்கொள்வது போல், அபாயம் நேரிடும்போது கண்ணை உள்ளே இழுத்துக் கொள்ளும் சக்தி உண்டு. இதுவரைக்கும் சொன்ன கண்களின் அமைப்புக்கள் தனித்தனியாக இருந்து உபயோகப்படும் தனிக் கண்கள் என்று சொல்லலாம்.

கரப்பான் பூச்சி, வண்ணுத்தி, மரவட்டை முதலிய ஜந்துக்களுக்குப் பல சிறிய கண்கள் ஒன்று சேர்த்து அமைக்கப்பட்ட 'சேர்க்கைக் கண்கள்' என்று சொல்லப்படும் கண்கள் உண்டு. சமுத்திரக் கரையில் வேகமாக ஓடிச் செல்லும் நண்டுக்கும் இவ்விதமான கண்களே குச்சி போன்ற உறுப்புகளின் மேல் அமைக்கப்பட்டுள்ளன. இதை 7-ஆவது படத்தில் காணலாம். கடைசியாக, சமுத்திரத்தில் வாழும் கடமான் என்ற ஜந்துவின் கண்கள் மிகவும் ஆச்சரியமானவை. (படம் 8.) அமைப்பில் மனிதன் கண்களைப்போலவே ஏற்பட்டுள்ளன. கடமான் கண்ணுக்கும் மனிதன் கண்ணுக்கும் உள்ள நெருங்கிய ஒற்றுமையை இதில் வரைந்துள்ள சித்திரத்திலிருந்து நன்ருகத் தெரிந்துகொள்ளலாம். கடமானுக்கும் மனிதனுக்கு உபயோகப்படுவது போலவே கண்கள் உபயோகப்படுகின்றன. கற்களின் நடுவே இருந்துகொண்டு தம் கைகளை நீட்டித் தூரத்திலிருக்கும் உணவுக்கு உபயோகப்படும் பிராணிகளை இழுத்துக் கொல்லவும், தமக்கு விரோதியான ஜந்துக்கள் அணுகா முன்னமே பதுங்கிக் காப்பாற்றிக் கொள்ளவும் சக்தியுடையன.

இம்மாதிரியாக முதுகெலும்பில்லாத பிராணிகள் சிறியனவாக இருந்து காலக்கிரமத்தில் விருத்தியாகித் தேக அமைப்பில் வரவர ஏற்றமடைகிறபோது, அவற்றின் கண்களும் முதலில் வெளிச்சம் இருள் என்ற வித்தியாசத்தை மட்டும் தெரிந்து கொள்ளும் சக்தியுடையனவாக இருக்கின்றன. பிறகு இந்தச் சக்தியை மட்டுமின்றி, தம் முன் நிற்கும் பொருள்களைத் தமக்கு உணவுப் பொருள்கள் என்றும் விரோதிப் பொருள்கள் என்றும் தெரிந்து அதற்குத் தகுந்தபடி நடந்துகொள்ளும் சக்தியைப் பெற்றுள்ளன. இதற்குத் தகுந்தபடியே கண்களைச் சேர்ந்த பாகங்களும் சிறிது சிறிதாக விருத்தியாகி மேம்பாடு அடைந்துள்ளன என்று கருதவேண்டியிருக்கிறது.



5



6



7

8

வேணு

தி. கிருஷ்ணசாமி

வெண்ணிலவு பொழியும் இன்ப இரவிலே தோழி, அவ்வேணுகானம் மீண்டும் ஒலித்தது. ஒவ்வொரு சமயத்தில் அந்த அழைப்பு என் காதுகளில் நன்ருகக் கேட்கிறது. அப்போதெல்லாம் அங்கே போக வேண்டும் என்று என் நரம்புகள் துடிக்கின்றன. சில சமயங்களில் எங்கோ வெகு தூரத்திலிருந்து அந்த இன்னிசை அரை குறையாகக் காதில் விழுகிறது. அப்போதெல்லாம் என் இருதயத்திலே ஓர் ஏக்கம், இன்பம் கலந்த சொல்லொணுத ஒரு வேதனை......

பிறகு ஏனே நான் இவையெல்லாம் மறந்துவிடுகிறேன்! உலக வாழ்க்கையில் தீவிரமாய் ஈடுபட்டுவிடுகிறேன். எண்ணற்ற ஆசைகள், இன்ப விலங்குகள், என்னைச் சூழ்கின்றன.

அன்பு இன்பம் என்ற இப்போர்வைகளுக்குள் விஷ முட்கள் இருக்கின்றன என்பதை நான் அறிவேன். அறிந்தும் ஏனே இதில் ஈடுபட்டுவிடுகிறேன்! நான் இவ்வாறு ஆகவேண்டும் என்பதுதான் பலருடைய விருப்பமாகும். ஒவ்வொருவருக்கும் - பிறந்து, வாழ்ந்து, இறந்து சுடுகாட்டுக்குப் போகும் வரையும் - வாழ்வின் லக்ஷயம் என்பதே இவ்வளவுதான் என்பது அவர்கள் எண்ணம். இந்நாட்களிலெல்லாம் அவ்வின்பக் குழலிசை என் செவிகளில் ஒலிப்பதே இல்லை. ஆனுல்...

இன்னல்கள் வந்து மோதும்பொழுது, தாங்க முடியா வேதனையினுல் இருதயம் வெடித்து விடும்போல் இருக்கும்போது மன அமைதியின்றிப் பைத்தியம்போல் அலையும்பொழுது, வாழ்வின் மேலேயே வெறுப்பு ஏற்படும்போது, அவ்வேய்ங் குழலிசையை ஒரு தரம் கேட்க மாட்டோமா என ஏங்குகிறேன். அது மட்டும், "அன்பே! வா என் பின்! உண்மையின்பம் இங்கு இல்லை" என்று அழைக்குமாயின் எல்லாவற்றையும்

கானம்

எழுதியது

துறந்துவிட்டு வர நான் தயார்!

பந்தங்களையெல்லாம் அறுத்தெறிந்துவிட்டு மஹோன்னதமான மலைச் சிகரங்களில் ஏறி மஹரிஷிகளின் புனித நினைவுகளைக் கொண்டுவரும் மஹாநதிகளின் பிறப்பிடங்களைக் கண்டு களிப்பேன். சாந்தமயமான காலை வேளையை, அந்தியின் செக்கர் வானத்தை, இரவில் கண் சிமிட்டும் விண் மீன் தோழிகளை, மோகன நிலவைக் கண்டு, பறவைகளின், அருவியின் இன்னொலியைக் கேட்டு ஆனந்தமாக வாழ்வேன்.

அன்புக் கண்ணனது அற்புத வேணு கானம் மீண்டும் ஒலிக்கட்டும்! அதன் வழியே சென்று அவனை அடைவேன். அது முடியாவிடின் என்றும் அவன் புகழைப் பாடிக்கொண்டாவது இருப்பேன்.

ஆனால் இவ்வாறு செய்ய என்னால் இயலுமா? தடைகள் ஒரு புறம் இருக்கட்டும். முதலில் எனக்கு உறுதி உண்டா? இல்லை, இல்லை; நிச்சயமாய் எனக்கு அவ்வளவு உறுதி இல்லை. ஆனால் இவ்வாழ்வின் துன்பத்தையும் என்னால் பொறுக்க முடியாது.

எவ்வளவோ நாட்கள் இவ்வாறு மன அமைதியின்றிக் கழிந்தன. நேற்றிரவிலே, "மனித வர்க்கத்துக்குச் செய்யும் தொண்டே மனச் சாந்தியடையும் வழி" என்று யாரோ சொன்னது கேட்டுத் திடுக்கிட்டு விழித்தேன்.

ஆ! அது என்ன? ஆம், அதே குழலிசை மீண்டும் - அழைக்கவில்லை - இனிமையாக ஒலித்தது. அது உடலுக்கு, மனத்திற்கு, உயிருக்குப் புத்துணர்ச்சியைக் கொண்டு வந்தது. மனத்தில் சாந்தி என்னும் அமுதைப் பொழிந்தது.

பிரிய சகி! வாழ்வில் என்றும் இவ் வேணுகானம் ஒலித்துக்கொண்டு இருக்கட்டும். இதுவே என் பிரார்த்தனை!



எங்கள் தொழில்

வே. ரங்கராஜன்

முன்னுரை

"என்னடா ராஜம்! என்னை மறந்து விட்டாயே!"

"அடடே, வாருங்கள்! வாருங்கள்! உங்களையா, நானா, மறந்துவிட்டேனா? அதெப்படி முடியும்! திட்டுத்திட்டாகப் பச்சையும் மஞ்சளும் கலந்த அந்த ஹைதர் காலத்துக் கோட்டு என் கண்முன் நிற்கிறதே! உங்கள் தாத்தா எப்போதோ பம்பாய்க்குச் சென்ற பொழுது வாங்கினதாகச் சொன்னீர்களே, அந்தத் தொப்பிதான் மறந்துவிடுமோ? குழவிக் கல்லாட்டமா, கோட்டுப் பாக்கட்டைப் பிய்த்துக் கொண்டு வெளியே பார்க்கும் உம் தர்மாஸ் பிளாஸ்கைப் போன்றது இந்த யுத்த சமயத்தில் கிடைக்குமா? நீர் கை நிறையக் காகிதக் கட்டுக்களைச் சுமந்துகொண்டு, அன்றறுத்த கைம்பெண்ணைப்போல் இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டு சாயங்காலம் ஏழு மணிக்குமேல் வீட்டை நோக்கிக் குடுகுடுவென்று ஓடுவீரே, அதைக்கூட இந்த ஜன்மத்தில் மறக்க முடியுமா?"



இப்படி என்னைக் கிண்டல் செய்வதென்றால் ராஜத்திற்கு ஆனந்தம். அவனுக்கு என்ன! ஏதோ அப்படியும் இப்படியும் காரில் போய் வருவதும், ஊர் வம்பளப்பதுந்தானே வேலை! இரண்டு பங்களாக்களிலிருந்து வாடகை வருகிறது. ஒரு சினிமாத் தியேட்டர் சம்பாதித்துக் கொடுக்கிறது. ஏதோ சில ஏஜென்ஸிகளும் எடுத்திருக்கிறானாம்!

அவன் எதைச் சொன்னாலும் எப்படிப் பரிகாசம் செய்தாலும் என் தொழிலில் எனக்கு விசேஷ மதிப்பும் பெருமையும் இல்லாமலா போய்விடும்? இந்திய அரசாங்கம் யாரால் நடக்கிறது என்பதை அவன் என்ன கண்டான்! ஏகாதிபத்தியத்தின் அஸ்திவாரம் எதனால் ஆனது என்பதை அறிந்தால் அவன் அப்படிப் பேசுவானா?

அறிமுகம்

நாங்கள் அரசாங்கத்திற்கு ஜீவநாடி போன்றவர்கள். வியாபாரத்திற்கு மூலதனம் போன்றவர்கள். ரெயில்வேக்களுக்குத் தண்டவாளங்களைத் தாங்கி நிற்கும் கட்டைகளைப் போன்றவர்கள். பாங்கிகளின் இருப்புப் பெட்டியைப் போன்றவர்கள்.

எங்கள் கோட்டிலுள்ள பொத்தல்களைக் கணக்கிட்டு நீங்கள் கேலி செய்யலாம். நீர்க்காவி ஏறிய உடைகளைக் கண்டு நையாண்டி செய்யலாம்! எங்கள் நடையுடை பாவனைகளைக் கண்டு, "இதுவும் ஒரு பிரகிருதியா?" என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் அதற்கெல்லாம் நாங்கள் பொறுப்பாளியல்ல. எங்களை உற்பத்தி செய்த கும்பினியார்களைக் கேட்டு அதன் அந்தரங்கங்களை அறிந்து கொள்ளுங்கள்.

எங்களில் எல்லோருமே பீற்றல் கோட்டுப் பேர்வழிகள் அல்ல! சம்பளத்தைக் கைச்

செலவுக்கும் பிதுரார்ஜித வருமானத்தைக் குடும்பச் செலவுக்கும் வைத்துக்கொண்டு 'வெள்ளையும் சள்ளையுமாக' உத்தியோகம் செய்பவர்கள் எத்தனையோ பேர். அவர்களை எங்கள் பிரதிநிதிகளாகக் கொண்டிருப்பதில் எங்களுக்கு எவ்வளவோ கௌரவம். குமாஸ்தா என்றால் கேவலமல்ல; அவனும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவன்தான் என்று எண்ணும்படி செய்பவர்கள் அவர்கள் அல்லவா?

குமாஸ்தா தொழில் உலகப் பிரசித்தமானது. இந்திய அரசாங்கம் எத்தனை பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் ஏற்படுத்தியிருக்கிறது! எத்தனை லக்ஷ ரூபாயைக் கொண்டு எவ்வளவு ஆயிரக்கணக்கான ஆசிரியர்களின் உழைப்பால் நாங்கள் உற்பத்தியாகிறோம்! இதை எண்ணும்போது எங்கள் உள்ளம் பெருமிதம் அடையாதிருக்க முடியுமா? எங்களைக் கேலி செய்பவர்கள், எங்களை வெறுப்புடன் பார்ப்பவர்கள், எங்களிடம் அநுதாபப்படுபவர்கள் இவற்றையெல்லாம் அறிவார்களா?

பூர்விகம்

அந்தக் காலத்தில் - அதாவது இந்திய அரசாங்கம் விதை விதைத்து நாங்கள் செஞ்சிறு நாற்றுக்களாக இருந்த காலத்தில் - நாடு வளப்பமுற்றிருந்தது. "தேங்காயைத் துருவ ஆரம்பித்த காலம்." நாட்டில் லக்ஷ்மி இருந்தாள். அரைக்காசு உத்தியோகமாய் இருந்தாலும் அரசாங்க உத்தியோகம் வேண்டுமென்று எங்கள் முன்னோர்கள் - காலஞ்சென்ற குமாஸ்தாக்கள் - மாசம் பத்துக்கு, (மகா சம்பத்தல்ல! மாதம் பத்து ரூபாய்) குமாஸ்தாக்களாக ஊழியம் செய்யத் துவக்கினார்கள்.

அக்காலத்தில் அவர்கள் பீற்றல் பத்து ரூபாய் சம்பளத்தை எண்ணியே உத்தியோகம் செய்யவில்லை. தங்கள் சம்பளத்தைப்போல் மூன்று நான்கு பங்கு துரைமார்களுக்கு அவர்கள் மாதம் ஒரு முறையோ இரு முறையோ தக்ஷிணை கொடுப்பார்கள்.

சிறந்த ஆசாரசீலர்கள். புராண இதிகாசங்களில் கரை கண்டவர்கள். பரந்த நோக்கமுடையவர்கள். பரோபகாரிகள். ஆழ்ந்த வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்த சாதுக்கள். ஆனால் அந்தச் சாதுக்களை ஒரு கொடிய தொத்து வியாதி அவர்களுக்குத் தெரியாமல் பீடித்து விட்டது. அதன் பலன்களைத்தான் அவர்கள் சந்ததிகளாகிய நாங்கள் அநுபவித்து வருகிறோம்.

தற்காலம்

இட்டிலி எப்படித் தென்னாட்டுக்கே உரிய விசேஷப் பொருளோ அதுபோல் எங்கள் வர்க்கத்தினரும் தென்னாட்டின் கௌரவத்திற்குக் காரணமானவர்கள். தென்னாட்டில் எங்களுடைய 'மார்க்கெட்' மந்தமானவுடன் புதிய மார்க்கெட்டைத் தேடி நாங்கள் இந்தியா வெங்கும் பரவிவிட்டோம். இதனால் 'மதராஸி' என்று புது ஜாதி ஒன்று முளைத்தது!

எங்கள் நடையுடை பாவனைகளில் எத்தனை அலங்கோலங்கள் இருந்த போதிலும் தொழில் முறையில் எங்களைப் புகழாதவர்கள் இல்லை. சோம்ப மாட்டோம். எஜமான விசுவாசத்தில் நாங்கள் நாயைப்போன்றவர்கள். சிறு ரொட்டித் துண்டும் உதையும் கிடைத்தாலும் எஜமானையும் அவன் சொத்தையும் பாதுகாப்பது தன் கடமை என்று நினைத்துச் செய்யவில்லையா அது?

எங்கள் சகோதரர்களில் சிலர் மடமடவென்று முன்னேறிவிடுவார்கள். இன்று குமாஸ்தாவாக இருப்பவர் நாளைக்கு உதவி மானேஜராக ஆவார். பிறகு கொஞ்ச நாளையில் குட்டி முதலாளியாகவே ஆகிவிடுவார்! நாங்கள் அந்தச் சகோதரப்பிரகிருதியைப்பற்றி இருவர் மூவர் சந்திக்கும் இடங்களிலெல்லாம் பேசுவோம். அவருடைய குணகுணங்களை அலசுவோம். அவர் கடைப்பிடித்த 'தகிடு தத்தங்களை' எண்ணிப் பெருமூச்சு விடுவோம். அவர் எங்களைச் சந்திக்க நேர்ந்த சமயத்தில் அலக்ஷ்யமாக ஒரு கடைக்கண் வீச்சு வீசுவார். நாங்கள் ஏமாற்றமும் ஆசையும் கலந்தாற்போல் வெறித்துப் பார்ப்போம். ஆனால் ஒவ்வொருவர் மனத்திலும், 'நாமும் அப்படிப் போவோமா?', 'த்த்சொ...அதற்கெல்லாம் அதிருஷ்டம் வேண்டாமா?' என்று எண்ணம் எழும்.

எங்கள் வர்க்கத்திற்குச் சில சிறந்த குண விசேஷங்கள் உண்டு. எங்களால்தான் அந்தக் குணங்கள் ஜீவித்திருக்கின்றனவா அல்லது அந்தக் குணங்கள் இருப்பதால்தான் நாங்கள் ஜீவிக்கிறோமா என்பது ஒரு புதிர்.

நாங்கள் பரம சாதுக்கள். யார் ஜோலிக்கும் போக மாட்டோம். ஆபீசு உண்டு, நாங்கள்



உண்டு. இரவு பத்து மணிக்குமேல் அண்டை வீட்டில் திருட்டு நடந்து ஏகக் களேபரமாக இருந்தாலும் நாங்கள் மோன நித்திரையில் தான் ஆழ்ந்திருப்போம். பயத்தினால் அல்ல; வீண் வம்பு எதற்கு?

வியாசர் தர்ம புத்திரரைப் பிரமாதமாகப் புகழ்கிறார். "அவனா! தர்மராஜானா!" என்று எங்கள் பாட்டிமார்களும் சொல்கிறார்கள். திரிகால ஞானியாகிய வியாசருக்கும் கலி காலத்தில் நாங்கள் ஒரு கூட்டத்தார் தோன்றப் போகிறோம் என்று தெரியாமற் போய் விட்டது. பாட்டிகளும் எங்கள் ஆபீசுக்கு வருவதே இல்லை!—பொறுமைக்கு அணி கலன்கள் நாங்கள்தாம். எவ்வளவு வேலை யாகட்டும்; சற்றுச் சிடுசிடுப்போம் என்கிறீர்களா? ஊஹூம்! நாலு பக்கங்களிலும் ஸ்ரீமான் பொதுஜனம் சூழ்ந்துகொண்டு பிராணனை வாங்குகிறாரே, அவரிடம் ஏதாவது அருவருப்பாகப் பேசுவோம் என்கிறீர்களா? மாட்டோம். காற்றும் வெளிச்சமும் இல்லாத ஆபீசா, காரியாலயமா? பரவாயில்லை. விளக்குப்போட்டுக்கொண்டு வேலை செய்கிறோம்; சட்டையெல்லாம் கழற்றிவிட்டுப் பனியனோடு வேலை செய்கிறோம்! நாளைக்குத் துரை 'இன்ஸ் பெக்ஷனு'க்கு வருகிறான்; நாளைக் காலைக்குள் கணக்கை எல்லாம் முடித்துத் தர வேண்டுமோ? இரவெல்லாம் டீ குடித்துவிட்டு வெற்றிலை பாக்கு, பொடி இவைகளின் உதவியால் காலை ஏழரை மணிக்குக் கணக்கு 'ரெடி!'

நாங்கள் பரம தியாகிகள். "லீவு கிடைக்காது. ஆகையால் யாருடனாவது வந்து சேர்வது" என்று மனைவிக்குக் கடிதம் எழுதுவது எங்களுக்குச் சகஜம். ஒவ்வொரு நாளும் வீட்டுக்கு இரவு பத்து மணிக்குப் போவதனால் வாழ்க்கையில் இன்பம் குறைகிறதா? இல்லறம் ருசி தட்டவில்லையா? பரவாயில்லை. இல்லறம் பெரிதா? ஆபீஸ் வேலை பெரிதா? ஆபீஸ் வேலை குறுக்கிடுவதால் நல்ல சங்கீதக் கச்சேரிகள் கேட்க முடிவதில்லையா? சினிமாக்களுக்கு மனைவி மக்களை அழைத்துச் சென்று காட்ட முடிவதில்லையா? பிரபலத் தலைவர்கள் அறிஞர்கள் உபந்நியாசம் கேட்க முடிவதில்லையா? பரவாயில்லை. ஆபீஸ் வேலை பெரிதா! இவை பெரியனவா!

சகிப்புத்தன்மைக்கு நாங்கள் ஓர் உதாரணம். பால்காரி பாடுவதைப் பொருட்படுத்த மாட்டோம். தயிர்க்காரி திட்டுவதைச் சட்டை செய்யமாட்டோம். வீட்டுக்காரி சண்டைக்கு வந்தால் ஆபீசுக்குப் போய்விடுவோம். பிள்ளைகள் அது இல்லை, இது இல்லை என்று ஹூட்டி அடித்தால் வெளியே கிளம்பி விடுவோம். மளிகைக் கடைக்காரர்கள் ஜவுளிக் கடைக்காரர்கள் பார்த்தாலும் பார்க்காதது போல் நடப்போம். திட்டினாலும் கேட்காதது போல் நடப்போம்.

எங்கள் தொழிலில் சில விசேஷ நுணுக்கங்கள் உண்டு. அவைகளை எவ்வளவுக்கு எவ்வளவு நன்றாக அறிந்து கையாளுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு சிரமம் குறையும்.

எந்த எந்தச் சமயத்தில் மேலதிகாரிகளை எது எது கேட்க வேண்டுமோ அவ்வப்போது கேட்கவேண்டும். அதிகாரிகள், மானேஜர்கள், ஆபீசர்கள் இவர்கள் விசேஷப் பிரகிருதிகள். அவர்களுக்கு எந்தச் சமயத்தில் கோபம் வரும், எந்தச் சமயத்தில் சிரிப்பு வரும் என்று கால நிலை அளக்கும் கருவிக்குக்கூடத் தெரியாது. ஆனால் நாங்கள் அளந்துவிடுவோம். துரை கோபமாய் இருக்கிறாரா? இந்த 'அப்ளிகேஷன்'களை எல்லாம் கொண்டுபோ; 'நோ வேகன்ஸி' போடட்டும். சந்தோஷமாய் இருக்கிறாரா? இந்தப் பில்களை எல்லாம் கொண்டு போ; 'பாசாய்விடும்!' காபி சாப்பிட்டுவிட்டாரா? சிக்கலான பேப்பர்களுக்கெல்லாம் காட்டின இடத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டு 'விட்டது சனி' என்று திரும்புவோம்.

அரசியல், பொருளாதாரம், சமூகம் என்பவைகளைப்பற்றி எவ்வளவு புஸ்தகங்கள் அச்சானாலும் ஓய்வு நேரங்களில் படிக்கத் தயார். செயலில் இறங்குவதா? ஐயோ! அது மட்டும் எங்களால் முடியாது.

இன்னும் எத்தனையோ! இந்தக் காகிதப் பஞ்ச காலத்தில் இக்கட்டுரைக்கு நான் ஆபீஸ் காகிதத்தை எடுத்து எழுதினேன் என்று சந்தேகப்பட்டு என்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தாலும் எடுக்கலாம். ஆகையால் இதனுடன் நிறுத்திக்கொள்கிறேன். வீண் வம்பு எதற்கு? நான் பிள்ளைகுட்டிக்காரன்!

ராங்கி

குடியானவக் கிழவி, "எலே, என்னடா ராங்கி வந்துடுத்து! கையைப் பிடி; சோறு போட்றேன்; தின்னு தொலை" என்று சொல்லுகிறாள். அவள் பேச்சிலே வரும் 'ராங்கி' தமிழ் வார்த்தை அல்ல. ஆங்கிலச் சொல் ஒன்று அப்படி உரு மாறித் தமிழாக வந்துவிட்டது. 'பதவி' என்ற பொருள்படும் Rank என்ற சொல்தான் அப்படி மாறி வழங்குகிறது. Hook என்ற ஆங்கிலச் சொல் கிராமங்களில் 'ஊக்கு' என்று மாறிச் சட்டையில் மாட்டிக்கொள்ளும் 'பின்'களுக்கு வழங்குகிறது. —கே. வை.

வாத்தியார் ஐயா

கி. வா. ஜகந்நாதன்

(சென்ற இதழ் 127-ஆம் பக்கத் தொடர்ச்சி)

4

"வாத்தியார் ஐயா பூமி தேவியைப்போல் இருக்கவேண்டும்; மலையைப்போல் இருக்க வேண்டும்; தராசைப் போலவும் மலரைப் போலவும் இருக்கவேண்டும்" என்று பழைய தமிழர்கள் சொல்கிறார்கள். பூமிதேவியை உபமானம் சொல்லும்போது நமக்கு ஒரு விஷயம் நிச்சயமாக ஞாபகத்துக்கு வந்துவிடுகிறது. பொறுமைக்குப் பூமிதேவியைச் சொல்லிச் சொல்லி அலுத்துப் போயிருக்கிறோமே!

படிக்கும் பிள்ளைகள் அறிவு பெறுவதற்காக ஆசிரியரை அணுகுகிறார்கள். பிழை செய்வது அவர்களுக்கு இயல்பு. அதை மாற்றும் பொறுப்பைத்தான் வாத்தியார் ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஆகையால் மாணாக்கர்களிடம் சிடு சிடுவென்று விழுந்தால் அவர்கள், "வாத்தியார் என்றால் காட்டுமிருகம்" என்று நினைத்துவிடுவார்கள். தமிழ்நாட்டில் வாத்தியாருடைய பேரைப் பூச்சாண்டியாகச் சொல்லிப் பயமுறுத்திவந்த காலம் உண்டென்பது நமக்குத் தெரியுமே! பயப்படுவதற்குரிய வஸ்துவாக ஆசிரியர் இருக்கக்கூடாது.

நிலத்தைப் பெருமைக்கும் திண்மைக்குங்கூட உவமையாக எடுத்தாளுவார்கள். "நிலத்தினும் பெரிதே" என்று பெருமைக்கு அதைச் சொல்வதை இலக்கியங்களிலே காணலாம். ஆசிரியர் பெருமையில் நிலத்தைப் போல இருக்க வேண்டும். பெருமை என்பது அவருடைய குணப் பெருமையையும் கல்விப் பெருமையையும் குறிக்கும்.

அடுத்தபடி நிலத்திற்குரிய சிறப்பியல்பு திண்மை. "மண் கடினமாய்த் தரிக்கும்" என்று சாஸ்திரம் சொல்கின்றது. மனத்திண்மை ஆசிரியரிடம் இருக்கவேண்டும். எந்த விஷயத்தையும் சந்தேகமின்றி உறுதியாகத் தெரிந்துகொண்டிருக்கவேண்டும்.

நிலமானது பருவத்துக்கு ஏற்றபடியும் வேளாளர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு உழுது எருவிட்டுச் சிரமப்பட்டுப் பயிரிடுகிறார்களோ அதற்கு ஏற்றபடியும் பயன் கொடுக்கும். கையைக் கட்டிக்கொண்டு வீட்டில் உட்கார்ந்திருந்தால் நிலம் வளம் சுரக்காது. நினைத்தபொழுதெல்லாம் விளைச்சலையும் தராது. பயிர் விளையப் பருவம் உண்டு; முயற்சியும் அவசியம்.

வாத்தியார் ஐயா நிலம்; மாணாக்கன் உழவன். மாணாக்கனுடைய பருவத்துக்கு ஏற்றபடி வாத்தியார் ஐயா சொல்லித் தரவேண்டும். தமக்குத் தெரிந்த சமாசாரங்களை எல்லாம் பையனுடைய மூளையில் ஏற்றிவிட வேண்டுமென்ற பெருங்கருணை வியர்த்தமாகிவிடும். யார் யார் எந்த எந்தப் படியில் இருக்கிறார்கள் என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டு அவர்களுடைய பக்குவத்துக்கு ஏற்ற விஷயங்களைக் கற்பிக்க வேண்டும். எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் இன்னவென்று தெரியாத மாணாக்கனுக்குத் தொல்காப்பியச் சூத்திரங்களைச் சொல்லித் தந்தால் அவனுக்குத் தலைவலி உண்டாவதுதான் லாபம். "என்னடா இது, பேரிழவாக இருக்கிறதே!" என்று மாணாக்கன் தொல்காப்பியச் சூத்திரத்தையும் தொல்காப்பியரையும் சேர்த்துத் திட்ட ஆரம்பிப்பான். ஆசிரியருக்குத் தொல்காப்பியரிடத்தில் பக்தி இருக்கலாம்; தொல்காப்பியத்தில் நல்ல பயிற்சி இருக்கலாம். 'பாத்திரமல்லாத இடத்தில் பிச்சை இட்ட' வாத்தியாரது குற்றத்துக்காகத் தொல்காப்பியர் நிந்தனைக்கு ஆளாகிறார்.

மாணாக்கனுடைய முயற்சிக்கு ஏற்ற அளவில் போதிக்கவேண்டும். சிறு முயற்சி செய்பவனுக்குப் பெரிய பொருளைப் போதித்தால் அந்தப் பொருளினிடத்தில் மாணாக்கனுக்குக் கௌரவபுத்தி ஏற்படாது. இலவசமாக இறைபடும் பண்டமென்று எண்ணிக் கொள்வான். 'வாத்தியாருடைய கருணைப்பெருக்கை அவன் பாராட்டக் கூடாதோ?' என்று நீங்கள் கேட்கலாம். அதெல்லாம் அறிவு நிரம்பின பெரியவர்கள் கடமை அல்லவா? மாணாக்கன் அவ்வளவு உயர்ந்த பண்புடையவனாக இருந்தால் ஆசிரியரிடம் எதற்காக வருகிறான்?

பொருட் செல்வத்தைச் சிக்கனமாகச் செலவு பண்ணவேண்டும் என்று சொல்கிறோம். அறிவுச் செல்வத்தையும் சிக்கனமாகத்தானே வழங்கவேண்டும்? முயற்சி செய்யச் செய்ய வஞ்சகமின்றி வாரி வழங்கினால் வாங்கிக் கொள்பவனுக்கும் மகிழ்ச்சி, கொடுப்பவனுக்கும் திருப்தி உண்டாகும். ஆகவே பருவம், முயற்சி என்பவற்றின் அளவறிந்து வாத்தியார் ஐயா தொழிலை நடத்திவரவேண்டும். ஆசிரியருக்குப் பூமியை உவமையாகச் சொல்லும்போது, இத்தகைய இயல்புகளையே இலக்கணம் குறிக்கின்றது.

"தெரிவரும் பெருமையும்
திண்மையும் பொறையும்

பருவம் முயற்சி
அளவிற் பயத்தலும்
மருவிய நன்னில
மாண்பா கும்மே.''

[பொறை - பொறுமை. பயத்தல் - பயன் படுதல். மாண்பு - இயல்பு.]

மலை என்ற மாத்திரத்திலே அதனுடைய உன்னதமான சிகரங்களும் பரப்பும் நம் ஞாபகத்துக்கு வருகின்றன. மலை அளப்பதற்கு அரியது. பெரிய மனிதர்களை மலைக்கு ஒப்பிட்டுப் பேசுவது நம்மவர் வழக்கம். நிலப்பரப்பில் மேடும் பள்ளமும், ஆறும் குளமும், வயலும் பொழிலும் இருந்தாலும் மலைதான் எல்லோருடைய கண்களிலும் முதலில் படுகிறது. அது போல ஒரு நாட்டிலோ, ஓர் ஊரிலோ யார் வந்தாலும் அவர்கள் காதில் யாருடைய புகழ் முதலில் விழுகிறதோ அவரே பெரிய மனிதர். அந்த ஊருக்கு வராமலே அந்தப் பெரிய மனிதருடைய புகழைப் பலர் அறிந்துகொண்டிருப்பார்கள். வாத்தியார் பெரிய மனிதராக இருக்கவேண்டும். 'அளக்கலாகா அளவு' உடைய மலையைப் போல விளங்க வேண்டும்.

மலையில் அளக்கலாகாத பொருள்கள் விளைகின்றன. ஆசிரியரிடத்தில் உள்ள பொருள்களும் அப்படியே இருக்கவேண்டும். 'இவரிடம் உள்ள சரக்கு இவ்வளவுதான்' என்று அறுதியிடும் நினைவு யாருக்கும் வரக்கூடாது. 'எந்த விஷயத்தைக் கேட்டாலும் இவர் சொல்கிறாரே. இவருக்கு இன்னது தெரியும், இன்னது தெரியாது என்ற வரையறையே இல்லைபோலும்!' என்று ஜனங்கள் வியக்கும்படி ஆசிரியர் இருந்தால் அவரை மலை என்றும் சொல்லலாம்; கற்பகமென்றும் சொல்லலாம்.

மலைக்கு அசலம் என்பது வடமொழியில் வழங்கும் பெயர்களில் ஒன்று. 'அசையாதது' என்பது அதன் பொருள். வாத்தியார் சுகதுக்கங்களுக்கும், ஐயந்திரிபுகளுக்கும் எதிர்நின்று அசையாமல் இருக்கவேண்டும். கல்வி என்பது உலகத்தில் பணம் படைக்கவும் புகழ் படைக்கவும் மாத்திரம் ஏற்பட்டதன்று. உயிருக்கு உறுதி பயக்கும் முயற்சியில் தலைப்படவும், இறைவனை உணரவும், இறுதியில்லாத இன்ப வீட்டை அடையவும் அது சாதனமாக உதவுவது. ஆகவே கல்வி என்பது ஒருவகையான சாதனை. மனத்தைப் பண்படுத்தும் சாதனை என்றே சொல்லவேண்டும். ''வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்'' என்று ஔவைப் பாட்டி சொல்கிறாள். அந்தப் பழக்கம் முறுக முறுக மனிதனுக்குத் தெளிவும் திருப்தியும் உண்டாகும். நெஞ்சார நல்ல நெறியில் நடக்கும் திறமை ஏற்படும். ''நெஞ்சத்து, நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால், கல்வி அழகே அழகு'' என்று நாலடியாரில் வருகிறது. கல்வியினால் உள்ளத்தைப் பண்படுத்தியவன் பிறருடைய மதிப்பினால்தான் நல்லவன் என்ற பெயரை அடையவேண்டும் என்பது இல்லை. அவனே தன்னை நடுநிலையில் நின்று சோதித்துக்கொள்வான். அவனுடைய பயிற்சி மிகுதியாக ஆக, ''நாம் நல்ல மனிதர்களோடு சேரத் தகுதியுடையோம்'' என்ற நம்பிக்கை உதயமாகும்.

இத்தகைய உள்ளப் பயிற்சியையே கல்வி முறையாக முன்னோர்கள் போற்றினார்கள். இதை மாணாக்கர்களுக்குக் கற்பித்துத் தரும் ஆசிரியர் நடுங்கும் உள்ளத்தோடு இருக்கலாமா? அசையாத உறுதியும் நிலையான இயல்பும் அவர் உள்ளத்தில் நிலவ வேண்டும் அல்லவா? ஆதலால் ஆசிரியர் அசலத்தைப் போலத் 'துளக்கலாகா நிலை'யை உடையவராவது அவசியம்.

ஆசிரியர் பிறருடைய கவனத்தை ஈர்க்கும் தோற்றம் படைத்தவராக இருக்க வேண்டும். தோற்றம் என்பது உடலின் தோற்றமன்று. அவருடைய இயல்பு, வார்த்தைகள் எல்லாம் சேர்ந்த ஓர் உருவம் (Personality).

வேகமாகக் காற்று அடிக்கிறது. மேகங்கள் கலைந்து ஓடுகின்றன. உன்னதமான மலை ஒன்று இருந்தால் மேகங்கள் தடைப்பட்டு நின்றுவிடுகின்றன. மலையின் தோற்றம் எல்லாப் பொருள்களையும் தன்னிடத்தில் வந்து நிற்கும்படி செய்கின்றது. வெகு வேகமாக ஒரு காரியத்தைச் செய்ய ஒரு மனிதன் ஓடுகிறான். இடையே வாத்தியாரை யாரவைச் சந்திக்க நேர்ந்தால் அவன் வேகம் குறைந்து சட்டென்று நின்று ஒரு கும்பிடு போடுகிறான். அவர் பேச ஆரம்பித்தால் பொறுமையோடு கேட்கிறான். சில சமயங்களில் அவருடைய நல்லுரைகளில் ஈடுபட்டுப் போய்த் தன் வேலையையே மறந்து போனாலும் போய்விடுகிறான். இப்படி ஒரு தோற்றம் ஆசிரியருக்கு இருந்தால் அவரை ஊராரெல்லாம் பாராட்டித் தொழுவதில் ஆச்சரியம் என்ன?



பஞ்சம் வந்துவிட்டது; அப்போது மற்ற இடங்களிலெல்லாம் விளைவு குறைந்துவிடும். மலையுள்ள இடங்களில் பஞ்சத்தின் கொடுமை உடனே தாக்காது. மரங்களும் அருவிகளும் நிரம்பிய மலை பஞ்ச காலத்தில் மக்களுக்கு ஒரு சேம நிதி போலப் பயன்படும். ஆசிரியர் 'வறப்பினும் வளந்தரும் வண்மை' உடையவராக இருக்க வேண்டுமென்று இலக்கணம் சொல்கிறது.

பொருட் பஞ்சம் எற்பட்டாலும் அறிவுப் பஞ்சம் வாராமல் பாதுகாப்பது அவர் கடமை. மலைக்கும் ஆசிரியருக்கும் பொதுவான இவ்வளவு விஷயங்களையும் சேர்த்து இலக்கணம் ஒரு சூத்திரத்தில் சொல்கிறது.

"அளக்கல் ஆகா அளவும் பொருளும்
துளக்கல் ஆகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளம்தரும் வண்மையும்
மலைக்கே."

[துளக்கல் - அசைத்தல். வறப்பினும் - பஞ்சம் வந்தாலும்.]

கலை பயின்ற தெளிவுடைய ஆசிரியர் துலாக்கோலைப்போல ஐயமின்றிப் பொருளின் மதிப்பைத் தெரிவிக்கவேண்டும். ஒரு பண்டத்தை நிறுக்கிறோம். தராசு முள் நடுநிலையில் நின்றால்தான் பொருளின் உண்மைக் கனம் தெளிவாகும். ஒரு பொருளையும் நிறுக்காமல் தராசை முதலில் தூக்கிப் பார்த்து முள் நடுநிலையில் நிற்கிறதா என்று தெரிந்துகொண்ட பிறகே நிறுப்பது வழக்கம். முள் ஒரு பக்கமாகச் சாய்ந்தால் நியாயமான வியாபாரி அதைக் கையால்கூடத் தொடமாட்டான். ஆசிரியர் நூற் பொருளை நிறுத்து உணர்ந்துகொள்ள வேண்டும். தம்முடைய விருப்பு வெறுப்பினால் நூலில் உள்ள கருத்தைக் கூட்டியோ குறைத்தோ சொல்லக்கூடாது. சாதி, சமயம், கொள்கைகளால் வேறுபட்ட புலவர் ஒருவர் இயற்றிய நூல் ஒன்றைப் பாடம் சொல்லும்போது, தம் கொள்கைக்கு மாறுபட்டது என்ற காரணத்தால் அதைக் குறைத்துக் கூறக்கூடாது. நூல்களைத் தாம் ஆராய்ந்தாலும் கற்பித்தாலும் நடுநிலையில் நின்று, நூற் பொருளில் தம் சொந்தக் கருத்தை நுழைக்காமல் இருப்பவரே சிறந்த ஆசிரியர்.

"ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகும்நிறை கோற்கே"

என்று இலக்கணம் கூறுகிறது.

சமூகமாகிய விருக்ஷத்தில் வாத்தியார் ஐயா மலரைப் போல விளங்குகிறார். மலர் அழகிய பொருள்; மங்கலமான பொருள். வாத்தியார் ஐயா இருந்துவிட்டால் சமுதாயம் சோபையை அடைகிறது. சமுதாயத்துக்கு அவசியமான பொருள் அவர். ஊரில் எந்தப் போதக் காரியமானாலும் வாத்தியார் ஐயாவுக்கு முதல் அழைப்பு.

யாராக இருந்தாலும் அவரை வரவேற்று உபசரிப்பார்கள். அவர் யாவருக்கும் இனியவர்; இதமான வார்த்தைகளைச் சொல்பவர்; மென்மையான இயல்புடையவர். 'மலர் மங்கலமானது; நல்ல காரியங்களுக்கு இன்றியமையாதது; யாவரும் மகிழ்ந்து கொள்வதற்கு உரியது; மெல்லியது' என்று புகழ்கிறோம். அந்தப் புகழை அப்படியே வாத்தியாரையாவுக்கும் சொல்லும்படி அவர் இருக்கவேண்டுமோம்.

மலருக்குப் போது என்று ஒரு பெயர் உண்டு. தக்க போதில் தவறாமல் மலர்வதனால் அதற்கு அப்பெயர் வந்ததாம். இயற்கையிலே அமைந்த கடிகாரம் அது. ஆசிரியர் அதைப் போலக் காலந் தவறாமல் மாணக்கர்களுக்கு முகமலர்ச்சியோடு பாடம் சொல்லித் தரவேண்டும்.

காலக் கணக்கைக் கவனிப்பதில்லை என்ற குறைபாடு நம்மவர்களுக்கு இருப்பது உலகம் அறிந்தது. வாத்தியார் ஐயா அந்த அபவாதத்துக்கு உட்படக்கூடாது. பொழுது அறிந்து கடமையைப் புரியும் இயல்பு அவரிடம் இருக்கவேண்டும்.

"மங்கலம் ஆகி இன்றியமை யாது
யாவரும் மகிழ்ந்து மேற்கோள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே"

என்று மலரின் இயல்பைச் சொல்லும் வாயிலாக வாத்தியார் ஐயாவின் இயல்பையும் குறிப்பாக இலக்கண ஆசிரியர்கள் தெரிவிக்கிறார்கள்.

இவ்வளவு உபமானங்களால் உபாத்தியாயருடைய தகுதியை அளவிட்டு விட்டு, "உலகியல் அறிவும் இவை போன்ற வேறு சிறந்த குணங்களும் உடையவன் ஆசிரியன்" என்று தமிழிலக்கணக்காரர் சொல்கிறார். எவ்வளவுதான் படித்தாலும், நல்ல குணம் உடையவராக இருந்தாலும், உலகம் தெரியாவிட்டால் என்ன பிரயோசனம்? காலத்துக்கு ஏற்றபடி போதனா முறைகள் மாறும்; உதாரணங்கள் மாறும்; கொள்கைகள் மாறும்; இலக்கணமே மாறும். இவற்றையெல்லாம் உணர்வதற்குப் பழைய நூலறிவு மாத்திரம் போதாது. உலகமே ஒரு பெரிய புஸ்தகம். அதை உணராவிட்டால் வாத்தியார் படித்த புஸ்தகங்கள் அவ்வளவும் பயன்படாமற் போய்விடும். ஆகையால் எல்லாவற்றையும் சொல்லிவிட்டுக் கடைசியில் உலகியலறிவு வேண்டுமென்று விதிக்கிறார்கள்.

வாத்தியாரையா எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சுருக்கமாக ஞாபகப்படுத்திக் கொள்ள இதோ இலக்கணச் சூத்திரம் இருக்கிறது:

"குலன்அருள், தெய்வம்
கொள்கை, மேன்மை,
கலைபயில் தெளிவு,
கட்டுரை வன்மை,
நிலம்மலை நிறைகோல்
மலர்நிகர் மாட்சியும்,

உலகியல் அறிவோடு
உயர்குணம் இனையவும்
அமைபவன் நூல்உரை
ஆசிரி யன்னே.”

[நிறைகோல் - தராசு. மாட்சி - பெருமை. இனைய - இத்தகையவை.]

5

‘வாத்தியார் ஐயா எப்படி இருக்க வேண்டும்’ என்று சொல்லுவதோடு நில்லாமல் இலக்கணம் எழுதினவர்கள், “எப்படி இருக்கக் கூடாது?” என்றும் கூறுகிறார்கள். அப்படிச் சொல்லும் பொழுதும் வாத்தியாரின் குணங்களையும் தொழில்களையும் சொல்லிவிட்டு, உபமானங்கள் மூலமாகவும் பொல்லாத வாத்தியார்கள் இப்படி இருப்பார்கள் என்று தெரிவிக்கிறார்கள்.

நல்ல குணங்கள் இல்லாமல் இருந்தால் பிள்ளைகளுக்கு அவரிடத்தில் வேலை இல்லை; வெறும் படிப்பை மாத்திரம் கற்றுக் கொள்வது என்பது பழைய தமிழ் நாட்டில் இல்லை. நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும் நல்லவைகளைப் பிள்ளைகள் ஆசிரியரிடத்தில் கற்றுக் கொள்வார்கள். தாம் கற்ற கல்வியை ரூபா, அணா, பைசாவாக மாற்றுவது அக்காலத்தவர்கள் நோக்கமல்ல. கல்வியை வாழ்க்கையாக மாற்றுவார்கள். கற்றவற்றைச் சோதனை பிடுவதையே வாழ்க்கையாக எண்ணுவார்கள். வாழ்க்கை முழுவதும் பயன்படும் கல்வியைச் சிறந்த குணங்களைப் பெற்ற ஆசிரியர்களிடம் கற்கவேண்டுமேயொழியச் சாதாரண மனிதர்களிடம் கற்பதில் சிறப்பு ஒன்றும் இல்லை.

சிறந்த குணங்கள் இல்லாவிட்டாலும், குற்றமில்லையென்று வாத்தியார் ஐயா ஒருவரிடம் குழந்தைகளை ஒப்பிக்கிறோம்! ‘லக்ஷ்ய வாழ்க்கைக்குரிய வழியை அவர் கற்றுத் தரவேண்டாம்; சாமான்ய வாழ்க்கைக்குப் போதியவற்றைக் கற்பித்தால் போதும்’ என்று எண்ணுகிறோம். அந்த வாத்தியார் கெட்ட குணங்களை உடையவராக இருந்தால் பையனுக்கு முதலில் அதுதானே படியும்? இளம்பருவத்தில் நல்லது ஏறவிட்டாலும் கெட்ட பழக்கங்கள் மிக விரைவாக ஏறிவிடும். ஆகையால், ‘வாத்தியார் ஐயா ஒரு மகாத்மாவாக இல்லாமற் போனாலும் குற்றம் இல்லை. பேரக்கிரியாக இருக்கக்கூடாது’ என்று நாம் நினைக்கிறோம். அதையே இலக்கணக்காரர்களும் சொல்கிறார்கள்.

வாத்தியார் மற்றவர்களுடைய நலத்தைக் கண்டு பொறாமை கொள்ளும் பேர்வழியாக இருக்கக்கூடாது. பையனே ஆசிரியரைவிடச் சில சமயங்களில் அறிவுத்திறன் உடையவனாக இருக்கும்படி நேர்ந்துவிட்டால் பொறாமைக் குணமுள்ள ஆசிரியர் சும்மா இருப்பாரா? ஆபத்து வந்துவிடும். அதுமட்டும் அல்ல. உலகத்தில் எத்தனையோ ஆசிரியர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் ஒரே மாதிரியானவர்கள் அல்ல. ஏற்றத் தாழ்வு இருப்பது இயல்பு. தம்மைவிடக் கல்வியறிவிலோ, பொருள் நிலையிலோ உயர்வையுடைய ஆசிரியர் ஒருவர் பக்கத்தில் வாழ்பவராகவோ, அடுத்த வீட்டுப் பையனுக்குச் சொல்லிக் கொடுப்பவராகவோ இருந்துவிட்டால் பொறாமைக்கார வாத்தியாரையா என்ன செய்வார், தெரியுமா? தினந்தோறும் அவரைப்பற்றிக் குறை கூறுவார்; பாடம் பாதிநேரம் நடந்தால், ‘அவனுக்கு என்ன தெரியும்? சுத்த முட்டாள். அவனிடம் வாசிக்கிறவன் உருப்பட்டாற் போலத்தான்!’ என்ற பாடம் பாதி நேரத்தைக் கபளீகரித்துவிடும். பையன் படிப்புக் கெட்டுப்போவதோடு கூட, வாத்தியாரையா சொன்ன சமாசாரங்களைப் பலர் காதில் விழும்படி செய்யும் ஊக்கம் அவனுக்கு உண்டாகிவிடும். அதன் பயன் வீண் கலகமும் மனஸ்தாபமுமே.

வாத்தியாருக்குப் பேராசை கூடாது. மாணாக்கன் பெரிய செல்வனாக இருக்கலாம். அவன் வாத்தியார் ஐயாவிடம் தானாக மதிப்பு வைத்து ஏது வேண்டுமானாலும் தரலாம். அவன் கொடுப்பதைப் பெறுவதுதான் நல்லது. அவன் சொத்திலே தமக்கும் ஒரு பங்கு உண்டென்று உரிமை பாராட்டுபவரைப்போலச் சில ஆசிரியர்கள் பேசுவார்கள். “எனக்கு நூறு ரூபாய் தரக்கூடாதோ! இவனுக்குப் பணமா இல்லை? கொடுத்தால் குறைந்துவிடுமா? நான் வாங்கிக்கொள்ளத் தகாதவனா?” என்று கேட்பார்கள். அவன் பணக்காரனாக இருப்பதற்கு வாத்தியாரையாவா காரணம்? அவருடைய பாடத்திற்கும் அவனுடைய பணத்திற்கும் என்ன சம்பந்தம்? ஆகவே அவாவை உடையவரை ஆசிரியர் பதவியில் வைத்திருக்கக்கூடாதென்று தமிழர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக வாத்தியார் ஐயாவுக்கு விரோதி வஞ்சகம். ஆசிரியர் உண்மையான ஞானம் வாய்ந்தவராக இருக்கவேண்டும். ஆசிரியர் கூட்டத்தில் அடிப்படியில் இருப்பவர் போதகாசிரியர்; மேற்படியில் உள்ளவர் ஞானாசிரியர். அவர்கள் ஒரே ஜாதியினர். ஆகையால் உள்ளத்தால் பொய்யாது ஒழுகவேண்டியது அவர்கள் கடமை. நேர்மைக் குணம் அவர்களுக்கு இன்றியமையாதது. தெரிந்ததை மறைத்து வைப்பதும், மாணாக்கனை வஞ்சிப்பதும் ஆசிரியரைப் பாவிகளாக்கிவிடும். மெய் அன்பு உடையவர்களிடம் வஞ்சகம்

இராது. வஞ்சகம் உள்ளவர்களிடம் அன்பு இராது. மாணுக்கர்களைச் சொந்தப் பிள்ளைகளைப் போலப் பாதுகாக்கக் கங்கணம் கட்டிக்கொண்ட வாத்தியார் ஐயா அந்த மாணுக்கர்களிடத்தில் அன்பில்லாமல் பழகுவது நியாயமன்று. ஆகவே வஞ்சகம் அவரிடத்தில் எள்ளளவும் தலைகாட்டக் கூடாது.

மென்மையாக விஷயங்களைக் கற்பிக்காமல் மாணுக்கர்களைப் பயமுறுத்திக் கற்பித்தல் கூடாது. வாத்தியார் ஐயாவின் குரலைக் கேட்டால் மாணுக்கர்கள் நடுங்கிவிடுவார்களென்று சொல்வது அவருடைய பெருமைக்குக் காரணமாகாது. இனிமையாகப் பேசத் தெரியாதவன் வாத்தியார் வேலைக்கே வரக்கூடாது. வாத்தியார் வேலை முழுவதும் நாவில் இருக்கிறது; நாக்கு எவ்வளவு மிருதுவாக இருக்கிறது! பின்னும் அதில் இனிமை சேரவேண்டும். கடுமையான பேச்சினுல் அச்சத்தை உண்டாக்கும் வாத்தியார் ஐயா, தம்முடைய பலஹீனத்தைத்தான் வெளிப்படுத்தினவர் ஆகிருர். அறிவுப் பலமும், ஒழுக்க உயர்வும் உடையவர்கள் அச்சம் உண்டாகும்படி வார்த்தையாட மாட்டார்கள்.

௬

முன் நல்ல ஆசிரியர்களுக்கு வேண்டுமென்று மொழிந்த குணங்கள் இல்லாமையும், இழிந்த குணத்தோடு கூடிய இயல்பும், பொருமையும், பேராசையும், அச்சமுண்டாகப் பேசுவதும் கெட்ட வாத்தியாருடைய லக்ஷணமென்று சொன்ன இலக்கண நூலாசிரியர்கள் மேலும் அவரைக் கழற்குடம், மடற்பனை, பருத்திக்குண்டிகை, முடத்தெங்கு என்று வைகிருர்கள். "நாயே, பேயே, கழுதையே" என்று ஒருவனை அவன் குணங்களுக்கு எற்ற உபமானங்களால் நாம் அழைக்கும்போது, "ஆகா, என்ன அழகான உவமை!" என்ரு கேட்பவர்கள் நினைக்கிருர்கள்? அதை வசவென்று உலக சம்பிரதாயத்தில் சொல்கிறேம். அந்த மாதிரியே உபமானமென்ற உருவத்தில் மேலே சொன்ன கழற்குடம் முதலிய வார்த்தைகளால் கெட்ட வாத்தியாரைப் பெரியவர்கள் சொல்கிருர்கள். வசவென்று சொன்னுலும் ஒன்றுதான்; உபமானம் என்று சொன்னுலும் ஒன்றுதான். ஏன் அப்படிச் சொன்னுர்கள் என்பதைக் கவனிக்கலாம்.

பழைய காலத்தில் எந்தப் பொருள்களையேனும் கணக்குப் பண்ணவேணுமானுல் கழற்சிக்காயை வைத்துக்கொண்டு எண்ணுவது ஒரு வழக்கம். ஒவ்வொன்ருக எண்ணும்போது ஒவ்வொரு கழற்சிக்காயை ஒரு குடத்திற்குள் போடுவார்கள். இப்படிப் போட்ட கழற்சிக்காய்களைக் கடைசியில் எடுத்து எண்ணுவார்கள்.

கழற்சிக்காய்களில் எல்லாம் ஒரே அளவாக இருப்பதில்லை. சின்னதும் இருக்கும், பெரியதும் இருக்கும்; நல்ல உருண்டையாகச் சில இருக்கும்; சில ஒழுங்கற்ற உருவத்தோடு இருக்கும். முதலில் குடத்திலே போடும்போது எந்த முறையில் விழுகின்றனவோ அதே வரிசையில் ஒன்றன்பின் ஒன்ருக மீட்டும் எடுக்கும்போது வருவது இல்லை. ஒரேயடியாகச் சேர்ந்து விழுந்துவிடும். இந்த முறை மாற்றம் போலி வாத்தியார் ஐயாவிடம் இருக்கும். அவர் வாசித்த காலத்தில் இன்னதன்பின் இது என்ற முறைப்படியே ஒழுங்காகக் கற்றுக்கொண்டிருப்பார். சொல்லிக் கொடுக்கும்போதோ, அந்த முறையெல்லாம் மறந்து போய்விடும். தெரிந்தவற்றைத்தான் சொல்லிக்கொடுப்பார். ஆனுல் முறை மாறிப் போய்விடும். ஒன்றென்ருகச் சொல்லுவதை விட்டு ஒரேயடியாகப் பல விஷயங்களைத் திணித்துவிடுவார். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்று முறையாகச் சொல்லிக் கொடுக்காமல் வகுத்தலிலிருந்து ஆரம்பித்தால் பையனுக்கு ஒன்றுமே வராது. இலக்கிய இலக்கணத்திலும் இப்படி முறை உண்டு. அந்த முறை பிறழ்ந்தால் மாணுக்கனுக்கு வீண் சந்தேகங்கள் கிளம்பும். முறை மாறிச் சொல்லிக்கொடுக்கும் வாத்தியாரைக் கழற்குடத்தோடு ஒப்பிட்டுப் பேசுவதில் பிழை என்ன?

"பெய்த முறையன்றிப் பிறழ உடன்தரும்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே."

[பெய்தல் = இடுதல். பிறழ - மாறுபடும்படி. உடன்தரும் - ஒருங்கே கொடுக்கும். செய்தி = இயல்பு.]

இன்னும் சில வாத்தியார்கள் உண்டு. அவர்கள் நன்ருகப் படித்திருப்பார்கள். ஆனுல் அவரிடமுள்ள கல்வியை லேசில் நாம் பெறமுடியாது. அவர்களிடம் நடையாய் நடந்து அவர்களுடைய கோபதாபங்களுக்கு உட்பட்டுக் கற்றுக்கொள்ளவேண்டும். அவர்களாக மனம் வந்து சொல்லிக் கொடுத்தால் ஏதாவது தெரிந்துகொள்ளலாம். மாணுக்கன் சொந்த முயற்சியினுலும் பக்தியினுலும் அவர்கள் உள்ளத்தைக் கனிவிக்க இயலாது. இந்த இனத்தாரை இலக்கணக்காரர்கள் பனைமரம் என்று சொல்கிருர்கள்.

மடல் அடர்ந்து நிற்கும் பனைமரத்தில் பனநுங்கோ பழமோ இருக்கிறது. விடுவிடுவென்று ஏறினேம், பறித்தோம், தின்றேம் என்பதற்கு இல்லையே! எவ்வளவு கஷ்டப்பட்டு

உடம்பிலே காயத்தை ஏற்றுக்கொண்டு காயைப் பறிக்கவேண்டும். இல்லாவிட்டால் பனம் பழம் தானே விழும்வரைக்கும் காத்திருக்கவேண்டியதுதான். பனைமர வாத்தியாரால் மாணுக்கர்களுக்கு என்ன பிரயோசனம் இருக்கப் போகிறது?

"தானே தரக்கோளின்
அல்லது தன்பால்
மேவிக் கோளக்கோடா
இடத்தது மடற்பனை."

பருத்திக் குடுக்கை வாத்தியாரென்று ஒரு ஜாதியை இலக்கண நூலில் காணலாம். பழைய காலத்தில் சிக்கிமுக்கிக் கல்லால் நெருப்பு உண்டாக்கிவந்தார்கள். சிக்கிமுக்கிக் கல்லை உராயும்போது நெருப்புப் பொறி உண்டாகும். அதைப் பருத்தியிலே பற்றச் செய்து அதிலிருந்து தேங்காய் நார், உமி முதலியவைகளில் பற்றவைப்பது வழக்கம். இந்தக் காரியத்துக்காக ஒரு குடுக்கையில் பருத்தியை அடைத்து வைத்திருப்பார்கள். அதிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக அவ்வப்போது பஞ்சை எடுத்து உபயோகிப்பார்கள்.

பருத்திக் குடுக்கையில் பஞ்சை அடைப்பதும் கஷ்டம்; அதிலிருந்து எடுப்பதும் கஷ்டம். கொஞ்சங் கொஞ்சமாகத்தான் அடைக்கவேண்டும்; அப்படியே சிறிது சிறிதாகவே எடுக்க வேண்டும். பருத்திக் குடுக்கை வாத்தியாரிடத்தில் உள்ள படிப்பும் அந்தப் பஞ்சைப் போன்றதே. அவர் மூளை கொஞ்சங் கொஞ்சமாகவே கல்வியை ஏற்றுக்கொண்டிருக்கும். பாடம் சொல்லித் தரும்போது சிறிது சிறிதாகவே சொல்லிக் கொடுப்பார். மாணுக்கனுக்கு எவ்வளவு ஆர்வம் இருந்தாலும் சரி, அவருடைய ஆமை நடை மாருது. பழங்காலத்தில் இப்படிச் சில தமிழாசிரியர்கள் இருந்தார்கள். ஏதாவது ஒரு நூலைச் சிரமப்பட்டுக் கொஞ்சங் கொஞ்சமாகப் படித்துத் தேர்ச்சி பெற்றிருப்பார்கள். அவர்களிடம் யாரேனும் போய்ப் பத்துப் பாடல்களை ஒருங்கே கேட்கவேண்டுமென்று ஆசைப்பட்டால், "தமிழ் கிள்ளுக் கீரையா? சுலபமாக வாரி இறைக்கக் கடலைச் சுண்டலா? நான் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கற்றுக்கொண்டேன், தெரியுமா?" என்று சொல்வார்கள். அவர்கள் கஷ்டப்பட்டதற்கு மாணுக்கன் எப்படிப் பிணையாவான்?

பருத்திக் குடுக்கையின் இயல்பைச் சொல்லும் சூத்திரம் பின்வருமாறு:

"அரிதிற் பெயக்கொண்டு அப்பொருள்
தான்பிறர்க்கு
எளிதீ வில்லது பருத்திக் குண்டிகை."

[அரிதின்-கஷ்டத்தோடு. பெய-செலுத்த. எளிது ஈவு இல்லது - எளிதிலே கொடுக்கும் இயல்பு இல்லாதது.]

முடத்தெங்கு வாத்தியார் ஒருவகை. கண்ணபிரானைப்பற்றி ஒரு கதை கேட்டிருக்கிறோம். சத்தியபாமைக்காக அப்பெருமான் பாரிஜாத மரம் கொணர்ந்து அத்தேவி வீட்டில் நட்டானும். அது வளைந்து வளர்ந்து ருக்மிணி வீட்டில் பூவை உதிர்த்ததாம். முடத்தெங்கு என்றால் வளைந்த தென்னைமரம் என்று பொருள். அதவும் வேர்படர்ந்த இடம் ஒன்ருனல், தேங்காய் விழும் இடம் வேருக இருக்கும். ஒருவன் தன் வீட்டுப் புறக்கடையில் மரத்தை வைத்துத் தண்ணீருற்றிக் காப்பாற்றினுல் முடத்தெங்கு அடுத்த வீட்டுப் புறக்கடையில் தலையை நீட்டும். அதிலிருந்து விழும் மட்டையோ தேங்காயோ அடுத்த வீட்டுச் சொத்தாகப் போய்விடும்.

எவ்வளவோ பயபக்தியோடு வந்து வழிபடும் மாணுக்களைப் புறக்கணித்துவிட்டு வருவார் போவாருக்கெல்லாம் உபதேசம் செய்யும் வாத்தியாரையரவை முடத்தெங்கென்று சொல்கிருர்கள்.

"பல்வகை உதவி வழிபடு பண்பின்
அல்லோர்க்கு அளிக்கும் அதுமுடத் தெங்கே."

வழிபடும் மாணுக்கன் அறிவுப் பசியோடு ஏமாந்து நிற்கும்படி செய்வது பாவம் அல்லவா?

போலிவாத்தியாரின் லக்ஷணங்களை இலக்கண நூல் தொகுத்துச் சொல்வதைப் பாருங்கள்.

"மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்
அழுக்காறு அவாவஞ்சம் அச்சம் ஆடலும்
கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங்கு ஒப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோர் இலர் ஆசிரியர் ஆகுதலே."

'இந்தக் குணங்கள் கெட்ட வாத்தியார்களுக்கு உரியன' என்று சொல்லவில்லை; இந்த லக்ஷணங்களை உடையவர்கள், ஆசிரியர் ஆகலாம் என்ற சிந்தனைக்கே உட்படாதவர்களாம். ஆசிரியர் ஆகுதல் அவர்பால் இல்லை என்று சாதுரியமாகச் சொல்கிறது சூத்திரம்.

எல்லாவற்றையும் பார்க்கும்போது 'வாத்தியார் ஐயா' என்ற பட்டம் சுலபமாகக் கிடைக்கக் கூடியதென்று தோற்றவில்லை.

கஜினியின் கனவு

மா. ராஜகோபாலன்

1

கஜினி முகம்மது பதினாறு முறை இந்தியாவின்மீது படையெடுத்துவிட்டான். பொன்னையும் வெள்ளியையும், முத்தையும், மோகராவையும், வைரத்தையும் கணக்கில்லாமல் அவனுடைய ஒட்டகக் கூட்டங்களும், குதிரை வரிசைகளும் சுமக்க முடியாமல் சுமந்து கஜினியில் சேர்த்தன. ஆனால் இவ்வளவு உயர்ந்த வஸ்துக்களுடன் ஒன்றுசேர வேண்டிய மற்றொரு வஸ்துவை அவன் இந்தியாவிலேயே விட்டுவிட்டு வந்துவிட்டான். கஜினி முகம்மதின் மனத்தை இந்தக் குறை வாட்டியது. யாத்திரிகருடைய மட்டற்ற புகழ்ச்சியும் எப்படியாவது அதை அடையவேண்டும் என்ற அடக்க முடியாத பசியை அவன் உள்ளத்தில் உண்டாக்கிவிட்டது.

கடைசியில் இதுகாறும் தான் பயந்து திரும்பிய அந்த ராஜபுதனப் பாலைவனத்தையும் லக்ஷ்யம் செய்யாமல் பதினேழாவது முறையாக கி.பி. 1024-ஆம் வருஷம் இந்தியாவின்மீது படையெடுத்தான். இந்த முறை அவன் ஒப்பற்ற அந்த ஒரே வஸ்துவை மட்டுமே நாடி வந்ததால், போகும் வழியில் கொள்ளையிட்ட பொருள்களைத் தன் படை வீரர்களுக்குப் பங்கிட்டு அளித்தான். அவன் சேனை வெள்ளமும், உத்ஸாக மேலீட்டால் கஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் காட்டியாவாடிலுள்ள சோமநாதபுரத்தை நோக்கிப் பாய்ந்தது. அதுதான் கஜினியின் முக்கியக் குறி.

சோமநாதபுர அரசர் பீமதேவர் கஜினியின் வரவைக் கேட்டு, வனத்திற்கு ஓடி ஒளிந்துவிட்டார். ஆனால் இருபது வயசே நிரம்பிய படைத்தலைவனான வாமதேவனின் வாலிப ரத்தம் இந்தப் பேடித்தனமான செய்கையைக் கண்டு கொதித்தது. காட்டியாவாடிலேயே ஒப்பற்ற ஒரு தனி வீரன் அவன். நாட்டிலுள்ள பெரிய மனிதர்களைக் கூட்டி, அவர்களிடம் கடமையை அறிவுறுத்தினான். 'கஜினியின் சேனை வெள்ளத்தில் நாம் துரும்புபோல் மிதந்து விடுவோம்' என்பது சோமநாதபுரவாசிகளுக்கு நன்கு தெரியும். ஆனால் வாமதேவனின் வீரச் சொற்கள் அவர்கள் உடலில் மறைந்துகிடந்த ஜீவ சக்தியைப் பெருக்கெடுத்து ஓடச் செய்தன. இளைஞர்களும் வாள் பிடிக்க, 'நான் முந்தி, நீ முந்தி' என்று போட்டி போட்டுக்கொண்டு முன் வந்தார்கள். கடைசியாக, திரளான செல்வக் குவியலைக் கொட்டிக் கொடுத்து, கஜினியுடன் சமாதானமாகப் போய்விடுவது, அதற்கு அவன் உடன்படாவிட்டால் வாமதேவனுடன் சேர்ந்து தங்கள் ஜீவன் உள்ள வரையில் போராடி, சோமநாதரின் ஆலயத்தைக் காப்பது என்ற முடிவுக்கு வந்துவிட்டனர்.

சோமநாதரின் விக்கிரகத்திலுள்ள விலை மதிக்க முடியாத ஆபரணங்களெல்லாம் கழற்றப்பட்டுப் பத்திரமாக ஒரு சிறு பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டன. அதை அந்நியன் நம் நாட்டை விட்டுக் கவர்ந்து செல்லாமல் பாதுகாக்கும் பொறுப்பை ஒரு காரணத்தை முன்னிட்டு, வாமதேவனே ஏற்றுக்கொண்டான். கோயிலின் நான்கு கதவுகளும் உள்ளே தாழிடப்பட்டன. வாமதேவன் நகரமக்களுடன் கோவிலின் மதில்மீது உட்கார்ந்துகொண்டு இராப் பக

லாகக் காவல் காத்துவந்தான். கஜினியின் சேனை ஊரில் புகுந்து விட்டது. சமாதானத்துக்கு அவன் ஒப்பவில்லை. ஏழு நாள் உக்கிரமான போர் நடந்தது. வாமதேவனின் நிகரற்ற தலைமை, ஹிந்துக்களை உயிரைக்கொடுத்துப் போராடச் செய்தது. அவனுடைய அற்புதமான வாள் வீச்சு, கஜினியையே திகைக்க வைத்தது.

ஆனால் எட்டாம் நாள் மாலை, முகம்மதியர்களின் போர்ப் பலம் தாங்காமல் கோவிலின் கதவுகள் தூள் தூளாகப் பறந்துவிட்டன. வாமதேவன் உடல் முழுவதும் காயத்துடன் சிறைப்படுத்தப்பட்டான். கஜினி நேராகச் சோமநாதரின் விக்கிரகத்தை நோக்கிப் பாய்ந்தான். அங்கேதான் அவன் வேண்டி வந்த, உலகத்தில் சிறந்த வஸ்து இருப்பதாக, அவன் பலர் சொல்லக் கேட்டிருந்தான். ஆவலினால் அவன் இருதயத் துடிப்பு அதிகமாயிற்று. ஆனால் விக்கிரகத்தை நெருங்கியதும் அதன் மீது ஒரு தூசிகூட இல்லாமலிருந்ததைக் கண்டு அவன் கோபம் எல்லை கடந்தது. விக்கிரகத்தின் மீதிருந்த நகைகள் அடங்கிய பெட்டியை அப்படியே தன்னிடம் ஒப்பிக்க வேண்டுமென்றும், இல்லாவிட்டால் ஊரையே பொசுக்கி விடுவதாகவும் உறுமினான்.

ஊரைக் காக்க விரும்பிய பெரியோர்கள், வாமதேவனிடமிருந்து நகைப்பெட்டியைக் கைப்பற்றி, கஜினியின் பாதத்தில் சமர்ப்பித்தார்கள். பெட்டியை வாங்கி அடக்க முடியாத ஆசையுடன் திறந்தான் அவன். அதிலும் பெருத்த ஏமாற்றம். சோமநாதரின் கிரீடத்தில் புதைக்கப்பட்டிருந்த, கஜினி அடையக் கனவு கண்டுகொண்டிருந்த அந்த ஒப்பற்ற மரகதத்தைத் தவிர, பாக்கி எல்லாம் அப்படியே இருந்தன. கோபத்தினால் கஜினியின் கண்கள் ரத்தத்தைக் கக்கின. அவன் உடல் துடித்தது. விக்கிரகத்தை நோக்கித் திரும்பினான். ஆத்திரம் முழுவதையும் சேர்த்து வாளால் ஓங்கி அடித்தான். மறுகணம் விக்கிரகம் உடைந்து பொன்னும் மணியும் சிதறின. அதை அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவனுடன் வந்தவர்கள் வாரிக் கட்டிப் பத்திரப்படுத்தினர். வாமதேவன் மறுநாள் சித்திரவதை செய்யப்படுவதற்காகக் கஜினியின் காவற்கூடத்திற்குக் கொண்டு போகப்பட்டான்.

2

நள்ளிரவு. ஆகாயத்தில் பேருக்கு ஒரு நக்ஷத்திரங்கூட இல்லை. எங்கும் மேகக் கூட்டம் சுற்றிக் கவிந்துகொண்டிருந்தது. ஏழு நாளாய்ச் சண்டை செய்து களைத்திருந்த முகம்மதியச் சிப்பாய்கள் கண்ணுக்கு எட்டிய வரையில் அடிக்கப்பட்டிருந்த கூடாரங்களில் படுத்து அயர்ந்து நித்திரை செய்துகொண்டு இருந்தனர். கஜினி, தான் விரும்பிவந்தது கிட்டாமற் போகவே, வாமதேவனை எந்த எந்த விதங்களில் துன்புறுத்தி, அவனை அந்த மரகதத்தைக் கக்க வைக்கலாம் என்ற யோசனையுடன் படுக்கையில் தூக்கம் கொள்ளாமல் படுத்துப் புரண்டுகொண்டிருந்தான். நகரத்தைப் பயங்கர அமைதி கௌவிக்கொண்டிருந்தது.

கைதிகளின் கூடாரத்தைச் சுற்றிக் காவலாளிகள் தூங்கிவழிந்து கொண்டிருந்தனர். ஒரு முகம்மதியன் மட்டும் பாதிக் குடி வெறியில் ஹுக்காவைப் பற்றவைத்து அதிலிருந்து சுருள் சுருளாகப் புகையை விட்டுக்கொண்டிருந்தான். அன்று அவன் காவலுக்கு விடப்பட்டிருந்தவை எட்டுக் கூடாரங்கள். இரவில் அவன் தூங்குவதே இல்லை என்பது கஜினிக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் வாமதேவனும் அவன் காவலுக்குள் தான் அடங்கியிருந்தான். சிறிது நேரத்திற்கு ஒரு தரம் தனக்கு விடப்பட்டிருந்த ஒவ்வொரு கூடாரத்தையும் கவனித்துவந்த அவன், திடீரென்று ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போல், தான் உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்தான். ஹுக்காவை அணைத்து இடுப்பில் செருகிக்கொண்டான். அவன் முகம் குடி வெறியிலிருந்து சற்றுத் தெளிந்திருந்தது. பூனைபோல் அடிமேல் அடிவைத்து ஆறுவது கூடாரத்திற்குள் நுழைந்தான். விடுதலைக்காகத் தன் கட்டுக்களுடன் போராடிக்கொண்டிருந்த வாமதேவன் அந்த முகம்மதியன் நுழைந்ததும் அப்படியே ஸ்தம்பித்து விட்டான். இன்னும் ஒரு தளையே அறுக்கவேண்டியது பாக்கி. அதை அறுத்துவிட்டால் எப்படியாவது தப்பிச் செல்லலாம். முகம்மதியன் சிரித்துக்கொண்டே, "ஏன் இந்தச் சிரமம்? நானே அவிழ்த்து விடுகிறேன்" என்றதும் பயம் மாறி ஆச்சரியம் அவன் கண்களில் பிரகாசித்தது. ஒரு கணம் வெறும் பிரமையோ என்று எண்ணினான். 'இல்லை' என்பதுபோல் அந்த முகம்மதியன் அவன் கடைசித் தளையையும் கத்தரித்துவிட்டான்.

வாமதேவன் எழுந்து தன் கைகளை உதறிக்கொண்டான். அந்த முகம்மதியனை ஏதோ கேட்க வாயெடுத்தான். ஆனால் முகம்மதியனோ, சைகையினால் அவனைப்

பேசாமல் இருக்கச்செய்து, அந்த இருளில் தன்னைப் பின்தொடரச் சொல்லி முன்னே நடந்தான். மனத்திற்குள் வாமதேவனுக்கு, 'திக் திக்' என்று அடித்துக்கொண்டது. இருந்தாலும் தைரியத்தைக் கைவிடாமல் நடந்தான். முகம்மதியன் தன் கையில் இருந்த பந்தத்தை அணைத்துவிட்டான். இருவரும் மௌனமாகக் கூடாரத்திலிருந்து கண்ணுக்கு எட்டாத தூரம் நடந்துவிட்டார்கள். வாமதேவன் பொறுமையை இழந்து, "நீ எதற்காக என்னை இப்படி அழைத்துப்போகிறாய்? நான் போகவேண்டும்" என்றான்.

"எங்கே?"

இதற்கு வாமதேவனால் பதில் கூற முடியவில்லை. அந்த முகம்மதியன் அலக்ஷியமாகச் சிரித்து, கையில் வைத்திருந்த பந்தத்தை மறுபடியும் ஏற்றி வாமதேவன் முகத்திற்கு நேராகப் பிடித்து, அவன் வலது கண்ணுக்குப் பக்கத்தில் இருந்த பெரிய மச்சத்தைப் பார்த்துவிட்டுத் தனக்குள் திருப்தி அடைந்தான். வாமதேவனால் அந்தப் பந்தத்தின் ஒளியில் ஏறக்குறைய ஐம்பது வயசு மதிக்கத்தக்க அந்த முகம்மதியனின் கபடமற்ற கண்களில் உள்ள உண்மை ஒளியைக் கண்டுகொள்ளாமல் இருக்க முடியவில்லை. திடீரென்று அந்த முகம்மதியன், ஏதோ நினைத்துக்கொண்டவன் போல், "காவல் கைதியை, அதுவும் உன்போன்ற கைதியை, தப்பவிட்டால் என்ன தண்டனை தெரியுமா?" என்றான்.

"ஏன், சிரச் சேதமாகத்தான் இருக்க வேண்டும்" என்றான் வாமதேவன்.

"அதுவாக இருந்தால்தான் மேலாயிற்றே. உனக்குப் பதில் நான் சித்திரவதை செய்யப்படுவேன். அதுதான் கஜினியின் வழக்கம்."

"அப்படியானால் நீ ஏன் என்னைத் தப்புவிக்க வேண்டும்?"

"நீ எதற்காகத் தப்ப விரும்புகிறாயோ அதற்காகத்தான்."

வாமதேவனுக்கு இந்தப் பதில் புதிர்போல இருந்தது. மறுபடியும் முகம்மதியனைப் பார்த்து, "நீ நினைப்பது தவறு. நான் உயிருக்காகத் தப்ப விரும்பவில்லை" என்றான். "நான் அப்படிச் சொல்லவில்லையே. அதோ உன் இடது கையின் சதையில் வைத்துத் தைத்திருக்கும் மரகதத்தை அந்நியன் கையில் அகப்படாமல் காப்பாற்றுவதன் பொருட்டே உன் உயிரைப் பணயமாக வைத்துத் தப்ப நினைக்கிறாய்" என்றான் முகம்மதியன். இந்தப் பதில் வாமதேவனை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. பரபரப்புடன், "அது உனக்கு எப்படித் தெரியும்?" என்றான்.

"அதைப்பற்றி நாம் இப்பொழுது கவலைப் படவேண்டாம். நீ பயப்படவும் வேண்டாம். விடிவதற்கு இன்னும் இரண்டு ஜாமம் இருக்கின்றன. அதற்குள், கஜினியின் கைக்கு எட்டாத தூரத்திற்கு உன்னைக் கடத்திவிடுகிறேன். அந்த மரகதத்தை நான் கவர்ந்துகொள்ளச் சூழ்ச்சி செய்கிறேன் என்று நினைக்காதே. பொன்னிலும் வைரத்திலும் இருந்த ஆசை என்னை விட்டு அகன்று பல வருஷங்கள் ஆகின்றன. இன்று கஜினியின் சேனையில் அவைகளைத் திண்டாத பெருமை என் ஒருவனுக்குத்தான் சேரும். இந்த ஹுக்காவும், இந்த மதுவுமே என் உயிர்த் தோழர்கள்" என்று தோளில் மாட்டித் தொங்கவிட்டிருந்த கலசத்தில் இருந்த மதுவைக் காலி செய்துவிட்டு, ஹுக்காவை எடுத்துப் பற்றவைத்தான். வாமதேவன் ஆச்சரியம் மேலிட்டவனாய் அவனையே கண்கொட்டாமல் கவனித்துக்கொண்டிருந்தான். முகம்மதியன் அவனை உட்காரச்சொல்லித் தானும் உட்கார்ந்துகொண்டு, மறுபடியும் பேச ஆரம்பித்தான். "உன்னுடைய வீரமும், நீ நடத்திய போரின் போக்கும் என் மனத்தைக் கவர்ந்துகொண்டன. இப்பொழுது உன்னைத் தப்புவிக்கிறேன். ஆனால் நாளை நான் கஜினியினால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்படுவேன். எனக்குக் கதை சொல்வதென்றால் மிகவும் ஆசை. ஆகையால் என் வாழ்க்கையின் கடைசிநாளாகிய இன்று, உனக்கு ஒரு கதை சொல்லப்போகிறேன். நீ கேட்டுத்தான் ஆகவேண்டும்" என்றான். தான் கதை சொல்லி முடிக்கும்வரை வாமதேவன் வாயைத் திறக்கக் கூடாது என்று சொல்லிவிட்டுக் கதையை ஆரம்பித்தான்.

3

இருபது வருஷங்களுக்கு முன் 'காபூல் தேசக் கட்டழகி' என்ற குல்நார் தன்னுடைய ஒப்பற்ற ரூப சௌந்தரியத்தினால், ஹிந்துஸ்தானத்தின் அரசர்களின் மனத்தில் அட்டைபோல் ஒட்டிக்கொண்டு அவர்கள் ரத்தத்தை உறிஞ்சி, சிறந்த செல்வங்களை எல்லாம் கொள்ளை கொண்டாள். இப்பொழுது நீ கையில் பத்திரமாய் வைத்துத் தைத்திருக்கும் இதே பச்சை மரகதம் அவளையும் ஒரு காலத்தில் பெரும் பைத்தியமாய் அடித்தது.

காட்டியாவாடில் அப்பொழுது வாள்வீச்சில் உன்னதஸ்தானத்தில் வைத்துப் போற்றப்பட்ட திலாவர் ஒரு சமயம் காட்டிய ஒப்பற்ற வீரத்தின் பரிசாக, விலைமதிப்பற்ற அந்த மரகதத்தைப் பாஞ்சால மன்னனிடமிருந்து பெற்றிருந்தான். அழகு மிகுந்தவளும் வீரத்தில் தன் கணவனுக்கு நிகரானவளுமான அவன் மனைவி கீதா, பெருமையின் சின்னமாக அதை வாங்கிப் பொற்பூண் பூட்டித் தன் கழுத்தில் அணிந்திருந்தாள்.

இந்த மரகதத்தின் ஆசைதான் கட்டழகி குல்நாரைச் சோமநாதபுரம் வரையில்

தள்ளி வந்தது. அவள் வரவைப்பற்றித்தான் ஊரெல்லாம் பேச்சாக இருந்தது. பெரிய பெரிய செல்வர்களெல்லாம் அவளுக்குப் பாத காணிக்கையாகத் திரளான செல்வக் குவியலைக் கொட்டிக் கொடுத்தார்கள். திலாவர் மட்டும் அவளை ஒரு தாசியாக மதித்துத் தூரவே விலகியிருந்தான். பெருமைக்கும் பாக்கியத்திற்கும் கீதாவைத்தான் அவன் தெய்வமாகக் கருதினான். ஆனால் நளினமான நாகப்பாம்பான குல்நார் தன் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள எதையும் செய்யத் தயங்குவதில்லை. திலாவரை அவன் வீட்டிலேயே மடக்க ஆரம்பித்தாள். அடிக்கடி விலை உயர்ந்த பட்டாடைகளால் தன்னைச் சிங்காரித்துக்கொண்டு, திலாவர் வீட்டிற்குச் செல்வாள். திலாவரின் வீரச் செயல்களைப் பற்றித் தான் பிற இடங்களில் கேட்டவற்றைச் சொல்லிச் சொல்லிப் பாராட்டுவாள். திலாவரின் ஒன்றரை வயசு நிரம்பிய ஆண்குழந்தை அவள் மென் கரங்களில் கொஞ்சிக் குலாவியது. கீதாவைக்கூட அவள் 'சகோதரி' என்று அன்பாக அழைக்க ஆரம்பித்தாள். ஆனால் கீதா இதற்கு இடம் கொடுக்கவில்லை. தன்னுடைய கணவனையும் அவள் எச்சரிக்கவில்லை. அவனுடைய உறுதியில் அவளுக்கு அவ்வளவு நம்பிக்கை. இருந்தாலும் ஆண்கள் இருதயத்தை அவள் நன்றாக அறிந்தவள் அல்ல என்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் குல்நாரின் மாந்தளிர் போன்ற மேனியும், மாதுளை மொக்கை ஒத்த உதடுகளும், கொஞ்சும் கண்களும், சுண்டினால் சிவந்துபோகும் அதரமும் பெண்களையே மயங்கும்படி செய்யும் என்பதை அறிந்தும், தன் கணவனிடம் அவள் அண்டுவதைக் கண்டு வாளா இருப்பாளா?

கடைசியாகக் குல்நார் திலாவரின் மனத்தைப் பூர்ணமாக அடிமை கொண்டு விட்டாள். அவன் அவள் வீடே கதி என அடைய ஆரம்பித்தான். அழகின் ராணி என்று அவளைப் பூஜித்தான். அவளுடைய மோஹனப் புன்னகைக்கு எதையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தான். இதுபோல் மன்னாதி மன்னர்களை எல்லாம் குல்நார் காலின்கீழே போட்டுத் துவைத்திருக்கிறாள். திலாவர் அவளுக்கு எம்மாத்திரம்? வேண்டியமட்டும் அவன் செல்வத்தையும், புகழையும், அவன் ரத்தத்தையும் உறிஞ்சி அவனை ஊரார் கண்களில் உன்மத்தனாக்கினாள்.

இப்படியே ஒரு வருஷம் ஓடிவிட்டது. நாட்களும் சென்று சென்று திரும்பிக் கொண்டிருந்தன. கணவனின் செய்கை கீதாவின் உள்ளத்தில் ஆறாத புண்ணை உண்டாக்கிவிட்டது. நயமாகவும் பயமாகவுங்கூடச் சொல்லி அவனைத் திருத்தப் பார்த்தாள். தேனில் விழுந்த வண்டு திரும்பி எவ்வாறு பறக்காதோ, அவ்வாறே குல்நாரைத் திலாவரின் மனத்திலிருந்து அவளால் நீக்க முடியவில்லை.

ஒரு நாள் திலாவர் அவளிடம் மிகவும் அந்நியோந்நியமாய் இருந்தான். தன்னுடைய போதனையால் கணவன் திருந்திவருகிறான் என்று எண்ணி, கீதா மனத்திற்குள் மகிழ்ந்தாள். அன்றுதான், சற்று நிம்மதியாகத் தன் குழந்தையைக் கரங்களினால் அணைத்துக் கொண்டு அவள் கண் அயர்ந்தாள். ஆனால் நடுவில் தன் கழுத்திலிருந்து ஏதோ அகற்றப்படுவதைக் கண்டு திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள். ஆம்! கழுத்தில் இருந்த பச்சை மரகதம் களவாடப் பட்டிருந்தது. அப்பொழுது வெளியில் குதிரையின் காலடிச் சப்தமும் பலமாகக் கேட்டது. கீதா விஷயத்தைப் புரிந்து கொண்டாள். அவளுடைய ராஜபுத்திர ரத்தம் அவமானத்தால் கொதித்தது. மறு கணம் ஏதோ முடிவுக்கு வந்தவள்போல் குழந்தையைத் தாதியிடம் ஒப்படைத்து விட்டுத் தன் அறையை நோக்கி ஓடினாள்.

திலாவர் உத்ஸாகமாகக் குதிரையின் மீது இன்பக் கனவு கண்டுகொண்டே போய்க்கொண்டிருந்தான். ஆனால், அவன் அப்படி நெடுந்தூரம் போய்விடவில்லை. வழியில் கையில் ஏந்திய வாளுடன் கீதா வீராவேசத்துடன் பின்னாலிருந்து பாய்ந்து வந்து அவனை மடக்கிக் கொண்டாள். கோபத்தினால் அவள் முகம் கோவைப்பழம் போல் சிவந்திருந்தது. இதைக் கண்டு திலாவர் ஒரு கணம் திகைத்துவிட்டான். ஆனால் அவளைச் சமாதானப்படுத்தி அவன் போக யத்தனித்தான். கீதா விடவில்லை. "நான் உயிரோடு இருக்கும்வரையில் இந்தப் பேடித்தனமான செய்கைக்கு உன்னை அநுமதிக்கமாட்டேன். ஒன்று மரகதம் என் கைக்கு வரவேண்டும்; அல்லது என்னைக் கொன்று நீ அதை எடுத்துப்போக வேண்டும்" என்று வாளை நீட்டிப் பெண் சிங்கம் போல் கர்ஜித்தாள். குல்நாரிடம் கொண்டிருந்த ஆசை திலாவரை முன்பே பேடியாக்கி விட்டது. பதிலுக்கு அவனும் வாளை உருவிவிட்டான். இருவருக்கும் கோரமான போர் நடந்தது. கீதா சளைக்காமல் சண்டை செய்தாள். திலாவர், ஒரு பெண்ணிடம் சண்டை செய்கிறோம் என்பதையே மறந்துவிட்டான். அவன் கையில் இருந்த மரகதம் நழுவிக் கீழே விழுந்தது. கீதா குதிரையிலிருந்து ஒரு துள்ளுத் துள்ளி அதைக் கையில் எடுத்துக் கொண்டாள். ஆனால் அவள் நிமிர்வதற்குள் முழு ஆத்திரத்துடன் திலாவரின் வாள் முதுகுவழியாய் அவளுடைய இருதயத்தை எட்டிப் பார்த்தது. கீதா சுருண்டு கீழே விழுந்தாள்.

திலாவர் அப்பொழுதுதான் தன் நிலையை உணர்ந்தான். அவமானத்தினல் அவன் உடல் குன்றியது. இதற்குள் அங்கு ஊரிலுள்ளோரும் கூடிவிட்டார்கள். கீதாவைத் திலாவர் தூக்கிப் பிடிக்கப்போனான். ஆனல் அவள் அவனைத் தீண்ட விடவில்லை. மெதுவாக, கீதாவின் வாயிலிருந்து சொற்கள் வெளிவந்தன. "பேடியின் மடியில் நான் உயிர்விடமாட்டேன். என் மகனையும் நீ வளர்க்க விடமாட்டேன். உன் பெயரைக் கூட அவன் வளர்ந்தபிறகு அறியக்கூடாது. இத்தனை நாள் உன்னை என் இருதயத்தில் வைத்துப் பூஜித்தேன்; உன் வீரத்தை எண்ணி எண்ணி இறுமாந்திருந்தேன். உன் வெற்றியின் சின்னமாக இந்த மரகதத்தை மார்பில் அணிந்து உயிரினும் மேலாகக் காப்பாற்றி வந்தேன். ராஜபுத்திர வம்சமே உன்னை எண்ணிப் பெருமை அடையும் என்று எண்ணியிருந்தேன். இன்று நீ எல்லாவற்றையும் மண்ணோடு மண்ணுக்கிவிட்டாய். அதை நினைத்தால் என் மரண அவஸ்தை பின்னும் அதிகரிக்கிறது. உன்மீது ஆணையாக, இந்த மரகதம் இனி உன் குல்நாருக்குக் கிடைக்காது. என் வாழ்க்கையில் எப்படி மண்ணைப் போட்டாளோ, அப்படியே அவள் ஆசையிலும் மண் விழுந்துவிட்டது. மரகதத்தை நம் குலதெய்வம் சோமநாதருக்கு அளித்துவிடு. இங்கே கூடியிருப்பவர்களே இதற்குச் சாக்ஷி. குழந்தையை என் தோழி பத்மினியிடம் கொடுத்து அவளையே வளர்க்கச் சொல்லு. நீ எங்காவது சென்று உன் பாவத்தைக் கழித்துக்கொள்" என்று கூறிவிட்டு உயிர்நீத்தாள்.

இந்த இடத்தில் முகம்மதியன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். வாமதேவன் மிகுந்த ஆவலுடன், "பிறகு என்ன ஆயிற்று?" என்றான்.

"பிறகு என்ன ஆயிற்று? எல்லாம் அவள் சொன்னபடியே நடந்தன. திலாவர் பாஞ்சாலத்திற்குப் போய், அங்கே பழைய நண்பனன அரசனின் கீழ் வேலைக்கு அமர்ந்தான். கஜினி பாஞ்சாலத்தின் மீது படையெடுத்து அங்கிருந்த அரசனைக் கொன்று திலாவரையும் சிறைப்பிடித்துக் கொண்டு போய்விட்டான். கஜினியில் அவன் முகம்மதியனைக் கட்டாயப்படுத்தப் பட்டான். அன்றுமுதல் இன்றுவரை கலந்தர் என்ற பெயருடன் கஜினியின் கீழ் வேலை செய்துவருகிறான். 'பெற்ற மனம் பித்து' என்பது போல் தன் மகன் வளர்ந்து பெரியவனன பிறகு அவனைப் பார்க்க வேண்டும், அல்லது, அவன் செய்யும் வீரச் செயல்களைக் காதினலாவது கேட்கவேண்டும் என்ற ஒரே ஆசையால் இன்றுவரை அவன் உயிரை வைத்துக்கொண்டிருக்கிறான். இனிமேல் அவன் நிம்மதியாக உயிரை விடுவான்."

"என்ன, நிம்மதியாக உயிர்விடுவானு! அவன் மகனைப் பார்த்தாகிவிட்டதா?" என்று ஆச்சரியம் ததும்பிய குரலில் வாமதேவன் கேட்டான்.

"ஆம், பார்த்துவிட்டான். கண்களால் அவன் செய்த வீரப்போரைப் பார்த்துவிட்டான். தன் வீரத்தாய் எதற்காக உயிர் விட்டாளோ, அதைக் காக்க, வளர்ப்புத் தாய் பத்மினியின் சொற்படி கடும் போர் செய்து சிறைப்பிடிக்கப்பட்ட பிறகு, அந்நிய நாட்டிற்கு அந்த அருமைப் பொருள் போகக் கூடாது என்பதற்காக, உயிரையும் திருணமாக மதித்துத் தப்ப விரும்பும் அருமை மகனைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறான். இனிமேல் திலாவர் தன் பாவத்தைக் கழுவி நிம்மதியாய் உயிர் விடுவான்" என்று கூறித் தன் கரங்களை நீட்டி, அந்த முகம்மதியன் வாமதேவனைத் தழுவி அணைத்துக்கொண்டான். அந்த மங்கிய பந்தத்தின் ஒளியில், அவன் கண்களிலிருந்து நீர் 'பொல பொல' என்று கீழே உதிர்ந்தது நன்ருகத் தெரிந்தது.

வாமதேவன் உணர்ச்சியினல் ஊமையாய்ப் போனன். இந்த நிலையில் இருவரும் வெகு நேரம் இருந்தார்கள்.

பிறகு முகம்மதியன் வாமதேவனைப் பிரிய மனமற்றவனய், தான் தயாராக வைத்திருந்த குதிரையின் மீது ஏற்றி அனுப்பிவிட்டு, அவன் மறையும் வரையில் பார்த்திருந்து மனத்தில் நிம்மதியுடன் கூடாரத்தை அடைந்தான்.

4

மறுநாள் வாமதேவன் தப்பிவிட்டான் என்று கஜினியின் காதில் விழுந்ததும், அவன் கண்ட கனவெல்லாம் காற்றில் கரைந்துவிட்டது. அந்த ஒப்பற்ற மரகதத்திற்காகத் தான் பட்ட இவ்வளவு கஷ்டமும் வியர்த்தம் என்று கண்டதும் அவனுக்கு அழுகைகூட வந்துவிட்டது. காவலாளி கலந்தரை உயிருடன் நெருப்பில் போட்டு, அதில் அவன் படும் மரணவஸ்தையைக் கண்டு தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள எண்ணினன். ஆனல் அதிலும் அவன் பெருத்த ஏமாற்றமே அடைந்தான். கலந்தர் எவர் கைக்கும் எட்டாத இடத்துக்கு முன்பே போய்விட்டான். ஆம்! இருபது வருஷத்திற்குப் பிறகு, தன் அருமைக் கீதாவிடம் அவள் மகனுடைய வீரத்தைப் புகழ்ந்து பாராட்டப் போய்விட்டான்.

கஜினி வந்த காரியத்தை முடிக்க முடியாமல் ஏங்கிய மனத்துடன் தன் ஊரை நோக்கிக் கிளம்பிச் சென்றான்.

தேவ வாழ்வு

ந. சிதம்பர சுப்ரமண்யன்

[சத்தியானந்தன் விக்கிரகம் ஒன்றை உளிகொண்டு நகாசு வேலை செய்து கொண்டிருக்கிறான். மெதுவாகச் சதங்கை ஒலி கேட்கிறது. உளியை நிறுத்திவிட்டுச் சற்றுக் கவனிக்கிறான். சுந்தரவல்லி வருகிறாள்.]

சத்தியானந்தன்: சுந்தரி, ஏது இவ்வளவு சீக்கிரம்?

சுந்தரி: ஆற்றங்கரைக்கு ஸ்நானத்திற்குச் சீக்கிரமே வந்துவிட்டேன். இன்று விக்கிரகம் பூர்த்தியாகிவிடும் அல்லவா?

சத்தி: ஆம். இப்பொழுது கண்தான் பாக்கி. கண்களைத் திறந்துவிட்டால், இந்த விக்கிரகம் சகலரும் தொழும் தெய்வமாகிவிடும்.

சுந்தரி: நீங்கள் கொடுத்துவைத்தவர்கள்!

சத்தி: சுந்தரி, என் வாழ்க்கையின் கனவு, இவ்விக்கிரகத்தில் பூர்த்தியாகிறது. என் நிறைவேறாத ஏக்கங்களைத் திருப்தி செய்ய வந்த மூர்த்தி இது.

சுந்தரி: என் வாழ்க்கையின் கனவும் பூர்த்தி அடையுமா? என் ஏக்கங்கள் முடிவடையுமா என்பதுதான் தெரியவில்லை.

சத்தி: விதி நம் வாழ்க்கையில் ஏன் இவ்வளவு சதி செய்திருக்கிறது என்பதுதான் தெரியவில்லை. இளமைப் பருவம் முதற் கொண்டு பழகி வந்த உன்னை என்னிடமிருந்து பறித்து, அந்நியன் ஒருவனுக்குக் கொடுத்து விட்டதே! சிதைந்த வாழ்வை உருவாக்க இனி என்ன இருக்கிறது?

சுந்தரி: உங்களுக்குக் கலை இருக்கிறது. எனக்கு....

சத்தி: கலை ஒரு மயக்கம். அது போதாது. வாழ்வுதான் வேண்டும். நான் ஒரு தீர்மானத் திற்கு வந்திருக்கிறேன். உன் சம்மதந்தான் தேவை.

சுந்தரி: என்ன செய்ய வேண்டும்?

சத்தி: சுந்தரி, இந்தச் சமூகத்தில் நாம் அமைதியுடன் வாழ முடியாது. இவ்விக்கிரகம் சாவக நாட்டிற்குப் போகிறது. நானும் கூடப் போகிறேன். நீயும் என்னுடன் வந்தால்....

(சுந்தரி திகைத்துத் திடுக்கிட்டு நிற்கிறாள்.)

சத்தி: சுந்தரி, என்ன மௌனமாக இருக்கிறாயே? நான் சொன்னது உன் மனத்தைப் புண்படுத்திவிட்டதா?

சுந்தரி: (லஜ்ஜையுடன்) திடீரென்று கேட்டதும் என் மனம் வியப்பால் நடுக்கம் கொண்டது. என் மனம் நீங்கள் சொல்வதை முற்றும் விரும்பி ஆமோதித்தாலும், நியாய மற்ற காரியமாகத் தோன்றி ஓர் அச்சத்தைக் கொடுத்தது. அதுதான் யோசித்து நின்றேன்.

சத்தி: சுந்தரி, ஒழுங்கீனமான வார்த்தையை என்னிடம் எதிர்பார்ப்பாயா? மனித உள்ளம் உண்மையைத் தவிர ஒன்றையும் பேசாது. ஸ்திரீபுமான்கள் ஒருவரை ஒருவர் காதல் புரிந்து வாழும் வாழ்வுதான் சத்திய மானது. போலி வாழ்க்கைதான் நியாயமற்றது. உலகத்திலேயே மனிதனை உயர்த்தக்கூடிய சக்தி காதல்தான். அது சொல்கிறபடி கேட்போம்.

சுந்தரி: நான் என்ன சொல்வது? எனக்கு வேறு வழி ஒன்றும் புரியவில்லை. உங்கள் கையில் அகப்பட்ட சிற்பங்களைப்போல் உங்கள் விருப்பத்திற்கு என் மனத்தைத் திருப்பும் சக்தி உங்களிடம் இருக்கிறது.

சத்தி: சுந்தரி, இன்றுதான் என் மனத்தில் ஒளிந்துகிடந்த அழகுத் தெய்வம் உருப்பெறுகிறது. இன்றுதான் என் உள்ளத்திலே காத

லைத் தாண்டிய பெண்மணி வாழ்க்கையை உருவாக்கப் போகிறாள்.

சுந்தரி: பிறர் கண்டு தொழும் தெய்வத்தைச் சிருஷ்டி செய்யவல்ல சிற்பியுடன் நான் வாழ வேண்டும் என்பதை நினைக்கும்போது எனக்கு என்ன சொல்வது என்பது தெரியவில்லை. நான் தங்களுக்குக் கொஞ்சமேனும் அருகதை அற்றவள்.

சக்தி: நான்தான் உனக்கு நிகரில்லாதவன். சுந்தரி, புருஷன், வீடு, வாசல், சமூகம், கவலையற்ற வாழ்வு எல்லாவற்றையும் புறக்கணித்து ஒரு நாடோடிச் சிற்பியுடன் வருவதாகச் சொல்கிறாயே; உன் தியாகந்தான் சிறந்தது.

சுந்தரி: மனோரதம் பூர்த்தி அடைவதற்குச் செய்யும் காரியங்களுக்குத் தியாகம் என்ற வார்த்தை தகாது.

சக்தி: எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள். மௌனமாக இருந்த என் வாழ்விலே, சங்கீதம்போல வந்தாய்!

சுந்தரி: சரி, போதும். எனக்கு நேரமாகிறது.

சக்தி: ஆற்றிலே குளித்து விட்டு வா. அதற்குள் என் பணியும் பூர்த்தியாகிவிடும். ஞானதேவனை இன்னும் காணவில்லை. நீ சீக்கிரம் வந்துவிடு.

(சுந்தரி போகிறாள். அவள் போய்க்கொண்டிருக்கையிலேயே, எதிர்ப் பக்கமாக ஞானதேவன் வருகிறான்.)

சக்தி: ஞானதேவா, வா. உட்கார். உன்னைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

ஞான: இன்று கண் திறப்பு விழா உண்டு அல்லவா?

சக்தி: இன்று புனிதமான நாள். இப்பொழுது இந்த விக்கிரகம் கண் திறந்து உலகத்தை வாழ்விக்கப் பார்க்கும்.

ஞான: உலகம் உள்ளளவும் தெய்வ ஒளி வீசி உய்விக்கும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

சக்தி: ஞானதேவா, இன்று ஒரு முக்கியமான முடிவுக்கு வந்திருக்கிறேன். சுந்தரவல்லியுடன் சாவகம் போகிறேன்.

ஞான: (ஆச்சரியத்தையும் வருத்தத்தையும் காட்டும் முகத்துடன்) நான் சொல்வது உனக்கு ஹிதமில்லாமல் இருக்கலாம். ஆனால் உன் யோக்கியதைக்கும் சால்புக்கும் ஒத்து வராத செய்கை அது.

சக்தி: அதில் என்ன தப்பு?

ஞான: அந்நியன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்ட ஸ்திரீயைக் கூட்டிக்கொண்டு ஓடும் காரியம், திருடுவதைவிட எள்ளளவும் குறைந்ததல்ல.



சக்தி: ஞானதேவா, இது பழைய அசட்டு வேதாந்தம். ஒரு ஸ்திரீயும் ஓர் ஆணமகனும் ஒருவரை ஒருவர் விரும்பும்போது யார்தான் அதைத் தடுத்துக் குறுக்கே நிற்கமுடியும்? அதைத் தடுப்பதுதான் தெய்வ சம்மதமாகாது.

ஞான: மனம் போனபடி வாழும் வாழ்வு உண்மை வாழ்வு அல்ல. கேவலம் மிருகங்கள் கூடத்தான் இச்சா வாழ்க்கை வாழ்கின்றன.

மனத்தை ஒடுக்கிச் சத்தியத்திற்கும் தருமத்திற்கும் உட்படுத்தப்பட்ட வாழ்க்கைதான் உண்மை வாழ்க்கை.

சத்தி: ஞானதேவா, இரண்டு உள்ளங்கள் ஒன்றை ஒன்று விரும்பும்படியான உயர்தரக் காதல் சத்தியமானது அல்லவா? அதுதான் தர்மம். காதலுக்கு மிஞ்சிய சத்தியமும் தர்மமும் இல்லை.

ஞான: காதல் மிகச் சிறந்ததொரு தூண்டுதல் சக்தி. அதில் சந்தேகம் இல்லை. காதல் ஒரு வெள்ளம் போன்றது. அதற்குச் சத்தியமும் தர்மமும் இரு பக்கத்திலும் உள்ள அணைகள். அணைக்கு உட்பட்டுப் போகும் வரையில் தான் அதனால் நன்மை உண்டு. அணையை மீறி உடைத்துக்கொண்டு போகும் பொழுது விநாசந்தான்.

சத்தி: ஞானதேவா, உபயோகப்படாத தத்துவோபதேசம் செய்து என் மூளையைத் திணற வைக்காதே. நான் தீர்மானித்து விட்டேன். இந்தச் சாரமற்ற உபதேசங்களுக்காக எங்கள் இருவர் வாழ்க்கையையும் வியர்த்தமாக்கப் போவதில்லை.

ஞான: சத்தியானந்தா, அறம் பொருள் இன்பம் வீடு எல்லாவற்றிற்கும், தர்மந்தான் தாயகமாக முதலில் நிற்கிறது. நீ தேடும் இன்ப வாழ்வு, தர்மத்தில் முளைக்காவிட்டால் துன்பமாகவே மாறும். தர்மம் இல்லாவிட்டால் வாழ்வே இல்லை.

சத்தி: சுந்தரி இல்லாவிட்டால்தான் எனக்கு வாழ்வு இல்லை. இதோ, என் கையிலே உருப் பெற்றுவரும் தெய்வங்கூட அவளிடம் காதல்கொண்ட என் மனத்தில் பிறந்ததுதான். அந்தக் காதல் தெய்விகம் அல்லவா?

ஞான: சத்தியானந்தா, அந்த விக்கிரகத்தைப் பார். அது எதற்கு அறிகுறியாக நிற்கிறது, தெரியுமா?

சத்தி: ஏதோ புதிர் போடுகிறாயே!

ஞான: தர்மத்துக்கு எப்பொழுது ஹானி உண்டாகுமோ, அப்பொழுது நான் அவதரிக்கிறேன் என்று சொன்ன கடவுளின் அம்சமாக நிற்பது அல்லவா?

சத்தி: ஆம்.

ஞான: சஞ்சலமுற்று வழி தெரியாமல் தத்தளிக்கும் லக்ஷக்கணக்கான மக்களின் மனத்தைத் தூய்மைப்படுத்திச் சாந்தி அளிக்கப் போகும் தெய்விக மூர்த்தி அல்லவா இது?

சத்தி: மனிதனுடைய அந்தக்கரணத்தில் உறங்கிக்கொண்டிருக்கும் தெய்வத் தன்மையைத் தட்டி எழுப்பும் சக்தி வாய்ந்த உன்னத மூர்த்தியை உருவாக்க வேண்டும் என்பதே என் அபிலாஷை.

ஞான: உண்மை. அருள் சுரந்து மனித வாழ்வை உய்விக்கப்போகும் உன்னத மூர்த்தியைக் கற்பனை செய்து சிருஷ்டித்த சிற்பியான உன் வாழ்விலே, அம்மூர்த்தியினிடம் இலங்கும் தூய்மை வேண்டியதில்லையா? உன்னிடம் புனிதத்தன்மை வேண்டியதில்லையா?

சத்தி: தூய்மை என் கற்பனையில்தான் தேவை. வாழ்விலே இல்லை. அப்படி வாழ்வதும் சாத்தியம் அல்ல.

ஞான: தூய்மை பெற முயற்சியாவது செய்யவேண்டாமா? சத்தியானந்தா, நீ மிகச் சிறந்த சிற்பி. நல்ல அறிவாளி. யோசனை செய். அவசரப்பட்டு முடிவுக்கு வந்து விடாதே.

சத்தி: ஞானதேவா, என்னை மன்னித்து விடு. இவ்விஷயத்தில் யோசிப்பதற்கு ஒன்றும் இல்லை. கொஞ்சம் இரு. இந்தக் கண்களைத் திறந்துவிடுகிறேன். (உளிகொண்டு கண்களைச் செதுக்குகிறான். கண்கள் திறந்து நிற்கும் அந்த விக்கிரகம் மிகுந்த பொலிவுடன் நிற்கிறது. ஞானதேவனும் சத்தியானந்தனும் பார்க்கிறார்கள்.)

ஞான: ஆகா! என்ன தேஜஸ்! என்ன அமைதி! என்ன கருணை! அப்பனே சத்தியானந்தா, உலகம் உனக்கு என்றென்றைக்கும் கடன்பட்டுவிட்டது. நாஸ்திகன்கூட மெய்ம்மறந்து பக்தி பரவசனாகிக் கைகூப்பித் தொழும் கடவுளைப் படைத்துவிட்டாய். ஆகா! மனிதன் நிறைவேறாத தன் ஆசைகளை நினைந்து நினைந்து ஏங்கி வரும்பொழுது கருணை சுரந்து அருள்மழை பெய்யும் ஆனந்த மூர்த்தியைப் படைத்துவிட்டாயே! நீ வாழி!

சத்தி: ஞானதேவா, என் வாழ்வு இன்றுதான் பயனுற்றது. இப்புண்ணிய மூர்த்தியை உருப் பெறச் செய்த பாக்கியம் என் முன்னோர்கள் செய்த தவப்பயன்.

ஞான: இம்மூர்த்தியை நன்றாகப் பார். உன் மனத்தில் சஞ்சலம் இருக்கிறதா? இன்னும் உன் மனம் தெளிவடையவில்லையா?

சத்தி: (மறுபடியும் பார்க்கிறான். கடவுளின் பார்வை அவன் உள்ளே ஊடுருவிப் பாய்கிறது.) ஞானதேவா, நான் உன்னை நமஸ்கரிக்கிறேன். என் கையில், வெறும் சிலையாக இருந்து இப்பொழுது உயிர்பெற்று நிற்கும் இக்கடவுளைக் கண்டதும், என் மனமே மாறுதல் அடைகிறது. என் மனத்தில் சொல்ல முடியாத ஆனந்தமும் பரவசமும் கொந்தளித்து நிற்கின்றன. மனமும் அமைதி அடைகிறது. இம்மூர்த்தியின் தரிசனம் கண்டும், மனம் மாறாதபடி அவ்வளவு மிருகமாகப் போகவில்லை.

ஞான: இந்தக் கருணாமூர்த்தியின் கடைக்கண் பார்வை விழுந்து கடைத்தேறாத ஜன்மா இருக்கப்போவதில்லை. உன் மனம் திரும்பியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

சத்தி: மூர்த்தியைப் பார்க்குந்தோறும் ஒரு சாந்தி ஏற்படுகிறது. சத்தியம், சிவம், சுந்தரம் மூன்றுக்கும் உறைவிடமான கடவுளைக் கண்டும் ஒருவன் கடைத்தேறாமல் இருக்க முடியாது. இப் புனித மூர்த்தியை உருவாக்கிய சிற்பி, பக்திமானாகவும் ஒழுக்கத்தில் உயர்ந்தோனுமாக இருந்திருப்பான் என்று ஜனங்கள் எதிர்பார்த்தார்களானால், தப்பல்ல. அதற்கு நான் அருகதையுள்ளவனாவது நியாயந்தான். விக்கிரகத்தின் கண்கள் இன்று திறக்கப்படவில்லை. என் கண்கள்தாம் திறந்தன. மாயையும் அஞ்ஞானமும் விலகின. தேவன் என்று கற்பனை செய்த மனிதன் தேவ வாழ்வு வாழவேண்டாமா? அதை மறந்துவிட்டேனே.

ஞான: தேவவாழ்வுதான் முக்தி. புலன்களை வென்றவன் விடுதலை அடைந்தவன் தானே? உன் மனம் மாறியது எனக்குப் பேரானந்தத்தைக் கொடுக்கிறது.

சத்தி: சுந்தரியின் கதி என்ன?

ஞான: உனக்குச் சொன்னதுதான் அவளுக்கும். அவள் கணவனுடன் வாழ்வாள். இம்மூர்த்தி அவளுக்குச் சகல சௌபாக்கியத்தையும் அருள்வார்.

சுந்தரி: (வந்துகொண்டே) என்னை என்ன வைதுகொண்டிருக்கிறீர்கள்?

சத்தி: (தீர்மானத்துடன்) நான் என் தீர்மானத்தை மாற்றிவிட்டேன். நானும் நீயும் சேர்ந்து வாழ்வது என்பது தெய்வ சம்மதம் அல்ல. ஆகவே என்னை மறந்துவிடு. காதல் என்று சொல்லிக்கொள்வதெல்லாம் விளையாட்டுப் பேச்சு.

(சுந்தரி பிரமித்து நிற்கிறாள்.)

ஞான: என் அம்மா! பேசாமல் நிற்கிறாய்?

சுந்தரி: நான் என்ன சொல்வதற்கு இருக்கிறது? என்னைக் கேட்டா தீர்மானம் செய்தார்? இப்பொழுது மாற்றுகிறார். கடவுள் என்னைச் சோதிக்கிறார். எனக்கு உள்ள துன்பம் போதாது என்று இந்தக் கொடுமைகள். (கண் கலங்குகிறாள்.)

ஞான: இந்த விக்கிரகத்தைப் பார். அது உனக்கு ஓர் ஆறுதலையும் அளிக்கவில்லையா? ஆசாபாசங்களை ஒழித்துத் தியாக வாழ்வு வாழ்வதே தேவ வாழ்வு. இதுதான் இந்த மூர்த்தியின் உபதேசம்.

(சுந்தரி வருத்தத்துடன் நமஸ்கரித்துவிட்டுப் போகிறாள்.)

ஞான: ஹே தேவ, மனிதன் மிருகத்தனத்திலிருந்து தேவனாவதற்கு உரிய அருள் புரியவேண்டும். (நமஸ்கரிக்கிறான்.)

சத்தி: லக்ஷ்யமும் வாழ்வும் ஒன்றாவதற்கு அருள் புரிவாயாக! (நமஸ்கரிக்கிறான்.)

காட்சியும் மாட்சியும்

சினிமா விளம்பரங்களில் அடிக்கடி "காக்ஷிகள்" என்ற சொல்லைப் பார்க்கிறோம். 'காக்ஷி' என்ற சொல் வடமொழி வார்த்தை அல்ல. காண் என்பதிலிருந்து வந்த சொல் அது. காணப்படுவது என்ற பொருளில் வருகிறது. காண் என்ற மூல வார்த்தையோடு சி என்ற எழுத்தைச் சேர்த்துக் காட்சி என்று ஆயிற்று; அதைக் காக்ஷி என்று எழுதக்கூடாது; காட்சி என்றே எழுத வேண்டும். 'மாக்ஷிமை தங்கிய" என்று எழுதுவதும் பிழை. மாண் என்ற மூல வார்த்தையும் (பகுதியும்) சி என்ற விகுதியும் சேர்ந்து மாட்சி என்று ஆகும். அதோடு மை சேர்ந்து மாட்சிமை என்றுதான் வரும்.

அபராஜிதா

எப். டபிள்யூ. பெயின்

மொழி பெயர்ப்பு: கி. சாவித்திரியம்மாள்

(சென்ற இதழ் 137-ஆம் பக்கத் தொடர்ச்சி)

12

ஊர் ஜனங்களின் நிந்தனைகளும் அடிகளும் என்னால் பொறுக்க முடியாமற்போயின. சுற்றிலும் என்ன நடக்கிறதென்றுகூட அறியச் சக்தியற்றவனாய்ச் சாலையோரத்தில் படுத்துக் கிடந்தேன். வெகுநேரம் கழித்த பிறகுதான் எனக்கு மீண்டும் என் நினைவு உண்டாயிற்று. எழுந்து நின்று எனக்குள்ளேயே பின்வருமாறு எண்ணமிட்டேன் :

'இச்சன்மம் திடீரென்று முடிவடைந்து விட்டது. செத்தவனைக் குழியில் தள்ளி மூடி விடுவதுபோல அந்தப் பாழும் நாவிதனுடைய கோரமான உடலில் நான் நன்றாய் அகப்பட்டுக் கொண்டுவிட்டேன். மீண்டும் என் உடலைப் பெறுவது கனவில்கூடச் சாத்தியமல்ல. அதில் மற்றொருவன் அல்லவோ புகுந்துகொண்டிருக்கிறான்! அவன் தன் பழைய உடலை மறுபடியும் எதற்காகச் சிந்தப்போகிறான்? நான் என்ன கூறினாலும் ஒருவரும் என்னை நம்பப் போவதில்லை. ஆகையால் நான் இப்படியேதான் காலம் தள்ள வேண்டும். வேறு விதி இல்லை. ஆனால் ஒரே ஒரு வழி இருக்கிறது. பேசாமல் இவ்வுடலைத் துறந்துவிட்டால் கஷ்டம் நீங்கிவிடும் அல்லவா? அதைத்தான் உடனே செய்ய வேண்டும். இதோ போய் ஆற்றில் குதித்துப் பிராணனை விட்டுவிடுகிறேன். கெட்ட கனவு போல ஒரு நிமிஷத்தில் எல்லாத் துன்பங்களும் தீர்ந்துவிடும். இனிச் சந்தேகமில்லாமல் ஆற்று நீர்தான் எனக்குக் கதி.'

இவ்வாறு எண்ணியதும் அங்கிருந்து ஓடுவதற்குக் கிளம்பினேன். உடனே என் மனத்தில் வேறோர் எண்ணம் எழுந்தது: 'ஆஹா! ஆறு என்றதும் ஞாபகம் வருகின்றது. அபராஜிதாதான் இருக்கிறாளே! அவளை எப்படித் திடீரென்று அடியோடு மறந்துபோனேன்? அப்பாழும் காமரூபனைக் கண்டதுமுதல், சந்திரகலையை ராகு விழுங்குவதுபோல அவனும் அவளை விழுங்கிவிட்டானோ என்னும்படி அவள் என் நினைவை விட்டு அடியோடு அகன்று விட்டாள். எனக்கு எப்பொழுதாவது அவள் உதவி வேண்டியிருந்தால், உடனே தன்னிடம் வரும்படி அவள் தானாகவே என்னிடம் கூறவில்லையா? எனக்கு இப்பொழுது அவள்தான் உதவி புரியவேண்டும். ஆனால் அவள்தான் என்ன செய்யமுடியும்? இம்மாதிரி நிலைமையில் ஒருவரும் ஓர் உதவியையும் செய்ய முடியாது என்பது நிச்சயம்! ஆயினும் அவள் ஓர் நாககன்னிகை ஆயிற்றே.'

என் மனம் மறுபடியும் தைரியம் இழந்தது. 'சீ! என் சொந்த உருவத்தோடு அல்லாமல் இந்தக் குரூபத் தோற்றத்திலா நான் அவளைப் போய்ப் பார்ப்பது? என்னை அவள் கண்ணால் எப்படிப் பார்த்துச் சகித்துக் கொண்டிருப்பாள்? நான் கூறுவதைத்தான் அவள் முதலில் நம்பவேண்டாமா?'

இவ்வாறு ஒரு வழியும் போக முடியாதவனாய் வெகுநேரம் சிந்தித்தவண்ணம் இருந்தேன். ஒரு புறம் இந்த உருவத்தில் உன்னை வந்து பார்ப்பதற்கு வெட்கமாக இருந்தது. ஆனால் நீதான் எனக்கு ஏதாவது உதவி செய்யக்கூடும் என்ற நம்பிக்கையும் ஒரு புறம் எனக்கு இருந்தது.

கடைசியாக, 'சரி; அங்கேதான் போய்ப் பார்ப்போம். இப்பெரும் அவமானத்திற்குப் பிறகும் எனக்கு வேறு என்ன அதிகமாய் நேர்ந்தவிடப்போகிறது! அவளால் எனக்கு உதவியொன்றும் செய்யமுடியாமற் போயினும் இப்படுபாவி காமரூபனுக்குத் தக்க தண்டனை விதிப்பதற்கு என்ன செய்வது என்பதையாவது கூறமாட்டாளா? ஆஹா! பழிக்குப் பழியா? ஆம், என்ன அவமானம் நேர்ந்தபோதிலும் எப்படியாவது பழிக்குப் பழி வாங்கி விடுகிறேன்' என்ற எண்ணம் தோன்றியதும் ஒரே ஓட்டமாய் இங்கு வந்து சேர்ந்தேன். வந்து உன்னிடம் எல்லாவற்றையும் கூறி விட்டேன்.

13

கேசவன் தன் கதையைக் கூறி முடித்தான். மோவாய்க்கட்டையில் கையை ஊன்றிய வண்ணம் அவனை நோக்கியபடியே அபராஜிதா மௌனமாய் உட்கார்ந்திருந்தாள்.

‘தன் துன்பங்களுக்கெல்லாம் நான்தான் காரணம் என்று அவர் அறிந்தால் என்ன சொல்லுவாரோ? ஆனால் அவருக்கு இப்படியெல்லாம் வரவேண்டும் என்பதுதான் என் விருப்பம். சீக்கிரமே அவர் பட்ட கஷ்டங்களுக்குப் பதில் அவரை இன்பக் கடலில் ஆழ்த்திவிடுவேன். அவருக்கு உடனே யாவும் மறந்துவிடும். நான் செய்தது அவருக்குப் பெரிய நன்மை அல்லவா? அதை அவர் பிறகுதான் அறிந்துகொள்வார். நான் இவ்வாறு செய்திராவிட்டால் தாம் இழந்ததன் அருமையை அவர் ஒருநாளும் உணர்ந்திருக்கமாட்டார். அவருக்கு மீண்டும் பழைய உருவம் கிட்டவேண்டுமே என்று அவரைக் காட்டிலும் நான் எவ்வளவு அதிகம் கவலைப்படுகிறேன்! அது அவருக்குச் சிறிதும் தெரியாதே! அதற்காக அவர் எனக்கு எது வேண்டுமோயினும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார். உண்மைமட்டும் அவருக்குத் தெரிந்தால் என்னை வேண்டுவதற்குப் பதில் உத்தரவே செய்யலாம் அல்லவா? நான்தான் அவர் கூறியதைச் செய்யக் காத்திருக்கிறேனே!’ இவ்வாறு அவள் தனக்குள்ளேயே எண்ணிக்கொண்டாள்.

அவள் மௌனமாக இருப்பதைக் கண்டு கேசவன் மனம் ஓய்ந்துபோயிற்று. “என்ன? நீயும் நான் கூறுவதை நம்பவில்லையா? உன்னை முதல் முதல் இக்குளக்கரையில் பார்த்தபொழுது நாம் இருவரும் பேசியது முழுமையும் வேண்டுமானால் அப்படியே நான் இப்பொழுது மீண்டும் கூறுகிறேன். ஸ்திரீகளையும் பண்டிதர்களையும் பற்றி அப்பொழுது பேசியது யார்? உன்னிடமிருந்தும் உன் முத்தங்களினின்றும் நான் அல்லவா பயந்து ஒதுங்கி நின்றவன்? அவ்விஷயமெல்லாம் என்னையும் உன்னையும் தவிர இவ்வுலகில் வேறு யாருக்குத் தெரியும்? ஸ்திரீகள்தாம் உலகில் வஞ்சனை குடிகொண்டவர்கள் என்று நினைத்தேன். என்ன என் பேதைமை! அவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்தாலும் பிறரை வஞ்சிப்பதில் இந்தக் காமரூபனுக்கு ஈடாகமாட்டார்கள். நீ இப்பொழுது எனக்கு உதவியாக இருந்தால் இனி உன் உத்தரவு இல்லாமல் ஒன்றும் செய்யமாட்டேன். உன் அடிமை நான். என் ஜன்மம் முழுவதும் இனி உன் நிழல்போல் இருப்பேன்” என்றான் கேசவன்.

“உங்கள் கதை மிகவும் விசித்திரமாக இருக்கிறது” என்று அபராஜிதா புன்னகையுடன் கூறினாள். “ஆயினும் நீங்கள் கூறுவதை நான் நம்பாமல் இருக்கமுடியாது. ஏனெனில் அரசன் என்னை இக்குளக்கரையில் சந்தித்தது ஒரு பிராணிக்கும் தெரியாது அல்லவா? மேலும் இம்மாதிரி உலகில் நடப்பதுண்டு என்று கேட்டிருக்கிறேன். மந்திரங்களின் சக்தி அளவற்றது. எனினும் காமரூபனுக்கு இத்தகைய சக்தி எவ்விதம் வாய்த்தது என்பதுதான் விளங்கவில்லை. அரசர்களின் காரியங்கள் ரகசியமாக இருக்க முடியுமா? அவன் எப்படியோ இப்புதர்களின் இடையில் மறைந்திருந்து நம் சம்பாஷணையைக் கேட்டிருக்கவேண்டும். தனக்கு நலத்தைத் தேடிக்கொள்வதில் நாவிதன் கைதேர்ந்தவன் அல்லவா? என்னை அவன் பார்த்திருப்பான். இம்மந்திரத்தின் மூலம் உங்களுக்குப் பதில் தான் ஆகிவிடலாம் என்று எண்ணியிருப்பான். ஏனெனில் என் அருமையை உங்களைக் காட்டிலும் அவன் நன்றாய் அறிந்தவன். சந்திரனின் அமிருதம் சந்திரகாந்தக் கல்லையன்றி வேறு எதற்கும் கிட்டுவது அரிது என்பதும் அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆயினும் என்ன விந்தை! பண்டிதர்களிடமிருந்து எவ்வளவோ அரிய விஷயங்களையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டவர்கள் ஆயிற்றே தாங்கள்! அப்படி இருக்க ஒரு பெண்ணிடம் உதவியை நாடி வரும்படி அவ்வளவு இழிவான நிலைமை உங்களுக்கு எப்படி ஏற்பட்டது? உங்கள் உருவம் மாறியவுடன் உங்கள் மனமும் மாறிவிட்டதா? அல்லது அந்தக் காமரூபன்தான் என்னை அகஸ்மாத்தாய்க் கண்டு காதல் கொண்டபொழுது அக்காதலுடன் தன் தேகத்தை உமக்கு அளித்துவிட்டானோ?”

“ஐயோ! அபராஜிதா! உனக்கு நான் என்ன பதில் சொல்லுவேன்?” என்றான் கேசவன். “உன்னை நிமிர்ந்து பார்க்கவும் எனக்கு வெட்கமாக இருக்கிறது. நீ என்னை நன்றாய் மட்டம் தட்டிவிட்டாய் என்று அல்ல. இந்த ஆபாசமான உடலை அடைந்ததனால் என்னை நீ வெறுக்கும்படி ஆகிவிட்டது அல்லவா? அது அன்றோ இப்பொழுது நம் இருவருக்கும் இடையில் பெரிய விக்கினமாய் நிற்கிறது? உண்மையில் இந்தக் கோர உருவத்தை எந்த ஸ்திரீதான் கண்ணெடுத்துப் பார்ப்பாள்? அந்தோ! எனக்கு இப்பொழுது ஞாபகம் வருகின்றது. காதலன் ஒருவன் தனக்குப் போட்டியாக இருந்த விரோதியின் கைகளில் சிக்கிக்கொண்டான். அப்பகைவனால் அடித்துத் துன்புறுத்தி விரூபமாக்கப்பட்டவனைத் தன் காதலியிடம் அவன் திரும்பிவந்தபொழுது முன்பு அவனிடம் ஒரே மோகமாயிருந்த அவள் அவன் ரூபத்தைக் கண்டு வெறுப்புற்று அவனைத் திரஸ்கரித்துவிட்டாளாம். நீ இப்பொழுது என்னிடம் வெறுப்புற்றால் அதற்காக நான் எப்படி உன்னைக் குற்றம் கூற முடியும்? என்னைப்பற்றி எனக்கே மிகவும் வெறுப்பாகத் தோன்றுகிறது. ஐயோ! உன் மதிப்புக்குப் பாத்திரனாக இருந்த

காலத்தில் மிகவும் மூடத்தனமாக இருந்து விட்டேன். பண்டிதர்களை விட்டு வேறு இடத்தில் பயிலத் தொடங்கியதும் எனக்குப் புத்தி வந்து விட்டது. ஆனால் என்ன பயன்? உலகில் ஒரு பெண்ணும் இனி என்னை நிமிர்ந்து பார்க்கவும் விரும்பமாட்டாளே!''

இவ்வார்த்தைகளைக் கேட்க அபராஜிதாவுக்குச் சிரிப்பு வந்தது. "அரசே! ஜாக்கிரதை! ஸ்திரீகளைப்பற்றி அதற்குள் அதிகம் தெரிந்து விட்டதாக எண்ணிவிடவேண்டாம். அவர்கள் இருந்தாற்போல் ஏமாற்றிவிடுவார்கள். என் விஷயத்திலும் அப்படியே ஆனாலும் ஆகிவிடும். இருந்தாலும் இச்சமயம் நீங்கள் உங்கள் பழைய உருவத்துடன் இருந்தால் நன்றாக இருக்கும் என்றுதான் எனக்கும் தோன்றுகிறது. அதையும் இப்பொழுதுள்ள தங்கள் உருவத்தையும் சேர்த்துப் பார்த்தால் அரண்மனைக்கும் குடிசைக்கும் உள்ள பேதம் அல்லவா காணப்படுகிறது? நல்லது! நான் தங்களை மீண்டும் தங்கள் சொந்த உருவத்தை அடையும்படி செய்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். என்ன சொல்லுகிறீர்கள்? நாம் ஓர் உடன்படிக்கை செய்துகொள்வோமா? நான் தங்களை மீண்டும் பழையபடி ஆக்கிவிட்டால் பரமசிவன் பார்வதி தேவிக்கு அளித்ததுபோல் தங்கள் சரீரத்தில் பாதியைத் தாங்கள் எனக்கு அளிப்பீரா?'' என்றாள்.

"பாதியை அளிப்பதா? என் ஆவி உடல் இரண்டும் இனி உன்னுடையனவே. என்னை மட்டும் முன்போலச் செய்துவிடு" என்றான் கேசவன் வேகமாய்.

"இப்பொழுதுதான் உமக்குச் சரியான புத்தி வந்திருக்கிறது" என்றாள் அபராஜிதா. "கடைசியில் இந்தக் கோரமான உடலில் சிறிதுநேரம் வாசம் செய்தது உமது நலத்திற்கேயாகும் என்று நினைக்கிறேன். ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஒப்பற்ற நக்ஷத்திரத்தை உமது திருஷ்டியினின்றும் இதுகாறும் மறைத்திருந்த மோகத் திரளை விலக்கித் தங்களுக்குப் பூர்ண அறிவையும் அளித்துவிட்டதென்று தோன்றுகிறது. என் காதலரே, இவ்வுலகிலுள்ள பண்டிதர்கள் ஒருவராலும் கனவிலும் செய்யமுடியாத காரியத்தை ஒரு ஸ்திரீ தன் புத்தி சாதுர்யத்தினால் எப்படிச் சாதித்துவிடுவாள் என்பதை உமக்குக் காட்டுகிறேன். தாங்கள் இவ்விஷயத்தில் என் உதவியை நாடி வந்ததே நல்லதாயிற்று."

இவ்வாறு பேசிக்கொண்டே வந்தவள் திடுக்கிட்டவளாய்ச் சரேலென்று நிறுத்தி உற்றுக் கேட்டாள். பிறகு புதர்களின் அருகே ஓடிச் சென்று இடுக்குவழியாய்ப் பார்த்துவிட்டுத் திரும்பிவந்தாள்.

"ஹா! நான் நினைத்தது சரியாயிற்று! நல்ல காலம்! நாம் தப்பினோம். நான் எதிர்பார்த்தபடியே அதோ காமரூபன் உமது உருவத்தைக் கொண்டு என்னை மயக்கிவிடும் உத்தேசத்துடன் வருகிறான்" என்று கூறிவிட்டு, அவள் அரசனை நெருங்கி ஒரு கொஞ்சும் புன்முறுவலுடன், "வரட்டும்! ஆயினும் அவனுக்கு அம்மந்திரத்தின் சக்தி எவ்வளவு என்பது தெரியாது. நாம் இனித் தாமதம் செய்யக்கூடாது. தெய்வாதீனமாய் அந்த முட்டாள் தான் வருவதைப்பற்றி, வேண்டுமென்றே நமக்கு எச்சரிக்கை செய்வதுபோல், வேலையாட்களுடன் வருகிறான். தனியாய் வந்திருந்தால் சப்தம் செய்யாமல் நாம் இருக்கும் இடம் வந்து நாம் பேசுவதைக் கேட்டுக் காரியத்தைக் கெடுத்திருப்பான். இன்னும் அதிகச்சக்தி வாய்ந்துள்ள ஒரு மந்திரத்தை அவன்மீது பிரயோகித்து, இம்மாதிரி மந்திரங்களைப் பிரயோகிப்பதால் ஏற்படும் அபாயத்தை அவனுக்குக் காட்டுகிறேன். சீக்கிரம் போய் அந்தப் புதருக்குப் பின் மறைந்து கொள்ளுங்கள். சிறிதும் சப்தம் செய்யாமல் உஷாராய் இருக்க வேண்டும். தாங்கள் இங்கு இருப்பது அவனுக்கு எவ்விதத்திலும் தெரியக்கூடாது. ஆனால் தாங்கள் மட்டும் நடப்பது யாவற்றையும் கவனித்துக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுது அதைச் சட்டென்று உபயோகப் படுத்திக்கொள்ளவேண்டும். ஒருதரம் நழுவவிட்டால் பிறகு அது மீண்டும் கிடைப்பது அரிதாகிவிடும். அம்மந்திரத்தை மறக்காமல் நினைவு வைத்திருக்கிறீர்கள் அல்லவா?" என்றாள்.

"ஆஹா! நினைவு இருக்கிறது. எப்படி மறப்பேன்?" என்றான் கேசவன்.

"அப்படியானால் அதை உச்சரிப்பதற்குத் தயாராய்ச் சமயம் வரும்போது ஒரு க்ஷணமும் தாமதிக்காமல் உடனே சொல்லவேண்டும் தெரியுமா?" என்றாள் அபராஜிதா.

அவள் மறுபடியும் அவன் சமீபம் நெருங்கித் தாழ்ந்த குரலில், "போங்கள் சீக்கிரம். நான் கூறியபடி சரியாய்ச் செய்யுங்கள். உங்கள் வாழ்க்கைமட்டும் அல்ல; என் வாழ்வின் பயனுங் கூட நீங்கள் இப்பொழுது செய்வதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. தங்கள் பழைய சௌந்தரியமுள்ள உருவத்தைத் தாங்கள் மீண்டும் பெற்றபிறகு ஒருகால் என் அன்பு எவ்வாறு சற்றும் குறையாமல் இருக்கிறது என்பதை உங்களுக்குக் காட்டினாலும் காட்டுவேன். பெண்களைப்பற்றி ஒரு விஷயம் கூறுகிறேன். ஒருவனைக் காதலிக்கும் பெண் வேறொருவனை முத்தமிடச் சம்மதியாள். நீங்களோ உங்களுக்கே புதியவராக இருக்கிறீர்கள்!" என்றாள்.

அவள் கூறியபடியே கேசவன் புதருக்குப் பின் சென்று மறைந்துகொண்டான். அபராஜிதாவும் உதட்டில் விரலை வைத்து, "ஜாக்கிரதை" என்று அவனை எச்சரித்தாள். பிறகு திடீரென்று அவள் குளத்தில் இறங்கி நீரில் மூழ்கி மறைந்துபோனாள்.

14

அவள் ஏன் அப்படி மறைந்து போனாள் என்று வியப்புற்றவனாய்க் கேசவன் புதருக்குப் பின் உட்கார்ந்திருந்தான். திடீரென்று மரங்களுக்கிடையே தனது உருவத்தில் காமரூபன் அங்கு வருவதைக் கண்டான். அவ்விடத்தை அடைந்ததும் அரசனது உருவத்தில் விளங்கிய காமரூபன் நின்று நாற்புறமும் நோக்கினான். பிறகு ஏமாற்றம் தொனிக்கும் குரலில், "என்ன? இங்கு ஒருவரையும் காணவில்லையே! நான் வந்தது வீணாயிற்றே!" என்று தானே கூறிக்கொண்டான்.

அவள் கூறி முடிப்பதற்குள் தன்னளவு பெரிதான வெள்ளி மீன் ஒன்றை மிகவும் சிரமப்பட்டுத் தூக்கிக்கொண்டு அபராஜிதா நீரினின்றும் மேலெழுந்தாள். தான் வழக்கமாய் உட்காரும் பாறைமீது அம்மீனைப் படுக்க வைத்துத் தானும் அதன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். அவள் உடம்பினின்றும் கூந்தலினின்றும் ஜலம் அப்படியே சொட்டிக்கொண்

டிருந்தது. கைகளைப் பிசைந்தவண்ணம் அவள் கண்ணீர் விட்டுக் கதறி அழத் தொடங்கினாள். அருவிபோலப் பெருகிய அவள் கண்ணீர் அவள் உடம்பினின்றும் வழிந்தோடிய ஜலத்துடன் கலந்து குளத்து நீரில் சென்று விழுந்தது. ஆறாத் துயரத்தில் முழுகியவளாய்த் தன்னைச் சுற்றிலும் உள்ளவைகளை மட்டுமல்ல, நாம் யார், எங்கு இருக்கிறோம் என்பதைக்கூட அவள் மறந்துபோனவள் போல் தோற்றினாள். அங்கிருந்த மரங்களில் ஒன்றைப்போல் காமரூபனை அவள் சிறிதும் கவனிக்கவே இல்லை.

காமரூபனும், ஒன்றும் விளங்காமல் அவளை வியப்புடன் நோக்கிக்கொண்டு நின்றான். சிறிது பொறுத்து அவன் தனக்குள்ளேயே, "அவள் தான்மட்டும் தனியே இருப்பதாக நினைத்துக்கொண்டு நான் இருப்பதைக் கொஞ்சமும் அறிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். ஆயினும் என்ன சேர்ந்துவிட்டது? ஒரு மீனின் நிமித்தம் இவ்வளவு சோகம் ஏற்படக்கூடுமா? அதுதான் செத்துப் போய்விட்டதுபோலத் தோன்றுகிறதே! அதை ஜலத்தினின்றும் தூக்கிக்கொண்டு வருவானேன்?" என்று கூறிக்கொண்டான். இவ்வளவு பெரிய மீனை வைத்துக்கொண்டு என்ன செய்கிறது என்று நினைக்க அவனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

'ஆஹா! மீன் எப்படியோ போகட்டும். கண்ணீர் விடும்பொழுது இன்னும்பதின்மடங்கு அழகுடன் அல்லவா அவள் விளங்குகிறாள்! இப்பொழுது என் அதிருஷ்டம் எப்படி, இந்த அழகிய உருவத்தைக் கண்டு அவள் மையல் கொள்ளுவாளா என்பதெல்லாம் இதோ வெகு சீக்கிரத்தில் தெரிந்துவிடும். பிறருடைய இகழ்ச்சி, கௌரவம் இவ்விரண்டிற்கும் கேவலம் சரீர அழகுதான் காரணமாக இருக்கிறது என்பதை நான்தான் வெகு சீக்கிரம் அறிந்துகொண்டுவிட்டேனே. அவள் கற்றுக்கொடுத்த இம் மந்திரம் யாவற்றிலும் மிகவும் சக்திவாய்ந்தது என்று நன்றாய்த் தெரிகின்றது. ஏனெனில் இத்திவ்விய ரூபம் எனக்கு வாய்த்த உடனேயே ஒவ்வொரு பெண்ணும் சாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ண பகவானைக் கண்டு பரவசமுற்ற ராதையைப் போல் என்னைக் கண்டு மோகித்துவிட்டாள். ஒருவேளை அபராஜிதாவே இந்த உருவத்தின் மீதுள்ள மையலால்தான் எனக்கு இது கிட்டும்படிச் செய்திருக்கிறாளோ!' என்று இவ்வாறு அவன் யோசித்துக்கொண்டு நிற்கும்பொழுது அபராஜிதா கடைக்கண்ணால் மெல்ல அவனை நோக்கினாள். அவள் கண்கள் கண்ணீரைச் சொரியும்பொழுது அவள் உள்ளம் பின்வருமாறு எண்ணமிட்டது:

'ஆஹா, இத்திவ்விய சரீரம் ஒரு தகுதியற்றவனுக்கு அல்லவா வாய்த்துவிட்டது? அது வெட்ட வெளிச்சமாய்த் தெரிகின்றதே! அதன் தோற்றமே வேறாக இருக்கிறது. பெருமைக்குப் பதில் வீண் ஜம்பமும், கௌரவத்துக்குப் பதில் இறுமாப்பும் குடிகொண்டு தன் இயல்பை இழந்து பரிசுத்தமான அன்புக்குப் பதில் காமவெறி கொண்ட பார்வையுடன் என்னை நோக்கிக்கொண்டு நிற்பதிலிருந்தே அது தெளிவாய்த் தெரிகின்றது. தனக்கு ஒவ்வாத ஆடைகளை அணிந்துகொண்டு முற்றும் ஒரு திருடனைப்போல அல்லவோ அவன் காணப்படுகிறான்? ஒரு க்ஷத்திரியனுடைய ஒளியே முகத்தில் காணவில்லையே. அதே உருவத்தோடு இருந்தும் காக்கைக்கு ராஜஹம்ஸத்தின் உடல் வாய்த்ததுபோல எப்படியோ எல்லாம் வேறு விதமாகத் தோன்றுகின்றன. ஆனால் இங்கே அவன் நல்ல முகூர்த்தத்தில் வரவில்லை என்பதை அவன் சீக்கிரம் அறிந்துகொள்வான். ஜோசியர்கள் அவனுக்குத் தவறான வேளையைக் குறிப்பிட்டுவிட்டார்கள். இப்பொழுது நான் சாமர்த்தியமாய் நடக்கவேண்டும். ஏனெனில் அவனை லகுவில் ஏமாற்றி இச்சரீரத்தை ஒரு க்ஷணமும் விட்டுப் பிரிவதற்குச் சம்மதிக்கச் செய்வது முடியாது.'

காமரூபன் சிறிது நேரம் பார்த்தான். தன்னை அவள் கொஞ்சமும் கவனிக்கவில்லை என்று கண்டவுடன், "அபராஜிதா! ஓ அபராஜிதா!" என்று கூப்பிட்டான்.

அதற்கு அவள் திரும்பிப் பாராமலே, "யார் அது என்னைக் கூப்பிடுகிறது? போ! போ! போ! என்னால் இப்பொழுது பேசமுடியாது" என்றாள்.

"என்ன? அரசனுடன் பேசுவதற்குக்கூட உன்னால் முடியாதா? அது போகட்டும்! அளவற்ற சோகத்தில் ஆழ்ந்தவளாய்க் காணப்படுகிறாயே. என்ன சமாசாரம்?" என்று வினவினான்.

அவள் அப்பொழுதும் திரும்பிப் பாராமல், "அரசனாக இருந்தாலும், யாராக இருந்தாலும், எனக்கு என்ன? ஐயோ! என்ன செய்வேன்! என் அருமை மீன் போய்விட்டதே! போய்விட்டதே!" என்று புலம்பினாள்.

"உன் மீனுக்கு என்ன வந்துவிட்டது?" என்று காமரூபன் கேட்டான்.

அம்மீனின்மேல் அருவிபோலக் கண்ணீரைப் பொழிந்துகொண்டு, "ஐயோ! அது செத்துப் போய்விட்டதே" என்றாள்.

அதைக் கேட்க, காமரூபனுக்கு ஆச்சரியமும் கோபமும் உண்டாயின. "என்ன வேடிக்கை! ஒரு செத்த மீனுக்காகவா இவ்வளவு கரைகடந்த சோகமும் கண்ணீரும்?" என்றான்.

அம்மொழிகளைக் கேட்டதும் அபராஜிதா கிரீச்சென்று கத்தினாள். "செத்த மீனா? இல்லை, இல்லை; எப்படிச் செத்துப்போகும்? ஐயோ! என் அழகிய வெள்ளி மீன்! பரமசிவனின் ஜடையிலுள்ள இளம்பிறைபோல் ஜலத்தில் துள்ளித் துள்ளிக் குதித்து என்னை மகிழ்விப்பாயே! நீ இறக்க நான் சம்மதிப்பேனா? ஒரு காலும் இல்லை. ஜலத்தில் விளையாடுவதையும், நீலோற்பல மலர்களின் தண்டுகளை நீ கடித்தவுடன், கரிய நீரில் பிரதிபலிக்கும் தம் நிழல்களையே முத்தமிடும் விருப்பத்துடன் குனிவதுபோல் அவைகள் தலை சாய்வதையும் நான் இனிப் பார்க்கப் போவதே இல்லையா? ஐயோ! என் கண்மணியே! நீ போனபிறகு நான் உயிர் வாழ்ந்து என்ன பயன்? உன் தோழியைக் கைவிட்டு இக்குளத்தினின்றும் மரணம் என்னும் பெருங்கடலை நாடிச் சென்றுவிட்டாயே! அங்கே சென்றவர் எவரேனும் திரும்பி வருவது உண்டோ?"

இவ்வாறு அவள் புலம்ப, அம்மீன் நீந்தி விளையாடுவதற்கோ என அவள் வடித்த கண்ணீர் ஓர் ஆறுபோலப் பெருகிற்று. காமரூபன் அவளைத் திகைப்புடன் நோக்கியவண்ணம் நின்றான்.

அவனுக்கு மெதுவாய்க் கோபமும் ஆத்திரமும் உண்டாயின. அத்துடன் அவளையும் மீறிச் சிரிக்கவேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று.

சிரமப்பட்டு அதை அடக்கிக்கொண்டு, "அபராஜிதா! இது உனக்கு நன்றாக இருக்கிறதா? இம்மாதிரி எங்கும் கேட்டதில்லை. உன்னைப் போன்றவள் கேவலம் ஒரு மீனுக்காக இப்படி ஆறாத் துயரக்கடலில் ஆழ்வதென்றால்? என்ன விந்தை! ஒரு மீன் செத்துப்போனால் அதைப் போல இன்னும் எவ்வளவோ மீன்கள் இல்லையா? இம்மூவுலகிலும் இந்த ஒரு மீன் தானா என்ன? தவறிப்போய் அம்மீனை மீன் கொடியையுடைய மன்மதன் என்று எண்ணிக் கொண்டாயா? பரமசிவனின் நெற்றிக்கண்ணால் அவன் எரிந்து சாம்பலானபொழுது அவன் மனைவி ரதிகூட இப்படிக் கண்ணீர் வடித்திருக்கமாட்டாள் என்று தோன்றுகிறதே!" என்றான்.

அம்மொழிகளைக் கேட்டு அபராஜிதா தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

'ஆஹா! தெரியாமலே அவன் உண்மையைக் கூறிவிட்டான்' என்று அவள் தனக்குள் எண்ணியவளாய், அவன் கேள்விக்குப் பதில் பின்னும் அதிகமாய்க் கண்ணீர் வடிக்கலானாள். அக் கண்ணீர் வெள்ளத்தில் அவளே அமிழ்ந்து மறைந்து போய்விடுவாளோ என்ற ஐயமுண்டாகும்படி அது பெருகிக்கொண்டிருந்தது. கடைசியில் அவள் சோகமும் குளமாய்த் தேங்கிய அவள் கண்ணீருந்தான் மிஞ்சுமோ என்று தோன்றிற்று. கைகளையும் உடம்பையும் இப்படியும் அப்படியும் ஆட்டிக்கொண்டு அழுகையும் சிரிப்பும் கலந்த குரலுடன் அவள் அழுவதைப் பார்க்க, காமரூபனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவள் அங்கங்களின் எழிலையும், மார்பின்மீதும் தோள்மீதும் அவிழ்ந்து புரளும் கரிய கூந்தலின் அழகையும் பிரமை பிடித்தவன்போல் நோக்கிக்கொண்டு நின்றான்.

சிறிது பொறுத்து அவன், "அபராஜிதா! போதும்; அழுகையை நிறுத்து. உனக்கு வேண்டியதை நான் செய்கிறேன். இக்குளத்தில் பல வர்ணமுள்ள மீன்களைக் கொண்டுவந்து நிரப்பிவிடுகிறேன். நீ மட்டும் அழுவதை நிறுத்திவிடு. என் சமாசாரத்தைக் கூறுகிறேன் கேள். இந்தச் செத்த மீன் கிடக்கட்டும். அதைக் காட்டிலும் எவ்வளவோ முக்கியமான விஷயங்களைப் பற்றியல்லவா நான் இப்பொழுது உன்னிடம் பேச வந்தேன்? என்னுடைய பழைய தரித்திரம் பிடித்த உடல் போய் இவ்வரிய உடல் எனக்கு வாய்த்திருக்கிறது. அதை உனக்கு வெகுமதியாக அளிக்க வந்திருக்கிறேன். என்னைக் கணவனாக அடைந்தவுடன் தன் பிறவிப்பயனைப் பெற்றதாகக் கருதாத பெண் ஒருத்தியும் இந்நகரில் இருக்கமாட்டாள். இது நிச்சயம்" என்றான்.

(தொடரும்)

மூத்த பிள்ளையார்

பிள்ளையார் பழந்தமிழ் நாட்டில் வழக்கில் இல்லாவிட்டாலும், பிள்ளையார் என்ற சொல் மாத்திரம் இருந்தது. அந்தச் சொல்லால் முருகக் கடவுளை அழைத்து வந்தார்கள். குமாரன் என்று வடமொழியில் சொல்வதுபோலச் சேய் என்றும், பிள்ளை என்றும் வழங்கினார்கள். நாளடைவில் விநாயகர் வரவே இலக்கியத்தில் மூத்த பிள்ளையார் என்று கணபதியை வழங்கலாயினர். பதினோராம் திருமுறையில் "மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை" என்ற பிரபந்தம் ஒன்று உண்டு. மூத்தநாயனாரென்பது விநாயகரைக் குறிக்கும். முருகக் கடவுள் தலைமை பெற்ற கடவுளாக இருந்தமையால் விநாயகரை அவருக்குத் தமையனாரென்று குறிப்பிட்டார்கள். இப்படியே கண்ணபிரானுக்குத் தமையனாகிய பலராமனை 'நம்பி மூத்த பிரான்' என்று பழந்தமிழர் வழங்கினர்.

தீபாவளி

-ஜோதி-

கண்ணனை நாம் வாழ்த்துவோம்—மணி
வண்ணனை நாம் வாழ்த்துவோம்
கண்மணியைப் போன்ற சத்ய
பாமையுடன் காட்சிதரும்
கண்ணனை நாம் வாழ்த்துவோம் !

நரகனை அழித்தனன்—அந்த
நாயகியின் உதவியால்
சுரர்களுக்கே துன்பஞ் செய்த
துஷ்டனை அழித்து நின்ற
கண்ணனை நாம் வாழ்த்துவோம் !

தீப மேற்றி ஏத்துவோம்—இந்தத்
தீபாவளி நாளிலே
பாப மோட்டித் தர்ம மென்னும்
பயிர் விளைய வேண்டுமென்று
கண்ணனை நாம் வாழ்த்துவோம் !

புதிய ஆடை உடுத்துவோம்—மத்தாப்
பூவும் வெடியும் கொளுத்துவோம்
துதிகள் செய்து மலர்கள் தூவித்
துயர மெல்லாம் போகவென்று
கண்ணனை நாம் வாழ்த்துவோம் !



மும்மணிகள்

"தங்குட்டி"

முன் ஒரு காலத்தில் சுந்தரபுரியைச் சுகதர்மன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்குப் பல காலமாகப் புத்திர பாக்கியமே ஏற்படவில்லை. சந்தான பாக்கியம் பெறுவதற்காக அந்த அரசன் பல அரிய தர்மங்கள் செய்தான். புண்ணிய நதிகளில் நீராடி க்ஷேத்திரங்களுக்கெல்லாம் சென்று வந்தான்.

சுகதர்மன் செய்த புண்ணியத்தினுல் அவனுக்கு ஓர் அழகிய புத்திரன் பிறந்தான். குழந்தைக்கு ஷண்முகசுந்தரன் என்று பெயர் இட்டான். ஷண்முக சுந்தரன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துவந்தான்.

பதினுறு வயசு நிரம்பாமுன் ஷண்முக சுந்தரன் ராஜகுமாரர்களுக்கு வேண்டிய வாள்பயிற்சி, வேற்பயிற்சி முதலிய கலைகளில் தேர்ச்சி அடைந்தான். சாஸ்திரங்களை எல்லாம் நன்கு அறிந்து நல்ல புத்திமானுகவும் விளங்கினுன்.

ஷண்முகசுந்தரனுக்கு வேட்டையாடுவதில் பிரியம் அதிகம். வித்தையெல்லாம் கற்று நல்ல வீரனுக ஆனவுடன், வேட்டையாடத் தன் பரிவாரங்களுடன் காட்டிற்குப் போய் வரலானுன்.

ஒரு நாள், வழக்கம்போல் ஷண்முக சுந்தரன் பரிவாரங்களுடன் வேட்டையாடப் போனுன். மற்ற வீரர்களெல்லாரும் சிங்கம் புலி முதலியவைகளை வேட்டையாடிக் கொண்டிருந்தார்கள். ராஜகுமாரனுக்கு மான் வேட்டையில் பிரியம் அதிகம். ஆகையால் அவன் தனியாகக் காட்டின் ஒரு பக்கம் சென்றுன்.

அப்பொழுது ராஜகுமாரன் மிகவும் அழகு வாய்ந்த ஒரு மானைக் கண்டான். ஷண்முக சுந்தரனுக்குச் சந்தோஷம் பொங்கி வழிந்தது. அவன் குறி பார்த்து ஓர் அம்பை மான் மேல் விட்டான். அம்புச் சபதம் கேட்டவுடன் அந்த மான் வாயுவேகம் மனோவேகமாய் ஓடிற்று. ராஜகுமாரனும் மானைத் துரத்திக் கொண்டே பின்னுல் ஓடினுன். ஆனுல், மான் ராஜகுமாரன் கண்ணில் படாமல் ஓடிவிட்டது. பாவம்! அவன் களைத்துப் போய் ஒரு மரத்தடியில் உட்கார்ந்துவிட்டான்.

மானை விட்டுவிட்டோமே என்று அவன் மிகவும் வருத்தப்பட்டான். வெகு தூரம் வந்ததால், தன் பரிவாரங்கள் இருக்கும் இடமே அவனுக்குப் புலப்படவில்லை. தேடித் தேடிப் பார்த்தான். பயன் இல்லை. சூரியன்கூட மேற்கு மலைகளிடையே மறைந்துவிட்டான்.

களைப்புடனும், வருத்தத்துடனும் ஷண்முகசுந்தரன் காட்டில் சுற்றி வரும்போது, ஓர் இடத்தில் விளக்கு வெளிச்சம் தென்பட்டது. உடனே, அவனுக்குத் தைரியமும் உத்ஸாகமும் பிறந்தன. அந்த இடத்தை நோக்கிப் போனுன். அங்கே ஒரு சிறிய ஆசிரமம்

இருந்தது. அதில ஒரு முனிவர் தம் சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். சிஷ்யர்கள் மிகுந்த அமைதியுடன் குரு சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஷண்முகசுந்தரம் அந்த ஆசிரமத்தின் வாசலில் நின்று கொண்டு, “ஸ்வாமி!'' என்று கூப்பிட்டான்.

உடனே அந்த முனிவர் சிஷ்யர்களுக்கு ஏதோ ஜாடை காட்டினார். சிஷ்யர்கள் ராஜகுமாரனை உபசாரத்துடன் உள்ளே அழைத்துப் போனார்கள். முனிவர் ராஜகுமாரனைப் பார்த்து, “நீ யார்? இங்கு இந்த இருட்டில் வரக் காரணம் என்ன?'' என்று கேட்டார்.

ராஜகுமாரன் நடந்ததை எல்லாம் முனிவரிடம் சொன்னான். பிறகு முனிவர் அவனுக்குக் காய்கனிகளைக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். சாப்பிட்டவுடன் சிஷ்யர்கள் ராஜகுமாரனுக்கு ஒரு படுக்கை அமைத்துக் கொடுத்தார்கள். அவன் நல்ல களைப்படைந்திருந்ததனால், படுக்கையில் படுத்து நன்றாகத் தூங்கிவிட்டான்.

அதிகாலையில் எழுந்திருந்து அவன், முனிவர் ஆசிரமத்தைச் சுற்றிப் பார்த்துவந்தான். அப்பொழுது அந்த ஆசிரமத்திற்குப் பின்னால் ஓர் அழகிய மான் கட்டப்பட்டிருந்தது. ராஜகுமாரன் அதைப் பார்த்தான். அது தான் துரத்தி வந்த மான் என்பதையும் அவன் அறிந்துகொண்டான். அவனுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. முனிவரிடம் ஓட்டமாய் ஓடினான். தான் நேற்றுத் துரத்திக் கொண்டு வந்த மான் அவரிடம் இருப்பதாயும், அதைத் தனக்குக் கொடுக்கும்படியும் வேண்டிக் கொண்டான்.

அதைக் கேட்ட முனிவர் ராஜகுமாரனைப் பார்த்து, “நான் மானை உனக்கே தருகிறேன். ஆனால் நான் கேட்கப்போகும் மூன்று கேள்விகளுக்கு நீ சரியான விடை அளிக்க வேண்டும். யோசித்துப் பதில் சொல்'' என்றார்.

“சரி. அப்படியே விடை அளிக்கிறேன், ஸ்வாமி!'' என்றான் ராஜகுமாரன். உடனே முனிவர் ராஜகுமாரனைப் பார்த்து, “இந்த உலகத்தில் மிகவும் சிறந்ததும், மனிதர்களுக்கு உயர்வையும் பெருமையையும் கொடுப்பதும் எது?'' என்றார்.

ராஜகுமாரன் சிறிது நேரம் யோசனை செய்தான். பிறகு, “உண்மை பேசுதல் தான் சிறந்தது. உண்மையால் மனிதன் உயர்வு எய்தலாம்'' என்றான்.

“உலகத்தில் மனிதன் கனவிலும் செய்ய முடியாதென்று நினைக்கிற காரியங்களை நொடிப்பொழுதில் சாதிக்கச் செய்யும் சக்தி எது?'' என்று முனிவர் இரண்டாவது கேள்வியைக் கேட்டார்.

அடுத்த இதழில்

பாட்டி கதை சொல்கிறாள். யாருக்கு? யமனுக்கு. யமனை வசப்படுத்தும் கதை அது.

“கதையும் கத்திரிக்காயும்'' என்ற தலைப்பில் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் எழுதிய கதை அடுத்த இதழில் வருகிறது.

‘தாய் மொழி’ - நாடகம். வயிற்றுக்குள்ளே இருக்கும் சிசுவின் பேச்சு, பிறந்த பிறகு பேசும் பேச்சு... ஸ்ரீ ஆர். ஜகந்நாதன் எழுதுகிறார்.

"பக்தியால் எதையும் சாதிக்கலாம். கடவுளிடம் உண்மையான பக்தி வேண்டும்" என்று அவன் பதில் அளித்தான்.

அதைக் கேட்டதும் முனிவரின் மகிழ்ச்சி கரை கடந்தது. கடைசியாக அவர் அவனைப் பார்த்து, "அறிவுமிக்க ராஜகுமாரா, நீ சொன்னதெல்லாம் சரியே. உலகத்தில் உன்னை எல்லோரும் கொண்டாட வேண்டுமென்றால் நீ என்ன செய்ய வேண்டும்?" என்றார்.

"நான் எல்லோரிடத்திலும் அன்பாக இருக்கவேண்டும். எல்லோரையும் சகோதரர்கள்போல் பாவித்து, அன்புடன் நடந்துகொள்ளவேண்டும்" என்று ராஜகுமாரன் முனிவரின் மூன்றும் கேள்விக்கு விடையளித்தான்.

"நீ உத்தமன்; நல்ல அறிவாளி" என்று சொல்லி முனிவர் அவனைப் புகழ்ந்தார். மும்மணிகளாகிய நற்குணங்களை ஒவ்வொருவரும் சிறுவயசிலிருந்தே பழகி வந்தால் ஒவ்வொருவரும் பெரிய மகானாகவும் புத்திமானாகவும் விளங்கலாம்" என்று முனிவர் சொன்னார்.

பின்னும் முனிவர் ராஜகுமாரனைப் பார்த்து, "இவ்வளவு படித்தும் பிற உயிர்களுக்குத் தீங்கிழைக்கும் வேட்டையை விரும்புகிறாயே; இது நியாயமா?" என்று கேட்டார்.

"இனி நான் வேட்டையே ஆடுவதில்லை" என்று ராஜகுமாரன் முனிவரிடம் மொழிந்தான்.

பிறகு முனிவர் தம்மிடமிருந்த மானைத் தம் சிஷ்யனிடம் கொடுத்து, ராஜகுமாரன் அரண்மனையில் கொண்டு போய் விட்டுவரும்படி கட்டளையிட்டார். அரண்மனை போகும்வரையிலும் மானைத் தொடாமல் போகும்படி ராஜகுமாரனிடம் முனிவர் கூறினார்.

ராஜகுமாரனும் முனிவர் சிஷ்யனும் அரண்மனையை அடைந்தார்கள். வேலையாட்கள் மானைப் பிடித்துக்கொண்டு நந்தவனத்திற்குப் போய்விட்டார்கள். ராஜகுமாரன் முனிவர் சிஷ்யனுக்கு நல்ல மரியாதை செய்து அனுப்பினான்.

அன்று பௌர்ணமி. ராஜகுமாரனும் அவனுடைய தோழனும் புது மானுடன் விளையாட நந்தவனத்திற்குப் போனார்கள். அந்த மான் ராஜகுமாரனை மிகவும் சிரமப் படுத்திவிட்டது. அவன் கையில் சிக்காமல் அது நந்தவனம் முழுவதும் ஓடியது.

கடைசியில், ராஜகுமாரன் மானைப் பிடித்து விட்டான். அதைப் பிடித்து மகிழ்ச்சியுடன் அதற்கு முத்தம் கொடுக்கப் போனான். ராஜகுமாரனுக்கு ஆச்சரியம் சொல்ல முடியவில்லை. அவன் பிடிப்பில் மானைக் காணவில்லை. அதற்குப் பதிலாக ஓர் அழகிய ராஜகுமாரி அவனைக் கட்டிக்கொண்டிருந்தாள்!

தான் முன்பு ஒரு முனிவரின் சாபத்தால் மானாக மாறியதாகவும், ஷண்முக சுந்தரனின் பரிசத்தால் சுய ரூபம் பெற்றதாகவும் அந்த ராஜகுமாரி அவனிடம் சொன்னாள்.

பிறகு ஷண்முகசுந்தரன் அந்த அழகிய ராஜகுமாரியை மணந்துகொண்டு பல ஆண்டுகள் நீதியுடன் செங்கோல் செலுத்திவந்தான்.

தெப்பல்

"பார்த்தசாரதிப் பெருமாளுக்குத் தெப்பல் திருவிழா. பார்க்க வாருங்கள்" என்று சென்னைப் பக்கத்தில் சொல்கிறார்கள். தெப்பல் என்ற வார்த்தை இயற்கையான சொல் அல்ல. தெப்பம் என்பதே சரியான வார்த்தை. கடற்கரையில் வசிப்பவர்களுக்குக் குளத்தில் மிதக்கும் தெப்பத்தைக் கண்டபோது, கப்பல் ஞாபகத்துக்கு வந்தது. அந்த ஞாபகத்தோடு தெப்பம் என்பதையே தெப்பல் என்று மாற்றிச் சொல்லிவிட்டார்கள். தெப்பமும் கப்பலும் சேர்ந்து தெப்பல் என்று வந்திருக்கிறது; முன் பகுதி தெப்பத்தைச் சேர்ந்தது; பின் பகுதி கப்பலைச் சேர்ந்தது.

கலைமகள்
ஸ்தாபிதம் 1932.

கதையும் கத்திரிக்காயும்

கி.வா.ஜகந்நாதன்

1

பாட்டி கதை சொல்வதில் இணையற்றவள். குழந்தைகளுக்குக் கதை சொல்வதில் மாத்திரம் அல்ல, பெரியவர்களுக்கும் கதை சொல்லி அவர்கள் உள்ளத்தை எங்கேயாவது அனுப்பிவிடுவாள். தலைமுறை தலைமுறையாக வந்த கதைகளை அவள் தன்னுடைய கைச்சரக்கையும் சேர்த்து மெருகு கொடுத்துச் சொல்லும்போது யாராக இருந்தாலும் சரி, வாயில் ஈப் புகுந்தது தெரியாமல் கேட்டுக்கொண்டிருக்கத்தான் வேண்டும். அவன் எவ்வளவு முரட்டாத்மாவானாலும் சரி, பாட்டிக்கு முன்னிலையில் மரப் பாச்சியைப் போல அடங்கி ஒடுங்கித் தன் நினைவையே இழந்து உட்கார வேண்டியதுதான்.

அவள் அப்பொழுதப்பொழுது தன்னுடைய உள்ளத்துக்குக் கற்பனைச் சிறகைப் பூட்டிப் பறக்க விடுவாள். அவளிடமிருந்து வரும் கதைகளை அப்போது பார்க்க வேண்டும்! வானுலகத் தேவரையும், நாகலோகத்து மகளிரையும் பிணைத்துவிடும். மலைக்குகையிற் பூதத்தையும் ஆழ்கடலின் திமிங்கிலத்தையும் சண்டைக்கு இழுக்கும். அடர்ந்த வனத்தின் மோகினிகளையும் பூலோக ராஜகுமாரர்களையும் இணைந்து குரவையாடச் செய்யும்.

அவளுடைய பூஜை புரஸ்காரங்கள், நேமநிஷ்டைகள், சுசிருசிகள், ஆசாரசிலங்கள் ஆகியவைகளைப் பார்த்தால் பெண்ணுருவத்தில் எழுந்தருளியிருக்கும் பெருந்தவ முனிவர் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தக் காலத்து ஔவைப் பாட்டி இப்படித்தான் இருந்திருப்பாளோ, என்னவோ!

பாட்டிக்குத் தெய்வபக்தி அதிகம்; வேதாந்தக் கொள்கைகளிலே பற்றுடையவள். உலகத்தில் அவள் பார்த்துச் சந்தோஷிக்க வேண்டிய காட்சிகளை எல்லாம் பார்த்தாயிற்று. வாழ்க்கையில் அவளுக்கு ஒரு குறையும் இல்லை.

வயசு எண்பதுக்குமேல் ஆகியும் பாட்டியின் திடத்திற்குக் குறைவில்லை. பேச்சு வெடுக்கு வெடுக்கென்று வரும்போது அவளுடைய பேத்திகூட நாணமடைய வேண்டும். இந்தக் காலத்து நோஞ்சான் தனைப்பற்றி அவள் பரிகாசம் பண்ணிக் கேட்கவேண்டும்: எத்தனையோ ரஸமாக இருக்கும். உள்ளதைத்தான் சொல்வாள்; ஆனல் சொல்லும் தோரணையிலே ஒரு தனிச் சுவை படர்ந்திருக்கும்.

பாட்டிக்கு ஆசை அதிகம் இல்லை; வாய்க்கு ருசியான பதார்த்தங்களில் மாத்திரம் இன்னும் சபலம் போகவில்லை. அவைகளிலும் கத்திரிக்காய் என்ருல் அவளுக்குப் பிராணன். ஊரில் யார் வீட்டில் கத்திரிக்காய் சமைத்தாலும் முதல் நைவேத்தியம் அவளுக்குத்தான். அந்த நிவேதனத்திற்குக் கைமேல் புலன் கிடைத்துவிடும். அருமையான கதை ஒன்று அவள் திருவாக்கிலிருந்து அன்று உதயமாகும்.

அவளுடைய பேரன் எங்கேயோ ஒரு கத்திரிச்செடி வாங்கிவந்து தன் வீட்டில் நட்டான். "பாட்டி, பாட்டி, இந்தச் செடி காய்க்கட்டும்; உனக்கு இளம் பிஞ்சாக அப்படியே பறித்துவந்து கறி பண்ணிப் போடச் சொல்கிறேன்" என்று அவன் சொல்வான். அப்பொழுது பாட்டியின் நாக்கில் நீர் சுரக்கும். தன் பேரன் கையால் நட்ட கத்திரிச்செடி காய்த்துக் கறி பண்ணிச் சாப்பிடவேண்டுமென்ற ஆசை அவள் மனசில் இடங்கொண்டது. அதுவரையிலும் இல்லாத சபலம் அவளுக்கு உண்டாயிற்று. இந்த உலகத்தில் வேறு ஒரு பொருளும் சுவை உடையதாகத் தோன்றவில்லை. அவ்வளவு தூரம் அவளுடைய ஆசை ஓங்கி நின்றது.

கத்திரிச்செடி தளிர்த்து இலை விட்டது; தளதளவென்று வளர்ந்தது. ஆனல் அந்தச் செடி வந்த வேளை நல்ல வேளையாகத் தோன்றவில்லை. என்றைக்குப் பேரன் அதைக் கொண்டுவந்து நட்டானே, அன்றைக்கே என்றும் இல்லாதபடி பாட்டிக்குக் கொஞ்சம் தலைவலி உண்டாயிற்று. தன் வாழ்நாளில் பற்று அரைத்துப் போட்டுக்கொண்டவள் அல்ல அவள். தலைவலியைப் பொறுத்துக்கொண்டிருந்தாள். மறுநாள் தலைவலி கொஞ்சம் படிமானத்துக்கு வந்தது; ஆனல் உடம்பு சுடத் தொடங்கியது. ஜ்வரம் வந்திருக்கிறதென்று அவள் தெரிந்துகொண்டாள். வயசு காலத்தில், வியாதியே வராதவர்களுக்கு ஏதாவது நோய் வந்தால் அது நல்ல காலத்திற்கல்ல என்பதைப் பாட்டி எவ்வளவோ பேருக்கு எடுத்துச் சொல்லியிருக்கிருள். இப்போது அவள் விஷயத்திலேயே அந்த விதியைப் பொருத்திப் பார்க்கும் காலம் வந்துவிட்டது.

தனக்கு உடம்பு சரியில்லாமல் இருப்பது அவளுக்குக் கவலை கொடுக்கவில்லை. அவள் கைலாஸ யாத்திரை செய்யத் தயாராகவே இருந்தாள். நிச்சயமாகத் தனக்குக் கைலாஸத்தில் ஓர் இடம் உண்டு என்பதிலும் அவளுக்குச் சந்தேகம் இல்லை. ஆனல், தன்னுடைய அருமைப் பேரன் நட்டு வளர்த்த கத்திரிச்செடி காய்த்து, அந்தக் காயைத் தின்னுமல் உயிர்விட அவளுக்கு இஷ்டமில்லை. தின்றுவிட்டே சாக வேண்டும் என்று சிவபெருமான் திருநாமத்தைச் சொல்லிச் சங்கற்பம் செய்துகொண்டாள். எவ்வளவோ பேர்களைக் கதை சொல்லி மயக்கும் தந்திரம் வல்ல அவள், யமகிங்கரர்களையும் கதை சொல்லி மயக்கலாம் என்று எண்ணினுள். ஆனல் அதற்குமுன், தன் உயிரைக் கொண்டுபோக வரும் கூற்றுவன் தன் கண்ணுக்குத் தெரிய வேண்டுமே! சிவபக்தர்களுடைய கண்ணுக்குக் காலன் புலப்படுவான் என்பதை அவள் கேட்டிருக்கிருள். சிவநாமத்தை மூச்சுவிடாமல் கோடிக்கணக்காக உருவேற்றின பாட்டி சிவபக்தைகளில் முன் நிற்கக் கூடியவளாயிற்றே; சிவபிரான் தன்னைக் கைவிடமாட்டார் என்ற திண்ணிய எண்ணம் அவளுக்கு இருந்தது. மேலும் சிவ நாமத்தை ஜபிக்கத் தொடங்கினுள்.

கத்திரிச்செடி நன்ருகத் தழைத்து வளர்ந்து பூ விட்டது. பூ உதிர்ந்து கடுகளவு பிஞ்சாக இருந்தது. "இன்னும் ஒரு வாரத்துக்குள் கத்திரிப் பிஞ்சைக் காணலாம், பறிக்கலாம், கறி சமைக்கலாம்" என்று பேரக் குழந்தை, ஜபம் பண்ணுத வேளை பார்த்துப் பாட்டியின் காதில் ஓதிவந்தான்.

கத்திரிக்காய் காய்ப்பதற்கு முன்பே யமதர்மராஜனே பாட்டியைத் தேடிக் கொண்டு வந்துவிட்டான். மகாசிவபக்தையாகிய பாட்டியை அழைத்துப்போகக் காலதூதர்களை ஏவக் கூடாது என்று எண்ணி அவனே நேரில் ஒரு நாள் இரவு வந்து சேர்ந்தான். பாட்டியின் ஜபம் பலித்தது. அதாவது யமதர்மராஜாவை அவள் தன் கண்ணுல் பார்க்கும் சக்தியை அடைந்தாள். அவன் வந்து நின்றதைப் பார்த்த பாட்டிக்கு மனசுக்குள் கொஞ்சம் அச்சம் உண்டாயிற்று. எத்தனையோ கடுமையான நரக தண்டனைகளைப்பற்றியும், யமகிங்கரர்களைப் பற்றியும் கதை சொல்லிச் சொல்லி அவர்களைப்பற்றிய பயம் அவளுக்கு இல்லாமற் போய்விட்டது. ஆகவே அவள் ஒரு கணம் திகைத்தாலும் மறுகணம் சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டே தைரியத்தை அடைந்தாள்.

"வாராய் யம தர்மராஜனே!" என்ற குரலைக் கேட்டுக் கூற்றுவன் திடுக்கிட்டான். பூவுலகத்தில் உள்ளவர்களின் ஊனக் கண்களுக்கு அவனைப் பார்க்கும் சக்தி ஏது? சாவித்திரிக்கு மாத்திரம் அந்த ஆற்றல் இருந்

தது. சாவித்திரியின் ஞாபகம் யமதர்மராஜனுக்கு வந்தவுடன் அவன் உடல் குலுங்கியது. 'அந்தப் பெண் என்னைத் தர்மசங்கடத்தில் மாட்டிவிட்டாள். உலகம் உள்ளளவும் என் அறியாமையையும் தன்னுடைய சாமர்த்தியத்தையும் நிலவும்படி செய்துவிட்டாள்' என்று எண்ணும்போதுதான் யமதர்மனுக்குத் தன்னைக்காட்டிலும் பெரியவர்கள் பூலோகத்தில் வாழும் மனுஷ ஜாதியிலும் இருக்கிறார்கள் என்ற ஞாபகம் வந்தது.

"இந்தப் பாட்டி மார்க்கண்டேயர், சாவித்திரி முதலியவர்களின் இனத்தைச் சேர்ந்தவளா, என்ன?" என்று அலக்ஷ்ய புத்தியோடு புன்முறுவல் பூத்தான்.

"தர்மராஜன் என்னும் பெயருக்கு ஏற்றபடி மந்தஹாஸ முகத்தோடு தரிசனம் தரும் உன் கருணையை நான் எப்படிப் புகழ்வேன்!" என்றாள் பாட்டி.

"நம்முடைய சிரிப்புக்கு வியாக்கியானம் அல்லவா செய்கிறாள்!" என்று எண்ணி உதட்டை இறுக மூடிக் கொண்டான் யமதர்மன்.

"ஹே சூரியகுமார, சிவபெருமானுடைய அம்சம் உன்னிடம் இருக்கிறதென்பதை உன்னுடைய மௌனத்தாலும் தெளியவைக்கும் அருமையை நான் பாராட்டாமல் இருக்க முடியுமா?"

தர்மராஜனுக்குச் சங்கடமாகப் போய் விட்டது. தன் கையினால் தன் வாகனமாகிய எருமைக்கடாவின் பிடரியின் மேல் ஒரு தட்டுத் தட்டினான். ஒன்றும் பேச இயலாமலும், செய்ய இயலாமலும் போன நிலையில் அதைத்தான் அவன் செய்ய முடிந்தது.

"உன்னுடைய இங்கிதத்தை அடியேன் நன்றாகத் தெரிந்துகொண்டேன். உன் வாகனத்தைத் தட்டி அதற்கு நீ உத்ஸாகத்தை மூட்டுகிறாய். தர்ம ஸ்வரூபமாகிய உனக்கு உள்ள வாகனம் வேகம் வேண்டிய பொழுது வேகம் காட்டும்; சாந்தம் வேண்டுமானால் சாந்தத்தை உடையதாக விளங்கும். அதனுடைய சாந்த அவசரத்தில் உண்டாகியவைகளைத்தான் இன்று பூவுலகத்தில் பார்க்கிறோம். பொறுமைக்கும், சாந்தத்திற்கும், எது எதிர்வந்தாலும் லக்ஷ்யம் செய்யாத உறுதிக்கும் இருப்பிடமாகப் பூலோக மகிஷ ஜாதி இருப்பதை நாங்கள் பார்க்கிறோமே!"

யமனுக்குச் சிரிப்பு வந்தது; ஆனாலும் அடக்கிக்கொண்டான். அவன் கைகள் பாசத்தைத் தொட்டன.

"இந்த மகிஷ மகாவாகனத்தைக் கண்டவுடன் எனக்கு அருமையான கதை ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. முட்டாளான ராஜகுமாரன் மகிஷ வாகனத்தின் மகிமையால் பரமரூப சௌந்தரியவதியாகிய ஒரு நாரீமணியைக் கல்யாணம் செய்துகொண்டான். அவனுக்கு வந்த பாக்கியம் அவ்வளவும் அந்த மகிஷ வாகனத்தினால்தான். உன்னுடைய வாகனத்தைத் தரிசிக்கும்போது எனக்கு அந்தக் கதை ஞாபகத்துக்கு வருகிறது. சாமான்யமான மகிஷத்துக்கே அவ்வளவு பெருமை என்றால் மகாசக்திமானாகிய உன் வாகனத்துக்கு எவ்வளவு பெருமை இருக்கவேண்டும்!"

கீழே எதையோ பார்த்துக்கொண்டிருந்த மகிஷ வாகனம் பாட்டியின் வார்த்தைகளைக் கேட்டு நிமிர்ந்தது. அதற்கு உள்ளுக்குள்ளே சந்தோஷம் பொங்கியது. யமதர்மராஜன் கையிலிருந்து பாசம் தானே நழுவியது. மீட்டும் ஒரு தடவை தன் வாகனத்தின் பிடரிமேல் தட்டினான்.

"ஆமாம்; அந்த ராஜகுமாரன் நல்ல நாயகியை அடைந்தான்; மகிஷ வாகனத்திலிருந்து ஆரம்பிக்கிறது கதை. மிகவும் சுவாரஸ்யமான கதை. முட்டாள் என்றால் சாமான்ய முட்டாளா? சுந்தரி என்றால் சாமான்யமான அழகியா?"

தென்றிசைத் தலைவன் தன் தொழிலை மறந்தான். பாட்டியின் வார்த்தைகள் அவன் காது வழியே சென்று உள்ளத்தே ஒரு நினைவை உண்டாக்கின. கதையைக் கேட்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது.

"ஹூம்! அந்த ராஜகுமாரன் யார்? அவன் எப்படி அந்த அழகியை அடைந்தான்?" என்று கம்பீரமான தொனியால் வைவஸ்வதன் கேட்டான்.

பாட்டி, "பாக்கியம்! உன் திருவாக்கால் கேட்கும்போது கதையைச் சொல்லாமல் இருக்கலாமா? இதோ சொல்லுகிறேன்" என்று ஆரம்பித்துவிட்டாள்.

2

அளகாபுரி, அளகாபுரி என்ற பட்டணத்தில் அளகேசன், அளகேசன் என்ற அரசன் அரசாட்சி புரிந்துவந்தான். தர்ம நியாயம் தவறாமல் ராஜ்ய பரிபாலனம் செய்துவந்தாலும் அவன் பூர்வ ஜன்மத்தில் எருமைக் கடாவுக்குத் தீனி போடாமல் வதைத்தமையால் புத்திர பாக்கியம் இல்லாமல் பல காலம் தவம் செய்தான். கடைசியில் சிவபிரான் திருவருளால் ஒரு புத்திரன் பிறந்தான். அவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவந்தாலும் அக்ஷராப்யாஸம், யானையேற்றம், குதிரையேற்றம் முதலாகிய ராஜகுமாரனுக்கு ஏற்பட்ட காரியங்களில் மனசு போகாமல், சாப்பிடுவதும் தூங்குவதுமாகவே காலத்தைப் போக்கிவந்தான். ராஜலக்ஷணத்தில் ஒன்றும் குறைவில்லாமல் கண்டோர் கருத்தை வசீகரிக்கும் வடிவமுள்ளவனாக இருந்தும் அஸ்திர சஸ்திர வித்தைகளில் பயிற்சி இல்லாமல் பெண் பிள்ளையைப்போல அந்தப்புரத்திலே உள்ள வேலைக்காரிகளோடு விளையாடிக்கொண்டே நாள் முழுவதும் கழிக்கலானான்.

தவம் செய்து பெற்ற பிள்ளை இப்படிச் சாதுவாகவும், சுறுசுறுப்பு இல்லாதவனாகவும் இருப்பதைக் கண்ட அளகேசன் என்னும் மன்னனுக்கு வரவரக் கவலை அதிகரித்து வந்தது. "இந்தப் பிள்ளையால் நம்முடைய குலம் விளங்கும் என்று நினைத்தோமே; ராஜவம்சத்தில் பிறந்தும் அதற்கேற்ற வீரம் இல்லாமல் இருக்கிறானே! இவன் போருக்குப் போகாவிட்டாலும் ராஜ்யபாரத்தையாவது வகிப்பானா? வகிப்பானென்று தோன்றவில்லையே! இவன் வகிக்காவிட்டாலும் இவனுக்கு மதியூகியாகிய பெண் ஒருத்தியை விவாகம் செய்துவைத்து அவள் மூலமாக ராஜகாரியங்கள் நடைபெறும்படி செய்யலாம் என்றாலோ, இவனை விரும்பி வரும் பெண் யார் இருக்கிறார்கள்? ஆளழகனாக இருந்து என்ன பிரயோஜனம்? ஆண்மை இல்லாதவனை ஆளென்று எப்படிச் சொல்வது?" என்று பலவாறாக அங்கலாய்த்துத் துக்காக்கிராந்தனாக இருந்தான் அந்த அரசன்.

ஒரு நாள் அரண்மனை ஜோசியனை அழைத்துத் தன் குமாரன் ஜாதகத்தைப் பார்க்கச் சொன்னபோது, அந்த ஜோசியன் வேந்தன் மனம் குளிரும்படி நம்பிக்கையூட்டும் சில வார்த்தைகளைச் சொன்னான். "அரசே, இந்தப் பிள்ளையினால் இந்த ராஜ்யத்துக்கு ஒரு பெரிய லாபம் உண்டாகப் போகிறது. சாக்ஷாத் லக்ஷ்மிதேவியைப் போன்ற பெண்மணி ஒருத்தி இவனுக்குப் பட்டமகிஷியாக வாய்ப்பாள். ஆனால் ஒரு விஷயத்தை மாத்திரம் நான் மகாராஜாவுக்கு வியக்தமாகச் சொல்லாவிட்டால் பெரிய அபராதி ஆகிவிடுவேன். பதினெட்டு வயசுக்குப் பிறகு இவன் தனியே இந்த நகரத்திலே இருப்பானானால் பைத்தியம் பிடித்துவிடும். பெண் துணையின்றி இந்த நகரத்தில் இவன் உலவுவது அபாயத்தையே விளைவிக்கும்" என்று ஜோசியன் சொல்லிவிட்டுப் போனான்.

அரசனுக்கு ஒரு விதத்தில் சந்தோஷம் ஏற்பட்டாலும் மற்றொரு விதத்தில் மிகுந்த கவலை உண்டாயிற்று. 'பதினெட்டு வயசுக்குப் பிறகு இவன் தனியே இங்கே இருக்கக்கூடாதென்றால், இவனுக்கு ஒரு மணமகளைத் தேடிக்கொண்டு வந்து கல்யாணம் செய்வதா? அல்லது இவனையே ஊரை விட்டு ஓட்டிவிடுவதா? என்ன செய்வதென்று விளங்கவில்லையே! இந்த மடையனை விரும்பிக் கல்யாணம் செய்துகொள்ள இங்கே யார் தேடிக்கொண்டு வருவார்கள்! இவன் ஊரை விட்டுப்போனால் இவனுடைய முட்டாள்தனம் உலகம் முழுவதும் பரவும்படியல்லவோ இவன் நடந்துகொள்வான்! இந்தச் சங்கடத்திற்கு என்ன செய்வது?' என்று பலபல யோசனைகளில் ஆழ்ந்து தவித்தான். கடைசியில் பரமசிவன் விட்டபடியே நடக்கட்டும் என்று தீர்மானித்தான்.

தன் குமாரனை அழைத்து, "அப்பா, நீ சில காலம் தேசாடனம் செய்து வந்தால் நல்லது. அங்கங்கே உள்ள அதிசயங்களை எல்லாம் கண்டு வரலாம். உனக்கு என்ன வாகனம் வேண்டுமோ அதையும், என்ன பொருள் வேண்டுமோ அதையும் கொண்டு போகலாம். துணைக்கு எவ்வளவு பேர் வேண்டுமோ அவ்வளவு பேரை அழைத்துக்கொண்டு போ" என்று அளகேசன் சொன்னான்.

ராஜகுமாரன் அதைக் கேட்டுச் சிரித்தான். "நான் இந்த ஊரை விட்டுப் போக வேண்டும் என்று சொல்கிறீர்களோ? அதெல்லாம் முடியாது. வாகனம், சேனம் எல்லாம் எனக்கு எதற்கு? எனக்குத்தான் ஏறி ஓட்டத் தெரியாதே" என்றான்.

"அப்படி அல்ல குழந்தாய், உனக்குக் கல்யாணம் ஆகும் வயசு வந்துவிட்டது. பூலோகத்தில் எவ்வளவோ ராஜகுமாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குள் மிகவும் அழகுடைய ஒருத்தி உனக்கு மனைவியாக

வருவாளென்று சோதிடர்கள் சொல்கிறார்கள். நீ அவளைத் தேடிக்கொண்டு போனால் அவளை நீ அடையலாமாம்" என்று அரசன் சொன்னான்.

கல்யாணம் என்ற பேச்சு வந்தவுடன் ராஜகுமாரனுக்கு உத்ஸாகம் உண்டாயிற்று. "அப்படியானால் நான் இன்றைக்கே புறப்படுகிறேன். எனக்கு யானை, குதிரை முதலிய வாகனங்களைக் கண்டால் பயமாக இருக்கிறது. பல்லக்கில் போகலாம். ஆனால் பெண்டாட்டியைத் தேடிக்கொண்டு போகும் என்னோடு வேறு யாரும் வரக்கூடாது. பல்லக்குச் சுமக்கும் ஆள்கூடக் கூடாது. அவர்கள் வந்தால் என் ராணியோடு பேசுவதற்கு எனக்கு வெட்கமாக இருக்கும். மாட்டுவண்டியாக இருந்தால் நல்லது. காளைமாடு என்றால்கூட எனக்குப் பயமாக இருக்கிறது. கூடில்லாத மொட்டை வண்டியில் இரண்டு எருமைக் கடாக்களைப் பூட்டித் தாருங்கள். அந்த வாகனமே எனக்

குப் போதும். எனக்கு வேண்டிய பணமும் உணவுப்பொருளும் கொண்டு போகிறேன். வேறு ஒன்றும் வேண்டாம்; துணைக்கு ஒருவரும் வேண்டாம்" என்று ஆசை ததும்பக் கூறினான் ராஜகுமாரன்.

அளகேச ராஜனுக்குச் சிரிப்பு வந்தது. "மகிஷ வாகனந்தானா இவனுக்குப் பிரியமானது?" என்று இகழ்ந்தான். வேறுவழி இல்லாமையால் பரமசிவனைத் தியானித்துக் கொண்டு ராஜகுமாரன் சொன்னபடியே அவன் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். நல்ல நாள் ஒன்று பார்த்துப் பிரயாணத்தை ஆரம்பிக்கச் சொன்னான். அன்றைக்கு அரசன் மிகவும் கவலையோடு தன் குமாரனைத் தழுவிக் கொண்டு அவன் கையில் ஒரு விபூதிப் பையைக் கொடுத்து, "குழந்தாய், உனக்கு யாரும் துணைவேண்டாம் என்று சொல்லிவிட்டாய். பரமசிவன்தான் உனக்குத் துணையாக இருக்கவேண்டும். இந்தப் பையிலுள்ள விபூதியை அடிக்கடி நெற்றியில் இட்டுக்கொள். சிவநாமத்தை அடிக்கடி சொல். அதிகமாக யாரிடமும் பேச்சுக் கொடுக்காதே" என்று புத்திமதி கூறி வழி அனுப்பினான்.

ராஜகுமாரன் எருமை மாடு பூட்டிய மொட்டை வண்டியில் புறப்பட்டான். அந்த் தேசத்தில் உள்ளவர்கள் தங்கள் ராஜகுமாரன் இந்த அருமையான ரதத்தில் ஆரோகணம் செய்துவருவதைப் பார்த்துப் பரிகாசம் செய்தார்கள். ஆனாலும் அந்த ராஜகுமாரனுடைய இயல்பை முன்பே அறிந்தவர்களாகையால் அதில் ஒன்றும் ஆச்சரியம் தோன்றவில்லை. ராஜகுமாரன் நெற்றியில் அழிந்த போதெல்லாம் விபூதியை இட்டுக்கொண்டும், சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டும் உல்லாஸமாகப் பிரயாணம் செய்தான். எருமைக்கடாக்களை உசுப்பிச் சில சமயங்களில் சிறிது வேகமாக ஓட்டினான்; பல சமயங்களில் அந்தப் பிராணிகள் போகும் போக்கிலே விட்டான். எந்தத் திக்கில் போகிறோம், எந்த ஊருக்குப் போகிறோம் என்ற கவலையே இல்லாமல் ராஜகுமாரன் மகிஷ ரதத்தில் போய்க்கொண்டிருந்தான்.

'நமக்கு அழகியான பெண்மணி ஒருத்தி கிடைக்கப் போகிறாள்' என்ற ஆசை ஒன்றே அவனைச் சிறிதும் கவலைப்படாமல் வைத்தது. 'அழகி எங்கே இருந்து வருவாள்? எப்படி வருவாள்?' என்பதைப் பற்றி எல்லாம் அந்த அறிவிலி யோசிக்கவில்லை. ஒரே குருட்டுப் போக்காக மகிஷவாகனங்களை முடுக்கிக்கொண்டும், இடையிடையே ஆகாரப்பொருள்களை விழுங்கிக்கொண்டும், அங்கங்கே கிடைத்த பழத்தையும் சிற்றுண்டியையும் விலை கொடுத்து வாங்கிக்கொண்டும் அவன் தன் உல்லாஸ யாத்திரையை நடத்தினான். எருமைக் கடாக்களுக்கும் குறைவில்லாமல் வேண்டிய தீனி வாங்கி வைத்தும், மாலை நேரங்களில் அவிழ்த்து விட்டும் பாதுகாத்தான்.

சில நாட்கள் ஆயின. அளகேசனுடைய நாட்டைத் தாண்டி வேறு தேசத்துக்கு வந்துவிட்டான். நல்ல அழகான வடிவங்கொண்ட அவனைப் பார்த்தவர்கள் யாவரும்

மயங்கினுர்கள் ; ஆனல் அவன் எருமைக் கடா வண்டியை ஓட்டிச் செல்லுவது பொருத்தமாக இருக்கவில்லை.

“இந்தச் சுந்தரபுருஷனைப் பார்த்தால் யாரோ ராஜகுமாரன் மாதிரி இருக்கிறது. ராஜகளை வடிகிறது இவன் முகத்தில். இவன் பஞ்சகல்யாணிக் குதிரையில் ஏறப் பிறந்தவன், இந்த எருமை வண்டியில் வருகிருனே! என்ன தோஷமோ! யார் செய்த வினையோ! மாற்ருந்தாய் செய்த வஞ்சனையோ!” என்று ஜனங்கள் எண்ணினுர்கள். கூட்டம் கூட்டமாக வந்து அவனைப் பார்த்தார்கள். பலர் பழம், பால் முதலிய பண்டங்களைக் கொண்டு வந்து தந்தார்கள்.

ராஜகுமாரன் தன் தகப்பனர் சொன்ன உபதேசங்களைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டிருந்தான். யாரிடமும் அதிகமாகப் பேசவில்லை. சிவநாமத்தை மாத்திரம் உச்சரித்துக் கொண்டிருந்தான். அவனை அணுகினவர்களெல்லாம் அவன் அடிக்கடி சிவநாமத்தை உச்சரிப்பதையும் திருநீற்றைப் பூசுவதையும் கண்டு, “இவன் பெரிய மகானக இருக்கவேண்டும். தன் தேசத்தைத் தியாகம் செய்துவிட்டு வந்திருக்கிருன். ஆனல் இந்த வண்டியை ஓட்டிக்கொண்டு வருவதற்குக் காரணந்தான் விளங்கவில்லை. என்ன விரதமோ! என்ன சங்கற்பமோ! மகான்களுடைய போக்கே அலாதியானது” என்று சொல்லிக்கொண்டார்கள். பலர் அவன் போன வண்டிச்சுவட்டின் மண்ணை எடுத்துத் தரித்துக் கொண்டார்கள். இப்படியாக அவன் தன் நாட்டை விட்டுத் தூரப் பிரதேசத்திற்கு வர வர, ஜனங்களுக்கு அவனிடம் மதிப்பும் பயபக்தியும் உண்டாயின. அவன் அவற்றையெல்லாம் கவனிக்கவே இல்லை. தன்னைத் தேடி வரும் அழகியைக் காணும் ஆசையை உள்ளத்தில் இருத்தி, திருநீற்றையும் சிவநாமத்தையும் கை விடாமல் போய்க்கொண்டே இருந்தான்.

3

சிவபுரி, சிவபுரி என்று ஒரு பட்டணம். அந்தப் பட்டணத்தில் சைவசீலன் என்ற ராஜா ராஜ்ய பரிபாலனம் பண்ணிக் கொண்டு வந்தான். அவன் பெரிய சிவ பக்தன். அவனுடைய ராஜ்யத்தில் சிவனடியார்களுக்கு மதிப்பு அதிகம். சிவநாமம் சொல்கிறவர்களானல் அவர்கள் செய்யும் குற்றத்தை மன்னித்து விடுவான். அவனுக்குச் சிவகாம சுந்தரி என்ற ஒரே பெண் சர்வாங்க சுந்தரியாகவும், சாதுர்ய புத்தி படைத்தவளாகவும் இருந்தாள். அவளுடைய அழகுக்கும் அறிவுக்கும் ஏற்ற புருஷனைத் தேடிக் கல்யாணம் செய்து வைக்க வேண்டுமென்று சைவசீலன் நினைத்தான். அதற்காக எவ்வளவோ தேசத்து ராஜகுமாரர்களுடைய படங்களை யெல்லாம வருவித்துப் பார்த்தான். ஒருவனுவது அவன் மனசுக்குத் திருப்தி அளிப்பவனுக இல்லை. நல்ல சுந்தரபுருஷனுகவும் சிவ பக்தனுகவும் இருக்கவேண்டும் என்பது அவனுடைய எண்ணம். ஒன்றும் சரியான படி நிறைவேருமையால் கவலையோடு இருந்து வருகையில் ஒரு நாள் ஒரு பெரியவர் அவனிடம் வந்தார். அவன் முகக்குறிப்பைக் கண்டு, “ஹே மகாராஜ, நீ கவலைப்படாதே. உன் மருமகன் உன் நாட்டைத் தேடிக் கொண்டு வருவான். அழகு, சிவபக்தி, அறிவு என்னும் மூன்று யோக்கியதையை நீ அவனிடம் எதிர்பார்க்கிருய். உலகத்தில் எல்லாம் ஒருங்கே சேர்வது துர்லபம். ஆகையால் உன்னுடைய மருமகனுக்கு அந்த மூன்றில் இரண்டு இருக்கும். அதனுல் குறை ஒன்றும் இல்லை. உன்னுடைய புதல்வி அவனை வசப் படுத்திக்கொள்வாள்” என்று சொல்லிப் போய்விட்டார். அது முதல் அவன் ஒருவாறு கவலை நீங்கிக் கடவுளின்மேல் பாரத்தைப் போட்டுவிட்டுத் தன் மகளுக்கேற்ற கணவன் வரும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். பெரியவர் சொன்ன செய்தியை அறிந்த சிவகாமசுந்தரியும் தன் மணுளன் இன்று வருவான், நாளை வருவான் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருந்தாள்.

இப்படியாக அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற காலத்தில், மகிஷரதத்தில் வரும் ராஜகுமாரன் அந்த ஊருக்கு வந்து சேர்ந்தான். அவனை மகானுகவும், சிவபக்த சிரோமணியாகவும் எண்ணிக்கொண்டிருந்த ஜனங்கள் சைவசீலனுக்கு அவன் வரவைத் தெரிவித்தார்கள். அவ்வரசன் அந்த மகிஷரத ராஜகுமாரனை எதிர்கொண்டழைத்து உபசரித்தான். அவனே யார் வீட்டிற்கும் செல்லாமல் எங்கும் தங்காமல் போய்க்கொண்டே இருப்பவனுகையால் அரண்மனைக்குச் செல்லவில்லை. அரசன் மாத்திரம் வந்து பார்த்துவிட்டு அரண்மனை சென்று தன் குமாரியை அந்த ராஜகுமாரனைப் பார்த்து வரும்படி அனுப்பினுன்.

வண்டி மெதுவாகப் போய்க்கொண்டிருந்தது. அரசனுக்குரிய பூங்காவனத்துக்குப் பக்கத்தில் உள்ள சாலை வழியே போகும் போது அங்கிருந்து ராஜகுமாரி தன் சேடிகளுடன் சாலைக்கு வந்தாள். ராஜகுமாரனுடைய ரூபசௌந்தரியத்தைக் கண்டதும் அவள் மயங்கிப்போனுள். பல காலமாக அவள் யாருக்காகக் காத்திருக்கிருளோ, அந்தப் புருஷசிங்கம் அவன்தான் என்று தெரிந்துகொண்டாள். உடனே அவள் தன் சேடிகளை யெல்லாம் அனுப்பிவிட்டுத் தன்னந்தனியே அந்த வண்டியை அணுகினுள்.

"ஹே மகாநுபாவ!" என்று குயில் போன்ற தொனியில் அழைத்துக்கொண்டே வண்டிக்கு அருகில் சென்றாள். அப்போது தான் ராஜகுமாரன் தன் தலையைத் திருப்பிப் பார்த்தான். தன்னுடைய லாவண்யம் ஜோதி வீசிக் கண்டோர் கருத்தை அழியும்படி செய்ய, பூங்கொடி போல ஸர்வாங்க சுந்தரி ஒருத்தி நிற்பதைக் கண்டான். அவன் உள்ளத்திலே என்றும் இல்லாத தன்மை, அமுதம் பெய்தாற்போல உண்டாயிற்று. "சிவ, சிவ" என்ற நாம சப்தத்தோடு அவளை ஏறெடுத்துப் பார்த்தான்.

"ஹே சுந்தரகுமார, தாங்கள் வீற்றிருக்கும் இந்த நிலை தங்களுடைய சிவபக்தித் திறத்தை விசதமாகத் தெரிவிக்கிறது. நானும் எவ்வளவோ சிவபக்தர்களைக் கண்டிருக்கிறேன். ஆனாலும் இப்படி ஒருவரைக் கண்டதில்லை. உங்கள் வாகனங் கூட உங்கள் சிவபக்தியை விளக்குகின்றதே" என்று சொல்லி அவனிடமிருந்து விடை வருவதற்குமுன் அந்த வண்டியின் பின்பக்கத்தில் ஏறிக்கொண்டாள்.

ராஜகுமாரன் புன்னகை பூத்தான். அவளும் குறுமுறுவல அரும்பினாள். "சிவ சிவ" என்ற அவனுடைய நாமசப்தத்தோடு, "மகாநுபாவ" என்ற அவள் குரல் ஒன்றியது.

* * * *

கதை சொல்லிக்கொண்டே வந்த பாட்டி திடீரென்று நிறுத்திவிட்டாள். அந்த இரவில் மற்றவர்களெல்லாம் தூங்கிக் குறட்டை விட்டுக்கொண்டிருந்தார்கள். யமதர்மராஜன் பாட்டி சொல்லும் கதையில் ஈடுபட்டிருந்தான். "கதை முடிந்துவிட்டதா?" என்று கேட்டான்.

"முடிவதா? இப்போதுதானே ஆரம்பமாகியிருக்கிறது" என்றாள் பாட்டி.

"கதையை முடித்துவிடு" என்றான் தர்மராஜன்.

"சிரமமாக இருக்கிறது. நாளைக்கு முடிக்கப் பார்க்கிறேன். உனக்கும் வேலை கொடுக்கிறேன். இவ்வளவு நேரம் கதை கேட்டாயே. சிவகாம சுந்தரி ஏன் ராஜகுமாரனைச் சிவபக்தர்களுக்குள்ளே சிறந்தவனாக எண்ணினாள்? வாகனங்கூட அவன் சிவபக்தியைத் தெரிவிப்பதாகச் சொன்னாளே, எதற்காக?" என்று கேட்டாள்.

"இதுதானா பிரமாதம்?" என்றான் தர்மராஜன்.

"பிரமாதம் அல்ல; இதற்குச் சரியாய் விடை சொல்லிவிட்டால் நீ இப்போதே என் உயிரைக் கொண்டுபோகலாம். இல்லாவிட்டால் நாளைக்கு வந்து பாக்கிக் கதையையும் கேட்டுவிட்டுக் கொண்டு போகலாம்."

"அவனுடைய சிவநாமஜபமும் விபூதி தாரணமும் கண்டு சிவபக்தியுடையவனாக நினைத்தாள். மகிஷவாகனத்தின் முகத்திலும் விபூதி அணிந்திருப்பான். அதனால் தான் வாகனத்தால்கூட அவன் சிவபக்தி புலப்படுகிறது என்றாள்" என்று யமதர்மராஜன் பதில் சொன்னான்.

"இதைக் குழந்தைகூடச் சொல்லுமே. இது அல்ல காரணம். யோசித்துப் பார். வேறு காரணம் தெரிகிறதா?"

தர்மராஜன் யோசித்தான். தெரியவில்லை. "நீயே சொல்லிவிடு, பாட்டி" என்றான்.

"அப்படியானால் இன்றைக்கு என்னை விட்டுவிட்டு நாளைக்கு ராத்திரி வருகிறாயா?"

"அப்படியே ஆகட்டும்."

பாட்டி புதிரை விடுவித்தாள். "அந்த வண்டியில் காளைமாட்டைப் பூட்டுவது வழக்கமாக இருக்க, ராஜகுமாரன் எருமைக் கடாவைப் பூட்டி வந்ததை ராஜகுமாரி பார்த்தாள். காளைமாடு பரமசிவனுக்கு வாகனம் அல்லவா? அதைப் பூட்டி ஓட்டுவது சிவாபராதம் என்று நினைத்து எருமை மாட்டைக் கட்டிக்கொண்டு வந்தான் என எண்ணி அவனைச் சிறந்த சிவபக்தனாக நினைத்தாள்" என்றாள்.

"பாட்டி, நான் தோல்வியடைந்தேன். நீ ஜயித்தாய். உன் இஷ்டப்படியே நாளைக்கு ராத்திரி வருகிறேன். நீ நாளைக்கே கதையை முடித்துவிடவேண்டும்" என்றான் தென்றிசைக்கோன்.

"பார்க்கலாம் அப்பா" என்றாள் பாட்டி. யமன் மறைந்தான்; பொழுதும் விடிந்தது.

(அடுத்த இதழில் முடிவுறும்)

கட்டுரை

காலப்போக்கிலே ஒரே வார்த்தையானது வெவ்வேறு அர்த்தத்தை ஏற்றுக் கொள்வது உண்டு. கட்டுரை என்பது இக்காலத்தில் வியாசத்தைக் குறிக்கிறது. ஆங்கிலத்தில் காம்பொஸிஷன் (Composition) என்ற சொல்லுக்கு ஏற்ற மொழிபெயர்ப்பு அது. ஆனால் இச்சொல் பழங்காலத்தில் நன்றாகப் பிரசங்கம் புரிவதற்கு வழங்கிவந்தது. பேச்சு வன்மைக்குப் (Oratory) பெயராக அதை வழங்கினார்கள். "கட்டுரை வன்மை" என்பது ஒரு கலை. விஷயங்களைத் திறம்படச் சேர்த்துச் சொல்லுதல் என்னும் காரணத்தால் அப்பெயர் வந்தது.

டாக்டர் தி. சே. சௌ. ராஜன் –

1916ஆம் காங்கிரஸ் லக்னௌவில் நடந்தது. நாட்டில் உண்டாயிருந்த அரசியல் கட்சிப் பிரிவினைகள் ஒழிந்து ஒற்றுமை உணர்ச்சி உதயமாகிய காலம். முஸ்லீம் லீகினரும், காங்கிரஸ்காரர்களும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு, அந்த ஊரில் கூடினார்கள். இரண்டாயிரம் பிரதிநிதிகளுக்கு மேலாக வந்திருந்தார்கள். அந்தக் காலத்தில் அவ்வளவு பிரதிநிதிகள் கூடியிருந்தது ஒரு பெருமையாகக் கருதப்பட்டது. சென்னையிலிருந்து ஒரு கூட்டம் சமையற்காரர்கள் தென்னிந்தியாவிலிருந்து வரும் பிரதிநிதிகளின் சாப்பாட்டுச் சௌகரியத்திற்காக வந்திருந்தார்கள். காங்கிரஸ் நான்கு நாட்கள் நடந்தது. காங்கிரஸ் லீக் ஒப்பந்தம் நிறைவேறியது. பால கங்காதர திலகர் பிரசன்னமாயிருந்து நடவடிக்கைகளில் பங்கெடுத்துக்கொண்டார். மகாத்மா காந்தியும் காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் வீற்றிருந்தாரே தவிர, விஷயாலோசனைக் கமிட்டியிலாவது, மற்ற நடவடிக்கைகளிலாவது கலந்துகொள்ளவில்லை. அவருக்கென்று சாசுவதமான ஒரு தீர்மானம் உண்டு. நாட்டில் ஹிந்துஸ்தானி தேசிய பாஷையாகப் பரவ வேண்டும் என்பது அந்தத் தீர்மானம். அந்தத் தீர்மானத்தை ஒரே வார்த்தையில் பேசி உட்கார்ந்துவிடுவார்.

காந்தி, திலகர் இருவரும் காங்கிரஸ் மண்டபத்தின் வெளிப்புறங்களில் வந்து கொண்டிருக்கும் பொழுதெல்லாம் திரண்ட கூட்டம் அவ்விருவரையும் பின்பற்றி வரும். காங்கிரஸ் பந்தலில் அவர்கள் நுழையும் பொழுதும் ஆரவாரங்கள் நடக்கும். இதில் திலகருக்குத்தான் அதிகக் கூட்டமும் அதிக ஆரவாரமும் இருக்கும். மற்ற எந்தத் தலைவர்களையும் பொது மக்கள் ஆரவாரித்து வரவேற்கவில்லை. இது அவர்களுள் சிலருக்குப் பொறாமையாகவும் மற்றும் சிலருக்குக் கேலியாகவும் பேச இடமளித்தது. ஆனால் இச்சிறுமைக் குணம் பொதுமக்களிடம் காணவில்லை.

ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் அப்பொழுது ஐக்கிய மாகாண கவர்னராக இருந்தார். காங்கிரஸ் நடக்கும் இடங்களில் கவர்னரை மகாநாட்டிற்கு அழைப்பது அக்கால வழக்கம். சில சமயங்களில் அவர்களும் அழைப்பை ஏற்று விஜயம் செய்வதும் உண்டு. காங்கிரஸ் சபை கூடிய இரண்டாம் நாள் அவர் அங்கு விஜயம் செய்தார். காங்கிரஸ் தலைவர் அவரை வரவேற்றுப் பேசி அதற்குத் தகுந்த பதில் அவர் அளித்தார். வரவேற்பைப் பெற்றுக்கொண்டு உடனே அவர் திரும்பவில்லை. சற்று நேரம் அவரது ஆசனத்தில் அமர்ந்து நடவடிக்கைகளைக் கவனித்தார்.

முன்பு ஓரிரண்டு சமயங்களில் கவர்னர்கள் பிரசன்னமாயிருந்தபொழுது அவர்களுக்கென தனிமுறையில் ராஜபக்திப் பிரமாணம் செய்யும் தீர்மானம் ஒன்றை நிகழ்த்துவது வழக்கம். அதிலும் தேர்ந்த பேச்சாளர்களைக் கொண்டு அந்தத் தீர்மானத்தைப் பேசி நிறைவேற்றி வைப்பார்கள். மற்ற நடவடிக்கைகள் நிகழ்ச்சி முறைகளையெல்லாம் ஒதுக்கி வைத்து இந்த ராஜ விசுவாச நாடகம் நடைபெறும். இந்தத் தடவை அந்த முறை பின்பற்றப்படவில்லை. இந்தியர்களுக்கும் ஆயுதங்கள் வைத்துக்கொள்ள உரிமை வேண்டும்; அதுவும் இங்கிலாந்தில் எவ்விதம் நடக்கிறதோ அவ்விதம் இந்தியாவிலும் நடைபெற வேண்டும் என்கிற தீர்மானத்தைப்பற்றிப் பேச்சு நடந்துகொண்டிருந்தது. அத்தீர்மானத்தை ஆதரிக்க வேண்டிய பொறுப்பு என்னுடையதாக இருந்தது. பெயர் பெற்ற பேச்சாளர்களுக்குத்தான் தீர்மானங்களில் பேச இடம் கிடைக்கும். அதிலும் விஷய ஆலோசனைக் கமிட்டியில் அங்கத்தினராக இருக்க வேண்டும். அல்லது அப்படிப்பட்ட அங்கத்தினர்களால் பலமாகச் சிபாரிசு செய்யப்பட்ட பிரதிநிதியாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் என்போன்ற பேர் ஊர் தெரியாத பேர்வழிகளுக்குக் காங்கிரஸ் மேடையில் பேச இடம் கிடைக்கும். மிகவும் பிரயத்தனம் செய்து சென்னை மாகாணக் கமிட்டியாரின் தயவினால் நான் ஆலோசனைக் கமிட்டியுள் புகுந்துவிட்டேன். இந்தத் தீர்மானம் காங்கிரஸில் புதிதாக வந்ததல்ல. பழைய பசலிகளில் பாடப்பட்ட பல்லவிதான்.

விஷயாலோசனைக் கமிட்டியில் இந்தத் தீர்மானத்தைப்பற்றிப் பரிசீலனை செய்தபொழுது, அங்கிருந்தவர்களில் ஒருவருக்கும் சீமையில் ஆயுதம் பெறும் முறை இன்னதென்பது தெரியவில்லை. உடனே நான் எழுந்து, "அந்த முறை எனக்குத் தெரியும். எழு ஷில்லிங்கு போஸ்டாபீசுகளில் செலுத்திப்

பெயரைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். அந்த ரசீதை ஆயுதங்கள் விற்கும் கடைகளில் காட்டினால் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த முறையில்தான் நான் லண்டனில் இருக்கும்பொழுது ரிவால்வர் வைத்திருந்தேன்'' என்றேன். பிரமுகர்கள் எல்லோரும் சற்று என்னை உற்று நோக்கி, "இந்தத் தீர்மானத்தைப்பற்றி நீர் பேசமுடியுமா?" என வினவ, நானும் அதற்கு ஒப்புக்கொள்ள மகாநாட்டில் பேச ஏற்பட்டது. ஆனால் கனம் பொருந்திய மன்னர்பிரானின் பிரதிநிதியாகிய மாகாணக் கவர்னர் முன்னிலையில் பேசத் துணிச்சல் இருக்குமா என்று பலருக்கு என்னைப் பற்றிச் சந்தேகம் உண்டாயிற்று. முதல் முதலாகக் காங்கிரஸ் மகாசபையில் பேசும் சந்தர்ப்பம் அன்றைத் தினந்தான் கிடைத்தது. சுமார் பதினைந்து நிமிஷங்கள் பேசினேன். ஓர் அநாமதேயப் பேர்வழி நன்கு பேசினான், முறையாகவும் பேசினான் என்பதுதான் கேட்டவர்கள் அன்றைத்தினம் சொல்லியது. எனது மகிழ்ச்சிக்கு அளவில்லை; கவர்னர் முன்னிலையில் பேசியதுதான் என் மகிழ்ச்சிக்குக் காரணம். அன்றைத் தினமே தேசத்தலைவர்களுள் ஒரு குட்டித் தலைவனாக எண்ணி மகிழ்ந்தேன்.

காங்கிரஸ் முடிந்தவுடன் என் நண்பர்கள் இருவருடன் அயோத்தி யாத்திரை சென்றேன். ஹிந்துஸ்தானி கொஞ்சம் பேச எனக்குத் தெரியும். அயோத்தியில் எனக்குத் தெரிந்தவர்களோ அல்லது சிநேகிதர்களோ ஒருவரும் இல்லை. எனினும் யாத்திரையினுடைய பெருமையும் பலனும் அதில்தான் அடங்கியிருக்கின்றன. முன்பின் தெரியாத ஓர் இடத்திற்கு, அந்தத் தேச பாஷை தெரியாமல் திடீரெனப் புறப்பட்டுப் போவதிலுள்ள உணர்ச்சியைப்போல வேறு எதுவும் இல்லை. தெரிந்தவர்கள் வந்து வரவேற்க, உடனே தயாராக இருக்கும் வண்டிகளில் ஏறிக் குறிப்பிட்ட இடம் சென்று, உபசரிக்கப்பட்டு, ஊர் விநோதங்கள் காண்பிக்கப்பட்டுத் திரும்புவதைக் காட்டிலும், நாமாகவே உதவி இல்லாமல் சென்று, வண்டி பிடித்துத் தங்குமிடம் தேடி, பண்டாக்கள் கையில் சிக்கிக்கொண்டு, கடைகளில் நமக்குத் தேவையானவற்றைக் கிடைப்பவைகளில் பொறுக்கி எடுத்து, விலை கொடுத்து, முக்கியமான இடங்களைத் தேடித் திரிந்து பார்த்து வரும் அநுபவம் இணையற்றது.

நான் அயோத்தியைப்பற்றிப் படித்தும் கேட்டும் இருந்தேன். அது புராணங்களில் சொல்லப்பட்ட துவாபர யுகத்து அயோத்தி; கம்ப ராமாயணத்திலும், வால்மீகி ராமாயணத்திலும் சொல்லப்பட்ட அயோத்தி. யாது காரணத்தினாலோ என் மனத்திலிருந்த அயோத்தி, கால தேச அரசியல் மாறுபாடுகளின் காரணத்தினாலாவது, கலியுக நிகழ்ச்சிகளினாலாவது வேறு விதமாக மாறவில்லை. ராமன் அரசு புரிந்த அயோத்தியைப் பார்க்கவேண்டிய ஆசைதான் என் மனத்தைத் தூண்டி இந்த யாத்திரையில் இழுத்தது. லக்நௌவிலிருந்து சுமார் ஆறு மணிநேரம் ரெயில் பிரயாணம் செய்து அயோத்தி சேர்ந்தேன். பகல் பத்து மணி இருக்கலாம். ரெயில்வேஸ்டேஷன் மிகச் சிறியதாக இருந்தது. தென்னிந்திய ரெயில்வேயில் சில்லறை ஸ்டேஷனைப்போல இருந்தது. என் மனம் திடுக்கிட்டுவிட்டது. அயோத்தி ரெயில்வே ஸ்டேஷன் இப்படியா இருக்கவேண்டும்? ராமர் ஆண்ட அயோத்தி என்பதற்காக வாவது சற்று உன்னதமான கட்டிடத்துடன் இருக்கக் கூடாதா? புழுதி அடைந்து, தங்க நிழலில்லாமல், வறுமை மண்டிக் கிடக்கிறதே என்ற துயரம். ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தால் ஒரு வண்டிகூட இல்லை. ஒன்றிரண்டு, வண்டிகள் எனச் சொல்லிக்கொள்வதற்கு வெட்கி, மாடு கட்டிய இரு சக்கரங்களுடன் நின்றன. அதில் சாமான்களைப் போட்டுக்கொண்டு நடந்தோம்.

எங்கே போவது? யாத்திரை ஸ்தலங்களில் காணப்படும் பண்டாக்கள்கூட அங்கே தென்படவில்லை. நாங்கள் மதராஸிகள் என்று தெரிந்ததும் வண்டிக்காரன் தானாகவே நாங்கள் தங்கக்கூடிய ஓரிடத்துக்குக் கொண்டு போய் விடுவேதாக வண்டியைக் கடுகி நடத்தினான். ஊரெல்லாம் குப்பையும் கூளமும். ஸ்டேஷனிலிருந்து போகும் இருபுறமும் துர்நாற்றம். சிறு குடிசைகளில் ஈக்கள் மொய்த்துக்கொண்டிருக்கும் சிற்றுண்டி, விற்பதற்காக வைக்கப்பட்டிருந்தது. அதைக் குரங்குகள் தின்றுவிடாமல் ஓட்டுவதற்காக ஒரு குச்சியை வைத்துக்கொண்டு, அழுக்கடைந்து கரேலென்றுள்ள துணியைக் கட்டிக்கொண்டு, உச்சந்தலையில் அதைக்காட்டிலும் அழுக்கடைந்த ஒரு குல்லாய் போட்டு உட்கார்ந்திருக்கும் கடைக்காரர்கள். அங்கும் இங்கும் தெருவெல்லாம் நம்முடைய ஊர்களில் திரியும் நாய்களைப்போலக் குரங்குகள், வீடுகளிலிருந்து எறியப்படும் எச்சில் இலைகளைத் தின்பதற்கு ஒன்றோடு ஒன்று அடித்துச் சண்டை போட்டு ஆரவாரித்துக் கொண்டிருந்தன. ராமர் அயோத்தி என்பதற்காக ஒரே ஓர் அடையாளந்தான் நான் கண்டேன்: குரங்குகள். ஆனால் ராமாயணத்தில் சொல்லப்பட்ட குரங்குகள் அல்ல. அசல் நாட்டுப்புறத்துக் குரங்குகள். அந்த ஊரில் குரங்குகளை ஒருவரும் அடித்துத் துன்புறுத்துவது இல்லை என்று நான் கேள்விப்பட்டேன். அவை

பட்டினியால் படும் துயரத்தைக் கண்டால் ராமதூதர்களும் ராமசேனையுமாக விளங்கிய துவாபரயுகத்துக் குரங்குகளின் சந்ததியார்கள் என்று சொல்வதற்கு வால் ஒன்றுதான் அடையாளம்.

பல சந்துகள் தாண்டி, நமது தமிழ் நாட்டில் ஒரு குக்கிராமத்தில் கட்டப்பட்டிருக்கும் கோவிலைப் போன்ற கட்டிடத்தின் முன்பாக வண்டி வந்து நின்றது. "மதராஸி ராமமந்திரம் இதுதான்" என்று வண்டிக்காரன் சொன்னதும், என்னுடன் வந்த நண்பரில் ஒருவர் உள்ளே சென்று சிறிது நேரம் கழித்து வயசு முதிர்ந்த ஸ்ரீவைஷ்ணவ அம்மையாருடன் வந்து எங்களை அம்மையாருக்கு அறிமுகப்படுத்தினார். கலியுக அயோத்தியில் ஒவ்வொரு வீட்டிலும் ராமர் சிலைகளோ, படங்களோ பூஜிக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிந்து கொண்டேன். நாங்கள் இறங்கின ராம மந்திரம் சென்னை திருவல்லிக்கேணியில் வசித்துவந்த யோகி பார்த்தஸாரதி ஐயங்காருடையது.

சென்னையில் யோகி பார்த்தஸாரதி ஐயங்காருக்கு ஒரு நாள் இரவில் ஒரு கனவு தோன்றிற்று. "நான் சேதுக்கரைக்குச் சமீபமாயுள்ள நவபாஷாணத்தில் பல காலமாகச் சீதையுடனும் தம்பி லக்ஷ்மணனுடனும் பூமிக்குள் புதைந்து கிடக்கிறேன். நீ என்னை வந்து எடுத்து அயோத்தி சேர்த்துவிடவேண்டும்" என்று கனவில் ஸ்ரீராமன் சொன்னதாக நம்பி, நவபாஷாணம் சென்று கனவில் குறிப்பிட்ட இடத்தில் தோண்டிப் பார்க்க, ராமர், லக்ஷ்மணர், சீதை ஆகிய விக்கிரகங்கள் கிடைத்தன. அம்மூர்த்திகளை அயோத்தி எடுத்துச் சென்று அங்கு நிலம் தேடி, ஒரு சிறிய கோவிலைத் தமிழ்நாட்டுக் கட்டிட அமைப்பில் கட்டி, அங்கே தாமும் தம் மனைவியுமாக இருந்து ஸ்ரீராமனுக்குப் பூஜை நைவேத்தியங்கள் செய்து காலம் கழித்துவந்தார். அவர் காலமான பிறகு அவர் மனைவியார் அந்தத் திருப்பணியைக் கணவர் சொற்படி ஏற்று நடத்தி வந்தார். அந்த அம்மையாரைத்தான் நான் அன்று கண்டேன். மேலே சொல்லிய வரலாற்றை அந்த அம்மையாரே எனக்குச் சொன்னார். சென்னையிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு ஒரு விடுதியும் அந்த ராம மந்திரத்தில் கட்டப்பட்டுவந்தது.



சாமான்களைக் கோவிலில் வைத்துவிட்டு ஸரயு நதிக்கு ஸ்நானத்திற்குச் சென்றோம். ராமர் காலத்தைப் போலவே இன்றைக்கும் உயிரோடு விளங்கும் ஜீவநதி ஸரயு. அயோத்திக் கரையோரமெல்லாம் கருங்கல் படிக்கட்டுகள் தண்ணீருக்குள் ஊடுருவிக் கட்டப்பட்டிருந்தன. படிக்கட்டுகளின்மேல் பெரிய மாளிகைகள். மணற் பரப்பும், தண்ணீர்ப் பரப்பும் என் மனத்தைக் கவர்ந்தன. அடிமைப்பட்ட ஹிந்துக்களால் ராமரின் அயோத்தியைக் காப்பாற்ற முடியவில்லை. ஆனால் இமயவதியும் கங்கா தேவியுமாகச் சேர்ந்து யுகங்கள் கடப்பினும் பொலிவு குன்றாது துவாபர யுகத்து அயோத்தியின் சின்னமாகிய ஸரயுவைக் காப்பாற்றிவருகிறார்கள். அந்த நதியின் அழகும் என் ராம பக்தியும் அன்று ஒருங்கே கூடின. அடங்காத மகிழ்ச்சி அடைந்தேன். காலையில் உண்டான சோகம் மறைந்து விட்டது. ஸரயு நதிக்கரையில் பத்து மைலுக்கு அப்பால் பரதன் வசித்த நந்திக்கிராம ஆசிரமம் இருக்கிறதென்று கேள்விப்பட்டேன். ஸரயு தரிசனமும் ஸ்நானமும் எனக்குப் போதுமானவை. ராமன் மறைந்த ஸரயுவின் புனித நீரில் மூழ்கி எழுந்த உணர்ச்சி என் ஆயுளுக்கும் போதுமானது.

ராமமந்திரம் வந்து சேர்ந்ததும் நவபாஷாண ராமனைத் தரிசிக்க உட்சென்றோம். நம் தென்னாட்டுக் கோயில்களைப்போலச் சிலை உருவம்; ஸ்ரீ ராமனாலும் ரகுவம்சத்தாராலும் ஆராதிக்கப் பெற்ற ஸ்ரீரங்கநாதனுடைய சயனத் திருக்கோலத்தையும் அந்தக் கோயிலில் கண்டேன். அர்ச்சனை முதலானவைகள் செய்து வெளிவந்தோம். கோவிலுக்கு வெளிப் புறத்தில் நான் விட்டுவந்த ஜோடுகளில் ஒன்றைக் காண

வில்லை. அங்கும் இங்கும் தேடிப் பார்த்த பொழுது ஒரு குரங்கு அதைத் தூக்கிக்கொண்டு போய்க் கோவிலின் கர்ப்பக்கிருகத்தின் ஸ்தூபியின்மீது மாட்டி வைத்துவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது. எவ்வளவு பயமுறுத்தியும் பயன் இல்லை. கடைசியாகக் கோவில் சொந்தக்காரரான அம்மையார் வந்து பார்த்தார். "நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீர்கள். ஜோட்டை அந்தக் குரங்கே இப்பொழுது திருப்பிக் கொண்டுவந்து கொடுக்கும்படி செய்கிறேன்" என்று சொல்லி, வீட்டிற்குள் சென்று பரணையில் சேகரித்து வைத்திருந்த நிலக்கடலையில் ஒரு பிடி எடுத்து வந்து வீசியவுடன் குரங்கு ஜோட்டை விட்டு எறிந்துவிட்டுக் கடலையைப் பொறுக்க ஓடிவிட்டது. "கோவிலுக்கு வந்தவர்கள் தமக்கு ஏதாகிலும் தின்பதற்குப் போடாவிட்டால் இவ்வூர்க் குரங்குகள் இப்படித்தான் செய்வது வழக்கம்" என்று அந்த அம்மையார் சொன்னார். இது அயோத்திக் குரங்கின் சுபாவமோ அல்லது அம்மையாரின் ராமபக்தியின் விசேஷமோ எனக்குத் தெரியாது.

அன்று பிற்பகல் ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்காகச் சென்றேன். ஒரு பெரிய கோட்டையையும் அதனுள் அழகாக அமைக்கப்பெற்ற அரண்மனையையும் பார்த்தேன். அயோத்தி ராஜாவின் அரண்மனை என்று சொன்னார்கள். ஆனால் அவர் அரசு புரியும் மன்னராகத் தோன்றவில்லை. ஒருகால் ராஜ்யம் இல்லாமலே ராஜா பட்டம் பெற்ற ஜமீன்தாராக இருக்கலாம் என்பது எனது அபிப்பிராயம். விசாரிக்கப் புகுந்தால் தாம் நேராகவே சூரிய வம்சத்தில் பிறந்த ஸ்ரீராமபிரானுடைய சந்ததி என்றே சொல்லுவார்கள். இதற்கு அடையாளமாக அரண்மனையில் அநேக இடங்களில் ராம லக்ஷ்மணர் சிலைகள் வைத்துப் பூஜிக்கப்பட்டு வருவது ஒன்றைத் தவிர வேறு சின்னங்கள் காணப்படவில்லை. ஸ்ரீ வால்மீகி முனிவர் எழுதிய ராமாயணம் வெறும் மனக்கோட்டையா, அல்லது சரித்திர பூர்வமான உண்மையா என்பதை இப்பொழுது நிர்ணயிக்கத் தேவையில்லை. ராமன் ஆண்ட அயோத்தியா இது என்பதை எதற்காக நிரூபணம் செய்ய வேண்டும்?

ஸரயு நதி பிரம்மாண்டமாக அழியாது ஓடிக்கொண்டிருக்கிறது, கண் கண்ட உண்மை. ராம நாமமும் குரங்குகளும் இன்னும் உயிருடன் விளங்கிக்கொண்டிருக்கின்றன. சத்தியவாக்கிய பரிபாலனம், ஏகபத்தினி விரதம், பதிபக்தி, சகோதர பாவம், கொடுங்கோன்மையின் முடிவு எல்லாம் துவாபர யுகத்திற்கும் கலியுகத்திற்கும் ஒன்றேதான். உண்மைக்குக் காலம் ஏது? மனிதன் பகுத்தறிவு படைத்து, உண்மையைக் கடைப்பிடித்து, உயர் வாழ்வு எய்தும் முறைக்குக் காலமும் உண்டோ? ராமாயணம் அழிவில்லாத கிரந்தம். அதை எரித்துவிட்டால் அது அழிந்துவிடுமென்று சில அறிவிலிகள் கூக்குரல் கிளப்புகிறார்கள். ராமாயணத்திற்குக் காரணம் ராமனா, சீதையா, ராவணனா என்று யாரால் முடிவாகக் கூற முடியும்? ராமன் இருந்தால் ராவணனும் இருந்தே தீருவான். பெயர்கள் மாறலாமே தவிர மனித இயல்பு மாறுவதில்லை. உலகப் போக்கின் உண்மையை உணர்த்தும் நிகழ்ச்சிகள் எந்த யுகத்திலும் நித்தியமானவை; ராமாயணமும் அத்தகையதே.

அயோத்தியில் அவசியம் தரிசிக்க வேண்டிய இடம் ராமஜனன ஸ்தானம் என்று கேள்விப்பட்டு அன்று பிற்பகல் அங்கே சென்றேன். தசரத சக்கரவர்த்தி அரண்மனையில் ராமன் அவதாரம் செய்த ஸ்தலம் தரிசிக்க வேண்டியது எனது கடமை என நினைத்து, அதே மனோபாவத்துடன் சென்றேன். ஊருக்கு வெளியே சுமார் ஒரு மைல் தூரம் சென்றதும் ஒரு மசூதி தென்பட்டது. அதைக் கடந்து சென்று அதன் பின்புறத்தில் பத்தடி சதுரமுள்ள ஒரு சிறு கட்டிடத்தைப் பார்த்தேன். அந்த அறையின் தளம் பூமி மட்டத்திற்குக் கீழே இறக்கிக் கட்டப்பட்டு, இருள் மண்டிக் கிடந்தது. ஒரு சிறிய வெளிச்சம் மினுக்கு மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. இரண்டு பூசாரிகள் தாங்கள் வைத்துக்கொண்டிருந்த பித்தளைத் தட்டில் காசுகள் போடும்படி, வருபவர்களை வற்புறுத்திக்கொண்டிருந்தார்கள். இந்த அற்பமான இருட்டு அறையிலா தசரத சக்கரவர்த்தியின் மனைவி ராமனை ஈன்றெடுத்து வளர்த்திருப்பாள்? பார்ப்பவர் நகைக்கும்படியான ஓர் இடத்தில், துவாபர யுகத்தில் ராமன் பிறந்தான் என்று கலியுகத்தில் பிறந்த ஒருவன் காண்பித்தால் இதைப்பற்றி என்ன நினைக்கிறது? என்னை அறியாமலே என் கண்களில் நீர் ததும்பியது. இது என்ன கோரம்! என்ன மதியீனம்! இதையும் ராமன் பிறந்த இடமென்று ஓர் அறிவிலி சொல்ல அதையும் நம்பி, இது உண்மையாக இருக்கலாமென மூட பக்தியின் மேலீட்டால் வழிபடும் மக்களைக்கண்டு சிரிப்பதா அழுவதா? ஒவ்வொரு நூற்றாண்டிலும் நமது நாட்டில், நமது மதத்தில் பிறந்து வளர்ந்துவந்த நம் சகோதரர்களைக் கோடிக்கணக்காக வேறு மதத்திற்குப்புகச்செய்து இழந்தோம். இழந்தது மட்டுமல்லாமல், அவர்களே நம் கோயில்களையும், புண்ணிய க்ஷேத்திரங்களையும், தெய்வங்களையும் ஹதம் செய்ய நாம் பயந்து வாளா இருந்துவந்திருக்கிறோம். வட

இந்தியாவில் எங்கே சென்று பார்த்தாலும், நம் புனித ஸ்தலங்கள் இடிக்கப்பட்டு, பாழாக்கப்பட்டு, அந்த இடத்திலேயே மசூதிகள் கட்டப்பட்டு, வேண்டாமென்று விலக்கிய சில இடங்களில் திரும்பவும் நாம் சிறு கோயில்களைக் கட்டிக்கொண்டு நம் குடியை அழித்த மூடக்கொள்கைகளையே விடாது பின்பற்றி வந்துகொண்டிருக்கிறோம். படையெடுத்து வந்துள்ள அந்நிய நாட்டு முஸ்லிம்கள் நூற்றில் ஒருவருக்குமேல் இருக்கமாட்டார்கள். பாக்கி தொண்ணூற்றொன்பது பெயர்கள் பயத்தினாலும் அடிமைப் புத்தியினாலும் மதம் மாறிய நம் சகோதரர்களே. இவ்வளவு கொடுமைக்கு ஆளாகியும், நாம் அவர்கள் மேல் துவேஷம் கொள்ளாமல் கூடிய மட்டில் உடன் வாழ்ந்துவருகிறோம்.

இந்து முஸ்லிம் ஒற்றுமை நாட்டிற்கு அவசியம். அதற்காக எவ்வளவு விட்டுக்கொடுக்க முடியுமோ அவ்வளவு விட்டுக்கொடுக்க வேண்டியதும் நமது கடமை. இருந்தபோதிலும் நம் நாட்டினர் அநுபவித்திருக்கும் இன்னல்களையும் அவமானங்களையும் பார்க்கும் பொழுது மனம் வாடாமல் இருக்க முடியாது. இவ்வித எண்ணத்தில் அன்று முழுவதும் வாடி வருந்தினேன். அயோத்தி ஸ்தல யாத்திரையின் மனக்கொதிப்பு அடங்க வெகு நாட்களாயின. இன்றைக்கும் நினைத்தால் மனம் துன்புறுகிறது. மகா உன்னதமான கொள்கைகளையும், தத்துவத்தையும், தயையையும், கருணையையும் அடிப்படையாகக் கொண்ட ஹிந்து மதம் எவ்விதம் இந்தக் கேவலமான நிலையை அடைந்தது? அரசியல் அடிமைத்தனத்தினாலா, அல்லது சமூக ஆசாரக் குருட்டுப் பழக்கங்களினாலா? எதனால் இப்படி ஏற்பட்டது? இரண்டும் காரணமாக இருக்கலாம் என்பது என் எண்ணம். அயோத்தி சென்று திரும்பியது முதல் ஸ்தல யாத்திரையின் மோகம் ஒருவாறு குறைந்துவிட்டது.

சிராத்தம்

வழக்கிலும் சரி, எழுத்திலும் சரி, "சிரார்த்தம்" என்று உபயோகிப்பது பெரும்பான்மையான வழக்கமாக இருக்கிறது. சிரத்தை என்பதிலிருந்து பிறந்த வார்த்தை அது. இறந்தவர்களை நினைத்து பிதிருக்களுக்குப் பிரீதியாகச் சிரத்தையுடன் செய்யப்படும் சடங்காதலால் 'சிராத்தம்' என்று சொல்லப்படும். 'சிரார்த்தம்' என்று இடையிலே ரகர ஒற்றைச் சேர்த்துச் சொல்வது பிழை.

விஞ்ஞான ஆராய்ச்சிகள்

பிராணிகளின் கண்ணறைகளில் பாக்டீரியாவையும் மற்றும் தொழில் புரியும் கருவிகளையும் இயக்கும் சில சூக்ஷ்மமான அமைப்புக்களை இப்போது ஸூக்ஷ்ம தரிசினி மூலம் காண்பது சாத்தியமாகிவிட்டது. திறந்த வெளியிலே காற்று மண்டலத்தில் வேகமாகச் செல்லும்போது புகைப்படங்கள் எடுப்பதுபற்றியும் புதுமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரு ஸெகண்டில் பத்து லக்ஷத்தில் ஒருபங்குக் காலத்துக்குள் தெளிவான புகைப்படங்கள் எடுக்க முடிகிறது.

பலவீனமான மனமுடையவர்களைப் பற்றி ஆழ்ந்து ஆராய்ச்சி செய்துவந்த டாக்டர் லாரென்ஸ் விண்டர் என்பவர் இப்போது தமது முடிவைத் தெரிவித்திருக்கிறார். தாயின் ரத்த வகைக்கும் அவளுக்குப் பிறக்கப்போகும் குழந்தையின் ரத்த வகைக்கும் இணைப்பு இல்லாததனால் பலவீன மனம் ஏற்படுகிறது; இதற்குப் பூரணசிகிச்சை கண்டுபிடிக்க முடியாமற் போனாலும், சீக்கிரத்திலேயே மாந்தர்களுக்குள் பலவீன மனமுள்ள தன்மையைக் குறைக்க வழி செய்ய முடியும் என்று அவர் கூறுகிறார். இது பரம்பரையாக வந்த தன்மையல்ல என்றும், பெற்றோரின் ரத்த சப்பந்தத்தால், பிறக்கப்போகும் குழந்தையினிடத்தில் ஏற்பட்டுள்ள ஒரு நிலைமை என்றும், அவை தமக்குள்ளே ஒன்றோடொன்று மோதும்போது, தகப்பனின் ரத்தகுணத்தைக் குழந்தை கொள்வதனாலே இது ஏற்படுகிறது என்றும் புலப்படுகிறது.

ஆர். எச். (RH) வகையைச் சேர்ந்த ரத்தமுள்ள மனிதன் அந்த வகையான ரத்தம் தேவையாக இருக்கும் பெண்ணை மணப்பதனாலும் இந்தக் கோளாறு உண்டாவதாகத் தெரிய வந்தது.

RH வகை ரத்தமுள்ள ஒரு தாய், தகப்பனிடமிருந்து RH வகையைக்கொண்ட ஒரு குழந்தையைக் கர்ப்பம் தரிக்கும்போது, தாயின் ரத்தத்துக்கும் குழந்தையின் ரத்தத்துக்கும் இடையே போராட்டம் ஏற்படுகிறது. இந்தப் போராட்டத்தின் பயனாக, குழந்தையின் சிவப்பு ரத்தக் கண்ணறைகள் ஓரளவு அல்லது சில சமயங்களில் ஒரேயடியாக அழிந்துவிடுகின்றன.

RH ரத்தவகைகள் பொருந்தாத ஆண் பெண்களைத் தெரிந்துகொள்ள ஒரு ஸீரம் கிடைத்துள்ளது. இவ்விதம் பொருத்தமில்லாத ஜோடிகளைக் குழந்தை பெறாமல் விலக்கிவைப்பதால், ஒவ்வொரு வருஷமும் பிறக்கும் குழந்தைகளில் பாதிப் பேருக்குப் பலவீன மனம் வராமல் தடுக்க முடியும்.

வந்தே மாதரம்

சி. சுப்பிரமணிய பாரதியார்

[பாரதியார் பிறந்த திருநாள் கார்த்திகை மாதம் மூல நக்ஷத்திரம். பாரதி ஜயந்தி கொண்டாட வேண்டுமென்னும் கருத்துடையவர்கள் அவர் பிறந்த நாளைக் கொண்டாடுவார்களென்றே எண்ணுகிறோம். இந்த நவம்பர் மாதம் 19-ஆம் தேதி பாரதி திருநாள், அவர் பிறந்த நக்ஷத்திரம், வருகிறது. தமிழில் நாள் என்பது நக்ஷத்திரத்தையும், திருநாள் என்பது பிறந்த நக்ஷத்திரத்தையும் குறிப்பதை இலக்கிய வழக்கு உணர்ந்தவர்களும் மரபறிந்தவர்களும் உணர்வார்கள்.

காகிதக் கட்டுப்பாட்டினால் தனியே பாரதி மலர் வெளியிட இப்போது வசதி இல்லையாகையால் பாரதியார் கட்டுரை ஒன்றும் அவரைப்பற்றிய கட்டுரை ஒன்றும் இவ்விதழில் வெளியாகின்றன.

பாரதியார் "ஸுஜலாம் ஸுபலாம்" என்று வரும் வங்காளி வந்தேமாதர கீதத்தை மொழிபெயர்த்திருக்கிறார். முதலில் 1905-ஆம் வருஷம் ஒரு மொழிபெயர்ப்பை இயற்றினார், அது முழுவதும் அகவலாகவே இருந்தது; "இனிய நீர்ப் பெருக்கினை" என்று ஆரம்பிப்பது. "முப்பது கோடிவாய் நின்னிசை முழங்கவும், அறுபது கோடிதோள் உயர்ந்துனக் காற்றவும்" என்று ஒரு பகுதி அதில் வருகிறது. அங்கே, 'வங்காளி பாஷையிலே 7 கோடி என்றே கூறியிருக்கின்றது. ஆனால் அது வங்காள மாகாணத்தை மட்டுமே குறிப்பிட்டது. 30 கோடி, இந்தியா முழுமையின் ஜனத்தொகை' என்ற குறிப்பைப் பாரதியார் எழுதினார்.

இந்தப் பாட்டு முதல் முதலில் 1905-ஆம் வருஷம் நவம்பர் மாதம், சென்னையில் நடைபெற்றுவந்த **சக்கரவர்த்தினி** என்ற பத்திரிகையில் வெளியாயிற்று. அதனோடு கீழ்வரும் கட்டுரையையும் பாரதியார் எழுதியிருந்தார். மகேச குமார சர்மா தமிழில் மொழிபெயர்த்து அமைத்த 'ஆனந்த மட'த்தில் பாரதியார் பாடிய இந்தப் பாடலைச் சேர்த்துக்கொண்டார்.

பிறகு பாரதியாருக்குத் தமிழ் மொழிபெயர்ப்பை மாற்ற வேண்டும் என்று தோற்றியது. இரண்டாவது முறை ஒரு மொழிபெயர்ப்பை எழுதினார். "நளிர்மணி நீரும்" என்று ஆரம்பிப்பது அது. முதல் மொழிபெயர்ப்பில் மூலத்தில் உள்ள ஏழு பகுதிகளை ஏழு அகவல்களாக மொழிபெயர்த்திருந்தார். இரண்டாவதில் சந்தத்தை மாற்ற வேண்டுமென்று எண்ணினார். 'முன் ஒரு முறை, முழுதும் அகவலாக ஒரு மொழிபெயர்ப்பு எழுதியிருந்தேன். ஆனால் அது பாடுவதற்கு நயப்படாதாகையால், இப்போது பல சந்தங்கள் தழுவி மொழிபெயர்த்து எழுதப்பட்டிருக்கின்றது' என்ற குறிப்போடு புதிய மொழிபெயர்ப்பு வெளியாகியது. இதில் பாட்டை ஆறு பகுதிகளாகப் பிரித்து 1, 2, 4, 5 என்ற பகுதிகளை அகவலாகவும், 3, 6-ஆம் பகுதிகளைக் கட்டளைக் கலிப்பாவாகவும் அமைத்தார். பாரதியார் எதையாவது ஆற்றலோடு சொல்ல வேண்டுமானால் கட்டளைக் கலிப்பா முன்னே வந்து நிற்கும். இந்தப் புதிய மொழிபெயர்ப்பில் 'முப்பது கோடி' என்ற எண்ணிக்கையே வராமல் "கோடி கோடி குரல்கள் ஒலிக்கவும், கோடி கோடி புயத்துணை கொற்றமார், நீடு பல்படை தாங்கிமுன் நிற்கவும்" என்று பாடியிருக்கிறார்.

இந்த இரண்டு மொழிபெயர்ப்புக்களும் 'ஜாதீய கீதம்' என்ற தலைப்பில் பாரதியார் பாடல் தொகுதியிலே அச்சிடப்பெற்றிருக்கின்றன. பின் வரும் கட்டுரை எந்தத் தொகுதியிலும் வெளியாகவில்லை.

—ப-ர்.]

இப்போது வங்காள மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு ஹிந்துவாலும் ஸாம கீதத்தைப்போல அத்தனை பக்தியுடன் பாடப்பட்டு வருகின்ற "வந்தேமாதரம்" என்ற திவ்ய கீதத்தை நான் மொழிபெயர்க்கத் துணிந்தமை, கர்வங்கொண்ட செய்கையென்று பலர் கருதக்கூடும். ஷி கீதம் எழுதிய பெங்காளி வித்துவானாகிய பங்கிம்சந்திர பாபுவின் தெய்விகச் சொற்களைத் தமிழ்ப்படுத்த எனக்குப் போதிய வன்மை இல்லாவிடினும், தமிழ் நாட்டாருக்கு அச்செய்யுளின் பொருளை உணர்த்த வேண்டும் என்ற ஆசைப் பெருக்காலேயே நான் இதனைத் துணிந்திருக்கிறேன். இவ் வந்தேமாதரம் என்ற கீதம் பங்கிம்சந்திர சட்டர்ஜீயின் நூல்களிலே மிகச்சிறப்புக்

கொண்டதாகிய "ஆனந்தமடம்" என்ற (நாவல்) கதையினிடையே அமைக்கப் பட்டிருக்கின்றது.

"ஆனந்தமடம்" என்ற கதையானது உண்மையாகவே நடந்த சரித்திரத்தைத் தழுவியது. "வாரன் ஹேஸ்டிங்ஸ்" கவர்னர் ஜனரலாயிருந்த காலத்தில் சந்நியாசிகள் சேர்ந்து நடத்திய ஒரு பெருங்கலகத்தைப் பற்றியே மேற்படி நூல்விவரிக்கிறது. பெங்காளத்தில் 1774-5 வருஷத்தில் ஒரு பெரும் பஞ்சம் உண்டா யிற்று. அதற்கு அப்பால் அநேக ஆயிரம் சந்நியாசிகள் ஒன்ருய்க் கூடி அன்னியர் களைத் தமது தாய்ப் பூமியிலிருந்து ஒழித்து விட வேண்டுமென்னும் ஒரே நோக்கத் துடன் கலகஞ்செய்யத் தொடங்கினர்கள்.

இவர்கள் ரகசியமாகச் சந்திக்கும் பொருட்டு ஆள் நுழையக் கூடாத கருங் காட்டில் "ஆனந்தமடம்" என்பதோர் இடம் வைத்திருந்தார்கள். இவர்கள் முகம்மதியப் படைகளைப் பல இடங்களில் தோல்வி செய்ததுமன்றி, ஓர் ஆங்கிலப் பட்டாளத்தையும் முறியடித்தார்கள். எனினும் பிரிட்டிஷார் விடாமல் தாக்கிய தின் பேரில் இந்த வீரசந்நியாசிக் கூட்டத்தார் கடைசியாகப் பிரிந்து போயினர். இந்த வீரத் துறவிகளில் ஒரு வராகிய பவானந்தர் "வந்தேமாதரம்" என்ற ஆரம்பங்கொண்ட அரிய கீதத் தைப் பாடியதாகப் பங்கிம் புலவர் தமது நூலில் அமைத்திருக்கின்ருர்.

25 வருஷங்களுக்கு முன் இவர் இந்தப் பெருநூலைப் பிரசுரித்தபொழுது அந்தக் கீதத்தின் கண்ணே பெரும்பகுதி சமஸ் கிருதமாகவே இருந்தபடியால் அவருடைய நேயர்கள் பலர் அதைக் குறை கூறினர் கள். ஆனால் அம்மகான் அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பொருட்டாக்க வில்லை எழுதி 25 வருஷங்களுக்குள்ளாக மேற்படி திவ்ய கீதம் வங்காளத்து ஜனங் கள் எல்லோருடைய நாவிலும் இருக்கும் என்பதை அந்தக் கவியரசர் அறிந்திருந் தார் போலும்! அதில் இருக்கும் சமஸ் கிருதம் வெகு எளிதாயிருப்பதால் எந்த வங்காளிக்கும் வெகு சுலபமாகப் பொருள் விளங்கி விடும். அதுவுமன்றி அந்தக் கீதமானது பழமையில் முன்னேர்களால் வழங்கப்பட்டு வந்ததும் ஒப்பற்றதுமான சமஸ்கிருத பாஷையோடு தற்காலப் பாஷை கலப்புற்று அமைக்கப்பெற்றிருப்ப தால், பூர்வகாலத்துடன் தற்காலத்தை இணைப்பதாக இருக்கிறது. தாய்த் தேசத்தை அந்தப் பாடலில் தாய் என்று வழங்கியிருப்பது பொருத்தம் உடைத்தே.

பலரால் இக்கீதத்திற்கு எழுதப்பட் டிருக்கும் இங்கிலீஷ் மொழிபெயர்ப் பானது வங்காளி கீதத்திலிருந்து சில இடங்களில் மாறுபடுகின்றது. அவ்வாறு மாறுபட்ட இடங்களில் என்னல் கூடிய அளவு வங்காளிச் சொற்களை அனுசரித் தே தமிழ் மொழிபெயர்ப்பை எழுதியிருக் கிறேன். எனது தமிழ் எத்தனை குறைவு பட்டிருந்த போதிலும் தெய்வப் புலவரா கிய பங்கிம் பாபுவின் மதிப்பைக் கருதித் தமிழ் உலகத்தார் இதனை நன்கு ஆதரிப் பார்களென நம்புகிறேன்.

வந்தேமாதரம்!

அமெரிக்கப் பத்திரிகைகள்

மூக்கில் விரல் வைக்காதீர்கள். அமெரிக்காவில் பத்திரிகைகளின் எண் ணிக்கையையும் எத்தனை பிரதிகள் அச் சிடப்படுகின்றன என்பதையும் பார்த்தால் மலைப்பாகத்தான் இருக்கிறது. இந்தியா வில் அச்சிடப்படும் பத்திரிகைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கப் போனல் அந்த மலைப்புப் பெரிதாகி மயக்கத்தில் கொண்டுவந்து விட்டாலும் விடும்.

ஐக்கிய அமெரிக்காவில் 1754 தின சரிப் பத்திரிகைகள் இருக்கின்றன. 9763 வாரப் பத்திரிகைகள்.

'நியூயார்க் டைம்ஸ்' என்னும் தினபத் திரிகையில் நாலு லக்ஷத்து இருபதினயிரம் பிரதிகள் அச்சிடப்படுகின்றன. நியூயார்க் ஹெரால்ட் டிரிப்யூன் : 339,000. நியூயார்க் வொர்ல்ட் டெலிகிராம்: 390,000. நியூ யார்க் ஜர்னல் அமெரிக்கன்: 641,000. சிகாகோ டெயிலி நியூஸ்: 412,000. ப்ரீ பிரஸ் (டெட்ராயிட்): 369,000.

அங்கே ஒரு கூட்டத்தாரே பல பத்திரி கைகளை வெளியிடுவது உண்டு. 'ஸ்கிரிப்ஸ் - ஹோவர்டு'க்கு 19-நகரங்களில் வெளி யாகும் 21-தினசரிப் பத்திரிகைகள் சொந்தம். 'ஹார்ஸ்ட்' என்ற பத் திரிகைச் சொந்தக்காரர் குழு 14-நகரங் களில் 16-தினசரிப் பத்திரிகைகளை வெளியிடுகின்றது.

பெண்கள் விடுதலை

யதுகிரி அம்மாள்

மாசி மகத்தன்று புருஷர்கள் பெண்கள் எல்லாருமாகப் பெருமாளுடன் கடற்கரைக்குத் தீர்த்தமாடப் போயிருந்தோம். புதச்சேரியில் இந்தக் காட்சி மிகவும் அழகாக இருக்கும்.

ஸ்நானம் ஆன பிறகு வீட்டிற்குச் சென்று சமையல் சாப்பாடு எல்லாம் முடிந்தன. பாரதியார் தம் குழந்தை சகுந்தலாவுடன் நாலு மணிக்கு வந்தார். என் கடைசித் தங்கை ரங்க நாயகியும் அவளும் ஒரே வயசு. இரண்டுபேரும் ஜதையாக விளையாடுவார்கள்.

சகுந்தலா: ரங்கா, உங்காத்தில் என்ன சமையல்?

ரங்கா: கொத்தவரைக்காய்க் கறியமுது, தேங்காய் தயிர்ப் பச்சடி, பருப்பு, திருக்கண்ணமுது.

சகுந்தலா: இன்னிக்கு என்னடீ விசேஷம்?

ரங்கா: சமுத்திரத்தில் குளித்தோம், பெருமாளைச் சேவித்தோம், பருப்பு, திருக்கண்ணமுது சாப்பிட்டோம்.

சகுந்தலா: போம்மா! என்ன பண்டிகை சொல்லேன்.

ரங்கா: எனக்குத் தெரியாதம்மா.

சகுந்தலா: ஐயோ அசடே, இன்னிக்கு மாசி மகம்டீ, மாசிமகம்.

இதுவரை அவர்கள் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்த பாரதியார் கலகலவென்று சிரித்து, "பாப்பா, ரங்கா, இங்கே ஓடி வாருங்கள். நீங்கள் இருவரும் கிளிபோலப் பேசுகிறீர்கள். ஒன்று தங்கக் கிளி, ஒன்று இரும்புக் கிளி. யார் எந்தக் கிளி ஆகிறீர்கள்?" என்றார்.

சகுந்தலா: அப்பா, நான் தங்கக் கிளி, ரங்கா இரும்புக் கிளி சரிதானே, அப்பா?

ரங்கா: இல்லை. நானே தங்கக் கிளி. நீ இரும்புக் கிளியாக இரு.

சகுந்தலா: அதெல்லாம் முடியாதடீ. எங்கப்பாதானே சொன்னார். நான்தான் தங்கக் கிளி.

ரங்கா: போம்மா! நீ சண்டை போடாதே. நாம் இரண்டு பேருமே தங்கக் கிளிகளாக இருக்கலாமே, அம்மா!

பாரதியாருக்கு ஸந்தோஷம் பொறுக்க முடியவில்லை. ரங்காவை எடுத்துக்கொண்டு மெத்தைமேல் இருந்த என் தந்தையிடம் சென்று, "நான் குழந்தைகளின் மனம் நோகும்படி சொன்னேன். இந்தக் குழந்தை சரிப்படுத்திவிட்டது!" என்று கூறி, அவர்களின் சம்பாஷணையைச் சொன்னார். பிறகு எப்பொழுதுமே என் தங்கையைத் தங்கக்கிளி என்றே கூப்பிடுவார்.

பாரதியார்: வா பாப்பா! சகுந்தலா! ரங்கா உன்னையும் தங்கக்கிளி ஆக்கிவிட்டாளே!

சகுந்தலா: போ அப்பா! நான் வருகிறதில்லை. என்னை நீயே வந்து எடுத்துக் கொண்டு போ.

அவர்களை முன்போல விளையாடும்படி விட்டு விட்டார். நான் என் பாடங்களை முடித்துக் கொண்டு அங்கு வந்தேன். அவர், "யதுகிரி, இன்று தங்கம்மா பண்ணின வேடிக்கையைக் கேட்டாயா?" என்றார்.

"என்ன பண்ணினாள்?" என்று கேட்டேன்.

பாரதியார்: கடல் ஸ்நானமாகி, சமையலாகப் பொழுதாகும் என்று வழியில் ஒரு ஹோட்டலுக்கு இருவரையும் அழைத்துப் போனேன். சகுந்தலா சமர்த்தாய்ச் சாப்பிட்டுவிட்டாள். தங்கம்மா ஒப்பவில்லை. அவளுக்குத் தனியாக மணை போட்டு வேறு இட்டிலி கொண்டுவரச் சொன்னேன். அவன் கண்ணாடி லோட்டாவில் தண்ணீர் கொணர்ந்தான். "மேஜை மேல் இருந்த லோட்டாவுக்குப் புளிபோட்டுச் சுத்தம் செய்யவில்லை; வேண்டாம்" என்றாள். கடைசியில் ஒரு வெள்ளி லோட்டாவில் கொணர்ந்தான். இட்டிலி ஜில்லென்று போய்விட்டது. வேறு கொணர்ந்தான். அங்கு எல்லாரும் தங்கம்மாவைப் பார்ப்பவர்களே!

தங்கம்மா, "எனக்கு இதெல்லாம் பிடிக்காது. வாயிலெடுக்க வருகிறது. அவன் ஒரு தொட்டித் தண்ணீரில் அவ்வளவு எச்சில் லோட்டாக்களையும் போட்டான். அப்படியாவது இந்த வயிற்றை நிறைக்காவிட்டால் என்ன? நாம் போகும்போது காபி குடித்துக்கொண்டிருந்த குஷ்டரோகியின் லோட்டாவையும் அதிலேயே போட்டான். ஹோட்டல் ரொம்ப அழுக்கு! மோசமான இடம்! என் பெரியம்மா, உரித்த பலாச் சுளையைத் தீட்டு என்பாள். இங்கே சாப்பிட்டதைப் பார்த்திருந்தால் பொறுக்கவே மாட்டாள்" என்று பதில் சொன்னாள்.

"அவளுக்கு ஹோட்டல் வழக்கமில்லை. எங்களை எங்கள் தாயார் முந்திரிப் பருப்பு மிட்டாய், லெக்காய் மிட்டாய்கூட ஹோட்டலில் வாங்கக் கூடாது என்கிறார்" என்று நானும் பதில் சொன்னேன்.

பாரதியார்: பெரியவர்கள் எப்படியாவது இருக்கட்டும். பிறந்த சின்னக் குழந்தைகளுக்கும் கட்டா?

"நல்ல பழக்கம் பிறந்தபோதே செய்தால் நல்லது அல்லவா?" என்று நான் கேட்டேன்.

பாரதியார்: இனிமேல் தங்கம்மாவை எங்கும் அழைத்துப்போவதில்லை.

"அவள் சொல்லியது சரிதானே? குஷ்ட ரோகி, க்ஷயரோகி, புண் பிடித்தவர்கள் எச்சிலை நாம் குடிக்க வேண்டிய அவசியம் என்ன?" என்று பின்னும் வற்புறுத்தினேன்.

பாரதியார்: நீ அவர்களுக்கு வக்கீலாக வாதாடிப் பயன் இல்லை.

"நீங்கள் சரியாகச் சொல்லுங்கள். நான் வாதாடவில்லை" என்றேன்.

பாரதியார்: நம் பெரியவர்கள் எச்சில் விஷயத்தில் கண்டிப்பான சட்டம் செய்திருப்பது நல்லதே. நாம் ஒரேயடியாக ஜாதி பேதம் செய்வது தப்பு. பிராம்மணன் க்ஷயரோகி, அவனிடம் சாப்பிட்டால் மடி. சூத்திரன் நல்ல திடகாத்திரம் உடையவன், அவனிடம் சாப்பிட்டால் தீட்டு. இன்னொரு வேடிக்கை ரெயிலில் பார்த்தேன். ஒரு சின்ன வண்டியில் நானும், சின்னக் கணவன் மனைவியுமாக இருவரும். ஆக நாங்கள் மூன்றே பேர். கணவனும் நானும் ஊர்க் கதைகளைப் பேசினோம். அவன் காபி எடுத்துவரப் போனான். அப்பொழுது அந்தப் பெண், என்னை ஊர் பெயர் எல்லாம் விசாரித்தாள். கணவன் தலையைக் கண்டதும் வாய்ப்பூட்டு. நான் வெற்றிலை வாங்க இறங்கினேன். அவர்கள் இருவரும் ஸந்தோஷமாகச் சிரித்துக்கொண்டிருந்தார்கள். என் தலையைக் கண்டதும் வாய்ப்பூட்டுச் சாத்தி ஜன்னல் பக்கம் திரும்பிவிட்டாள். இது என்ன வழக்கம்? முட்டாள்தனம்! இல்லாவிட்டால் பேசாமல் இருக்கவேணும். அதைப் பற்றிப் பெரிய பிரசங்கம் பண்ணிவிடவேண்டும்போல இருந்தது, எனக்கு. அடக்கிக்கொண்டேன்.

"செல்லம்மா சொல்லிக்கொண்டே இருந்தார். ரெயிலே ஓடி இருக்காது" என்றேன்.

"ஏன்?" என்று கேட்டார். "அவ்வளவு கூட்டம் கூடியிருக்கும்" என்றேன்.

"அந்தப் பெண் செய்தது சரியா?" என்றார்.

"அடிமைக்கு எஜமானன் முன்பு பேசும் சுதந்தரம் இல்லை. ஆவல் அடக்க முடியாமல் அவன் இல்லாதபோது அந்தப் பெண் உங்களைக் கேட்டாள்" என்று நான் அவள் பழியைக் கழிக்கப் பார்த்தேன்.

பாரதியார்: நல்ல அடிமை! அவளையே கேட்டுவிடவேண்டும் என்று இருந்தேன். வீண் வம்பு எதற்கு என்று சும்மா இருந்தேன்.

"பெண்களின் அடிமை நீங்கினால், அவர்களும் தைரியத்துடன் நாலு பேருடன் பேசுவார்கள். தலையில் அடித்தால் தலைவணங்கி எதிரில் வரும் வண்டி, ஆடுமாடுகள் கூடத் தெரியாமல் போகிறார்கள்" என்று நானும் முறையிட்டேன்.

பாரதியார்: நான் பார், பெண் விடுதலையைப் பற்றிப் பெரிய கட்டுரை எழுதப் போகிறேன். பாட்டுக்களும் பாடுகிறேன். ஆனால் பழைய வழக்கங்களை உதறிவிட வேண்டும்.

"நீங்கள் விடுதலை கொடுத்ததாக ஆகவில்லையே! புதுவிதமான சட்டங்களை அல்லவோ செய்கிறீர்கள்? விடுதலை எங்கு வந்தது?" என்று நான் சற்றுத் தூண்டினேன்.

பாரதியார்: உனக்குத் தெரியாது. பழைய சாஸ்திரங்கள் உதவா. நம் தேசத்தை விட எல்லாத் தேசங்களும் முன் வந்துவிட்டன. நம் தேசப்பெண் அடிமையாய்ப் பின்னே இருக்கிறாள்.

"நீங்கள் என்ன சொன்னாலும் பெண்களால் தான் இந்தத் தேசம் நின்றிருக்கிறது. நீங்கள் மில் வேஷ்டி உடுத்துகிறீர்கள். நாங்கள் தறியில் நெய்த புடைவைகள் உடுத்துக்கொள்கிறோம். வழக்கங்கள், பண்டிகைகள், ஆசாரங்கள், பிரபந்தங்கள், இதிகாசங்கள், புராணங்கள், நீதி நூல்கள் எல்லாம் எங்களால்தான் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. இங்கிலீஷ் பண்டிதர்களான உங்களுக்கு அவைகளைப் படித்துப் பார்க்க வேளை எங்கு இருக்கிறது? யாராவது ஒரு வெள்ளைக்காரன் சொன்னால் அப்போதுதான் உங்கள் தாயார்களை, 'பாராயண புஸ்தகம் இருக்கிறதா?' என்று கேட்பீர்கள்" என்று இந்தியப் பெண்களின் பெருமையை எடுத்துச் சொன்னேன்.

பாரதியார்: பலே! ஐயர் சொன்ன பிரசங்கத்தை அப்படியே விழுங்கிவிட்டிருக்கிறாயே! பரவா இல்லை. குழந்தைகளிடம் தோற்றாலும் சந்தோஷமே. குரு சிஷ்யனிடம் தோற்பது ஒரு பெருமை. அதை நம் தேசத்தில் பலர் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

"நாங்கள் கும்மி அடிப்பதற்குப் புதிய மெட்டில் ஒரு பாட்டுப் பண்ணிக் கொடுங்கள்" என்று கேட்டேன்.

பாரதியார்: இன்று தங்கம்மா கும்மி அடிப்பதற்கு ஒரு பாட்டுச் சொல்லும்படி கேட்டாள். நீயும் அதையே கேட்டாய். நாளைக்கு வரும்போது சொல்லுகிறேன்.

மறுநாள் "கோட்டைமேலே ரெண்டு" என்கிற மெட்டில்,

"பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்பொடு நாம்பாடக்
கண்களி லேஒளி போல உயிரில்
கலந்தொளிர் தெய்வநற் காப்பாமே"

என்ற காப்பையும் எட்டுப் பாட்டுக்களையும் பாரதியார் பாடினார்.

அமெரிக்காவில் தலைவர் தேர்தல்

'அநுஷம்'

அமெரிக்கத் தலைவர் தேர்தல் நவம்பர் மாதம் 7-ஆம் தேதி நடந்துவிட்டது. யாருக்கு வெற்றி? நிச்சயமாகச் சர்ச்சிலுக்குத்தான்.

'இதென்ன? அமெரிக்கத் தேர்தலில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி நின்றாரா என்ன? அவருக்கு வெற்றியாவது?' என்று கேட்கிறீர்கள்? இப்போது நடந்துவரும் யுத்தத்தில் நேச தேசங்களில் இணைபிரியாத இரட்டையாக இருப்பது அமெரிக்காவும் பிரிட்டனும். அந்த இரண்டு நாட்டுத் தலைவர்களும் எத்தனை தடவை எப்படி எப்படி எல்லாம் சந்தித்துப் பேசினார்கள் தெரியுமா? கடலுக்கிடையே சந்தித்தார்கள்; நாட்டுக்கு நடுவில் கூடினார்கள். அட்லாண்டிக் சாஸனத்தைப் பிறப்பித்தார்கள். இவ்வளவு காரியங்க்ளிலும் 'கண் இரண்டும் ஒன்றையே காண்பது' போலப் பிராங்க்ளின், டி. ரூஸ் வெல்ட்டும், வின்ஸ்டன் சர்ச்சிலும் உள்ளம் ஒன்றி இருந்தார்கள் என்றால் ஒருவருடைய வெற்றியை மற்றொருவருடைய வெற்றியாகச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? ஆம், ரூஸ் வெல்ட்டு ஜயித்தார் என்றால் இந்த யுத்தம் முடிகிறவரைக்கும், முடிந்த பிறகு சமாதான மகா நாடுகளும் ஆலோசனைகளும் ஆரவாரத்தோடு நடக்கும் வரைக்கும், சர்ச்சிலின் திட்டம் ஜயிக்கும் என்றுதானே பொருள்? ஆகவே சர்ச்சிலின் வெற்றி என்று அமெரிக்கத் தேர்தல் முடிவைக் கொள்வதில் உண்மைக்கு விரோதமான செய்தி என்ன ஐயா இருக்கிறது?

1940-ஆம் வருஷத் தேர்தலே அமெரிக்காவில் அதுகாறும் நிகழ்ந்திராத புதுமையாக இருந்தது. அதாவது அதுவரைக்கும் அமெரிக்கக் குடியரசுத் தலைவர்களில் யாரும் இரண்டு தடவைகளுக்குமேல், எட்டு வருஷ ஆட்சிக்குமேல், தலைவராக நிற்பதில்லை. அரசியல் திட்டத்திற்கு அது மாறானது. ரூஸ்வெல்ட்டு அந்தச் சம்பிரதாயத்தைத் தகர்த்தெறிந்து மூன்றாம் முறையாகத் தேர்தலுக்கு நின்று வெண்டல் வில்கியை வென்றார். இப்பொழுது புதுமையிலும் புதுமையாக நாலாந் தடவையும் அவருடைய கட்சி அவரை நிறுத்தி வைத்தது.

ஐக்கிய அமெரிக்காவில் தலைமையான அரசியல் கட்சிகள் இரண்டு. ஜனநாயகக் கட்சி (Democratic Party) ஒன்று, குடியரசுக் கட்சி ஒன்று (Republican Party). குடியரசு ஸ்தாபனமாகி நூற்றைம்பது வருஷங்களுக்கு மேலாகியும் ஆதிமுதல் இந்த இரண்டு கட்சிகளே தலைமை பெற்று வருகின்றன. இடையே சில சில்லறைக் கட்சிகள் முளைத்தாலும் அவை இந்த இரண்டு கட்சிகளுக்குள்ளே ஐக்கியமாய் விடுகின்றன.

பிராங்க்ளின் டிலானோ ரூஸ்வெல்ட்டு

ரூஸ்வெல்ட்டு முதலில் 1932-ஆம் வருஷம் தலைவர் பதவியைப் பெற்றார். அவர் ஜனநாயகக் கட்சியினர். அவர் வருவதற்கு முன் நெடுங்காலமாகக் குடியரசுக் கட்சியைச் சார்ந்தவர்களே தலைவராக இருந்து வந்திருக்கின்றனர். 1932-ஆம் வருஷத்திலிருந்து இன்றுவரை அமெரிக்க அரசியல் நிர்வாகத்தில் ஜனநாயகக் கட்சியே செங்கோலை ஏந்தி நிற்கிறது.

வட அமெரிக்காவின் வடபகுதி பிரிட்டிஷ் குடியேற்ற நாடாகிய கானடாவாகும். அதற்குத் தெற்கே உள்ள பகுதியை ஐக்கிய அமெரிக்கா என்று சொல்கிறோம். அதில் 48-மாகாணங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் தனித்தனியே அரசியல் அமைப்பு இருந்தாலும் இந்த 48-மாகாணங்களுக்கும் பொதுவாகச் சமஷ்டி அரசியல் ஒன்று உண்டு. அந்த அரசியல் திட்டத்தால் (Federal Constitution) ஐக்கியப்பட்டிருப்பதனால் அவற்றின் தொகுதியை ஐக்கிய மாகாணங்கள் (United states of America) என்று வழங்குகிறோம்.

அங்கே தனித்தனியே மாகாணத்துக்கு உரிய அரசியல் நிலயங்கள் உண்டு. ஐக்கிய அரசியலை நடத்தும் சமஷ்டி அரசாங்கம் வேறு உண்டு.

சமஷ்டி அரசியல் திட்டத்தில் மூன்று பெரும் பிரிவுகள் இருக்கின்றன. அவை மூன்றும் தனித்தனியே தொடர்பின்றி இருப்பவை. சட்டங்களை இயற்றவும் மாற்றவும் ஆற்றலுள்ளவை பிரதிநிதி சபைகள். ஸெனேட் என்றும், பிரதிநிதி சபை என்றும் அவை இரண்டாக இருக்கும்.

இரண்டாவது பகுதி நிர்வாக சபை. அரசாங்கத்தை நடத்தும் முக்கியமான கருவி இது தான். இதன் தலைவரே அமெரிக்க ஜனாதிபதி. மூன்றாம் பகுதி ஸுப்ரீம் கோர்ட்டு என்னும் நியாயசபை.

ஸெனேட் சபைக்கு ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் இரண்டு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். பிரதிநிதி சபைக்கு மாகாண ஜனத்தொகைக்கு ஏற்றபடி வரையறுத்துள்ள அங்கத்தினர்களை ஜனங்கள் தேர்ந்தெடுப்பார்கள். உதாரணமாக டிலாவேர் (Delaware) என்ற மாகாணத்திலிருந்து பிரதிநிதி சபைக்கு ஒரே ஓர் அங்கத்தினர் தெரிந்தெடுக்கப்படுகிறார். நியூயார்க்கு மாகாணத்திலிருந்தோ 45 பிரதிநிதிகள் சபையில் இடம் பெறுகிறார்கள். இந்த இரண்டு சபைகளையும் காங்கிரஸ் என்று வழங்குவார்கள்.

அமெரிக்கத் தலைவரைத் தனிக்கோல் ஓச்சும் அரசர் என்றுதான் சொல்லவேண்டும். அவர் முப்பத்தைந்து வயசுக்கு மேற்பட்டவராய் அமெரிக்காவில் பிறந்தவராய் இருக்கவேண்டும். அவர் பதவிக்கு வந்தவுடன் நிர்வாக சபையைத் தம் ஆணைக்கு அடங்கி ஒழுகும் நண்பர்களைக் கொண்டு அமைத்துக் கொள்வார். பிரதிநிதி சபையில் தீர்மானிக்கப்படும் ஒன்றை அவர் தம்முடைய விசேஷ அதிகாரத்தால் நிராகரித்துவிடலாம். மிகப் பெரும்பான்மையான வோட்டுக்களால் பிரதிநிதி சபை தலைவரின் போக்கை மாற்றலாம். ஆனால் அநேகமாக அந்த நிலை ஏற்படுவதில்லை.

சமஷ்டி அரசியல் சம்பந்தமான வியவகாரங்களையும், மாகாணங்களுக்கிடையே நேரும் வழக்குகளையும் தீர்ப்பதற்கு ஸுப்ரீம் கோர்ட்டு இருக்கிறது. அதன் ஜட்ஜுகளை நியமிக்கும் அதிகாரம் தலைவருக்கு உண்டு. தலைவர் உத்தியோக நியமன விஷயங்களில் தம்மை ஆதரிப்போர்களை நியமிக்கலாம்.

ஜனாதிபதியே எல்லாச் சேனைகளுக்கும் தனித் தலைவர். அரசாங்க சம்பந்தமான தலைமையோடு நில்லாமல், அவரே தம் கட்சிக்கும் தலைவராக விளங்குவார்.

* * *

ஜனாதிபதிக்கும் காங்கிரஸுக்கும் நேரடியான சம்பந்தம் ஒன்றும் இல்லை. பிரதிநிதி சபையின் தலைவர் வேறு. இன்ன சட்டம் கொண்டுவர வேண்டுமென்று சொல்லலாம்; செய்திகள் அனுப்பலாம். பிரதிநிதி சபையில் தம் கட்சியைச் சார்ந்தவர்களைத் தம்மிடம் அதிருப்தி ஏற்படாமல் கவனித்துக் கொள்வது தலைவரின் பொறுப்பு. இல்லையானால் பிரதிநிதிகள் தலைவரது கட்சியினராக இருந்தாலும் அவரைக் கண்டிக்க முற்படுவார்கள்.

அவர் சம்பிரதாயத்துக்காகப் பொதுக்

ஹாரி ட்ருமான்

காரியங்களில் கலந்துகொண்டு சில கௌரவப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒரு நாள் வாஷிங்டன் நாஷனல் காலரியில் பிரிட்டிஷ் மன்னர் பிரான் படத்தைத் திறந்து வைக்க வேண்டியிருக்கும்; அடுத்த நாள் ஒரு தொண்டர் கூட்டத்தை வரவேற்க வேண்டும்; மறுநாள் தேசீயக் கல்விச் சபையைத் திறந்து வைக்கும்படி இருக்கும். வாஷிங்டனது ஜயந்தி விழாவுக்கு ஒரு பிரசங்கம் செய்ய நேரும்; அடுத்தபடி ஜெப்பர்ஸன் பிறந்த நாளுக்கு ஒரு சொற்பொழிவு தயார் செய்யவேண்டும். அயல் நாட்டிலிருந்து அரச குடும்பத்தைச் சேர்ந்த விருந்தினர் வந்திருப்பார்கள். அவர்களோடு விருந்துண்ண வேண்டும். இப்படி, கணக்கெடுத்துப் பார்த்தால் ஒவ்வொரு நாளும் ஏதாவது வேலை இருந்து கொண்டே இருக்கும். இவைகளுக்கும் தலைவருடைய நிர்வாக வேலைகளுக்கும் சம்பந்தம் ஒன்றும் இல்லாவிட்டாலும் மரியாதையை உத்தேசித்து இவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். ஏதாவது ஒன்றைப் புறக்கணித்தால் காங்கிரஸ் பிரதிநிதிகள் சிலருடைய அதிருப்திக்குப் பாத்திரமாக நேரலாம். அமெரிக்காவில் பொது ஜனங்களுக்குச் சுதந்தரம் அதிகமாகையால் அவர்கள் எப்போதும் கண்குத்திப் பாம்பைப் போல் தலைவரின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருப்பார்கள். ஏதாவது ஒரு சிறு தவறுதல் நேர்ந்துவிட்டாலும் பத்திரிகைகளிலும் ரேடியோக்களிலும் பிரமாதப்படும். ஜனாதிபதியின் மனைவி ஒரு சிறு காரியம் செய்துவிட்டாள் என்றால், அதைப்பற்றிய விமரிசனம் கொட்டை எழுத்துத் தலைப்புக்களுடன் மறுநாள் காலைப் பத்திரிகைகளில் வந்து நிற்கும்.

அமெரிக்காவில் கட்சிகளுக்கு உள்ள ஆற்றல் வரம்பில்லாதது. ஒரு மனிதனை உயர்நிலைக்குக் கொண்டுவரவும் தனி மனிதன் என்ற முறையில் மிக்க புகழ்பெற்ற ஒருவனைப் பதவியிலிருந்து இறக்கவும் அதற்கு ஆற்றல் உண்டு. இந்த வருஷம் நடைபெற்ற ஜனநாயகக் கட்சிக் கூட்டத்தில் துணைத்தலைவர் பதவிக்கு ஹாரி ட்ரூமான் என்பவரைத் தேர்ந்தெடுத்தார்கள். இப்போது துணைத் தலைவராக இருக்கும் ஹென்றி வாலஸ் என்பவர் செல்வாக்கும் அநுபவமும் உடையவர். ட்ரூமானைப்பற்றி யாருக்கும் விசேஷமாகத் தெரியாது. அப்படி இருந்தும் கட்சி பலத்தால் மூலையில் இருந்த ட்ரூமான், வாலஸை அழுத்திவிட்டார். அதாவது ஜனநாயகக் கட்சி ட்ரூமானை நிறுத்த வேண்டுமென்று தீர்மானித்துவிட்டது; அந்தத் தீர்மானத்துக்கு மாறாக ஏதும் நடைபெறுவது சாத்தியமன்று.

தாமஸ் எட்மண்ட் டூயி

பொது மக்கள் நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில்லை. ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் மேல் சபைக்கும் கீழ் சபைக்கும் சேர்ந்து எவ்வளவு பேர்களைப் பிரதிநிதிகளாக அனுப்புகிறார்களோ அவ்வளவு பேர்களைத் தனியே தேர்ந்தெடுப்பார்கள். அவர்களே தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தைப் பெறுவார்கள். அவர்கள் அனைவரும் சேர்ந்த கூட்டத்திற்குத் "தேர்வாளர் கல்லூரி" (Electoral College) என்று பெயர். ஒரு மாகாணத்திற்கு இரண்டு மேல் சபைப்பிரதிநிதிகளும் ஐந்து கீழ் சபைப் பிரதிநிதிகளும் சட்டப்படி உண்டு என்று வைத்துக்கொள்வோம். அந்த மாகாணத்திலிருந்து ஏழு பேர்களைத் தேர்வாளர்களாகத் தெரிந்தெடுப்பார்கள். இப்படிச் சேர்ந்த எல்லாத் தேர்வாளர்களும் தலைவர் தேர்தலுக்காகக் குறிப்பிட்ட தினத்தில் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். இது நேர்முகமான தேர்தலுக்குக் கிட்டத்தட்டச் சமானமான நிலைக்கு வந்துவிட்டது. ஒவ்வொரு மாகாணத்திலும் பெரும்பான்மையான பொது ஜன வோட்டுக்கள் யாருக்குக் கிடைக்கின்றனவோ அவருக்கே அந்த மாகாணத்துத் தேர்வாளர் வோட்டுக்களெல்லாம் சேரும். தேர்வாளரைத் தனியே தேர்ந்தெடுக்கும் வழக்கம் இப்போது நின்று போய்த் தேர்வு வோட்டுக்களை (Electoral Votes) இந்த மாதிரி கணக்குப் பண்ணும் சம்பிரதாயம் வந்திருக்கிறது.

நான்கு வருஷத்துக்கு ஒரு முறை தலைவர் தேர்தல் நடைபெறும். தேர்தலுக்கு முன்பு அரசியல் கட்சி இரண்டிலும் தனித் தனியே தேசியப் பெருங் கூட்டம் நடைபெறும். அப்பொழுது ஒவ்வொரு கட்சியினரும் தங்கள் கட்சியிலிருந்து தலைவர் பத

விக்கும் உதவித் தலைவர் பதவிக்கும் இருவரை நியமிப்பார்கள். இருவரும் ஒரே மாகாணத்தைச் சார்ந்தவர்களாக இருத்தல் கூடாது.

கட்சி நியமனத்தில் போட்டி இருக்கும். கடைசியாகத் தலைவர், உபதலைவர் பதவிகளுக்கு ஒவ்வொருவரை நியமிப்பார்கள். அதன் பிறகு ஒவ்வொரு கட்சியினரும் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிப்பார்கள். அறிவும் பணமும் விஞ்ஞான ஆராய்ச்சியும் பிரசாரத்துக்குத் துணை செய்யும். அதற்காகவே ஒவ்வொரு கட்சியிலும் ஸ்தாபனங்கள் உண்டு. மாகாணந்தோறும் ஜில்லாத்தோறும் அதற்குக் கிளைகள் இருக்கும். வாக்குவன்மையும், மக்களின் உள்ளப்பண்பை அறியும் ஆற்றலும் படைத்த பலர் அந்த ஸ்தாபனத்தில் வேலை செய்வார்கள். ஊர் தோறும், வீடுதோறும் பிரசாரம் நடைபெறும். மேடைப் பிரசங்கங்கள் நூற்றுக்கணக்காக நடக்கும். ரேடியோ மூலமாக நடைபெறும் பிரசாரம் வேறு. பத்திரிகைகளைக் கருவியாகக்கொண்டு எதிர்க்கட்சியினர் கொள்கைகளை அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த்து அலசிக் கண்டிக்கும் பிரசார வகை வேறு. நம்முடைய நாட்டைப்போல வெறும் பிரசங்கத்திலே மயங்கிவிடுபவர்களல்ல அமெரிக்கர்கள். அங்கே கல்வியறிவு அதிகம். அரசியல் உணர்ச்சி அபரிமிதமானது. வண்டியை இழுக்கும் கூலிக்காரனுக்கு அரசியல் ஞானம் போதுமான அளவில் இருக்கும். “உனக்கு யார் தலைவராக வந்தால் நல்லது? என்ன காரணத்தால் அவரை நீ தேர்ந்தெடுக்கிறாய்?” என்று அவனைக் கேட்டால் அவன் தன் விருப்பத்தைத் தக்க காரணங்களுடன் சொல்வான். “ராமன் ஆண்டால் என்ன? ராவணன் ஆண்டால் என்ன?” என்ற இந்திய மனப்பான்மைக்கும் அமெரிக்க அரசியலுணர்ச்சிக்கும் வெகு தூரம். “ராமன்தான் ஆளவேண்டும்; இன்ன இன்ன காரணத்தால் அவன்தான் ஆட்சிக்கு உரியவன்” என்று அடித்துச்சொல்லத் தெரிந்தவன் அமெரிக்க வாக்காளன். வாக்காளனது உரிமையைப் பறிக்க அமெரிக்க அரசியலில் இடம் இல்லை. இம்முறை பர்மா வனங்களில் போர் புரியும் ராணுவப் படைஞர்களுக்கு வாக்குச் சீட்டு அனுப்பி வண்டிகளிலும் விமானங்களிலும் சேகரித்தார்கள்.

ஜனநாயகக் கட்சித் தலைவராகிய ரூஸ்வெல்ட் தம்மைப் பின்பற்றுவோர்கள் அடங்கிய ‘நியூ டீல்’ என்ற ஸ்தாபனத்தை நிறுவியிருக்கிறார். அரசாங்க நிர்வாகிகளெல்லாம் இந்த நியூடீலைச் சார்ந்தவர்களே. ரூஸ்வெல்ட்டு பதவிக்கு வந்த புதிதில் வேளாளர்களுடைய நன்மையிலும் தொழிலாளர்களுடைய நன்மையிலும் கருத்தைச் செலுத்தத் தொடங்கினார். இரண்டாம் முறையும் அவர் தலைவராக வந்தார். இரண்டாவது முறை ஆட்சிக்காலம் முடிவடையும் தருணத்தில் (1939) பெரும்போர் மூண்டுவிட்டது. 1940-ஆம் வருஷம் நடந்த தேர்தலில் ரூஸ்வெல்ட்டு வெற்றி பெற்றதற்கு முக்கியமான காரணம் அவர் யுத்த விஷயத்தில் திட்டமான நோக்கம் கொண்டிருந்ததும், சர்வதேசக் கொள்கையில் அவர் கருத்து நன்மையளிப்பதாக இருந்ததுமேயாகும். அவரை எதிர்த்த குடியரசுக் கட்சியினர் ஒதுங்கி நிற்க விரும்புபவர்கள் (Isolationists). உலகம் முழுவதும் படர்ந்து வரும் யுத்த வெள்ளத்திற்கு ஒதுங்கி நின்று தப்பமுடியாது என்ற கருத்தை ரூஸ்வெல்ட்டு வற்புறுத்திவந்தார். அதன் பிறகு இந்த நான்கு வருஷங்களில் ரூஸ்வெல்ட்டு மிக மிக உயர்ந்துவிட்டார். நேசக் கட்சித் தலைவர்களிடம் அவருக்கு உள்ள செல்வாக்கு அளவு கடந்தது.

ஸெனெட் சபை அங்கத்தினராகிய ட்ரூமான் என்பவரை ஜனநாயகக் கட்சியினர் உதவித் தலைவர் ஸ்தானத்துக்கு நியமித்தார்கள். உதவித் தலைவருக்கு நிர்வாகத்தில் அதிகப் பொறுப்பு ஒன்றும் இல்லை. அவர் மேல்சபைக்குத் தலைவர். தலைவர் இறக்கும்படி நேர்ந்தால் உதவித் தலைவரே தலைவராகிவிடுவார். இப்படி இதுவரையில் அமெரிக்காவில் எழு துணைத் தலைவர்கள் ஜனாதிபதிகளாக வந்திருக்கிறார்கள்.

ரூஸ்வெல்ட்டுக்கு எதிராக நின்றவர் நியூயார்க்கு கவர்னரான தாமஸ் இ. டூயி என்பவர். இவர் இளைஞர். நல்ல வாக்குவன்மை உடையவர். குடியரசுக் கட்சிக் கொள்கைகளில் ஊறியவர். உதவித்தலைவர் ஸ்தானத்துக்குக் குடியரசுக் கட்சியால் நியமிக்கப்பட்டவர் ஒஹியோ மாகாணக் கவர்னராகிய ஜான் பிரிக்கர் என்பவர்.

ஜான் பிரிக்கர்

யுத்த விஷயத்தில் இரண்டு கட்சியினருடைய கொள்கையிலும் பெரிய வேறுபாடு ஒன்றும் இல்லை. யுத்தம் நன்றாக நடைபெற வேண்டும் என்பதிலும், அதற்கு எவ்வகையான தடையும் இருக்கக்கூடாது என்பதிலும் இரு சாராரும் ஒரு முகமான கருத்

தடையவர்களே. ஆனல் உள்நாட்டு விவகாரத்தில்தான் குடியரசுக் கட்சியினர் ரூஸ்வெல்ட்டின் ஆட்சியைக் குறை கூறினர்கள். உத்தியோகமில்லாத் திண்டாட்டத்தை நிவர்த்திக்கப் போதியபடி ரூஸ்வெல்ட்டு முயற்சி செய்யவில்லை, அநாவசியமாகச் செலவைப் பெருக்கிக் கொண்டே போகிருர், காங்கிரஸின் தீர்ப்பைச் சில முக்கியமான சமயங்களில் தம்முடைய விசேஷ அதிகாரத்தால் நிராகரித்துவிட்டார், மாகாணங்களுக்குப் பாதகமான செயல்களை யதேச்சாதிகாரத்தால் செய்தார் - என்று பல குறைகளைக் குடியரசுக் கட்சியினர் எடுத்துக் கூறினர்.

அவர்களுடைய எதிர்வாதங்களோடு வேறு சில பிரதிகூலங்களும் ரூஸ்வெல்ட்டை எதிர்த்து நின்றன. தென்பகுதி மாகாணங்களில் உள்ளவர்கள் ரூஸ்வெல்ட்டு தங்களுடைய நலன்களில் குறுக்கிட்டுப் பாதகத்தை உண்டாக்கினர் என்றூர்கள். மேற்கு மாகாணங்களில் இருப்பவர்கள் அவர் தங்களை அடியோடு மறந்துவிட்டார் என்றும், அரசாங்கப் பதவிகளில் தம் மாகாணத்தினருக்கு ஒன்றையும் அளிக்கவில்லை என்றும் குறை கூறினர். சில தொழிலாளர் சங்கங்கள் சில சில்லறை விஷயங்களில் அவர் திருப்திகரமாக நடந்துகொள்ளவில்லை என்று சிணுங்கின. ஜர்மனி, இத்தாலி முதலிய பிற நாட்டு ரத்தக்கலப்புள்ள ஜாதியினர் பலர் அமெரிக்காவில் குடியேறி யிருக்கிருர்கள். யுத்தம் முடிந்தவுடன் ஜர்மனிய மக்களை அடியோடு அழுத்தி வைப்பது போன்ற திட்டத்தை ரூஸ்வெல்ட்டு வகுக்க விரும்புகிருர் என்று எண்ணி அந்த ஜாதியினர் அவருக்கு ஆதரவு அளிக்கத் தயங்கினர். நீகிரோ ஜாதியினர், "அடிமைப் பட்ட நாடுகளை விடுவிக்கக் கங்கணம் கட்டிக் கொள்பவருக்கே எங்கள் வாக்கு" என்று பயமுறுத்தினர். இவ்வளவு எதிர்ப்புக்களுக்கும் இடையே, இது வரையில் அமெரிக்காவின் சரித்திரத்திலே இல்லாத புதுமையாக, நான்காம் முறை தலைவர் பதவிக்காக நின்று ரூஸ்வெல்ட்டு ஜயித்தார்.

இந்த மகா யுத்தத்தில் அமெரிக்கா ஒரு பெரிய ஆயுதசாலையாக விளங்குகிறது. நவீன விஞ்ஞானத்தின் உதவியால் புதிய புதிய கருவிகளை ஓய்வின்றி உண்டாக்கிக் கொடுப்பதற்கு எவ்வளவு ஜனசக்தி வேண்டும்? அந்த ஜனசக்தியைத் தூண்டி உருப்படுத்தி ஆயுத விளைவை உண்டாக்கியது ரூஸ்வெல்ட்டின் ஆற்றல். ஆதலால் ஜர்மானிய யுத்தத்தில் அமெரிக்காவின் பங்கு போற்றத்தக்கது.

போர் இதோடு நின்றுவிட்டதா? ஜர்மனி போனல் ஜப்பான் இருக்கிறது. ஜப்பானுக்கு நேர் வைரி அமெரிக்கா. ஜப்பானை அடக்கும் காரியம் அமெரிக்காவுக்கு மிகவும் அவசியமானது. ஆகவே அமெரிக்கா இனிமேல்தான் தனக்காகப் போரிட வேண்டும்.

இந்த நிலையில், ஓடும் குதிரையை நடுவழியில் தடுத்து நிறுத்துவதுபோல, ரூஸ்வெல்ட்டை நிறுத்தி, வேறு புதிய குதிரையைக் கொண்டு வரலாமா? அது விஷப் பரீக்ஷையாக முடிந்தால் அமெரிக்காவின் சுதந்தர வாழ்வுக்கே மோசம் வந்துவிடுமே! யுத்தத்தின் மர்மங்களெல்லாம் தெரிந்து, நேச நாட்டுத் தலைவர்களோடு நெருங்கிப் பழகி, ஐக்கிய தேசிய முன்னணியைப் பலப்படுத்தும் யோசனைகளைச் சொல்லிச் சிறந்து நிற்கும் ரூஸ்வெல்ட்டை விடுவதற்கு இதுவா சமயம்?—இதை ஜனநாயகக் கட்சியினர் வற்புறுத்தினர்கள்.

தலைவர் பதவிக்கு இந்த முறை ஏற்பட்ட போட்டி மிகவும் கடுமையானது. கடைசித் தேதி வரையில் இன்னர் ஜயிப்பார் என்ற நிச்சயம் இல்லாமல் இருந்தது. தேர்தல் ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக நடந்தன. நியூ யார்க்கு நகரத்தில் தேர்தல் தினத்தன்று மதுபானக் கடைகளை யெல்லாம் மூடிவிட்டார்கள். அமைதியை நிலைநாட்டப் போலீஸார் உதவினர். அன்றைப் பத்திரிகைகள் உலக யுத்தத்தை அறவே மறந்துவிட்டன என்றுதான் சொல்ல வேண்டும். தேர்தல் செய்திகள் நிமிஷந்தோறும் வெளியாயின. கடைசியில் ரூஸ்வெல்ட்டு ஜயித்தாரென்று தெரிந்தது. தாமஸ் டியேயே அதை ஒப்புக்கொண்டார். அமெரிக்கர்கள் ரூஸ்வெல்ட்டை நான்காவது தடவையாக ஆரவாரத்தோடு, "தனிப் பெருந்தலைவ, எங்களுக்குத் தலைமை பூண்டு போரை நடத்துக" என்று வாழ்த்தி வேண்டுகிருர்கள்.

செலவு

"வரவு சிலவுக் கணக்கைப் பார்த்தால் வயிறு நிரம்பிப்போகுமா?" என்று எழுதும்போது 'சிலவு' என்பது தவறு. கையிலிருந்து செல்வதனல் செலவு என்று ஆயிற்று. நம் கைக்கு வருவதனல் வரவு, வரும்படி, வருமானம் என்று சொல்வதற்கு எதிராக, செல்வதைச் செலவு என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டது. செலாவணி என்ற சொல்லும் 'செல்' என்பதன் அடியாக உண்டானதே. 'காசு செல்லாது, செல்லும்' என்று வழங்குவதும் நாணயத்தின் பிரயாணம் அதில் உள்ள குற்றத்திற்காகத் தடைப்படுவதையும், இல்லாவிட்டால் தடையின்றிப் பிரயாணம் செய்யும் என்பதையும் குறிப்பதேயாகும்.

1

முற்றத்தில் இருந்த துளசி மடத்தில் கொழு கொழுவென்று வளர்ந்திருந்த துளசிச் செடியைப் பார்த்துக்கொண்டே, கையைத் தலைக்கு உயரம் வைத்துக்கொண்டு தாழ்வாரத்தில் வெறும் தரையில் படுத்துக் கொண்டிருந்தாள் ரமணி. அவளுக்கு அது எட்டாவது மாதம். உடலெல்லாம் லேசாக வெளுத்திருந்தது. சாதாரணமாகக் கருத் தரித்திருக்கும் பெண்களின் உடலில் காணப்படும் காந்தியும் மினுமினுப்பும் அவளிடம் காணப்படவில்லை. மெலிந்துபோய் ரத்தம் வற்றி வெகு பலவீனமாக இருந்தாள்.

தன்னுடைய விரலில் இருந்த சிறிய முத்து மோதிரத்தைக் கழற்றி, அதைப் பார்த்துக் கொண்டே ஏதோ யோசித்தபடி படுத்திருந்தாள். அந்த மோதிரம் அவள் மனத்தில் கடந்துபோன நாட்களின் எண்ணங்களை எழுப்பியது. கணக்கற்ற நினைவுகள் அவள் சிந்தனையில் அலை அலையாக மோதின. அளவற்ற பெரு வேதனையின் சின்னங்கள் அவள் விழிகளில் தேங்கிக் கிடந்தன. கண்களை மூடுவதும் திறப்பதுமாகத் தன்னுடைய எண்ணங்களிலேயே அமிழ்ந்து போய்க் கிடந்தாள். விழிக் கடைகளிலிருந்து ஒவ்வொரு துளி கண்ணீர் உருண்ட பொழுது மட்டிலும் கைகளைத் தூக்கிச் சேலைத் தலைப்பால் விழிகளைத் துடைத்துக்கொண்டாள்.

கொல்லைப்புறத்துக் கிணற்றிலிருந்து ஜலம் எடுத்துக்கொண்டு உள்ளே வந்த அவள் அத்தை மீனாக்ஷி, ரமணி படுத்திருப்பதைக் கண்டதும் ஒரு நிமிஷம் அப்படியே ஸ்தம்பித்து நின்றாள். பிறகு சட்டென்று சமையலறைக்குள் சென்று குடத்தை இறக்கி வைத்துவிட்டு அவசரமாகத் தாழ்வாரத்துக்கு வந்தாள்.

“ரமணி! ரமணி!”

சட்டென்று கண்களைத் திறந்தாள் அவள்.

“ரமணி! இதென்ன இது? பூரண கர்ப்பிணி, நீ! இப்படி இந்தக் கட்டாந்தரையில் படுத்துக்கொள்ளலாமா? அத்திம்பேர் பார்த்தால் என்னைக் கொன்றுவிடுவாரே! எழுந்திரு!...அதோ அந்த ஊஞ்சலில் போய்ப் படுத்துக்கொள்ளு! எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு, ஈரத்தலையுடன் நன்றாகப் படுத்துக்கொண்டாய், வெறும் தரையில்!” என்று அன்பாகக் கடிந்து கொண்டாள்.

ரமணி வெறுப்புடன் சிரித்தாள்.

அவளுடைய விழிகளில் மின்னிய வேதனை மீனாக்ஷியின் நெஞ்சை ஒரு கணம் என்னவோ சங்கடம் செய்தது.

ரமணி மெல்ல அங்கிருந்து எழுந்தாள்.

மீனாக்ஷி அவள் தலையைத் தொட்டுப் பார்த்தாள். முழங்காலில் இடித்த ரமணியின் கூந்தலிலிருந்து ஜலம் சொட்டிப் போய்த் தரையில் தேங்கியிருந்தது.

“ஐயோ! இப்படியும் ஒரு பெண் இருக்குமா, ஈசுவரா!” என்று முணு முணுத்துக் கொண்டே, மீனாக்ஷி கொடியிலிருந்து ஓர் உலர்ந்த சவுக்கம் எடுத்து வந்து அவள் தலையைத் துவட்டலானாள். பிறகு உள்ளே போய் ஒரு தம்ளரில் காபியுடன் திரும்பி வந்தாள்.

“ரமணி! இந்தா, இதில் ஒரு வாய் சாப்பிடு. காலையிலிருந்து ஒன்றுமே சாப்பிடவில்லையே! இப்படி ஒன்றுமே ஆகாரம் இல்லாமல் இருந்தால் உன் உடம்பு என்னத்துக்கு ஆகும்? நீ நல்ல படியாய்ப் பெற்றுப் பிழைக்க வேண்டாமா?” என்று கெஞ்சினாள்.

“அத்தை, எனக்கு ஒன்றும் வந்துவிடாது! நீங்கள் ஏன் வீணாகக் கவலைப் படுகிறீர்கள்?” என்று வறண்ட குரலில் கூறிக்கொண்டே அந்தக் காபியை வாங்கிக் குடித்தாள் ரமணி.

“ஐயோ, அப்படிச் சொல்லாதேடியம்மா! அந்தப் பாவிதான் எங்கள் வாயில் மண்ணைப் போட்டானென்றால், நீயாவது எங்கள் கண் மூடும்வரைக்கும் ஆயுசுடன் க்ஷேமமாயிருக்கவேண்டுமே என்று இராப் பகல் நானும் உன் அத்திம்பேரும் விசாரப்

பட்டுத் தவிப்பது அந்த அம்பிகைக்குத்தான் தெரியும்! என்னவோ, அந்த அம்பாள்தான் எங்கள் வயிற்றில் பாலை வார்க்க வேண்டும்'' என்று கூறிக்கொண்டே ரமணி தன்னிடம் கொடுத்த தம்ளரை வாங்கிக்கொண்டு உள்ளே போனாள் மீனாக்ஷி.

2

மீனாக்ஷியம்மாளின் தம்பி பெண் ரமணி. அவள் பிறந்தவுடனேயே தாய் இறந்துவிட்டாள். இரண்டு வருஷங்களுக்குள் தகப்பனையும் இழந்து அநாதையானாள். அது முதற்கொண்டு மீனாக்ஷியம்மாளிடமே வளர்ந்துவந்தாள். மீனாக்ஷியின் கணவர் நாராயணையரும் அவளிடம் வெகு பிரியமாக இருந்தார்.

அவர்களுக்கு ஒரே மகன் சுந்தரராமன். ரமணியைக் காட்டிலும் ஆறு வயசு மூத்தவன். இரு குழந்தைகளும் ஒரு கொம்பில் பூத்த மலர்களென வெகு அந்நியோந்யமாய் வளர்ந்து வந்தார்கள்.

ரமணி நல்ல சிவப்பாய் வெகு அழகாக இருப்பாள். தலையில் அலையலையாய்ப் படிந்திருந்த அடர்ந்த கூந்தலை வாரிப் பின்னி, அவளுக்கு வேளைக்கு ஒரு தினுசாக அலங்காரம் செய்து அழகு பார்த்து ஆனந்திப்பாள் மீனாக்ஷி. சுந்தரமும் நல்ல அழகு. இருவரும் கல்யாணம் செய்துகொண்டால் வெகு பொருத்தமான ஜோடியாக இருக்குமென மீனாக்ஷியும் நாராயணையரும் அடிக்கடி பேசிக்கொண்டார்கள்.

சுந்தரம் படிப்பில் வெகு சூடிகையாக இருந்தான்; எல்லா வகுப்பிலும் அவன்தான் முதல். மீனாக்ஷியும் அவள் கணவரும் அப்படியே பூரித்துப் போனார்கள்.

“எல்லாம் நம் ரமணியின் அதிருஷ்டம்'' என்பாள் மீனாக்ஷி.

“ரமணி, உனக்காக நான் என்ன வாங்கி வந்திருக்கிறேன், பார்'' என்று கூறி, அந்த முத்து மோதிரத்தை எடுத்து, அவளுடைய இடது கை விரலில் இட்டான்.

இதைக் கேட்ட சுந்தரம் சிரிப்புடன் அவளைப் பார்ப்பான். ரமணி வெட்கத்துடன் உள்ளே ஓடிவிடுவாள்.

சுந்தரம் மேற்படிப்புக்காகச் சென்னைக்குப் போனான்.

லீவு நாட்களுக்கு ஊருக்கு வரும்பொழுது ரமணிக்கு விதவிதமான கலர் ரிப்பன்களும் உயர்ந்த கதைப் புஸ்தகங்களும் வாங்கிவருவான். அத்தான் தனக்காக வாங்கிவந்த பொருள்களையெல்லாம் தன் தோழிகளிடம் காட்டிப் பெருமையடித்துக் கொள்வாள் ரமணி.

அந்த வருஷப் படிப்பில் சுந்தரராமன் மிகவும் உயர்தரமாகத் தேர்ச்சி பெற்றதால் கவர்ன்மெண்டிலிருந்து அவனை இரண்டு வருஷ மேற்படிப்புக்காகச் சீமைக்குச் செல்லும்படி அவனுக்கு உபகாரச் சம்பளம் அளித்தார்கள்.

மீனாக்ஷியம்மாளுக்கும் நாராயணையருக்கும் பெருமை பிடிபடவில்லை. ரமணிக்கும் உள்ளூறச் சந்தோஷந்தான். ஆயினும் அத்தான் கடல் கடந்து சீமைக்குப் போகவேண்டுமே என்று ஒருபுறம் கவலையும் அவள் நெஞ்சில் உதித்தது.

சுந்தரம் சென்னையிலிருந்து வந்தான். வரும்பொழுது உயர்ந்த நல்முத்துக்கள் பதித்த மோதிரம் ஒன்று ரமணிக்கு வாங்கிவந்தான்.

சீமைக்குச் செல்லவேண்டிய ஏற்பாடுகளெல்லாம் வெகு வேகமாகத் தயாராகிக் கொண்டு வந்தன. மகனுக்காக விதவிதமான ஊறுகாய்களும் பக்ஷணங்களும் தயார் செய்தாள் மீனாக்ஷி.



சுந்தரராமன் சீமைக்குச் செல்லுமுன்பாக அவனுக்கும் ரமணிக்கும் விவாகத்தை முடித்துவிட வேண்டுமென்பது மீனாக்ஷியம்மாளின் எண்ணம். கணவரிடம் தன் அபிப்பிராயத்தைக் கூறினாள்.

ஆனால் சுந்தரம் அதற்குச் சம்மதிக்கவில்லை. சீமையிலிருந்து வந்தபிறகு செய்து கொள்வதாகக் கண்டிப்பாய்க் கூறினான்.

நாராயணையர் பம்பாய்வரையில் சென்று அங்கிருந்து அவனைக் கப்பலேற்றி அனுப்பிவிட்டுத் திரும்புவதாக ஏற்பாடாயிற்று.

புறப்படுவதற்கு முதல் நாள் மாலை மீனாக்ஷியும் நாராயணையரும் அர்ச்சனை செய்விப்பதற்காகக் கோயிலுக்குப் போயிருந்தார்கள்.

வீட்டில் சுந்தரத்தையும் ரமணியையும் தவிர ஒருவரும் இல்லை.

துளசிமாடத்துக்கு விளக்கேற்றிவிட்டுத் தாழ்வாரத்தில் புஷ்பம் தொடுத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் ரமணி. அவள் மனத்தில் என்ன என்னவோ யோசனைகள்.

'அத்தான் சீமைக்குப் போனால் தனக்குக் கடிதம் எழுதுவானோ, என்னவோ? அங்கே இருக்கும் பெண்களெல்லாம் நிரம்ப அழகிகளாம். பேச்சினாலேயே புருஷர்களை மயக்கிவிடுவார்களாம். ஒரு வேளை தன்னை அடியோடு மறந்துவிட்டால்—? சீச்சீ! அத்தானா அப்படிச் செய்வான்? ஒருநாளும் மாட்டான்!' இவ்வாறு பல பல எண்ணங்கள்.

அவள் பின்னால் ஏதோ சப்தம். சட்டென்று திரும்பிப் பார்த்தாள். சுந்தரம் அங்கே நின்றுகொண்டு அவளையே புன்சிரிப்புடன் பார்த்துக்கொண்டிருந்தான். நாணத் திரையிட்ட முகத்துடன் தலைகுனிந்தாள் ரமணி.

மெல்ல வந்து அவளருகே உட்கார்ந்தான். அவன் கையில் ஒரு சிறிய பச்சை வெல்வெட்டுப் பெட்டி இருந்தது.

"ரமணி! இதோ பார், உனக்காக நான் என்ன வாங்கி வந்திருக்கிறேன் என்று!" பெட்டியைத் திறந்து அதற்குள்ளிருந்து ஓர் அழகிய நல்முத்து மோதிரத்தை வெளியில் எடுத்தான். விளக்கு வெளிச்சத்தில் மோதிரம் மின்னிக் கண்களைப் பறித்தது. ரமணி அதை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

அவளுடைய இடதுகை மோதிரவிரலில் அதை இட்டான். பிறகு அவளுடைய

கையை இப்படியும் அப்படியுமாகப் பிடித்து அழகு பார்த்தான்.

"ரமணி!—"

மெல்லத் தலை நிமிர்ந்தாள் அவள். வெட்கத்தினால் அவள் முகம் சிவந்தது.

"ரமணி, நான் திரும்பி வரும்வரையில் இந்த மோதிரத்தை நீ பத்திரமாய் வைத்துக்கொள்ளவேண்டும்!"

நாணத்துடன் தலையசைத்தாள் அவள்.

சுந்தரம் அவளை விழுங்கி விடுவதுபோலப் பார்த்தான்.

"ரமணி, எனக்குக் கடிதம் போடுவாய் அல்லவா? என்னை மறந்துவிடமாட்டாயே?"

"அத்தான்!"

நிமிர்ந்து அவனை நோக்கினாள். அவள் விழிகளில் நீர் தேங்கியிருந்தது.

"சுந்தரம்!—ரமணி!—கதவைத் திற."

கோயிலுக்குப் போனவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள்.

ரமணி ஓடிப்போய்க் கதவைத் திறந்தாள்.

மறுதினம் மாலை சுந்தரமும் நாராயணையரும் புறப்பட்டு விட்டார்கள். மீனாக்ஷி தன் மகனைக் கண்ணீருடன் வழியனுப்பினாள். ரமணி கண்ணீர் விடவில்லை. ஆனால் அவள் நெஞ்சம் மட்டிலும் ஒரு கற்பாறையினால் அழுத்தப்படுவதுபோல் இருந்தது. சுந்தரமும் வண்டி தெருக்கோடியில் மறையும்மட்டிலும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றான்.

3

சுந்தரம் சீமைக்குப் போன புதிதில் ஒரு வருஷம் வரையில் ஒழுங்காகக் கடிதம் வந்துகொண்டிருந்தது. அப்பொழுதெல்லாம் தன் மனத்திலுள்ள ஆசையையெல்லாம் கொட்டி ரமணிக்குத் தனியே கடிதம் எழுதுவான். அவளும் பதில் போடுவாள். அவன் கொடுத்த மோதிரத்தைப் பெட்டிக்குள் வைத்துக்கொண்டு அவனைப் பார்ப்பதுபோல் தினமும் பார்த்துக்கொண்டிருந்தாள்.

சுந்தரம் திரும்பி வந்து தன்னை மணந்துகொண்டு நடத்தப்போகும் இன்ப வாழ்க்கையை மனசில் கற்பனை செய்து மகிழ்வாள். ஒரு வருஷம் ஓடிச்சென்றது.

சுந்தரத்தினிடமிருந்து வரும் கடிதங்களின் எண்ணிக்கை குறையலாயிற்று. படிப்பு மும்முரமென்று மீனாக்ஷியம்மாளும் நாராயணையரும் சமாதானப் படுத்திக் கொண்டார்கள். ஆனால் ரமணியின் மனம் மட்டும் சமாதானம் அடையவில்லை. அவள் இருதயத்தில் விவரிக்க முடியாத சங்கடம் தோன்றி வதைக்கலாயிற்று.

நாளடைவில் அவளுக்கு எழுதுவதையே அடியோடு நிறுத்திவிட்டான். ரமணியின் மனம் புழுங்கியது.

அவள் வருந்துவதை மீனாக்ஷியும் நாராயணையரும் அறியாமல் இல்லை. ஆனால் அவளுடன் வருந்துவதைத் தவிர்த்து வேறு ஒன்றும் செய்ய அவர்களாலும் இயலவில்லை.

மீனாக்ஷியம்மாளின் மனத்தில் பல பல சந்தேகங்கள் தோன்றின. ஆனால் அவற்றைக் குறித்து அவள் வாய்விட்டு ஒரு வரிடமும் பேசவில்லை.

இவ்வாறு இன்னொரு வருஷமும் சென்றது.

சுந்தரம் பரீக்ஷயில் தேர்ச்சி பெற்று விட்டதாகவும் அடுத்த மாதக்கப்பலில் திரும்புவதாகவும் எழுதியிருந்தான்.

அன்றைத்தினம் ஆடிவெள்ளிக்கிழமை. வீடு முழுவதும் மெழுகிப் பளிச்சென்று கோலமிட்டுச் செம்மண் கட்டியிருந்தாள் மீனாக்ஷி. வாசலில் மாவிலைத் தோரணம் பச்சென்று விளங்கியது. விடியுமுன்பே எழுந்து ரமணிக்கு ஸ்நானம் செய்வித்து, அவள் கூந்தலைச் சீவிச் சிக்கெடுத்துப் புஷ்பம் சூட்டினாள். காபி பலகாரம் தயார் செய்துவைத்துவிட்டுச் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். இடையிடையே வண்டி வந்துவிட்டதா என்று வாசலுக்கு வந்து வந்து பார்த்தாள்.

பல பல சந்தேகங்களுக்கிடையே தன்னை அலங்கரித்துக்கொண்டாள் ரமணி.

எல்லாம் முடிந்து நிலைக்கண்ணாடியில் பார்த்துக்கொண்டபொழுது, தான் நல்ல அழகி என்றே அவள் மனத்தில் பட்டது. பெட்டியைத் திறந்து சுந்தரம் கொடுத்த முத்து மோதிரத்தை எடுத்து அணிந்து கொண்டாள். பிறகு மனத்தில் ஒரு வகைத் திருப்தியுடன் கூடத்துக்கு வந்தாள்.

"ரமணி, ஒரு தட்டில் கொஞ்சம் ஆரத்தி கரைத்து வை!—அப்புறம் அந்தக் குத்துவிளக்கை ஏற்றி வைத்து விட்டுப் படங்களுக்கெல்லாம் அந்த மல்லிகைப் புஷ்பத்தைச் சாத்து" என்றாள் மீனாக்ஷி.

ரமணி அவள் சொன்னதை எல்லாம் செய்துவிட்டு வாசலுக்குப் போனாள். தெருக்கோடியில் கல்கல் என்ற ஓசையுடன் வண்டி வருவது தெரிந்தது. "அத்தை! வண்டி வந்துவிட்டது!" என்று பரபரப்புடன் கூறிக்கொண்டே உள்ளே ஓடிவந்தாள்.

"வந்துவிட்டதா?"

மீனாக்ஷி கைக் காரியத்தை அப்படியே போட்டுவிட்டு ஆரத்தித் தட்டைக் கையில் எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்தாள்.

இதற்குள் வாசலில் வந்து நின்ற வண்டியிலிருந்து முதலில் நாராயணையரும் பின்னால் சுந்தரமும் இறங்கினார்கள். 'ஹாட்டும் ஸூட்டு'மாய்ப் பெரிய துரைபோல் இருந்தான் சுந்தரம்.

மீனாக்ஷியின் மனம் பூரித்தது. ஆரத்தி சுற்றிக் கொட்டினாள். அக்கம் பக்கத்து ஸ்திரீகளெல்லாம் வாசலுக்கு வந்து நிற்பதைக் கண்டு அவளுக்குக் கட்டிலடங்காத சந்தோஷம் பொங்கியது.

விம்மிய நெஞ்சத்துடன் காமிரா உள் ஜன்னல் வழியாக இதையெல்லாம் பார்த்துக்கொண்டு நின்றாள் ரமணி.

சுந்தரத்தின் விழிகள் யாரையோ தேடுவனபோல் நாலுபுறமும் அலைந்தன. எல்லாரும் உள்ளே போனார்கள்.

ரமணி வெட்கப்பட்டுக்கொண்டு காமிரா உள்ளேயே இருந்தாள். சுந்தரம் தன்னைக் கூப்பிட்டபிறகுதான் வெளியே வருவது என்பது அவள் எண்ணம். மீனாக்ஷி அம்மாளுக்கும் அவன் ரமணியைக் குறித்து இதுவரையில் ஒன்றும் கேட்காதது, சற்று ஆச்சரியமாகவே இருந்தது; இருக்கட்டும், பார்ப்போம் என்று இருந்தாள்.

பேச்சு வார்த்தை எல்லாம் முடிந்தது.

சுந்தரம் ஸ்நானம் செய்துவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தான். மீனாக்ஷி அவனுக்கு இலையைப் போட்டு விட்டு, "ரமணி! எங்கே இருக்கிறாய்?" என்று கூப்பிட்டு விட்டுத் தன் மகனை நோக்கி, "சுந்தரம்! நம் ரமணியைப் பார்க்கவில்லையே நீ?" என்று பெருமையாய்க் கேட்டாள்.

காமிரா உள்ளிலிருந்து வந்த அழகியை ஆச்சரியத்துடன் பார்த்தான் அவன்.

ரமணியின் இருதயம் படபடவென்று அடித்துக்கொண்டது. மெல்லத் துணிந்து புன்சிரிப்புடன் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். ஆனால் அடுத்த விநாடியே அந்தப் புன்னகை மறைந்தது.

சுந்தரத்தின் விழிகளில் இருந்த அர்த்தமற்ற பார்வை அவள் மனத்தைக் குழப்பியது. எதையோ பறிகொடுத்தவள் போல ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றாள். வெடித்து வந்த அழுகையைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு மின்னல்போலச் சமையலறைக்குள் நுழைந்து மறைந்தாள்.

மீனாக்ஷியம்மாள் ஒன்றும் புரியாமல் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். சுந்தரத்தின் நடத்தையெல்லாம் ஏதோ மர்மமாக இருப்பது அவளுக்கும் தெரிந்தது. சகிக்க இயலாத சந்தேகங்கள் அவள் மனத்தை வாட்டின.

சுந்தரம் வந்த மூன்றாவது நாள் இரவு: வாசலில் வந்து நின்ற வண்டியில் அவனுடைய பெட்டி படுக்கைகள் ஏற்றப்பட்டிருந்தன. ஊஞ்சற் பலகையில் உட்கார்ந்திருந்த நாராயணையரின் வாயிலிருந்து வசைமாரி பொழிந்துகொண்டிருந்தது. அவரெதிரே சுவரில் சாய்ந்து தலை கவிழ்ந்தபடியே கண்ணீர் உகுத்துக்கொண்டிருந்தாள் மீனாக்ஷி.

காமிரா உள்ளில் குப்புறப் படுத்து நெஞ்சு விரியும் வேதனையுடன் அழுதுகொண்டிருந்தாள் ரமணி.

"அயோக்கிய ராஸ்கல்! வெள்ளைக்காரியையா கல்யாணம் செய்துகொண்டான்? அதை முன்பே எழுதுவதற்கு என்ன? வீணாக இந்தப் பெண்ணை இங்கே காக்க வைத்துக் கொண்டிருந்தோமே! பிள்ளையாம் பிள்ளை! அணிற்பிள்ளை! சீ! மானங்கெட்ட பதர்! இறங்கட்டும், என் வீட்டை விட்டு. பச்சைக் கிளியாட்டம் பெண்ணை இங்கே விட்டுவிட்டு எவளோ கூத்தாடிச்சியை வரித்துக்கொண்டானாம்! குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பு! இவன் கெட்ட கேட்டுக்குச் சீமைப் படிப்பு ஒன்றுதான் குறைச்சலாக இருந்தது! வெள்ளைக்காரியைத்தான கட்டிக்கொண்டானே, இங்கே எதற்காக வந்தான்? உன் அழகுப் பிள்ளையிடம் அதை முதலில் கேளு!" என்று தம் மனைவியிடம் இரைந்தார் நாராயணையர்.

சுந்தரம் மாடிப்படிகளில் இறங்கி வந்தான். மீனாக்ஷி தலைநிமிர்ந்து பார்த்தாள். சுந்தரம் வெறித்த பார்வையுடன் அவளை நோக்கிவிட்டு வண்டியில் போய் ஏறிக்கொண்டான். ஒருவரும் பேசவில்லை.

கல்கல்லென்ற ஓசையுடன் வண்டி புறப்பட்டுச் சென்றது.

ரமணி ஜன்னலில் எழுந்து நின்று கண்ணீரால் மறைத்த பார்வையுடன் தெருக்கோடியில் மறையும் வண்டியை நோக்கினாள். அவள் கையைத் தூக்கியவுடன் அவள் விரலில் இருந்த மோதிரம் பளிச்சென்று மின்னியது. அதைக் கழற்றிப் பெட்டியில் வைத்துவிட்டுப் படுக்கையில் போய்ப் படுத்துக்கொண்டாள்.

ஒரு வருஷம் எப்படியோ சென்றது. ரமணியை ஒரு யோக்கியனான வரனுக்கு விவாகம் செய்வித்தார், நாராயணையர். அவனுக்குச் சென்னையில் ஒரு கம்பெனியில் வேலை. ரமணியை அன்பாகவே நடத்தி வந்தான். தன் மனைவி எல்லா விதத்திலும் உயர்ந்த குணங்களுடையவளாக இருப்பது அவனுக்குத் திருப்தியாக இருந்ததாயினும், அவள் மற்றப் பெண்களைப் போல அல்லாமல் எப்பொழுதும் உத்ஸாகமற்றிருப்பது மட்டும் அவனுக்குத் தெரியாத மர்மமாகவே இருந்தது. அவளுக்குச் சினிமா, டிராமா, பீச்சு முதலிய ஒன்றிலும் ஆவல் இல்லை. ஒவ்வொரு தடவை தன் கணவனின் வற்புறுத்தலுக்காக அவள் அவனுடன் வெளியே கிளம்பியபோதிலும், அவளுக்கு வீட்டில் இருப்பதுதான் அதிகப் பிரியம் என்பதை நாளடைவில் தெரிந்துகொண்டு அவளைத் தொந்தரவு செய்வதையே அவன் விட்டுவிட்டான்.

தன் கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சிறிதும் வழுவாமல் நிறைவேற்றிவந்தாள் ரமணி. ஆகவே அவர்களுடைய இல்வாழ்க்கை நிம்மதியாய் நடந்துகொண்டிருந்தது.

ரமணிக்கு விவாகமான நான்காவது வருஷம், கர்ப்பமாக இருப்பதாகச் சங்கதி தெரியவந்து மீனாக்ஷியம்மாளும் நாராயணைய

ரும் சென்னைக்குப் போய் அவளை அழைத்து வந்தார்கள். வளைகாப்பு, சீமந்தம் முதலிய வைகளெல்லாம் விமரிசையாய் நடந்தன. ரமணியை அவர்களிடம் விட்டுவிட்டு அவள் கணவன் புறப்பட்டுப்போனான்.

ரமணியின் எதிரில் அவர்கள் சுந்தரத்தைக் குறித்த பேச்சே எடுப்பதில்லை. அவளும் அவனைக் குறித்து ஒன்றும் பேசுவதில்லை. ஆனால் அவள் நெஞ்சம் மட்டிலும் வேதனையால் வெந்து கருகிக்கொண்டிருந்தது. இரவு பகலாய் அவள் இருதயத்தை வாட்டிப் பிழிந்த துயரம் ஒவ்வொரு நாள் அவளையும் மீறிக் கண்ணீர் வெள்ளமாக வெடித்துப் பொங்கிவிடும். அப்பொழுதெல்லாம் அவள் தன் அறையில் போய்ப் படுத்துக் கொண்டு மணிக்கணக்காக அழுது தீர்ப்பாள். அவளுடைய உடல் நிலை மீனாக்ஷி அம்மாளுக்கும் நாராயணையருக்கும் மிகுந்த கவலையைக் கொடுத்தது. அவள் சீராகப் பெற்றுப் பிழைக்க வேண்டுமே என்று அவர்கள் இரவு பகல் தெய்வத்தை வேண்டிக்கொண்டிருந்தார்கள்.

4

ஒரு மாதம் சென்றது. பிரசவ ஆஸ்பத்திரியின் 'ஸ்பெஷல் வார்டு' ஒன்றில் கட்டிலில் படுத்திருந்தாள் ரமணி. அவளுக்குத் தன் நினைவே இல்லை. ஒரு விசை அவள் போட்ட கூச்சல் ஆஸ்பத்திரியையே கிடுகிடுக்கச் செய்தது.

அவள் பக்கத்தில் இருந்த ஒரு நாற்காலியில் கண்ணீருடன் உட்கார்ந்திருந்த மீனாக்ஷி இந்தக் கண்ணராவியைக் காணச் சகியாமல் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள்.

கட்டிலைச் சூழ்ந்திருந்த டாக்டர்களும் நர்ஸ்களும் அவளை அநுதாபத்துடன் நோக்கினார்கள்.

வார்டுக்கு வெளியே இருந்த தாழ்வாரத்தில் இருப்புக் கொள்ளாமல் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தார் நாராயணையர்.

ரமணியின் நிலைமை நிமிஷத்துக்கு நிமிஷம் கேவலமாகிக்கொண்டே வந்தது. வயிற்றில் சிசு மரித்துவிட்டமையால் சஸ்திரப் பிரயோகம் செய்து சிசுவை வெளிப்படுத்தினாலல்லது அவள் பிழைப்பது துர்லபமென டாக்டர்கள் கூறிவிட்டார்கள்.

மீனாக்ஷியம்மாள் ஒன்றும் தெரியாமல் கைகளைப் பிசைந்துகொண்டு உட்கார்ந்திருந்தாள்.

நாராயணையர் ரமணியின் கணவனுக்குத் தந்தி கொடுத்துவிட்டார்.

ரமணியின் கூச்சல்களும் அலறல்களும் அடங்கிவிட்டன. கைகால்களைப் போட்டது போட்டபடி விழிகளை மூடி அசைவற்றுக் கிடந்தாள். மீனாக்ஷியம்மாள் இன்னது செய்வதென்றே தெரியாமல் ரமணியின் மார்பில் கைவைத்தபடியே பதறிப்போய் உட்கார்ந்திருந்தாள்.

சஸ்திரப்பிரயோகத்துக்கு வேண்டியவைகளெல்லாம் வெகு விரைவில் தயாராகிவிட்டன. மீனாக்ஷியம்மாளைச் சற்று நேரம் வெளியே போயிருக்கும்படியாகக் கூறிவிட்டார்கள். ரமணியின் அழகிய முகத்தைக் குனிந்து பார்த்துவிட்டுப் பார்வையை மறைத்த கண்ணீருடன் வெளியே போனாள் மீனாக்ஷியம்மாள்.

ஆபரேஷன் செய்யப்போகும் பெரிய டாக்டர் தமக்கு உரிய உடுப்புக்களுடன் உள்ளே நுழைந்தார். நர்ஸ்களும் உதவி டாக்டர்களும் தயாராக நின்றார்கள். மேலே மின்சார விசிறி கரகரவென்று சுழன்றது.

டாக்டர் கட்டிலருகில் வந்து நின்றார். அசைவற்றுக் கிடந்தாள் ரமணி. அவள் முகம் போர்வையில் பாதி மறைந்திருந்தது. அதை விலக்கிவிட்டு அவள் அழகிய முகத்தை நோக்கிய டாக்டரின் நெஞ்சம் விம்மியது. ஒரு கையால் தம் மார்பை அழுத்திக்கொண்டார். சுற்று முற்றும் நோக்கினார். அங்கே கூடியிருந்த மற்ற டாக்டர்களும் நர்ஸ்களும் அவரை ஆச்சரியத்துடன் நோக்கினார்கள்.

இச்சமயத்தில் ரமணி தன் கையைத் தூக்கிப் போட்டாள். அவள் விரலில் இருந்த மோதிரம் மின்சாரவிளக்கு வெளிச்சத்தில் பளிச்சென்று மின்னியது. டாக்டர் சுந்தரராமனின் சந்தேகம் அடியோடு விலகியது.

நீர்த்திரையிட்ட விழிகளுடன், "ரமணி! ரமணி!" என்று முணுமுணுத்தார். ரமணியின் விழிகள் திறந்தன. ஒரு கணம் அவற்றில் ஆச்சரியக்குறி!

"அத்தான்!" மெல்ல வெளிவந்தது அவ் வார்த்தை.

"ரமணி!"

"உன் மோதிரம்!...இதோ!....பார்த்தாயா?..உன்னுடைய முத்துமோதிரம்!" கையைத் தூக்கினாள். அவள் முகத்தில் ஒரு முறுவல் நிலவியது. உயிரற்ற அவள் கரம் கீழே விழுந்தது.

டாக்டர் சுந்தரராமன் முகத்தை மூடி நாற்காலியில் தொப்பென்று சாய்ந்தார். மற்ற டாக்டர்களும் நர்ஸ்களும் சப்தம் செய்யாமல் ஒவ்வொருவராக அங்கிருந்து மெல்ல வெளியே போய்விட்டார்கள்.

சற்றுப் பொறுத்து டாக்டர் சுந்தரராமன் சிவந்த கண்களுடன் வெளியே வந்தார்.

வெளியே மீனாக்ஷியம்மாள், "ரமணி! ஐயோ! ரமணி! என்னை விட்டுப் போய் விட்டாயே!" என்று அலறியது அவர் செவிகளில் விழுந்தது.

தம் கையில் இருந்த முத்து மோதிரத்தை நீர் மல்கும் கண்களுடன் நோக்கினார். பிறகு அதைத் தம் சட்டைப்பையில் போட்டுக் கொண்டு மௌனமாய்ப் பங்களாவை நோக்கி நடக்கலானார்.

பகுத்தறிவைச் சீர்தூக்கல்

ப. ஸ்ரீ. நாயுடு

[மனிதன் மற்றப் பிராணிகளைக் காட்டிலும் சிறந்தவன் என்பதற்கு அவனுக்கு உள்ள ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு காரணமாகிறது. பகுத்தறிவிலும் பல படிகள் இருக்கின்றன. அவற்றை எப்படி அளவிட்டு வேறு பிரித்து அறிவது என்பதை இக்கட்டுரை எடுத்துச் சொல்கிறது. ஸ்ரீ ப. ஸ்ரீ. நாயுடு அவர்கள் அலாஹாபாத் பல்கலைக் கழகத்தில் மானச சாஸ்திர ஆசிரியராக இருப்பவர். தமிழ்நாட்டுக்கு வெளியே இருந்தும் அவர் தமிழை மறவாமல் இக்கட்டுரை எழுதியிருக்கிறார்.
—ப - ர்.]

"என்ன! என்ன! பகுத்தறிவையா சீர்தூக்கப்போகிறீர்! போம், ஐயா, போம்! நீர் சுத்த......" என்று இரைந்தார் என் நண்பராகிய விஞ்ஞான நிபுணர்.

"பொறும், சற்றுப் பொறும்."

"பொறுக்கவாவது! பகுத்தறிவு திரவ பதார்த்தமா, அல்லது திட பதார்த்தமா? நீட்டலளவையா, நிறுத்தலளவையா கொண்டு சீர்தூக்கப்போகிறீர்? நீர் கொண்டிருக்கும் அபிப்பிராயம் சுத்தப் பிசகு" என்று திட்டமாய்க் கூறினார் விஞ்ஞான நிபுணர்.

"சற்றே பொறும். உஷ்ணம் எவ்விதப் பதார்த்தம்? திரவமா திடமா? மின்சாரம் எப்படிப்பட்ட பொருள்? இவற்றை நீர் அளவிடவில்லையா?"—நான் கேட்ட கேள்விகள் விஞ்ஞான சாஸ்திரியாரைத் தூக்கிவாரிப்போட்டன. அவர் விழித்தார்.

"உஷ்ணமும் மின்சாரமும் திரவ பதார்த்தங்களும் அல்ல, திட பதார்த்தங்களும் அல்ல. ஆயினும் அவை அளவைகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும், மின்சாரத்தின் அந்தரங்க இயற்கையை அறிந்த விஞ்ஞானி ஒருவரும் இல்லை. அப்படி இருப்பினும் மின்சார குணங்களை அளவிட்டுப் பயன் பெற்று வருகிறோம் அல்லவா?"

"ஆம், நீர் சொல்வது உண்மைதான். ஆனால் உஷ்ணத்தை அளவிட உஷ்ணக்கருவியும் (Thermometer,), மின்சாரத்தை அளவிடத் தகுந்த கருவிகளும் (Volt-meter, Ammeter) உள்ளன."

"சற்றே ஆராய்ந்து பாரும். இக்கருவிகள் எதை அளக்கின்றன? உஷ்ணமும் மின்சாரமும் சூக்ஷ்ம குணங்கள். அவற்றை நேரில் காணவும் முடியாது, அளக்கவும் முடியாது. அவற்றின் சார்பாக வஸ்துக்களில் தோன்றும் குணங்களைத்தான் நாம் அளவிடலாம். அதாவது அவைகளின் கிரியைகள் அல்லது சேஷ்டைகளின் பயனாகத் தோன்றும் குணங்களைத்தான் அளவிடலாம். உதாரணமாக, உஷ்ணத்தின் சேஷ்டையின் பலனாகத் தெர்மாமீடரினுள் தோன்றும் பாதரஸம் மேல் கிளம்பும். இந்தக் கிளர்ச்சியைத்தான் நாம் உஷ்ண அளவாகக் கொள்கிறோம். அதைப்போலவே, பகுத்தறிவை அளவிட மானச சாஸ்திரிகள் நுட்பமான கருவிகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர். அந்தக் கருவிகளின் குணாதிசயங்களை விரிவாக எடுத்துரைக்கிறேன். சற்றே அமைதியுடன் கேளும்" என்றேன்.

விஞ்ஞான நிபுணரின் கண்கள் விரிந்தன, உதடுகள் விலகின, நெற்றி பரவிற்று; இவ்விதமாக ஆச்சரியக் குறிகள் பல தோன்றின அவர் முகத்தில். 'மானச சாஸ்திரம் என்று ஒன்று உண்டா? அது மற்றச் சாஸ்திரங்களைப் போல் கருவிகளையும் உபயோகித்து வருகிறதா? மனவேறுபாடுகளைப் பிரத்தியக்ஷ திருஷ்டிரூபமாகக் காணலாமா?' என்ற வினாக்கள் அவர் மனத்தில் தோன்றின.

சென்ற 20 அல்லது 30 வருஷங்களுக்குள் மானச சாஸ்திரிகள் கண்டுபிடித்த கருவிகளும், அக்கருவிகளின் உபயோகார்த்தமாக அவர்கள் சேகரித்திருக்கும் சாஸ்திர அறிவும் விஞ்ஞானிகளைத் திகைக்கச் செய்யும். மானச சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கும் கருவிகள் எல்லாவற்றிலும் மிகவும் நுட்பமானது பகுத்தறிவைச் சீர்தூக்கும் கருவியே.

பகுத்தறிவு திரவபதார்த்தமும் அல்ல, திட பதார்த்தமும் அல்ல. ஒருவனுடைய நடவடிக்கைகளைக் கொண்டே நாம் அவனுடைய பகுத்தறிவின் நிலைமையை ஊகிக்கக்கூடும்.

பகுத்தறிவைச் சீர்தூக்கும் கருவியை முதல் முதலாகக் கண்டுபிடித்தவர் ஆல்பிரெட் பினே (Alfred Binet) என்ற பெயர் கொண்ட பிரான்ஸ் தேசத்து மானச சாஸ்திரியரே. இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில், பாரி (Paris) நகரத்தின் பாடசாலைகளில் கல்வி பயின்று வந்த சிறுவர் சிறுமிகளில் அநேகரின் மனத்தின்கண் பகுத்தறிவு குன்றியிருப்பதாகத் தோன்றிற்று. இந்த விஷயம் பிரான்ஸ் தேசத்துக் கல்வி மந்திரியின் மனத்தில் கலக்கத்தை உண்டாக்கியது. அவர் உடனே பிரசித்தி பெற்ற மானச சாஸ்திரியாரான பினே என்பவரை வரவழைத்துத் தம் மனக்கலக்கத்தை அவரிடம் கூறி, குறையைத் தீர்க்குமாறு வேண்டினர். பினே தம்மால் இயன்றதைச் செய்வதாக ஒப்புக்கொண்டார். பின்பு சிறுவர் கல்வி கற்கும் பள்ளிகள்தோறும் சென்று, பினே அவர்களுடைய பகுத்தறிவை அளவிடக்கூடிய கருவி ஒன்றைக் கண்டுபிடிக்க முயன்றார். முதல் முதலாக அவர் கவனித்த விஷயம் யாதெனில்: சிறு குழந்தைகளின் தேகம் நாளொருமேனியும்பொழுதொருவண்ணமுமாக எப்படி வளர்ச்சி அடைகிறதோ, அதைப் போலவே, மனமும் வளருகிறது. ஆகையால் வயசு முதிர முதிர, குழந்தையின் நடவடிக்கைகளும் வேறுபாடு அடைகின்றன. இவ் வேறுபாடுகள் மன வளர்ச்சியைக் குறிக்கும். இவ்வேறுபாடுகளை ஒருவாறு அளவிடுவோமாயின் அந்த அளவே மன வளர்ச்சியையும் எடுத்துக்காட்டும். இவ்வுண்மையைக் கண்டறிந்து பினே, தம்முடைய நுண்ணறிவை உபயோகித்துச் சீர்தூக்கும் கருவியைச் சிருஷ்டித்தார். ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமிகளைப் பரிசோதித்து, அவர்களை வயசுவாரியாகப் பிரித்து, வயசுக்கேற்ற சோதனைகளை அமைத்தார். இந்தச் சோதனைக் கருவிகள் மிகவும் வியக்கத்தக்கனவாயினும், மிகவும் எளியனவாகும். பரிசோதனைக் கருவி எவ்விதமானதென்று விசாரிக்குங்கால், அது குறிக்கப்பட்ட வயசுள்ள சிறு குழந்தையொன்று எளிதில் விடை பகரக்கூடிய கேள்விகளையோ, அல்லது எளிதில் செய்யக்கூடிய காரியங்களையோ உட்கொண்டது என்று புலப்படும். உதாரணமாக, மூன்று வயசுள்ள குழந்தை:

1. குறிக்கப்பட்ட முக உறுப்புக்களைக் காட்ட வேண்டும்.

2. காட்டப்பட்ட படத்தில் இருக்கும் வஸ்துக்களின் பெயரைச் சொல்லவேண்டும்.

3. வீட்டில் உபயோகத்தில் இருக்கும் சாமான்களின் பெயரைச் சொல்லவேண்டும்.

4. இரண்டு ஸ்தானங்கள் கொண்ட எண்களை ஒப்பிக்க வேண்டும்.

எட்டு வயசுள்ள சிறுவர் சிறுமியருக்கு இடப்பட்டிருக்கும் தொழில்கள்:

1. காட்டப்பட்ட நாணயங்களின் மதிப்பைக் கூறல்.

2. 5 ஸ்தானமுள்ள எண்களைப் படித்தல்.

3. குறிப்பிட்ட இரண்டு பொருள்களின் பேதங்களை எடுத்துக் காட்டுதல்: மரம், அடுப்புக்கரி - மரக்கலம், புகைவண்டி - இரும்பு, வெள்ளி முதலியன.

இவ்விதமாக வயசுக்குத் தக்கவாறு கேள்விகளும் காரியங்களும் தொகுக்கப்பட்டு, பகுத்தறிவைச் சீர்தூக்கும் கருவி உண்டாக்கப்பட்டது. இப்படி வயசுக்கு ஏற்ற கருவிடைக் கண்டுபிடித்தபின், பினே "பகுத்தறிவு ஈவு" என்று கூறப்படும் அளவைக் கண்டுபிடித்தார். எட்டு வயசுள்ள சிறுவன் ஒருவனைக் கவனிப்போம். அவன் எட்டு வயசுக்கென்று ஏற்படுத்தப்பட்ட பரிசோதனையில் தேர்ச்சி பெறுவானாயின் அவன் மன வயசும் 8 ஆகும். ஆகவே, அவனுடைய பகுத்தறிவு ஈவு 100 ஆகும். ஏனெனில்

$$\text{பகுத்தறிவு ஈவு} = \frac{\text{மன வயசு}}{\text{பிறப்பு வயசு}} \times 100 = 8/8 \times 100 = 100.$$

இந்த ஈவே (இதை நாம் இனி "ப. ஈ." என்று குறிப்பிடுவோம்) பினே கண்டுபிடித்தவை எல்லாவற்றிலும் மிகவும் மேன்மையுடையதாகும். எட்டு வயசுள்ள சிறுவன் 6-ஆம் வயசு சோதனையில் மாத்திரம் தேர்ச்சி பெற்று, 7-ஆம் வயசு சோதனையில் தேர்ச்சியடையாமற் போவானாயின், அவன் "ப. ஈ" 75 ஆகும்.

$$\text{ப. ஈ.} = \frac{\text{மன வயசு}}{\text{பிறப்பு வயசு}} = \frac{(\text{ம.வ})}{(\text{பி.வ})} = \frac{6}{8} \times 100 = 75.$$

அதுபோலவே, 12-ஆம் வயசு சோதனைகளில் தேர்ச்சி பெறும் 8 வயசுள்ள சிறுவனுடைய

$$\text{ப. ஈ.} = \tfrac{12}{8} \times 100 = 150 \text{ ஆகும்.}$$

இந்தச் சோதனைகளினின்றும் அறியத் தக்க விஷயம் யாதெனில்:

90-ஆம் எண்ணினின்று 110-ஆம் எண் வரை ப. ஈ. பெற்றுள்ள சிறுவர் சிறுமிகள் மத்திய தரப் பகுத்தறிவைப் படைத்தவராவர். 110-க்கு மேல் ப. ஈ. பெற்றுள்ளவர்கள் மேல்தரப் பகுத்தறிவுள்ளவர்கள். 90 - க்குக் கீழ் உள்ள ப. ஈ. கீழ்த்தரப் பகுத்தறிவைக் குறிக்கும்.

ஆயிரக்கணக்கான குழந்தைகளின் பகுத்தறிவைப் பினே அளவிட்டார் என்பதை நாம் முன்னமே கூறினோம். பினேவிற்குப் பிறகு ஆங்கில நாட்டிலும், அமெரிக்காவிலும், ஜெர்மனியிலும் பகுத்தறிவைச் சீர்தூக்கும் காரியத்தில் பல மானச சாஸ்திரிகள் ஈடுபட்டனர். அவர்கள் நடத்திய ஆராய்ச்சிகளின் பலனை, பிறந்த முதல் மாதத்தினின்று, 20 - ஆம் வயசு

வரையில், பகுத்தறிவை அளவிட்டு, பகுத்தறிவின் ஈவைக் கண்டுபிடிக்கும் கருவி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படி, பல்வேறு தேசங்களில் லக்ஷக்கணக்கான குழந்தைகளைப் பரிசோதனை செய்ததன் பயனாகச் சில முக்கியமான விஷயங்கள் வெளிப்பட்டன.

இவற்றுள் முதலாவதாக நாம் கூறத்தக்கது: "ஒரு குழந்தையின் ப. ஈ. மாறுபடுவதே இல்லை. அது ஸ்திரமாக நிற்கிறது." ஈவு, மன வயசைப் பிறப்பு வயசால் வகுக்கப்பட்டு வரும் தொகை என்று கூறினோம். குழந்தையின் வயசு வளர்ந்துகொண்டே வருகிறது. அது போலவே மனவயசும் வளர்ந்துவருகிறது. ஆனால், ம. வ./பி. வ. என்ற பின்னம் ஒரே எண்ணைக் குறிக்கும். இதன் காரணத்தைக் குறித்துச் சர்ச்சை செய்வதில் பிரயோசனம் இல்லை. அது கடவுள் செயல்.

இரண்டாவதாக நாம் கவனிக்கத்தக்க விஷயம், நாள்தோறும் கூலி சம்பாதித்து வாழ் நாட்களைக் கழிக்கும் கூலியாளர், வியவசாயிகள் முதலியோரின் குழந்தைகள் கீழ்த்தரப் ப. ஈ. படைத்தவர்கள்; வியாபாரிகள், குமாஸ்தாக்கள் முதலியோரின் குழந்தைகள் மத்தியதரப் ப. ஈ. பெற்றவர்களாவர்; உயர்தரப் ப. ஈ. படைத்தவர் உயர்தர உத்தியோகங்களில் அமர்ந்திருப்பவர்களின் குழந்தைகளே. ஆகவே பெற்றோரின் தொழிலுக்குத் தக்கவாறு குழந்தைகளின் பகுத்தறிவு அமைந்திருக்கிறது.

மூன்றாவதாக வெளிப்படும் விஷயம் என்னவெனில்: பகுத்தறிவு சமமாய்ப் பங்கிடப்பட்டிருக்கிறது. அதாவது, ஒரு கிராமத்திலோ, அல்லது பட்டணத்தின் ஒரு பகுதியிலோ, 100 குழந்தைகளைப் பரிசோதிப்போமாகில், 46 பேர் மத்தியதரப் (90-110) ப.ஈ. கொண்டவர்கள்; 24 பேர் உயர்தரப் (110-140) ப.ஈ. பெற்றவர்கள்; 3 பேர் மிகவும் மேலான (140-க்கு மேல் உள்ள) ப. ஈ. பெற்றவர்கள்; இதைப்போலவே, 24 பேர் கீழ்த்தரப் (60-90) ப. ஈ. வும், 3 பேர் மிகவும் தாழ்ந்த (60-க்குக் கீழ்) ப. ஈ. வும் பெற்றவர்கள். எத்தொழிலையும், எவ்வயசையும் எடுத்துக் கொண்டாலும் மேற் குறிப்பிட்டபடியே ப. ஈ. அமைக்கப்பட்டுள்ளது. ஒரு கூட்டத்தில் நான்கு பேர் மேலான நுண்ணறிவைப் பெற்றவர்களாயின், நான்கு பேர் முழு முட்டாள்களாய் விளங்குகின்றனர். இதுவும் கடவுள் செயலே.

பகுத்தறிவைச் சீர்தூக்குவதன் பயனாக, கல்வி போதனா முறைகள் சீர்திருத்தப்பட்டுவருகின்றன. குழவிகளைப் ப. ஈ. வாரியாகப் பிரித்து, வகுப்புகள் கூட்டுவோமாயின், கல்வி கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியருக்கும் ஏற்படும் சௌகரியங்களை நாம் கூற வேண்டுவதில்லை. மேலும், அநேக உத்தியோகங்களுக்கு, மேலான ப. ஈ. வேண்டியிருக்கிறது. ஒருவரை உத்தியோகத்தில் அமர்த்துமுன் அவருடைய பகுத்தறிவைப் பரிசோதித்து, அவருடைய ப. ஈ.-க்கு ஏற்ற உத்தியோகத்தை அளிப்போமாயின், அதனால் உண்டாகும் லாபம் அளவிடக்கூடியதல்ல. தற்போது சேனைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் வாலிபர்களைப் பகுத்தறிவுப் பரிசோதனைக்கு உள்ளாக்குகின்றனர். சோதனையில் தேர்ச்சி பெற்றவர்களே ராணுவ அதிகாரிகளால் அங்கீகரிக்கப்படுகின்றனர்.

மானச சாஸ்திரிகள் கண்டுபிடித்த கருவிகள் அநேகம். அவற்றுள் பகுத்தறிவைச் சீர்தூக்கும் கருவி ஒன்றாகும். இக்கருவி இவ்வளவு அற்புதமாயும், மேலான உபயோகங்களைத் தருவதாயும் இருக்க, மற்றக் கருவிகளின் மேலான குணங்களை என்னென்று கூறுவோம்! தற்காலத்து மானச சாஸ்திரம் அதி அற்புதமானது என்று எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டியதே.

புருஷனும் பெண்டாட்டியும்

புருஷன் என்பது ஆடவனைக் குறிக்கும் மொழி. சில சமயங்களில் கணவன் என்னும் அர்த்தத்தில் அந்தச் சொல்லை வழங்குகிறோம். உத்தமப் பெண்களுக்குத் தம் கணவனே புருஷனாகத் தோற்றுவான் என்னும் கொள்கைப்படி இந்த வழக்கு உண்டாகியிருக்கிறது.

பெண்டாட்டி என்ற சொல்லை இன்று மனைவி என்னும் பொருளில் மாத்திரம் சொல்லிவருகிறோம். ஆனால் முன் காலத்தில் அது புருஷன் என்பதைப் போலப் பொதுச்சொல்லாய், பெண் என்ற பொருளில் வழங்கிவந்தது. கைம்பெண் என்பதும் கைம்பெண்டாட்டி என்பதும் ஒரே அர்த்தத்தைக் குறிப்பதிலிருந்தும் இதைத் தெரிந்துகொள்ளலாம்.

ஆடவனுக்குத் தன் மனைவி ஒருத்திதான் பெண்ணாகத் தோற்றவேண்டும் என்ற ஒழுக்கம் பற்றிய வழக்கு இது.

பெண்சாதி என்ற சொல்லும் இத்தகையதே. திருநெல்வேலி ஜில்லாவில் மனைவியை ஒரு வகுப்பினர் "பெண்ணைப் பிறந்தவள்" என்று சொல்லுகிறார்கள். இந்த வழக்கும் மேலே சொன்னவற்றைப் போன்றதே.

கால்வானி

ஜே. பி. மாணிக்கம் - பே. நா. அப்புஸ்வாமி

சுமார் நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னே, அதாவது பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசியிலே, இத்தலி நாட்டிலுள்ள பொலோனா நகரத்துச் சர்வ கலாசாலையிலே லூஜி கால்வானி என்ற ஒருவர் பேராசிரியராக இருந்தார். அவர் உடற்கூற்று நூலிலே மிக்க திறமை உள்ளவர். அக்காலத்திலே மின்சாரத்தைப் பற்றிய விஷயங்கள் அதிகம் அறியப்படாமல் இருந்தன. ஐரோப்பாவிலுள்ள பற்பல நாடுகளில் பல விஞ்ஞானிகள் பலவகையாக மின்சார விஷயங்களை ஆராய்ந்துவந்தார்கள். இயற்கையிலே மின்சாரம் இருப்பது போலவே பிராணிகளின் உடலிலேயும் மின்சார சக்தி இருக்கிறது. அதனால்தான் பிராணிகளுள் சிலவற்றுக்கு வசிகரத் தன்மையும், வேறு சிலவற்றுக்கு அதற்கு எதிரான அருவருப்புத்தன்மையும் இருக்கின்றன என்றார்கள் சிலர். இது உண்மைதானா என்று பலர் ஆராய்ந்து வந்தார்கள். அவர்களுள் கால்வானியும் ஒருவர். ஒழிந்த நேரங்களிலெல்லாம் அவர் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுச் சோதனைகளை நடத்திவந்தார்.

1791-ஆம் வருஷத்தில் ஒருநாள் அவருடைய சோதனைச் சாலையிலே மேஜை ஒன்றின்மேல் கீறிய தவளை ஒன்று சோதனைக்காக வைக்கப்பட்டிருந்தது. பக்கத்தில் மின்சாரத்தை இயற்றும் யந்திரம் ஒன்று இருந்தது. அதிலே மின்சாரப் பொறிகள் தெறித்துக் கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் கால்வானியின் சீடர் ஒருவர் கூரிய கத்தி முனையால் தவளையின் காலிலுள்ள நரம்பைத் தொட்டார். தொடவே, தவளையின் கால்கள் வெடுக்கென்று துடித்தன. இதைக் கண்ட கால்வானி அடைந்த வியப்புக்கு அளவே இல்லை.

சாமானிய மக்கள் இந்த வகையான நிகழ்ச்சி எதாவதொன்றைக் கண்டிருந்தால் அவர்களும் கால்வானியைப்போலவே வியப்படைந்திருப்பார்கள். ஆனால் அதற்குமேல் வேறு ஒன்றும் நடந்திராது. கால்வானி சிறந்த விஞ்ஞானியாதலால், நிகழ்ச்சியைக் கண்டு ஆச்சரியம் அடைந்த அவருடைய மனம், 'இந்த நிகழ்ச்சி ஏன் நிகழ்ந்தது? இதற்குக் காரணம் என்ன?' என்று அவரைக் கேட்டது. தம்முடைய அறிவைக்கொண்டு அந்தக் கேள்விக்கு விடைதேடத் தொடங்கினார்.

தவளையின் கால்கள் துடித்தபோது அந்த அறையிலே என்ன என்ன எல்லாம் நிகழ்ந்து கொண்டிருந்தன என்பதைக் கால்வானி முதலில் குறித்துக்கொண்டார். பிறகு அந் நிகழ்ச்சிகளுள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகவும் கலந்தும் நிகழ்த்திப் பார்த்தார். பல சோதனைகளை நிகழ்த்திய பிறகு பக்கத்திலுள்ள மின்சார யந்திரத்திலிருந்து மின்சாரப் பொறி தெறிக்கும்போதெல்லாம் தவளையின் கால்களிலுள்ள தசைகள் வெடுக்கென்று மடக்குண்டன, அதனால்தான் உதறித் துடித்தன என்பதைத் தெரிந்துகொண்டார்.

உடலின் தசைகளைத் தாமாக மடங்கச் செய்யும் சக்தி மின்சாரத்துக்கு உண்டு என்பது இவ்வாறு தற்செயலாய் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றால் தெரியவந்தது. பிறகு, இயற்கையிலே தோன்றும் மின்சார சக்தியாலும் இவ்வாறான நிகழ்ச்சிகள் உண்டாகுமா என்று கால்வானி சோதிக்கத் தொடங்கினார். தமது வீட்டின் மேல் மாடியிலே உலோகத்தினால் செய்த கம்பி ஒன்றை உயரமாக நிறுத்தி வைத்தார். அதோடு ஒரு கம்பியைப் பிணைத்து, அந்தக் கம்பியின் மறுமுனையைத் தம்முடைய சோதனைச் சாலையின் உள்ளே கொண்டுவந்து விட்டார். பிறகு இடியும் மழையுமாக எப்

பொழுது வரும் என்று காத்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் மேகங்கள் கவிந்து சூழ்ந்து இருண்டு மின்னத் தொடங்கின. அப்போது கால்வானி சோதனைச் சாலையின் மேஜையில் கீறிய தவளை ஒன்றைக் கிடத்தி, தாம் மேல் மாடியில் நிறுத்தியிருந்த உலோகக் கம்பியோடு பிணைத்திருந்த கம்பியின் மறுமுனையை அந்தத் தவளையின்மேல் படும்படி வைத்தார். வேறொரு கம்பியை அந்தத் தவளையின் கால்களோடு பிணைத்து, அக்கம்பியின் மறுமுனையைக் கிணற்றிலே நீர் மட்டம் வரையில் இறங்கும்படி விட்டார். தவளையின் அருகில் நின்றுகொண்டு என்ன நடக்கிறது என்று ஆவலோடு கவனித்தார். இருண்ட மேகத்தின் ஊடே மின்னலின் ஜோதி தோன்றியபோதெல்லாம் தவளையின் கால்கள் துடித்தன. மின்னல் ஒளி வீசியதும் அதே கணத்திலேயே தவளையின் கால்கள் வெடுக்கென்று துடிக்கும்; அதன் பிறகே இடியின் ஓசை கேட்கும்.

இவ்வாறு தொடங்கிய முயற்சியைக் கால்வானி பல வருஷகாலமாகத் தொடர்ந்து நடத்தி வந்தார். எத்தனையோ தவளைகளைக் கொன்று அவற்றின் நடுமுதுகில் ஓடும் நரம்பின் வழியாகப் பித்தளைக் கொக்கிகளைச் செருகி, அந்தத் தவளைகளைத் தம் வீட்டு இரும்பு அழியில் தொங்கவிட்டிருந்தார். வானம் மின்னி, இடி இடிக்கத் தொடங்கியதும் உயிரற்ற தவளைகள் தம் கால்களை உதறித் துடிப்பதைக் கண்டார். சிற்சில வேளைகளில், ஆகாயமானது நிர்மலமாய் மேகமற்று இருக்கும்பொழுதும் தவளையின் கால்கள் தாமாகவே துடித்தன என்பதையும் கண்டார்.

'இதென்ன இது?' என்று அவருடைய மனமானது அவரை மீண்டும் மீண்டும் கேட்கத் தொடங்கியது. தவளைகளை ஆராயும் செயலை இனிமேல் தம்முடைய சோதனைச் சாலை அறையிலேயே நடத்த வேண்டும் என்று தீர்மானித்து, அங்கே பல சோதனைகளை நடத்திப் பார்த்தார்.

அப்படி அவர் செய்துவந்த சோதனை ஒன்றில் தவளையொன்று உலோகத் தட்டின்மீது கிடந்தது. அந்தத் தவளையின் முதுகிலுள்ள நடு நரம்பில் உலோகக் கொக்கியைச் செருகிய போது, அந்தக் கொக்கியின் மறு முனை தட்டின் மேல் பட்டது. பட்டதும் தவளையின் கால்கள் வெடுக்கென்று துடித்தன. உலோகத் தட்டுக்குப் பதிலாகக் கண்ணாடித் தட்டை உபயோகித்து, மற்றப்படி எல்லாம் முன் செய்தது போலவே செய்து பார்த்தார். தவளையின் கால்கள் துடிக்கவில்லை, கண்ணாடித் தட்டின்மேல் தவளையைக் கிடத்தி வேறு சில சோதனைகளைச் செய்து பார்த்தார். வெவ்வேறான இரண்டு உலோகக் கம்பிகளைக் கவர் போன்ற வடிவமாக வளைத்த கருவி ஒன்றை இயற்றினர். தவளையைக் கண்ணாடியின்மேல் கிடத்தி அந்த உலோகக் கருவியின் முனைகள் இரண்டையும் தவளையின் தசையிலும் நரம்பிலுமாக அழுத்திப் பிடித்தால், தவளையின் கால்கள் துடிக்கின்றன என்பதைக் கண்டார்.

கால்வானியின் சோதனைச் சாலையிலே தவளையின் கால்கள் வெடுக்கென்று துடித்தது ஒரு கணநேரத்தில் தோன்றி மறைந்த காட்சி. அந்தக் காட்சியைக் கால்வானி காண நேர்ந்தது தற்செயலாய் நிகழ்ந்த நிகழ்ச்சி. இந் நிகழ்ச்சி தான் கால்வானி பல வருஷகாலமாக நடத்திய சோதனைகளுக்கு மூலம். இந்நிகழ்ச்சிதான் மின்சார அறிவு ஒரு புதிய துறையில் தொடங்குவதற்குக் காரணம்.

தாம் கண்ட அற்பநிகழ்ச்சி ஒன்றிலே மிகப் பெரிய விஷயங்கள் பொதிந்து கிடக்கின்றன என்பதை உணர்ந்து, அந்த விஷயத்தில் விடா முயற்சியோடு பல வருஷகாலம் ஆராய்ச்சிகளை நடத்தி, மின்சார வளர்ச்சியைத் தூண்டிய கால்வானியைப் பிற்காலத்தார் பெரிதும் கொண்டாடுகிறார்கள். மின்சார ஓட்டம் என்று ஒன்று உள்ளது என்பதைத் தெரிந்து கொண்டதற்கு அவர் செய்த ஆராய்ச்சியே மூலகாரணமாக இருந்ததால், அவருடைய ஞாபகார்த்தமாக, மின்சார ஓட்டத்திற்குக் கால்வானியின் பெயரை இட்டு, அதைக் 'கால்வானி ஓட்டம்' என்றும் வழங்கிவருகிறார்கள்.

ஏழ்மை

வறுமை என்னும் பொருளில் "ஏழ்மை" என்ற சொல் ஒன்று சிலர் எழுத்தில் வருகிறது. அதன் சரியான உருவம் 'ஏழைமை' என்பது. 'ஏழையாக இருக்கும் தன்மை' என்பது அதன் பொருள். பேதையின் தன்மையைப் பேதைமை என்றும், பெண்ணின் தன்மையைப் பெண்மை என்றும் வழங்கும் வழக்கத்தை ஒட்டி ஏழைமை என்ற சொல் வந்திருக்கிறது. 'மை' என்பது பண்பைக் குறிக்கும் விகுதி என்று இலக்கண பரிபாஷையில் சொல்வார்கள். 'ஏழ்மை' என்ற வார்த்தைக்கு ஒரு பொருள் இருக்குமானால் 'ஏழின் தன்மை' என்பதையே அதன் அர்த்தமாகக் கொள்ளவேண்டும். ஒருமை, இருமை, மும்மை என்பவற்றைப்போல ஏழ்மை என்பது வரும்.

எச்சில் பண்டம்

பூவாளூர் சுந்தரராமன்

1

வெள்ளையன் அந்தப் பாதையை மிதித்து ஏழு வருஷங்கள் ஓடிவிட்டன. ஆயினும் அந்த வழியில் அவனை வரவேற்பவைபோல நின்று கொண்டிருந்த வேப்பமரங்கள், அவனுக்குப் பழைய ஞாபகத்தை அளித்தன. அந்த மரங்களில் அங்கங்கே புதிய கிளைகள் ஒன்றிரண்டு தோன்றியிருந்தாலும் அவனோடு ஒன்றி வளர்ந்த அவைகளின் தோற்றம் அவன் மனக்கண்ணை விட்டு என்றும் அகன்றதில்லை. அவைகளின் அடையாளத்திலிருந்து அவன் செல்ல வேண்டிய தூரம் தெரியும்; அதோ அந்தப் பம்பலான வேப்பமரத்தின் பக்கத்தில் செல்லும் சந்துதான் அவனுடைய லக்ஷ்ய ஸ்தலம்.

நிதானமாக நாலு புறங்களிலும் பார்த்துக்கொண்டே சென்றான். சந்தின் கோடி வீடு; பழங்காலத்து மண் சுவர்; கூரை வேய்ந்தது; பழுது பார்த்து இரண்டு மூன்று வருஷங்கள் இருக்கும்.

தாழிடாமல் மூடப்பட்டிருந்த கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். மூலையில் மண் குடங்கள்; ஒன்றிரண்டு பித்தளைப் பாத்திரங்கள்; கொடியில் கிழிந்த புடைவை. ரேழியைத் தாண்டிக்கொண்டு தாழ்வாரத்திற்கு வந்ததும் அவன் கண்ட காட்சி அவனுடைய கண்களிலிருந்து ரத்தத்தை வடியச் செய்தது. ஒரு காலத்தில் அவனுடைய காதலியாகக் கருதப்பட்டவள், பூதேவியைத் தஞ்சம் அடைந்ததுபோல, வெறும் தரையின் மீது சுருண்டு படுத்துக்கொண்டிருந்தாள்.

கனைத்துக்கொண்டே, "பாப்பு!" என்றான். அவன் கூப்பிட்டது அவள் காதிற்கே கேட்டிருக்காது. ஆனால் படுத்துக் கொண்டிருந்தவள் அதைக்கேட்டதுபோலத் தலையைமட்டும் தூக்கிப்பார்த்தாள். உடனே அடித்துப் புடைத்துக்கொண்டு எழுந்து வந்தாள். "நீதானா, வெள்ளையா!" என்று கேட்டுக்கொண்டே அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு அவனை அப்படியே கண்களால் விழுங்கி விடுபவளைப் போல இமை கொட்டாமல் பார்த்தாள்:

"ஊரிலே பேசிக்கிட்டாக, நீ வந்துட்டாய் என்று."

"ஆமாம்; மூந்தா நாள் வந்தேன்" என்றபொழுது, வந்த அன்றே அவளை வந்து பாராததற்கு மன்னிப்புக் கேட்பதுபோல இருந்தது அவனுடைய குரல்.

"என்ன, நேரா சிங்கப்பூரிலிருந்துதானா வர்றே? போறது, இந்தக் குப்பைக்காட்டைத் தாண்டிண்டு இவ்வளவு தூரம் வந்தயே."

"சிங்கப்பூரிலிருந்துதான் வறேன். நல்ல வேளையா, நாங்க புறப்பட்ட நாலாம் நாள் ஜப்பான்காரன் குண்டு போட்டான்."

"வெள்ளையா! நீ ஊரை விட்டுப் போய் ஏழு எட்டு வருசம் இருக்காது? உம், நேத்துப் போலத்தான் தோணறது."

"இந்த ஆனிக்கு ஏழு வருசம் முடியறது, ஊரைவிட்டுப் போய்."

"நாம் கடைசியாகச் சந்தித்தது ஞாபகம் இருக்கா? ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசியிலே இல்லே? அன்று நீ வாங்கிக் கொடுத்த ரவிக்கையைப் போட்டுக் கொண்டதிலே 'அத'னுடைய சந்தேகம் முத்திப் போயிடுத்து. 'அது'வும் போய் ஏழு மாசமாகிறது."

"சிங்கப்பூரிலேயே அங்கமுத்து காலமானதைக் கேள்விப்பட்டேன். மேலே என்ன செய்வதாக உத்தேசம்?"

"என்ன யோசனை? மிஞ்சி மிஞ்சிப் போனா ஆடிமாசத்துக் காவேரி வெள்ளம் இருக்கவே இருக்குது!" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள். அவள் சிரித்தாளே ஒழிய அதில் கலந்திருந்த சோகமும் ஏமாற்றமும் வெள்ளையன் கன்னத்தில் அறைந்தாற்போல ஒலித்தன.

2

வெள்ளையன் பாப்பாத்தியை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தான். 'இவளா ஒரு காலத்தில் காட்டுமலர் போல, வஞ்சனை இல்லாமல் வளர்ந்திருந்தவள்?' அவளுடைய கட்டழகு போன இடம் தெரியவில்லை! ஆனாலும் யானை படுத்தால் குதிரை மட்டம் என்றபடி அவ்வளவு அழகுக்கும் பிரதிநிதிபோல நீண்ட கண்கள் சோகத்தை வாரி வீசிக்கொண்டிருந்தன.

பாப்பாத்தி அங்கமுத்துவைக் கல்யாணம் பண்ணிக்கொண்டதற்கு 'முறை'தான் காரணம்; அங்கமுத்துவின் பணமும் சேர்ந்து கொண்டது. 'பாப்பாத்தி கொடுத்துவைத்தவள்' என்று ஊரார் எல்லாரும் பேசிக்கொண்டார்கள். நடுவில் வெள்ளையன் வந்து எல்லாவற்றையும் கெடுத்துவிட்டான். எப்படியோ இருவருக்கும் 'தொந்தம்' ஏற்பட்டுவிட்டது. அது பகிரங்க ரகசியமாக இருந்தது. முதலில் அங்கமுத்து பாப்பாத்திக்கு எவ்வளவோ நல்ல தனமாகச் சொன்னான்; கண்டித்துப் பார்த்தான். அவளுடைய 'நாய்க்குணம்' விடவில்லை. பிறகு நித்தியம் அடியும் உதையும் விழுந்தன. கடைசியில் பழிக்குப் பழியாக அவளை அநாதையாக விட்டு விட்டு இறந்து போனான்.

அன்று - ஏழு வருஷங்களுக்கு முன் - வெள்ளையனிடம் காசு இல்லை; பரம ஏழையாக இருந்ததால்தான் பாப்பாத்தியை அங்கமுத்துவிடம் கஷ்டப்படும்படி விட்டுவிட்டு நாலு காசு தேட அக்கரைச் சீமைக்கு வந்தான். வந்த இடத்தில் அதிருஷ்டம் தொடர்ந்தது. அடைப்பப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு தெருத் தெருவாக அரையணா, ஓரணாவுக்காக அலைந்தவன் சலூனில் ரூபாய் ரூபாயாகச் சம்பாதித்தால், செலவழிக்க மனம் வருமா? அதற்குள் அந்தச் சலூனின் சொந்தக்காரன் காலமாகிவிடவே அந்தச் சலூனும் வெள்ளையனிடம் வந்தது. ஐந்து வருஷங்களுக்குள் நாலாயிரம் சேர்ந்ததில் ஆச்சரியமே இல்லை.

அதற்குள் - கையில் பணம் புரள ஆரம்பித்தபொழுது - அவனுக்கு வயசு முப்பது ஆகிவிட்டது. இன்னும் அவனுக்குக் கல்யாணம் குடித்தனம் முதலிய ஒன்றுமே ஏற்படவில்லை. இன்னும் வயசாவதற்குள் 'வாழ்க்கையில் அநுபவிக்க வேண்டியதை அநுபவிக்க அவனுடைய மனம் மிகவும் விழைந்தது. முதலில் ஒரு கல்யாணமும் குடும்பமும் வேண்டும்.

அப்பொழுது தன் சலூனிலேயே கூலிக்கு வேலை செய்யும் மருதையின் பெண் குஞ்சம்மா அவனுடைய கண்களுக்குத் தென்பட்டாள். குஞ்சம்மா கறுப்பிலே நல்ல அழகு; பருவகாலம். அவளைப் பார்த்த பொழுது அவளுக்கும் தனக்கும் வயசுப் பொருத்தம் இல்லையென்றாலும் குடும்பம் ஒன்று வேண்டுமே என்று நினைத்தான். இந்த விஷயத்தை, சலூன் வைத்து ஏராளமான பொருள் நஷ்டமடைந்து ஒடிந்த மனசோடு கூலிக்கு வேலை செய்யும் மருதையிடம் சொன்னபொழுது அவனுக்குப் புத்துயிர் வந்தது. தன் மகளுக்கு அந்த இடம் சுலபமாகக் கிட்டாது என்று உடனே தன் முழுச் சம்மதத்தையும் கொடுத்தான். குஞ்சம்மாவும் ஆக்ஷேபிக்காமல் மனசார ஒப்புக்கொண்டாள். அவளுக்கு வெள்ளையனின் ஆடம்பரத்தில் மோகம் விழுந்திருந்தது. பிறகு பரிசமும்

போடப்பட்டுக் கல்யாணத்திற்குத் தேதியும் வைக்கப்பட்டிருந்தது. அதற்குள் ஜப்பான் பீதியினால் திடீரென்று யாவரும் கப்பலில் தாய்நாடு திரும்ப நேர்ந்தது.

சொந்த ஊர் என்றதுமே பழைய ஞாபகங்கள் வந்துவிட்டன. வெள்ளையனுடைய ஒரே ஞாபகம் பாப்பாத்தியைப்பற்றித்தான். இப்போது அவனிடத்தில் பணம் இருக்கிறது; அழகான இளமனைவியும், புதுக் குடித்தனமும் அவனுக்கு வரக் காத்துக் கிடக்கின்றன. ஆனால் பாழும் மனசு எங்கெங்கேயோ இழுத்துக்கொண்டு

செல்லுகிறது. கீழே கொட்டின மையை ஒத்தும் காகிதம் மாதிரி எதாவது ஒன்று தன்னுடைய உள்ளத்தில் உறைந்து கிடக்கும் எண்ணங்களை அறவே துடைத்துவிடக்கூடாதா என்று ஏங்கினன்.

3

"உனக்குக் கல்யாணமாமே? கேள்விப் பட்டேன்" என்முள் பாப்பாத்தி, அவனுடைய அப்போதை மனநிலைமையைச் சிறிதும் அறிந்துகொள்ளாமல்.

வெள்ளையன் அவளை எறிட்டுப் பார்த்தான். தன்னல் அவளுடைய சகல சௌபாக்கியங்களும் சீரழிந்து கிடக்க, தான் இனிமேல் கல்யாணமும் கார்த்திகையுமாகப் பெருவாழ்வு வாழப் போவதை நினைந்து அவன் மனம் கூசியது. தன் எதிரே பொலிவிழந்து நிற்பவளுடைய யௌவன வாழ்வை வீண்படுத்தின களங்கத்துடன் அன்று மலர்ந்த மலர் போன்ற வேறோர் இளம் பெண்ணைத் தான் அணையப் போவது நியாயமா என்று அவனுடைய மனச்சாட்சி ஓயாமல் இடித்துக்கொண்டிருந்தது.

பேச்சை மாற்றவேண்டி, "ஆனாலும் நீ ஒரே கிழவியாகப் போய்விட்டாய், அதற்குள்!" என்றான் வெள்ளையன்.

"கிழவியாகப் போகாமல் குமரியாக மாறிவிட முடியுமா? நல்ல சோறு, துணி கண்டு எத்தனை நாளோ ஆகிறது. மனக்கவலை வேறே. உம்! எல்லாம் கனவாகத்தான் இருக்குது."

ஆம், அதே நினைவுதான் வெள்ளையன் மனத்திலும் ஊறிக்கொண்டிருந்தது. இந்தப் பாப்பாத்தியா ஒரு காலத்தில் மச்சு வீட்டு அங்கமுத்துவின் மனைவி? இப்போது அவன் கையில் இருக்கும் பணம் ஒரு காலத்தில் - எழு வருஷங்களுக்கு முன்னல் - இருந்திருந்தால், கதையே வேறு மாதிரியாக இருந்திருக்கும். அவ்வளவு என்ன? பாப்பாத்தி அங்கமுத்துவிடம் அடியும் உதையும் பட்டுக்கொண்டிருக்கமாட்டாள். அதை நினைக்கும்பொழுது கடைசித் தடவையாக ஸ்ரீரங்கம் வடக்குக் கோபுர வாசலில் இருவரும் உட்கார்ந்துகொண்டு பேசினது ஞாபகத்திற்கு வந்தது.

"வெள்ளையா! இது என்ன? இன்னும் அவன் என்னைச் சித்திரவதை செய்தாலும் பொறுத்துக் கொள்வேன். ஆனல் அவனல் நம் இருவரையும் பிரிக்க முடியாது" என்ற அவளுடைய நெஞ்சழுத்தத்தை நினைத்தாலே அவனுக்கு மயிர்க்கூச்செடுத்தது.

இப்பொழுது வெள்ளையனுக்கு வழி சுலபம்; பணம் இருக்கிறது; அங்கமுத்துவும் செத்துச் சுண்ணும்பாகிவிட்டான். ஆனல் பாப்பாத்திக்கு வயசுதான் அதிகமாகிவிட்டது. இருபத்தைந்து வயசில் அவ்வளவு கிழவியாகிவிடக் கூடாதுதான். தன்னுடைய எவ்வளவோ புது மனக் கோட்டைகளுக்குப் பாப்பாத்தியைவிடக் குஞ்சம்மா ஏற்றவள். என்ருலும் தனக்காகப் பாப்பாத்தி பட்ட கஷ்டங்கள் என்ன ஆவது?

"பாப்பு, உனக்குச் செலவிற்கு வேணும்னு..."

"எனக்கு என்ன செலவு? நீ இவ்வளவு தூரம் வந்தயே, அதுவே போதும். என் காலம் ஆயிடுத்து!" என்றபொழுது கன்னத்தில் கண்ணீர் வழிந்தோடியது. அவளுடைய அனாதரவான கண்ணீர் அவன் இருதயத்தையே கரைத்து விட்டது. பணம் ஒன்றுதாஞ சுகத்தைக் கொடுக்கக்கூடியது என்று கேட்பது மாதிரி இருந்தது அவளுடைய அழுகை.

"பாப்பு, நீ சரீன்னு சொல்லு; நாம் இருவரும் திரும்பவும் ..." என்ருன் திடீரென்று.

பாப்பாத்தி திடுக்கிட்டுவிட்டாள். அவளுடைய ஒளியிழந்த கண்களில் ஒளி வீசியது. அவள் வாய் திறக்கவில்லை.

"ஆம், அதுதான் சரி; பாப்பு, நானே உன்னைக் கூட்டிக்கொள்கிறேன். அதுதான் நியாயம்."

"உனக்கு எது சரீன்னு படுதோ அப்படியே செய்."

அன்று வெள்ளையன் வீடு திரும்பினபொழுது வீட்டில் சமீபத்தில் நடக்கவேண்டிய கல்யாணத்திற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. மருதை அங்கே வேலை செய்பவர்களை அதட்டி வேலை வாங்கிக்கொண்டிருந்தான். அவனைத் தனியாகக் கூட்டிச் சென்று குஞ்சம்மாவைத் தான் கல்யாணம் செய்துகொள்ள முடியாததன் காரணத்தைச் சொன்னான். தன் இனத்திலேயே பணக்காரனுக்கு மாமனாராகப் போகும் பாக்கியத்தை நினைத்து அகமகிழ்ந்துகொண்டிருக்கும் மருதை, அதைக் கேட்டதும் மலையிலிருந்து உருட்டிவிட்டமாதிரி திணறினான். ஆனால் தன்னுடைய சுகத்தை விடக் கடமை பெரிது என்ற வெள்ளையனுடைய தீர்மானத்தை மருதையினால் ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

"ஆனால், பாவம்! குஞ்சுதான் மனம் ஒடிந்து போய்விடுவாள்" என்று மருதை சொன்னான்.

"மாமா, அது தெரியாமலா நான் சங்கடப்படுகிறேன்? பாப்புவைக் கைவிடுவது என்பது என்னால் நினைக்கவே முடியவில்லை!"

"சரி, உன் இஷ்டப்படி செய்; ஆனால் பாப்பாத்தி விஷயம் குஞ்சுவிற்குத் தெரியவேண்டாம். கல்யாணம் நின்றுவிட்டது என்று மட்டும் சொல்லிச் சமாதானப் படுத்துகிறேன்" என்று மருதை ஒப்புக்கொண்டான்.

அன்று உண்மையில் வெள்ளையனுக்குத் தான் இதுகாறும் செய்த பாபகிருத்தியங்களுக்குப் பிராயச்சித்தம் செய்ததைப் போன்ற சந்தோஷம் நிலவியிருந்தது. இன்னும் ஒரு வாரத்திலோ பத்து நாட்களிலோ பாப்பாத்தியை ஊறியக் கூட்டிவந்து வைத்துக்கொண்டு, தான் அந்தக் காலத்தில் கண்ட கனவுகளை நிறைவேற்ற எண்ணினான்.

4

அடுத்த நான்கு நாட்களில் பாப்பாத்தியைப் பார்த்தவர்கள் அவளுடைய முகத்தில் இவ்வளவு சந்தோஷம் துளும்பக் காரணம் என்ன என்று ஆச்சரியப்பட்டிருப்பார்கள். நல்ல புடைவைகளும் நகைகளும் வந்து சேர்ந்தன.

அன்று சனிக்கிழமை. பாப்பாத்தி ஒவ்வொரு நிமிஷமும் வெள்ளையன் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தாள். அவளைக் கூட்டிக்கொண்டு போகும் கெடுவிற்கு இன்னும் இரண்டே நாட்கள் இருந்தன. வெள்ளையன் வந்ததும் அவளுடைய முகத்தில் தோன்றின பதற்றத்தை அறிந்துகொண்டான்.

"நேற்று வெள்ளிக்கிழமை மாரியம்மன் கோவிலுக்குப் போயிருந்தேன்..." என்று ஆரம்பித்தாள் பாப்பாத்தி.

"உம்...?"

"குஞ்சம்மாவைப் பார்த்தேன்" என்றதும் வெள்ளையனுக்குத் திடுக்கிட்டது. குஞ்சம்மாவிற்குக் கிட்ட இருந்த பாக்கியத்தைத் தான் அநுபவிக்கும் கர்வத்துடன் ஏதோ சொல்லப் போகிறாள் என்று வெறுப்புடன் நோக்கினான்.

"இளைத்துத் துரும்பாப் போய்விட்டாள். பாவம்! ஏக்கம் பிடித்துவிட்டது."

வெள்ளையனுக்குப் பரம வேதனையாக இருந்தது. திரும்பவும் ஒரு ஸ்திரீ ஹத்தி ஏற்படுமோ என்று பயந்தான்.

பாப்பாத்தி நிறுத்தாமல் பேசினாள். "குஞ்சம்மாவைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. ஒரு வாரம் இருந்ததாம் அவளுடைய கல்யாணத்திற்கு; அது நின்றுவிட்டதாம்..."

வெள்ளையனுக்கு நடுக்கம் கண்டுவிட்டது. எங்கே, தானே அதற்குக் காரணம் என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டாளோ என்று அவனுடைய இருதயம் அடித்துக்கொண்டது.

"அதனால் என்ன? ஒரு சிறு பெண்ணுக்கு ஓர் இடத்தில் கல்யாணம் நிச்சயமாகித் தவறிவிட்டால் வேறு இடம் கூடாதா என்ன?" என்றான் விழுங்கிக்கொண்டே.

"ஆனால் அவள் முதல் வரனையே நினைத்து மனம் கலங்கினால் என்ன செய்வது? வெள்ளையா! நீ கூடவா இப்படிச் செய்வது?" என்று நேரடியாகவே கேட்டுவிட்டாள்.

வெள்ளையனுக்குத் தலை இறக்கம் கண்டுவிட்டது.

"பாப்பு, நான் என்ன செய்வது! தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டேன். எனக்காக இத்தனை காலம் கஷ்டப்பட்டாயே; அது என்ன ஆவது?"

பாப்பாத்தி அழுதுவிட்டாள்; தனக்கு வர இருந்த சுகம் பறி போய் விடுமோ என்று பயந்தாள்.

"வெள்ளையா, நான் சுகம், துக்கம் இரண்டையும் பார்த்த கிழவியாகிவிட்டேன். அந்தக் குழந்தை பாவம்! பூக்காத மொட்டைக் கசக்கி எறிவதுபோல..."

வெள்ளையன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கன்னத்தை நனைத்தது.

"வெள்ளையா, நீ கைவிட்டால் 'அது' உயிரை விட்டுத் தொலைத்தாலும் தொலைக்கும். என்னை மறந்துவிடு."

வெள்ளையனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இன்று பிறர் துன்பத்திற்காகக் கலங்கிக் கண்ணீர் விடும் உள்ளம், அன்று ஒருவனுடைய அடி உதைகளுக்கு ஈடு கொடுத்துக்கொண்டு இரும்பாக இருந்ததே என்று நினைத்த பொழுது அவளை எக்காரணத்தினாலும் கைவிடக்கூடாது என்றே நினைத்தான்.

"பாப்பு, நீ அதற்காகக் கவலைப்படாதே. அவளுக்கு வெகு சீக்கிரத்தில் கல்யாணம் நடந்துவிடும். உன்னை என்னால் கைவிட முடியாது" என்று அவளைப் பிடித்துக் கொண்டான்.

ஐந்து நிமிஷம் மௌனம்.

"ஆனால், ஆனால்,... என்றும் இதே வைராக்கியத்துடன் இருப்பாயா?" என்றாள் சந்தேகம் தொனிக்கும் குரலுடன்.

"ஏன் உனக்குச் சந்தேகம்?"

"பிறகு பிறர் என்னைப்பற்றி ஏதாவது விபரீதமாகச் சொன்னால்கூட..."

"பிறர் உன்னைப்பற்றி விபரீதமாகச் சொல்ல என்ன இருக்கிறது?"

பாப்பாத்தி உடனே பதில் சொல்லிவிடவில்லை.

"அதை இப்பொழுதே சொல்லி உன் மனசை நான் ஏன் புண்படுத்த வேண்டும்? பிறகு உன் காதிலேயே விழும்" என்று அவனுடைய ஆவலை மேலும் கிளப்பினாள்.

"பிறகு என்ன, பாப்பு? நீயே சொல்லிவிடு. இப்பொழுது..."

"என்ன சொல்ல இருக்குது? நீ போன பிறகு கோடி வீட்டு மொட்டையன் இங்கே வந்து போய்க்கொண்டிருந்தான். அதைப் பத்தி எவராவது..."

வெள்ளையனுக்குப் பூமி வெடித்துத் தன்னை விழுங்கிவிட்டதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவன் உதடுகள் துடித்தன. உடம்பு வேர்த்துக் கொட்டிவிட்டது.

"உண்மையாகவா?"

"நான் எதற்கு மறைக்கவேண்டும்? நீயும் என்னைத் தவிக்கவிட்டுப் போய்விட்டாய்..."

"சீ, வேசை! உன்னை நம்பினேனே!" அதற்குமேல் அவனுடைய நிழல் அந்த அறையில் விழவில்லை.

* * *

தெருவில் மேளச் சத்தம்; பந்து ஜனங்களின் கூட்டம். அன்று வெள்ளையனுக்கும் குஞ்சம்மாவுக்கும் கல்யாணம்.

நேரம் ஆக ஆக, பாப்பாத்தியால் அடக்க முடியவில்லை. பிறந்தது முதல் தன்மீது எவருக்கும் கருணை இல்லையே! தான் மட்டும் இன்று வேறு ஒருவருக்காக ஏன் கவலைப்பட வேண்டும்? ஒரு வார்த்தை - அவள் திரும்பவும் நல்ல நிலைக்கு வந்துவிடலாம்.

விளக்கு வைக்கும் நேரம், பாப்பாத்தி வெள்ளையன் வீட்டிற்குப் போனபொழுது. குஞ்சம்மா அவளை மிகுந்த பிரியத்துடன் உள்ளே கூட்டிக்கொண்டு போய் உபசாரம் செய்தாள். தற்செயலாக அந்தப் பக்கம் வந்த வெள்ளையன் அவளைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

"வெள்ளையா, இதா, ஒரு வார்த்தை!" என்று கூப்பிட்டாள். தூரத்தில் நின்று கொண்டே, விஷயம் என்ன என்று கேட்பது போல அவன் பார்த்தான்.

"நான் சொன்ன 'கதை'யை நீ எப்படி நம்பினாய்? உன் பாப்புவினிடத்தில் அங்கமுத்துவின் ஜம்பமே சாயவில்லையே!" என்றாள், முகம் சிவக்க.

"ஆ! நீ சொன்னது புளுகா?" என்று தன் தலையை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டான். வெள்ளையன் தலை தூக்கின பொழுது எதிரில் குஞ்சம்மா விஷயம் ஒன்றும் புரியாமல் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தாள்.

வங்க வாழ்த்துக் கவிகள்

1

அங்க மேதளர் வெய்திய காலையும்
அங்கொர் புன்னரி தந்திடும் ஊனுணச்
சிங்க மேயென வாழ்தல் சிறப்பெனச்
செம்மை கூறிநந் தாய்ப்பெருந் தேயத்தைப்
பங்க மேபெறு மிந்நிலை நின்றுயர்
பண்டை மாண்பிடைக் கொண்டினி துய்த்திடும்
வங்க மேயென வந்தனை வாழிநீ
வங்க மேநனி வாழிய வாழிய!

2

கற்ப கத்தருப் போலெது கேட்பினும்
கடிது நல்கிடும் பாரத நாட்டினில்
பொற்பு றப்பிறந் தோம்,நமக் கோர்விதப்
பொருளு மன்னியர் ஈதல் பொறுக்கிலேம்
அற்பர் போலப் பிறர்கரம் நோக்கியாம்
அவனி வாழ்தலா காதென நன்கினி
வற்பு றுத்திடத் தோன்றிய தெய்வமே
வங்க மேநனி வாழிய வாழிய!

3

கண்ணி னீர்துடைப் பாய்புன் னகைகொள்
கவினு றும்பா தப்பெருந் தேவியே [வாய்
உண்ணி கழ்ந்திடுந் துன்பங் களைதியால்
உன்றன் மைந்தர்கள் மேனெறி யுற்றனர்
பெண்ணி னெஞ்சிற் கிதமென லாவது
பெற்ற பிள்ளைகள் பீடுற லேயன்றோ?
மண்ணில் நீபுகழ் மேவிட வாழ்த்திய
வங்க மேநனி வாழிய வாழிய!

—ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதியார்
14-9-1905 - இல் பாடியது.

தாய்மொழி

ஆர். ஜகந்நாதன்

நாடக பாத்திரங்கள்

பிறவாத குழந்தை, ஸுதா, மாலினி, ஸுமதி, பேபி.

(இன்னமும் பிறவாத குழந்தை ஒன்று யோசனையில் ஆழ்ந்த வண்ணம் இருக்கிறது.)

பிறவாத குழந்தை: யோசிக்காமல் எவ்வளவோ ஜன்மங்கள் எடுத்தாச்சு. கஷ்டங்களும் பட்டாச்சு. இந்தத் தரம் நன்னு யோசிச்ச பிறகுதான் பிறக்கலாம் என்றால் ஓர் இடமும் சரியாகத் தோன்றவில்லையே. கலி முற்றியிருக்கும் காலம். சங்கட நிலைமை. ஒண்ணும் சரியாக இல்லையே.

ஆனால் பிறவியை எவ்வளவு நாள் தள்ளிப் போடறது? அழுதும் அழுதும் அவளேதான் பெற வேண்டும் என்று சொல்லுவார்களே! அதுமாதிரி நானேதான் இப்போது ஜன்மம் எடுக்க வேண்டும். யோசித்து யோசித்துத் தள்ளிப்போடுவதனால் பயன் இல்லை. பிரம்மாவின் கோபத்திற்கும் ஆளாவேன்.

கால தேச வர்த்தமானம் எப்படி இருந்தால் என்ன? அவைகளினால் சிருஷ்டி நிற்குமா? அவைகளைப்பற்றி நான் எதற்காகக் கவலைப்பட வேண்டும்?

எனக்கு வேண்டியதென்ன? அருமையாய் அழைக்க ஓர் அம்மா; அவளை இப்போது கண்டுபிடித்து அவளிடம் ஜனிக்கிறேன். பாக்கி விசாரங்களை எல்லாம் பிறந்த பிறகு பட்டுக்கொள்ளலாம்.

நான் தேடும் அம்மாவுக்கும் எனக்கும் அந்தரங்க அன்பு இருந்தால் போதும். லோகம் தலைகீழாக இருந்தாலும் பாதகமில்லை. அம்மாவின் அன்பைக் கொண்டு தானே இத்தனை ஜன்மங்களையும் லேசாகத் தட்டிக்கழித்து விட்டேன்? இப்போது அப்படியே செய்துவிடுகிறேன்.

எனக்குத் தகுந்த அம்மா யார்? அவளை எப்படித் தேர்ந்தெடுப்பது? கறுப்பாக இருப்பவள் தேவலையா? மாநிறமாக இருப்பவளா? அல்லது நிலாப்போல் வெளுப்பாக இருப்பவளா? புடைவையை ஸநாதன ரீதியில் கொசுவம் வைத்துக் கட்டிக்கொள்கிறவளா, புது மோஸ்தராக மாம்பழக்கட்டு கட்டிக்கொள்கிறவளா? அல்லது மடிசாறு வைத்து ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தை அனுசரிக்கிறவளா?

நாலு குழந்தைகளைக் கேட்டு விசாரிக்கிறேன். பிறகு ஒருவேளை நல்ல அம்மாவைத் தேர்ந்தெடுக்க எனக்குத் தைரியம் உண்டாகலாம்.

(அச்சமயத்தில் ஸுதா என்ற சிறுமி துயரமுள்ள முகத்தோற்றத்துடன் வருகிறாள்.)

ஏ பொண்ணே, ஏன் மூஞ்சியைத் தொங்கப்போட்டுக்கொண்டிருக்கே?

சுதா: நான் எபபடி இருந்தால் உனக்கென்ன? நீ யாருடீ கேட்கிறதற்கு?

பிறவாத கு.: "டீ", "இ" என்றெல்லாம் என்னைக் கூப்பிடக்கூடாது, தெரியுமா?

சுதா: ஏன் கூப்பிடக்கூடாது? நீயும் என்னைப்போல் ஒரு பெண்தானே?

பிறவாத கு.: நான் பெண் அல்ல.

சுதா: ஆனால் பிள்ளையா? சரி, நான் மூஞ்சியைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்தால் உனக்கு என்னடா?

பிறவாத கு.: "டா" என்று என்னை அழைக்காதே. நான் பிள்ளை அல்ல.

சுதா: பெண்ணுமில்லை என்கிறாய், பிள்ளையுமில்லை என்கிறாய். பின்னே நீ ஆரு?

பிறவாத கு.: நான் இன்னும் பிறக்கவே இல்லை. இனிமேல்தான் பிறக்கவேண்டும். அதைப் பத்தித்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

சுதா: எப்படிப் பிறக்கப்போறே? பிள்ளையாகவா, பெண்ணாகவா?

பிறவாத கு.: அதை இன்னும் தீர்மானிக்கவில்லை. நல்ல அம்மாவைக் கண்டு பிடித்த பிறகுதான் தீர்மானிக்கப் போகிறேன். உங்கம்மா எப்படி?

சுதா: எங்கம்மாவா? கோபக்காரி, ரோசக்காரி, அவசரக்காரி, கண்டாலே பிடிக்கல்லை.

பிறவாத கு.: ரொம்பப் படபடவென்று பேசறயே. உன்னைப்போலத்தான் உங்கம்மாவுமோ?

சுதா: இன்னும் ஜாஸ்தியாக. கறிகாய்க்காரனோடு அடாவடி பேரம் பண்ணுவாள். பலன் என்ன தெரியுமா? தப்புத் தராசில் நிறுத்துக் கொடுத்து அவன் அவளை ஏமாற்றி விடுவான். பால்காரனிடம் கொஸருக்காகச் சண்டை போடுவாள். அவன் பாலில் தண்ணீரை விட்டுப் பெருக்கி விடுவான். வேலைக்காரனிடம் நிமிஷத்திற்கு நிமிஷம் ஏதாவது குறை சொல்லிக்கொண்டே இருப்பாள். ஒருவனும் ஒரு மாசத்துக்கு மேல் எங்காத்தில் தங்கமாட்டான்.

பிறவாத கு.: உங்கம்மாவுக்குப் பிறத்தியாரிடம் சரியாகப் பழகத் தெரியாதுபோல் இருக்கு. அது எப்படி இருந்தால் என்ன? உன்னிடம் எப்படி நடந்து கொள்ளுவாள்? அதுதானே முக்கியம்?

சுதா: என்னத்தைச் சொல்லறது போ! அப்படியும் இப்படியுமாகத்தான் இருக்காள். ஒரு சமயம் அடிக்கிறாள், மறுசமயம் அணைக்கிறாள். ஒரு சமயம் கடிந்து பேசுகிறாள், மறுசமயம் கொஞ்சிக் குலாவுகிறாள். எல்லாத்தையும் யோசித்தால் மோசமில்லை என்று தோன்றுகிறது. நீயும் வந்துடேன். தம்பிப் பாப்பாவாக வந்துடு. குஷியா இருக்கும்.

பிறவாத கு.: இரு, இரு. அவசரப்படுத்தாதே. யோசித்துத்தான் பிறக்கப் போகிறேன். சரி, நீ என்னிடம் வரச்சே மூஞ்சியைத் தொங்கப் போட்டுக்கொண்டு வந்தாயே, எதற்காக?

சுதா: அதை உன்னிடம் சொல்லப்படாது.

பிறவாத கு.: ஏன்?

சுதா: ஆத்து விஷயமாச்சே. பிறத்தியாரிடம் சொல்லலாமா?

பிறவாத கு.: சொல்லாவிட்டால் நான் உன்னுடைய வீட்டில் பிறக்க மாட்டேன்.

சுதா : அப்படிச் சொல்லாதே. அம்மா சொன்னது எனக்குப் பொறுக்கவில்லை. துக்கம் துக்கமா வந்தது.

பிறவாத கு. : என்ன சொன்னாள் ?

சுதா : ஸரி, சொல்லறேன் கேள். பிறந்தப்புறம் கேட்பதைப் பிறப்பதற்கு முந்தியேதான் கேட்டுக்கோயேன். என் மேல் ஏதோ கோபித்துக்கொண்டு "கட்டையிலே வைக்க" என்றாள்.

பிறவாத கு. : அப்படின்னா என்ன தெரியுமா?

சுதா : தெரியாது. ஏதோ வசவு என்று மட்டும் தெரியும்.

பிறவாத கு. : வசவா? மோசமான வசவு. உங்கம்மாவிடம் நான் பிறக்க மாட்டேன். போய்ச் சொல்லிவிடு.

சுதா : அப்படி என்ன அது ரொம்பக் கெட்ட வசவா ?

பிறவாத கு. : ஆமாம். பிறக்கப் போகும் குழந்தைக்குக் "கட்டையிலே வைக்க" என்கிற வார்த்தை உத்ஸாகம் கொடுக்குமா? நான் மாட்டேம்மா!

சுதா : எனக்கு அதனுடைய அர்த்தம் தெரியவில்லை. சும்மா இருந்தேன். அர்த்தம் தெரிஞ்ச நீ பிறந்த பிறகு அம்மாவிடம் நேரே சொல்லேன். அப்புறம் அவள் அந்த வார்த்தையைப் பிரயோகிக்க மாட்டாள்.

பிறவாத கு. : ஆனால் முதல் மூன்று நான்கு வருஷங்கள் எனக்குப் பேச வராதே. அவளுடைய பேச்சைத்தானே கேட்க வேண்டியிருக்கும்?

சுதா : கேட்டால் போச்சு! அதனுடைய அர்த்தம் அப்போ தெரியாது. பேசத் தெரிஞ்சவுடன் நீயும் திரும்பிக் கொடு. எதுக்கும் நீ வா. நீ வந்தால்தான் எனக்கு ஸுகம். வந்துடு.

பிறவாத கு. : இரு, இரு, உங்காத்தில் எத்தனை பேர்?

சுதா : அம்மாவைத் தவிர்த்தால் நான் ஒருத்திதான். அதனால்தான் உன்னை வந்துடு என்கிறேன்.

பிறவாத கு. : உங்கப்பா இல்லையா?

சுதா : இருக்கார். ஆனால் அவரால் நமக்குக் கவலை இராது.

பிறவாத கு. : ஏன்? அவர் எப்படிப் பட்டவர்?

சுதா : காலையில் $8\frac{1}{2}$ மணிக்கு எழுந்திருப்பார். காபி சாப்பிடுவார். ரேடியோ வைத் திருப்புவார், குளிப்பார், சாப்பிடுவார், ஆபீஸுக்குப் போவார். சாயங்காலம் திரும்பி வருவார், காபி சாப்பிடுவார், கிளப்புக்குப் போவார், திரும்பி வருவார், சாப்பிடுவார், ரேடியோவைத் திருப்புவார், தூங்குவார்.

பிறவாத கு. : இவ்வளவுதானா உங்க அப்பா? வேறு ஒன்றும் தெரியாதா அவருக்கு?

சுதா : பாடத் தெரியும்.

பிறவாத கு. : நன்றாகப் பாடுவாரா?

சுதா : அநேகம் பாட்டுக்களின் முதல் அடிதான் தெரியும். அவைகளையே தாறுமாறாகக் கோத்துப் பாடுவார். நான் வேண்டுமானால் மாதிரிக்கு ஒரு பாட்டைப் பாடுகிறேன் கேள்.

(பாடுகிறாள்)

"நேற்றந்தி நேரத்திலே நீராடும்
கரைதனிலே,
நீரேன் பள்ளி கொண்டீரையா?
க்ஷீர ஸாகர சயனா,
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி
எண்ணி,
உன் திருவடி சரணமென்று நான் தப்பி
வந்தேன்,
எனக்குன்னிருபதம் நினைக்க வர
மருள்வாய்."

எப்படி இருக்கு பாட்டு?

பிறவாத கு. : தாறுமாறாகப் பாடுவார் என்று சொன்னாயே; உனக்கு எப்படித் தெரியும்.

சுதா : அம்மா சொல்லிக் கேட்டிருக்கேன்.

பிறவாத கு. : பேசுகிறதைப் பார்த்தால் நீ அம்மா பொண் போலிருக்கு. உனக்குத் தம்பியாய்ப் பிறந்து அப்பா கக்ஷியில் சேரலாம் என்று தோன்றுகிறது.

(மாலினி என்னும் சிறுமி வருகிறாள்.)

மாலினி : சுதா, உன்னைத்தான் தேடி வந்தேன்.

சுதா : என்ன விஷயம்?

மாலினி : விளையாடலாமென்று......இது யாரு புதிசு போலிருக்கே. இதையும் சேத்துக்கொண்டு பாண்டியாடலாமா?

சுதா : ஆடுவோம்......இரு, எங்கம்மாவிடம் சொல்லிவிட்டு வருகிறேன்.

(போகிறாள்.)

மாலினி : இந்த ஊருக்குப் புதிசா நீ?

பிறவாத கு. : ஆமாம்.

மாலினி : "ஆடமோடி கலதா" தெரியுமா, உனக்கு?

பிறவாத கு. : "ஆடமோடி கலதா" ன்னால் என்ன?

மாலினி : பாட்டு.

பிறவாத கு. : தெரியாது.

மாலினி : நீ எங்க ஸ்கூல் இல்லையா?

பிறவாத கு. : இல்லை.

மாலினி : என்ன என்ன நடந்திருக்கு உனக்கு? The Weaver and the Shuttle (நெசவுகாரனும் குழலும்) பாடம் நடந்திருக்கா?

பிறவாத கு.: இல்லை.

மாலினி: "வேங்கை வரிப்புலி நோய்?"

பிறவாத கு.: இல்லை.

மாலினி: "லால்சீ குத்தா (லாலசி குத்தா)?"

பிறவாத கு.: இல்லை.

மாலினி: 100 வாழைப்பழம் $1\frac{1}{2}$ ரூபாயானுல் 125 வாழைப்பழம் என்ன விலை?

பிறவாத கு: தெரியாது.

மாலினி: இது கூடத் தெரியாதா? உன்னை இன்னும வாசிக்க வெக்கல்லை?

பிறவாத கு.: இல்லை.

மாலினி: உன் பேரென்ன?

பிறவாத கு.: லொளலொளாக் கட்டை.

மாலினி: என்ன?

பிறவாத கு.: ஆமாம். நான் இன்னும் பிறக்கவே இல்லை. எந்தாத்தில் பிறக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கேன். அதைப்பற்றி ஸுதாவோடு பேசிக்கொண்டிருக்கச்சேதான் நீ வந்தே.

மாலினி: நல்லது, நான் சொல்லறதைக் கேள். எங்காத்தில் பிறந்து விடு.

பிறவாத கு.: என்னத்துக்காக?

மாலினி: கணக்கு சரியாகப் போய் விடும். இப்போ நாங்கள் நாலு பேர் தான் இருக்கோம். அப்படி இருக்கச்சேயே எங்கம்மா, "ஆண்டி பெத்தது அஞ்சும் குரங்கு" என்று எங்களைச் சொல்லுகிருள். நீயும் வந்துட்டயானுல் கணக்கில் குறைவு ஏற்படாது.

பிறவாத கு.: நீங்கள் நாலு பேர் ஆராரு?

மாலினி: நான் தடிச்சி, என் தம்பிகள் ஒருவன் பஸவன், இன்னெருவன் இட்லி, கடைசியிலே பயறு.

பிறவாத கு.: "தடிச்சி, பஸவன், இட்லி, பயறு!" ரொம்ப நன்னு இருக்கு! உங்களுக்கெல்லாம் இந்தப் பெயர் வெச்சது யார்?

மாலினி: எங்கம்மா.

பிறவாத கு.: அப்படியானுல் நான் உங்காத்தில் பிறக்கமாட்டேன். உங்கம்மாவுக்கு வாய்த துடுக்குப் போல் இருக்கு. எனக்கும் ஏதாவது அவிசப் பெயரிட்டுடுவள்.

மாலினி: அதற்கு நான் உபாயம் சொல்லுகிறேன், கேள். நான் உனக்கு முன்னடியே "ரத்னம்" என்று பெயர் வைத்துவிடுகிறேன். பிறகு நாங்கள் நாலு பேரும் உன்னை "ரத்னம், ரத்னம்" என்று கூப்பிடுவோம். அப்போ, அம்மாவும் அந்தப் பிராமணனும் அப்படியே உன்னைக் கூப்பிடப் பழகிக்கொள்ளுவார்கள்.

பிறவாத கு.: அந்தப் பிராமணன் என்றுயே அவர் யாரு?

மாலினி: எங்கப்பா.

பிறவாத கு.: "பிராமணன்" என்று அவருக்கு யார் பெயரிட்டது?

மாலினி: அம்மாதான்.

பிறவாத கு.: நல்ல அம்மாடிம்மா உனக்கு! உங்காத்தில் பிறக்க எனக்கு இஷ்டமில்லை என்று உங்கம்மாவிடம் சொல்லு. எப்போ அவள் வாயை அடக்கிக் கொண்டு மரியாதையாகப் பேசக் கத்துக் கொள்ளுகிருளோ அப்போதான் நான் உங்காத்தில் பிறக்க இஷ்டப்படுவேன்.

(சுமதி என்ற மற்ருெரு சிறுமி வருகிருள்.)

சுமதி: என்னடீ மாலினி, நான் வருவதைக்கூடக் கவனிக்காமலிருக்கே?...புது ஸ்நேகம் போலிருக்கு; புது மோகமோ?

மாலினி: சீ, சீ. இதையா சொல்லறே? இது லொள லொளாக் கட்டைன்னு!

சுமதி: யாரு!

மாலினி: இது சேத்தியில்லேடி. உப்புக் குச் சப்பாணி, ஓலைக்கு எழுத்தாணி. இது இன்னும் பிறக்கவே இல்லை. எங்கே பிறக்கலாம் என்று யோசிச்சுக்கொண்டிருக்காம். எங்காத்தில் பிறக்கச் சொன்னேன். மாட்டேங்கறது. நீ இங்கேயே இரு.

(போகிருள்.)

சுமதி: ஐயோ, பாவம்! மாலினி சொன்னது நிஜந்தானு?

பிறவாத கு.: ஆமாம்.

சுமதி: இனிமேல் தான் பிறக்கப் போறயா?

பிறவாத கு.: ஆமாம்.

சுமதி: எப்படிப் பிறக்கப் போறே? பிள்ளையாகவா? பெண்ணுகவா?

பிறவாத கு.: இன்னும் தீர்மானிக்கவில்லை. கிடைக்கிற அம்மாவுக்குத் தகுந்தாப் போலப் பிறப்பேன்.

சுமதி: ஆனுல் சரி. எங்காத்தில் அம்பிப் பாப்பாவாகப் பிறந்துடு. எல்லாருக்கும் ரொம்ப நன்னுயிருக்கும்.

பிறவாத கு.: எப்படி?

சுமதி: இல்லாவிட்டால் எங்கம்மா அழுருளே.

பிறவாத கு.: எதுக்காக அழுருள்?

சுமதி: நாங்கள் எல்லாரும் பெண்களாய்ப் பிறந்துவிட்டோமே என்று ரொம்பக் கவலைப்படருள். என் தங்கை பிறந்தபோது அழுதாவாம்.

பிறவாத கு.: அழுவானேன், பயந்தாங் கொள்ளி!

சுமதி: ஏற்கனவே அஞ்சு பெண்களாச்சு; போராதுன்னு இன்னெரு பெண்

பிறந்திருக்கே என்று விசாரப்பட்டாளாம். ஆகையால் நீ எங்காத்துக்குத் தம்பியாய் வந்துடு.

பிறவாத கு.: உங்கம்மாவுக்குக் கொஞ்சம் தைரியம் உண்டாக்கவாவது நான் உனக்குத் தம்பியாகப் பிறக்கலாம். ஆனால்.........

சுமதி: என்ன யோசிக்கறே?

பிறவாத கு.: நீங்கள் ஆறு பேரும் பெண்கள் ஆச்சேன்னு யோசிக்கறேன்.

சுமதி: அதனால் என்ன? உன்னை அருமையாக வெச்சுக்கறோம்.

பிறவாத கு.: அதனால்தான் எனக்குப் பயமாக இருக்கு. செல்லம் கொடுத்து என்னைப் பாழாக்கிவிடுவகளே.

சுமதி: இல்லவே இல்லே. நான் வேணுமானால் ஸத்தியம் பண்ணித் தரேன்.

பிறவாத கு.: அங்கே போகப் படாது, இங்கே வரப்படாது, அதைத் தொடப் படாது, இதை எடுக்கப்படாது என்றெல்லாம் கட்டுப்பாடு கூடாது. தெரியுமா?

சுமதி: சரி.

பிறவாத கு.: மண்ணில் விளையாடினாலும் சரி, தண்ணீரில் தொளைஞ்சாலும் சரி, புஸ்தகத்தைக் கிழித்தாலும் பண்டங்களை வாறி இறைத்தாலும், அம்மா; பெண்கள் எல்லாரும் பொறுத்துக்கணம்.

சுமதி: சரி.

பிறவாத கு.: ஆனால் இன்னும் ஒரு தடங்கல் இருக்கே.

சுமதி: என்ன அது?

பிறவாத கு.: சுதா உனக்கு முன்னால் வந்து அழைச்சிருக்காளே.

சுமதி: அழைச்சாளா? அவள் ஒண்ணுமில்லாத விஷயத்துக்கெல்லாம் பொய் சொல்லுவளே. உன் இஷ்டம், வேணுமானால் அவாத்துக்கே போ.

பிறவாத கு.: அவளிடம் போக வாண்டாம்னால் மாலினி தங்காத்துக்கு அழைச்சிருக்காளே.

சுமதி: மாலினியா? அவள் எடுத்ததுக்கெல்லாம் சண்டை பிடிப்பளே. என்னமோ, நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். அப்புறம் உன் இஷ்டம்.

பிறவாத கு.: சுமதி, நான் சொல்வதைக் கேள். சுதாவும் மாலினியும் அவா அம்மாவிடம் பேசப் போயிருக்கா. நீயும் உங்கம்மாவிடம் பேசிவிட்டு வா. அதற்குள் நானும் ஒரு தீர்மானத்துக்கு வரப் பார்க்கிறேன்.

சுமதி: சரி, இங்கேயே இரு. சீக்கிரம் திரும்பி வறேன். (போகிருள்.)

(பேபி என்னும் மற்ருெரு சிறுமி ஓடோடி வருகிருள்.)

பேபி: பாத்தியா? என்னை ஒரு குத்தா (நாய்) கடிக்க வந்தது. ரொம்ப டர் (பயம்) ராய் விட்டேன்.

பிறவாத கு.: பயப்படாதே. குத்தா உன்னை எதற்காகக் கடிக்கும்?

பேபி: நான் அகேலாவாக (தனியாய்) இருந்ததைப் பாத்துடுத்து. ஆயா எங்கேயோ போயிருந்தா. நான் கேல் (விளையாட்டு) பண்ணிக்கொண்டே ரொம்ப தூரம் வந்துட்டேன்.

பிறவாத கு.: உங்கம்மா எங்கே?

பேபி: அம்மாவும் அப்பாவும் ஒரு பார்ட்டிக்குப் போயிருக்கா. ஜல்தி வந்துடறதாகச் சொன்னு.

பிறவாத கு.: உன் பேர் என்ன?

பேபி: பேபி. உன்னுடைய நாம் (பெயர்)?

பிறவாத கு.: எனக்கு நாம் கிடையாது. நான் இன்னும் பிறக்கவே இல்லே.

பேபி: "ஸச்" சா (உண்மையா)? நீ இன்னும் பைதா (பிறப்பு) ஆகல்லேயா?

பிறவாத கு.: இல்லே. எங்கே பிறக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கேன்.

பேபி: ரொம்ப ஸோச் (யோசனை) பண்ணுதே. எங்க வீட்டில் பைதா பண்ணு. நாம் ரெண்டு பேரும் கேல் பண்ணலாம்.

பிறவாத கு.: உங்கம்மா என்ன சொல்லுவாளோ?

பேபி: ஒண்ணும் சொல்லமாட்டா. அவளுக்குத் தெரியாமலே பைதா பண்ணேன்.

பிறவாத கு.: அது முடியாது.

பேபி: ஏன் முடியாது? என்னுடைய நர்ஸரியில் எத்தனையோ கிலோனு (பொம்மை) இருக்கு. நீயும் வந்துடேன்.

பிறவாத கு.: நான் ஒரு கிலோனு என்று எண்ணிண்டிருக்கயா? இதோ பார் பேபி. உன்னைப் பார்த்தால் நீ ஒரு பெரிய இடத்துப் பொண்போல் இருக்கு.

பேபி: ஆமாம், எங்கப்பா கலெக்டர் ஸாப் (துரை), எங்கம்மா மேம் ஸாப் (துரைசாணி).

பிறவாத கு.: அப்படின்னு ரொம்ப ரொம்ப யோசித்துத்தான் நான் உங்காத்துக்கு வரணும்.

பேபி: ஏன்?

பிறவாத கு.: பெரிய இடத்துக்கு எல்லாம் கூப்பிடாமல் போகக்கூடாது.

பேபி: நான் கூப்பிடுகிறேனே.

பிறவாத கு.: போராது.

பேபி: அப்படின்னு ஆயாவைக் கூப்பிடச் சொல்லட்டுமா?

பிறவாத கு.: வேண்டாம். ஆயா கூப்பிட்டால் வரமாட்டேன்.

பேபி: ஆனால் சரி, மூல்சந்தைக் கூப்பிடச் சொல்லட்டுமா!

பிறவாத கு.: மூல்சந்த் யாரு?

பேபி: எங்க பேரா (Bearer).

பிறவாத கு.: அவாள்ளாம் கூப்பிட்டால் வரமாட்டேன். உங்கம்மா கூப்பிட்டால்தான் ஒருவேளை வருவேன். அதுவும் நிச்சயமில்லை.

பேபி: அப்படின்னா இங்கேயே இரு. அம்மாவைக் கேட்டுட்டு பின் (மறுபடி) வறேன்.

(போகிறாள்.)

(சுதா வருகிறாள்.)

சுதா: எங்கம்மாவைக் கேட்டேன். எல்லாத்தையும் எனக்குச் சொல்லிவிட்டாளே!

பிறவாத கு.: என்ன சொன்னாள்?

சுமதி: நீ எங்காத்துக்குத் தம்பிப் பாப்பாவாப் பிறக்கப் போகிறாயாம். சந்தேகமே இல்லையாம்.

பிறவாத கு.: அவ்வளவு நிச்சயமாச் சொல்ல முடியுமா?

பிறவாத கு.: முடியும்.

பிறவாத கு.: எப்படி முடியும்?

சுமதி: எங்கப்பா ராமாயணம் வாசிக்கிறாராம். ஸுந்தர காண்டத்தை நித்தியம் பாராயணம் செய்கிறாராம்.

பிறவாத கு.: ஓகோ! உங்கப்பாவுக்கு ஒண்ணும் தெரியாது என்று சொன்னயே.

சுதா: அது என்னவோ, நீ எங்காத்துக்கு வருவது நிச்சயமாயிடுத்தோன்னா?

பிறவாத கு.: அப்படி ஒண்ணும் நிச்சயமில்லை.

சுதா: ஏன்?

பிறவாத கு.: உங்கப்பா ராமாயணத்தை அர்த்தம் தெரிஞ்சிண்டு வாசிச்சாத்தான் நான் உனக்குத் தம்பியாகப் பிறப்பேன். அர்த்தம் தெரியாமல் வாசிச்சுட்டு வால்மீகியோடு பேரம் பண்ணிட்டோம் என்று எண்ணினாரானால் நான் உங்காத்துக்கு வரமாட்டேன். அப்படி ஒருவேளை வந்தாலும் உனக்குத் தங்கையாகத்தான் வருவேன்.

(மாலினி வருகிறாள்.)

மாலினி: ஏ, லொளலொளாக்கட்டை, எங்கம்மா என்ன சொன்னாள் தெரியுமா?

பிறவாத கு.: என்ன சொன்னாள்? ஆண்டிக்கு ஐந்தாவது புத்திர பாக்கியம் வேணுமென்றாளா?

மாலினி: இல்லவே இல்லை.

பிறவாத கு.: பின் என்ன சொன்னாள்?

மாலினி: "அதை என்னத்துக்குடி இப்போ கூப்பிடறே? பிள்ளை பிறக்கல் வேன்னு யார் அழறா?" என்றாள்.

பிறவாத கு.: நீதானே சொன்னே, நாலு குழந்தைகளை வைத்துக் கொண்டு ஆண்டி பெத்தது அஞ்சும் குரங்கு என்று வையறான்னயே!

மாலினி: அது வெறும் பேச்சுக்குத்தானாம். கணக்கை இப்போ பூர்த்தியாக்க வாண்டாம்னாள்.

(சுமதி வருகிறாள்.)

பிறவாத கு.: உங்கம்மா என்ன சொன்னாள்?

சுமதி: சுருக்க வரச்சொல்லு. பாலகிருஷ்ணன் என்று பெயர் வச்சு அழைக்கிறேன் என்றாள்.

மாலினி: நல்லதாப் போச்சு. அவாத்துக்கே போ. ஆறு பெண்கள் இருக்கா. நித்தியம் கிருஷ்ண லீலா நாடகம் போடலாம்.

(பேபி வருகிறாள்.)

பேபி: எங்கம்மா கிட்டே சொன்னேன். சரிதான் என்று சொன்னா. ஆனால் இப்போ வருவதைக் காட்டிலும் லடாய் (யுத்தம்)க்கு அப்புறம் வந்தயானால் நன்றாக இருக்கும் என்று சொன்னா.

பிறவாத கு.: ரொம்ப சரி; உங்களை எல்லாரையும் விசாரிச்சாச்சு. நானும் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டேன்.

சுதா: யாராத்துக்குப் போகப் போறே?

மாலினி: எங்காத்துக்கா?

சுமதி: யாராத்துக்குப் போகப் போறே?

பேபி: எங்காத்துக்கா?

பிறவாத கு.: என்னுடைய அருமை தெரிஞ்சவா ஆத்துக்குத்தான் போவேன். அதை ஒரு பாட்டு வழியாகக் கண்டுபிடிக்கலாம். அதனுடைய அர்த்தம் என்னன்னா, தன் குழந்தையை மடிமேல் வெச்சிண்டு, அதனுடைய அழகான சிரிப்பைப் பாத்துண்டும், இனிமையான மழலைச் சொல்லைக் கேட்டுண்டும் இருக்கும் அப்பா அம்மா, அந்தக் குழந்தையின் உடம்புப் புழுதி அவா மேல் படறதினாலே பரிசுத்தமாறா. இந்தப் பாட்டை உங்கப்பா அம்மாவிடம் பாடுங்கோ. யார் அதை முகம் கோணாமல் கேட்கிறாளோ அவாத்துக்குத்தான் போவேன். பாட்டைக் கேளுங்கோ:

"आलक्ष्य दन्तमुकुलाननिमित्तहासैः
अव्यक्तवर्णरमणीयवचःप्रवृत्तीन् ।
अङ्काश्रयप्रणयिनस्तनयान् वहन्तो
धन्यास्तदङ्गरजसा मलिनीभवन्ति ॥"

அபராஜிதா

எப். டபிள்யூ. பெயின்

மொழி பெயர்ப்பு: கி. சாவித்திரியம்மாள்

(சென்ற இதழ் 188-ஆம் பக்கத் தொடர்ச்சி)

15

“அரசர்களையும் நாவிதர்களையும் கொண்டு போய் உடைப்பிலே போடு” என்றாள் அபராஜிதா; “நீர் அரசனாக இருந்தாலும் நாவிதனாக இருந்தாலும் இருவருமாக்வே இருந்தாலுந்தான் எனக்கு ஆகவேண்டியது என்ன? ஒருவராலும் என் மீனுக்கு உயிரை உண்டாக்குவது என்னவோ முடியப் போவதில்லை. தன்வந்தரியைப்போல், செத்தவரை மீண்டும் பிழைப்பு மூட்டும் சக்தி மட்டும் உமக்கு இருந்தால் அப்பொழுது இரு கைகளாலும் சேர்த்து உம்மைக் கட்டி வரவேற்க மாட்டேனா?”

இவ்வாறு கூறி அவள் திடீரென்று எழுந்து ஆவல் நிறைந்த பார்வையுடன் இரு கைகளையும் நீட்டி அவன் அருகே ஓடினாள். ஆனால் மறு நிமிஷமே நீட்டிய கைகளைத் தொங்கவிட்டு வருத்தத்துடன் முகத்தை அப்பால் திருப்பிக் கொண்டாள்.

“ஆஹா! ஏதோ கனவு கண்டவளைப்போல அல்லவோ பேசுகிறேன்! நீரோ தன்வந்தரி அல்ல; சாதாரண அரசர். உம்மால் என்ன பிரயோசனம்?” என்று கூறிவிட்டு அடர்ந்த கூந்தலில் முகத்தை மறைத்துக் கொண்டவளாய்க் கீழே கிடந்த மீனுக்குப் பக்கத்தில் கால்களை நீட்டிப் படுத்துக்கொண்டாள். அவ்விதம் படுத்திருக்கும் பொழுது அவளது நீண்ட கூந்தல் படிந்திருந்த இடையின் மேற்பாகம் உயர்ந்து எழும்பிய மணல் திட்டுப்போல் அவன் கண்டு வியக்கும்படி, “எங்கே! இத்தகைய எழிலை நீர் வேறு எங்கேனும் கண்டது உண்டோ?” என்று அவனை இறுமாப்புடன் கேட்பது போல விளங்கிற்று.

அவள் இப்படியெல்லாம் செய்யச் செய்ய அவள் இணையற்ற அழகைக் கண்டு என்ன செய்வதென்று தெரியாமல் காமரூபன் மதி மயங்கி நின்றான். “இந்த இழவு மீன் இந்தச் சமயம் பார்த்துத்தானா சாகவேண்டும்? எனக்குப் பெரிய துரதிருஷ்டமாய் வந்து சேர்ந்ததே! இவள் இந்த மீனுக்காக உண்மையில் மாய்ந்துதான் போய்க்கொண்டிருக்கிறாள். ஆயினும் என்ன வேடிக்கை! ஒரு மீனுக்காக இப்படிக் கண்ணீர் வடிக்கும் ஸ்திரீயை யார் கண்டிருப்பார்கள்? இவள் எப்பொழுதுதான் அழுகையை நிறுத்துவாளோ தெரியவில்லையே! இப்பொழுது என்ன செய்வது? கண்ணீர் விடும் பொழுது இவள் அழகு முன்னிலும் அதிகமாகவே சோபித்தது. பூத்துக் குலுங்கும் முல்லைக் கொடிமீது மழையும் வெயிலும் மாறி மாறி விழுந்தால் எவ்வளவு அழகாக இருக்குமோ அவ்வளவு அழகாகவே இருக்கிறது இவள் தோற்றமும். இருந்தாலும் இது ஒரு விந்தைதான். பார்வைக்கு வயசு வந்த பெண்ணாக இருந்தாலும் உண்மையில் உடைந்து போன பொம்மையை வைத்துக்கொண்டு அழும் சிறு குழந்தைபோல அல்லவா இவள் ஆறாகக் கண்ணீர் வடிக்கிறாள்?” என்று அவன் தனக்குள்ளேயே கூறிக்கொண்டான்.

திடீரென்று அபராஜிதா எழுந்து உட்கார்ந்து கொண்டாள். தன் அருமை மீனின் தலையை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு ஒரு குழந்தையைப்போல் அதைத் தாலாட்டத் தொடங்கினாள். அடிக்கொரு தரம் அதை முத்தமிடுவதும் இடையிடையே காமரூபனைக் கடைக்கண்ணால் நோக்குவதுமாக இருந்தாள்.

“அபராஜிதா! இந்த மீனைத் தவிர உன் அன்புக்குப் பாத்திரமானவர்கள் வேறு ஒருவருமே இல்லையா? அரசன் என்றால் கூட நீ இவ்வளவு அலக்ஷியமாய் இருப்பதற்கு ஒரு காரணமும் தெரியவில்லையே! செத்தவர்களுக்கு உயிரை அளிக்க முடியாவிட்டாலும் உயிரோடு இருப்பவர்களுக்கு எவ்வளவோ சந்தோஷத்தை அளிக்க அரசர்கள் வல்லவர்கள் அல்லவா? இப்பொழுது என்னைத் தான் எடுத்துக்கொள்; உனக்காக நான் என்னதான் செய்யமாட்டேன்!” என்றான் காமரூபன்.

“என் வெள்ளி மீன் மீண்டும் பிழைத்தெழுந்தால் போதும். எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம்” என்றாள் அபராஜிதா.

காமரூபன் கோபக்குறிப்போடு பேசலானான்: “மீன் மீன் என்று இதென்ன புலம்பல்? செத்த

மீனுக்கு என்னால் எப்படி மீண்டும் உயிரை அளிக்க முடியும்? நான் என்ன பிரம்ம தேவனா? உயிரோடு இருக்கும் கணவன், அதிலும் ஓர் அரசன், ஒரு செத்த மீனின் விலை பெறமாட்டானா? உன்னை என் ராணியாக்கி உன் வாழ்வை ஒரே இன்பமயமாக்கிவிடுகின்றேன். அப்பொழுது இந்த உயிரற்ற மீனை நீ அடியோடு மறந்துவிடுவாய்.''

அதைக் கேட்டு அவள் ஒரு புறமாய்த் தலையைச் சாய்த்துப் பாதி மூடிய கண்களுடன் அவனை வெகு நேரம் நோக்கிய வண்ணம் இருந்தாள். அவள் மடியிலிருந்த மீன் நழுவித் தரையில் விழுந்தது. சிறிது பொறுத்து அவள் தனக்குள்ளேயே பேசிக்கொள்வது போல, ''அவர் கூறுவது உண்மைதான். இப்பொழுது ஒரே ஆனந்தக் கூத்தாடுவார்கள். இத்திவ்விய ரூபத்தைக் கண்டு யார்தாம் மயங்கமாட்டார்கள்? அத்துடன் அரசராகவும் இருந்தால் கேட்கவேண்டுமா?'' என்று கூறிக்கொண்டாள். தன் நீண்ட கூந்தலை ஒரு கையில் சுற்றிய வண்ணம் அவன் மதிப்பைத் தராசில் வைத்து எடைபோட்டுப் பார்ப்பவள் போல அவனை நோக்கியவாறே உட்கார்ந்திருந்தாள். அவள் பக்கத்தில் மீன் அப்படியே கிடந்தது. தன்னை அவள் ஆவலுடனும் வியப்புடனும் நோக்குவதைக் காண, காமரூபனுக்குப் பெருமை தாங்கவில்லை.

'ஆஹா! மந்திரம் இப்பொழுதுதான் வேலை செய்கிறது என்று தோன்றுகிறது. ஒவ்வொரு பெண்ணும் கண்டு ஆசை கொள்ளும்படி காந்தம்போல் வசீகர சக்தியுடன் விளங்கும் இவ்வுடலைப் பெற்ற மாத்திரத்தில் நான் முற்றும் வேறு மனிதனாகி விட்டேன் அல்லவா? எவனை ஒவ்வொரு ஸ்திரீயும் ஒரே வெறுப்புடன் நோக்கினாளோ அவனே இப்பொழுது எந்தப் பெண்ணும் கண்டு மயங்கும்படி ஆகிவிட்டான்' என்று மனத்துள் எண்ணிக்கொண்டு வெளிப்படையாய், ''அபராஜிதா! எது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். ஒன்றுமட்டும் நிச்சயம். நீ எப்படிச் சொல்லுகிறாயோ அப்படியே செய்வதைத் தவிர எனக்கு இவ்வுலகில் வேறு இச்சை இல்லை. எழுந்திரு. இந்தச் செத்த மீனைக் குளத்தில் எறிந்துவிடு. அந்த நஷ்டத்திற்கு ஈடுகட்ட நான் உனக்கு எவ்வளவோ செய்கிறேன்'' என்றான்.

''ஆஹா அரசே! என்னை முற்றும் தவறாகவே மதித்துவிட்டீர்களே'' என்றாள் அபராஜிதா மெதுவாய்; ''இந்த நிமிஷம் நேசிப்பதும் அடுத்த நிமிஷம் மறந்துவிடுவதும் சிலருக்கு வெகு எளிது. அப்படிப்போன்றவள் அல்ல நான். நான் நேசித்தால் ஒரே அடியாய் நேசிப்பேன். லேசில் மறக்கமாட்டேன். ஆயினும் இப்படியெல்லாம் நடவாதிருந்தால் ஒருகால் உம்மீது எனக்கு அன்பு உண்டானாலும் உண்டாகலாம். இப்பொழுதோ அப்படி இல்லை. என் அருமை மீனுக்குப் பதில் உம்மீது அன்பு கொள்ளும்படி என்னை மெள்ள ஆசைகாட்டி ஏமாற்றப் பார்ப்பது மிகவும் கொடிது அல்லவா?''

''ஐயோ! அபராஜிதா, அப்படி ஒன்றும் இல்லை. உன் மீன்மீது எவ்வளவு வேண்டுமானாலும் அன்பாக இரு. நான் ஒன்றும் தடுக்கவில்லை. ஆயினும் அது செத்துப் போய்விட்டது என்பதை மறக்க முடியுமோ? அதன் சாவைப் பற்றியே துக்கித்துக்கொண்டு இனி உன் வாழ்வு முழுவதையும் கழிப்பதாக உன் உத்தேசமா? ஓர் அரசனுடைய அன்பு அதற்கு ஈடாக இருந்து உன் மனசுக்கே திருப்தி அளிக்க முடியாதா?''

அபராஜிதா ஒன்றும் பதில் கூறாமல் முதலில் மீனையும் பிறகு காமரூபனையும் மாறி மாறி நோக்கினாள். நோக்கும்பொழுது மெதுவாய் அவள் பார்வையில் தயக்கம் தோன்றியது. காமரூபன் முகத்தை அவள் ஒவ்வொரு தரம் நோக்கும்பொழுதும் அவள் இதழ்களில் ஒரு புன்னகையின் சாயை தோன்றி மறைந்தது. அவளுடைய ஒவ்வொரு பார்வையும் அனலில் தோய்த்த வைர அம்புபோல அவன் இருதயத்தில் ஊடுருவிப் பாய்ந்து தகிக்கத் தொடங்கிற்று.

'இவளுக்கு இப்பொழுதுதான் கொஞ்சம் சபலம் தட்டுகிறதுபோலும்! எப்பொழுது சந்தேகம் ஏற்படுகிறதோ அப்பொழுது நிச்சயம் நான்தான் வெற்றியடைவேன்' என்று அவன் எண்ணமிட்டான். திடீரென்று காமத் தீயானது அவன் உடல் முழுவதும் பிரவேசித்து அவனை மெய்ம்மறந்தவனாகச் செய்தது. தான் அவளை மனைவியாகப் பெற்று அடையும் இன்பத்தை நினைக்கும்பொழுது களிப்பு மிகுதியால் அவன் தேகம் நடுங்கலாயிற்று.

திடீரென்று அபராஜிதா அவனைப் பார்க்காமலே கீழே தாழ்ந்த கண்களுடன், ''நல்லது, நான் இப்பொழுது உமது அரசியாவதற்குச் சம்மதிக்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். என் மீனின் ஞாபகச் சின்னமாக ஒரு ஸ்தூபி கட்டுவீர்களா?'' என்றாள்.

அந்தச் சொற்களைக் கேட்ட காமரூபன் ஒரே பரபரப்படைந்தான். ''அரசர்களின் ஞாபகார்த்தமாய்க் கட்டுவதற்கெல்லாம் மேல் என்றும் அழியாத வகையில் மீனின் பொருட்டு ஒரு ஸ்தூபி கட்டிவைப்பேன்'' என்றான்.

16

சிறிது நேரம் அபராஜிதா பூமியில் பதித்த கண்களுடன் உட்கார்ந்திருந்தாள். திடீ

றென்று அவள் தன் கண் இமைகளை நிமிர்த்திக் காமரூபனை ஒரு பார்வை பார்த்தாள். அந்தப் பார்வை அவள் உள்ளத்தில் பாய்ந்து அவனை அப்படியே எரித்துச் சாம்பலாக்கிவிடும்போல் இருந்தது. அவள் திரும்பித் தன் மீனைப் பார்த்துப் பேசத் தொடங்கினாள். தன்னைத் தானே நொந்து கொண்டு பச்சாத்தாபப்படுவது போன்ற குரலில் அவள் பேசுவதைக் கேட்ட போது, காமரூபனின் உள்ளம் ஒரே களிப்பில் ஆழ்ந்தது.

"ஆஹா! என் கண்மணியே! இதற்குள் உன்னை மறந்து உனக்குப் பெரும் துரோகியாகி விட்டேனே! வேறொருவரின் பொருட்டு உன்னை அடியோடு கைவிடுவதாக அல்லவோ இருந்தேன்! நீ இறந்து இன்னும் ஒரு நிமிஷம் ஆகவில்லையே! இந்தப் பெண்களின் உள்ளத்தை என்னென்று சொல்வேன்! காற்றிலும் நிலையற்றதாக அல்லவோ இருக்கிறது? தேனைக் கண்டு அதில் விழும் ஈயைப் போல ஒரு சௌந்தரியமுள்ள ஆடவனைக் கண்டு உடனே மயங்கிவிடுவதா? ஆயினும் இந்தத் திவ்விய ரூபத்தாலும் என்னை உனக்குத் துரோகம் இழைக்கும்படிச் செய்யமுடியுமா? அப்படி இருந்தால் நீ என்னை ஒருகால் மன்னித்தாலும் நான் எப்படி உன்னை மன்னிப்பேன்?"

அவள் திடீரென்று மீண்டும் அழத் தொடங்கினாள். காமரூபனின் உள்ளமோ பெருமை தாங்காமல் வெடித்து விடும் போல் இருந்தது. அவனுக்கு இருந்த ஆவலும் ஆத்திரமும் விவரிக்க முடியாமல் இருந்தன.

"ஆஹா! முதலில் இவள் கொஞ்சம் தயங்கினாள். இப்பொழுதோ என் வசீகர சக்தியை எதிர்க்க முடியாமல் அதற்கு ஆட்படும் நிலைமைக்கு வந்துவிட்டாள். ஆயினும் தன் மனம் இப்படி வலிமையற்றதாக இருப்பதற்குத் தானே குற்றவாளிபோல இவள் தன்னை நொந்து கொள்கிறாள்" என்று காமரூபன் தானே கூறிக்கொண்டான். அவன் உள்ளத்தில் ஒரே மகிழ்ச்சி பொங்கியது. இருந்தாற்போல் சற்று இறுமாப்பு அடைந்தவனாய் அதற்குள் அவளைத் தனக்கு உரியவளாகக் கருதியவன்போல் தன்னை அறியாமலே அவளைத் தயவோடு நோக்கத் தொடங்கினான்.

'ஆஹா! இந்தத் தரித்திரம் பிடித்த மீனுக்காக இவள் இத்தனை நேரம் படுத்திய பாட்டைக் கூட இப்பொழுது மன்னித்துவிடலாம் போல இருக்கிறது. எனக்கு வெகு தொந்தரவாய்த் தோன்றினாலும், பாவம்! இவள் தன் இயற்கைக்கு என்ன செய்வாள்? ஒரு வழியும் போக முடியாமல் இவள் தவித்தது எனக்கு நன்றாய்த் தெரிந்துவிட்டது. இவளை ஒரு சமயம் பார்த்தால், நிராகரிக்க மனமில்லாத வல்லவனின் விருப்பத்துக்குக் கடைசியில் ஒரு பெண் எப்படி இணங்குவாளோ அப்படியே தோன்றியது. மற்றொரு சமயம் பார்த்தாலோ பழைய பொம்மையை விட்டுப் பிரிய மனமில்லாமல் புதுப் பொம்மையைக் கையில் வைத்துக் கொண்டு அழும் சிறு குழந்தைபோலும் தோன்றியது. ஆஹா! இன்னும் சிறிது நேரத்திற்குள் இவளை எனக்குச் சொந்தமாக அடைந்து என் இச்சைப்படி இவளை முத்தமிட்டு அமிருத வெள்ளத்தில் முழுகும் பாக்கியத்தை நான் பெறுவேனா?' அவன் இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டிருக்கும் பொழுது அவனை எரித்துச் சாம்பலாக்கிக்கொண்டிருக்கும் அக்கினியில் ஒரு குடம் எண்ணெயைத் திடீரென்று ஊற்றினாற்போல, அவள் தன் மீனிடம் விடை பெற்றுக்கொள்ளும் பாவனையாக அதை எடுத்து முத்தமிட்டாள். பிறகு, "இனி நீங்கள் தாம்" என்று கூறுபவள்போல அவனைக் கடைக்கண்ணால் ஒரு பார்வை பார்த்தாள்.

"அரசே! உம்பொருட்டு நான் என் மீனைத் துறக்கிறேன். அதற்காகப் பின்பு நான் வருந்தாமல் இருக்கும்படி நீரே செய்யவேண்டும். நான் என்ன செய்வேன்! எல்லாம் உம்முடைய குற்றமே அல்லவா?" இவ்வாறு கூறிவிட்டு அபாஜிதா அவனை மன்னிப்புக் கேட்டுக் கொள்பவள்போல நோக்கினாள். திடீரென்று அவள் முகத்தில் ஒரு புன்னகை பிரகாசித்தது. அதைக் கண்டு, காமரூபனின் உள்ளம் கூட்டினின்றும் வெளியேற முயலும் பறவைபோலப் படபடவென்று அடித்துக் கொண்டது.

உணர்ச்சி மிகுதியினால் நடுங்கும் குரலில் மெதுவாய், "கவலைப்படாதே. எல்லாக் குற்றத்தையும் நானே ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்றான்.

அபாஜிதா திடீரென்று எழுந்து நின்றாள். பின்புறம் திரும்பிக் கீழே கிடந்த மீனை நோக்கிக்கொண்டே மெதுவாய் அவனை நோக்கிச் சென்றாள். காமரூபனும் அவளை எதிர் கொள்ள ஓர் அடி முன்வைத்தான். ஆனால், அவள் தன் கையை உயர்த்தி அவனைத் தடுத்து, "இல்லை; அப்படியே சிறிது நேரம் நில்லும்" என்றாள்.

அவன் அவள் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து யஜமானன் உத்தரவை எதிர்பார்த்துப் பாய்வதற்குத் தயாராய்க் காத்திருக்கும் வேட்டை நாய்போல நிற்க, அவனுக்கும் தன் மீனுக்கும் நட்ட நடுவில் அவள் நின்றுகொண்டாள். அவனையும் மீனையும் மாறி மாறி நோக்கிவிட்டுக் கண்களில் தயக்கமும் சந்தேகமும் குடி கொண்ட பார்வையுடன் ஒரே யோசனையுடன்

அவளை நோக்கினாள். காமரூபனுக்கு இனியும் ஆத்திரம் பொறுக்கவில்லை. தனக்கு ஸாதகமான முடிவை எதிர்பார்த்தவனாய் அபராஜிதாவிடம் நெருங்க யத்தனித்தான. அதே சமயம் அவள் திடீரென்று தன் கைகளைக் கொட்டி ஒரு பெருமூச்சுடன், "சந்தேகம் தீர்ந்தது. நான் தீர்மானித்துவிட்டேன். இல்லை, அது முடியாது. இந்த க்ஷணமே இவ்விடம் விட்டுப் போய்விடும். என்னால் இந்த வேதனை பொறுக்க முடியவில்லை. என் மனம் சலிப்பதற்குள் நீர் இவ்விடம் விட்டுச் செல்லாவிட்டால் என் உறுதி மீண்டும் தளர்ந்துவிடும்" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டுக் காமரூபனின் ஏமாற்றம் பொறுக்க முடியாதபடி ஆகிவிட்டது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று வருந்தினான்.

"ஹா! அபராஜிதா!" அவன் மேலே கூறாமல் நிறுத்திவிட்டான். ஏனெனில் அபராஜிதா தன் மீனின் அருகே செல்லுவதற்குக் கிளம்பியவள் திடீரென்று நினைவிழந்தவள்போல் தடுமாறிக் கீழே விழுந்தாள். கைகளினால் காமரூபனைத் தடுத்துக்கொண்டே மெல்லிய குரலில், "போதும்; இனி இந்தப் பேச்சை விட்டுவிடும். நான் என்ன செய்வதென்று தீர்மானித்துவிட்டேன். துரோகம் இழைப்பதென்பது என்னால் முடியாது. என் அருமை மீனே! உன்னை வேண்டிக்கொள்கிறேன். நீதான் என்ன செய்வது என்பதை இப்பொழுது முடிவாகத் தீர்மானித்துச் சொல்லவேண்டும். உன்னைத் துறந்துவிடும்படி நீ சொன்னால்தான் நான் அப்படிச் செய்வேன். ஆம்; அப்பொழுதுதான் அரசனைக் கணவனாக அடையும் இவ்வின்பக் கனவுக்காக உன்னை விட்டுப் பிரிவேன். உன் வாய் திறந்து நீ என்னை மன்னித்து உன்னை விட்டுவிடும்படிக் கூறிவிடு. அரசே! நீர் புறப்பட்டுப் போய்விடும். நீர் நினைப்பது இனி நிறைவேறாது" என்றாள்.

உணர்ச்சி மிகுதியால் சோர்வடைந்து அவள் கண்களை மூடிக்கொண்டாள். அச்சமயம் திடீரென்று காமரூபனுக்கு ஓர் எண்ணம் உதித்தது.

"கவலையிலும் மோகத்திலும் இவள் அடியோடு அம்மந்திரத்தை மறந்து போய்விட்டாள் என்று தோன்றுகிறது" என்று அவன் தானே கூறிக்கொண்டான். உடனே தன் பரபரப்பை அடக்கிக்கொண்டு மிகவும் ஏக்கத்துடன் கூறுபவன்போல், "அந்தோ! அபராஜிதா! கடைசியில் இதுவா உன் தீர்மானம்? என் அதிருஷ்டம் இப்படியா முடியவேண்டும்? உண்மையில் நீ விளையாடுகிறாயா? நீ செய்வதைப் பார்த்தால் என்னை வேண்டுமென்று பரிகசிப்பதுபோல் அல்லவா இருக்கிறது! உயிருடன் இருந்தால் கூட மீன் எங்கேயாவது வாய் திறந்து பேசுமா? அப்படி இருக்க அம்மீனை என் பாக்கியத்துக்கு அதிகாரியாக்கி என்னைப் பார்த்துச் சிரிக்கலாம் என்று எண்ணுகிறாயா? இத்தகைய கொடுமை எங்கேனும் உண்டா?" என்றான்.

அபராஜிதா கண்ணீர் சொரிந்துகொண்டே, "என்னை நோவதில் யாது பயன்? நான் என்ன செய்வேன்? உமக்கும் எனக்கும் இடையே, நிலைநிற்கக்கூடியதாய் ஏதாவது வேண்டாமா?" என்றாள்.

"அபராஜிதா! இது என்ன விளையாட்டு?" என்றான் காமரூபன்.

"இல்லை; நான் உண்மையைத்தான் கூறுகிறேன்" என்றாள் அபராஜிதா.

காமரூபனுக்குக் கோபம் பொங்கியது.

"என்ன அநியாயம்? இந்த மீனின் சம்மதம் கிடைக்கும் வரையிலும் நான் மனைவி இல்லாமல் இருக்கவேண்டுமோ? அது எந்தக் கல்பத்திலாவது சாத்தியமா?"

"அதற்கு என்ன செய்வது? அது ஒரு பாபமோ விரதமோ எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். என் மீன் வாய் திறந்து தன் சம்மதத்தைத் தெரிவிக்கும் வரையிலும் நான் மனமில்லாமல்தான் கிடக்க வேண்டும்."

"போதும்; என்னை இவ்விடமிருந்து அனுப்புவதற்கு நீ இதை ஒரு வியாஜமாய்க் கொண்டிருக்கிறாய் என்பது நன்றாய்த் தெரிகிறது. எனக்கு எல்லாம் விளங்கிவிட்டது. மீன் வாய திறந்து பேசினால்கூட நீ மறுபடியும் வேறு ஏதாவது சாக்குச் சொல்லி என்னை ஏமாற்றுவாய்" என்றான் காமரூபன் இகழ்ச்சியாய்.

அதைக் கேட்டு அபராஜிதா துக்கம் தாங்காமல் ஓவென்று அழுதாள். இருதயம் பிளந்துவிட்டது போல் விம்மி அழுது மெல்லிய குரலில், "ஐயோ! என்ன, இரக்கமில்லாமல் கடினமாய்ப் பேசுகிறீர்கள்! என் நிலைமையைக் கண்டபிறகும் இவ்வாறு பேசலாமா? என் மீன் சரி என்று சொல்லவேண்டும் என்று நான் எவ்வளவு ஆசைப்படுகிறேன் என்பது உமக்குத் தெரியவில்லையா? அது மட்டும் சம்மதித்துவிட்டால் நான் இப்படியே உமது விரிந்த கைகளில் வந்து விழுந்துவிடமாட்டேனா?" என்றாள்.

அதைக் கேட்கக் காமரூபன் மனம் பூரித்தான்.

'அப்படியானால் இனி இவள் என்னுடையவளே! இவளுக்கே திகைப்பை உண்டாக்கித் தான் கூறியபடியே செய்யும்படிச் செய்துவிடுகிறேன். ஏனெனில் ஒரு க்ஷணத்தில் என் உடலை நான் மீண்டும் அடைந்துவிடுவேன் அல்லவா?'

இவ்வாறு எண்ணியவனாய் அவன் மீனை உற்று நோக்கிக்கொண்டே மந்திரத்தை உச்சரித்தான். உடனே மீனின் உடலை அடைந்து, "அபராஜிதா! என் சம்மதத்தை அளித்துவிட்டேன். அரசனை மணம் செய்துகொள்" என்றான்.

17

இவ்வார்த்தைகளைக் கூறியதும் இடி முழக்கம் ீபான்ற ஒரு சப்தம் அவள் காதுகளில் விழுந்தது.

"கதாஸோரஸ்ய; ஸ்மராமிருதாஸ்ய." காமரூபன் ஆச்சரியத்துடன் நோக்கினான். அடுத்த நிமிஷம் புதருக்குப் பின்னிருந்த தன் பழைய உடலுடன் ஓர் உருவம் வேகமாய் வந்து கீழே குப்புற விழ, உடனே தான் விட்டுவந்த அரசனின் உடல் எழுந்து நிற்பதைக் கண்டான். அதே நிமிஷத்தில் அபராஜிதாவும் ஆனந்தக் கூச்சலிட்டு ஓடிச் சென்று அரசனைத் தழுவிக் கொண்டாள்.

"ஆஹா! பெருந்தன்மை படைத்த என் மீனே! உன் பேருதவிக்கு என்ன பதில் செய்யப்போகிறேன்! உன் உத்தரவுப்படியே நடப்பேன்; என் வார்த்தையையும் காப்பாற்றுவேன். கடைசியாக என்னைப் பிடித்திருந்த சாபமும் என் கன்னிப் பருவமும் கழிவதற்குக் காலம் வந்துவிட்டது" என்றாள்.

திடீரென்று அம்மீன் வீரிட்டுக் கத்திற்று. அந்தக் கத்தல் உடனே அழுகுரலாக மாறியது. அதைக் கேட்டு அபராஜிதா நகைத்துக் கொண்டே, "ஐயோ! அதிருஷ்டமற்ற மீனே! மரணமே நல்லதாக இருக்கும்பொழுது நீ எதற்கு மீண்டும் உயிர்பெற்று எழுந்தாய்?" என்றாள்.

இதற்குள் கேசவன் அபராஜிதாவை விட்டுவிட்டுத் தன் வாளை உருவியவனாய், "பிறர் உடல்களைக் களவாடுபவனே! இதோ உன் திவ்விய சரீரம் இருக்கிறது. மீண்டும் அதில் வந்து சேர். எங்கே, அம்மந்திரத்தை உச்சரி சீக்கிரம்! பத்து எண்ணுவதற்குள் இம்மீனை இரு துண்டாக்கி விடுவேன்" என்றான்.

உடனே தான் கூறியபடியே அவன் எண்ணத் தொடங்கியதும் காமரூபன் என்ன செய்வான்? சற்றும் மனமில்லாமலே மந்திரத்தை உச்சரித்துத் தன் பழைய உடலை மீண்டும் அடைந்தான். அதே சமயத்தில் கேசவன் பத்து எண்ணி முடித்து ஒரே வெட்டில் மீனை இருதுண்டாக்கினான். பிறகு திரும்பி நடுங்கிக்கொண்டு நிற்கும் காமரூபனின் குரல்வளையைப் பற்றிக் கொண்டு, "அடே படுபாவி! அகப்பட்டுக் கொண்டாய். இனிமேல் தப்ப முடியாது. இதோ உன்னைக் கீழே தள்ளி அம்மீனைப்போல் இரு துண்டாக்குகிறேன் பார். ஒரே வெட்டுத்தான்" என்றான்.

ஆனால் அதற்குள் அபராஜிதா அவன் கையைப் பிடித்துக்கொண்டாள்.

"நாதா! வேண்டாம், வேண்டாம். அவனை விட்டுவிடுங்கள். அவன் போகட்டும். முன்போல் தன் பழைய உடலை அடைந்ததே அவனுக்குப் போதும்" என்றாள்.

"நல்லது; போனால் போகிறது என்று உன்னை இத்துடன் விட்டேன். ஏ துரோகி, ஜாக்கிரதை! மறுபடியும் என் கண்ணில் பட்டால் மீனின் கதிதான்; இரண்டாம் முறை மன்னிப்பது என்பது என்னிடம் இல்லை. போய்ச் சேர்" என்றான் கேசவன்.

அரசனின் வேலையாட்கள் வெளியே அவனுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள் அல்லவா? திடீரென்று கேசவன் சென்ற வழியாகவே காமரூபன் வருவதை அவர்கள் கண்டார்கள். அந்த அதிருஷ்டமற்ற நாவிதன் கைகளைப் பிசைந்த வண்ணம், "நான்தான் அரசனாக இருந்தேன், நான்தான் அரசனாக இருந்தேன்" என்று ஓலமிட்டுக்கொண்டு நிற்காமல் ஓடினான். அதைக் கேட்டு வியப்பும் சிரிப்பும் தாங்கமுடியாமல் அவர்கள், "அடே! மறுபடியும் இந்த அம்பட்டப்பயல் எங்கிருந்தோ வந்து குதித்துவிட்டானே! அரசன்தான் வழியில் அவனைக் கண்டு விரட்டியடித்திருக்க வேண்டும். அவனுக்கு நல்ல பைத்தியம் பிடித்துவிட்டது என்று தோன்றுகிறது. இன்று காலைதான் நகரில் நான்தான் அரசன் என்று சொல்லிக்கொண்டிருந்தான். இப்பொழுதோ இவ்வனத்தில் வந்து நான்தான் அரசனாக இருந்தேன் என்று கூறுகிறான். இனிமேல் 'நான்தான் அரசனாகப்போகிறேன்' என்று கூற வேண்டியதுதான் பாக்கி" என்று பேசினர்.

காமரூபன் சென்றதும் காதலர் இருவரும் ஒருவரையொருவர் கட்டித் தழுவுவதும் முத்தமிடுவதுமாக வெகுநேரம் கழித்தனர். சற்றுப் பொறுத்துக் கேசவன், "இதோ பார்; காமரூபனைக் காட்டிலும் பெரிய திருடி நீதான். அவன் என் உடலை மட்டுந்தான் களவாடினான். நீயோ என் உள்ளத்தையே கொள்ளை கொண்டுவிட்டாய். ஒரு மந்திரமும் உச்சரிக்காமலே அது தானே என் உடலை விட்டு உன் சரீரத்திற்குள் பிரவேசித்துவிட்டது" என்றான்.

அதற்குப் பதில் அபராஜிதா புன்னகையுடன், "இல்லை; நீங்கள் கூறுவது அநியாயம். எல்லாரிலும் பெரிய கள்வர் நீங்கள்தாம். காமரூபன் உங்கள் தேகத்தையும் நான் உங்கள் உள்ளத்தையும் திருடியதாகச் சொல்கிறீர்கள். நீங்களோ என் ஆவி, உடல் இரண்டையும் அபகரித்து எனக்கு ஒன்றுமே பாக்கி

வைக்காமல் செய்துவிட்டீர்கள். என்னைக் கேவலம் உங்கள் நிழல், நீரில் காணும் உங்கள் பிரதிபிம்பம், உங்கள் குரலின் எதிரொலி என்னும்படி உங்களை விட்டு எனக்குத் தனி உருவமே இல்லாமல் அடித்துவிட்டீர்களே!" என்றாள்.

முடிவுரை

இவ்வாறு சிவபெருமான் கதை கூறி முடித்தார். உடனே அம்பிகை, "அபராஜிதாவிடம் எனக்கு நம்பிக்கை இல்லை. அவள் கூறுவதெல்லாம் வெறும் புரட்டு; அவளை அடியோடு நம்பலாகாது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் கடைசியில் அவள் ஒரு பாசாங்குக் கள்ளி என்பதைத் தவிர வேறு என்ன சொல்லுவது? பெண்கள் நிலையற்றவர்கள் என்று தான் முதலில் எண்ணியதே சரி என்று கேசவனே பிறகு தெரிந்துகொண்டானே என்னவோ யார் கண்டார்கள்? அது அவன் விஷயத்திலேயே உண்மையாக இருக்கும்" என்றாள்.

அதைக் கேட்டு மகேசுவரர் சிரித்தார்.

"ஆஹா! ஹைமவதி! சரியாய்ச் சொன்னாய். உன் புத்திக் கூர்மையே கூர்மை! ஒரு ஸ்திரீயை மற்றொரு ஸ்திரீதான் நன்கு அறிவாள். நீ ஊகித்தபடியேதான் அபராஜிதாவும் செய்தாள். அவ்வளவு பிரமாதமாய்ப் பேசினாளேயொழியக் கடைசியில் தனக்குப் பதில் தன்னைப்போன்ற ஒரு பெண் குழந்தையைப் பெற்று அவனிடம் அளித்துவிட்டு ஒரு வருஷத்தில் அவனைக் கைவிட்டுச் சென்றாள். இந்த நாக கன்னிகைகளே இப்படித்தான் மிகவும் நிலையற்றவர்கள்; தமக்குத் தோன்றிய படியெல்லாம் நடப்பார்கள். அவர்கள் அன்பு எல்லாம் சந்தியாகாலத்தில் தோன்றி மறையும் செவ்வானம்போல வெகு சீக்கிரம் மாறிப் போகக்கூடியது. ஊர்வசி, மேனகை முதலியவர்களைப்பற்றி நீ நன்கு அறிவாய் அல்லவா? அவர்களுடையதுபோல இந்த அப்ஸரஸுகள், வித்தியாதரிகள், நாக கன்னிகைகள் இவர்களுடைய இயல்பும் எப்பொழுதும் ஒரு நிலை இல்லாமல்தான் இருக்கிறது. இவ்வாறாகக் கேசவனின் வாழ்க்கை அவன் தந்தை நினைத்ததற்கு முற்றும் விரோதமாயிற்று. இல் வாழ்க்கையில் அவர் என்ன என்ன துன்பங்கள் அநுபவித்தாரோ அவைகளே கேசவனுக்கும் சம்பவித்தன. அம்மாதிரி நேரலாகாதென்று அவர் செய்த பிரயத்தனங்கள் யாவும் வியர்த்தமாய்ப் போயின. ஜன்மாந்தரங்களில் செய்த கர்மங்களின் பலனை மானிடர்கள் அநுபவித்துத்தான் ஆகவேண்டும். விதியைத் தடுக்க என்ன பாடு பட்டாலும் முடியாது. நெசவுகாரர்கள் நெய்யும் வஸ்திரம்போல் மாந்தர்களின் வாழ்க்கையும் அவர்கள் செய்த கர்மங்களுக்கு ஏற்றவாறு அமைகிறது. கொம்பில் கயிற்றைக் கட்டி இஷ்டம் இல்லாத பாதையில் இழுத்துச் செல்லப்படும் காளை மாடுபோல அவர்களும் செல்ல வேண்டியதாகிறது.

"அது போகட்டும். நீ மிகவும் கெட்டிக்காரி ஆயிற்றே! இதில் திருடன் யார் என்பதைச் சொல் பார்ப்போம். அபராஜிதா கூறியது போல அரசன் கேசவனா? அல்லது கேசவன் கூறியதுபோல அபராஜிதாதானா? இவ்விருவரையும்விடக் காமரூபனையே திருடன் என்று கூறலாம். யார் மூவரிலும் பெரிய திருடன் என்று சொல்லுவது?" என்றார்.

தேவி சிறிதும் யோசிக்காமல் வேகமாய், "அபராஜிதாதான், சந்தேகம் என்ன? அவளைத்தான் யாவரிலும் பெரிய குற்றவாளியாகச் சொல்ல வேண்டும். பாவம்! கேசவனும் காமரூபனும் அவள் ஆட்டி வைத்த பொம்மைகளாக அல்லவோ இருந்தனர்?" என்றாள்.

அதைக் கேட்டுச் சிவபிரான் உரக்கச் சிரித்தார்.

"ஆஹா! ஹைமவதி! நான் தந்திரமாய் விரித்த வலையில் நன்றாய் அகப்பட்டுக்கொண்டாய். நீ கூறியது முற்றும் தவறு. கடைசியில் நிஜமான திருடன் உன் கண்களில் படாமல் தப்பி விட்டான். கேசவனும் காமரூபனும் மட்டும் அல்ல, அபராஜிதாவுங்கூட, அந்த மீன் கொடியை உடைய, திருடர்களுக்கெல்லாம் மேற்பட்ட திருடன் மன்மதன் ஆட்டி வைத்த பொம்மைதான். நீயே அதைத் தெரிந்துகொண்டிருக்கலாமே. நான் ஏற்கனவே உனக்குக் குறிப்பாய்த் தெரிவித்தேன். அபராஜிதாவின் மீதுள்ள வெறுப்பில் நீதான் அதைக் கொஞ்சமும் கவனிக்காமல் இருந்துவிட்டாய். மீன்கொடியை உடைய மன்மதனைப்பற்றிக் கூறுவதற்குப் பதிலாக மீன் என்று கூறினேன். கேசவன், காமரூபன் இவ்விருவருடைய சரீரங்கள் மூலம் மன்மதன் தான் அபராஜிதாவின் உள்ளத்தைக் கவர்ந்தவன். அவன்தான் அவளை அவ்விதம் சூழ்ச்சி செய்து தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளும்படித் தூண்டியவன். முதலில் அவர்கள் தம் உடலை இழந்தது, பிறகு மீண்டும் பெற்றது எல்லாம் அவள் நோக்கம் நிறைவேறுவதற்கே யன்றி வேறு என்ன? ஒரு ஸ்திரீ ஒரு புருஷனைக் கண்டு காமுறுவது போன்ற தீவிரமான உணர்ச்சி உலகில் வேறு எதுவும் இல்லை. கேசவனே அவள் உள்ளத்தை ஊடுருவிச் சென்று தைக்கும் அம்புபோன்ற சௌந்தரியமுடையவனாக இருந்தான். ஆகவே அவனை எப்படியாவது அடைந்துவிட வேண்டும்

என்ற ஆவல் அவளுக்கு உதித்துவிட்டது. அதற்காக எவ்விதமான தடையையும் அவள் நிர்த்தாக்ஷிண்யமாய்த் தன் வழியினின்றும் அகற்றத் துணிந்துவிட்டாள். இதற்கெல்லாம் அந்த மன்மதன் இருக்கிறானே, அவன்தான் காரணம். முதலிலிருந்து கடைசி வரையிலும் கைகளால் கயிறுகளைப் பிடித்து எல்லோரையும் திரைக்குப்பின் மறைந்திருந்து அவன் ஆட்டி வைப்பதனால் நீ அவனைக் கவனிக்கவில்லை. இது தான் அவன் வழக்கம். இம்மூவுலகங்களிலும் உள்ள அனர்த்தங்களுக்கு அவனே மூல காரணமாக இருக்கிறான். மற்றவர்கள் அனைவரையும் ஒரே துன்பத்திற்குள்ளாக்கிவிட்டுத் தான் மட்டும் ஒரு தீங்கும் இல்லாமல் சௌக்கியமாயிருக்கிறான். ஒரே ஒரு தடவைதான் அவன் ஆபத்திற்கு உள்ளானான். அதுவும் முற்றும் அவன் பிழையினால் விளைந்ததல்ல. பாதி உன் தவறு என்று சொல்ல வேண்டும். அவன் எவ்வளவு துணிவுள்ளவனாயினும் என் தியானத்தைக் கலைக்கக்கூடாதென்று அவனுக்குத் தெரிய வேண்டாமா? கதையை ஆரம்பிக்குமுன்னமே நிஜமான குற்றவாளி யார் என்பதைக் கூறினேன். ஆனால் நான் கதையை முடித்த விதத்தில் நீ அதை மறந்துவிட்டாய். எப்படியோ நீ தோற்றுவிட்டாய். அதற்கு ஈடாக நான் கேட்பதை நீ கொடுத்துத்தான் ஆக வேண்டும்.''

''தோற்றுவிட்டேன் என்றால் எதைக் கொடுப்பது? இம்மூவுலகங்களிலும் நான் கொடுக்கக்கூடியதாயும் நீங்கள் விரும்பக்கூடியதாயும் உள்ள வஸ்து என்ன இருக்கப் போகிறது?'' என்றாள் உமா.

சிவபெருமான் அவளைச் சற்று நேரம் நோக்கிவிட்டுப் பிறகு தமக்குள்ளேயே, 'நல்லது! இவளை மீண்டும் ஒருமுறை மடக்கிவிடுகிறேன். தன்னிடமிருந்து ஒரு முத்தம் வேண்டுமென்று கேட்பேன் என்று இவள் நினைத்துக்கொண்டிருக்கிறாள். இவள் சற்றும் நினைக்காத ஒன்றைக் கேட்டுவிடுகிறேன்' என்று எண்ணியவராய் உரக்க, ''ஹைமவதி! நீ கொடுக்கக் கூடியது ஒன்று இருக்கிறது. அதுதான் எனக்கு வேண்டும்'' என்றார்.

அம்பிகைக்கு உடனே ஆவல் உண்டாயிற்று. ''என்ன அது?'' என்று கேட்டாள்.

''என் ஜடையில் வசிப்பதற்காகக் கங்கையை நீ மன்னிக்க வேண்டும்.''

அதைக் கேட்டுப் பர்வத ராஜபுத்திரியான பார்வதி தேவிக்குக் கோபம் மூண்டது.

''ஆஹா! உங்கள் பாசாங்கு எல்லாம் இப்பொழுதுதான் விளங்கிற்று. கங்கையுடனேயே நீங்கள் ஏகாந்தமாக இருங்கள். நான் இதோ போய்விடுகிறேன்'' என்று கூறிவிட்டு, மின்னல்போல அவள் அவ்விடத்தினின்றும் மறைந்துபோனாள்.

அதைக் கண்டு சிவபெருமான் புன்னகையுடன் பின்வருமாறு தாமே கூறிக்கொண்டார்:

'ஆஹா! கோபிக்கும்பொழுதுதான் எவ்வளவு அழகாக இருக்கிறாள்! பொறுமை கொஞ்சம் தணிந்ததும் தானே திரும்பிவருவாள். நான் இல்லாமல் அவளால் ஒரு நிமிஷமேனும் தரிக்க முடியுமா? மேலும் என்னுடைய சின்னங்கள் இல்லாமல் நான் இருக்க முடியாது என்பது அவளுக்குத்தான் நன்றாய்த் தெரியுமே! அதற்காகச் சண்டையிட்டுப் பிரயோஜனமில்லை என்பதும் அவள் அறிவாள். என் ஜடையில் கங்கை இல்லாமல் நானும் இருக்க முடியாது. அவளும் தன் பொறுமைக் குணத்தை விடுவது சாத்தியமல்ல. கடைசியில் அவளும் ஒரு ஸ்திரீதானே! பொறுமைக் குணம் இல்லை என்றால் ஸ்திரீகள் ஸ்திரீகளாகமாட்டார்கள். அவள் என் அருகில் இல்லாத இச்சமயம் என் பக்தர்களுக்குத் தரிசனம் அளிக்கிறேன்.'

இவ்வாறு எண்ணியவுடன் இமைப் பொழுதில் அவர் கைலாசத்தை அடைந்தார். அங்கே சென்று தம் கணங்களை நினைத்ததும் அவர்கள் உடனே வந்து சேர்ந்தனர். சிவபெருமானின் விநோதத்திற்காகப் பனி பெய்வது போல அங்கு வேகமாய் வந்து கூடிய அவர்கள் ஒருவரையொருவர் பனிக்கட்டிகளாலும் மரங்களாலும் அடித்துக்கொண்டு விளையாடும் பொழுது அவர்கள் உரத்த சிரிப்பு இடி முழக்கத்துடன் கலந்து பெரிதாய் ஒலித்தது. அச்சப்தத்தைக் கேட்டு அங்கே சஞ்சரித்துக் கொண்டிருக்கும் வேடர்களின் மனைவியர் அச்சம் கொள்ள, அவர்கள் உடல்கள் பயத்தினால் வெடவெட என்று நடுங்கின.

முற்றும்

இரும்புக்குள்ளும் புகும் எக்ஸ்-ரே

ஓரடி கனமுள்ள எஃகுக்குள்ளே புகுந்து அதனுள்ளே இருப்பவற்றைப் படம்பிடிக்கும் வன்மையுள்ள 'எக்ஸ்-ரே'யை அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். டாக்டர் எர்னஸ்ட் இ. சார்லடன் என்னும் அவர் சிகாகோவில் உள்ள ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனியின் ஆராய்ச்சிச் சாலையைச் சேர்ந்தவர். அந்த எக்ஸ்-ரே யந்திரம் இருபது லக்ஷம் வோல்ட்டு உடையது. 8 அங்குலம் கனமுள்ள எஃகின் உட்பகுதியை மூன்றரை நிமிஷத்தில் அந்த அதிசய யந்திரம் படம் பிடித்துவிட்டதாம்.

- உஸோவி.

கருப்பன் கைலாசம் சென்றது

தே. வீரராகவன்

பொதிய மலை அடிவாரத்தில், கருப்பன் என்ற குடியானவனுக்குக் கொஞ்சம் நிலம் இருந்தது. அதில் அவன் புன்செய்த் தானியங்களைப் பயிர்செய்வான். ஒரு சமயம் கருப்பன் அந்த நிலத்தில் சோளம் விதைத்திருந்தான். பருவத்தில் மழை பெய்தபடியால், விதைகள் முளைத்துப் பயிர்கள் செழுமையாய் இருந்தன.

கருப்பன் சில நாட்கள் வெளியூருக்குப் போகவேண்டியிருந்தது. போய்வந்து பார்த்தபோது பயிரில் பாதிப் பாகம் மேய்ந்திருந்தது. பயிரைப் பார்த்த கருப்பன் வயிறு எரிந்தது. தான் ஊரில் இல்லாததால் யாரோ இரவில் தன் நிலத்தில் மாடுகளை விட்டு மேய்ப்பதாகச் சந்தேகம் கொண்டான். அன்று இரவு அப்படிச் செய்யும் திருடனைக் கண்டுபிடிக்க எண்ணினான். அப்படியே இராத்திரி தன் வயலுக்கு அருகிலிருந்த ஒரு மரக்கிளையில் ஒளிந்துகொண்டிருந்தான்.

இரவு மணி பன்னிரண்டு இருக்கும். வானம் வெடித்தது போன்ற ஒரு சத்தம் கேட்டது. சத்தத்தைத் தொடர்ந்து ஒரு பெரும் ஜோதியும் தெரிந்தது. பின்னும் சில விநாடிகளில் ஒரு வெள்ளை எருது ஆகாயத்திலிருந்து வந்து கருப்பனுடைய நிலத்தில் இறங்கி மேயத் தொடங்கியது. இதைக் கண்ட கருப்பன் மரத்திலிருந்து இறங்கி வந்து மெள்ள எருதின் பின்னே சென்று அதன் வாலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். அவ்வளவுதான்! எருது மேலே கிளம்பிவிட்டது: கருப்பன் அதன் வாலை விடவே இல்லை. மேலே கிளம்பிய எருது மிக மிக உயரம் பறந்து சென்று சிவபெருமான் உலகமாகிய சிவலோகத்தை அடைந்தது.

தங்கள் இருப்பிடத்துக்கு ஒரு பூலோகவாசி வந்ததைக் கண்டு ஆச்சரியம் கொண்ட சிவபிரானின் பரிவாரங்களாகிற பூதப் படைகள் கருப்பனை இழுத்துக் கொண்டு சென்று சிவபெருமான் முன் நிறுத்தின. கருப்பன் ஒன்றுக்கும் அஞ்சவே இல்லை. கருப்பனைப் பார்த்துச் சிவபிரான், "நீ யார்? இங்கே எப்படி வந்தாய்?" என்று கேட்டார்.

"நான் யாராக இருந்தாலும், இங்கே எப்படி வந்தாலும் என்ன? இந்த வெள்ளை எருது யாருடையது?"

"அதுதான் என் வாகனமாகிய ரிஷபம்."

"ஓஹோ! நீரா ரிஷபவாகனராகிய சிவபிரான்? இதற்குத் தீனி போட முடியாத நீரா உலகிலுள்ள சகல ஜீவராசிகளையும் காப்பாற்றப்போகிறீர்?"

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"ஏனா? பொதிய மலை அடிவாரத்தில், என் வயலில் நான் பயிர்செய்திருந்த சோளத்தில் பாதிக்குமேல் உம் வாகனம் தின்றுவிட்டது. ஏழை நான் என்ன செய்வது?"

"வருத்தப்படாதே; உனக்கு ஏராளமாகப் பணம் தருகிறேன்" என்று சொல்லிச் சிவபெருமான் ஒரு பெட்டி நிறையப் பொன்காசுகளைக் கொடுத்தார்; கருப்பனை ஒரு விமானத்தில் ஏற்றிப் பொதிய மலை அடிவாரத்தில் கொண்டு விட்டுவிட ஏற்பாடு செய்தார்.

கருப்பன் அதற்கு முன் அவ்வளவு பொற்காசுகளை என்றுமே கண்டதில்லை.

அவைகள் எல்லாம் சரியான காசுகளா என்று பார்ப்பதற்காகத் தனக்குத் தெரிந்த ஒரு காசுக்கடைச் செட்டியாரிடம் அவைகளை எடுத்துச் சென்று கேட்டான். தட்டிக்கொண்டான் என்று செட்டியாருக்குப் பெயர். கறுப்பனின் வெள்ளைத்தனத்தை அவர் நன்றாக அறிந்தவர். அதனால் அவர், "ஐயையோ! இந்தக் காசுகளைக் கொடுத்தவர் நன்றாக உன்னை ஏமாற்றிவிட்டார். ஐந்தாறு காசுகளே சரியானவை; மற்றவை செல்லாக் காசுகள். இந்தக் காசுகளைத் தந்தவரிடம் என்னை அழைத்துக்கொண்டு போ. நான் நல்ல காசுகளாக வாங்கித் தருகிறேன்" என்று சொல்லிச் செல்லாத காசுகள் என்று சொன்னவைகளையெல்லாம் தாம் எடுத்துக்கொண்டார்.

அன்று முதல் கறுப்பனும் செட்டியாரும் கறுப்பன் நிலத்தருகே இருந்த மரத்தில் ஒளிந்து கொண்டு அந்த எருது வருகிறதா என்று பார்த்துவந்தார்கள். பல நாட்கள் கழித்து ஒரு நாள் எதிர்பார்த்த எருதும் வந்தது; நிலத்தில் மேயத் தொடங்கியது. முதலில் கறுப்பன் மெள்ளச் சென்று எருதின் வாலை



முன் போலவே பிடித்துக்கொண்டான். செட்டியார் தம் தொப்பையைத் தூக்கிக்கொண்டு வருவதற்குள் எருது மேலே கிளம்பிவிட்டது. செட்டியார் வந்தபோது தொங்கிக்கொண்டிருந்த கறுப்பன் கால்களே அவர் கைகளில் அகப்பட்டன. அவற்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அவரும் மேலே சென்றுகொண்டிருந்தார்.

செட்டியாருக்குத் தாங்கமுடியாத சந்தோஷம். சிவலோகத்துக்குப் பக்கத்தில் போகும்போது செட்டியார் கறுப்பனைக் கூப்பிட்டு, "முன்பு நீ கொண்டுவந்தாயே, அந்தப் பெட்டி எவ்வளவு பெரியது?" என்று கேட்டார். எருதின் வாலைப் பிடித்துக்கொண்டு தொங்கும் கறுப்பன் தன் நிலைமையை மறந்து, கைகளை விட்டுவிட்டு, "இவ்வளவு பெரிய பெட்டி" என்று தன் கைகளால் காட்டினான். அடுத்த நிமிஷத்தில் இருவர் கதியும் என்ன ஆயிற்று? நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள். உடல் போகாவிட்டாலும் அவர்கள் உயிர் சிவலோகத்தை நிச்சயமாய் அடைந்துவிட்டது.



என் தோட்டம்

கே. ஸ்ரீநிவாஸ்

"அப்பா அப்பா! தோ.........செடி கூப்பா! செடி கூப்பா!" என்று என் குழந்தை தாழ்வாரத்திலிருந்து கொஞ்சிக் கூப்பிடுகையில், நான் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றுவிட்டேன்.

காற்றில் ஒய்யாரமாக ஆடும் செடி. அதன் கொம்பு முழுவதும், முத்து முத்தாய்ப் பூத்துத் தொங்கும் புஷ்பக் கொத்துகள். அதன் களிப்பில் தானும் கலந்துகொள்ளத் துடிக்கும் என் செல்வப் பெண் மல்லிகா. குழந்தையின் குதூகலத்தில் தங்களுக்கும் பங்கு உண்டு என்று அலறும் புள்ளினங்கள். இந்த ஆனந்தக் காட்சியில் தேனுண்ட வண்டைப் போல என் மனம் லயித்துக் கிடந்தது.

“அப்பா, வம்மாட்டே?” என்று மல்லிகா அழாத குறையாய்க் கேட்டதும், நான் அவளிடம் ஓடி அவளை வாரி எடுத்து அணைத்துக்கொண்டு என் தோட்டத்திற்குள் நுழைந்தேன்.

அடாடா! புஷ்பங்களின் சந்தோஷத்தைப் பார்க்கவேண்டுமே! ஒவ்வொன்றும் போட்டி போட்டுக்கொண்டு எங்களை வரவேற்றன. மைனாப் பறவைகள் மரக்கிளையிலிருந்து கீழே இறங்கி எங்களைச் சூழ்ந்துகொண்டன. வெகு வேகமாக அங்கும் இங்கும் ஓடும் அணில், சட்டென்று நின்று என்னை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தனக்கு அலுவல்கள் இருப்பது போல அப்புறம் நகர்ந்தது.

“அப்பா! அணில்! நேக்கு அணில்” என்று குழந்தை கேட்கவும், தன் சம்பந்தமான விஷயந்தான் என்று எப்படியோ அறிந்த அந்த அணில், குழந்தையை ஏறிட்டு ஒரு பார்வை பார்த்தது. அந்தப் பார்வையில்தான் என்ன அர்த்தவேகம்! குழந்தையின் இஷ்டத்தைத் தானே நிறைவேற்ற என் மீது ஏறி, குழந்தை கையில் வந்து எங்கே உட்கார்ந்துவிடுமோ என்று நான் சந்தேகிக்கும்படி இருந்தது அந்தப் பார்வை. மறுகணம் க்ரீச் என்ற சப்தம்; அணிலைக் காணோம். அணிலின் செய்கை என் மனத்தில் பல எண்ணங்களை எழச் செய்தது. ஹூம், என்னைக் கண்டுதான் அது பயந்து ஓடிவிட்டது. குழந்தையைக் கண்டவுடன் அதன் முகத்தில் அரும்பிய குளிர்ந்த பார்வை, அப்படி என்னைக் கண்ட மறுவினாடியே மங்கியா மறைய வேண்டும்? என் மீது அந்த அணிலுக்கு ஒரு தனிப்பட்ட துவேஷம் இருப்பதற்கு விளையாட்டாகக் கூட ஒரு புல்லையும் அதன் மீது நான் எடுத்துப் போட்டதில்லை. தாழ்வாரத்தில் போடப்பட்டிருக்கும் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, அன்று வந்த பத்திரிகையைப் படித்துக்கொரண் டிருப்பேன். குழந்தை மல்லிகா தள்ளாடிக்கொண்டு கீழே இறங்க யத்தனிப்பாள். அணில் அவள் கால் விரல்களைத் தொட முயல்வது போல நெருங்கி வந்து விளையாடும். அகஸ்மாத்தாய் நான் பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு அதைப் பார்த்துவிட்டேனானால் போதும். வந்தது ஆபத்து. ஓடி மறைந்துவிடும் அணில். என் குழந்தையும், “அப்பா, அணில் போச்சு” என்று கண்ணில் நீர் துளிக்க என்னிடம் முறையிட வருவாள்.

மனிதன்மீது எத்தனை அவநம்பிக்கை! என்ன செய்துவிடுவானோ என்ற பயம். அணில் என்மீது எத்தனை அவநம்பிக்கை கொண்டாலும், நான் அதன்மீது வைத்திருந்த அன்பு சிறிதேனும் குறையவில்லை. நான் அதற்கு ஒரு தீங்கும் நினைக்கவில்லை என்று அதற்குப் புரியும்படி எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் வியர்த்தமாயின. ஆனால் ஒன்று: இவைகளெல்லாம் ஒன்றை மட்டும் அதிகரித்தன. என் குழந்தைமீது கொண்டிருக்கும் வாஞ்சையைத்தான் சொல்லுகிறேன். மல்லிகா வயசு முதிர முதிர, அணிலுடன் சர்வ சாதாரணமாக விளையாட ஆரம்பித்துவிடுவாள். நான் கடையிலிருந்து பிரதி தினமும் வாங்கி வரும் தின்பண்டங்களுக்கு அணிலும் போட்டி போட்டுக்கொண்டு வந்துவிடும். அணிலும் எங்கள் வீட்டு அதிதி என்று சொன்னால் மிகையாகாது. அணில் எங்கள் தினசரி அதிதி.

என் தோட்டந்தான் எனக்குப் பிதுரார்ஜிதம். என் அப்பா மிகவும் முன்ஜாக்கிரதைக்காரர் என்றே நினைக்கிறேன். மாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் கண்ணுக்கு எட்டின தூரம் வயல்களும், ஒரு சிலரே பிதுரார்ஜிதமாக அடைகின்றனர். சிறு வயசிலிருந்தே என் தகப்பனார் கஷ்டப்பட்டுச் சேர்த்த இந்தச் சிறு பூமி, இந்தப் பரந்த உலகில் எங்களுடையது என்று நாங்கள் தயங்காமல் கூறும்படியான மண், இதுதான் என் ஸ்வர்க்கம், என் ஆஸ்தி, என் ஐசுவர்யம் என்ற ஆனந்த உணர்ச்சி வேரூன்றிவிட்டது. தெருவில் ஓடும் மோட்டாரிலும், வானத்தை அம்புபோல் தைத்துக்கொண்டே கிழித்துச் செல்லும் விமானத்திலும் செல்லவில்லை.

தோட்டந்தான் என் வீடு; ஏன், என் உலகம். பெற்றோர்களைச் சிறுவயசிலேயே இழந்தேன். நான் பதினெட்டு வயசு அடைவதற்குள் என்னை வளர்த்துவந்த பாட்டியும் மறைந்தாள். எனக்கு மிஞ்சி நின்று, ‘கவலைப்படாதே. யார் மறைந்தாலும் நாங்கள் உன்னைக் கைவிடமாட்டோம்’ என்று கூவுவதுபோல் அழைக்கும் என் தோட்டத்துச் செடிகளும் மரங்களுமே என் சாந்த வாழ்வில் பங்கு எடுத்துக்கொள்ள, சாந்தாவை மணந்தேன். அவளும் மல்லிகாவை எனக்கு அளித்துவிட்டு மறைந்தாள். மல்லிகா, தோட்டம் - இந்த இரண்டின் நடுவே நான் இருந்தேன்.

குழந்தை மல்லிகாவுக்குத் தோட்டம் என்றால் உயிர். சதா மரத்தினடியில் நாங்கள் இருவரும் இரவு முழுவதும் உறங்குவது என்றால் அவளுக்குச் சம்மதந்தான். தொட்டில் எதற்கு? தாலாட்டுப் பாட்டு எதற்கு? உற்ற துணைக்குக் குறைவா? இம்மி அளவும், ஓர் அம்சத்திலும் குறைவு இல்லை. தோட்டத்தில் வளரும் ஒவ்வொரு செடியும் மல்லிகாதான் தங்கள் யஜமானி என்று அறிந்தது போல அவளைத் தன் மலர்க்கரங்களால் கூவி அழைக்கும். அடாடா! அவள் மான் போல் குதித்து அதை வாரித் தன் மார்போடு அணைத்துக்கொள்ளும்போது, மரக்கிளைகளினின்றும் பறவைகள் குதூகலிப்பதைப் பார்க்க வேண்டுமே! அது மட்டுமா? அங்கு மாயமாய் ஆஜராகும் அணில் தன்

முத்துப் பற்களால் அவள் விரல்களைக் கவ்விய பிறகுதான் மல்லிகாவுக்குத் தன் சுயநிலை வரும். மறுகணமே அணில் அவள் கைகளில் ஏறிவிடும். அவளுடைய மிருதுவான விரல்கள் அதன் மீது பதியும். கண்களில் நீர் பொங்க, நான் இந்த ஆனந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டே நிற்பேன். அந்தக் களிப்பில் கலந்துகொள்ளவேண்டும் என்பது என் துடிப்பு. ஆனால் அணிலின் அவநம்பிக்கை மல்லிகாவின் சந்தோஷத்தை அல்லவா கலைத்துவிடும்?

மாலை வேளையில் சூரியனின் ஸ்வர்ண ஒளி மரக்கிளைக்குத் தங்கமுலாம் பூசும். தரையில் வாய்திறந்து பேச யத்தனிக்கும் நிழலின் துடிப்பைக் கூர்ந்து கவனிக்கும் மல்லிகா, "அப்பா, நிழல் பேச்சு, நிழல் பேச்சு!" என்பாள். அவள் கற்பனை உள்ளத்திற்கு நிழல் ஒரு பாஷை மட்டுமா பேசும்? ஒரு காவியம் அல்லவா பாடும்?

மல்லிகா பூங்கொடிபோல வளர்ந்து பதினறு வயசு நங்கையானுள். மரத்தடியில் நான் உட்கார்ந்துகொண்டிருப்பேன். வீட்டிலிருந்து வெளியேவருவாள். ஆடிவரும் ஒளிப்பந்தம்போல தோன்றும் மகளைக் கண்டு மனம் மகிழ்வேன். என் மகள்தான். தோட்டத்தை நோக்குவேன். மகளை நோக்குவேன். பூமியை நோக்குவேன். இம் மூன்றும உள்ளத்துள் திகழும். மனிதன் கற்பனைக்கெட்டாத காலம் முதல் தோன்றி, கவிகளும் தத்துவ ஞானிகளும் முற்றும் துறந்த முனிகளும் முடியாது என்று கைவிட்ட மாயப் பிரச்னையைப் பகிரங்கமாக நடித்துக் காட்டும் நாடக உலகம். இன்று பொட்டல்; நாளை பூந்தோட்டம்; நாளை சூன்யம். இந்த மகத்தான மாறுதல்களுக்கு மனம் கலங்காத பூமி. யௌவனத்தில் பூரிப்பாகப் பூத்து நிற்கும் மல்லிகா. இவைகளின் மர்மந்தான் என்ன? நிரந்தரத்துவம் உண்டா? யாரைக் கேட்டுத் தோன்றுகின்றன? யாரைக் கேட்டு மறைகின்றன? இந்த எண்ணங்கள் என் மூளையைக் குழப்பிக்கொண்டிருக்கையில், மல்லிகா என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, "அப்பா, ரொம்ப நாளாக உங்களிடம் ஒன்று கேட்க நினைத்தேன்" என்று ஆரம்பித்தாள்.

"மல்லிகா, ஒன்று என்ன, எத்தனை வேண்டுமானாலும் கேள்" என்றேன்.

"அப்பா, எனக்கென்று ஒரு மல்லிகைச் செடி வேண்டும்."

"இப்போதே உனக்குக் கொண்டுவருகிறேன்" என்று நான் சொல்லிவிட்டு, மறுநாளே ஒரு நல்ல மல்லிகைச் செடி அவளுக்கென்று கொண்டுவந்தேன்.

தன் கையாலேயே அதை நட்டாள்.

நட்ட முகூர்த்தம் என்றே நினைக்கிறேன்; மல்லிகாவுக்கு மணமும் ஆகிவிட்டது.

அவள் கணவனுடன், என்னையும் தோட்டத்தையும் தன் மல்லிகைச் செடியையும் விட்டுப் பிரியும் நேரமும் நெருங்கிவிட்டது.

தெருவில் வண்டி வந்து நின்றது.

கலங்கின கண்களுடன் மல்லிகா என்னை நோக்கி, "அப்பா, மல்லிகைச் செடியைப் பார்த்துக்கொள்ளுங்கள். மரங்களெல்லாம் ஜாக்கிரதை" என்றுள்.

அவள் பிரிவை உணர்ந்ததுபோல அணில் கிளையிலிருந்து வெளியே ஓடி வந்து, அவள் காலைப் பற்றிக்கொண்டுவிட்டது. அதைத் தூக்கி எடுத்து முத்தமிட்டாள். அதன் முதுகும் மறுகணமே நனைந்தது.

"அப்பா, நான் வருகிறேன்" என்று மறு வார்த்தை கூறுமல் விர் என்று வண்டியில் ஏறி உட்கார்ந்தாள். அவள் கணவனும் அவளைப் பின் தொடர்ந்தான். வண்டி புறப்பட்டுத் தெருக்கோடியில் மறைந்தது.

அன்று கண்வ மகரிஷி பட்ட துன்பத்தை இன்று நான் அநுபவித்தேன். 'ஓ' என்று அலற வேண்டும் என்று இருந்தது எனக்கு. உள்ளே செல்ல மனம் வரவில்லை. அணிலும் என் நிலைமையை உணர்ந்தது போல், என்முன் வந்து உட்கார்ந்தது. செடிகள் அசைவற்று நின்றன.

ஆனல் மல்லிகைச் செடி மட்டும் துடித்துத் துடித்து அலறுவதை என்னல் எப்படி மறக்க முடியும்?

மல்லிகாவும் என் பக்கத்தில் இல்லையாதலால் நான் சதா தோட்டத்திலேயே இருப்பேன். அதுவும், அவள் வைத்த மல்லிகைச் செடியின் அருகிலேயே உட்கார்ந்திருப்பேன். அது மணிக்கு மணி வளர்ந்து கொண்டே இருப்பதாக என் எண்ணம்.

ஒரு வருஷமாயிற்று. மல்லிகைச் செடியைப் பார்த்தேன். என்ன சௌந்தர்யம்! மல்லிகா அதன் அழகைப் பார்த்து மகிழப் பக்கத்தில் இல்லையே என்ற குறை எனக்கு. கூர்ந்து கவனித்தேன்.

என்ன ஆச்சரியம்!

ஒரு மல்லிகை மொட்டு தென்பட்டது. நான் புளகாங்கித மடைந்தேன். ஆம். அவள் நட்ட செடிக்கு ஒரு புது ஜீவன்—ஓர் ஆனந்த சோபை. உணர்ச்சிப் பெருக்கில் செடியை மார்போடு தழுவிக்கொண்டேன்.

"தபால்" என்ற சப்தம்.

திரும்பிப் பார்த்தேன். தபாற்காரன் ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்து விட்டுச் சென்முன்.

உடைத்துப் பார்த்ததும் என் சந்தோஷத்திற்கு எல்லை இல்லை. மல்லிகா எழுதிய கடிதந்தான். ஆவலுடன் படித்தேன்.

ஆம்; சில நாளில் எனக்குப் புதுப் பதவி அளிப்பது என்றால் எனக்குக் குதூகலந்தான் அளிக்கும். மல்லிகாவுக்கு ஒரு குழந்தை பிறக்கப்போகிறது என்ற செய்தி என்னைச் சந்தோஷத்தில் திளைக்கச் செய்தது.

மல்லிகை மொட்டை இமை கொட்டாமல் கவனித்தேன். பிறப்பும், வளர்ச்சியும், பூர்ணப் பொலிவும் அதன் இதழ் உள்ளத்தில் ஊறிக் கிடக்கின்றன. நாளை, அதன் கவிழ்ந்த இதழ்கள் விரியும். அழகு கமழும். மணம் பொங்கும். இந்த அலை மோதும் ஆனந்த வேகத்தில் நான் மெய்ம்மறந்தேன்.

எத்தனை நேரம் அங்கு நின்றேன் என்று எனக்கு ஞாபகமில்லை. சுய அறிவு வந்தவுடன் விண்ணை நோக்கினேன். அந்திப் பொழுது பகலின் பிரம்மாண்டமான கதவுகளை மூடிக்கொண்டிருந்தது. வானத்தில் நக்ஷத்திர விளக்குகள் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்றப்பட்டன.

நாளை குதூகலச் செய்தி கிடைக்கும் என்ற சந்தோஷத்தில் நான் சிறிது நேரம் பத்திரிகைகளைப் படித்துவிட்டு உறங்கிவிட்டேன்.

ஆம்; அந்தச் சப்தம் என் தூக்கத்தைக் கலைத்தது மட்டுமல்ல; என்னைக் குலை நடுங்கச் செய்துவிட்டது. அகோர மழை. உலகம் கிடுகிடுக்கும்படி இடி ஒலி. மின்னலின் அசுரக் களிப்பு. சூறுவளியின் கரங்கள் பூமியின் விருக்ஷக் கூந்தலைச் சின்னபின்னமாகப் பிய்த்துக்கொண்டிருந்தன.

என் தோட்டம்! என் தோட்டம் என்ன நிலைமையில் இருக்கிறதோ? நான் என் உயிருக்கு மேலாக மதிக்கும் தோட்டம் அழிந்தாலும் பரவாயில்லை.

ஆனால், மல்லிகை மொட்டு, நாளை பூக்கப் போகும் மொட்டுக்கு என்ன கதி நேர்ந்துவிட்டதோ? தெய்வமே, என் உள்ளக் கொதிப்பு என்னைப் பதறச் செய்தது. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினேன்.

வெளியே தலையை நீட்டக்கூட முடியவில்லை. அத்தனை மழை. பளிச்சிடும் மின்னலொளியில் தோட்டத்தின் பரிதாபகரமான காட்சி எனக்குத் தென்பட்டது.

'உனக்கு இரக்கம் இல்லையா? என்னை இந்தப் பேய்க்காற்றின் அசுரக்களிப்பினின்றும் காப்பாற்ற மாட்டாயா?' என்று கெஞ்சிப் பதறுவது போல, விண்ணைத் தொட்டுக் கொண்டு நின்ற மரங்கள் மண்ணைத் தொட்டு என்னை வேண்டின. நான் இத்தனை நாட்களாக இத்தனை கஷ்டப்பட்டு வளர்த்துவந்த மரங்களுக்கும், போஷித்த செடிகளுக்கும் இந்தச் சோதனையா வர வேண்டும்? எனக்கு இருந்த வேகத்தில் அவைகளைக் கட்டி அணைத்துக்கொண்டு ஆறுதல் அளிக்க வேண்டும் என்று என் உள்ளம் பதறிற்று.

அந்த மல்லிகைக் கொடி......என் மல்லிகா வளர்த்த செடி! என்ன ஆகியிருக்குமோ! ஆ......திடீரென்று என் பெண்ணின் நினைவு வந்தது! அவளுக்கும் வாழ்வில் இது ஒரு பெரிய புயல்! சோதனைக் காலம். அவள் வைத்த செடி புயலில் அடிபட்டு வீழ்ந்திருக்குமா? அதில் துளிர்த்த மொட்டு! அவள் கதி- அவளுக்குப் பிறக்கப்போகும் குழந்தை-நினைக்கும்போதே நெஞ்சம் படபடத்தது.

கதவு தட்டும் சப்தம்.

"ஸார், தந்தி ஸார்!" என்ற குரல். தந்தியா? என் பெண்! அந்த மொட்டு! என் மனம் குழம்பிற்று. நெஞ்சு துடித்தது.

என்ன சமாசாரம் வந்திருக்கிறதோ? கை வெடவெடத்தது. குடல் நடுங்கிற்று. தந்தியை வாங்கினேன். பிரித்துப் பார்க்கத் துணியவில்லை. கடைசியில் எப்படியோ பிரித்துப் படித்தேன்.

மல்லிகாவுக்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையும் தாயும் ஸௌக்கியம்.

என் கண்களில் என்னை அறியாமலே ஆனந்த பாஷ்பம் பொங்கிற்று. தந்திக்காரன் சும்மா நின்றுகொண்டிருந்தான். அவனிடம் ஒரு ரூபாயை எடுத்துக் கொடுத்தேன். அவன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

"எனக்குப் பேரன் பிறந்திருக்கிறது. மிட்டாய் வாங்கிக்கொண்டுபோய் உன் குழந்தைகளுக்கும் கொடு" என்றேன். எனக்கு இருந்த ஆனந்தத்தில் அவனும் பங்கு போட்டுக்கொண்டான். மல்லிகைச் செடியின் நினைவு மீண்டும் வந்ததும் தோட்டத்திற்கு ஓடினேன். தோட்டம் அலங்கோலமாக இருந்தது. புயலில் பெரிய மரங்கள் வேரற்று வீழ்ந்து கிடந்தன. இந்த அழிவில் அந்த மல்லிகைச் செடி, சற்றுச் சாய்ந்து வணங்கி நின்றது. அதன் மேற்கிளையில் இருந்த மொட்டு மலர்ந்து விகஸித்து விளங்கிற்று.

என் தோட்டம் பாழாகவில்லை.

அரண்மனை

அரசன் வாழும் மாளிகையை 'அரமனை' என்று சிலர் வழங்குவதும் எழுதுவதும் உண்டு. அவனுடைய இருப்பிடம் சிறந்த பாதுகாப்புக்குள் இருக்கவேண்டுவது. கோட்டையாலும் அகழியாலும் சூழப்பட்டிருந்தால் பகைவர்கள் முற்றுகை இடுங்கால் பாதுகாப்பதற்கு ஏற்றதாக இருக்கும். இத்தகைய பாதுகாப்பு உடையதாக இருப்பதனால்தான் அரசன் வாழும் மனையை 'அரண்மனை' என்று தமிழ்நாட்டார் வழங்குகின்றனர். அரண் – பாதுகாப்பு அல்லது மதில். அரமனை என்ற சொல் மருவி வழங்கும் சொல் ஆதலால் எழுதும்பொழுது 'அரண்மனை' என்று எழுதுவதே சிறந்தது.

கதையும் கத்திரிக்காயும்

கி. வா. ஜகந்நாதன்

(சென்ற இதழ் 199-ஆம் பக்கத் தொடர்ச்சி)

4

அடுத்த நாள் ராத்திரி கூற்றுவன் வந்தான். "பாட்டி, வந்துவிட்டேன்" என்று அவள் முன்னே நின்றான்.

"வா, அப்பா, உன் தரிசனம் சாட்சாத் பரமசிவன் தரிசனத்தைப் போல இருக்கிறது. ஆனால் அவன் கருணாமூர்த்தி, தர்மமே ரிஷபமாக உடையவன். நீயோ லோகத்துக்கு அச்சத்தை உண்டாக்குபவன்; காரெருமை வாகனம் உடையவன். மற்றப்படி காலனாகிய உனக்கும் மகா காலனாகிய அவனுக்கும் வித்தியாசமே இல்லை."

பாட்டி கிண்டல் பண்ணுகிறாளென்று யமன் தெரிந்துகொண்டான். இப்போது அவன் அவளிடம் அகப்பட்டுக் கொண்டானே!

"சரி, சீக்கிரம் கதையை முடி" என்றான் வைவஸ்வதன்.

"சொல்ல ஆரம்பிக்கிறேன்; முடிந்தால் உன் அதிருஷ்டம்" என்று வீறுடன் பேசிக் கதை சொல்லத் தொடங்கினாள் பாட்டி.

* * *

கட்டை வண்டியின் பின்னே ராஜகுமாரியும் முன்னே ஏர்க்காலில் ராஜகுமாரனும் உட்கார்ந்து போய்க்கொண்டே இருந்தார்கள். அதிகமாகப் பேசவில்லை. ஆனாலும் ராஜகுமாரனுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ராஜகுமாரியைத் திரும்பித் திரும்பிப் பார்த்துப் பார்த்து உள்ளம் பூரித்தான். அவள் தன்னைச் சிவபக்தனென்று சொல்லிவிட்டாள் அல்லவா? 'இனிமேல் உண்மையிலேயே சிவபக்தனாக இருக்க வேண்டும். இன்னும் அதிகமாகச் சிவநாம உச்சாரணம் செய்ய வேண்டும். திருநீற்றைப் பூச வேண்டும்' என்று எண்ணிக்கொண்டான்.

சிறிது தூரம் போனவுடன் அங்கே ஒரு மைதானம் இருந்தது. மிகவும் பழங்காலத்தில் ஒரு கோயில் அங்கே இருந்திருக்க வேண்டும். இப்போது அது இடிந்துபோய் உடைந்த விக்கிரகங்களும் கற்களுமாகக் கிடந்தது. வண்டி அந்தப் பக்கமாகப் போனபொழுது ராஜகுமாரன் கண்கள் அந்தக் கற்குவியலின் இடையே ஆவுடையாரினின்றும் கழன்று தனியே கிடந்த சிவலிங்கம் ஒன்றைப் பார்த்தன. அவன் இப்போது உண்மையான சிவபக்தன் அல்லவா? அந்தப் பக்தியைத் தன்னுடன் வரும் மோகினிக்கு இன்னும் அதிகமாக வெளிப்படுத்தினால் எவ்வளவு நன்றாக இருக்கும்! - இந்த எண்ணம் அவன் நெஞ்சத்தில் தோன்றியதுதான் தாமதம், உடனே கீழே குதித்தான்; விரைவாகச் சென்று அந்த லிங்கத்தை எடுத்து வந்து தன் வண்டியில், ராஜகுமாரிக்கு அருகில் கொண்டுவந்து வைத்துவிட்டான். ராஜகுமாரி பார்த்தாள்; "ஹே ஸர்வாங்கசுந்தர, தங்களுடைய அதிசயமான புத்தியை நான் மெச்சுகிறேன். தங்கள் திருவுள்ளத்தை நான் உணர்ந்துகொண்டேன். இதோ, தங்கள் கட்டளையின்படியே செய்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே ராஜகுமாரனுக்குச் சமீபமாக வண்டியின் முன் பக்கத்தில் போய் உட்கார்ந்துகொண்டாள். ராஜகுமாரன் பிரம்மானந்த லாகிரியில் மூழ்கினவனைப் போல் ஆகிவிட்டான்.

* * *

பாட்டி இதோடு நிறுத்திப் பெருமூச்சு விட்டாள்.

"ஏன் பாட்டி, அவர்கள் கல்யாணம் செய்துகொண்டார்கள் என்று சொல்லிக் கதையை முடித்து விடுகிறதுதானே?" என்று வந்தது யமதர்மன் குரல்.

"அப்படி இல்லை; கதையை அதன் போக்கிலே விடவேண்டுமே அல்லாமல் நம் போக்கிலே இழுக்கக்கூடாது. இன்னும் கதை இருக்கிறது. கதையில் இது ஒரு கட்டம். இங்கேயும் ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்கிறாயா?"

"பார்க்கிறேன்" என்று விநயமாகச் சொன்னான் காலன்.

"பார்ப்பது என்ன? இது சாதாரணமான கேள்விதான். ஆனால் இதை நீ

சொல்லா விட்டால் இன்னும் இரண்டு நாள் எனக்கு வாய்தா தரவேண்டும். அதாவது நாளைக்கு நீ வரக்கூடாது; அதற்கு அடுத்த நாள் வா; கதை கேட்கலாம்."

"சரி, சரி, கேள்வியைக் கேள், பார்க்கலாம்."

"ராஜகுமாரி ராஜகுமாரனுடைய அதிசயமான யுக்தியை மெச்சுவதாகச் சொன்னாளே; அது என்ன யுக்தி?"

"அதுதான் நீயே சொன்னாயே; அவன் தன் சிவபக்தியைப் பின்னும் அதிகமாக அவளுக்குத் தெரிவிக்கச் செய்த யுக்திதான்."

"இதைப் போய்க் கேட்பேனா? வேறே யுக்தி உண்டு. யோசித்துப் பார்."

"பாட்டி, எனக்குப் பொறுமை இல்லை; ஒருநாள் தவணை நேற்றுக் கொடுத்தேன். தலைக்குமேல் போன பிறகு சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன? நாளை போய் மறுநாள் வருகிறேன். கேள்விக்கு நீயே விடை சொல்லிவிடு."

"அப்படி உண்மையிலே தர்மராஜனாக அல்லவா இருக்க வேண்டும்! சரி, நான் சொல்லி விடுகிறேன். சிவலிங்கம் கல்தானே? அந்தக் கனமான கல்லைக் கொண்டுவந்து வண்டியின் பின்னாலே வைத்தால், ராஜகுமாரியும் சிவலிங்கமும் சேர்ந்து பின்பாரம் அதிகமாகிவிடாதா? வண்டியின் ஏர்க்கால் தூக்கி அடிக்காதா? ஆகவே சிவலிங்கத்தைப் பின்னால் வைத்தால் ராஜகுமாரி பாரம் சரியாக இருப்பதற்காக முன்னே நகர்ந்து தன் அருகில் வருவாள் என்றும், பின்பாரம் இல்லாமல் அவளை அருகே வருவிப்பது கூடாது என்றும் அவன் நினைத்து, அந்தத் தந்திரத்தைச் செய்ததாக ராஜகுமாரி எண்ணினாள்.

வாயினால் சொல்லாமல் தந்திரமாகத் தன்னை அருகில் வரச் செய்வதற்கு இப்படி யுக்தி செய்பவன் சாமர்த்தியசாலியாகத் தானே இருக்கவேண்டும்? இதுதான் அவள் அப்படிச் சொன்னதற்குக் காரணம்" என்றாள் பாட்டி.

"பாட்டி, நீ மகா சாமர்த்தியக்காரி. சரி, நான் நாளைக் கழித்து வருகிறேன்" என்று யமன் மறைந்தான். பொழுதும் விடிந்தது.

* * *

மறு நாளுக்கு மறு நாள் இரவு, "இன்றைக்கு எப்படியாவது உன்னை அழைத்துக் கொண்டு போவதாகவே வந்திருக்கிறேன். ஏமாற்றிவிடாதே, பாட்டி" என்று சொல்லிக்கொண்டே மரணதேவன் பாட்டியின் எதிரே வந்து நின்றான்.

"வந்தாயா, அப்பா. நல்ல வேளை; எங்கே கதை முடியாமல் நின்றுவிடுமோ என்று எண்ணியிருந்தேன். வந்து விட்டாய்" என்று பாட்டி வரவேற்றாள்.

"வந்துவிட்டேன்; சீக்கிரம் கதையை முடித்துவிட்டு என்னுடன் வா" என்றான் யமன்.

"கதையை முடிக்காமல் வரக்கூடாதா?"

"இன்னும் கொஞ்சந்தானே இருக்கப் போகிறது? அதை முழுவதையும் கேட்டுவிட்டே நான் உன்னை அழைத்துப் போகிறேன்."

"அப்படியானால் கேளப்பா, சொல்கிறேன்" என்று மறுபடியும் கதையைத்

தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தாள் அந்தக் கிழவி.

* * *

'எருமை மாட்டுவண்டி போய்க்கொண்டிருந்தது. ராஜகுமாரனுக்குப் பக்கத்தில் அவன்மேல் படாதபடி ராஜகுமாரி உட்கார்ந்திருந்தாள். அவனுடைய அங்க சௌந்தரியத்தை அவள் கண்டு கண்டு களித்தாள்.

"ஹே புருஷோத்தம, தாங்கள் எந்தத் தேசத்திலிருந்து வருகிறீர்கள்? இந்த ஏழையினிடத்தில் இவ்வளவு கருணை உண்டாவதற்குக் காரணம் என்ன?" என்று தன் குயில் மொழியால் கொஞ்சலாகக் கேட்டாள்.

அவன், "சிவ சிவ" என்று சொன்னனே ஒழிய வேறு ஒன்றும் சொல்லவில்லை.

"எல்லாம் சிவபெருமான் திருவருளால் நடைபெறுகின்றன என்று தாங்கள் குறிப்பிடுகிறீர்கள். நான் தங்கள் சுந்தர ரூபத்தையும் சிவபக்தியையும் பலத்தையும் கண்டு கண்டு ஆச்சரியக்கடலில் மூழ்கியிருக்கிறேன். என்ன புண்ணியம் செய்தேனே! தங்கள் தரிசனம் கிட்டியதோடன்றித் தங்களோடு ஒரே ரதத்தில் பிரயாணம் செய்யும் பாக்கியமும் கிடைத்தது."

ராஜகுமாரனுக்கு அவளோடு வாய்திறந்து பேசவேண்டுமென்ற ஆவல் எழுந்தது. தன்பால் அவளுக்கு உண்டாகியிருக்கும் மதிப்பை அவன் உணர்ந்தான். அந்த மதிப்புக்கு உண்மையிலேயே பாத்திரனுக வேண்டுமென்ற உணர்ச்சி அவனுக்கு வந்துவிட்டது.

"தாங்கள் இவ்வடியாளிடம் ஒரு வார்த்தையாவது பேசக் கூடாதா? தங்களைப் பெற்றதனுல் எந்த நாடு விளக்கம் அடைந்தது? தங்களுக்கு அடையாளமாகிப் புனிதமடைந்த திருநாமம் எது?"

ராஜகுமாரனுக்கு அவள் பேசுவது தெளிவாகத் தெரியவில்லை. சிவநாமத்தையே அடிக்கொரு தரம் சொல்லிக்கொண்டிருந்தான். அவளைக் கணத்துக்கு ஒரு முறை பார்த்துப் புன்னகை பூத்தான். அந்த மோகன முறுவல் வலையிலே அவள் தன் உள்ளத்தைப் பறி கொடுத்தாள்.

வண்டி ஒரு வேலி ஓரமாகப் போகும்படி நேர்ந்தது. அந்த வேலிக்குள்ளே பறங்கியும் பூசணிக்காயும் வேலிக்கு வெளியே காய்த்திருந்தன. வெள்ளை வெளேரென்று இருந்த அதைப் பார்த்தவுடனே ராஜகுமாரனுக்கு விபூதி ஞாபகம் வந்துவிட்டது. "இந்தக் காய் இப்படி விபூதியைப் பூசிக்கொண்டு கிடக்கிறதே. இதுவும் சிவபக்தியுடையதுபோல இருக்கிறது. அப்படியானல் இதைப் பறித்து நாம் வைத்துக்கொள்ளலாம்" என்று எண்ணித் திடீரென்று கீழே குதித்து அந்தச் சாம்பற் பூசணிக்காயைப் பறித்துவந்து தனக்கும் ராஜகுமாரிக்கும் நடுவில் வைத்துக்கொண்டான். அவன் அதை வைத்துவிட்டு வண்டியில் ஏறினவுடன் சுந்தரிக்கு உண்டான ஆவல் கட்டுக்கு மீறிப் போயிற்று.

"என்ன இங்கிதம்! என்ன குறிப்பு! இதோ என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று ஆவேசம் வந்தவளைப்போல அவன் கையில் தன் கையை வைத்தாள். அவன் தன்னையும் அறியாமல் அதைப் பற்றிக்கொண்டான். அவள் உடனே அவனைத் தழுவினுள். அவனும் தழுவினுன். "என் ஆருயிர் நாதா, தங்களுக்கு என்னைப் பாணிக்கிரகணம் செய்துகொள்ள வேண்டும் என்ற கருத்து இருப்பதை எவ்வளவு அழகாகக் குறிப்பித்தீர்கள்! எனக்கும் அந்த ஆவல் இருந்தது. ஆனுல் சொல்வதற்கு நாணமாக இருந்தது. தாங்களும் வாயால் சொல்லாமலே காரியத்தைச் சாதித்துக் கொண்டீர்கள். இந்தப் பூசணியை நம்மிடையில் வைத்துத் தங்கள் கருத்தைத் தெரிவித்துவிட்டீர்கள். இனி நம்மை யாரும் பிரிக்க முடியாது" என்று

தன்னுடைய ஆனந்தக் கொந்தளிப்பை அவள் வார்த்தைகளால் ஒருவாறு வெளிப் படுத்தினள்.

* * *

பாட்டி இங்கே சிறிது நிறுத்தி யமதர்ம ராஜனை ஒரு கேள்வி கேட்டாள் :

"அவள் அந்தக் காயைக் கொண்டு எதை அறிந்து கொண்டாள்? எதற்காக அவ் வளவு குதூகலம் அடைந்தாள்?"

மிருத்யுதேவனல் இந்த முறை தவருகக் கூடச் சொல்ல இயலவில்லை. யோசிக்கவும் பொறுமை இல்லை. "பாட்டி, அந்தக் கேள் விகளைத் திருப்பிக் கேட்கிறேன்; பதில் சொல்லு. ஆனல் கதையை இன்றே முடித்துவிட வேண்டும். பதில் சொல்லத் தெரியாததற்காக இன்னும் நாள் தள்ள மாட்டேன்" என்ருன்.

"இதோ, சொல்லிவிடுகிறேன். கதையை யும் விடிவதற்குள் முடித்துவிடுகிறேன். சரி. இப்போது பூசணிக்காய்க்கு அர்த்தம் சொல்கிறேன். ராஜகுமாரன் பூசணிக் காயைச் சைவக் கோலம் உடையதாகத் தோன்றுவதனல் பறித்துக் கொண்டுவந்து வைத்தானல்லவா? அவன் கருத்தை அவள் கவனிக்கவில்லை. அவள் வேறு அர்த்தம் செய்துகொண்டாள். பூசணிக்காயைக் கல் யாணப் பூசணிக்காய் என்று சொல்வது உண்டு அல்லவா? நமக்கு நடுவில் கல்யா ணம் வேண்டும் என்ற விஷயத்தை வெளிப் படையாகச் சொல்லாமல் குறிப்பாகத் தெரிவிக்கக் கல்யாணப் பூசணியை வைத்தா னென்று அவள் நினைத்துக் கொண்டாள். அதனல்தான் அவளுக்கு அவ்வளவு குதூ கலம். இப்போது தெரிந்ததா?"

"பாட்டி, நீ மிகவும் சாதுர்யம் படைத்த பேர்வழி; சரி, இனிமேல் கதையை முடித்து விடு."

மேலே பாட்டி கதையைத் தொடர்ந்து வர்ணனைகளுடன் சொல்லத் தொடங்கி னுள்.

ராஜகுமாரன் ராஜகுமாரியின் அணைப் பில் இன்பங்கண்டு பிறகு பேச ஆரம்பித் தான்; புத்திசாலித்தனமாகவே பேசினன். அவளைத் தன் ஊருக்கு அழைத்துப் போய்க் கல்யாணம் செய்துகொண்டான். இந்தக் கதையை அவள் விடியுமட்டும் வருணனை யோடு விரித்துச் சொல்லி நிறைவேற்றி, "அப்பாடா, கதை முடிந்தது; கத்திரிக் காய் காய்த்தது" என்று சொல்லி முடித்தாள்.

யமதர்மராஜனுக்கே இப்போது ஒரு சந் தேகம் வந்துவிட்டது. "பாட்டி, பாட்டி! அதென்ன, கதை முடிந்தது, கத்திரிக்காய் காய்த்தது என்ருயே; கத்திரிக்காய் எங் கிருந்து வந்தது?" என்று கேட்டான்.

"அதுவா? உனக்குக் கதை சொல்லிப் போது போக்கினதற்கு அதுதானப்பா கார ணம். என் பேரன் வைத்த கத்திரிச்செடி பூப்பூத்துக் காய் காய்க்கும் தருணம், நீ வந்துவிட்டாய். அந்தக் காயைக் கறி பண் ணிச் சாப்பிட வேணுமென்று எனக்கு மிகுந்த சபலம். நீ முதல் நாள் வந்தாயே, அன்று அது இளம் பிஞ்சாக இருந்தது. இன்று காய்த்துவிட்டது. அதைக் கறி பண்ணித் தின்னுமட்டும் நீ கருணை செய்து காத்திருந்தால் நல்லது; இல்லையென்ரு லும் குற்றம் இல்லை. என் கதை முடிந்தது, கத்திரிக்காய் காய்த்ததென்று சந்தோஷப் படுகிறேனே, இதுவே போதும்" என்ருள்.

யமதர்மராஜனுக்கு நாளுக்கு நாள் பாட் டியினிடம் மதிப்பும் வியப்பும் உண்டாகி இருந்தன; இன்ருே எல்லையில்லாத இரக் கம் ஏற்பட்டது. இதுவா சமாசாரம்? அப் படியானல், பாட்டி, நீ அந்தக் கத்திரிக் காயைக் கறி பண்ணிச் சாப்பிடுகிறது மட்டுமல்ல; இன்னும் பல தடவை காய் காய்த்துக் கறி பண்ணிச் சாப்பிட்டுக் கொண்டும் கதை சொல்லிக்கொண்டும் இருப்பாயாக! உனக்கு எப்போது இந்த உலகத்தை விட்டுப் போகவேண்டுமென்று தோன்றுகிறதோ அப்போது என்னை நினை. நான் அப்போது வந்து உன்னை அழைத்துப் போகிறேன். அப்போதும் எனக்குக் கதை சொல்கிறேனென்று ஆரம்பித்துவிடாதே, பாட்டி" என்று வரம் கொடுத்துவிட்டுக் காலதேவன் மறைந்தான்.

சொல்லுதலின் சொருபங்கள்

தமிழில் ஒரே பொருளை உடைய பல சொற்கள் இருக்கின்றன. அந்தச் சொற் கள் எல்லாம் ஒரே பொருளை உடையன என்று சொல்வதற்கில்லை. சில நுண் ணிய வேறுபாடுகள் இருக்கும் சொற்கள் உண்டு. அறைதல், பன்னுதல் என்ற இரண்டு சொற்களுக்கும் சொல்லுதல் என்ற அர்த்தத்தைப் பொதுவாகக் கொள் கிருேம். ஆனல் இரண்டற்கும் வேறுபாடு உண்டு. ஒன்றைத் துணிந்து சொல்வதை 'அறைதல்' என்று சொல்வார்கள். அடுத் தடுத்துச் சொல்வதைப் 'பன்னல்' என்று சொல்வார்கள். 'என்ன, பன்னிப் பன்னிப் பேசுகிருயே' என்று பேச்சு வழக்கில்கூட நாம் சொல்லுகிருேம் அல்லவா? கேள் விக்கு விடையாகச் சொல்வதைச் செப்பு தல் என்றும், கேட்பவருக்கு இனிமை பிறக்கும்படியாகப் பேசுவதை இயம்புதல் என்றும், விஷயத்தைப் பகுத்துச் சொல் வதை வகுத்தல் என்றும் சொல்வது தமிழர் மாபு.

காங்கிரஸ் விஜயம்

டாக்டர் தி. சே. சௌ. ராஜன்

ஜில்லா அரசியல் மகாநாடு கூட்ட வேண்டும் என்று சென்னைக் காங்கிரஸ் கமிட்டியார் ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். 1917-ஆம் வருஷம் என்பது எனது ஞாபகம். இதற்கு முன் நான்கு தடவை திருச்சிராப்பள்ளியில்தான் ஜில்லா மகாநாடு நடைபெற்றது. வழக்கம்போல ஊர் வலங்கள், விருந்துச் சாப்பாடுகள், சில செல்வருடைய நன்கொடை, காங்கிரஸ் சார்பாகச் சற்று உழைத்துத் தம் வக்கீல் தொழிலை விரிவாக நடத்த எண்ணம் கொண்ட இளைஞர்களுடைய உழைப்பு, அழுத்தம் திருத்தமான பேச்சாளர்கள் சிலருடைய பிரசங்கங்கள் - இவைகளே அரசியல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள். கூட்டத்திற்கு வந்தவர்கள் எல்லோரும் பிரதிநிதிகள். வரவேற்புக் கமிட்டித் தலைவர் நல்ல செல்வாக்குடையவராகவே இருப்பார். அம்மாதிரி ஒருவரைக் கண்டு பிடித்து, அவரைப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளும்படி செய்துவிட்டால், மகாநாடு பாதி நிறைவேறிவிட்டதாகவே நிச்சயித்துவிடலாம். வருஷந்தோறும் திருச்சியில் நடப்பதைக் காட்டிலும் ஜில்லாவிலுள்ள மற்றப் பாகங்களில் நடத்துவது அதிகப் பயன் அளிக்கக் கூடுமென முடிவு செய்து, அதற்கென ஓர் ஊரையும், வரவேற்க ஒரு தலைவரையும் கண்டுபிடித்தோம்.

திருச்சியிலிருந்து முப்பது மைலுக்கு வடமேற்கில் காவிரி வடகரையில் தொட்டியம் கிராமத்தில் அவ்வூர்ப் பிரபல மிராசுதாரும், சேலம் ஜில்லாவிலுள்ள மின்னம்பள்ளி ஜமீன்தாருமான முத்து வேங்கடாசல ரெட்டியாரை வரவேற்புக் கமிட்டித் தலைவராக நாங்கள் கேட்டுக்கொண்டோம். அவரும் இசைந்து, மகாநாட்டைத் தொட்டியத்தில் நடத்துவதாக முடிவு செய்தார். காலம் சென்ற மதுரை பாரிஸ்டரும், தீவிர தேசபக்தருமான ஜார்ஜ் ஜோஸெப் தலைமை வகிக்கவும் ஏற்பாடு செய்தோம். மகாநாடு நடைபெறுதற்கான வேலைகளை நாங்களும் ரெட்டியாருடன் சேர்ந்து செய்வதாகச் சொல்லியிருந்தோம். ஆனால் எங்கள் ஒத்துழைப்பு அவருக்கு அதிகம் தேவையில்லை. தொட்டியத்தில் அவருக்குள்ள செல்வாக்கைக் காட்டிலும் நாங்கள் செய்யக்கூடியது ஒன்றும் இல்லை. ஆகையால் ரெட்டியார் அவர்களே தமது சொந்தப் பொறுப்பில் எல்லா வேலைகளையும் வெகு விமரிசையாகவும் அழகாகவும் தமது அந்தஸ்திற்கு ஏற்றபடி செய்துவிட்டார். ஒருவேளை வரவேற்புக் கமிட்டியார் இந்தச் செலவுகளை ஏற்க நேருமோ என்ற பயம் எனக்கு ஒருவாறு உண்டாயிற்று. ஆனால் அவர் செலவு செய்த தோரணையில் அதை யாரும் பகிர்ந்துகொண்டு செய்யக்கூடிய முறையில் இல்லாததால் அதைப்பற்றி யாதோர் ஆட்சேபமும் எழுப்ப இடம் இல்லாமற் போயிற்று. பணத்தை லக்ஷ்யம் செய்யாமலே செலவு நடந்தது. அம்மாதிரி ஏற்பாடுகளை நான் அதற்கு முன் கண்டதில்லை. அதற்குப் பிறகும் காணவில்லை. ஏன் அவ்வளவு செலவு செய்தார் என்பதற்கு என்னால் காரணம் கூற முடியாது. தமது அந்தஸ்திற்கு ஏற்ற முறையில் இருக்கவேண்டும் என்பதுதான் காரணமாக இருக்கவேண்டும். இவ்வளவு ஏற்பாடு செய்து நடத்தும் மகாநாட்டிற்கு ஏராளமான கூட்டம் வராமலோ, அல்லது தகுந்த தலைவர்கள் வராமலோ இருந்துவிட்டால், ரெட்டியாருக்குத் திருப்தி உண்டாகாது. அதற்காக என்னால் இயன்ற அளவு நண்பர்களையும், அரசியல் துறையில் பங்கெடுத்துக்கொள்ளும் தலைவர்களையும், திருச்சி, சேலம் என்னும் இரண்டு ஜில்லாக்களிலிருந்தும் வரும்படி மன்றாடிக் கடிதமும் அனுப்பினேன். சேலத்திலிருந்து ராஜாஜி, வரதராஜுலு நாயுடு, சுப்பராயர், சேஷையங்கார் முதலியோர்கள் வந்திருந்து ஊக்கம் அளிக்கக்கூடிய பிரசங்கங்கள் செய்தார்கள். அதனால் மகாநாடு நன்கு சோபித்தது,

திருச்சியில் இருக்கும் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு கூட்டத்தார் இந்த மகாநாட்டிற்கு விரோதமான பிரசாரம் நடத்துவதற்காகத் தொட்டியம் வந்து தினசரி சாயங்கால வேளைகளில் ரெட்டியார் வீட்டிற்கு எதிரிலுள்ள பொட்டலில் பொதுக்

கூட்டங்கள் கூட்டி, ஜமீன்தாரையும் அவருடைய நண்பர்களையும் பற்றி வசை புராணங்கள் மும்முரமாக நடத்தினார்கள். ஆனால் அவர்கள் முயற்சி, அதிகமான பலன் பெறுவிடினும், பலருக்கு மனச் சங்கடத்தை உண்டாக்கியது. அந்தப் பிரசாரத்தை எதிர்க்கவேண்டி நாங்களும் பொதுக் கூட்டங்கள் நடத்தி அவர்களுக்குத் தகுந்த பதில் சொல்லிவந்தோம். மகாநாட்டின் கடைசி நாளன்று இரவில் ஒரு பெரிய விருந்தும், அதற்குப் பிறகு பத்மாஸனிபாய் அவர்களது ஹரிகதா காலக்ஷேபமும் நடந்தன.

பிரதிநிதிகளும் மற்றவர்களும் தங்குவதற்காக வாய்க்கால் ஓரமாகக் குளிர்ந்த தென்னந்தோப்பில் கொட்டகை போடப்பட்டு அவர்களுடைய சாமான்களும் பெட்டிகளும் அங்கு வைக்கப்பட்டிருந்தன. டாக்டர் வரதராஜுலு நாயுடுவின் வாலண்டியர் என்று சொல்லிக்கொண்டிருந்த அப்ஸலோம் என்றவன் அன்றிரவு எல்லோரும் கதை கேட்கப் போயிருக்கும் சமயம் பார்த்து, சேலம் வக்கீல் சுப்பராயர் பெட்டியிலிருந்து நூறு ரூபாய் நோட்டு ஒன்றைக் களவாடின சமயம், வக்கீல் சேஷையங்கார் திடீரென அங்கே வந்தவர் அதைக் கண்டு கூச்சல் கிளப்பினார். உடனே அந்தச் சத்தத்தைக் கேட்டு ஒரு கூட்டம் ஓடி வந்து, அப்ஸலோமை அடித்துவிட்டார்கள். யார் அடித்தார்கள், ஏன் அடித்தார்கள் என்ற விவரம் தெரியு முன்னரே கூட்டம் கலைந்துவிட்டது. அப்ஸலோமும் ஓடிவிட்டான். மறு நாள் காலை மகாநாட்டிற்கு வந்தவர்கள் ஊர் திரும்பிவிட்டார்கள். நாங்களும் திருச்சி திரும்பிவிட்டோம்.

ஆனால் தொட்டியத்தில் தங்கியிருந்த ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் அப்ஸலோமைத் தட்டிக் கொடுத்துப் பக்கத்தில் முசிரியில் இருந்த ஸப் மாஜிஸ்டிரேட் டி. சி. ராமநாத முதலியாரிடம் கிரிமினல் பிராது கொடுத்துவிட்டார்கள். ராமநாத முதலியாரே இதில் ஊக்கம் காட்டிப் பிராது கொடுக்கச் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். சேலம் வக்கீல்கள் சுப்பராயர், சேஷையங்கார் இவர்களின் பேரில் தாவா. ஆனால் மகாநாட்டுத் தலைவர் பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோஸப், ஹரிகதா காலக்ஷேபம் செய்ய வந்திருந்த பத்மாஸனிபாய் இவர்களை மனுதார் பக்கம் சாட்சியாகப் போட்டிருந்தார்கள். ராமநாத முதலியார் இந் நால்வருக்கும் சம்மன் அனுப்பித் தம் கோர்ட்டு முன்பாக ஆஜராகும்படி உத்தரவிட்டுவிட்டார். ஒரே தடவையில் விசாரணை நடத்தவில்லை. சாக்குப் போக்குச் சொல்லிப் பல தடவை, பல இடங்களில் முகாம் செய்து ஆங்காங்கு எல்லோரையும் அலைய வைத்தார். பாரிஸ்டர் ஜோஸப் தமது வேலையின் நிமித்தம் தமது பொறுப்பை நடத்த வேண்டியிருப்பதால், இந்தத் தாவாவைப் பற்றித் தமக்கு ஒன்றும், தெரியாதென்று சொல்லி மறு சம்மன் தமக்கு அனுப்பக் கூடாது என்று விலகிக்கொண்டார். மறுமுறை பத்மாசனிபாய் வர முடியவில்லை என்று சொல்லிவிட்டார். இந்த ஸப் மாஜிஸ்டிரேட் முறையைக் குறை கூறி வேறு அதிகாரிக்கு வழக்கை மாற்ற வேண்டும் என்று கோரியதன் பேரில் முசிரி ஸப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டிற்கு வழக்கு மாற்றப்பட்டு, இரண்டு தவணைகளில் விசாரணை நடந்து தள்ளுபடி ஆயிற்று. மனுச் செய்துகொண்டு வழக்கு நடத்திய அப்ஸலோம் பாதி நடவடிக்கையிலேயே மறைந்துவிட்டார். ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கும் ஒரு வக்கீல் மட்டுமே வழக்கை விடாது நடத்தினார். சேலம் வக்கில் பி. வி. நரஸிம்மையர், வக்கீல் சுப்பராயருக்கும் சேஷையங்காருக்குமாக வழக்கை நடத்தினார்.

இந்தத் தொல்லை ஒழிவதற்குக் கிட்டத்தட்ட ஒரு வருஷம் சென்றது. தொட்டியம் மகாநாட்டிற்குப் பின்பு நடந்த இந்த நிகழ்ச்சி எளிதில் மறக்கக்கூடியதன்று. காங்கிரஸில் ஊக்கம் காட்டி ஆதரித்து வந்த மின்னம்பள்ளி ஜமீன்தார் தாமும் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்து அதன் நிர்வாகக் கமிட்டியின் துணைத் தலைவராகவும், ஜில்லா ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராகவும் பதவி வகித்துக் காங்கிரஸை நிராகரிக்கவும் தொடங்கிவிட்டார். காங்கிரஸும் பிரசங்கமேடை மோகம், தீர்மான யுத்தம் இவைகளைத் தாண்டி, நாட்டின் ஏழைமக்களுக்குத் தேசிய உணர்ச்சியை உண்டாக்கத் தலைப்பட்டு, சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை முதலிய கடும் பாதைகளில் இறங்கி விட்டது. சிறைவாசம், சொத்துப் பறிமுதல், போலீஸ் தடியடி இவைகள் தேசிய இயக்கத்தின் வெகுமதிகள். இதில் சுகவாசிகளுக்கு இடம் இல்லை.

இந்த வருஷத்தில்தான் முதல் முதலாகக் காங்கிரஸ் வேலைகள் உருவெடுக்க ஆரம்பித்தன. காங்கிரஸ் அரசியல் திட்டம் தயாரிக்கப்பட்டுக் காந்திஜியின் யோசனையின் பேரில், கிராமந்தோறும் சென்று இந்தத் திட்டத்தை விரிவாக மக்களுக்கு

எடுத்துரைத்துக் கையெழுத்து வாங்கும் முயற்சி நடைபெற்றது. ஆனால் இதைப் போன்ற கடுமையான வேலை இருக்க முடியாது. கிராமங்களில் காங்கிரஸின் பெயரும் வேலைகளும் ஒருவருக்கும் தெரியா. அரசியல் அமைப்புத் திட்டம்பற்றி அவர்களிடம் பேசுவதற்கு முன்பாக அரசியல் என்பதன் நோக்கம், அரசு யார் நடத்துகிறார்கள், எதற்காகப் புதிய திட்டம் என்பனவெல்லாம் கிராமவாசிகள் மனத்தில் தெளிவாக அறிவுறுத்துவதற்குச் சுமார் ஒரு வாரம் பிரசங்கம் செய்ய வேண்டி வந்தது. பிறகு நாங்கள் கொண்டுவந்திருந்த திட்டத்தில் கையெழுத்து இடும்படி கேட்கும்பொழுது, பிரசங்கம் செய்வதைக்காட்டிலும் அந்த வேலை கடினமாகி விட்டது. முக்கால்வாசிப் பெயர்களுக்குக் கையெழுத்திடத் தெரியாது. தெரிந்தவர்களிடம், "கையெழுத்து எதற்கு? நீங்கள் தாம் விஷயத்தைச் சொல்லிவிட்டீர்களே. நீங்களே எங்கள் பெயர்களை எழுதிக் கொள்ளுங்கள்" என்ற பதில் வந்தது. கையெழுத்திட்டால் அதனின்றும் என்ன கேடு விளையுமோ என்ற பயம் வேறு. "கிராம அதிகாரிகள் என்ன சொல்வார்களோ? ஒரு சமயம் போலீஸ்காரன் வந்து தொல்லை செய்வானோ? நீங்கள் இன்றைக்குக் கையெழுத்து வாங்கிக்கொண்டு போய்விடுகிறீர்கள். நாளைத் தினம் அதனால் எங்களுக்குக் கஷ்டம் உண்டானால் நாங்கள் என்ன செய்வது!" என்ற ஆட்சேபங்கள் கிளம்பும். இதற்கெல்லாம் சமாதானம் சொல்லி ஒரு கிராமத்தில் சிறுபான்மையோரிடமாவது கையெழுத்து வாங்கிப் புறப்படக் குறைந்தது ஒரு நாளாவது வேண்டியிருந்தது

இவ்விதம் குறிப்பிட்ட கால அளவிற்குள் ஜில்லா முழுவதும் கையெழுத்து வாங்க எவ்வளவு நாட்கள் ஆகும்? எவ்வளவு பணச் செலவு, எவ்வளவு ஆள் செலவு? எவ்வளவு பெயர்களுடைய அபிமானம், நல்லெண்ணம், ஊக்கம், தைரியம்- இவை எல்லாம் திரட்ட வேண்டியதன் பொறுப்பு என்ற விஷயங்களை ஒருவாறு அறிய முடிந்தது. காங்கிரஸ் கமிட்டியில் ஒரு பைசா கூடக் கிடையாது. கையெழுத்து வாங்கும்படி உத்தரவும் அச்சிட்ட பாரங்களும் வந்துவிட்டன. மற்ற வேலைகளுக்குப் பணம் திரட்டுவது அவ்வளவு சுலபமாக முடியவில்லை. மேலும் என் தொழிலை நடத்திக்கொண்டு பணம் திரட்டுவது லாபகரமாக இல்லை. யாசகம் செய்வதற்குச் செலவாகும் நேரத்தை எனது தொழிலிலே செலவு செய்து அதனின்று நான் பெறும் ஊதியத்தைப் பொது வேலைக்குச் செலவு செய்வது லாபகரமாகத் தோன்றியது. நகரங்களில் செல்வாக்கு உள்ளவர்கள் கிராமங்களில் போனால் வேலை செய்வது சுலபமாக இருந்தது. தொண்டர்களை அனுப்பினால் கையெழுத்து வாங்குவது கஷ்டமாக இருந்தது. மேலும் தொழில் முறையில் அநேகம் கிராமவாசிகளிடம் தொடர்பு ஏற்பட்டதனால், நான் நேரில் சென்று விஷயத்தைத் தெளிவுபடுத்திக் கையெழுத்து வாங்குவது சுலபமாக இருந்தது. பணச் செலவு, தொழில் நடத்தப்போதிய நேரம் இல்லாததால் ஏற்படும் நஷ்டம், தொண்டர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கான முயற்சி இவ்வளவும் ஒருங்கே சேர்ந்து கொண்டுவிட்டன. ஆனால் கிராமங்கள் தோறும் சென்று நாட்டின் நிலைமையை விளக்கிப் பொதுமக்கள் மனத்தில் சுதந்தர உணர்ச்சிக்கு விதை போடவும், காங்கிரஸின் வேலைகளை விளக்கிக் காட்டவும் இதைப்போன்ற சந்தர்ப்பம் இது வரையில் ஏற்படவில்லை. காந்தியடிகள் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் ஈடுபட்டதன் முதல் விளைவு இதுதான். ஆங்கிலம் அதிகம் படித்தவர்கள் கிராமவாசிகளிடம் அரசியல் விஷயமாகப் பேசுவதற்கு முன் வரவில்லை. அதிக ஆங்கிலப் படிப்பு அறியாத இளைஞர்கள், தேச பக்தியின் மேலீட்டால், அரசியல் முறைகளைச் சற்றுத் தெரிந்து, சொற்ப ஊதியத்தைக்கொண்டு கிராமந்தோறும் சென்று உழைத்து வந்தார்கள். ஆங்காங்கே காங்கிரஸ் சபைகள் ஏற்படுத்தி ஒவ்வொரு கிராமத்திலும் பொறுப்புள்ள ஒருவரைத் திட்டம் செய்து அவர்கள் மூலம் கையெழுத்து வாங்கும் வேலையும் நடைபெற்றது.

உதகமண்டலம்

நீலகிரி மலையின் மேல் கோடைக்காலத்துக்குப் பணம் படைத்தவர்கள் போய்த் தங்கும் இடத்தை 'ஊட்டி' என்று ஆங்கிலத்திலும், 'உதகமண்டலம்' என்று தமிழிலும் வழங்குகிறோம். தமிழ்ப் பெயர் அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் அதன் உண்மையான பெயர் ஒத்தை அல்லது ஒத்தைக் கல் மன்று என்பது. தொதுவர் வைத்த பெயர் அது. அதை ஆங்கிலத்தில் 'ஓட்டக்க மண்ட்' என்று ஆக்கினார்கள்; அதைக் காதுக்கு இனிமையாக மாற்றினவர்கள் உதகமண்டலம் என்று தமிழில் வழங்கிவிட்டார்கள்.

தேக சுகம்

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

[“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.” நமது நாட்டில் சுகாதார விஷயங்களைப்பற்றிப் பொதுஜனங்களுக்கு விளங்கும்படி தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ நம் பத்திரிகைகளில் அடிக்கடி எழுதப்படுகிறதில்லை. வியாதிகள் வராமல் இருக்கும்படி அநுசரிக்கவேண்டிய முறைகளைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. இம்மாதிரி கட்டுரைகளில் காணும் விஷயங்களைத் தெரிந்துகொண்டு ஒவ்வொருவரும் தனக்குத் தானே வைத்தியம் செய்துகொள்ளவேண்டும் என்ற கருத்து இல்லை. ஏனெனில் சொந்த வைத்தியத்தால் பெரிய அபாயங்கள் ஏற்படுகின்றன. ஏதாவது நோய் வந்தால் வைத்தியரின் ஆலோசனைகளை அநுசரித்துத்தான் மருந்துகள் சாப்பிட வேண்டும். கட்டுரைகளைப் படித்துவருபவர்கள் அநேக வியாதிகளைத் தடுப்பதற்கு வழிகள் தெரிந்துகொள்வார்கள். மேலும் வியாதிஸ்தர்கள் தாமதிக்காமல் சீக்கிரமாகவே வைத்தியரிடம் போக வேண்டிய அவசியத்தையும் அறிந்துகொள்வார்கள்.]

குழந்தை பிறந்ததும் அழுகிறது. அந்த அழுகை ஆகாரத்துக்கு அல்லவா? ஆகையால் நம் உணவுதான் முதன்மையான ஸ்தானத்தில் இருக்கிறது. போஷணை சரியாக இல்லாவிட்டால் வியாதிக்கு இடம் உண்டாகும். சரியான உணவு கிடைப்பதாக வைத்துக்கொண்டாலும், சில விஷயங்களைக் கவனித்தே ஆகவேண்டும். சாப்பிடும் பண்டங்களைக் கையாளுகிற சமையற்காரன், பாற்காரன் முதலியோர் டைபாய்டு, சீதபேதிக் கிருமிகளைத் தம் கைகளில் (நக இடுக்குகளில்) அறியாமலே தூக்கிச் செல்லுகிறார்கள். பெரிய சிறைச்சாலைகளிலும் மாணவர் விடுதிகளிலும் உள்ள அநேகருக்கு இவ்விதக் கொள்ளை நோய்கள் (Epidemic Diseases) வந்ததற்குக் காரணம் அங்குள்ள சமையற்காரர்களும் பாற்காரர்களுமே என்று பல தடவைகளில் தெரியவந்தது. இது தவிர வீட்டிலுள்ள ஈக்களும் நம்முடைய ஆகாரங்களின் மூலம் இவ்வியாதிகளைப் பரப்புகின்றன. மேலும் நமக்குக் கரண்டிகளை உபயோகித்துச் சாப்பிடும் வழக்கம் இல்லாததால், சாப்பிடுமுன்பு கைகளையும், நக இடுக்குகளையும் நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்துகொள்வது மிகவும் நல்ல வழக்கம்.

சாப்பிடும்போது மனச் சந்துஷ்டியுடன் சாப்பிட வேண்டும். மன வியாகுலமோ, கவலையோ கொஞ்சமும் கூடாது. இன்பம் உண்டாகும் வண்ணம், நல்ல இடத்தில் நண்பர்களுடனும் உறவினர்களுடனும் கூடிச் சாப்பிடுவது பழங் கால வழக்கம். “கூடிப் புசி” என்னும் பழமொழி இன்னும் வழங்குகிறது. மன வியாகுலத்துடன் உண்டால் ஜீரணசக்தி குறைவுபடும். ஆகாரம் அதிகச் சூடாகவோ, அதிகக் குளிர்ச்சியாகவோ இருக்கக்கூடாது. மஸாலை, பெருங்காயம், மிளகாய், மற்றுமுள்ள தாளிக்கும் திரவியங்கள் அநாவசியமாக வயிற்றுக்கு அதிக வேலை கொடுக்கின்றன. இதனால் நம்முடைய ராஜதானியில் வயிற்றிலும் சிறுகுடலிலும் புண்கள் அதிகமாகக் காணப்பட்டு, கடைசியாகப் பெரிய சஸ்திர சிகிச்சையில் (Surgery) வந்து முடிகின்றன.

நாம் சாப்பிடும் உணவை மெதுவாகவும் நன்றாகவும் மென்று உமிழ்நீருடன் கலக்கும்படிச் செய்த பிறகே விழுங்கவேண்டும். இதனால் ஆகாரம் வாயில் முதல் முதலில் ஜீரணமடைகிறது. ஜீரண நீர்கள் எல்லாம் காடுமுரடாக உள்ள பதார்த்தங்களின் மேலாக மட்டுமே கலக்கும். பற்களால் மிருதுவாகச் செய்த பண்டங்களோடு சேர்ந்தால் ஜீரண நீர்கள் அவற்றின் ஒவ்வோர் அணுவையும் நன்றாக ஜீரணப்படுத்தி, வயிற்றின் வேலையைக் குறைத்தும், வயிற்றில் புளிப்பு (Fermentation), புளியேப்பம், உப்புசம், வயிற்றுவலி இவைகளைத் தடுக்கும். சாப்பாட்டில் தண்ணீர் எவ்வளவுக்கு எவ்வளவு குறைவோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது. சாதாரணமாக அநேகர் சாப்பிடும்பொழுது மடக்கு மடக்கென்று தண்ணீர் அருந்துகிறார்கள். அதனால் ஜீரணநீர்கள் மிகவும் நீராகி (நீர்த்துப் போய்) நன்றாய் வேலை செய்வதில்லை, தென்னிந்திய உணவுகளில் ரஸம், மோர் முதலானவைகளில்

எவ்வளவு நீர் சேர்ந்திருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும்.

தண்ணீரும் நம் தேகத்திற்கு மிகவும் அவசியமான பொருள்தான். ஆனால் அதை ஆகாரத்துக்கு ஒன்றரை அல்லது இரண்டு மணி நேரத்துக்குப் பிறகுதான் நிறைய அருந்தவேண்டும். அச்சமயத்தில் அத்தண்ணீர் ஜீரணமான உணவுச் சத்தைக் கரைத்து ரத்தத்தில் சேர்க்கவும், வேண்டாத பொருள்களைக் குடலின் கீழ்ப்பாகத்திற்கு அடித்துக்கொண்டு போகவும் உதவியாக இருக்கும். அழுக்கு மேற்குடலில் சேராமல் கீழுள்ள பெருங்குடலில் போய் மலமாகச் சேருகிறது. தவிர, தண்ணீர் ரத்தத்தில் சேர்ந்து, அதிலுள்ள அழிவு பதார்த்தங்களை வேர்வையாகவும் மூத்திரமாகவும் வெளியில் கொண்டுவந்து விடுகிறது. காலையில் பல் துலக்கியவுடனும், இரவில் படுக்கப் போகுமுன்பும், ஒரு தம்ளர் குளிர்ந்த தண்ணீர் குடிப்பது நல்ல பழக்கம். குடிக்கும் தண்ணீர் சுத்தமாயும் கிருமிகள் இல்லாததாயும் இருக்கவேண்டும் என்பதைக் குறிப்பிட வேண்டியதில்லை. அதற்காக நன்றாய்க் கொதிக்க வைத்துக் குளிரச்செய்த தண்ணீரையே உபயோகப்படுத்துவது மிகவும் நல்லது.

இது சம்பந்தமாக, மற்றும் சில பானங்களைப் பற்றிச் சில விஷயங்களை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். கரியமில வாயு (Carbon-di-oxide) கலந்த சோடாத் தண்ணீர் வயிற்றுக்குச் சுகமாக இருக்கும். ஆனால் ஜீரணசக்தி சரியாக இருந்தால் அது அவசியம் அன்று. எலுமிச்சம் பழரஸத்தைச் சர்க்கரையுடன் தண்ணீரில் சேர்த்து, நீரிழிவு இல்லாமலிருப்பவர்கள் சாப்பிடலாம். நீர் மோரும் இளநீரும் தேகத்திற்கு நல்லவை. காபியும் டீயும் உற்சாகமளிப்பனவாக இருந்தாலும், தேக சௌக்கியத்திற்கு அவசியமன்று. அவை அளவுக்கு மீறினால் அஜீர்ணம், படபடப்பு, தூக்கமின்மை, நரம்புச் சோர்வு முதலியவற்றை உண்டாக்கும். ஆனால் அவற்றிலுள்ள பாலையும் சர்க்கரையையும் தனியாகவோ அல்லது கோகோவுடனோ, ராகிக் கஞ்சியுடனோ சாப்பிட்டால் நல்ல உணவாகும். சாராயம் சேர்ந்த பானங்கள் மிகத் தீமை விளைவிக்கும். இளம் பருவத்திற்குப் பின் வயசு முதிர முதிர வேலைக்குத் தக்கபடி, ஆகாரத்தையும் குறைத்துக்கொண்டே வரவேண்டும்.

சுருட்டு, பீடி முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகித்தால் அஜீர்ணம் உண்டாவதுடன், ரத்தக்குழாய்கள் சீக்கிரமாகக் கனத்து அதிக ரத்த அழுத்தமும் (High Blood Pressure), வேறு பல வியாதிகளும் ஏற்பட ஏதுவாகின்றன.

உடல் வலிவுக்குத் தக்கபடி எல்லா வயசிலும் தேகாப்பியாசம் செய்ய வேண்டியது அவசியம். அதேபோல் தேகத்திற்கு ஓய்வும் வேண்டும். கடும் வேலை செய்பவர்கள் கொஞ்சம் அதிகமாகவே தூங்க வேண்டும். தூங்கச் செல்லும்போது வயிற்றில் ஆகாரம் மிகவும் குறைவாக இருக்க வேண்டும். நல்ல காற்றுள்ள அறையில் ஜன்னல்களை நன்றாய்த் திறந்து வைத்துக்கொண்டு தூங்க வேண்டும். எவ்வளவு குளிராக இருந்தாலும், கம்பளத்தினால் முகத்தைப் போர்த்துக்கொள்ளக் கூடாது.

தினந்தோறும் காலையில் எழுந்திருந்ததும் ஒரு தடவை சரியானபடி மலசுத்தி செய்ய வேண்டியது மிகவும் அவசியம். மலச்சிக்கலால் விளையக்கூடிய தீங்குகள் கொஞ்ச நஞ்சம் அல்ல. பெருங்குடலில் எப்பொழுதும் விஷக்கிருமிகள் இருக்கின்றன. அவைகளால் உண்டாகிற விஷ பதார்த்தங்கள் வெளியில் போக வேண்டும். மலச்சிக்கலால் ரத்தம் கெட்டுப் பலவித விஷவியாதிகள் ஏற்படும். இவற்றைத் தடுக்கவேண்டுமானால் ஆகாரத்தில் கறிகாய்கள், நெய், எண்ணெய், பால், தயிர் இவை எல்லாம் சேர்த்துக்கொள்ளவேண்டும். தினந்தோறும் ஒரே வேளையில் காலம் தவறாமல் மலசுத்தி செய்யும் வழக்கத்தை அநுசரிப்பது மிகவும் முக்கியம். கீழ்க்குடலுக்கு ஒரு வழக்கத்தை உண்டாக்குவது சுலபமான விஷயம். மலச்சிக்கலுக்கு வழக்கமாய் மருந்து சாப்பிடுவதோ, எனிமா எடுத்துக்கொள்வதோ கூடாது. ஏதாவது வயிற்று வலி இருந்தால் அநேகர் உடனே பேதிக்கு மருந்து சாப்பிடுகிறார்கள். வயிற்று வலிக்குக் காரணங்கள் பல இருக்கின்றன. சில வயிற்று வலிகள் குடல் வியாதிகளால் ஏற்படுகின்றன. அப்பொழுது பேதி மருந்து சாப்பிடுவதைப்பற்றி ஒரு வைத்தியர்தாம் தீர்மானிக்க வேண்டும். உதாரணமாக, குடல் அனுபந்தம் (Appendicitis) என்ற வியாதி மும்முரமாக இருக்கையில் அநேக வியாதிஸ்தர்கள் வைத்தியரின் உத்தரவு இல்லாமல் பேதி மருந்தைச் சாப்பிட்டதனால் குடலில் துவாரமுண்டாகி எதிர்பாராத மரணத்தை அடைந்திருக்கிறார்கள். இம்மாதிரி அநேகம் தாய்மார்கள் குழந்தைகளின் வயிற்று வலிக்கு அறியாமல் பேதி மருந்தைக் கொடுத்துத் தம்முடைய குழந்தைகளுக்குக் கொலையாளிகளாக இருந்திருக்கிறார்கள் என்று ஒரு பெரிய சஸ்திர வைத்திய நிபுணர் தமது புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார்.

தேகசுத்த விஷயங்களில் முதலில் கவனிக்க வேண்டியவை பற்களேயாகும். நாம் சாப்பிடும் ஆகாரத்தின் சிறு சிறு அணுக்கள் பற்களுக்கிடையே அகப்பட்டுக்கொண்டு, அழுகி நோய்க் கிருமிகள் வளர வசதியளிக்கின்றன. ஆகவே எயிறுகளிலும், பற்களுக்கு அஸ்திவாரமாக இருக்கும் இரண்டு தாடை எலும்புகளிலும் சீழ் உண்டாகி, எச்சில் விழுங்கும்போது வயிற்றுக்குள் அந்தச் சீழ் போவதுமல்லாமல், சிறு ரத்தக்குழாய்

கள் வழியாக ரத்தத்திலும் சேர்ந்து வாதநோய்களை உண்டாக்கலாம். இவ்வியாதிஸ்தர்களோடு பேசும்போது, அவர்கள் வாய் நாற்றம் அருவருப்பாக இருக்கும். இவ்வியாதிஸ்தர்களில் சிலர், மூட்டுநோய் என்று வரும்போது அதற்குக் காரணமாக இருக்கும் பற்களை எடுத்துவிடவேண்டும் என்றால் டாக்டரைப் பார்த்து நகைக்கின்றனர். "என்ன டாக்டர்! மூட்டு எங்கு இருக்கிறது? பல் எங்கு இருக்கிறது? அந்த இரண்டுக்கும் என்ன சம்பந்தம்?" என்கிறார்கள். ஏனெனில் ஒவ்வொரு சமயமும் உமிழ்நீரோ அல்லது ஆகாரமோ விழுங்கும்போது கொஞ்சம் சீழையும் விழுங்குகிறார்கள் என்பதை அவர்கள் அறியவில்லை. வேறு சிலர், "என்ன டாக்டர், நம்முடைய முன்னோர்களுக்கு இந்த வியாதியே தெரியாதே. பழைய நாள் கிழவர்களில் எத்தனை பேர்களை நல்ல கெட்டியான பற்களோடு பார்த்திருக்கிறோம். அவர்களெல்லாம் நம்மைப்போலவா ரோமக் குச்சிகளையும் (Brushes) பிசின்களையும் (Pastes) உபயோகித்தார்கள்?" என்று பரிகாசமாய்ப் பேசுகிறார்கள். அவர்களுக்குச் சில விஷயங்கள் தெரிய வேண்டும். எகிப்து தேசத்தில் அநேக ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் புதைக்கப்பட்டிருந்த மனித தேக எலும்புகளை விஞ்ஞான சாஸ்திரிகள் சோதித்துப் பார்க்கும்போது பல் தாடை எலும்புகளில் இப்பொழுதுள்ள பல வியாதிகள் அந்தப் பண்டை நாட்களிலும் இருந்ததற்கு அத்தாட்சிகள் இருந்தன. அந்த நாட்களில் நாகரிகத்தினால் உண்டாகும் அசௌகரியங்கள் இல்லாமல் இருந்ததால் அப்பொழுது இருந்த ஜனங்கள் அவசரமில்லாமல் தேகத்திலுள்ள முக்கிய அங்கங்களை நன்கு கவனித்துவந்தார்கள். கறிகாய்களை மிகவும் வேகவைக்காமல் பற்களை நன்றாக உபயோகித்துவந்ததால் அவை பலமாக இருந்தன. கரியையும் மற்ற மருந்துப்பட்டைகளையும் பற்பொடியாகச் செய்து உபயோகித்தும், ஆல வேல விழுதுகளின் நுனிகளால் பற்களின் இடைகளை நன்றாகச் சுத்தம் செய்தும் வந்தார்கள். நாமும் ஏன் அப்படிச் செய்யக்கூடாது? இரவில் படுக்கப்போகும் சமயத்திலும் ஒரு தடவை பல் துலக்குவது நல்ல பழக்கம்.

அடுத்தபடியாக, நம்முடைய தேகத்தோலை உடம்பிலுள்ள சதைக்கு உறையாக மட்டும் கருதக் கூடாது. அதற்கு வேறொரு முக்கியமான வேலையும் இருக்கிறது. அது நமது தேகத்தின் உஷ்ண நிலையைச் சரியான அளவில் வைத்துக்கொள்கிறது. ஆதலால் நம் தேசத்தைப் போல உள்ள உஷ்ணப் பிரதேசங்களில் அதை நன்றாகப் பாதுகாத்துவர வேண்டும். தேகத்தில் மிகச் சிறிய துவாரங்கள் அநேகம் இருக்கின்றன. நாம் அறியாமல் எப்பொழுதும் இத்துவாரங்கள் வழியாய்த் தேகத்திலுள்ள தண்ணீர் ஆவியாகி, நம்மைச் சூழ்ந்திருக்கும் காற்றில் போய்க் கலந்துகொண்டே இருக்கிறது. இந்த நீர் தேகத்துக்கு வேண்டாத விஷப்பொருள்களைத் தேகத்திலிருந்து வெளியேற்றுகிறது. ஆகையால் இந்தச் சிறு துவாரங்கள் அழுக்குகள் நீங்கி நன்றாய்த் திறந்திருக்கவேண்டும். ஆகையால் இவற்றைச் சுத்தமாக வைக்க ஸ்நானம் செய்யவேண்டியது அவசியம். குளிர்ந்த நீரில் குளிப்பதே உடம்புக்கு நன்மை விளைக்கும். மிதமாகச் செய்தால் உடம்பைத் துடைத்துக்கொண்டதும் தேகத்தில் உஷ்ண உணர்ச்சி இருக்கவேண்டும். எண்ணெய் தேய்த்துக் குளிப்பதில் பயன் உண்டு. சருமத் துவாரங்களிலுள்ள கொழுப்புச் சேர்ந்த அழுக்குகள் எண்ணெயில் சுலபமாய்க் கலந்து சிகைக்காய் அல்லது சோப்பினால் நீக்கப்படுகின்றன.

தேகத்தில் பூசிக்கொள்ளும் பவுடர், பிசின் வகைகள் அவசியமே இல்லை. அவற்றை உபயோகித்துத்தான் தீரவேண்டுமென்றால் ஒவ்வொருவருக்கும் அவை தனித்தனி டப்பிகளில் இருக்கவேண்டும். ஒருவர் உபயோகித்ததை மற்றொருவர் உபயோகிக்கக்கூடாது. அணிந்துகொள்ளும் ஆடைகள் நம் தேகத்துக்கு மெல்லியனவாயும், லேசாயும், காற்று அவற்றின் வலைக்கண்கள் வழியாக உள்ளும் வெளியும் செல்லும்படியும் இருக்கவேண்டும். அவை உடம்பை எவ்விதத்திலும் பந்தனம் செய்யக்கூடாது. பெரும்பான்மையோர் பாதங்களுக்குச் செருப்பு அணிவதில்லை என்பது வருந்தத்தக்கது.

தேக ஆரோக்கியத்திற்கு மிகவும் உதவுவது மனச்சந்துஷ்டியோடு இருப்பதே. தினசரி வழக்கமான வேலைகள் முடிந்ததும் அல்லது சாயங்கால நேரங்களில் சோர்வுற்ற நம் மனத்திற்குக் களிப்பூட்டும்படியாகப் பொழுதைப் போக்கவேண்டும். எத்தகையோரிடத்தும் கூடிக் கலகலப்பாய்ப் பேசி உறவாடவேண்டும். அதனால் நம் மனவியாகுலம் அகலும். ஏனெனில் ஏகாந்தத்தில் பெரிய அபாயம் உண்டு. அப்படி இருப்பவர்கள் உலக அநுபவத்தை நன்கு அறியாமல், தங்களுடைய சிறு குற்றங்குறைகளையே பெரியனவாக எண்ணி, தங்களை மற்றவர்களைவிடத் தாழ்மையானவர்களாகக் கருதி ஏங்குகிறார்கள். மற்றவர்களுடைய குற்றங்குறைகளை அறிந்து, தாங்கள் அநேகரை விட எவ்வளவோ மேம்பட்டவர்கள் என்பதை உணருவதில்லை. ஆகையால்தான் இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்பையே அடைகின்றனர். வீணாக எதற்கும் கோபிக்கக்கூடாது. என்ன செய்தாலும் பரபரப்புக் கூடாது. மனம் சந்தோஷம் அடைந்தால் உடல் நலம் பெறும்.



எங்கள் ஊர்

கமலா மணி

[தமிழ்நாட்டிலிருந்து வடநாட்டுக்குச் சென்ற அறிஞர் கூட்டத்தில் பத்திரிகாசிரியர் பலர். 'ஹிதவாதா' என்னும் ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராகிய ஸ்ரீ ஏ. டி. மணி என்பவர் தமிழர். அவர் மனைவியாகிய ஸ்ரீமதி கமலாவே இந்தக் கட்டுரையை எழுதியவர். தமிழ்நாட்டில் பிறந்த இப்பெண்மணி நாகபுரியை 'எங்கள் ஊர்' என்று 'அநுபோக பாத்திய'த்தால் சொன்னாலும், நல்ல வேளையாகத் தம் தாய்மொழியாகிய தமிழிலே தான் கட்டுரை எழுதியிருக்கிறார். 'எங்கள் மொழி' என்று மராட்டியை அவர் சொல்லமாட்டார் என்று நாம் நம்பலாம் அல்லவா! —ப - ர்.]

நான் பிறந்து வளர்ந்த இடம் மிகவும் ஆரோக்கியத்திற்குப் பேர் பெற்றது. இப்பொழுதும் கோடைக் காலத்தில் அநேகர் ரெயில் பிரயாணங்களின் சிரமங்களைக் கவனிக்காமல் சுகவாஸத்திற்காக எங்கள் ஊருக்குப் போகிறார்கள். நினைவு தெரிந்தது முதல் நான் சென்னையில் இருந்தேன். ஆனால் அந்த ஊர்களையெல்லாம் எங்கள் ஊர்களாகப் பாவிக்கவில்லை. எங்கள் ஊர் தற்சமயம் நாகப்பூர்தான். இதுவே எங்களுடைய நிரந்தர வாசஸ்தலமாகக் கூடும். ஆனால் யுத்த காலத்தில் ஒன்றும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை அல்லவா?

நம்முடைய சகோதரர்களுக்கு நாகப்பூர் புதிதல்ல. மேலும் 'கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ்' ஏற்பட்டதிலிருந்து நாகப்பூருக்குத் தனி மகிமை உண்டாகியிருக்கிறது. சுருக்கத்தில் ஜி. டி. எக்ஸ்பிரஸின் கதை சரித்திரப் பிரசித்தி பெற்றது. அநேக காலமாக ஒரு விகடத் துணுக்கு நம் நாட்டில் வழங்கிவருகிறது. அது என்னவென்றால் ஓர் ஊரில் புகைவண்டி சமயத்திற்கு வருவதே வழக்கமில்லை. அதை உத்தேசித்து ஒரு யாத்திரிகன் ஐந்து நிமிஷம் தாமதித்து ஸ்டேஷனுக்குப் போனான். ஆனால் அவன் போய்ச் சேருமுன் வண்டி பிளாட்பாரத்தை விட்டுப் புறப்பட்டுவிட்டது. இந்த ஆச்சரியகரமான விஷயத்தின் காரணத்தை விசாரிக்க அவன் ஸ்டேஷன் மாஸ்டரிடம் போனான். அவர் என்ன பதில் சொன்னார் என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயந்தான். இருந்தாலும் நானும் சொல்லிவிடுகிறேன். அவர் சொன்னார்: "அடடா! அது இன்றை வண்டி இல்லையே; நேற்று வண்டியல்லவா இன்று சமயத்திற்குப் புறப்பட்டது?" என்று யாத்திரிகனைச் சமாதானப் படுத்தினாராம். கதைக்குக் காலில்லை என்று சொல்வது உண்டு. ஆனால் ஜி டி. எக்ஸ்பிரஸ் இக்கதையை நிதர்சனமாக்கிவிட்டது. ஏதாவது ஒரு நாள் தப்பித் தவறி அது சமயத்திற்கு வந்துவிட்டால், ஊரெல்லாம் அதே பேச்சாக இருக்கும்.

நாகப்பூர்வாசிகளுக்கு ஜி. டி. யை விட்டால் வேறு கதி இல்லை. தமிழ்நாட்டின் தொடர்பு அதன் மூலமாய்த்தான் எங்களுக்கு ஏற்படுகிறது.

ஜி. டி. யைப்பற்றி மாத்திரம் சொன்னால் போதுமா? அதில் வரும் மனிதர்களைப் பற்றிச் சொல்லவேண்டும் அல்லவா? பெரிய பெரிய தனவந்தர்கள்கூட நாகப்பூருக்குச் சாப்பாட்டுக்காக எழுதத் தவறுவதில்லை. சொந்தக்காரர்கள், சிநேகிதர்கள் ஒன்றுவிட்ட முறைகள் இப்படியாகக் கடிதங்கள் வந்துகொண்டே இருக்கும். நாங்களும் விட்டுக்கொடுக்காமல் வெயில், மழை, பனி என்று பாராமல் 'லொங்கு லொங்' கென்று சோற்று மூட்டை, இட்டிலி காபியுடன் ஓடுவோம். புருஷர்கள் ஆபீசிற்கு லீவு எழுதிப் போட்டுவிட்டுச் 'சிவ சிவ' என்று ஜி. டி. யை எதிர்பார்த்துக்கொண்டு

இருப்பார்கள். சில சமயங்களில் எழுதி விட்டு, வராமலே இருக்கும் பேர்வழிகளும் உண்டு.

பார்க்கவேண்டிய இடங்கள்

எங்கள் ஊருக்கு யார் வந்தாலும், "உங்கள் ஊரில் என்ன என்ன பார்க்க வேண்டியவை?" என்ற கேள்வியைத்தான் முதலில் கேட்பார்கள். நாங்கள் உடனே அவர்களை அம்பாஜாரி ஏரி, தெலிங்கடி ஏரி, கோரிவாரா ஏரி என்று காண்பிக்க அழைத்துப் போவோம். அவர்கள் "பூ! இதென்ன பிரமாதம்! மெட்ராஸ் கூவம் அவ்வளவு பெரிதுகூட இல்லையே?" என்றெல்லாம் உதட்டைப் பிதுக்குவார்கள். நாங்கள் என்ன செய்வோம்! இருக்கிறதைத்தானே காண்பிக்க முடியும்? இல்லாததை எங்கிருந்து கொண்டு வர முடியும்? சொல்லுங்கள்.

இந்த ஊரில் சீதாபல்டி என்று ஓர் இடம் இருக்கிறது. ஸ்ரீராமர் லங்கையிலிருந்து யுத்தம் முடிந்து வந்தவுடன் சீதா பிராட்டியாருடன் இங்கே தங்கி, சிரம பரிகாரம் செய்து கொண்டதாகச் சொல்லுகிறார்கள். அந்தஇடத்தில் இப்பொழுது ஒரு கோட்டை இருக்கிறது. தற்சமயம் அது மிலிடரியார் வசம் இருப்பதனால் அதைப் பார்க்க ஒருவரும் அனுமதிக்கப்படுவதில்லை. ஸ்டேஷனுக்கு அருகில் பளிங்கினால் கட்டப்பட்ட ராமர் கோவில் மிகவும் அழகாக இருக்கிறது. பெரிய உத்தியோகஸ்தர்களும் பணக்காரர்களும் வசிக்கும் இடம் 'ஸிவில் லயன்ஸ்.' இது கொஞ்சம் சுத்தமாகவும் விசாலமாகவும் இருக்கும். மற்றப்படி எல்லா இடங்களும் அசுத்தமாகவும் சந்து பொந்துகள் நிறைந்தனவாகவும் தென்படும். அதைப்பற்றி நாங்கள் கவலைப்படுவதில்லை.

ஏனெனில் இந்தியாவின் நகரங்களில் எதில்தான் சுத்தமும் சுகாதாரமும் நிறைந்திருக்கின்றன? மொத்தத்தில் நாகப்பூர் மத்திய மாகாணத்தின் தலைநகர் என்பதை அடிக்கடி நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் நமக்கு அந்த உணர்ச்சி இல்லாமற் போய்விடக்கூடும்.

போக்குவரத்துச் சாதனங்கள்

சமீபகாலம் வரைக்கும் டாங்காதான் முக்கிய வசதியாக இருந்தது. ஆனால் அதற்குப் போட்டியாக ஸைகில் ரிக்ஷா ஒன்று இரண்டு வருஷகாலமாகக் கிளம்பியிருக்கிறது. இந்தியாவில் பாட்னவைத் தவிர வேறு எங்கும் இந்தப் போக்குவரத்துச் சாதனம் கிடையாதென்று நினைக்கிறேன். ஸைகில் ரிக்ஷாவில் போவதே ஓர்அலாதி 'குஷி' தான். அதிலும் இழுப்பவன் கொஞ்சம் பலசாலியாக இருந்துவிட்டால் வாயு வேகம் மனோவேகமாகப் போகலாம். ஸைகில் விடுபவர்களுக்கு ஹிருதயபலவீனம் உண்டாகிறது என்று சிலபேர்கள் ரிக்ஷாவில் போவதில்லை. ஆனால் அவ்வளவு தூரம் அஹிம்ஸா தர்மத்தைக் கடைப்பிடித்து நாம் என்ன பலனை அடையப் போகிறோமோ? இந்த ஊர் டாங்கா குதிரைகள் தென்னாலி ராமன் குதிரையைத் தோற்கடித்து 'மாதம் போம் காதவழி' என்கிற மாதிரியில் போகும். ரோடுகளைப்பற்றியோ கேட்கவே வேண்டாம். தாய் தந்தையற்ற அனாதைக் குழந்தைகளைப் போல் கவனிப்பாரற்றுக் கிடக்கும். முனிஸிபாலிடி அங்கத்தினர்கள் தங்கள் சண்டைகளையெல்லாம் ஒரு விதமாகத் தீர்த்து ஏதாவது முடிவுக்கு வந்தால்தானே நகரச் சீர்திருத்தம் செய்ய முடியும்? அதுதான் அவர்களுக்குச் சரியாக இருக்கிறதே? இந்த நிலைமையில் டாங்காவில் போய்விட்டு எலும்பு நொறுங்காமல் வீட்டிற்கு வந்து சேருவதே ஓர் அதிசயம் அல்லவா?

போன வருஷத்திலிருந்து எங்கள் ஊரில் பஸ் கூட ஓடுகிறது. ஆனால் அது எங்கிருந்து புறப்படுகிறது. எங்கெங்கே போகிறது, எந்த வழியாய்ப் போகிறது, எவ்வளவு நிமிஷங்களுக்கு ஒரு தரம் போகிறது என்பதை நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போகவேண்டுமானால் நடந்தே போவது தான் இந்த ஊரில் சிலாக்கியமான முறை.

பழக்க வழக்கங்கள்

சாதாரணமாக இந்த ஊர்க்காரர்கள் எல்லோரும் நம்மைவிடப் பலசாலிகள். பார்ப்பதற்கும் நன்றாக இருப்பார்கள். ஸ்திரீகளுக்கு அதிக சுதந்தரம் உண்டு. அவர்களில் படிக்காத பேர்கள் மிகவும் அபூர்வம். இடறி விழுந்தால் ஏதோ ஒரு பி. ஏ. அல்லது எம். ஏ. மேல்தான் விழவேண்டும். இவ்வளவு இருந்தும் ஒருவராவது ஆங்கிலத்தில் தடதடவென்று நாலு வார்த்தைகள் பேச மாட்டார்கள். இதற்கு அவர்கள் தாய் மொழி அபிமானமே காரணம். நாலுபேர்கள் சேர்ந்தால் அவர்களின் பாஷையாகிய மராட்டியில்தான் பேசுவார்கள். அவர்களுடைய பாஷை வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்பது போலத் தொனிக்கும். இங்கேயே பிறந்து வளர்ந்த தமிழர்கள்கூட மராட்டியில் நன்றாகப் பேசும் சாமர்த்தியத்தைப் பெறவில்லையென்றால் அது எவ்வளவு கடினமென்று யோசித்துப் பாருங்கள்.

இந்த ஊரில் பெண்கள் ஸைகிளில் போவது மிகவும் சாதாரணமான காட்சி. ஸ்திரீகள் மற்ற ஊர்களை விட இங்கு அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும்.

ஒவ்வொரு ஸ்திரீயும் தன் வீட்டு வேலையைத் தவிர வெளி வேலையிலும் பங்கெடுத்துக் கொள்ளாமல் இருப்பதில்லை. வீட்டிலும் மொக்கு மொக்கென்று வேலை செய்வார்கள். நடப்பதற்குக் கொஞ்சங்கூட அஞ்ச மாட்டார்கள். சிறு குழந்தையிலிருந்து நடக்கப் பழக்கிவிடுவார்கள். இவர்களிடமிருந்து உழைப்பு, சிக்கனம் முதலியன நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை.

சாப்பாடோ மிகவும் சுலபம். இரண்டு வேளை கோதுமை அல்லது சோள ரொட்டிகள். ஏதோ ஒரு கறிகாய். அவ்வளவுதான். இரண்டு வேளை ஒவ்வொரு கிண்ணம் தேத்தண்ணீரோடு திருப்தி அடைந்துவிடுவார்கள். நம் பெண்மணிகள் மாதிரி அடுப்பங்கரையில் உட்கார்ந்து கறி, கூட்டு, பச்சடி, அப்பளாம், சாம்பார், ரசம், தோசை, டிபன், காபி என்று பிராணனை விட மாட்டார்கள். ஆனால் வருஷாந்தரத்திற்காகச் சாமான்கள சேகரிப்பதிலோ, வடாம், ஊறுகாய் போடுவதிலோ, ஷர்பத், ஜாம் (Jam) முதலியன பண்ணுவதிலோ இவர்களை மிஞ்சினவர்கள் இல்லை.

ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் இங்கே கண்டுபிடிக்க முடியாது. எல்லோரும் ஒரே மாதிரி உடை, ஒரே மாதிரி சாப்பாடு. நம் மாதிரி வெளித் தோற்றத்திலும் ஆடம்பரத்திலும் இவர்கள் மயங்குவதில்லை.

இங்கு விவாகங்கள் நடத்தும் முறையை நாம் அவசியம் போற்ற வேண்டும். இந்த ஊரில் 'விவாக மண்டலம்' என்று ஒரு ஸ்தாபனம் இருக்கிறது. பெண் வீட்டுக்காரர்கள் $12\frac{1}{2}$ ரூபாயும் பிள்ளை வீட்டுக்காரர்கள் $12\frac{1}{2}$ ரூபாயும் இந்த ஸ்தாபனத்திற்குக் கொடுத்துவிட்டால், சாஸ்திரீய முறைப்படி 25 ரூபாயில் விவாகம் நடந்தேறிவிடும். பிறகு விருந்து மற்றச் செலவுகள் எல்லாம் அவரவர்களின் இஷ்டப்படியும், யோக்கியதைக்குத் தகுந்தபடியும் நடத்திக்கொள்வார்கள். வரதக்ஷிணைப் பேய் தலை விரித்தாடும் நம் தென்னாட்டுச் சகோதரர்கள் இதைக் கவனிப்பார்களா? கொஞ்சம் நாகரிகம் அடைந்தவர்கள் இந்த ஊரில் ரிஜிஸ்டர் முறைப்படி விவாகம் செய்து கொள்கிறார்கள். நமக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, இதிலுள்ள பிரயோஜனங்களை நாம் அங்கீகாரம் செய்து கொள்ள வேண்டுவது அவசியம்.

இங்கே தேசீய உணர்ச்சி அதிகம் உண்டு. சீக்கிரத்தில் கோபமும் வந்துவிடும். இங்குள்ள 'சிட்னிஸ் பார்க்' என்கிற மைதானத்தில் நடக்கும் கூட்டங்களில் கல்லெறியும், தடியடியும், வசைமாரியும் அடிக்கடி காணலாம்.

எங்கள் பிரதம மந்திரியாக இருந்து விலக்கப்பட்ட டாக்டர் கரே பைஜாமாவில் செக்ரடேரியட் போவார். டில்லியில் இப்பொழுது என்ன செய்கிறாரோ .பாவம்! 'கோண்ட்வானா கிளப்' என்பது இங்கு ஒரு பெரிய சங்கம். அது ஆங்கில நாகரிகப்படி நடத்தப்பட்டுவருகிறது. ஆனால் அதில் ஓர் ஆங்கிலேயனாவது அங்கத்தினராகக் கூடாது என்பது முதல் நிபந்தனை.

நாகப்பூரில் 'ஸிவில் லயன்ஸ்' பக்கம் போனால் ஏதாவது நாம் தப்பித் தவறிச் சினிமாவில் பார்க்கிறோமே அந்த ஹாலிவுட் நகரத்திற்குப் போய்விட்டோமோ என்ற உணர்ச்சி ஏற்படும். ஆங்கில நாகரிகத்தில் மூழ்கிக் கிடப்பர், அங்குள்ளவர்கள். அவர்களின் 'காக்டெயில்' (Cocktail), 'க்விக் ஒன்' (Quick one), 'டின்னர்ஸ்' (Dinners), 'லஞ்சஸ்' (Lunches), 'பார்ட்டீஸ்' (Parties), 'டான்ஸஸ்' (Dances), 'காலிங்' (Calling) முதலியன நம்மைப் பிரமிக்கச் செய்யும்.

ஒரு சமயம் இங்கு என் தமக்கை சென்னையிலிருந்து வந்திருந்தாள். அவள் யாரையோ பார்க்க வேண்டுமென்று சொன்னதன்மேல் அழைத்துப் போனேன். என் தமக்கையின் தூர பந்துக்களில் ஒருவர் 'இந்தியாவின் இரும்புச் சட்டம்' எனச் சொல்லப்படும் ஐ. ஸி. எஸ். வர்க்கத்தைச் சேர்ந்தவர். அதை எப்படியோ இங்குள்ளவர்கள் அறிந்துகொண்டார்கள். பிறகு பார்க்க வேண்டுமே! ஒருவர் பின் ஒருவராக வரத் தொடங்கினார்கள். நான் ஒருத்தர் இருவரைக் கேட்டேன், "என்ன உங்கள் வரவு ரொம்ப அபூர்வமாக இருக்கிறதே" என்று. அதற்கு அவர்கள், "சும்மாத்தான் 'கால்' பண்ணிவிட்டுப் போகலாமென்று வந்தோம்" (We just came to call) என்றார்கள். எனக்கு இந்தக் 'கால்' பண்ணுவதோ 'கை' பண்ணுவதோ ஒன்றும் 'தலைகால்' தெரியமாட்டேன் என்கிறது.

நம் தமிழ்ச் சகோதரர்கள்

நம் நாட்டுச் சகோதர சகோதரிகள் கிட்டத்தட்ட மூவாயிரம் பேர்கள் நாகப்பூரில் இருக்கிறார்கள். 'மெட்ராஸிகளின் மூளையே மூளை' என்பதை நிரூபிக்கத்தான் போலும் இங்குள்ள அக்கௌன்டண்ட் ஆபீசுகளில் மிகவும் உயர்ந்த பதவியிலிருந்து குமாஸ்தா வரையில் இவர்களால் நிரப்பப்பட்டிருக்கின்றன. இவ்வளவு இருந்தும் வெகு சில பேரைத் தவிர மற்றவர்கள் கொஞ்சமும் மன அபிவிருத்தி அடைந்ததாகக் காணவில்லை. ஞாயிற்றுக்கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் புருஷர்கள் மாத்திரம் வெளியில் போய் அரட்டை அடித்துவிட்டு மத்தியான்னம் பன்னிரண்டு அல்லது ஒரு மணிக்கு வீடு திரும்புவார்கள். சில வீடுகளில் சீட்டுக் கச்சேரிகள் நடக்கும். வீட்டுப் பெண்மணிகளின் சௌகரியா சௌகரியங்கள் கொஞ்சங் கூடக் கவனிக்

கப் படமாட்டா. வெளியில் புருஷர்கள் உட்கார்ந்து கொடுக்கும் 'ஆர்டர்'களுக்கெல்லாம் உள்ளேயிருந்து 'சப்ளைகள்' நடக்கும்.

இங்குள்ள சகோதரிகளையும் நம் தென்னிந்தியச் சகோதரிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இந்த மாதிரி அநேக வருந்தத்தக்க விஷயங்கள் நம் கண்களுக்குப் புலப்படுகின்றன. இந்தியாவில் மாதருக்குச் சுதந்தரம் கிடைக்காதவரையில் தேச சுதந்தரத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?

இங்கே தமிழர்கள் ஒரு பாடசாலையும் சங்கமும் நடத்துகிறார்கள். இரண்டும் கூடிய மட்டில் வெற்றிகரமாகவே நடக்கின்றன. தென்னிந்தியச் சகோதரர்கள் வெகு தீரமாக முன்வந்து ஸ்திரீகளுக்கென்று ஒரு நாள் சங்கத்தை உபயோகத்திற்காகக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் முழுநாள் இல்லை. ராத்திரி எட்டு மணிக்குள் காலி பண்ணியாக வேண்டும். இவ்வளவு பராதீனத்திற்கு உட்பட்டு இருப்பதால் எங்கள் சங்கத்தில் ஸ்வாரஸ்யமான நடவடிக்கை ஒன்றும் நடத்த முடிகிறதில்லை. திரும்பத் திரும்ப, 'கேரம் போர்டை' வைத்துக்கொண்டு 'லொட் லொட்' என்று தட்டிக்கொண்டு இருப்போம்; அல்லது புஸ்தகசாலையிலுள்ள புஸ்தகங்களைப் புரட்டிக்கொண்டிருப்போம். ஆனால் இதுவும் புதுப் புஸ்தகங்கள் வரும பொழுது தான். பதினைந்து நாட்களானால் இந்த உத்ஸாகம் குறைந்துவிடும். எங்கள் சங்கத்திலும் ருசிகரமான மனஸ்தாபங்கள் நேரிடுவது உண்டு. ஆனால் நாங்கள் அதை வெளிக்காட்டாமல் பூசி மெழுகிக்கொண்டு போவோம். புருஷர்களைக்காட்டிலும் எங்களிடம் அதிக ஒற்றுமை உண்டு. மொத்தத்தில் நாங்கள் ஒரு சந்தோஷகரமான குடும்பம் என்றே சொல்லவேண்டும்.

இந்தியாவின் பிரதான நகரங்களில் அநேகம நான் பார்த்திருக்கிறேன். ஆனால் நாகப்பூரைப் போல எதுவும் எனக்கு நிம்மதியைக் கொடுத்ததில்லை. பார்ப்பதற்கு அழகாக இல்லாதவர்கள் கட்டாயம் குணத்திற் சிறந்தவர்களாக இருப்பார்கள். அந்த ஜாதியைச் சேர்ந்தது எங்கள் நாகப்பூர். நகர வாழ்வின் சௌகரியங்களும் கிராம வாழ்வின் அமைதியும் நாகப்பூரில் உங்களுக்குக் கிடைக்கும். மேல் நாட்டு நாகரிகத்தில் மூழ்கி விளையாடலாம், அல்லது சுயநலமற்ற தேச சேவையோ சமூகத் தொண்டோ செய்யலாம். இவை இரண்டிற்கும் ஏற்றது எங்கள் ஊர். அதனால் தானே உலகம் புகழும் காந்தி மகானும் தம்முடைய வாசஸ்தலத்தை நாகப்பூருக்கு அருகில் அமைத்துக்கொண்டிருக்கிறார்! பாரத தேசத்தின் நடுநாயகம் அல்லவா எங்கள் ஊர்!

பிழை திருத்தம்

பாரதியாரைத் தமிழ்நாடு பெற்றதற்காகப் பெருமைப்படும் தமிழர் அவர் பாடல்கள் நல்ல முறையில் அச்சிடப்படவில்லை என்று குறை கூறுவது நியாயமே. பாட்டுக்களைச் சரியானபடி அச்சிடவில்லை. இன்ன வகையான பாட்டு என்பதே தெரியாமல் பாரதியார் பாடல்கள் அச்சு வாகனம் ஏறியிருக்கின்றன.

"பாரதமாதா நவரத்தினமாலை" என்பது பாரதியார் பாடல்களில் ஒன்று. அந்தப் பிரபந்தத்தில் வெவ்வேறு வகையான சந்தங்கள் உள்ள ஒன்பது பாடல்கள் அந்தாதியாக அமைந்திருக்கின்றன. அவற்றுள் 7-ஆவது பாடல் ஒருவகைக் கட்டளைக்கலிப்பாவாக அமைந்தது. 'கலிப்பா' என்ற தலைப்பின்கீழ் அச்சிடப்பட்டுள்ள அப்பாடலில் இரண்டாம் வரியில் 'வெற்றி கொள்வீர் என்றுரைத் தெங்கும்' என்று வருகிறது. இந்த அடி ஓசை குறைகிறது. பிரதியைப் பார்த்துச் சோதித்து அச்சிட்டிருந்தால் இந்த வரி, "வெற்றி கோள்ளுவீர் என்றுரைத் தெங்கும்" என்று இருந்திருக்கும்.

துருப்பிடித்த எழுத்துக்கள்

தமிழில் க் முதல் ன் வரையில் உள்ள பதினெட்டையும் மெய்யெழுத்தென்று சொல்வார்கள். க, கா, கி, கீ என்று வருவனவற்றை உயிர் மெய் எழுத்துக்கள் என்று சொல்வார்கள். ங, ஙா, ஙி, ஙீ என்று ஙௌ வரையில் வரும் எழுத்துக்களில் ங என்பது மட்டும் நாலைந்து வார்த்தைகளில் உபயோகப்படுகின்றது. ஙா முதல் ஙௌ வரையில் உள்ள எழுத்துக்கள் பதினொன்றும் தமிழில் உதவுவதே இல்லை. பெயருக்கு எழுத்துக்கள் என்று சொல்லப்பட்டு எழுத்து வரிசையில் துருப்பிடித்துப் போய் இருக்கின்றன. இதை எண்ணியே ஔவையார் "ஙப் போல் வளை" என்று பாடினார். "ங என்னும் எழுத்து எப்படி உபயோகம் இல்லாவிட்டாலும் தன் இன எழுத்துக்களை வளைந்து கட்டிக்கொண்டு இருக்கின்றதோ அப்படி நீ உன் சுற்றத்தாரைப் பாதுகாக்க வேண்டும்" என்பது அதன் பொருள்.

வெளி வேஷம்



"வல்லிக் கண்ணன்"

ஒரு சிலந்தி; சுறுசுறுப்பான ஜந்து.

அங்கும் இங்கும் அலைந்து, சுவர் மூலையில் ஓர் இடம் கண்டுபிடித்தது. ஆரம்பித்தது தன் வேலையை. சுற்றியது; சுற்றியது; சுற்றிச் சுற்றி வந்தது. சோர்வு இல்லை; சலிப்பு இல்லை; கர்மமே கண்ணாகிவிட்டது அந்தப் பூச்சி.

அது மெல்லிய நூல் திரித்துக் கோலம் போடுகிறதா? கண்ணுக்குப் புலனாகும் காவியம் தீட்டுகிறதா? உயர் ஓவியந் தானோ?

அது தன்பாட்டிற்கு நூலை இழைத்து இழைத்து அற்புதம் செய்துகொண்டு இருந்தது; சிந்தனையைக் கற்பனையில் கலந்து கனவுச் சிருஷ்டிகளை வெளியாக்கும் கலைஞனைப் போல.

இனிய தோரணம் போல், ஏதோ கண்காணா லோகத்து இன்பூப் போல, எழிலை உருவாக்கிய கோலம் போல, அந்தக் கூடு-இல்லை, வலைப்பின்னல் - மின்னியது.

அதன் நடுவிலே, ஊஞ்சலில் அமர்ந்த மோகினி மாதிரி ஜம்மென்று கொலு இருந்தது சிலந்தி. தென்றல் கரம் அவ்வப்போது ஆட்டிவிடும். வெயிலின் கதிர்கள் படும்பொழுது வானவில்லை நினைவூட்டி ஊசலிடும்.

பார்க்க இனிய தோற்றம்.

ஓர் ஈ: அதன் கண்களில் சிலந்தியின் ஓவியம் பட்டுவிட்டது. அழகின் ஆலயமாகப் பட்டதோ என்னவோ! மயங்கி விட்டது.

கிர்ரென வந்தது.

வந்தது, விழுந்தது! மேல் எழ முடியவில்லை. சிறகை அடித்தது. கால்களை உதைத்தது. அதனால் அதிகம் சிக்கிக் கொண்டு அல்லல் உற்றது - பதற்றமும் ஆத்திரமும் கொண்டு சிறு விஷயத்தையும் பெரிதாகக் குழப்பிவிட்டுத் திணறும் மனிதனைப் போல.

கண்களில் களி பொங்க, சிலந்தி அதை அணுகியது. சோர்வுற்றுக் கிடந்த ஈ, தீனக்குரல் கொடுத்தது: "இது நியாயமா? ஆசை காட்டி மோசம் செய்கிறாயே; சரியா?"

சிலந்தி வாதிட்டது: "அழகைக் கண்டு ரசிப்பதிலும் ஆபத்து உண்டு என்று அறிய முடியாவிட்டால் அது யார் தவறு?"

"வேசி நீ! தளுக்குச் செய்து ஆளை மயக்கிப் பறிக்கின்ற சாகசக்காரி. நியாயம் பேச வந்துவிட்டாய்!......ஊம், என்னைச் சொல்லவேணும். வெளி ஒய்யாரம் என்னை மயக்கிவிட்டது. உள்ளே விஷம் இருக்கும் என்று நினைக்கவில்லை" என்று முணுமுணுத்தது ஈ.

"தம்பி, இப்பொழுதாவது உலகத்தை உணர்ந்தாயே. இனி உனக்குச் சாந்திதான்" என்று சொல்லி, அதைத் தன்னிடம் ஐக்கியமாக்கிக்கொண்டது சிலந்தி.

கமலா

கு. வெ. ஜானகிராமன்

அன்று எனக்கும் கமலாவுக்கும் பிரமாதமான சண்டை. சாதாரணமாக, கமலா நல்ல பெண்தான். ஆனாலும் அன்று அவள் அவ்விதம் செய்திருக்கக் கூடாது. கோடைக் காலம். வெயிலோ பிரமாதமாக அடிக்கிறது. காலை முதல் மாலை வரை ஆபீஸில் பிரமாதமான வேலை. எங்கள் மானேஜர் ஒரு 'முசுடு'. எடுத்ததற்கெல்லாம்' 'வள் வள்' ளென்று விழுவான். அவனிடம் நல்ல பெயர் வாங்குவது, மாமியாரிடம் நாட்டுப்பெண் நல்ல பெயர் வாங்குவதைவிடக் கடினம். மாடு போல உழைத்தாலும், மனிதன் கொஞ்சங்கூடச் சந்தோஷமடைய மாட்டான். அன்றும் அப்படித்தான். உக்கிரமான வெயில். 'கோட்டை' யும் போட்டுக்கொண்டு - ஆம், கோட்டைக் கழற்றினால் கூட மானேஜருக்குக் கோபம் வந்துவிடும் - வேர்க்க விறுவிறுக்க வேலை செய்துகொண்டிருந்தேன். அன்று எப்படியாயினும் வேலையைச் சீக்கிரம் முடித்துக்கொண்டு, சாயந்தரம் கமலாவைச் சினிமாவுக்கு அழைத்துக்கொண்டு போக வேண்டுமென்று திட்டம் போட்டிருந்தேன். உண்மைதானே? ஒரு மனிதன் குமாஸ்தா வேலை செய்ய ஆரம்பித்தவுடன் மனைவியை மறந்துவிட வேண்டுமா என்ன! வந்தான் ஐயா மானேஜர், ஒரு கட்டுக் காகிதத்தைத் தூக்கிக்கொண்டு. "மிஸ்டர் ராம்! இதோ இந்தப் பேப்பர்களைக் கவனித்துக் கொஞ்சம் 'நோட்ஸ்' எடுத்து வையுங்கள். ரொம்பவும் அவசரம்" என்றான். "ஸார், வீட்டில் சிறிது வேலை இருக்கிறது. சீக்கிரமாகப் போகவேண்டும். நாளைக்கு........" என்று சொன்னேன், மென்று விழுங்கிக்கொண்டே.

"பரவாயில்லை மிஸ்டர் ராம்! இதென்ன பிரமாதம் உங்களைப்போன்ற இளைஞர்களுக்கு! மணி மூன்றுதானே ஆகிறது? இரண்டே மணியில் முடிந்துவிடும்" என்று சொல்லிக்கொண்டே நழுவிவிட்டான் மஹாநுபாவன்.

"தாஜா செய்கிறானும், தாஜா. சுத்த முட்டாள்! இவனுக்கு மனைவி மக்கள் இல்லையா?" என்று முணுமுணுத்துக்கொண்டே என் வேலையை ஆரம்பித்தேன்.

ஏழரை மணி சுமாருக்கு வீடு திரும்பினேன். அன்றும் கமலாவை ஏமாற்றியதற்காக வருந்தினேன். அவளுடன் எப்படிப் பேசுவது என்று எண்ணமிட்டுக்கொண்டே போனேன். எதிர்பார்த்தபடியே நடந்தது. கமலா மிகவும் கோபத்துடன் 'படபட' வென்று பேசினாள். அவளோடு மகிழ்ச்சியுடன் பேசலாம் என்று எண்ணி வந்த எனக்கு அவளது நடத்தை ஏமாற்றத்தை அளித்தது.

"மனைவி, வீடு, வாசல் என்ற நினைவு இருந்தால்தானே? எப்பொழுதும் ஆபீஸ் ஆபீஸ், ஆபீஸ். நல்ல ஆபீஸ்! எல்லோருந் தான் வேலை செய்கிருர்கள். இதில் என்ன புதுமை?...........புடைவையைப்பற்றிச் சொல்லி எத்தனையோ யுகங்கள் ஆகின் றன. வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற ஆசை இருந்தால்தானே ஞாபகம் இருக்கும்?" என்று அடுக்கிக்கொண்டே போனுள் கமலா. சோர்வுற்றிருந்த எனக் கும் கோபம் வந்தது.

"கமலா! எப்பொழுதும் ஏன் தொந் தரவு செய்கிருய்? எனக்கு எவ்வளவு களைப்பாய் இருக்கிறது என்று சற்று யோசித்தாயா? ஸ்திரீகளாகிய நீங்கள் எல்லோருமே இப்படித்தான். புடைவை வாங்கிக் கொடுத்தால்தான் அன்பு என்று அர்த்தமா?" என்றேன்.

கமலா தாழ்வுடன் என்னிடம், "நாதா, நீங்கள் களைப்புற்றிருக்கிறீர்கள். சற்று இளைப்பாறுங்கள். கொஞ்சம் காபி கொண்டு வரட்டுமா?" என்று கொஞ்சு வாள் என்று நினைத்தேன்.

"உள்ளதைச் சொன்னுல் ஏன் இவ் வளவு கோபம்? முடியாதென்ருல் சொல்லிவிடுவதுதானே? போயும் போ யும் உங்களுடைய வரிசைகளை எல்லாம் என்னிடந்தானு காண்பிக்க வேணும்?" என்று உரக்கப் பேசினுள் கமலா. என் கோபம் என்னையும் மீறியது. "மூடமே, 'பொருளாதாரம்' என்று கேள்விப்பட் டிருக்கிருயா? 50 ரூபாய் சம்பாதிக்கும் ஒரு குமாஸ்தாவின் மனைவி 30ரூபாய் புடைவை கேட்டால் குடும்பம் எப்படி நடக்கும்? படிப்பு இருந்தால்தானே? விவேகம் இல் லாத கழுதை!" என்று கத்திக்கொண்டே என் அறைக்குள் சென்று கதவுகளைச் சார்த்திவிட்டேன். சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன். வெளியே கமலாவின் சப் தமே கேட்கவில்லை. வெற்றி அடைந்து விட்டதாக என் மனத்தில் அர்த்தமற்ற ஓர் அமைதி குடிகொண்டது.

ஒரு மணி நேரம் கழிந்திருக்கும். நிலவு வெளிச்சம் என் அறையில் ஜன்னல் வழி யாகப் பளிச்சென்று வீசியது. ஏனடா கமலாவைக் கோபித்துக் கொண்டோம் என்று என் மனம் உறுத்திக்கொண் டிருந்தது. மெதுவாக என் அறையின் கதவுகளைத் திறந்தேன். இருவர் பேசும் குரல் கேட்டது. எட்டிப் பார்த்தேன்: நான் கடன் கொடுக்க வேண்டிய ஸாவ் கார் வந்திருந்தான். ஏழை என்ருல் கடன் இல்லாமல் இருக்குமா? என் எதிரியைக் கண்டதுபோலப் பதுங்கினேன். கமலா வின் குரல்தான் கேட்டது: "அவர்தாம் வீட்டில் இல்லை என்று சொன்னேனே. இன்னும் இரண்டு நாட்களில் பாக்கியைக் கொடுத்துவிடச் சொல்கிறேன். அதற் காகவா அவரைக் குறை சொல்கிறீர்கள்? கொஞ்சங்கூட நன்ருகவே இல்லை, அதுவும் என்னிடம்; வெட்கமாக இல்லையா?" பிறகு நிச்சப்தம்.

என்ன இது! கமலாவா இவ்விதம் பேசு கிருள்? ஆம், அவளுக்கு நிச்சயமாய்க் கோபந்தான். ஆனுல் யார்மீது கோபம்?

நிலவொளியில் அவளுடைய கைகளைப் பிடித்துக்கொண்டே, "கமலா! ஏன் பொய் சொன்னுய்?" என்று கேட்டேன்.

"பொய் சொல்லாமல் நிஜமே பேசிக் கொண்டிருந்தால் மனிதன் உலகில் வாழ முடியுமா? அவன் உங்களைக் கண்டிருந் தால் சும்மா விட்டிருப்பானு? நீங்கள் களைப்படைந்திருந்தீர்கள். அப்பொழுது அவனை உள்ளே விட்டிருந்தால்..."

"உனக்கு என்மீது ஏது இவ்வளவு அக் கறை?" என்று விஷமமாகக் கேட்டேன்.

அவள் கண்களை உயர்த்தி ஒரு முறை என்னை நோக்கினுள். என் கோபம் எல் லாம் பறந்துவிட்டது.

"புடைவை கேட்டாயே, நாளைக்கு வாங்கிக்கொள்கிருயா?"

"ஊஹூம். எனக்கு வேண்டாம். ரூபாய் 50 சம்பாதிக்கும் குமாஸ்தாவின் மனைவிக்கு அவ்வளவு உயர்ந்த புடைவை எதற்காக?" என்ருள், சாவதானமாக.

"நான் சொன்னேன் என்று கோபமா?"

"அப்படியெல்லாம் இல்லை. அதுதானே 'பொருளாதாரம்?'" என்ருள் ஒரு விஷமச் சிரிப்புடன்.

என் காதல் கட்டுக்கு மீறியது. "ஏன் கமலா, இவ்வளவு அன்பை வைத்துக் கொண்டுதானே சாயந்தரம் என்னுடன் சண்டையிட்டாய்?" என்று கேட்டேன்.

அவள் பதில் பேசவே இல்லை. அந்த மௌனத்தில்தான் எவ்வளவு அர்த்தம்!

கீழே என் தாய் பாரதம் வாசித்துக் கொண்டிருந்தாள். தருமபுத்திரர் பீமனைப் பார்த்துச் சொல்கிருர்: "தம்பி பீமா! நமக்கும் துரியோதனனுக்கும் மனஸ் தாபம் ஏற்பட்டால், நாம் ஐவரும், அவர் கள் நூறு பேருமாவர். ஆனுல் நமது குலத்திற்கே ஓர் எதிரி வந்தால் நாம் நூற் றைந்து பேர் என்பதை மறக்காதே."

சாப்பிடும்போது

[மனிதன் வாழ்வதற்கு உணவு அவசியம் என்று சொல்வது மிகை. அந்த உணவு ருசியாகவும் நன்மை பயப்பதாகவும் இருக்க வேண்டும். ஆனால் உணவுக்குப் புறம்பே சாப்பாட்டுக்கு ருசியைக் கொடுப்பது ஒன்று உண்டு. பெண்களின் இன்சொல் அது. ருசி இல்லாவிட்டாலும் போகிறது; சாப்பிடும்போது தன் கோபத்தையும் அசட்டுத்தனத்தையும் பேச்சிலே காட்டினால் இருக்கிற ருசியும் கெட்டுத்தான் போகும்.

"காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணாக்க வாய்திறக்க மாட்டாதே - வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ!
அன்பில்லாள் இட்ட அமுது"

என்று தமிழ்ப் பாட்டி பாடினதாகக் கதை சொல்வார்கள். பர்ஷிய நாட்டுப் பழம் புஸ்தகம் ஒன்றில் சாப்பிடும்போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று மங்கைமார்களுக்கு உபதேசம் செய்யும் பகுதி ஒன்று வருகிறது. அதன் சாரம் வருமாறு.

—ப—ர்.]

சாப்பிடும் இடத்தில் நல்ல குடும்பத்துப் பெண் அமைதியாக இருந்து புன்னகை பூத்த முகத்துடன் உண்பாள்; கண்டதை உளறமாட்டாள். எந்தப் பதார்த்தத்தையும் நன்றாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சந்தோஷத்தோடு உண்பாள்; சிறுசிறு கவளமாகத் தன் விரல் நுனிகளால் எடுத்துத் தன் வாயில் அழகாக இட்டுக் கொள்வாள். ஒரேயடியாக வாரி விழுங்கமாட்டாள்; விரைவாகவும் மெல்லமாட்டாள். வாய் நிறைய அவசரமாக அள்ளிப் போட்டுக்கொண்டு, வாயிலிருந்து சிதறும்படியோ மூச்சு விட முடியாமல் திணறும்படியோ செய்ய மாட்டாள்.

சாப்பிடும்போது சத்தம் கேட்கும்படி மென்று தின்பது அருவருப்பை உண்டாக்கும். ஆகையால் மெல்ல, சத்தமின்றிச் சிறு சிறு துண்டுகளாக எடுத்து லாகவமாக மெல்லவேண்டும். அஜீர்ணப்படுத்தும் பதார்த்தங்களையோ, உண்டால் வாய் நாற்றமெடுக்கும் உணவுகளையோ உண்ணாதே. எந்த ஆடவனும் தன் மனைவி சதா ஏப்பம் விட்டுக்கொண்டிருப்பதை விரும்ப மாட்டான். சாதாரண ஏப்பம் இருக்கட்டும்; துர்நாற்றத்தோடு வரும் ஏப்பத்தைக் கண்டு அருகில் உள்ளவர்கள் அருவருப்பை அடைவதில் ஆச்சரியம் இல்லை.

சாப்பிடும் பொழுது அசங்கியமான பேச்சைப் பேசாதே. சமையல் நன்றாக இல்லையென்றால், ஒரு கணத்தில் பதார்த்தங்களைச் சுவையுள்ளனவாகச் செய்ய முடியாது. சாப்பிடும்போது அதைப் பற்றிக் குறை கூறுவதைவிடச் சாப்பிட்ட பிறகு சொல்வதே நல்லது. எவ்வளவோ பெண்கள் சாப்பிடும்போதுதான் இரைச்சல் போட்டு வைவதைப் பார்த்திருக்கிறேன். புருஷன் சமையல் நன்றாக இல்லை என்று குறை கூறினால் மனைவி மென்மையான சொற்களால் அவனுக்குச் சமாதானம் சொல்ல வேண்டும்.

நாம் உயிர் வாழ ஏதோ சில கவளங்கள் நமக்கு வேண்டியிருக்கின்றன. அந்தக் கவளங்களை அமைதியாக உண்டால் நன்றாக ஜீர்ணமாகும். நம் மனைவி அண்டாவை எடுத்துக் குண்டானில் போட்டும் குண்டானை எடுத்து அண்டாவில் போட்டும் தன் கோபத்தை அப்போது காட்டினால் எப்படி ஐயா தின்ற சோறு இனிதாக ஜீர்ணமாகப் போகிறது? அந்தோ! இந்த மாதிரியான காட்சி இல்லாமல் சாப்பிடும் மனிதன் ஒருவனாவது இருக்கிறானா? ஒரு பெண்மணி தட்டை

"குண்டானை அண்டாவில் போட்டு..."

உடைப்பாள்; உணவை இறைப்பாள்; இலையைக் கிழிப்பாள்; "சமையல்காரனைக் கூப்பிடு; இதை வாங்கி வந்த முட்டாள் வேலைக்காரனைக் கூப்பிடு. எல்லோருக்கும் சவுக்கடி கொடுக்கச் சொல்கிறேன்" என்று இரைவாள்.

தாயாக இருக்கும் பெண்மணியோ, "நன்றாக உட்கார்ந்து சாப்பிடு." என்றும், "மெதுவாகச் சாப்பிடேன்; வாரி வாரிப் போட்டுக் கொள்கிறாயே; எந்தப் பட்டணம் கொள்ளை போகிறது?" என்றும் காரணமில்லாமல் தன் கோபத்தைக் குழந்தைகளின் மேல் காண்பிப்பாள். யாராவது குழந்தை, "எனக்கு அது வேணும்" என்று கேட்டு விட்டால் போதும். சடசடவென்று நாலைந்து வசவுகளைப் பொழிந்துவிடுவாள்; "முணுமுணுக்கிற தரித்திரமே, உன்னை வாரிக்கொண்டு போக! உன் வயிறு வெடிக்க!" என்று புறப்படும் வசைமாரி. குழந்தை பாவம்! ஒன்றும் தோன்றாமல் பேசாமல் எழுந்திருந்து கண்ணும் கண்ணீருமாய் அந்த இடத்தை விட்டுப் போய்விடும். இந்தக் கண்ணராவியைப் பார்த்துக்கொண்டே இருக்கும் துர்ப்பாக்கியசாலியாகிய புருஷனுக்கு ஒவ்வொரு பிடியும் தொண்டையிலேயே நின்றுவிடும்; "பகவானே, என்னைக் கொண்டு போக மாட்டாயோ?" என்று பிரார்த்திக்கத்தான் தோன்றும். "இந்த மாதிரி இன்னும் ஒரு முறை சாப்பிடுவதைவிட வெறும் ரொட்டியை முறித்துப் போட்டுக்கொள்ளலாம்; அல்லது பட்டினியே கிடக்கலாம்' என்று அவன் நினைப்பது நியாயந்தானே?

அட கடவுளே! சாப்பிடும் போது சந்தோஷமாக இருப்பது பெண்களுக்கு என்ன, அவ்வளவு கஷ்டமா? அமைதியாகச் சாப்பிட்டுவிட்டுக் கடவுளை வாழ்த்தி எழுந்திருப்பது அசாத்தியமா?

"அந்த முட்டாள் வேலைக்காரனை..."

"போஜன வேளை களில் இரையும் மங்கை."

இறைவன் செய்த நன்றிஎலாம்
எண்ணு தொழிந்தால் நன்மையில்லை;
இறைவன் கருணை யினைவாழ்த்தி
எண்ணின் மேல்மேல் நலம்அருள்வான்.

போஜன வேளைகளில் ஒரு மங்கை கோபத்தால் இரைவதைக் காட்டிலும் பயங்கரமானது வேறொன்றும் எனக்குத் தெரியவில்லை. அமைதியற்ற போஜனம் அழுக்குப் படிந்ததுபோல்வது. அந்த நிலையில் போஜனம் செய்யும் துரதிருஷ்டவான்கள் உணவை உண்பதாக எண்ண இடமில்லை; எட்டிக்காயை உண்பதாகவே முடியும்.

உண்ணும் வேளையில் சமையற்காரன் நடுங்கவும், புருஷன் எழுந்து போய்விடலாமா என்று நினைக்கவும் நேர்ந்தால் அந்த உணவால் ஏதாவது லாபம் உண்டா? அது ஜீர்ணந்தான் ஆகுமா? சொல்லுங்கள் பார்க்கலாம் இல்லவே இல்லை; ஆயிரம் தடவை சொல்கிறேன்: இல்லவே இல்லை. இந்த உணவு உள்ளே செல்வதைக் காட்டிலும் அந்த வயிற்றுக்கு ஒரு வியாதி வந்தாலும், விஷத்தை இட்டாலும் மேலென்று சொல்ல வேண்டும்.

உயர்ந்த குடும்பங்களிற்கூடப் பெண்மணிகள் அநாவசியமான கோபத்தால் கையை நனைக்காமல் நாலைந்து நாட்கள் இருப்பதும், வெறும் ரொட்டித் துண்டை முறித்துப் போட்டுவிட்டுச் சும்மா இருப்பதும் அதிசயமல்ல. ஏழைக் குடும்பத்தினரோ முழுக்க முழுக்கப் பட்டினியே கிடப்பார்கள்; பல நாள் ஒன்றும் உண்ணாமலே இருப்பார்கள்.

அழகிய நாரீமணிகளே! நான் உங்களை இப்போது ஒன்று கேட்கிறேன்: உங்கள் கணவன்மார் சகிக்க முடியாதபடி உங்கள் கோபத்தை வெளிப்படுத்துவதைவிட உங்கள் பசியும் ருசியும் அறிந்து அதற்கேற்றபடி உணவு கொள்வது நல்லதல்லவா? அப்படிச் செய்வதுதான் புத்திசாலித்தனமானது; லாபகரமும் ஆனது!

மறுபிறவிகள்

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

1

புதிய சோதனைகள் இல்லாவிட்டால் வாழ்விலே என்ன சாரம் இருக்கிறது என்று எண்ணி நான் சாகத் துணிந்துவிட்டேன். செத்தேன்; என் சாவை என் கண்களாலே பார்த்தேன். புரட்சிகரமான ஆசாமி ஒருவர் இப்படிச் சொன்னதாக ஒரு முறை படித்தபோது நான் அவரைப் பரிகசித்தேன்: 'சாவாவது! இவர் கண்டதாவது! கண்டவர் மீண்டும் இந்த லோகத்திலே வந்து சொன்னதாவது! சுத்த அபத்தம்' என்று. ஆனால் நானே சாவைத் தாண்டிச் சென்றபோது, அது உண்மை, முழு உண்மை என்று பட்டது.

என்னுடைய இந்த ஒரே வாழ்க்கையின் ஒரு பகுதிக்குள்ளே நான் எத்தனை மறுபிறவிகள் எடுத்துவிட்டேன்! மனிதனுடைய இத்தகைய நிலை மாறுதல்களிலிருந்துதான் ஜன்மாந்தரக் கற்பனையே உதித்திருக்க வேண்டும். பிறப்பும் சாவும் தொடர்ந்து வருவன என்பது வேதாந்தம். எந்தத் தத்துவமும் லக்ஷ்யமும் விவாதத்துக்குத்தான் அழகு; கோபுர கலசத்தோடு அதை ஒட்டவைக்க மனத்துக்குப் பிரியம். ஆனால் நடைமுறைக்கும் அதற்கும் அக்கோடி இக்கோடிதான். பிறந்தவன் சாக விரும்புவதில்லை; சாகப்போகிறவன் மறுபிறப்பை விரும்புவதில்லை; மீண்டும் பிறப்பே இல்லாத மோக்ஷந்தான் அவனுக்கு வேண்டும்!

என் உடல், உயிர், உள்ளம், அறிவு ஆகிய யாவும் சேர்ந்து இன்று நான் ஒரு தொண்டனாவதற்குத் தகுதி வாய்ந்தவன் என்று அறிக்கை செய்துவிட்டன. இரண்டு வருஷங்களுக்கு முன்னாற்போல இல்லாமல், இன்று நான் தொண்டின் பாதையை நன்கு அறிந்தவனாதலால் அதில் தடையின்றிச் செல்ல முடியும் என்ற நம்பிக்கை உண்டாகிவிட்டது. இந்த உலகத்தில் நாம் விரும்பத்தக்க ஒரே பொருள் பரந்த அன்புதான், இந்திரிய போகங்கள் அல்ல என்றும், அதைப் பெறுவதற்கு ஆழ்ந்த உள்ளமும் விசாலமான அறிவும் வேண்டும் என்றும் இப்போது நான் உணர்கிறேன். என் புதிய வாழ்க்கையாகிய நூலை இன்று ஆரம்பிக்கும் தருணத்தில், என் பூர்வ ஜன்மங்களை வாழ்த்துவது என் கடமை. எத்தனையோ பிறவிகளுக்குப் பின்பு ஞானி இறைவனை அடைவதுபோல, அவற்றின் காரணமாகத்தானே நான் இந்த ஞானோதயத்தைப் பெற்றிருக்கிறேன்?

2

நான் செத்து இருளிலே சென்றுகொண்டிருந்தேன். என் குடும்பத்தினர் என் பின்னால் கோவென்று அழுதுகொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டிலே நான் மீண்டும் திரும்புவது எது? எங்கும் இருண்ட அந்த மையிருட்டிலே வானத்தில் பளீரென்று மின்னிய ஒரே நக்ஷத்திரம் எனக்கு வழி காட்டிக்கொண்டிருந்தது. நான் இருளிலிருந்து ஒளியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். சிறு வாய்க்காலை விட்டுக் கடலிலே வந்திருப்பதாக உணர்ந்தேன்.

ஊர்க் கோயிலை நான் தாண்டுகிறேன். உள்ளே திருவாய்மொழி ஓதுகிறார்கள்:

"சன்மசன்மாந் தரங்காத்து
அடியார்களைக் கொண்டுபோய்த்
தன்மைபெறுத்தித் தன்
தாளிணைக்கீழ்க் கொள்ளும் அப்பனை..."

என்னைப்பற்றித்தான் அவர்கள் பாடுகிறார்களோ! இப்போது நான் நான்கு பிறவிகளைத்

தாண்டிப் போய்க்கொண்டிருக்கிறேன். எந்தப் பொருளை நான் வழிகாட்டியாக நினைத்து ஓடுகிறேனே, அதைத்தான் அவர்கள் குறிப்பிடுகிறார்களோ!

ஒன்று –

இரவு மணி ஒன்று. ஒரு புதிய தினத்தின் முதல் சப்தத்தோடு நானும் பிறக்கிறேன். அது என் முதற் பிறப்பு. அதற்கு முந்திய என் பிறவிகளைப்பற்றி என்னைப் பிறப்பித்தவனுக்குத்தான் தெரியும். ஆனால் என்னைப் பிறப்பித்தவளை மட்டுமே எனக்குத் தெரியும். அவளிடம் எனக்கு இருக்கும் பக்தி ஈசனிடத்திலும் இல்லை. எத்தனை நோய்களின் நடுவே, குடும்பப் புயல்களின் நடுவே, கண்டங்களின் நடுவே அவள் என்னைக் காத்து வளர்த்தாள்! நான் பன்னிரண்டு வயசு வாலிபனாக இருந்தபோதுகூடப் பன்னிரண்டு நாளைக் குழந்தையாகிவிட்ட அந்தச் சம்பவம்: எங்களோடு வீட்டில் குடியிருந்தவருக்குப் பெரியம்மை பூட்டி, ஜன்னி கண்டு பிதற்றும்போது யாரையும் அருகே அண்டவிடாமல் அவர் செய்த பயங்கர தாண்டவம்! இரவு இரண்டு மணிக்கு ஹா-ஹா என்ற அவரது இரைச்சலைக் கேட்டுக் குடல் நடுங்கிய என்னையும் என் தம்பியையும் அவள் இருமருங்கும் அணைத்துக்கொண்டபோது, என்ன ஆறுதல்! பயம் என்ற பொருளே என் பார்வையினின்றும் அகன்றுவிட்டது.

ஒன்று – இரண்டு –

ஏழாவது வயசிலே கண்திறந்து உலகைப் பார்த்தபோது, எங்கள் குடும்பத்திலே ஓர் அடர்ந்த பனிமூட்டம் கழிந்து சென்றதையும் அதனுள்ளே என் தந்தை மறைந்துவிட்டதையும் அறிந்துகொண்டேன். இனி அவர் திரும்புவார் என்ற நம்பிக்கை ஒழிந்தது. அப்போது என் தாய் ஒரு குழந்தைக்குத் தாயாகி இருந்தாள். குழந்தைப் பருவத்துக் கனவிலிருந்து, கடுமையான வாஸ்தவ உலகில் இறங்கினேன். பெருந்தியாகம் செய்து என்னை இளைஞனாக்கிய தாயின் சிரமத்தைக் குறைக்கவேண்டி, இரண்டாவது பிறப்பை ஏற்றுக் கொண்டேன். என்னைப்போன்றவர்கள் பதினைந்தாவது வசந்தத்தை ஆனந்தமாகப் பார்க்கும் தருணத்தில், தினிக்காக மிருகங்களைவிடக் கோரமாகச் சண்டையிடும் வாழ்க்கைக் கானகத்தில் கடுங்கோடையில் நுழைந்தேன். என் அன்பு வீட்டில் இருவரிடையே பிரிந்து, அந்தத் தாபத்திலும் குளிர்ச்சியைத் தந்தது.

ஒன்று – இரண்டு – மூன்று –

தம்பி பாரம் சுமக்கும் பொதிமாடாகும் வயசை எட்டிவிட்டான். நானும் மூன்றாம் பிறவிக்கு இழுக்கப்பட்டேன். ஒரு புதிய அன்பைக் கைக்கொண்டேன். அமுதம் உண்டவனுக்குப் பசி தாகம் ஏது? கருத்தொருமித்து ஒன்றாகிய காதலருக்கு மோகபாசம் ஏது? ஸ்வர்க்கமும் பூமியும் ஒன்றாகியிருந்த உலகம் அது. க்ஷணநேரந்தான்; ஆயினும் அந்த ஒரு க்ஷணம் இறவாதது; அமரத்தன்மை பெற்றது.

ஒன்று – இரண்டு – மூன்று – நான்கு –

குழந்தையின்பத்துக்குச் சமமாக எதையும் சொல்லமுடியாது. ஆறுமாதக் குழந்தைக்கு நரகமும் சொர்க்கமும் ஒன்றுதான்; தேவனும் ராக்ஷஸனும் சமம்; தந்தையின் வாழ்வும் சாவும் வேறு அல்ல.

ஒன்று – இரண்டு – மூன்று – நான்கு – ஐந்து –

இவ்வளவு காலமாக நான் பற்றிக்கொண்டு வாழ்ந்த இல்லத்தை விட்டுத் திடீரென்று புறப்பட்டேன். பந்தங்கள் இழுத்துப் பிடித்தன; மறுபுறம் விடுதலைப் பாசம் இழுத்தது. "நான் கண்மூடும்வரையில்...." என்று கண்ணீர் சொரிந்தாள் தாய். "நான் கண்ட சுகம்!.." என்று அரற்றினாள் அர்த்தாங்கினி. "இந்த இளந் தோள்களிலே இத்தனை பளுவா!...." என்று திகைத்தான் தம்பி. கடலோசைக்கும் மேலே எழும்பிய அந்தப் புலம்பலில் குழந்தை ஒன்றுதான் நகைத்துக்கொண்டிருந்தது. "நீ இருந்தாலும் போனாலும் எனக்கு அக்கறை இல்லை" என்று அவ்விளநகை ஒன்று மட்டும் விடை கொடுத்தது. பந்தங்களை அறுத்துக் கொண்டு புறப்பட்டேன். ஓவென்ற அழுகை வெகு நேரம் வரையில் கேட்டது.

ஆனால் என் கண்கள் எதிரே தென்பட்ட ஒளியில் பதிந்திருந்தன. அந்த இருட்டிலே, அதோ அந்த அடர்ந்த வனத்தின் முகப்பில், ஒரு நங்கை எனக்கு வழிகாட்ட நிற்கிறாள். அந்த வனமும் வானமும் சந்திக்கும் இடத்தில் தென்படும் நக்ஷத்திரத்தைத்தான் முன்பு நான் பார்த்திருக்கவேண்டும்.

அவள் எனக்குப் புதியவள் அல்லவே! பழகிய முகம். ஆமாம்; என் இரண்டாவது பிறவியிலே கண்ட வடிவம். அன்றே அவளைக் குருவாக்கிக் கொண்டுவிட்டேனே! நாங்கள் எல்லோரும் பெருங்குளம் தெப்பத்துக்குப் போனோம். ஓர் அடர்ந்த தோப்பைத் தாண்டுவதற்கு முன்பு, அதன் முகப்பில் இம்மாதிரியே அவள் அன்று நின்றாள். வழி அந்தத் தோப்போடு முடிந்துவிடுகிறதோ என்று நினைத்தேன். அருகில் சென்றதும் அவள் தாவி ஓடினாள். நான் பின்சென்றேன். அன்று தென்பட்ட அதே காட்சியை இன்று மீண்டும் காண்கிறேனே!

"வாருங்கள்" என்று அவள் என்னை அநாதா சிரமத்துக்குள் வரவேற்றாள். தொண்டுக்கு என்னைப் பறி கொடுத்தேன். பூர்வ ஜன்மத்து வாஸனைகளைப்போல, எப்போதாவது தம்பியின் கடிதங்கள் வரும். ஆயினும் அந்தப் புதிய உலகில் என் பழைய ஞாபகங்கள் அறவே ஒழிந்து போயின. வாஸனைத் தொடர்பு அறுந்தது. ஆசிரமத்திலே இரண்டு பகுதிகள். ஒரு பகுதியில்

அநாதைக் குழந்தைகளின் பராமரிப்பு. மற்றொன்றில் கதியற்ற பெண்களுக்கு ஆதரவு. இரவு பதினொரு மணிக்கு உடலைச் சாய்த்தால் அடித்துப் போட்டாற்போலத் தூக்கம் வரும்; வைகறையில் ஐந்து மணிக்குத் தட்டி எழுப்பிவிடுவார்கள். அத்தனை கடுமையான உழைப்பு! இத்தனை உழைப்பும் கடல்போன்ற ஒரு ஜனசமூகத்துக்கு உதவுகிறது என்ற ஓர் ஆறுதல். அதற்கும் மேலான அமைதி ஒன்று என் மனத்துக்குக் கிடைத்திருந்தது. உலகுக்கெல்லாம் தொண்டு செய்யும் அந்த ஜகன்மாதாவுக்கும் தொண்டு செய்யும் பேறு எனக்குக் கிடைத்தது. வருஷத்தில் ஈரப் பருவங்களிலே அவள் காசநோயினால் வருந்தியபோதெல்லாம் நான் அவளுக்குப் பணிவிடைகள் செய்துவந்தேன். ஆனால், இவ்வுலகிலே எந்த இன்பந்தான் நிலையானது? யாருக்கு யார் துணை? என் அன்புக் கண்கள் என்னை அறியாமல் எப்போது அவளுக்கு என் கீழ்த்தர இன்ப இச்சைகளைக் காட்டிக்கொடுத்து விட்டனவோ, அறியேன். என்னிடத்தில் அவள் சந்தேகம் கொண்டாள். உடலே உயிருக்கு ஆபத்தானது போல, என் கண்களே என்னை வேறு பிறவிக்கு மாற்றின.

ஒன்று-இரண்டு-மூன்று-நான்கு-ஐந்து-ஆறு-

அநாதாசிரமத்தின் வேறு கிளைக்கு வந்திருக்கிறேன். புதிய நண்பர்களோடு தொண்டு செய்கிறேன். ஆனால் இந்தத் தொண்டு என்பது என்ன, ஏன் செய்யவேண்டும் என்பதெல்லாம் ஒன்றும் புரியவில்லை. இந்தச் சமயத்திலே அவள் இறந்துபோனதாகச் செய்தி வந்தது. எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. ஆசிரமத்தை விட்டுத் தனிமையை நாடி ஓடினேன்.

மனிதன் சமூகத்தில் வாழும்போது தனிமையின்பத்தையும், தனிமையில் வாழும்போது சமூக இன்பத்தையும் விரும்புகிறான். என்ன விந்தை! சாதாரண மனிதர்கள் ரிஷிகளாகிக் காட்டில் தவம் புரிந்ததாகவும் அப்படித் தவம் புரியும்போது வந்த தேவமாதர்களிடத்திலே மயங்கியதையும் நாம் கேட்டிருக்கிறோமே; அந்தக் கதைகளிலே மனிதனுடைய இந்தத் தன்மையின் உண்மைதான் அடங்கியிருக்கிறது. தனிமையிலே எனக்குச் சலிப்பு உண்டாயிற்று. பல ஊர்களில் சுற்றினேன். வாழ்க்கையின் பல கோணங்களை நான் முதல்முதலாகக் காண முடிந்தது. தொண்டின் சூக்ஷ்ம ரகசியத்தைத் தான் இறந்தே எனக்குக் கற்பிக்க முடியும் என்று அவள் நினைத்தாளோ! அவள் இறந்த பின்பு ஏற்பட்ட அநுபவங்களினால் நான் பொய்யிலிருந்து மெய்க்கு வந்திருந்தேன். தொண்டுச் சிகரத்திலே மறைந்து நின்று அவள் என்னை நல்வழியிலே செலுத்திக் கொண்டிருந்தாள்.

ஒன்று-இரண்டு-மூன்று........ஆறு-ஏழு!

கோயிலிலே சாயங்கால மணி ஒலிக்கும் இந்த அந்திவேளையில் நான் புதுப் பிறவி எய்தியிருக்கிறேன். என் தாயும் தம்பியும், மனைவியும் குழந்தையும் இந்தப் பரந்த உலகிலே இன்று எந்த மூலையில் இருக்கிறார்களோ, அறியேன். பல ஜன்மங்களுக்கு முன்பு செத்துப்போன பூமியை மீண்டும் பார்க்க வரும் ஜீவனைப்போல, நான் ஊருக்கு வந்திருக்கிறேன். நான் போன சில நாட்களுக்கெல்லாம் தம்பி எங்கோ ஜீவனத்துக்கு வழி தேடியதாகவும், அது கிடைத்த இடத்திற்கு எல்லோரையும் அழைத்துச் சென்றதாகவும் தகவல் கிடைத்தது. சுழன்றுகொண்டே இருக்கும் இந்த ஜன்மசக்கரத்திலே தாய்தகப்பன்மார் யார்? உடன்பிறந்தவர்கள் யார்? மக்கள் யார்? காதல் தத்துவம் மட்டும் காவியப்பொருளாக நிலவுகிறது. மற்றப்படி -

3

ஜன்மஜன்மாந்தரங்கள் கடந்து போதிஸத்வருக்கு ஞானோதயம் ஆனதுபோல, இன்று நான் உலக ரகசியத்தைக் கண்டுபிடித்துவிட்டேன். மிருத்தியுவைக் கடந்து அமுதலோகத்துக்கு வந்துவிட்டேன். சமுத்திரத்திலிருந்து மகா சமுத்திரத்துக்கு வந்துவிட்டேன். என்முன் காணும் பெண்ணினம் முழுவதிலும் இன்று என் தாயைக் காண்கிறேன்; உடனே ‘அம்மா’ என்ற குரல் என் உள்ளத்திலே ஒலிக்கிறது. என்முன்னே நிற்கும் இளைஞர் சமூகத்திலே என் தம்பியும் ஒருவன். புவியில் புதிதாக மலர்ந்து புன்னகை தவழும் முகங்களிலெல்லாம் அன்று எனக்கு விடை கொடுத்த குழந்தையின் சாயல் தென்படுகிறது. உலகமாகிய குடும்பத்திலே என் குடும்பமும் ஐக்கியமாகிவிட்டது. ஆழ்ந்த உள்ளமும் விசாலமான அறிவும் சேர்ந்து, ஜனசமூகத்தினிடம் எனக்குப் பரந்த அன்பை உண்டாக்கிவிட்டன. இன்று என் அன்பு ஒரு குறுகிய கூட்டத்துக்குள்ளே சிறைப்பட்டிருக்கவில்லை. ‘என் தாய், என் தம்பி, என் மனைவி, என் குழந்தை’ என்ற அகந்தைப் பாசங்களை எல்லாம் அறுத்து எறிந்து, பிறந்த மேனியோடு உலகத்தைக் காணும் சிசுவைப் போல, பற்றற்ற நோக்கோடு நான் இந்த உலகத்தைக் காண்கிறேன்.

என் உடல், உயிர், உள்ளம், அறிவு ஆகிய யாவும் சேர்ந்து, இன்று நான் ஒரு தொண்டனாவதற்குத் தகுதி வாய்ந்தவன் என்று அறிக்கை செய்துவிட்டன. ஆகவே தொண்டு பூண்ட என் புதிய வாழ்க்கையை இன்று மேற்கொள்ளுகிறேன்.

வெண்மையும் கருமையும்

ஆர்.கே. பார்த்தசாரதி எம்.ஏ.எல்.டி

இயற்கையெனும் ஏந்திழை தன் காதலர்களைப் பல விதத்திலும் இன்புறுத்தப் பற்பல அழகுக் கருவிகளைக் கையாளுகிறாள். கவலையற்றுத் திரியும் புள்ளினத்தின் அமுத கீதம், 'சலசல' வென்று சப்தமிட்டு, சர்ப்பம்போல் நெளிந்து நெளிந்து செல்லும் சிற்றாறு, பிரளயகாலத்து மழைபோல் தலைவிரிகோலமாக மலையினின்று குதிக்கும் நீர் வீழ்ச்சி, சோலையில் வர்ணப் பட்டாடை உடுத்து எங்கும் நறுமணம் பரப்பும் மலர்கள், மல்லிகைக்கொடியின் கள்ள நகைப்பில் மதிமயங்கி, போகும் போக்கில் அதன் நறுமணத்தைக் கொள்ளைகொண்டு செல்லும் தென்றல், ஆசை மதியைத் தன் மடியிற் கிடத்தித் தனியுரிமையுடன் கொஞ்சிக் குலவும் தெள்ளிய நீரோடை - இவையும் இவை போன்ற பலவும் மனிதனின் பஞ்சேந்திரியங்களையும் ஆட்கொள்கின்றன. என்றாலும் இயற்கைமாது அவைகளுள் சிறப்பாகக் கண்களுக்கு அளிக்கும் விருந்தே விருந்து; அவை பெறும் பேறே பெரும்பேறு. கண்களைக் கவரக் கன்னி இயற்கை காட்டும் கற்பனைகளுள் வர்ணப் புதுமை - வர்ண வைசித்திரியம் - ஒன்று.

ஆம்! இந்நிலவுலகில் இயற்கையணங்கு தோற்றுவிக்கும் நிறங்களின் விந்தைக் காட்சிகளைச் சொல்லி முடியாது. தனித்த வர்ணங்கள் ஒரு புறம் இருக்க அவ்வர்ணங்களின் - வேறு வேறான வர்ணங்களின் - சேர்க்கை எவ்வளவு விசித்திரமாக இருக்கின்றது! வெண்மையான சந்திரனின் நடுவே கருமையான களங்கத்தின் அழகு தான் என்ன! மஞ்சள் நிறம் வாய்ந்த புலித்தோலின் மீது கருமையான வரிக்கோடுகள் எவ்வளவு எடுப்பாக இருக்கின்றன! பச்சைப் பசுங்கிளியின் சிவந்த அலகு நம்மைப் பரவசப்படுத்தவில்லையா? எனவே வர்ணங்களும் அவற்றின் சேர்க்கைகளும் நம் கற்பனையைத் தூண்டும் கவிதைகளாக விளங்குகின்றன.

பாமரர்களையே இன்பசாகரத்தில் ஆழ்த்தும் இக்கவிதை கவியையும் சித்திரகாரனையும் பரவசப்படுத்துவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஓர் ஓவியன் எவ்விதம் வர்ணப் புதுமைகளில் ஈடுபடுகிறானோ அவ்விதமே கவியும் வர்ணமாயத்தில் மயங்குகின்றான். கவியும் ஓர் ஓவியன் தானே! கவி காவியம் எனும் கிழியில் இயற்கை ரஸனை என்னும் தூலிகையால் கற்பனைச் சித்திரங்கள் எழுதுகிறான், இருவருக்கும் பொதுவான வர்ணங்களைக் கொண்டு.

மேற்கூறிய வர்ணங்களுள்ளும் அவற்றின் சேர்க்கைகளுள்ளும் கருமையும் வெண்மையும் சேர்ந்த நிலை தனிச் சிறப்புடையது. எல்லா ஓவிய முறைகளிலும் முக்கியமாகப் புகைப்படக் கலையிலும் (Photography) இச்சேர்க்கைக்குத் தனி இடம் உண்டு. 'Black and White, Light and Shade' என்றெல்லாம் குறிக்கப்படும் இவ்வர்ண அமைப்பு கலையின் ஜீவன் எனத்தகும். இதுவே கவிகளின் கற்பனைக்கு அமரத்துவம் அளிக்கிறது.

கவிச் சக்கரவர்த்தி காளிதாஸன் தனது புகழ்பெற்ற ரகுவம்ச காவியத்தில் பதின்மூன்றாவது ஸர்க்கத்தில் 'கங்கா யமுனா ஸங்கம'த்தை வர்ணித்துள்ளான். அவ்வர்ணனை ஒரு வர்ணசித்திரமாகும். அஃது அமரத்துவம் அடைந்து இலக்கிய ராணியின் மகுடத்தில் வர்ணக்கதிர் விடும் சுடர்மணி என விளங்குகின்றது. கருமையான யமுனையின் நீரும் துல்லிய வெண்மை பரந்த கங்கையும் கலந்து புரியும் வர்ண விளையாட்டு, கவியின் உள்ளத்தில் கற்பனை வெள்ளம் பாய்ச்சுகிறது; நம உள்ளத்தில் இன்ப வெள்ளம் பாய்ச்சுகிறது.

மேற்கூறிய கருமை வெண்மையாலான வர்ணப்புதுமையைக் கவனிப்போம். 'கரிய செம்மல்' இராமன் சிவந்த தளிர்மேனி படைத்த ஜானகியுடன், நாலுபுறமும் வர்ண ஒளி வீசும் புஷ்பக விமானத்தில் அமர்ந்து நீல விசும்பில் அயோத்திக்குச் செல்கிறான். இந்த வர்ண ஸமூஹம் பூதலத்தை நோக்குகிறது. அங்குக் காட்சியளிப்பது யாது? மற்றுமொரு வர்ணப் புதுமை. கருமையும் வெண்மையும் கலந்து அளிக்கும் ஒரு மோகனக் காட்சி. ஆம்! கங்கையும் யமுனையும் இரு சகோதரிகளைப்போல்

இணை பிரியாமல் செல்லும் காட்சி. எவ்வளவு இன்பமான ஒற்றுமை நிலை! கவியின் கற்பனைக்கண் திறக்கிறது; இராமனின் திருவாயும் மலர்கிறது. கவியின் கற்பனைச் சித்திரங்கள் இராமனின் சொற்சித்திரங்களாகப் பரிணமிக்கின்றன. அண்ணல் சீதைக்குக் கீழேயுள்ள அபூர்வக் காட்சியைச் சுட்டிக் காட்டி, அங்கே காட்சி அளிக்காத பல காட்சிகளை - கருமை வெண்மைப் பொருள்களின் காட்சிகளை - த் தேவியின் மனக்கண்ணின் முன் பிரத்தியக்ஷமாக்குகிறான், உவமை வாயிலாக.

அழகிய முத்து. வெண்முத்து. ஒவ்வொரு முத்தும் முல்லைச் சிரிப்புச் சிரிக்கிறது. வெள்ளிக் கதிர் வீசுகிறது. நாலு பக்கத்திலும் நிலவு பரப்புகிறது. இத்தகைய பல முத்துக்கள் கோத்த ஓர் அழகுச்சரடு. அம் முத்துமாலையின் இடையிடையே இந்திர நீலக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. எனவே வெண்மை யொளியை ஆங்காங்குக் கருமையான கதிர்கள் வெட்டிச் செல்கின்றன. என்ன வர்ணவிஹாஸம்! கங்கா யமுனா ஸங்கமமும் மேற்கூறிய மாலையோடு தான் உவமிக்கப்பட்டிருக்கிறது:

क्वचित् प्रभालेपिभिरिन्द्रनीलैर्मुक्तामयी यष्टिरिवानुविद्धा ।

என்ற சுலோகத்தில். எவ்வளவு பொருத்தமான, இனிமை பயக்கும் உவமை! முத்தைப் போன்று வெண்மை பூரிக்கும் கங்கையின் நீர்ப்பரப்பில் நீலக்கற்கள் போன்ற யமுனையின் அலைகள் தவழ்ந்து விளையாடுகின்றன. லோக மாதாவுக்கு இரு மடங்கான ஆனந்தம். பிரத்தியக்ஷமான ஓர் உண்மைக் காட்சி, இன்பக்காட்சி, மனத்திரையில் தோற்றுவிக்கப்படும் ஒரு கற்பனைக்காட்சி, மேலான இன்பம் பயக்கும் ஓர் அபூர்வக் காட்சி.



யோகியரின் உள்ளத்தைப்போல் தூய்மையான, தெள்ளிய நீரோடை. அழகிற்கு அழகு செய்வதுபோல் அவ்வோடையில் அழகிய மலர்கள் - தாமரை மலர்கள் - வெண்தாமரை மலர்கள் - நீரைக் கிழித்துக்கொண்டு தலை நீட்டுகின்றன. மேலிருந்து பார்த்தால் கீழே பால்போன்ற வெண்ணிலவின் தோற்றம். ஊன்றிக் கவனித்தால் அவ்வெண்ணிலவில் கருமையும் புலப்படுகிறது. அவ்வெண் தாமரைகளின் நடு நடுவே நீலோற்பலங்கள் - கருவர்ண மலர்கள். ஆஹா! எவ்வளவு மனோரம்யமான வர்ண அமைப்பு! अन्यत्र माला सितपङ्कजानामिन्दीवरैरुत्खचितान्तरेव என்று கூறும் பொழுது, கங்காயமுனா ஸங்கமம் கவியின் ஹ்ருதயத்தில் இந்த வர்ண அமைப்பைத்தான் ஞாபகப்படுத்துகிறது. உடனே மேற்கூறிய உவமை வெளிவருகிறது.

கவியின் கற்பனை எழும்புகிறது. எனவே வானவெளியில் சஞ்சாரம். அங்கு ராஜஹம்ஸங்களின் சஞ்சாரமுங்கூட. மிகவும் கம்பீரமான பறவைகள். வெண்மையான - பரிசுத்தமான - மனத்திற்கும், களங்கமற்ற புகழிற்கும் ஏற்ற உவமைப் பொருள்கள். அதோ ஆகாயவழியாகத் தங்கள் அழகிய விரிந்த சிறகுகளை வெகு லாகவத்துடன் உல்லாஸமாக அடித்துக்கொண்டு, தங்களைப் போலவே புனிதத்தன்மை வாய்ந்த மானஸ ஏரிக்குப் பறந்து செல்கின்றன. அந்தப் பக்ஷிகளின் கூட்டத்தினிடையே இன்னொரு கூட்டமும் செல்கின்றது. மேகங்களின் கூட்டமோ? இல்லை. அது நீலஹம்ஸங்களின் அணிவகுப்பு. ஒன்றிற்கொன்று வழித்துணையாக அவ்விரு கூட்டங்களும் கலந்து பிரயாணம் செல்கின்றன. இப்பறவைகள்

ஒருங்கே அளிக்கும் வர்ணக்கலப்பைக் கங்கா யமுனா ஸங்கமத்தோடு ஒப்பிட்டிருக்கும் கவியின் கற்பனையை எவ்வளவு போற்றினாலும் போதாது. மேற்கூறிய உவமை அடங்கிய வரி வருமாறு :—

क्वचित् खगानां प्रियमानसानां कादम्बसंसर्गवतीव पङ्क्तिः ।

காளிதாஸனின் கற்பனையூர்தி, இராமனின் புஷ்பக விமானத்தைப்போல, வான வீதியில் சென்றவாறே பூதலத்தைக் கடைக்கணிக்கிறது. கவிக்குப் பூதேவியின்மீது அபார வாஞ்சை. பக்தி கலந்த அன்பு. கவி அவளுடைய தவப் புதல்வன் அல்லவா? எனவே அன்னையைத் தன் உள்ளக்கோயிலில் அமர்த்தி, மானஸிக பூஜை செய்கிறான்; அன்னைக்கு அணி செய்கிறான். அன்னையின் திருமேனியில் சந்தனக் காப்பு இடுகிறான். கலப்பற்ற சந்தனமாதலால் அதன் இயற்கையான வெண்மை அவள் திருமேனியெங்கணும் படர்ந்து திகழ்கிறது. கவியின் குழந்தையுள்ளத்திற்கு மனத்திருப்தி ஏற்படவில்லை. 'அலங்காரம் போதாது' எனத் தோற்றுகிறது. எனவே கருஞ்சந்தனக் கட்டையைத் தேய்த்து, அதன் கருஞ்சாந்தையும் ஆங்காங்குத் தடவுகிறான். அதனால் கோலங்கள் போடுகிறான் அவள் அழகிய மேனியின் மீது. எவ்வளவு அற்புதமான அலங்காரம் செய்துவிட்டான்! அவ்வலங்காரத்தின் அழகைக் கவியே கூறட்டும்:

अन्यत्र कालागरुदत्तपत्रा भक्तिर्भुवश्चन्दनकल्पितेव ।

வெண்மையான சந்தனத்தின் மீது கறுத்த அலங்காரக் கோடுகள் தெய்விகமான எழில் பெற்றுப் பிரகாசிக்கின்றன. கங்கா யமுனா ஸங்கமத்தின் வர்ணத் தோற்றமும் மேற்கூறிய கற்பனைக் காட்சியைப்போல் விளங்குகிறதாம்.

நம் கவி காளிதாஸனின் கற்பனாசக்தி எப்பொழுதும் பொன் கொழித்தோடும் ஜீவநதி. வறண்டு போகும் குட்டையல்ல. எனவே அவன் சிந்தனையில் மற்றுமோர் உவமை பிறக்கிறது. இப்பொழுது கவியின் கற்பனை நம்மைப் பூமிக்கும் வானத்திற்குமாக ஊஞ்சலாட்டுகிறது. மண்ணிற்கும் விண்ணிற்குமாகத் தாலாட்டுகிறது. வானில் ஒரு நிகழ்ச்சி. மண்ணில் அதன் சூழ்ச்சி. நிறைமதி தன் தண்ணிய கரங்களால் பூவுலகைப் புதுமைப் பாற்கடலில் அழுத்துகிறான், இன்பமுத்துக் குளிக்க. பூமியின் மீது நிலவுப் போர்வை விரிக்கப்பட்டிருக்கிறது. பூதேவி வெள்ளையமுதம் பருகிப் பிரகாசிக்கிறாள். பூதேவியின் இந்த ஏற்றத்தைப் பொறுக்கவில்லை சில மரங்கள். அவை விவேகம் இல்லாத மரங்கள்தாமே? எனவே சந்திர கிரணங்களைக் கொள்ளைக்காரர்களைப்போல் இடைமறித்துத் தம் தலையிலேயே தாங்கிக்கொள்கின்றன. மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ள இடங்களில் நிலவு இல்லை-பூரண நிலவு இல்லை. அங்கெல்லாம் கருமை கவிகிறது. என்றாலும் சிற்சில சந்திர கிரணங்கள் அவைகளையும் ஏமாற்றி, இலைகளின் வழியே தப்பிச் செல்கின்றன. தடையில்லாத இடங்களில் வெண்மதியின் பூர்ணப் பொலிவு. ஒரு பக்கம் வெண்மைக் கடல். மற்றொரு பக்கத்தில் கருமைத் திட்டுகள். ஆஹா! எவ்வளவு இனிமையான வர்ணச் சேர்க்கை! கங்கையும் யமுனையும் இதுபோன்ற ஒரு காட்சியைத்தான் அளிக்கின்றன என்கிறான் கவி,

“ क्वचित् प्रभा चान्द्रमसी तमोभिश्छायाविलीनैः शबलीकृतेव । ”

என்னும் வரியில். ஆகா! படிக்கும்போதே மனம் அந்த வர்ணனையிலே லயித்துவிடுகிறது.

இப்பொழுது கவி நம்மை வானவுலகிலேயே நிறுத்துகிறான். கற்பனை என்னும் கோலினால் நம்மைக் குரங்காட்டம் ஆட்டுகிறான் என்றாலும் மிகையாகாது. என் செய்வது? அவன் கவிதையுலகில் ஸர்வாதிகாரி ஆயிற்றே! எனவே அவன் யதேச்சாதிகாரத்திற்குப் பணியவேண்டியதுதான். அன்னையின் உள்ளத்திரையில் இராமன் வாயிலாக ஓர் ஓவியம் வரைகிறான். ஒரு நாடகக் காட்சி தயாரிக்கிறான். நீல வானம். அதன் மீது ஆங்காங்கே சரத்கால மேகங்கள், வெண்மையான மேகங்கள், சிதறிக் கிடக்கின்றன. வெளிறிய மேகங்களுக்கு இடையில் நீலவானம் - கரு நீல வானம் எட்டி எட்டிப் பார்க்கிறது. கருமை காண்பிக்கிறது. இந்தக் காட்சியை, இவ்வர்ணப் புதுமையைப் போன்றதுதான் கங்கை யமுனை நீரோட்டம் என்கிறான் கவி. இவ்விரு காட்சிகளிலும் அமைந்துள்ள வெண்மையும் கருமையுமே அவ்விதம் அவனைக் கூறச் செய்கின்றன. அந்தக் கற்பனையைச் சித்திரிக்கும் வரி வருமாறு:

अन्यत्र शुभ्रा शरदभ्रलेखा रन्ध्रेष्विवालक्ष्यनभः-प्रदेशा ।

கடைசி உவமை சாதாரணமான உவமை அல்ல. மிகுந்த புனிதத்தன்மை, தெய்வத்தன்மை, பொருந்திய உவமை. கருமைக்கும் வெண்மைக்கும் சிகரம் போன்ற உவமை. ஸாக்ஷாத் பரமசிவனைக் காட்டிலும் சிறந்த உவமைப் பொருள் உண்டா? எல்லா விஷயங்களும் அந்த ஸம்ஹார மூர்த்தியினிடம் முடிவு பெறுவது போல - லயிப்பது போல - கவியின் இவ்வுவமையும் அவனிடம் முடிவடைகிறது. கவியின் உவமையடுக்கும் அவ்விதமே முடிவுறுகிறது. ரஸிகர்களின் உள்ளமும் இவ்வுவமையில் லயித்து, "அவனுடைய" அடியிணையில் கலக்கிறது.

வெண்பனி மூடிய வெள்ளிமலை. அம்மலையின் மீது மேனியெங்கும் வெண்ணீறு பூசிய பரமேசுவரன் கோயில் கொண்டிருக்கின்றான். வெள்ளிமலை மீது மற்றொரு வெள்ளிமலை வீற்றிருக்கும் அதிசயக் கோலம். அவ்வெண்மலை மீது ஆங்காங்குக் கரும்புதர்கள். ஆம்! வெண்ணீறு பூசிய பெரியோனின் மேனியில் பேரணிகளாகத் திகழும் கிருஷ்ண ஸர்ப்பங்கள் - கருநாகங்கள். ஆ! எவ்வளவு உன்னதமான வர்ண வைசித்திரியம்! ஒருவனுடைய சிந்தனை கருமை தாங்கிய இந்த வெள்ளிமலைக்கும் மேலாகச் செல்லக் கூடுமா? கங்கையின் வெண்மையும் யமுனையின் கருமையும் ஒன்றி நின்று அளிக்கும் வர்ண அமைப்பு மேற்கூறிய தெய்விகமான வர்ண அமைப்பை ஒக்கின்றது என்று

क्वचिच्च कृष्णोरगभूषणेव भस्माङ्गरागा तनुरीश्वरस्य ।

என்னும் வரியில் கவி கூறுகிறான்.

மேலே கூறியவற்றிலிருந்து வெண்மை கருமை நிறங்களின் சேர்க்கை - மாறுபாடுடையனவாகத் தோற்றும் இரு வர்ணங்களின் இனிய சேர்க்கை - எவ்வளவு அழகு வாய்ந்தது, உன்னதமானது, புனிதத்தன்மை வாய்ந்தது, உயர்ந்த கற்பனையைத் தூண்டுவது என்பது ஒருவாறாக விளங்கும். இவ்வளவு மோகனமான வர்ணக் கோலத்தை நம் கண்களுக்குப் பெரு விருந்தாக அளிக்கும் இயற்கையணங்கின் அன்புதான் என்ன! அவளுடைய வர்ண வைசித்திரியத்தின் சிறப்பை நமக்கு அமோகமாக எடுத்துக் காட்டும் கவியின் கற்பனைதான் என்ன!

அந்த 'ர்'

“ரோஜாப்பூ பூர்க்கவில்லையே என்று கார்த்துக்கொண்டிருந்தேன்; நல்ல வேளை! பூர்த்தது; கோர்த்து ஸ்வாமிக்குப் போட வேணும்” என்று அடுக்கடுக்காக அந்த “ர்” என்ற வேண்டாத எழுத்தைச் சிலர் உபயோகிக்கிறார்கள்.

'பூர்க்க' என்று சொல்வது தவறென்பது பலருக்குத் தெரியும்; சில பேருக்கே தெரியாது.

'கார்க்கவேணும் ராமா!' என்ற ஒரு பாட்டு முன்பு தமிழ்நாட்டில் வழங்கி வந்தது. 'காக்க வேணும்' என்று சொன்னாலே ராமர் காப்பாற்றுவார். 'கார்க்கவேணும்' என்று ஓர் எழுத்தை அதிகமாக வேண்டாத இடத்தில் கூட்டிச் சொல்வதில் அழகோ, சிக்கனமோ ஒன்றும் இல்லை. அது தவறு வேறு.

'கோர்வையாக', 'கோர்த்துப் போடவேணும்' என்று 'கோ' என்ற சொல்லுக்கு 'ர்' என்ற வாலைச் சேர்த்து வழங்கும் பிழையைப் பலர் செய்கிறார்கள். 'கோ' என்பது பகுதி. அதிலிருந்து வந்தது கோவை. கோர்வை என்று எழுதுவது பிழை. இம்மாதிரியான பிழைகளை எல்லாம் கவனித்துத் திருத்திக்கொள்வது அவசியம்.

மனித வாழ்க்கை

'சம்பந்தன்'

1

"ஒருவரைப்பார்த்து இப்படித்தான் செய்ய வேண்டும் என்று கட்டளையிட எனக்கு அதிகாரம் இல்லைதான். ஆனாலும் திரும்பி வீட்டுக்கே போய்விடுங்கள் என்று சொல்லவே மனம் தூண்டுகிறது."

"அப்படியானால் நான் வீட்டை விட்டு வெளியே வந்ததில் ஓர் அர்த்தமும் இல்லை என்று எண்ணுகிறீர்களாக்கும்!"

அவ்வளவில் வேங்கடேசன் மௌனமாக இருந்தான். அவளும் பேசாமல் அப்படியே நின்றாள். ஆனால் சிறிது நேரத்துக்குள் அவனே மறுபடியும் பேச்சைத் தொடங்கினான்.

"அநேகருடைய வாழ்க்கையில் இப்படியான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. ஆனால் எதிரிலே தங்களைத் தாக்குவதற்குக் காத்து நிற்கும் ஆபத்துக்களைக் கவனிக்காமல் துணிந்து நிற்கிறவர்கள் அவர்களிலும் சிலரேயாகும். எல்லாம் முடிந்த பிறகே தாங்கள் செய்தது தவறுதான் என்ற அநுபவம் உண்டாகிறது. கடைசியில் வரும் இந்த அநுபவத்தாலும் ஒருவித லாபமும் ஏற்படப்போகிறதில்லை."

"நீங்கள் சொல்வது முற்றும் உண்மை என்று வைத்துக்கொண்டாலும் ஒரு பெண் தீர யோசிக்காமல் ஒரு முடிவுக்கும் வரமாட்டாள் என்பதை மட்டும் மறந்துவிடக் கூடாது. இனிமேல் வரும் என்று சொல்லுகிறீர்களே, அவற்றிற்காக நான் எப்பொழுதோ கண்ணீரும் வடித்துவிட்டேன். இனி அவை வந்தாலும் வராவிட்டாலும் ஒன்றுபோலத்தான்."

அவளுடைய உறுதியான மனநிலையைக் கண்டதும் வேங்கடேசன் யோசனையில் ஆழ்ந்து நின்றான். இன்னதென்று குறிப்பிட முடியாவிட்டாலும் அவளது உள்ளத்தை இறுகச்செய்து இரும்புபோலக் கடினமாக்கிய ஏதோ ஒரு சம்பவம் இருக்கவேண்டும் என்பது நன்றாகத் தெரிந்தது. அதற்குள், "தற்செயலாக வழியிலே சந்தித்த ஒருவனிடம் இப்படியெல்லாம் பேசுகிறாளே, மானமற்றவள் என்று நினைக்காமல் எனக்கு ஓர் உதவி செய்யவேண்டும்" என்று அவள் கேட்டாள்.

"நீங்கள் சொல்லுவது போல நினைக்கிற பழக்கம் எனக்கு இல்லை. ஆனால் இந்த நிலையில் உதவி என்று எதை நினைக்கிறீர்களோ அதைச் செய்து தருவதால் மேலும் துன்பங்களின் ஆழத்தில் தள்ளப்படுவீர்களானால்..."

"நான் சொன்ன மாதிரியில் ஏதோ பிரமாதமாக எண்ணிவிட்டீர்கள் என்றே நினைக்கிறேன். ஸ்டேஷன் வரைக்கும் வழிகாட்டவேண்டும் என்றுதான் கேட்க இருந்தேன்."

"எங்கே போக விரும்புகிறீர்கள்?"

"அதைப்பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். வழியைமட்டும் காட்டிவிட்டாலே போதும்."

"எப்படி இருந்தாலும் இனி வண்டிகள் அகப்படப்போவதில்லை. எல்லாம் இதற்குள் போயிருக்கும்."

"வாஸ்தவமாகத்தான் சொல்லுகிறீர்களா? அல்லது.."

"நான் எதற்காக இதில் பொய் சொல்லவேண்டும்? இனி நாளைக்கு, அதுவும் சாயந்தரத்துக்குப் பிறகே வண்டி அகப்படும்."

"அது வரைக்கும் ஒளிந்துகொள்வதற்காவது ஓர் இடம் வேண்டுமே! உங்களுடைய வீட்டிலாவது ஒரு மூலை கொடுப்பீர்களா?"

"வீடா! வெகு நாட்களுக்கு முன்பு ஏதோ ஊரில் எனக்கும் சொந்தமான வீடு ஒன்று இருந்ததாக ஞாபகம் இருக்கிறது."

"அப்படியானால் வேறு வழி இல்லையா?"

"விரும்பினால் கோயிலில் கேட்காமலே இடம் கிடைக்கும்."

"இந்த ஊரிலேயே அப்படிச் செய்வது, நானாகவே எல்லோருக்கும் நிலைமையைச் சொல்லுவது போல ஆகாதா? காலையில் தெரிந்த எத்தனையோ பேர் வந்து கண்டுவிடுவார்களே?"

"நீங்களோ எல்லோரையும் வெறுத்து வெளியே வந்துவிட்டீர்கள். அதன் பிறகும் எதற்காகப் பயப்பட வேண்டும்?"

"மரணத்தைத் தேடி ஓடும்போதும் ஒவ்வொரு பெண்ணும் தன் மானம் போய்விடுமோ என்று ஏங்காமலிராள்."

"நீங்களே ஒரு வழியைச் சொல்லுங்களேன்."

இதைக் கேட்டதும் அவள் சிரித்தாள். வேங்கடேசனால் அவளது சிரிப்பின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனால், "ஏன் சிரித்தீர்கள்?" என்று கேட்டான்.

"எனக்கு அது தெரிந்திருந்தால் இவ்வளவு தூரம் நின்று உங்களைக் கேட்டிருக்க மாட்டேன் அல்லவா?"

அவ்வளவில் அவன் பேச்சை நிறுத்திவிட்டு நின்று யோசித்தான். பிறகு, "வாருங்கள், பார்க்கலாம்" என்று அவளையும் அழைத்துக்கொண்டு சென்றான். இரண்டொரு தெருக்களைக் கடந்த பிறகு ஒரு பாழடைந்த வீட்டின் முன்னால் நின்று, "இந்த வீட்டில் உங்களால் இருக்க முடியுமா?" என்று கேட்டான்.

"நான்கு சுவர்கள் இருக்கின்றனவே, அவ்வளவே போதும். ஆனால் இது யாருடைய வீடோ?"

"இப்பொழுது யாருக்கும் சொந்தம் இல்லை. வீட்டுக்குடையவன் கொஞ்ச நாட்களுக்கு முன் அரசாங்கத்தின் விருந்தாளியாகப் போய்விட்டான். பார்க்கப்போனால் இன்று எனக்குத் தான் அதிக உரிமை உண்டு என்று சொல்லலாம்."

மேலே அவள் ஒன்றும் பேசாமலே நின்றாள். வேங்கடேசன் சென்று கதவைத் தள்ளிப் பார்த்தான். அது மெல்லத் திறந்து வழி விட்டது. உடனே உள்ளே இருந்த சில வௌவால்கள் 'தட தட'வென்று அடித்துக்கொண்டு பறந்தன. தீப்பெட்டியைத் தட்டிப் பார்த்த போது ஒரு தகழி விளக்கும் பக்கத்திலே கொஞ்சம் எண்ணெயும் இருப்பதைக் கண்டதும் மிகுந்த சந்தோஷத்தோடு அதை ஏற்றினான். உடனே, "இதற்குள்ளே தங்குவதைக்காட்டிலும் குப்பைத்தொட்டியினுள் ஒளிந்துகொள்வது நன்றாக இருக்கும்" என்று அவனது குரல் கேட்டது. அதுவரையும் வாயிலிலே நின்றவள் இதைக் கேட்டதும் நுழைந்து அறையைச் சுத்தம் செய்யத் தொடங்கினாள். வேங்கடேசனும் அந்த வேலையிலே பங்கெடுத்துக்கொண்டும் வெகு நேரம் ஆகிவிட்டது.

தெருக்குழாயிலே கால் கைகளை அலம்பிவிட்டு வந்தபிறகு, "கீழே விரித்துக்கொள்ள வேண்டுமானாலும் அந்தப் பழைய பாய் ஒன்றுதான் கிடக்கிறது. ஒருவேளை உங்களுக்குத் தூக்கம் வராமலும் போய் விடும். ஆனால் என்னைப்போன்றவர்களுக்கு இந்த விசாரமே இல்லை" என்று அவன் சொன்னான்.

"எப்படியும் இன்று நிம்மதியாகத் தூங்குவேன் என்றே எண்ணுகிறேன்."

"நல்லது. அப்படியானால் உள்ளே போய்ப் படுத்துக்கொள்ளவேண்டியதுதானே?"

"நீங்கள் காவற்காரனின் இடத்தில் தூங்கப் போகிறீர்களாக்கும்?"

"சம்பளம் கிடைக்காவிட்டாலும் இந்த உத்தியோகம் எனக்கு மிகவும் பிடிக்கிறது."

அவள் உள்ளே சென்று கதவைச் சாத்திக் கொண்டு படுத்துவிட்டாள். அவன் தன் மேல் வேஷ்டியை உதறிப் போட்டுக்கொண்டு வெளித் திண்ணையிலே சரிந்தான்.

2

வேங்கடேசன் காலையில் எழுந்து பார்த்த போது அவள் எதிரிலே உட்கார்ந்திருந்தாள். "நேரத்தோடு எழுந்துவிட்டீர்கள்போல இருக்கிறதே! அப்படியானால் என்னை ஏன் எழுப்பவில்லை?" என்று கேட்டான்.

"நித்திரையாக இருப்பவர்களை நான் ஒருபோதும் எழுப்புவதில்லை. தூங்குகிற பொழுதுதானே பெரும்பாலானவர்கள் எல்லாத் துன்பங்களையும் மறந்திருக்கிறார்கள்? என்னளவில் நித்திரையில் கழிகிற நேரமே அமிருதத்துக்கு ஒப்பானது."

"உங்களுடைய மேலான தத்துவங்களைப் புரிந்து கொள்வதற்கு உண்மையில் எனக்குச் சக்தி இல்லை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. அது கிடக்கட்டும். வயிற்றுப்பாட்டைக் கவனிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது."

"நான் அதைப்பற்றி யோசிக்கவும் தயாராக இல்லை. யோசித்தாலும் பிரயோசனம் இல்லாத நிலைமையிலேயே இருக்கிறேன்."

"பணம் இல்லையே என்ற கருத்தா? இங்கே கடன் கிடைக்கும். அல்லாமலும் நேற்று உங்களைச் சந்திக்கும்போதே நானும் ஒரு சிறிய பணக்காரனாக இருந்தேன். இப்படியான ஒரு சந்திப்பு வரப்போகிறதென்றுதான் நேற்றைச் சூதாட்டத்தில் எனக்கு மேலும் மேலும் வெற்றி கிடைத்தது போலும்!"

"நீங்களும் சூதாடுவீர்களா?"

"பேஷாக ஆடத் தெரியும். ஒருவேளை இந்தச் சூதாட்டக்காரனுடனா சிநேகம் கிடைத்தது என்று அவமானமாக இருக்கிறதா?"

"நன்றாகக் கண்டுபிடித்தீர்கள். நடுராத்திரியில் வீட்டை விட்டு ஓடிவந்து இப்படி வாழுகிற ஒருத்திக்கு அதில் வேறே அவமானம் வந்துவிடுமோ? சும்மா 'ஆடுவீர்களா' என்று கேட்டுப் பார்த்தேன்."

அவ்வளவில் பேச்சை நிறுத்திவிட்டு அவன் எழுந்து சென்றான். பிறகு சாப்பாட்டுடன் வந்து பார்த்தபோது அவள் கதவை அடைத்துக் கொண்டு உள்ளே இருந்தாள். "ஏன் இப்படி மூடிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று அவன் கேட்டதும், "விசாரிக்கிறவர்களுக்குப் பதில் சொல்லி முடியவில்லை. சில பெண்களுக்குப் பிறப்பதற்கு முற்பட்ட சரித்திரங்கள்கூடத் தேவைப்படுகின்றன" என்ற பதிலே அவளிடமிருந்து கிடைத்தது.

"அவர்களுக்கு என்ன சொன்னீர்கள்?"

"நன்றாகச் சொல்லியிருப்பேன். ஆனால் நானும் உங்களைப்போல ஒரு பெண் ஜன்மந்தான் என்ற அளவில் நிறுத்திக்கொண்டேன். இந்த ஒரு பகல் கழிவதே பெரிய பாரமாக இருக்கிறது."

"இன்னும் இதைவிடக் கடுமையான எத்தனையோ கஷ்டங்களுக்குத் தயாராக இருக்க வேண்டும் என்று முன்னமே சொன்னேன் அல்லவா? இப்பொழுதுதானே உணருகிறீர்கள்?"

அவள் இதற்கு ஒரு பதிலும் கொடுக்காமலே மௌனமாக இருந்தாள். அவனே தான் கொண்டு வந்தவைகளை அவிழ்த்து அவளுக்கு முன்பாக வைத்துவிட்டு, "இனி யோசிப்பதால் ஒரு பிரயோசனமும் வரப்போகிறதில்லை. பெரிய புண்ணிலே காற்றுப்பட்டாலும் வலி உண்டாவது சகஜம். சாப்பிடுங்கள்" என்றான்.

"இவைகளைப்பற்றி யோசிக்கவோ கவலைப் படவோ நான் தயாராக இல்லை. ஆனால் நான் ஓடிய சம்பவம் எப்படியோ நாளைக்குத் தெரியவே செய்

யும். இதில் உங்களுடைய பெயரும் அநியாயமாக அடிபடப் போகிறதே என்றுதான் அஞ்சுகிறேன். எனக்காக நீங்களும் அவமானத்தைக் கட்டிக்கொள்ளவேண்டிய அவசியம் என்ன?''

''எனக்கு அவமானம் வந்து விடுமென்ரு? நன்ருக வரட்டும்! நானே ஒரு நாடோடி; நிலை இல்லாதவன். இதுவரை என்னை யாருமே ஒரு பெரிய மனுஷன் என்று எண்ணியிருக்கவும் இல்லை.''

''ஆனலும் நான் கவலைப்படாமல் இருக்க முடியாது.''

''சில வேளை இந்த அவமானத்தை ஏற்றுக் கொள்ளுவதால் நான் சந்தோஷப்படவும் கூடும் அல்லவா?''

அவள் தலையை நிமிர்த்தி வேங்கடேசனை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டுச் சாப்பிடத் தொடங்கினள். அந்தப் பார்வையின் அர்த்தம் தன்னுடைய நெஞ்சில் எழுதப்பட்டதுபோலவே க்ஷணத்துள் அவனுக்குப் புரிந்துவிட்டது. ஒரு வேளை அதை அழிக்க முடியாதோ என்றுகூடப் பயந்தான். இந்த நினைப்பிலேயே அவள் சாப்பிடும்வரை இருந்தவன் பிறகுதான் இதைக் கேட்டான்:

''எந்தக் காரணத்தால் வைரமேறி இவ்வளவு தூரம் வாழ்க்கையின் திசையையே மாற்ற எண்ணினீர்கள்? அதை நானும் அறியலாமா?''

''நன்ருக அறியலாம். ஆனல் அந்தக் காரணம் உங்களுக்குச் சாதாரணமாகவும் தெரியக்கூடும். முதலில் என்னைப்போன்ற ஓர் இளம்விதவையின் வாழ்வில் இப்படியான அதிசயங்கள் நிகழுவதில் ஓர் ஆச்சரியமும் இல்லை என்பதை உணருகிறீர்களா?''

அவன் பேச்சின்றி இருந்தான். மீண்டும் அவளே சொல்லிக்கொண்டு போனள்: ''வாழ்க்கையில் சுகம், சந்தோஷம், திருப்தி என்ற ஒன்றையுமே அறியாத ஒருத்தியைச் சந்தேகமுள்ள கண்களாற் பார்க்கும்போது அவள் இவற்றை எல்லாம் அடைவதற்காகப் பிரயத்தனப்படுகிருள் என்றே தெரியும். அதற்கு ஏற்றபடி அவள் இருந்த அணைசாரில்லாத வீட்டில் அவளுக்காக ஒருவன் அநுதாபம் காட்டினல் மேலும் நெருப்புப் பற்றிவிடாதா? அந்தத் தூர்ப்பாக்கியம் படைத்தவள் அழகுள்ளவளாகவும், இளமையின் ஜீவகளை அழியாதவளாகவும் இருந்தது இந்த நெருப்புக்குத் தூபமிட்டது போல ஆயிற்று.''

''நான்தான் வாழக் கொடுத்து வைக்காதவள். என்னல் இன்னும் ஒருத்தி நெஞ்செரிந்து என்னையும் திட்டிக்கொண்டு ஏன் கஷ்டப்பட வேண்டும்? எப்படியோ நெருப்பும் பற்றிக்கொண்டது. நானே அதை அணைத்துவிடலாம் என்று விரும்புவது ஜ்வாலையில் நெய்யை ஊற்றி மேலும் கொழுந்துவிட்டு எரியச்செய்வது போலவே முடியும். முதலிலேயே ஆதரவற்றவளான இந்தப் பாவி பிறகும் இருக்க முடியுமா? எங்கேயாவது ஓடிப் போய்ச் செத்துவிடவேண்டும் என்றுகூட நான் எண்ணியது உண்டு. அதற்குரிய தைரியம் இல்லாத என்னைப் போன்ற ஒவ்வொரு பெண்ணும் 'மானமற்றவள்' என்ற பெயரை வாங்கியே ஆகவேண்டும். அப்படித்தானே?''

இவ்வளவையும் சொல்லி முடித்துவிட்டு அவள் ஒரு நீண்ட மூச்சு விட்டாள். அவனே தலை குனிந்தபடி அசையாமல் உட்கார்ந்திருந்தான். அதைப் பார்த்துவிட்டு, ''நான் தவறுதான் செய்துவிட்டேன் என்று எண்ணுகிறீர்களா?'' என்று அவள் கேட்டாள்.

''இதில் தவறு, இல்லை என்ற முடிவுக்கு வர வேண்டிய உரிமை உங்களுடையது. ஆனலும் யோசிக்காமல் இருந்துவிட முடியவில்லை. எப்படியோ எல்லாம் நடந்தது நடந்தாகிவிட்டது.

''மங்கிய விளக்கொளியிலும் அவள் முகத்தில் இருந்த அமிருத சுகம் நன்ருகத் தெரிந்தது.''

மேலே இனிச் செய்ய வேண்டியவைகளைப்பற்றியும் யோசிக்க வேண்டியிருக்கிறதே.''

''அதைப்பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். ஆனால் விதி தள்ளிவிடத்தான் வெளியே காலை வைத்தேன் என்றாலும் எனக்காகவும் சிந்திக்கிற ஒரு மனிதனை வழியிலே சந்தித்திருக்கிறேன் என்பதை உணரும்போது நடந்தவைகளையே மறந்துவிடுவேன் போல இருக்கிறது. புதிதாக முளைக்கிற இந்தப் பாசங்கூட என்னைப்போன்ற பாவிகளுக்கு அபத்துக்கு இடமானதே. எப்படியும் இன்றைக்கே கிளம்புகிறதென்று நிச்சயித்தாயிற்று. சமீபத்தில் என்னுடைய வாழ்வின் எல்லைக் கோடுமட்டும் கிழிக்கப்பட்டிருந்தால்? சில வேளை நடப்பது நடக்கட்டும் என்றும் எண்ணுகிறேன். இப்படி மனம் அடிக்கடி என் மாறுகிறது என்றும் தெரியவில்லை. உலகமே ஒரு தடுமாற்றந்தானே? இதில் சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது? எப்படியும் விதி கிழித்துவிட்ட கோட்டிலேயே தெரிந்த-தெரியாத எல்லா மனிதரும் ஓடுகிறார்கள். நான் மட்டும் இதற்கு விலக்காக முடியுமா?''

''விதி என்று எட்டாத அல்லது தேவை இல்லாத ஒன்றைப்பற்றி யோசிப்பதில் ஒரு லாபமும் வராது. யோசிக்கத்தான் வேண்டும் என்றாலும் நான் தடுக்கவில்லை. ஆனால் எப்பொழுதும் ஓர் இலக்கை வைத்துக்கொண்டுதான் ஓடவேண்டும். லக்ஷ்யமின்றி அதிலும் கண்ணை மூடிக்கொண்டு ஓர் அடியை எடுத்து வைத்தாலும் ஆபத்துக்களையே கூப்பிடுவதுபோல ஆகும்.''

''எனக்கு ஒன்றுமே தெரியாது. இதுவரைக்கும் எது வழி காட்டியதோ இனியும் அதுவே காட்டும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நீங்கள் என்னைப் பயப்படுத்துகிறீர்கள்.''

''இல்லை. உங்களுடைய வயசு, நிலைமை என்பவற்றை நினைத்தே இவ்வளவையும் சொன்னேன். விதவைகளுக்குரிய ஆசிரமமோ விடுதியோ ஒன்றிலே சேர்த்துவிட்டால்..''

''அப்படியானால் ஓர் ஏழையின் ஆத்மா உங்களைச் சதா வாழ்த்திக்கொண்டிருக்கும்.''

அவ்வளவில் தன்னுடைய எதிர்காலத்துக்கு ஒரு திட்டம் கிடைத்துவிட்டது என்றுதான் அவள் எண்ணியிருந்தாள். வேங்கடேசன் அவளை அங்கேயே இருக்கும்படி சொல்லிவிட்டுப் பிரயாணத்துக்குரிய ஏதோ ஆயத்தங்களைச் செய்வதற்காக வெளியே போனான்.

3

தற்செயலாகப் பதறி, தடுமாறினதாலேயே அவள் வேங்கடேசனைச் சந்தித்தாள் என்று சொல்லவேண்டும். அவளுடைய நிலைமைகளை அறிந்தும் எங்கேயாவது ஒரு விதவாசிரமத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடலாம் என்று நினைத்தானே தவிர, 'கட்டாயம் செய்யலாம்' என்ற நம்பிக்கையும் ஏற்படவில்லை. அவர்கள், 'சேர்த்துக்கொள்ளமாட்டோம்' என்று தள்ளிவிட்டால், வேறு வழி காட்டும் சக்தியும் அவனிடம் இல்லை. எப்படியும் அவனும் ஒரு நாடோடிதானே? அவனுடைய தினசரி வாழ்க்கையே நிதானமற்ற ஒரு தடுமாற்றத்தில் ஓடிக்கொண்டிருந்தது. சாப்பாடு, சீட்டாட்டம் என்ற எல்லாம் கடன் என்ற அஸ்திவாரத்திலேயே கட்டப்பட்டிருந்தன. தூங்குவதற்கும் கோயில், சத்திரம் முதலிய பொது இடங்கள் இலவசமாகக் கிடைத்தன. ஆனால் அவனும் பெரிய மனிதனாக வந்திருக்கலாம். அதற்குச் சாகசம், பொய், பித்தலாட்டம் என்ற லக்ஷணங்கள் இருக்கவேண்டுமே. இவற்றைப் பிறகுகூடச் சம்பாதித்திருந்தால் சிலவேளை வேறு நிலைக்கு வந்திருக்கலாம்.

வாழ்க்கைப் பாதையில் கொஞ்சதூரம் முன்னே சென்று பார்த்தால், 'அவன்தானா இந்த மனிதன்?' என்று அதிசயப்படவேண்டும். அந்த நாட்களிலே தானும் ஒரு மனுஷனாகிவிட வேண்டும் என்று இரவு பகலின்றிப் புஸ்தகங்களோடு போராடினான். அதைப் பார்த்துப் பொறாமையால் வாடிய முகங்கள் எத்தனை? சாதுரியமான சாரதியின் கையில் அகப்பட்ட விமானம் போல அவனுடைய புத்தி வழி பிசகாமல் ஓடிக் கடைசி எல்லைகளையும் தாண்டிவிட்டது. ஆனால்? விதி காட்டிய வழி வேறு. அவனை எட்டிப் பார்க்கவும் முடியாமல் இருந்த எத்தனையோ மக்குப் பையன்கள் - இல்லை, அதிருஷ்டக்காரர்கள் - இன்று பெரிய பிரபுக்களாகிவிட்டார்கள். அவர்களைக் காணவேண்டும் என்றாலும் காவற்காரரை மன்றாட வேண்டியிருக்கிறது. கடைசி, அந்தக் காவல் வேலையில் ஒன்றாவது அவனுக்குக் கிடைக்கக் கூடாதா? எல்லோருக்கும் அவன் இன்று அறிமுகம் இல்லாதவன்; உபயோகமற்றவன். சூதாடும்போது எவனாவது ஒரு போலீஸ்காரன் கண்ணில் அகப்பட்டிருந்தால் சிறையநுபவங்கூட அவனுக்கு ஏற்பட்டிருக்கக்கூடும். அந்த ஓர் அதிருஷ்டம் மட்டும் இதுவரைக்கும் இருந்துவிட்டது.

ஒரு காலத்தில் அவனும் 'வேலை, வேலை, வேலை' என்று தலையால் நடந்தது உண்டு. இதில் நாட்கள், மாசங்கள், வருஷங்கள் என்று கழிந்த காலம் இன்பம் அநுபவிப்பதற்கு உரிய அவனது இளமையின் பெரும்பகுதி என்றே சொல்லலாம். கடைசியில் மனம் சோர்ந்து இனி அலைவதே இல்லை என்று முடிவு செய்திருந்தபோது ஓர் உபாத்தியாயர் வேலை கிடைத்தது. இந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு உடைந்துபோன தன் வாழ்வையே ஓட்டிவிடலாம் என்றுகூட எண்ணினான். ஆனால்? எதிர்கால உலகத்தின் ஜீவநாடியை அறுத்துவிடுவதற்காகவே துணிந்து நிற்கும் அந்த உபாத்தியாயர்களின் நடுவில் ஒரு நிமிஷங்கூட நிலைத்து நிற்க அவனால் முடியவில்லை. திக்

கிடங்கில் தவறி விழுந்தவன் போல வெளியே ஓடி வந்துதான் ஆறுதலாக மூச்சு விட்டான். இந்த ஞாபகம் அவனுடைய மனத்தின் அடியில் இன்றைக்கும் அழிக்க முடியாமல் எழுதப்பட்டிருக்கிறது.

பிறகு, 'வேலை கிடைக்காமல் விட்டதே நல்லது; இனி ஒன்றுமே எனக்கு வேண்டாம்' என்று தனக்குள்ளேயே திடமாக நினைத்துக்கொண்டிருந்தான். இந்த நிலையிலும் அவனுக்கு வேண்டிய ஒரு கூட்டத்தவர்கள் இருந்தார்கள். அவர்களுக்கும் வீடு, வாசல், மனைவி, மக்கள் என்ற ஒன்றுமே இல்லை. மேலான இந்த உலகம் அவர்களையே தங்கள் பரமசத்துருக்கள் என்று எண்ணிக்கொண்டு ஒதுக்கித் தள்ளுகிறது. தன்னிடத்திலேயே நம்பிக்கை இல்லாத ஒவ்வொரு பெரிய மனிதனும் வேலையற்ற இந்த நாடோடிகளைக் காணும்போதெல்லாம் தங்கள் மடியோடு சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும் இரும்புப் பெட்டிகளின் சாவிகளைத் தொட்டுப் பார்ப்பதிலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. வாழ்க்கை என்னும் பெரிய சூதில் சாதுரியமாக ஆடி, பிரமாதமான வெற்றிகளை ஈட்டியதால் பெரியவர்களான ஒரு கூட்டத்தவர்களின் கண்மறைவிலே அவர்களும் சூதாடித்தான் வாழ்க்கையை இழுத்துக்கொண்டு போனார்கள் என்று சொல்ல வேண்டும்.

இன்று திசை தெரியாத ஏதோ ஓர் இடத்தை நோக்கிப் பறந்துகொண்டிருந்த அந்த ஏழைப் பக்ஷி அகஸ்மாத்தாகவே அவன் கையில் வந்து விழுந்தது. இவ்வளவில் அவளை ஓர் அதிருஷ்டக்காரி என்றுகூடச் சொல்லலாம். இந்தக் காலத்து ஒரு பெரிய மனிதனிடம் சிக்கியிருந்தால் அவளுடைய வாழ்வே இதற்குள் வேறு விதமாக முடிந்திருக்கவும் கூடும். அந்த மனிதனின் விலை முற்றுக இவ்வளவுதான் என்பதை அறியாத போதும் பயமின்றி அமைதியாக அவள் இருந்தாள் எனலாம்.

4

பொழுது அஸ்தமித்தபிறகே அவர்கள் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார்கள். கொஞ்ச தூரம் வரைக்கும் அவர்களுக்குள் மௌனம் நிலவியிருந்தது. பிறகு, "நீங்கள் சொன்ன அந்த விதவைகளின் ஆசிரமத்திலே வாழ்வதால் எனக்கு ஆறுதல் ஏற்படுமோ என்ற சந்தேகம் வர வர வளருகிறது" என்று அவள் சொன்னாள். உடனே வேங்கடேசன் நின்று அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, "என் அப்படி நினைக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"தெளிவான காரணம் இல்லாவிட்டாலும் மனம் தடுமாறுகிறதே!"

"பைத்தியக்காரத்தனமாக ஒன்றையும் முடிவு செய்யக்கூடாது."

மேலே அவர்கள் நடக்கத் தொடங்கினார்கள். "எங்கேயாவது வேலை செய்தாகிலும் சுதந்தரமாய் வாழலாகாதா?" என்று கேட்க நினைத்தவள் வாயை மூடிக்கொண்டே பின் தொடர்ந்தாள். ஸ்டேஷனுக்கு வந்ததும், "டிக்கெட் எடுக்கவேண்டியதுதானே?" என்று வேங்கடேசன் கேட்டான்.

"எனக்கு அவசியமென்று தோன்றவில்லை. கையில் இருக்கிற பணமே அதற்குப் போதாதென்று எண்ணுகிறேன். அப்படித்தானே?"

"நான் மட்டும் தனியாகப் போனால் பாதகமில்லை. நீங்களும் வருகிறபொழுது..."

"அதற்காக என்ன செய்யலாம்? சும்மா ஏறுவோம். பிறகு நடப்பதைக் கண்டுகொள்ளவேண்டியதுதான்."

"சில சமயங்களில் என்னைவிடப் பல மடங்கு தைரியத்தோடு துணிந்து நிற்கிறீர்களே."

பேசிக்கொண்டே பிளாட்பாரத்தின் ஒரு மூலைக்குப் போய் ஒதுங்கி நின்றார்கள். வண்டி வந்ததும் சேர்ந்தாற்போலவே ஏறி உட்கார்ந்துவிட்டார்கள். இரண்டொரு ஸ்டேஷன்களைக் கடப்பதற்குள் அவன் தூங்கிவிட்டான். இடையில் ஒரு சமயம் விழித்துப் பார்த்தபோது அவள் எதிரிலே ஒரு டிக்கெட் பரிசோதகர் நின்று, "அம்மா, நீ ஓர் இளம்பெண். பார்த்தால் பெரிய இடத்தைச் சேர்ந்தவள் போலவும் காணப்படுகிறாய். இப்படிப் பிரயாணம் செய்வது உனக்குத்தான் அழகல்ல" என்று பெருந்தன்மையாகவே சொல்லிக்கொண்டு நின்றார். வேங்கடேசன் பேசாமலே மறுபடியும் கண்ணை மூடிக்கொண்டு கிடந்தான். பிறகு அந்த உத்தியோகஸ்தர் அவன் பக்கமாகத் திரும்பி, "டிக்கெட்" என்று தட்டி எழுப்பினார், அவனும் உடனே எழுந்து நின்று, "என்னிடம் இல்லை ஸார்" என்று இழுத்தான். அவளிடம் காண்பித்த தாக்ஷிண்யம் வேங்கடேசன் விஷயத்தில் மருந்துக்குக்கூடக் கிடைக்கவில்லை. அடுத்த நிமிஷமே அவன் வெளியே தள்ளப்பட்டான். ஆனால் அவனைத் தொடர்ந்து கீழே இறங்கிய அந்தப் பெண்ணைப் பார்த்ததும், "என் இப்படி இரக்கம் இல்லாமல் நடந்துகொண்டேன்?" என்று கவலையடைந்தவர்போல அந்த உத்தியோகஸ்தர் ஒரே பார்வையாக அவர்களைப் பார்த்துக்கொண்டே நின்றார்.

பிளாட்பாரத்தை விட்டு வெளியே வந்ததும், "பார்த்தீர்களா, இந்த ஒரு விஷயத்திலேயே உலகத்தைப் படித்துக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. நியாயமின்றியே மனிதன் ஒருவருக்கு உதவி செய்ய நினைக்கிறான். அப்படியே மற்றொருவருக்கு உதையும் கிடைக்கிறது. இதில் மதிப்புக்கு நீங்களும் அவமதிப்புக்கு நானும் இலக்கானதில் ஆறுதலடையக்கூடியதாயிற்று" என்று வேங்கடேசன் அவளைப் பார்த்துச் சொன்னான்.

"எனக்குக் கிடைத்ததில் பாதியை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். உங்களுக்குக் கிடைத்ததில் பாதி எனக்கு வரட்டும். நமக்குள் வித்தியாசம் இல்லாமல் இருக்கும்."

அவன் திரும்பி நின்று பார்த்தான். ஸ்டேஷனின் மங்கிய விளக்கொளியிலும் அவள் முகத்தில் இருந்த ஒரு வித அமிருதசுகம் நன்றாகத் தெரிந்தது. சிறிது நேரம்வரை அவனால் வேறொன்றையும் நினைக்க முடியவில்லை. அப்படியே நின்றுவிட்டான். அப்பொழுது, "வீணாக நேரத்தைப் போக்கிக்கொண்டு நிற்க இது சமயம் அல்ல. எங்கே நிற்கிறோம் என்பதுகூடத் தெரியவில்லையே" என்று அவள் சொன்னாள். உடனே வேங்கடேசன் விழித்துக்கொண்டவன்போல, எல்லாப் பக்கத்தையும் பார்த்துவிட்டு, "நன்றாகத் தெரியாவிட்டாலும் பழக்கம் இருக்கிறது" என்றான்.

"தங்குவதற்கு இப்போது இடம் அகப்படுமா?"

"நம்மைப் போன்றவர்களுக்கென்றே முன்னுள்ள புண்ணியவான்கள் கோயில்களைக் கட்டி வைத்திருக்கிறார்கள். சமீபத்தில் ஒன்று இருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன்."

"வழி தெரியவேண்டுமே."

"பழைய ஞாபகத்தை வைத்துக்கொண்டு போகிறேன். கொஞ்சம் அலைந்தபிறகாவது அகப்படாதா?"

இதைச் சொல்லிவிட்டு அவன் முன்னே வழி பிடித்துக்கொண்டு நடந்தான். அவனுடைய ஞாபகங்களையும் அழிக்க முயல்வது போல இருள் எங்கும் பரந்து கிடந்தது. அதைப் பார்த்ததும், "உங்களுக்குப் பேய்பிசாசுகளுக்குப் பயம் இல்லையா?" என்று அவளைக் கேட்டான்.

"இப்பொழுது என் இந்த நினைவு வந்தது? ஒருவேளை உங்களுக்குப் பயமாக இருக்கிறதா? வெட்கப்படாமல் சொல்லுங்கள்."

"இல்லை; நான் சிறுவனாக இருந்த காலத்தில் இருளைப் பார்க்கவே மாட்டேன். எங்கேயாவது தூரத்தில் மங்கலாக ஒரு மரம் தெரிந்தாலும் பயந்து கண்களை மூடிக்கொள்வதுண்டு. இப்பொழுது அதை நினைத்தால் வேடிக்கையாகவே தெரிகிறது. மனிதனுடைய மனநிலை காலத்துக்குக் காலம் எப்படி எல்லாம் மாறிவிடுகிறது? என், வாழ்க்கைகூட அப்படித்தானே?"

"வாஸ்தவந்தான். எங்களுடைய வாழ்க்கையையே பாருங்கள். இரண்டுநாளைக்கு முன் நீங்கள் யார்? நான் யார்? நேற்று எங்கே இருந்தோம்? புறப்படும்போது இருந்த எண்ணம் எங்கே? இப்பொழுது நிற்கிற இடந்தான் எது? நாளைக்கு எப்படியாகிறதோ யாருக்குத் தெரியும்? இதுதான் வாழ்க்கை."

பேச்சில் வழியின் நீளங்கூட அவர்களுக்குத் தெரியவில்லை. எதிரிலே கோபுரத்தைக் கண்டதும், "நம்முடைய லக்ஷ்யம் கிட்டிவிட்டது என்பதைச் சொல்லுவது போல அதோ கோபுரம் தெரிகிறதே" என்று வேங்கடேசன் அவளுக்குக் காட்டினான். அதைப் பார்த்ததும், "பகவானே! இன்னும் என்ன எண்ணியிருக்கிறாயோ?" என்று சொல்லிவிட்டு அவள் நீண்ட ஒரு மூச்சு விட்டாள்.

"பகவானைவிட இந்தக் காலத்து மனிதனுக்கு அதிக சக்தி இருக்கிறது என்பதை இன்னமும் நீங்கள் தெரிந்துகொள்ளவில்லை என்றே தெரிகிறது. பகவானே! பகவானே!! என்று ஆயிரம் தடவை சத்தம் போட்டாலும் கிடைக்காத பலன், யசமானே என்று ஒரு மனிதனைக் கூப்பிடுவதற்குள்ளாகவே கிடைத்துவிடுகிறது. ஆனபடியால் இப்படி வீணாகக் கத்தித் தொண்டையைக் கிழித்துக்கொள்ள வேண்டாம் என்றே சொல்ல விரும்புகிறேன்."

"தயவு செய்து இந்த விஷயத்தில் மட்டும் நீங்கள் தலையிடக்கூடாது. மறுபடியும் தொடங்கினீர்களோ, என்னால் பொறுக்க முடியாது."

"பொறுமையை இழந்தால் எப்படி இருப்பீர்கள் என்று பார்க்க ஆசையாகத்தான் இருக்கிறது. ஆனால் அடியேன் உத்தரவுக்குக் கட்டுப்பட்டவனாயிற்றே."

உடனே இரண்டு பேருமே சேர்ந்து சிரித்தார்கள்.

அவர்கள் கோயிலை அடைந்தபோது கதவு பூட்டப்பட்டிருந்தது. அதனால், "வெளியிலேயே படுக்க வேண்டியதாயிற்று" என்று அவளுக்கு வேங்கடேசன் சொன்னான்.

"நீங்கள் இடையில் எழுந்து ஓடிவிடமாட்டீர்களே? நாடோடிகளைத்தான் எப்படி நம்புவது?"

"முற்றும் உண்மைதான். ஆனால் உங்களைச் சந்தித்தபிறகு என் சுதந்தரம் பறிபோயிற்று என்றே நினைக்கிறேன்."

"அவ்வளவு சக்தி என்னிடம் இருக்கிறதென்று எண்ணுகிறீர்களா?"

"இல்லாமலா இவ்வளவு தூரம் இழுபடுகிறேன்?"

"அப்படியானால் இப்பொழுதே போய்விடுங்களேன். இந்த அவப்பெயரையும் எதற்காக நான் கட்டிக்கொள்ள வேண்டும்?"

"அதற்குப் பிரயத்தனப்பட்டும் வாய்க்கவில்லை. முடியுமானால் நீங்களே என்னைத் துரத்திவிடுங்கள்."

"இனியும் பேசிக்கொண்டிருக்க முடியாது. எனக்குத் தூக்கம் வருகிறது."

"யாராவது தூங்கவேண்டாம் என்று தடுத்தார்களா?"

"நீங்கள் தாம் விடாமற் பேசுகிறீர்களே?"

"அப்படி என்னைப் பேசச் செய்கிறது யாரென்று கொஞ்சம் யோசித்துப் பார்க்கிறது தானே?"

அவள் சரிந்து படுக்கப் பிரயத்தனப்பட்டாள். அதைக் கவனித்ததும் அவன் தனது அங்கவஸ்திரத்தை எடுத்து, "இதைக் கீழே விரித்துக்கொண்டு படுங்கள்" என்று கொடுத்துவிட்டுத் தானும் ஒரு புறத்திலே படுத்துக்கொண்டான். சிறிது நேரம் சென்றபிறகு, "தூங்கிவிட்டீர்களா?" என்று மெல்லக் கேட்டுப் பார்த்தான். உடனே "ஆம்" என்ற அவளது குரல் கொஞ்சம் உரத்துக் கேட்டது.

"மறுபடியும் தொடங்குகிறானே என்று கோபமா?"

"இல்லை, சொல்லுங்கள்."

"இவ்வளவு தூரம் வந்துவிட்டோமே! இன்னும் உங்களுடைய பெயரைத் தெரிந்துகொள்ளாமல் இருப்பது ஒரு பெரிய குற்றமாகாதா?"

"நானும் அப்படித்தானே இருக்கிறேன்? முதலில் நீங்களே சொல்லிவிடுங்கள்."

"பத்துத் தடவை வேண்டுமானாலும் சொல்லுகிறேனே. 'வேங்கடேசன்' என்றால் இந்தக் கால நாகரிகத்துக்கு ஏற்றபடி இருக்கிறதா? அது எப்படியாவது கிடக்கிறது. உங்களுக்கு?"

"கட்டாயம் சொல்லத்தான் வேண்டுமா? 'கண்ணம்மா.' இது நாசமாய்ப் போன நாகரிகத்துக்கு ஏற்றபடி இருக்கிறதாக்கும்!"

"நாகரிகத்திலே உங்களுக்கு இத்தனை கோபம் ஏனோ?"

"நாளைக்கு அதைப் பற்றிச் சொல்லுகிறேன். இப்பொழுது தூங்கவிடுங்கள். ஆனால் கொஞ்சநேரம் பொறுத்து எழுப்பாமல் இருக்கவேண்டுமே என்று இப்பொழுதே பிரார்த்திக்கிறேன்."

"பாருங்கள், இனி மூச்சுக்கூட விடப்போவதில்லை."

சிறிது நேரத்தில் நிம்மதியாக அவர்கள் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

5

மறுநாள் அவன் அதிகாலையிலேயே எழுந்து பார்த்தபோது அவளைக் காணவில்லை. அதனால், 'இதற்குள் எழுந்து எங்கே போயிருக்கக்கூடும்?' என்று யோசித்துக்கொண்டிருக்க வேண்டியதாயிற்று. அப்பொழுது ஒரு பால்யசந்நியாசினி போல அந்தக் கோயிலினுள்ளேயிருந்து அவள் வந்து நின்றாள். அந்தக் கோலத்தைக் கண்டதும் வேங்கடேசன் சிரித்துவிட்டான். "இங்கே வந்ததில் பெரிய நஷ்டமும் வந்துவிடும் போல இருக்கிறதே?" என்று ஒரு மாதிரிச் சொன்னான். உடனே, "என் அப்படிச் சொன்னீர்கள்?" என்று கேட்காமல் இருக்க அவளாலும் முடியவில்லை.

"யாராக இருந்தாலும் ஒரு புத்திசாலி தெய்வத்தினுடைய பெயரைச் சொல்லிக்கொண்டு காலத்தை அவமாக்க நினைத்தால் அது நஷ்டமாகாதா?"

"ராத்திரித்தானே இதைப்பற்றிப் பேசுவதில்லை என்று சொன்னீர்கள்? அதற்குள் இத்தனை மறதியா?"

"ஆனாலும் மனம் கேட்கிறதில்லையே!"

"மறுபடியும் சொல்லுகிறேன்: இந்த விஷயங்களில் ஒரு நாளும் குறுக்கே நீங்கள் வரக்கூடாது."

"இதோ உத்தரவுப்படி வாயை வேண்டுமானாலும் பொத்திக்கொள்ளுகிறேனே. இனி நடக்க வேண்டியதற்குச் சந்நிதானத்தின் கட்டளையை இது எதிர்பார்த்திருக்கிறது."

"ஐயோ! உங்களுடைய பேச்சையாராவது கேட்டாலும் சிரிக்கப் போகிறார்களே. இந்த வேடிக்கைகளை நிறுத்திவிட்டுக் கையிலே இருக்கிற பணம் எவ்வளவென்று சொல்லுங்கள்."

"இரண்டு மூன்று நாட்களுக்குப் போதுமென்று நினைக்கிறேன்."

"ஒரு நாளைக்கு ஒரு தரம் மட்டும் சாப்பிடுவதானால்?"

"எட்டுப் பத்து நாட்களைக் கழித்துவிட முடியும்."

"அப்படியானால் மத்தியான்னத்தில் ஒரு நேரமாகவே சாப்பிடுவோம். அதோடு மலிவாகக் கிடைக்கக்கூடிய இடத்தையும் கண்டுபிடித்துவிட்டால் மேலும் இரண்டொரு நாளைக்குக் கவலை இல்லை."

"வெகு முன்ஜாக்கிரதையாக நடந்துகொள்ளுகிறீர்களே. ஆனால் பணம் முடிந்த பிறகு என்ன செய்வதென்று.."

மென்மேல்

"மெம்மேலே இப்படிக் கஷ்டம் வந்தன்னா என்ன செய்யறது?" என்று அங்கலாய்க்கிறாள் பாட்டி. 'மெம்மேலே' என்ற கொச்சை வார்த்தை 'மேன்மேலே' என்பதன் மாறுபட்ட உருவம். மேல் என்ற சொல் இரண்டு தடவை வந்து அப்படி ஆகிறது. சிலர் எழுத்தில் 'மென்மேல்' என்று எழுதுகிறார்கள். பேசுவதைப் போலவே எழுதும் சம்பாஷணையில் 'மெம்மேல்' என்றோ 'மென்மேல்' என்றோ எழுதலாம். ஆனால் இலக்கணக் குற்றம் இல்லாத பாஷைக்கு இடையே 'மென்மேல்' என்று எழுதுவது பிழை. மெல் என்ற சொல்லும் மேல் என்ற சொல்லும் சேர்ந்த அர்த்தம் இல்லாத தொடர் அது. மெல்ல மெல்ல என்ற பொருள் வேண்டுமானால் 'மென்மெல' என்று சொல்ல வேண்டும். மேலும் மேலும் என்ற அர்த்தம் வேண்டுமானால் 'மேன்மேல்' என்று எழுதுவதுதான் முறை.

"அதற்குள் கடவுள் ஒரு வழி காட்டுவார்."

"ஆமாம், காட்டுவார். நன்றாகவே காட்டுவார். இத்தனை காலமும் காட்டினாரே, அது போலத் தானே?"

"ஐயோ! பேசாமல் இருக்கமாட்டீர்களா? தெய்வமென்றாலே உங்களுக்கு இத்தனை கசப்பாக இருக்கிறது."

"திரும்பத் திரும்ப நீங்களும் தொடங்க எனக்கும் வாய் கேட்கிறதில்லை. உண்மையாக நான் இனி இதில் குறுக்கிடவில்லை."

அவ்வளவில் எழுந்து ஊரைச் சுற்றிப் பார்க்கச் சென்றார்கள். அன்று இரண்டுபேரது உள்ளத்திலும் ஏதோ ஓர் உற்சாகம் நிறைந்திருந்தது. நேரமானதும் சாப்பாட்டை முடித்துக்கொண்டு மறுபடியும் அதே கோயில்வாசலுக்கு வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது எதிரிலுள்ள ஒரு மைதானத்தில் ஆண்களும் பெண்களுமாகப் பெருந்தொகையான ஜனங்கள் கூடியிருந்தார்கள். விசாரித்துப் பார்த்ததில் ஏதோ கூலியாட்களின் கூட்டம் என்று தெரிந்தது. "நாமும் பார்க்கப் போவோமா?" என்று வேங்கடேசன் அவளைப் பார்த்துக் கேட்டான். அவளும் 'ஆம்' என்பது போலத் தலையை அசைத்துத் தன் சம்மதத்தையும் தெரியப்படுத்தினாள்.

"சில வேளை நானும் பேசுவேன்."

"ராத்திரி டிக்கெட் இல்லாமல் வந்ததற்கு வண்டியை விட்டுத் தள்ளிவிட்டார்கள் என்பதைப்பற்றியா பேசப் போகிறீர்கள்? ஒருவேளை ஏதாவது பைத்தியந்தான் தொடங்கியிருக்கிறதாக்கும்!"

அவன் இந்த வார்த்தைகளைக் கவனித்ததாகத் தெரியவில்லை. நேராக ஆக மிகுந்த உற்சாகத்தோடு காணப்பட்டான். சரியான பொழுதில் கூட்டமும் ஆரம்பமாயிற்று. முதலில் பெரிய கரகோஷத்தினிடையே தலைவர் எழுந்து தம்முடைய முதற் பேச்சை முடித்துவிட்டு உட்கார்ந்தார். பிறகும் சிலர் பேசினார்கள். கடைசியில் திடீரென்று வேங்கடேசன் மேடையிலே காட்சி கொடுத்தான். அவனை யாரென்று தெரியாத பக்ஷத்திலும் ஒவ்வொரு பேச்சாளரையும் உற்சாகப் படுத்துவதுபோல ஜனங்கள் கரகோஷம் செய்தார்கள். ஆனால் அவனுடைய தோற்றமும் உடையும் எல்லோரையும் ஒரு மாதிரிக் கவனிக்காமலே இருக்கச் செய்தன. அவன் பேசத் தொடங்கி இரண்டு மூன்று நிமிஷங்களே கழிந்திருக்கும். அதற்குள் அதுவரையும் இல்லாத துடிப்பும் கலகலப்பும் ஜனங்களிடம் முளைத்தெழுந்துவிட்டன. வரவர அவர்கள் தங்கள் நிலைமைகளையே மறந்து ஆவேசமடைந்து ஆரவாரம் செய்யவும் முனைந்துவிட்டார்கள். அவனுடைய பேச்சும் அதற்கு ஏற்றபடி உயிருள்ள மாணிக்கங்களைப் போலவே உதிர்ந்துகொண்டிருந்தன.

இடையிலேதான் அவள் பெண்களின் நடுவில் மலர்ந்த முகத்தோடு இருப்பதைக் கண்டான். உடனே தன் உள்ளத்தில் பட்டிருந்த புண்களையெல்லாம் திறந்து காட்டுவதுபோலப் பேசத் தொடங்கினான். ரத்தத்தையும் கொதிக்கச் செய்யும் ஆவேசவெறி கலந்த அந்தப் பிரசங்கத்தின் உத்வேகம் எல்லாருடைய மனத்திலும் பாய்ந்தது. இப்படி அவன் கொஞ்ச நேரந்தான் பேச முடிந்தது. அதற்குள் புரட்சிக்காரன் என்ற குற்றத்தின் பேரில் அவனுடைய கைகளில் விலங்கு மாட்டப்பட்டாயிற்று. திடீரென்று எங்கும் நிச்சப்தம் சூழ்ந்து விட்டது. கண்ணீர் ஒழுகிய சிவந்த முகத்தோடு அவளும் அந்த மேடைக்கு ஓடி வந்த நிலை எல்லோர் இருதயங்களிலும் நெருப்பைக் கொட்டியது போலவே துடிப்பை உண்டுபண்ணிவிட்டது.

வேங்கடேசன் விலங்கினால் கட்டுண்ட தன் கைகளை உயர்த்திச் சமூகத்தின் ஆசிர்வாதம் வேண்டும் என்பதுபோல வணங்கிவிட்டு, மடியில் இருந்த பணத்தை அவிழ்த்து அவளிடம் கொடுத்தான். அவளுடைய முகத்தைப் பார்த்தபோது எதற்கும் அஞ்சாத அவனது நெஞ்சமும் கலங்கி விட்டது. அப்படியே பேச முடியாதவனாகி நின்றவன் இறங்கி, சேவகர்களின் முன்னால் நடந்தான்.

"அவர் சீக்கிரம் திரும்பிவிடுவார் அம்மா! அதுவரை எங்கள் உயிர் இருக்கும் இடத்தில் உனக்குச் சிம்மாசனமிட்டுக் காப்பாற்றி ஒப்படைப்போம்" என்று ஒரு குரல் வானத்தைத் தொட்டுக்கொண்டு காற்றிலே பரந்தது.

"எங்கள் மானத்தின் மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறோம், இது சத்தியம்!" என்றது ஒரு கடலின் பேரொலி.

எந்தன்

கவி இயற்றவேண்டும் என்ற ஆசை உடையவர்கள் சில அடிப்படையான தவறுகளைச் செய்கிறார்கள். "கந்தா வந்தே **எந்தன் குறை தீராய்**" என்று பாடுகிறார்கள். 'எந்தன்' என்ற வார்த்தையை இன்று பலர் செய்யுளில் உபயோகிக்கிறார்கள். என்னுடைய என்ற பொருளில் அச்சொல் வருகிறது. 'என் - தன்' என்ற இரண்டு வார்த்தைகள் சேர்ந்த அது '**என்றன்**' என்றுதான் வரும். 'எம் - தம்' என்று பன்மையாக இருந்தால் '**எந்தம்**' என்று வரும். இரண்டுங்கெட்டானாக 'எந்தன்' என்று வருவது எந்த இலக்கணத்திலும் சேராது.

எங்கள் தொழில்

ஓவர்சியர்



"இச்சி பெட்டினவாடுகு இஞ்சினீரிங் டிபார்ட்மெண்டு" என்ற பழமொழியைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அப்படிப் பட்ட இஞ்சினீரிங் டிபார்ட்மெண்டின் முதல் படியிலுள்ளவர்களே நாங்கள். நாட்டின் விருத்திக்கும், மக்களின் க்ஷேமத்திற்கும் உழைப்பதற்கென்றே ஏற்பட்டது எங்கள் தொழில். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதே எங்கள் மூல மந்திரம். அப்படிப் பணி செய்யுங்கால் "தேன் எடுத்தவன் புறங்கையை நக்குவது" போன்ற நடத்தையுள்ள ஒரு சிலராலேயே லஞ்சம் வாங்குவதில் போலீஸ், ரெவின்யூ இலாகாக்களுக்குச் சமமான ஸ்தானம் எங்கள் தொழிலுக்குக் கிடைத்துவிட்டது. ஆனாலும் பொது மக்களுக்கு நாங்கள் செய்யும் சேவை அளவிடற்கரியது.

பிரம்மாண்டமான மேட்டூர் அணையையும் அரண்மனைகளையும், நவநாகரிக வாஸஸ்தலங்களையும், உன்னதமான சாலைகளையும் பார்த்து வியந்து நிற்கும்பொழுது இப்படிப்பட்ட அரிய பெரிய காரியங்களைச் சாதித்த தொழிலாளிகளைப்பற்றி ஒரு கணமேனும் சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? லக்ஷக்கணக்கான தொழிலாளிகளின் உழைப்பின் பலன்தான் இவை என்பது உங்களுக்குத் தெரியுமா? அந்த லக்ஷக்கணக்கான தொழிலாளிகளின் சாமர்த்தியத்தையும் உழைப்பையும் சரியான வழிகளில் உபயோகித்து மக்களுக்கு க்ஷேமத்தையும் நாட்டிற்குப் பெருமையையும் உண்டாக்குவதே எங்கள் தொழில். தொழிலாளிகளின் சாமர்த்தியமும் பலமும் காட்டாற்று வெள்ளத்திற்கும் யானையின் பலத்திற்கும் ஒப்பானவை. இவைகளை ஜன சமூகத்தின் ஊழியத்திற்காக உபயோகிப்பவர்களே நாங்கள். பெரிய ஆறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டி, கால்வாய்களை வெட்டியும், பெரிய பள்ளத்தாக்குகளின் குறுக்கே அணைகளைப் போட்டு ஏரிகள் கட்டியும், புல் பூண்டுகூட முளைக்காதிருந்த நிலங்களைப் பொன் விளையும் நன்செய் நிலங்களாக்குவது எங்கள் மந்திரவாதந்தான். காடுகளிலும், மலைகளிலும், சமவெளிகளிலும் நல்ல சாலைகளை அமைத்து, பாலங்கள் கட்டி, நீண்ட கடினமான பிரயாணத்தைச் சௌகரியமாக்குவதும் எங்கள் செயலே. டவுன்களிலே நீங்கள் ஆனந்தமாக மோட்டாரில் போகும் போது ஆட்டல் அசக்கல் இல்லாதிருக்கும்படி தார் ரோடுகளும், காங்க்ரீட் ரோடுகளும் அமைத்துக் கொடுப்பதும் நாங்களே. நீங்கள் சுக ஜீவிகளாக வாழ்வதற்காகச் சாக்கடைகள் கட்டி நகரத்தின் அசுத்தத்தை அப்புறப்படுத்துவதும் நாங்களே. சோறு கிடைக்காவிட்டாலும் நல்ல தண்ணீராவது கிடைக்காதா என்று ஏங்குபவர்களுக்காக நீர் நிலையங்களை ஏற்படுத்துவதும் எங்கள் தொழிலே. உலகத்து மக்கள் வியந்து போற்றும்படி கலைத்திறனும் சிற்பத்திறனும் பலமும் நிறைந்த கட்டிடங்களை அமைப்பதும் எங்கள் திறனே. போர் முனையில் எல்லாத் துருப்புகளுக்கும் முன்னாலேயே போய், முதல் குண்டை ஏற்றுக் கொள்ளவும் தயங்காமல் துருப்புகள் துரிதமாகச் செல்வதற்கு ரோடுகளும், பாலங்களும், தங்குவதற்குக் 'காம்பு'களும் இதர வசதிகளும் செய்து கொடுப்பவர்கள் எம்மவர்களே.

சுருங்கச் சொல்லின், இயற்கையைக் கட்டுப்படுத்தி மனித சமூகத்தின் சேவைக்கு உபயோகிப்பதே எங்கள் முக்கியமான தொழில். பெரிய பெரிய சிற்பக்கலை நிபுணர்கள், எஞ்ஜினீரிங் சாஸ்திர மேதாவிகள் மனத்தில் உதித்து உருவாகும் கற்பனைகளைக் கண்கூடாகச் செய்து 'காட்டுபவர் நாங்களே.

எங்களில் பல திறப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இஞ்ஜினீரிங் கல்லூரியில் படிக்கும்போது விசுவேசுவரையாவாகவோ, முகர்ஜியாகவோ ஆகப் போகிறதாகக் கனவு காணும் பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை முதல் கல்லூரிப் படிப்பு இல்லாமலேயே வருஷக்கணக்காக மேஸ்திரியாக இருந்து அநுபவம் பெற்று யஜமானர்கள் தயவாலோ அல்லது நல்ல காலத்தினாலோ ப்ரமோஷன் பெற்றிருப்பவர் வரை எங்கள் தொழிலில் காணலாம். நாங்கள் இருக்கும் இடத்துக்குத் தக்கபடியும்; இலாகாவுக்குத் தக்கபடியும் பல திறப்பட்ட சேவை புரிகிறோம்.

அதோ, நகரத்து வீதிகளில் அரை நிஜார், ஸ்டாக்கிங்ஸ், பூட்ஸ், தொப்பி அணிந்து சைக்கிளில் போய்க்கொண்டிருப்பவர் தாம் முனிசிபல் ஓவர்சியர். இவர் இல்லாவிட்டால் சாக்கடையோ, குழாயோ, ரோடுகளோ, பார்க்குகளோ இல்லை. ஆகையால் உங்கள் கடைகளுக்கும் வீடுகளுக்கும் முன்னால் உள்ள "என்கிரோச்மெண்டு"

களை எடுக்க வரும்போது அவர்மீது கோபம் கொள்ளாதிர்கள்.

அரை நிஜாரும், தலையில் தொப்பியும், கோட்டும், காலில் செருப்பும் போட்டுக்கொண்டு பஸ்ஸில் முன் ஸீட்டில் இலவசமாகப் பிரயாணம் செய்கிறாரே, இவர் ஜில்லா போர்டு ஓவர்சியர். சாலைகளை ஒழுங்கான நிலைமையில் வைத்துப் பஸ்களும், மோட்டார்களும், வண்டிகளும் தங்குதடையின்றிப் போவதற்கு உதவி செய்யும் அவருக்குப் பஸ்ஸில் இலவசப் பிரயாணம் கிடைப்பது நியாயந்தானே?

சைக்கில் கட்டும், தலைப்பாகையும் அணிந்து வாய்க்கால் கரையில் போய்க் கொண்டிருக்கிறாரே, அவர்தாம் உணவுப் பஞ்சம் நம் நாட்டில் எட்டிப் பார்க்காமல் செய்துகொண்டிருக்கும் மந்திரவாதி. அவர் மனம் வைத்தால்தான் வாய்க்கால் தண்ணீர் நிலத்தில் பாய்ந்து நாளைக்கு நெல்லாக மிளிரும்.

கிராமச் சாவடியில் உட்கார்ந்துகொண்டு ஏரிகளுக்கும் கால்வாய்களுக்கும் குடிமராமத்துகளைச் சரிவரச் செய்யவில்லை என்று உங்களை மிரட்டிக்கொண்டிருக்கிறாரே, அவர்தாம் மைனர் இரிகேஷன் ஓவர்சியர். கடமையைச் செய்யவில்லை என்று எடுத்துச் சொல்லுவதற்காக அவர்மீது கோபம் கொள்வானேன்? அவர்தாம் வாய்க்கால் ஆறு முதலிய வசதிகள் இல்லாத இடங்களிலும் ஏரிகள் கட்டி நீங்கள் சிரகச்சம்பா அரிசி சாப்பிட உதவி செய்கிறார்.

இதோ, ஹரிஜனங்கள் வசிக்கும் சேரிகளுக்குக் கிணறுகள் வெட்டியும், இதர வசதிகள் அளித்துக்கொண்டும் இருக்கிறாரே, இவரும் ஓவர்சியர்தாம். சர்க்கார் சம்பளம் பெற்றாவது ஹரிஜனத் தொண்டு செய்யும் பாக்கியம் பெற்றவர் இவர். இவரும், குடி தண்ணீருக்காகக் கிணறு வெட்டும் வேலையில் ஈடுபட்டிருக்கும் அநேக ஓவர்சியர்களும், 'கலியுக பகீரதர்கள்' ஆவார்கள். புராண காலத்துப் பகீரதன் ஆகாசத்திலிருந்து கங்கையைக் கொண்டு போய்ப் பாதாளத்தில் இருந்த தன் தாயாதியரை உய்வித்தான். நாங்களோ பாதாளத்திலிருந்து கங்கையைக் கண்டுபிடித்து மக்களின் தாகதாபத்தைப் போக்குகிறோம்.

நாங்கள் இல்லாவிட்டால் உலகமே இல்லை, நாகரிகமே இல்லை எனலாம். எங்களில் சிலர் சந்தர்ப்ப விசேஷத்தாலோ வேறு காரணங்களாலோ உங்களிடம் "மாமூல்" எதிர்பார்த்தால் அவர்களை மன்னித்துவிடுங்கள். தலைமுறை தலைமுறையாக வந்த பழக்கத்தை மாற்றிக்கொள்வது எளிதல்ல. தங்களைத் திருத்திக்கொள்ள அவர்களுக்குச் சிறிது அவகாசம் கொடுங்கள்.

பாப்பாளி

ச. கு. கணபதி ஐயர்

பாப்பாளியில் கனப்பொருள், சாம்பல், காடிகள் (Acids), ப்ரோடீன் (Protein), சர்க்கரை, கொழுப்புப் பொருள் (Fat), நார் (Fiber) முதலிய பொருள்கள் இருக்கின்றன. இவை யாவும் மனிதனுடைய உடல் நலத்துக்கு அவசியமானவை.

சிறு குழந்தைகளுக்கு இப்பழத்தின் ரஸத்தில் ஒரு நெய்க்கரண்டியளவு நீருடன் கலந்து தருவதனால் அவர்களுக்குக் கட்டி ரோகம் வராது. ஏ.ஸி. (A and C) என்னும் உயிர்ச் சத்துக்களை உடையது இப்பழம். பாப்பாளிப் பாலினால் **பேபைன்** என்ற மருந்து செய்யப்படுகிறது. அது விலை உயர்ந்தது. டிஸ்பெப்ஸியா (Dyspepsia) என்ற நோய்க்கு இம்மருந்து பரம ஔஷதம்.

பழத்தில் இரண்டு வகை உண்டு. ஒன்று உருண்டை வடிவினது; மற்றொன்று நீண்டு உருண்டுள்ளது. பின்வகையே அதிக ருசியுள்ளது. பழத்தைக் குறுக்கில் அறுத்தால் உள்ளே சுமார் ஒன்றரை அங்குலத்திலிருந்து இரண்டு அங்குலம் கனம் வரையில் சதை படிந்திருக்கும். நடுவில் ஐந்துகோண வடிவமுள்ள காலி இடம் காணப்படும். இந்தக் காலி இடத்தை ஒட்டிச் சதையைப் பற்றிக்கொண்ட வண்ணம் சுற்றிலும் கறுப்பான விதைகள் காணப்படும். விதைகளை அலம்பி எடுத்து உலர்த்திக் காற்றுக்கு அடக்கமாக ஒரு சீசாவில் மூடிவைத்துவிட்டால் பல வருஷங்கள் கழிந்தாலும் அவை விதைக்க உதவும்.

60 பங்கு மணலும் 30 பங்கு களிமண்ணும் 9 பங்கு மக்கும் (Humas) 1 பங்கு சுண்ணாம்பும் கலந்துள்ள மண்ணே இந்தத் தாவரத்திற்கு ஏற்றதாகும். எந்த நிலமும் இயல்பாக மேற்கண்ட மாதிரி அமைந்ததாக இராது. பயிர் செய்வோர் நிலத்தின் தகுதியை இதன்படி மாற்ற வேண்டும். இதற்காக, மணல் நிலத்தில் களியையும் மக்கையும் சேர்க்கவேண்டும்; களி நிலத்துக்கு மற்ற மூன்றையும் அதன் அதன் வீதாசாரப்படி சேர்க்கவேண்டும். சரிவு நிலமாக இருப்பது இதன் வேளாண்மைக்கு மிகவும் நல்லது. மரத்தில் பழுத்த பெரியதும் நீட்சிரகத்தைச் சேர்ந்ததுமான பழத்தின் விதைகள் விதைப்புக்கு ஏற்றவை. 18 மாதத்திலிருந்து 25 மாத வளர்ச்சியுள்ள மரத்தின் விதைகளே சிலாக்யமானவை. விதைகள் நல்ல முறையில் பறிக்கப்பெற்று, காற்றும் ஈரமும் படாத இடத்தில் சேமித்து வைக்கப் பெறவேண்டும். விளைவு முறை, போஷணை முதலியவற்றை நன்கு அறிந்துகொண்டு பயிர் செய்தால்தான் நல்ல பயன் கிடைக்கும்.

ஆசிரியர் குறிப்பு

கு. ப. ரா. நிதி: கு. ப. ரா. வின் குடும்பப் பாதுகாப்பு நிதிக்கு இதுவரையில் ரூ. 2410-2-0 சேர்ந்திருக்கிறது. ஜனவரி மாதத்திற்குள் இந்த நிதியைப் பூர்த்தி செய்து உரியவர்களிடம் வழங்கி விடலாம் என்று அன்பர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகவே தயை செய்து நிதிக்கு அவரவர்கள் தங்கள் தங்களால் இயன்ற தொகையை விரைவில் அனுப்பி உதவும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இதுவரையில் வந்த தொகை :

	ரூ.	அ.
பெயர் விழையான் ..	251	0
ஸ்ரீ நாராயணஸ்வாமி ஐயர், கலைமகள் ஆசிரியர்	200	0
பொதிய இலக்கியக் கழகம், கொழும்பு.	115	0
ஸ்ரீமதி எம். எஸ். கமலா மூலம் ..	113	0
தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம், யாழ்ப்பாணம்	101	0
ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி, ஆசிரியர், கல்கி	100	0
ஸ்ரீ வி. ரா. ராஜகோபாலன், ஆசிரியர், கலாமோகினி	100	0
ஸ்ரீ எ. துரை ரத்னம் (வெள்ளவத்தை) மூலம்	100	0
ஸ்ரீ ரா. அ. பத்மநாபன் (டில்லி) மூலம்	100	0
ஸ்ரீ எ. எல். பழநிமலை (ஹிந்து கல்லூரி) மூலம்	75	0
ஸ்ரீ எ. குருஸ்வாமி, கொழும்பு ..	51	0
ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம், ஆசிரியர், 'தினசரி'	50	0
ஜூபிடர் பிக்சர்ஸ்	50	0
ஸ்ரீ ஈ. ஆர். கோவிந்தன், ஆசிரியர், 'ப்ரீ இந்தியா'	50	0
ஸ்ரீ புரொபஸர் கே. ஸ்வாமிநாதன் ..	50	0
ஸ்ரீ எ. கே. ராமசந்திரன், மாடர்ன் தியேடர்ஸ், சேலம் ..	50	0
ஸ்ரீ பி. எஸ், ராமையா ..	50	0
ஸ்ரீ க. முத்து ரெட்டியார் (கொழும்பு) மூலம் ..	40	0
பாரதி தமிழ்ச் சங்கம், கல்கத்தா ..	30	0
ஸ்ரீ டி. எஸ். சுப்பராவ் (மேட்டூர் கெமிகல்ஸ்) மூலம் ..	27	0
ஸ்ரீ கி. சந்திரசேகரன் ..	25	0
ஸ்ரீமதி எஸ். அம்புஜவல்லி அம்மாள் ..	25	0
ஸ்ரீ பி. டி. ஆஷர், திருப்பூர் ..	25	0
ஸ்ரீ ஆர். ஜகந்நாதன், டெல்லி ..	25	0
ஸ்ரீ எ. ராமையா, திருச்சி ..	25	0
ஸ்ரீ நித்ய சுகம் (வதுலை) மூலம் ..	21	8
ஸ்ரீ சண்முகசுந்தரம் (கோம்பை) மூலம்	20	0
ஸ்ரீ ஒய். ராமகிருஷ்ணன் ..	20	0
ஸ்ரீ பி. என். சிதம்பரம் (மதுல்கெலே) மூலம்	20	0
ஸ்ரீ எ. கே. சேகர், ஜெமினி ஸ்டுடியோஸ்	20	0
ஸ்ரீ ந. பிச்சமூர்த்தி	15	0
ஸ்ரீ அ. ஸ்ரீநிவாஸராகவன் ..	15	0
ஸ்ரீ பெ. கோ. சுந்தரராஜன் ..	15	0
ஸரஸ்வதி வாசகசாலை, பூனா ..	14	0
அன்பு நிலயம்	10	0
ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் ..	10	0
ஸ்ரீ பழ. சிதம்பரம்	10	0
ஸ்ரீ கே. பி. ராமஸ்வாமி ..	10	0
ஸ்ரீ சித. வெ. வெ. வைரவன் செட்டியார், புதுவயல்	10	0
ஸ்ரீ வி. எ. சேஷகிரி சாஸ்திரி, மயிலாப்பூர்	10	0
ஸ்ரீ வே. ரா. சுந்தரராமன் ..	10	0
ஸ்ரீ கே. பி. நாகராஜன், தஞ்சை ..	10	0
ஸ்ரீ எஸ். சுந்தரேசுவர பட்டர், சிவகங்கை	10	0
ஸ்ரீ வி. டி. ஸாமி, கௌஹாதி ..	10	0
ஸ்ரீ பி. ஆர். நாகராஜ்	10	0
ஸ்ரீ கே. ராமநாத், ஜெமினி ஸ்டுடியோஸ்	10	0
ஸ்ரீ எ. முத்துஸ்வாமி, ஜெமினி ஸ்டுடியோஸ்	10	0
ஸ்ரீ டி. ஜி. ஆர். ஆசார்யா, ,, ..	10	0
ஸ்ரீ கே. ஜே. மகாதேவன், ,, ..	10	0
ஸ்ரீ எம். எஸ். சுந்தரம், சிம்லா ..	10	0
ஸ்ரீ கே. ராமசந்திரன், கௌஹாதி ..	10	0
சார்லி அண்டு கம்பெனி ..	10	0
ரூபா 10க்குக் குறைவான தொகைகள்	241	10
மொத்தம் வரவு .. ரூ.	2,410	2

எழுத்தாளர் மகாநாடு: தமிழ் எழுத்தாளர் மகாநாடு கோயம்புத்தூரில் சென்ற மாதம் விமரிசையாகக் கூடியது. தமிழ் எழுத்தாளர்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டியது மிகவும் அவசியம். அரசியல் நிலை முதலிய காரணங்களுக்காக இந்த ஒற்றுமை காத்திருக்க வேண்டியதில்லை. மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ சொக்கலிங்கமும், திறப்பாளர் ஸ்ரீ வ. ரா. வும் உபயோகமான யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். கோயம்புத்தூர் நண்பர்களின் அன்பையும், இந்த மகாநாட்டை வெற்றிகரமாக நடத்திய சிறப்பையும் எல்லோரும் ஒருமுகமாகப் பாராட்டுகிறார்கள். எழுத்தாளர் சங்கம் இனி ஊக்கத்துடன் வேலை செய்து, தமிழ்நாட்டில் எற்பட்டுள்ள இலக்கிய விழிப்பை நல்ல பயன்படும் முறையில் உருவாக்க வேண்டும்.

இலக்கிய நண்பர் சங்கம்: சென்னை நகரத்திலுள்ள எழுத்தாளர்கள் தங்களுக்குள் அடிக்கடி பழகி இலக்கிய சம்பந்தமான சர்ச்சைகளையும் விமரிசனங்களையும் செய்வதற்கு அநுகூலமாக 'இலக்கிய நண்பர்கள் சங்கம்' என்ற சங்கத்தைக் கூட்டியிருக்கிறார்கள். காலஞ்சென்ற கு. ப. ரா. வின் ஞாபகார்த்தமாக, ஒவ்வொரு வருஷமும் தமிழ்நாட்டில் வெளியாகும் சிறுகதைகளில் சிறந்ததற்கு ரூ. 100 பரிசு அளிப்பதென்ற தீர்மானத்தை இச்சங்கம் செய்திருக்கிறது. கதைகளைத் தேர்ந்தெடுக்க ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். ஸ்ரீமான்கள் பி. எஸ். ராமையா, கி. சந்திரசேகரன், 'புதுமைப்பித்தன்', விசாலாட்சியம்மாள், ந. சிதம்பர சுப்பிரமணியன் ஆகியவர்கள் அக்குழுவின் அங்கத்தினர். இலக்கிய முயற்சியில் கலைத்திறமையும் லாபமும் அதிகமாகும் வழிகளை இச்சங்கம் உண்டாக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

எட்டையபுரம் பாரதி ஞாபகச் சின்ன நிதி: பாரதியார் ஜன்மஸ்தலத்தில் அவரது ஞாபக அறிகுறியாக ஒரு கட்டிடமும் புஸ்தகசாலையும் நிறுவும் பொருட்டு ஒரு நிதி திரட்டக் 'கல்கி' ஆசிரியர் ஆரம்பித்திருக்கும் முயற்சி மிகவும் உத்ஸாகத்துடன் வரவேற்கத் தக்கது. தமிழன் கலைப் பண்பும் தேசிய உணர்ச்சியும் நிரம்பியவன் என்பதைப் பாரதியார் நிலை நிறுத்தினார். அவரது ஞாபகச் சின்ன நிதிக்கு உதவுவதன் மூலம் நாம் அந்தப் பெருமையைக் காப்பாற்றிக்கொள்வோமாக! இந்தத் தொண்டை மேற்கொண்ட 'கல்கி' ஆசிரியரைத் தமிழர் யாவரும் பாராட்டுவார்கள் என்பதில் என்ன சந்தேகம்? இது வரையில் சற்றேறக்குறைய 10,000 ரூ. சேர்ந்திருக்கிறதென்று தெரிகிறது.

ஆசிரியர்.

ஆனந்த உலகம்

சுத்தானந்த பாரதியார்

ஏட்டில் எழுதியறி யாத—என்
எண்ணச் சிகரஒளி மீதே
பாட்டுப் பறவையுடன் வாழும்—ஒரு
பரமா னந்தஉல குண்டு.

* * *

சொல்லும் பொருளுமருள் கூடி—வந்த
சொக்கத் தங்கக்கவி போலே
அல்லும் பகலும்அதன் இயற்கை—தன்னில்
அழகின் அமுதரசம் ஊறும்.

* * *

அழுதும் சிரித்துந்தொழும் அடியார்—போல்
ஆழித் திரையெழுந்து, கரையில்
எழுதும் இலக்கியத்தைப் படிப்பேன்—உள்ளம்
இன்பம் இன்பமெனத் துடிக்கும்.

* * *

கசந்த பிறவியினி உண்டோ?—மனக்
கட்டும் கவலைகளும் உண்டோ?
வசந்தச் சிறகுகொண்டு பறப்பேன்—இன்ப
வானக் கனியைமண்ணில் உதிர்ப்பேன்!

* * *

காலச் சுருதியுடன் கூடி—ஒளி
கலந்த அருவியெனப் பாடி,
நீல மணிப்பந்தலின் கீழே—என்றும்
நிருத்தஞ் செய்வதென தின்பம்!

* * *

சீறும் புயலலைகள் மீதும்—ஒரு
சீத மதிநிலவு சிரிக்கும்!
மீறும் விசனமொன்றும் இல்லை—இது
வேதாந்த சித்தர்களின் வீடே!

உரைகல்

கலா க்ஷேத்திரத்தின் ஆதரவில் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் ஞாபகார்த்தமாக ஒரு புஸ்தகசாலை இருந்துவருவது பொது மக்களுக்குத் தெரியும். ஐயரவர்கள் சேமித்து வைத்திருந்த அரிய ஏட்டுச் சுவடிகள் அந்நூல் நிலயத்தில் உள்ளன. இதுகாறும் வெளிவராத பல நூல்கள் அவற்றில் இருக்கின்றன. இப்போது கலாக்ஷேத்திரத்தார் அவற்றை வெளியிடும் தொண்டைச் செய்யத்தொடங்கியிருக்கிறார்கள். **பரத சேனாபதீயம், நவநீதப் பாட்டியல்** என்னும் இரண்டு நூல்களை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இன்னும் தொடர்ந்து நூல்களை வெளியிட்டு வருவார்கள் என்று அறிகிறோம். கம்பராமாயணத்துக்கு ஐயரவர்கள் எழுதி வைத்துள்ள குறிப்புக்கள் தொகுக்கப் பெறுகின்றன என்றும், பாட பேதங்கள் சோதனை செய்யப்படுகின்றன என்றும் தெரியவருகிறது. கம்பராமாயணப் பதிப்பு நல்ல முறையில் அறிஞர்கள் பாராட்டும்படி வெளிவருவது மிகவும் அவசியம். கலா க்ஷேத்திரத்தார் அறிஞர்களுடைய கூட்டுறவுடன் தக்கபடி முயற்சி செய்து அத்தகைய பதிப்பொன்றை வெளியிட்டால் தமிழ்நாட்டாரின் பாராட்டுக்கு உரியவர்களாவார்கள்.

அடியார்க்குநல்லார் சிலப்பதிகார உரையில் மேற்கோளாக ஆளும் நூல்களுள் **பரத சேனாபதீயம்** என்பது ஒன்று. கலா க்ஷேத்திரத்தினர் வெளியிட்டுள்ள நூலின் பெயர் இன்னதென்பது நூலினால் தெரியவில்லை. பதிப்பாசிரியர், 'நூலின் பெயரைப் பற்றியாவது நூலாசிரியர் உரையாசிரியர்களைப் பற்றியாவது அறியத்தக்க குறிப்பொன்றும் இப்பகுதியில் இல்லை' என்று எழுதியிருக்கிறார். ஐயரவர்கள் ஏட்டுச் சுவடியின் மேல் 'பரத சேனாபதீயம்' என்று குறித்து வைத்திருந்ததைக் கொண்டு இதற்கு இப்பெயர் வைத்தார்கள் என்று தெரிகிறது.

பிற்காலத்தில் எழுந்த பரத நூல் ஒன்றின் பாயிரப் பகுதி மாத்திரம் இதில் உரையுடன் உள்ளது. நூல் முழுவதும் கிடைக்கவில்லை. ஆயினும் பரதத்தைப்பற்றிய பல அரிய செய்திகள் இதன்கண் அடங்கியிருக்கின்றன. ஐயரவர்கள் குமாரராகிய ஸ்ரீ எஸ். கலியாணசுந்தரையரவர்கள் இதனைப் பதிப்பித்திருக்கிறார். இசை, நாடக ஆராய்ச்சியாளருக்கு இந்நூல் சிறந்த ஆராய்ச்சிக் கருவியாக உதவும். (விலை ரூ. 1-4-0. கலா க்ஷேத்திரம், அடையாறு.)

நவநீத நடனார் என்னும் புலவர் இயற்றியது **நவநீதப் பாட்டியல்** என்னும் பிரபந்த இலக்கணம். இதற்கு இரண்டு பழைய உரைகள் கிடைத்தனவாம். அவற்றோடு ஸ்ரீ கலியாணசுந்தரையரும், ஐயரவர்கள் மாணாக்கராகிய ஸ்ரீ ச. **கு. கணபதி** ஐயரவர்களும் இதனைப் பதிப்பித்திருக்கிறார்கள். (விலை ரூ. 2.) நூலைக் காட்டிலும் நூலின் உரைகள் அதிகப் பயன் உடையவை. முற்காலத்தில் வழங்கிய வேறு பல பாட்டியல்களிலிருந்து பல மேற்கோள்கள் வருகின்றன. பாட்டியலின் சரித்திரத்தை ஆராய்வதற்கு அவை பெரிதும் பயன்படும்.

சைவர்களுக்குள் புராண நூல்களாகச் சிறந்து விளங்கியவை கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் என்னும் மூன்றும். இலக்கியச் சுவையிலும் இவை மூன்றும் சிறந்து விளங்குவன. இக்காலத்தில் கந்த புராணத்தையும், திருவிளையாடலையும் நன்கு பயிலும் வழக்கம் அருகி வருகின்றது. கந்த புராணம் மிகப் பெரிதாக இருப்பதனால் தமிழ் மாணாக்கர்கள் அதனை அணுகுவதில்லை. ஸ்ரீ ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள் இந்தக் குறையைப் போக்க முன்வந்துள்ளார். கந்த புராணச் சொற்பொழிவை வாரந்தோறும் செய்துவரும் அவர் கந்த புராணத்தில் கதைத் தொடர்பு அறாமல் உள்ள இனிய செய்யுட்களைத் திரட்டிப் பொழிப்புரையுடன் வெளியிடத் தொடங்கியிருக்கிறார். இப்போது உற்பத்தி காண்டம் (அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர்; விலை ரூ. 1-4-0.) வெளியாகியிருக்கிறது. பதிப்பு அழகாக அமைந்திருக்கிறது. ஏனைய காண்டங்களும் வெளிவந்தால் தமிழர் மறந்துபோன கந்த புராணம் மீட்டும் அவர்கள் நினைவில் ஏறுவதற்கு வழி உண்டாகும்.

புதிய நாவல்களும் சில தமிழில் இப்போது வருகின்றன. இனி அதிகமாகத் தமிழில் நாவல்கள் வெளியாவதற்கு இது அறிகுறி. சிரஞ்சீவி புது மாதிரியில் எழுதியிருக்கும் '**மின்னும் நக்ஷத்திரம்**' சிறுகதை என்றுதான் சொல்லவேண்டும். (கமலா பிரசுராலயம், விலை ரூ. 2.) இதில் ஆசிரியர் பேசவில்லை; அதனால் நாவல் அல்ல. பாத்திரங்கள் பேசுகிறார்கள்; ஆனால் நாடகமும் அல்ல. பாத்திரங்களும், குறிப்புக்களும், கடிதங்களும் பேசுகின்றன. இதனால் கதையில் விறுவிறுப்பு உண்டாகியிருக்கிறது. வெறும் கதையாக எழுதினால் விஷயம் ஒன்றும் இல்லை என்றுதான் முடியும். ஆனால், எழுதியிருக்கும் புது மாதிரி, கதையைப் பெருக்கி, புதுமை மணத்தை உண்டாக்கி, விறுவிறுப்பையும் கட்டங்களையும் கொண்டுவருகின்றது. இத்தகைய புதுமைகளை ஆதரிக்க வேண்டியது தமிழர் கடமை.

ஜ்யேஷ்டா தேவி

தி. நா. சுப்பிரமணியன்

பெரியவர்களைப் பெயரிட்டு அழைக்கக் கூடாது என்ற பழக்கம் நம் நாட்டிலே வேரூன்றி இருக்கிறது. அதனால் சிறுவர்கள் எவ்விதமான உறவு முறையும் இல்லாத பெரியோர்களை 'அண்ணா' என்றோ, 'மாமா' என்றோ அழைப்பதை நாம் பல சமயங்களில் பார்க்கிறோம்.

ஆயினும், உறவு முறை இருந்தும், உறவு முறையால் அழைக்காமல் பெயரைச் சொல்லியே கூப்பிடப்படுவோர்களும் சிலர் உண்டு. அப்படிப்பட்டவர்கள், இடத்துக்கு இடம், சமூகத்துக்குச் சமூகம் வேறுபடுவர். அவ்விதம் நேரிடுவதற்குக் காரணம் உறவைக் குறிக்கும் சொல்லுக்கு வேறொரு விதமான அர்த்தமும் ஏற்பட்டுவிட்டதே ஆகும்.

உதாரணமாக, 'அம்மாஞ்சி' என்ற சொல் 'அம்மான்சேய்' என்று மாமன் மகனைக் குறிப்பதாயினும், பழக்கத்திலே அதற்கு 'அசடன்' என்ற பொருள் உண்டாகிவிட்டது.

அதே போன்றதுதான் 'அத்தான்' என்ற சொல்லும். தமிழ் நாட்டிலே பெண் தன் அத்தை மகனைக் கல்யாணம் செய்து கொள்ளும் பழக்கம், முறை இருக்கிறது. பெரும்பாலான சமூகங்களில் இது கட்டாயமாக நடந்துவருகிறது. அந்தச் சமூகங்களில் பெண்கள் தங்கள் கணவன்மாரை 'அத்தான்' என்றே அழைக்கிறார்கள். ஆகவே அத்தான் என்ற சொல்லுக்கு அவர்களிடையே 'கணவன்' என்ற பொருள் ஏற்பட்டுவிட்டது.

அதனால் வேறு எவ்விதமான பாந்தவ்யமும் இல்லாமல் 'அத்தான்' 'அம்மாஞ்சி' என்ற உறவு மட்டுமே கொண்ட பெண்கள் ஆடவர்களை அவ்விதம் முறையைக் கொண்டாடி அழைப்பதற்கு மிகவும் கஷ்டப்படுவார்கள்; கூசுவார்கள்.

இதைப் போன்றதே தஞ்சாவூர் ஜில்லாவிலே 'அக்காள்' என்ற சொல்லும். சோழ நாட்டவர்கள் பொதுவாகத் தமக்கையைப் பெயரிட்டு அழைப்பார்களே யன்றி, 'அக்கா' என்று கூப்பிடவே மாட்டார்கள். 'அக்காள்' என்ற பதத்துக்குத் தரித்திரம், மூதேவி என்ற பொருள்களே அங்கு வழக்கில் உள்ளன.

பாற்கடலிலே அறிதுயில் கொண்டு சயனித்திருக்கும் எம்பெருமான் நாராயணன் தேவியான லக்ஷ்மிக்கு ஜ்யேஷ்டா தேவி தமக்கையாம். அதனாலேதான் அவளுக்கு 'அக்காள்' என்ற பெயராம்.

அமரத்துவத்தை அளிக்கும் மருந்தான அமிர்தத்தை அடைவதற்காகத் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது கடலினின்றும் முதலில் ஆலகால விஷமும், அப்பால் லக்ஷ்மியும் தோன்றிய பின்னரே அமிர்தம் கிடைத்ததாகக் கதை. ஜ்யேஷ்டா தேவியும் லக்ஷ்மிக்கு முன்னர், ஆலகால விஷத்தோடு பாற்கடலிலிருந்து கிடைத்தவளாம். முதல் முதலாகக் கிடைத்த தேவியாதலால் அவளுக்கு ஜ்யேஷ்டா தேவி என்ற பெயராம். 'மூத்த தேவி' என்ற தமிழ்ப் பெயரே 'மூதேவி' என்று மருவியது.

தெய்வங்களிலே மனிதனுக்குக் கெடுதியை விளைவிக்கும் தெய்வமும் உண்டோ என்று நான் சிறுவனாக இருந்த போது சந்தேகப்பட்டது உண்டு. அப்படிப்பட்ட தெய்வங்களை வழிபடுவோரும் உண்டோ?

இந்தச் சந்தேகத்தைப் போக்க ஒரு கதையைக் கூறுவர்:

ஒருவன் ஜ்யேஷ்டா தேவியை வழிபட்டு வந்தானாம். அவன் மிக்க ஏழையாம். அதனால் அவன் கஷ்டப்பட்டு அதனின்றும் மீளவே தேவியை வழிபட்டானாம். ஆனால் அவனுக்குச் செல்வத்தை அளிப்பதற்கு அந்தத் தேவியால் முடியாது. எனினும் தன் பக்தனுக்கு ஐசுவர்யத்தை அளிக்க அவள் அருள் கூர்ந்தாள். ஆகவே அவள், தன் பட்டாளத்தை ஏவினாள். அந்தக் கணங்களும் கோட்டான் உருக் கொண்டு, லக்ஷ்மி வரும் வேளையான ஸந்தியா காலத்தில் ஜ்யேஷ்டா தேவியின் பக்தன் வீடு தவிர மற்ற எல்லா வீட்டுக் கூரைகளிலும் அமர்ந்தன. லக்ஷ்மி வந்து பார்த்தாள். கோட்டான் கூடிய வீட்டில் அவள் புக மாட்டாள். அதனால் அவள் மற்ற வீடுகளை விட்டு அந்தப் பக்தன் வீட்டினுள் நுழைந்தாள். இவ்விதம் ஜ்யேஷ்டா தேவி தன் பக்தனுக்கு அநுக்கிரகித்தாளாம்.

லக்ஷ்மியும் இந்தத் தேவியும் மாறுபட்ட குணங்கள் உடையவர்களாதலால் அவர்களுக்குள் ஒற்றுமை இல்லையாம். ஒருவரை ஒருவர் வெறுத்துவருகிறார்களாம். இதை விளக்கும் கதையும் உண்டு.

ஒரு சமயம் அவர்களுக்குள் போட்டி ஏற்பட்டுவிட்டதாம், யார் அழகு வாய்ந்தவள் என்பதைப்பற்றி. அந்த விவாதத்தை எப்படித் தீர்ப்பது? ஆகவே அவர்கள் மத்தியஸ்தனாக ஒருவனை வரித்து, தங்கள் வழக்கைத் தீர்த்து வைக்கும்படி அவனைக் கேட்டுக் கொண்டார்களாம். அவன் பாடு திண்டாட்டமாகி விட்டது. விவாதத்தை எப்படித் தீர்ப்பது? யார் பக்கம் தீர்ப்பு

அளித்தாலும் மற்றவர்க்குக் கோபம் உண்டாகும். ஆகவே அவன் இருவரையும் திருப்தி செய்விக்க எண்ணினான். இருவரையும் கொஞ்ச தூரம் சென்று திரும்பி வரச் சொன்னான். அவர்கள் வந்தவுடன் அவன், "ஜ்யேஷ்டா தேவி போகும்போது அழகாகக் காணப்படுகிறாள்; லக்ஷ்மி வரும்போது அழகாக இருக்கிறாள்" என்று தீர்ப்புக் கூறினானாம்.

இந்தக் கதையில் வேறொரு பொருளும் புதைந்திருக்கிறது. லக்ஷ்மி வருவதையே எல்லோரும் விரும்புவர்; அதே போல ஜ்யேஷ்டாதேவி போவதையே யாவரும் ஆவலுடன் எதிர்பார்ப்பர். அப்போது தானே மக்கள் தரித்திரம் இல்லாமல் நிறை செல்வத்துடன் வாழ முடியும்!

இந்தக் கதைகள் எல்லாம் பிற்காலத்திலே ஏற்பட்டவை.

வாழ்க்கையிலே ஏற்றமும் தாழ்வும் மனிதனுக்கு ஏற்படுவது சகஜம். ஆனால் இதே நியதி அந்த மனிதன் வழிபடும் தெய்வங்களையும் பற்றிக்கொண்டுவிட்டது. மனித சமூகம் வழிபடும் தெய்வமும் எந்தக் காலத்திலும் ஒன்றாகவே இருக்கவில்லை; ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு தெய்வ வழிபாடு இருக்கிறது. சமூகத்தின் மன நிலைக்கு ஏற்ப வழிபடும் கடவுளும் மாறுகிறது.

தமிழ் நாட்டிலே ஜ்யேஷ்டா தேவியின் வழிபாடு ஒரு காலத்தில் பிரபலமாக இருந்திருக்கிறது. இன்றைக்கும் அவள் உருவம் பல கோயில்களில் காணப்படுகின்றன. சாதாரணமாக அது சிவன் கோயில் பிராகாரத்தில் வடமேற்கு மூலையில் அமைக்கப்பட்டிருக்கும். அதனாலேயே அவளுக்கு நிர்ரிதி (நிருதி திக்குக்கு உரியவள்) என்ற பெயரும் உண்டு. எனினும் அநேகமாக இந்நாட்களில் அந்த விக்கிரகத்தைப் பிடுங்கி எறிந்திருப்பார்கள். மயிலாப்பூரில் கபாலீசுவரர் கோயில் குளத்துக்கு வடமேற்கு மூலையில் பிராடீஸ் ரோட்டும் வடக்கு மாட வீதியும் சேரும் இடத்தில் மதில் ஓரமாக உள்ள ஜ்யேஷ்டா தேவியின் விக்கிரகம் இதனையே வலியுறுத்துகிறது.

ஜ்யேஷ்டா தேவியின் உருவம் (இருந்த) உட்கார்ந்த திருக்கோலத்திலேயே காணப்படும். உப்பிய கன்னம், பருத்த வயிறு, தளர்ந்த பெரிய ஸ்தனங்கள், தடித்த துடை, தொங்கும் உதடு, எடுப்பாகவும் சப்பையாகவும் உள்ள மூக்கு - இத்தகைய அழகுடனே காட்சியளிக்கும் அந்த உருவத்துக்கு இரண்டு கைகளும் இரண்டு கண்களுமே உண்டு. மற்றத் தெய்வ ரூபங்களுக்கு உள்ளனவே போல நான்கு கைகள் கிடையா. ஸ்தனங்கள் கொப்பூழ் வரையில் தளர்ந்து தொங்கிக்கொண்டிருக்க வேண்டும் என்று ஆகம சாஸ்திரங்கள் கூறுகின்றன. நிறம் நல்ல கறுப்பு.

ஜ்யேஷ்டா தேவி உட்கார்ந்திருக்கும் முறையும் தனிப்பட்டது. பத்ராஸனம் இட்டு, இரண்டு கால்களையும் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பாள். பிற தெய்வ உருவங்கள் பெரும்பாலும் இம்முறையில் தயாரிக்கப்பட்டிருக்க மாட்டா.

சுருட்டையான தலைமயிரை நெற்றியின் மத்திய ரேகைக்குச் சரியாக வகிடு பிளந்து முடிந்திருக்கக் காணலாம். தலைமயிரைக் கால்களாக வகிர்ந்து பின்னல் போடாமல் அதை அப்படியே முறுக்கிச் சுற்றித் தலையில் முடிந்திருப்பாள். அதனால் அவளுக்கு ஏக வேணி என்ற பெயரும் உண்டு. இவ்விதம் தலைமயிரை முடிந்து அலங்கரித்திருப்பதை வாஸிகா பந்தம் என்று கூறுவர். நெற்றியில் திலகமும், தலையில் ஒரு (கரண்ட) மகுடமும் உண்டு.

வலது கையில் நீலோற்பல மலரை ஏந்தியும் இடது கையைத் துடை மீது ஊன்றியும் இருக்கக் காணலாம். ஆகமங்களில் தேவி ஒரு கையை அபய முத்திரையில் வைத்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் விக்கிரகங்கள் வேறு விதமாகவே அமைக்கப்பட்டுள்ளன.

தேவியின் வலது புறத்தில் மாட்டின் முகம் கொண்ட ஆண்மகன் உருவம் ஒன்றும், இடது புறத்தில் அழகிய மங்கையின் உருவமும் இருக்கக் காணலாம்.

அவ்விருவரும் தேவியின் குழந்தைகள். அவர்களுக்கும் இரண்டு கைகளே உள்ளன. மாட்டின் முகம் கொண்ட ஆடவன் தன் இடது காலை ஆஸனத்தில் கிடத்தி வலதுகாலைத் தொங்கவிட்டு உட்கார்ந்திருப்பான். வலது கையில் தண்டத்தையும் இடது கையில் ஒரு பாசக்கயிற்றையும் ஏந்தியிருக்கக் காணலாம். சில சமயங்

சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் உள்ள உருவம்

கும்பகோணத்தில் உள்ள உருவம்

களில் இடது கை தேவியைச் சுட்டிக் காட்டும் முத்திரையிலும் அமைந்திருப்பது உண்டு.

இடது புறம் உள்ள தேவியின் குமாரி நல்ல அழகுடன் காணப்படுவாள். இளம் வயசு. அவளும் தன் சகோதரனைப் போலவே இடது காலைத் தொங்கவிட்டும் வலது காலை ஆஸனத்தின் மீது கிடத்தியும் உட்கார்ந்திருக்கக் காணலாம். ஒருகால் சித்திரத்தின் தோற்றம் சமமானதாக இருக்கவே இவ்விதம் சிற்பி அமைத்துள்ளான் போலும்! அவன் தன் இரு கைகளிலும் நீலோற்பல மலரை ஏந்தியிருப்பாள். ஆனால் சிற்பங்களிலே எப்போதும் இதே மாதிரி காணப்படுவதில்லை.

தமிழ் நாட்டிலே உள்ள மிகப் பழைமையான ஜ்யேஷ்டா தேவி விக்கிரகம் செங்கற்பட்டுக்குப் பக்கத்தில் உள்ள வல்லம் கிராமத்தில் கிடைப்பதாகும். அந்த ஊரிலே பல்லவ மஹேந்திர வர்மன் காலத்தில் (கி. பி. ஏழாம் நூற்றுண்டின் முற்பகுதியில்) குடையப்பட்ட குடைவரைக் கோயில் ஒன்று இருக்கிறது. அங்கே நடுவில் சிவலிங்கமும் ஒருபுறம் பிள்ளையாரும் மறுபுறம் ஜ்யேஷ்டா தேவியும் அர்த்த சித்திரமாக அமைக்கப்பட்டிருக்கிறுர்கள்.

பல்லவர் ஆதிக்கியம் பெற்று வாழ்ந்த காலத்திலே, அதாவது கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டுக்கு முற்பட்ட காலத்திலே, தமிழ் நாட்டிலே ஜ்யேஷ்டா தேவியின் வழிபாடு அதிகமாகவே இருந்திருக்க வேண்டும் என்று தோற்றுகிறது. அந்த நாட்களிலே அவளுக்கெனத் தனியான கோயில்கள் பல அமைக்கப்பட்டும் வந்தன.

திருப்பரங்குன்றத்திலே பின்வரும் கல் வெட்டு, பொறிக்கப்பட்டுள்ளது :

1. ஸ்ரீ கோமாறஞ் சடையர்க்கு
ராஜ்ய வர்ஷம் ஆறவது செல்லா
நிற்ப மற்றவர்க்கு மஹா
சாமந்தனுகிய கரவந்த புராதி
5. வாஸி வைஜ்யன்[1] பாண்டி அமி
ர்த மங்கல வரையனுயி
ன சாத்தன் கணவதி தி
ருத்துவித்தது திருக்கோயி
லும் ஸ்ரீதடாகமும் இதனுள
10. றழள்ளதும் மற்றவ
ர்க்கு தர்ம்ம பன்னி[2] ஆகிய ந
க்கங் கோற்றியார் சேய
ப்பட்டது துர்க்கா தேவி கோ
14. யிலுந் ஜ்யேஷ்டை கோயிலும்.

இது எட்டாம் நூற்றுண்டின் மத்தியிலே பொறிக்கப்பட்டது. இப்போது திருப்பரங்குன்றத்திலே முருகக் கடவுள் ஆலயமாக வழிபட்டு வருவதே கல் வெட்டில் குறிக்கப் பட்ட ஜ்யேஷ்டா தேவியின் கோயில் என்று காலஞ்சென்ற து. அ. கோபிநாத ராயர் கருதிவந்தார். முருகக்கடவுள் உருவமாக நாம் கருதி வழிபடுவது ஜ்யேஷ்டா தேவியின் திருவுருவமே என்று அவர் நிச்சயமாகக் கூறினர்.

எனினும் நாம் அதை அப்படியே ஒப்புக் கொள்ள முடியாது என்று மற்ருேர் ஆசிரியரான காலஞ்சென்ற கிருஷ்ண சாஸ்திரிகள் கூறியிருக்கிருர். அந்த விக்கிரகங்கள் மிகவும் ஜீர்ணமாகித் தேய்ந்து போயிருப்பதால், ஆணுருவமா பெண்ணுருவமா என்பதையே நாம் தீர்மானிக்க முடியாத நிலையில் இருக்கிருேம்.

ஜ்யேஷ்டா தேவியைப் பற்றிய மிகப் பழமையான குறிப்பு, தற்போதுள்ள தமிழ் இலக்கியத்திலே திருக்குறளிலே இருக்கிறது. அந்நூலிலே இவள் பெயர் தௌவை என்றும் முகடி என்றும் இரண்டு இடங்களில் வந்துள்ளது. எனினும் அந்த இரண்டு இடங்களிலும் அது பழிப்புச் சொல்லாகவே காணப்படுகின்றது.

திருவெள்ளவாயிலில் உள்ள உருவம். மற்ற உருவங்களில் காணப்படும் யஜ்ஞோபவீதம் இந்த உருவந்துக்கு இல்லாதது குறிப்பிடத்தக்கது.

[1] வைத்தியன் [2] பத்தினி

ஆழ்வார்களுள் கால வரையறையில் முற்பகுதியைச் சேர்ந்த தொண்டரடிப் பொடியாரும் தம் காலத்தில் ஜ்யேஷ்டா தேவியின் வழிபாடு அதிகம் இருந்ததைக் குறித்துத் திருமாலையில் வருந்துகிறார்.

நாட்டினான் தெய்வம் எங்கும்
நல்லதோர் அருள்தன் னாலே
காட்டினான் திருவ ரங்கம்
உய்பவர்க்கு உய்யும் வண்ணம்
கேட்டிரே நம்பி மீர்காள்!
கெருடவா கனனும் நிற்க,
சேட்டை தன் மடிய கத்துச்
செல்வம்பார்த் திருக்கின் றீரே.

நிஜாம் சம்ஸ்தானத்திலே குக்கனூர் என்னும் இடத்தில் உள்ள கோயிலைத் தவிர ஜ்யேஷ்டா தேவிக்கெனத் தனிக் கோயில் இப்போது ஓர் இடத்திலும் காணப்படவில்லை.

இவ்விதம் ஒரு காலத்தில் பிரபலமாக இருந்த இத்தேவியின் வழிபாடு எப்படித் திடீரென்று மறைந்தது? அவளுக்குத் தரித்திரத்தின் அதிதேவதை என்ற பெயர் ஏன் உண்டாயிற்று? இவை போன்ற விஷயங்கள் இன்னும் தெளிவாகவில்லை.

மயிலாப்பூரில் உள்ள உருவம்

அவள் வழிபாடு பிரபலமாக இருந்த காலத்திலே, தேவிக்கு அத்தகைய இழிசொல் இருந்திருக்கவில்லை என்பது நிச்சயம். போதாயன கிருஹ்ய ஸூத்திரத்திலே ஜ்யேஷ்டா தேவியின் ஆராதனையைப் பற்றி ஓர் அத்தியாயம் சொல்லுகிறது. அவளை வழிபட வேண்டிய முறை அங்கே நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் அவள் வழிபாடு குன்றியவுடனே அவளுக்கு முகடி, தௌவை, கலதி, கெடில் அணங்கு என்ற பல்வேறு பெயர்கள் உண்டாயின. அவளுக்குக் கழுதை வாகனமாகவும், துடைப்பம் படையாகவும் கற்பிக்கப்பட்டன. கொடியாகக் காக்கையைக் கொண்டார்கள்.

இத்தேவியின் வழிபாட்டில் மற்றொரு விசேஷமும் உண்டு. இவளைப்பற்றிய குறிப்புக்களும் விக்கிரகங்களும் தமிழ் நாட்டிலோ அதைச் சுற்றிய பகுதிகளிலோ தான் கிடைக்கின்றன. பிற இடங்களில் இல்லை. வட நாட்டாருக்கு இவள் பெயரே புதிதாகத் தோன்றும். ஜ்யேஷ்டா தேவியைப்பற்றி வட நாட்டார் அறியார்.

அன்றி, சங்க நூல்களிலும் இவள் பெயர் காணப்படவில்லை. அதனால் தமிழ் நாட்டிலே இடைப்பட்ட காலத்தில் திடீரென்று தோன்றி, சிறிது காலம் ஆதிக்கியம் பெற்று விளங்கி, எப்படித் தோன்றியதோ அதே மாதிரி திடீரென்று மறைந்து போயிற்று ஜ்யேஷ்டா தேவியின் வழிபாடு என்றே நாம் கொள்ள வேண்டும். அது எங்கிருந்து எவ்விதம் தமிழ் நாட்டுக்கு வந்தது, எதனால் மறைந்தது என்பன போன்ற விஷயங்கள் தமிழ் நாட்டுச் சரித்திரத்தின் புதிர்களாகவே இருக்க வேண்டிய நிலைமை இன்னும் மாறவில்லை.

முயற்சித்தல்

பணத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் பாஷையிலும் சிக்கனத்தை மேற்கொள்வது. 'சுருங்கச் சொல்லல்' என்பதை ஓர் அழகாகவே தமிழ் இலக்கணம் சொல்கிறது. 'மிகைபடக் கூறல்' என்பதோ குற்றங்களில் ஒன்று. வார்த்தைகளில் கூட இந்தச் சிக்கனத்தை உபயோகிக்க வேண்டும். முயல் என்பது ஒரு வினைச்சொல். அதிலிருந்து 'முயற்சி' என்ற தொழிற் பெயர் பிறந்தது. முயலுதல் என்பது அதன் பொருள். வினையிலிருந்து பிறந்த அதிலிருந்து மீட்டும் ஒரு வினையை உண்டாக்கி 'முயற்சிக்கிறேன்' என்று சிலர் எழுதுகிறார்கள். 'முயலுகிறேன்' என்று சொன்னாலே போதும். அந்த வார்த்தை இருக்கும்போது 'முயற்சிக்கிறேன்' என்று வழங்குவது சிக்கனத்துக்கு விரோதமானது. இரட்டிப்பு வேலையின் பயன் அது. சொல் இலக்கணப்படி அது பிழை இல்லாமல் இருக்கலாம். ஆனாலும் பாஷையின் பொது இலக்கணத்தின்படி அது அநாவசியந்தான்.

இரண்டு குரல்கள்

கு. அழகிரிசாமி.

தலைவி :

1

அந்திப் பொழுதில், இளம்—தென்றல்
அநுப வத்தினிலே
சிந்தைத் துயர் தவிர்க்க—மாடத்தைச்
சேர்ந்த னன்யானும்.

2

தென்மலை யில்பிறந்து—மழலைச்
சேயெ னத்தவழ்ந்து,
என்னுடல் தீண்டவரும்—காற்றே
இவ்வுரை கேளாயோ?

3

'தோழியர் தேற்றிடினும்—கிள்ளைச்
சொல்லினும் ஆற்ருது,
ஊழியாய் நாள்கழித்தே—உழலும்
உன்னுயிர்க் காதலியை,

4

கடிதிற் சென்றேஅன்பாய்க்—குலவிக்
கவலை தீராயேல்,
மடிவ தும்திண்ணம்—அவள் தான்
மனக் கவலையுற்றே'

5

என்றுரை செய்யாயோ—அந்நாள்
என்னைப் பிரிந்தவற்குத்
தென்றற் சிறுகுழந்தாய்,—நீள்வழி
சென்றிட வல்லோய், நீ?

6

திங்கள் அரசாளும்—அகன்ற
செய்யதோர் வானத்தின்
கங்குலின் தூதுவராம்—இமைக்கும்
கண்ணுடை விண்மீன்காள்!

7

மண்ணிடை உம்கண்கள்—காணு
மறைவி டம்உளதோ?
கண்மணி போல்வானை—இன்னே
காணவும் வல்லீரே!

8

'கண்மலர் வாடியது;—வனப்பும்
கரிந்து போயினது;

தண்ணெனும் எப்பொருளும்—எரியும்
தழலும் ஆயினதே ;

9

ஆறுதல் யாதும்இல்லை—அவளுக்கு
அன்புரை கூறும்உன்னை
நேரிலே காண்பதல்லால்'—எனும்சொல்
நேய னிடம்உரையீர் ?

10

காயும் நிலாஒளியில்— மணம்தரு
காற்றினில், வண்டொலியில்
போயின நாட்களுடை—நினைவும்,
பொலிவும் தோன்றுமம்மா !

தலைவன் :

1

உள்ளத் திரையிடத்தே—அவள்தன்
உருவச் சித்திரந்தான்
துள்ளும் உயிர்பெறினும்—மனத்தின்
துயர் தவிர்த்திடுமோ ?

2

சென்றஅந் நாள்நடந்த—பற்பல
செய்தியை, ஓவியமாய்
இன்றுயான் காண்பதுபோல்—வானத்தில்
எழுதும் விண்மீன்காள் !

3

கண்ணிமை ஆற்றலினால்—என்றன்
காதற் குரியாளின்
விண்ணுல கத்துறவாய்—நீவிர்
விளங்கும் காரணத்தால்

4

'மாட மிசைஇருந்து—அவள்,தன்
மாந்தளிர் மேனியெல்லாம்
வாட, நினைந்தரற்றித்—துடிக்கும்
வன்துயர்' கூறுகின்றீர்.

5

மெல்லிய லார்உயிர்ப்பை—நிகர்த்து,
மெய்யுற வாடுகின்ற
மெல்லிய பூங்காற்றும்—அவளின்
மீத்துயர் கூறிநிற்கும்.

6

அண்டப் பரப்பினில்யான்—பிரிவால்
அடையும் நோய்வலியைக்
கொண்டுயிர்க் காதலியாம் - மின்னற்
கொடிக்குக் கூறுவர் யார் ?

7

ஆருயிர் நண்பினரோ—அன்றி
அன்பின் உறவினரோ,
ஆரையும் காண்கிலனே—உலகில்
ஆண்செய்த பாவம் இதோ !



ஒரே நாடு

சி. சுப்பிரமணிய பாரதியார்

சென்ற வெள்ளிக்கிழமை (1-6-1917) அன்று நெல்லூரில் கூடிய ஆந்திர மஹாசபையில் சபாநாயகர் ஸ்ரீ வேங்கடப்பைய பந்துலு செய்த உபந்நியாஸம் கவனிக்கத்தக்கது. ராஜநீதி சாஸ்திரத்தில் தெலுங்கர் நெடுங்காலத்துப் பெருமையுடையார். பாடலீபுத்ர நகரத்தில் நடந்த ஆந்திர ராஜ்யமும் பிற்காலத்தில் தமிழ் நாட்டைக் கட்டி ஆண்ட விஜயநகரத்து ராஜ்யமும் கீர்த்தி மிகுந்தன அன்றோ? தெலுங்கர் தமிழரை ஆண்ட அடையாளங்கள் நமது பாஷையிலும் ஆகாரங்களிலும் அழிக்கமுடியாதபடி பதிந்து கிடக்கின்றன. நமது சங்கீதமும் நாட்டியமும் தெலுங்கிலேயே இன்று வரை முழுகிக் கிடக்கின்றன. பாடகர்கள் பாடும் கீர்த்தனங்களில் உயர்தரமெல்லாம் தெலுங்குக் கீர்த்தனங்கள். தாசிகள் ஆட்டத்தில் பாடும் வர்ணங்கள் ஜாவளிகள் முதலியவற்றில் நல்ல உருப்படி எல்லாம் தெலுங்கு. நம் கிராமங்களிலுள்ள தெலுங்க ரெட்டிகளும், நாயுடுமாரும், ஆந்திரப் பிராம்மணப் புரோகிதர்களும், தெலுங்க தாசிகளும் ராயர் சமஸ்தான காலத்தில் இங்கே நிலை பெற்றவர்கள். நமது விவாக காலங்களில் பாடும் பத்தியம், லாவி முதலானவை எல்லாம் தெலுங்கு முறை. நமது பாஷையில் கவனம் (ஆழ்ந்து நோக்குதல்), ஸொகுஸு, எச்சரிக்கை, துரை, வாடிக்கை, கொஞ்சம் முதலிய பதிற்றுக் கணக்கான தெலுங்குச் சொற்கள் சேர்ந்திருக்கின்றன. தெலுங்கர் தமிழ் நாட்டை ஆண்டபோது அநீதியே இல்லை. தமிழருக்கு வேறு நீதி, தெலுங்கருக்கு வேறு நீதி என்ற பேதம் இல்லை. தெலுங்கு ஜாதி ராஜநீதியிலே நிபுணத்தன்மை உடையது.

மேற்படி கொள்கைக்கு நல்ல திருஷ்டாந்தமாக இக்காலத்திலுங்கூடத் தெலுங்கு தேசத்தார் தமிழரைக் காட்டிலும் ராஜாங்க வியவஹாரங்களில் தீவிரபுத்தி செலுத்துகிறார்கள். ஆனால் நமக்குள் ஜாதிபேதம் இருக்கிறதே என்றால், ஜாதிபேதம் இந்தியாவில் மாத்திரமல்ல; உலகத்தில் எல்லாத் தேசங்களிலும் இருக்கிறது. இந்தியாவில் கொஞ்சம் தீவிரமாகவும் விநோதமாகவும் மாற்றுவது கஷ்டமாகவும் இருக்கிறது. இப்போது பூமி முழுவதிலும் நடந்துவரும் மஹாப்ரளயத்தில் இந்த ஜாதி பேதம் தவிடு பொடியாய்ப் போய், புதிய மாதிரி உண்டாகும். இதெல்லாம் என் சொல்ல வந்தேனென்றால், தமிழ்நாட்டு ஜனங்கள் வீண் சண்டைகளிலே பொழுது போக்குகிறார்கள். தெலுங்கர் ஜனாபிவிருத்திக்கு வழியாகிய நல்ல உபாயங்களிலே புத்தி செலுத்திவருகிறார்கள். சுதேசிய விஷயத்தில் இப்போது தெலுங்கருக்குள் இருக்கும் பக்தி சிரத்தையிலே நாலில் ஒரு பங்குகூடத் தமிழ் ஜனங்களிடம் இல்லை. சென்ற வெள்ளிக்கிழமையன்றுகூட மேற்படி நெல்லூர் ஆந்திர மஹாசபைப் பந்தலில் வந்தே மாதரம் என்ற கோஷம் அபரிமிதமாக இருந்தது என்று தந்தி சொல்லுகிறது. கொஞ்ச காலத்துக்கு முன்பு கடலூரில் கூடிய மாகாண சபையில் "வந்தே மாதரம்" பாட்டுக்கூடப் பாடவில்லை என்று கேள்விப்பட்டேன். தெலுங்கு ஜில்லாக்களில் ஒரு சபைகூட அப்படி நடந்திராது. இது நிற்க.

மேற்படி சபையில் ஸ்ரீ வேங்கடப்பையா சபாநாயகராகப் பேசிய வார்த்தைகளின் சாரம் பின்வருமாறு :—

1. தெலுங்கு தேசத்தைத் தனி மாகாணமாகப் பிரிக்கவேண்டும்.

2. இந்தியாவுக்குத் தன்னாட்சி கொடுக்கவேண்டும்.

3. இயன்றவரை இந்தியா முழுதையும் பாஷைகளுக்குத் தக்கபடி வெவ்வேறு மாகாணமாக்கவேண்டும். அதாவது மதராஸ், பம்பாய், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், பஞ்சாப், வங்காளம் என்ற பிரிவுகளை மாற்றித் தமிழ் நாடு, தெலுங்கு நாடு, மராட்டிய நாடு, கன்னட நாடு, ஹிந்துஸ்தானம், வங்க நாடு என்று பாஷைக்கிரமப்படி வகுக்கவேண்டும்.

4. ஸ்வபாஷைகளில் கல்விப்பயிற்சி செய்விக்கவேண்டும். ராஜ்ய காரியங்களும் இயன்றவரை ஸ்வபாஷையில் நடக்கவேண்டும்.

மேற்படி நாலு அம்சங்களில் முதலாவது, மூன்றாவது, நாலாவது இம் மூன்றும் ஒரு பகுதி. இரண்டாவது மற்றொரு பகுதி. இரண்டாவது தாய்ப் பகுதி. மற்றவை கிளைப் பகுதிகளாகும்.

என்னுடைய அபிப்பிராயத்தில் மேற்கண்ட கொள்கையெல்லாம் நியாயமென்றே தோன்றுகிறது. ஆனாலும் இந்த ஸமயத்தில் ஆந்திரரைத் தனிப் பிரிவாக ருஜூப்படுத்துவதைக் காட்டிலும், ஆஸேது ஹிமாசலபரியந்தம் உள்ள ஹிந்துக்களெல்லாம் ஒன்று என்ற மூலமந்திரத்தை நிலைநாட்டுவதே அவசியம் என்று என் புத்திக்குத் தோன்றுகிறது. ஹிந்துக்களெல்லாம் ஒரே கூட்டம். வேதத்தை நம்புவோரெல்லாம் ஸகோதரர், பாரத பூமியின் மக்கள், எல்லாம் ஒரே தாய் வயிற்றுக் குழந்தைகள். நமக்குள் மதபேதம், ஜாதி பேதம், குல பேதம், பாஷா பேதம் ஒன்றுமே இல்லை. இந்தக் கொள்கைதான் இந்தக் காலத்துக்கு யுக்தமானது. ஹிந்து மதத்தை உண்மையாக நம்புவோரெல்லாம் ஒரே ஆத்மா, ஒரே உயிர், ஒரே ரத்தம், ஒரே குடர்; ஒன்று.

ஏமாந்த நரி

பாப்பா

ஒரு நாள் இரவு ஒரு கிழ நரி பசியால் மிகவும் களைத்துப் போய் விட்டது. பலம் இல்லாதபடியால் எங்கும் போய் ஓடி ஆட முடியவில்லை. அன்று காலையிலிருந்து ஓர் இரையும் அதற்குக் கிடைக்கவில்லை. கடைசியாக அது மிகுந்த வருத்தத்துடன் தன் குகையை நோக்கிப் போகும்போது அதிருஷ்டவசமாக ஒரு பூனைக்குட்டி எதிர்ப்பட்டது. அதைப் பார்த்ததும் நரியின் நாக்கில் தண்ணீர் ஊறிற்று. அதை மிரட்டித் தின்றுவிடலாமென்று தீர்மானித்துக்கொண்டது. அந்தப் பூனைக்குட்டியைப் பார்த்து, "ஏய் பூனைக்குட்டியே, நீ மிகவும் சிறியவன். நான் போகும் வழியில் குறுக்கே வருகிறாயா? எனக்கும் பசியாக இருக்கிறது. இப்போதே உன்னைக் கொன்று தின்று விடுகிறேன்" என்று பயமுறுத்தியது.



இதைக் கேட்ட பூனைக்குட்டி மிகவும் திகிலடைந்து போய் விட்டது. இருந்தாலும் சாமர்த்தியசாலியாகிய அது நிதானித்துக்கொண்டது. தன்னுடைய இயற்கையான வஞ்சனைக் குணத்தினால் நரியை ஏமாற்ற நினைத்தது. அது நரியைப் பார்த்து, "அண்ணா! தாங்கள் சொல்வது உண்மைதான். தாங்கள் வருவது தெரியாமல் நான் வந்துவிட்டேன். தாங்கள் என்னைச் சாப்பிட்டுவிடுவதில் ஆக்ஷேபம் இல்லை. ஆனால் நான் மிகவும் சிறியவன். தங்களுடைய கால் வயிற்றுக்குக்கூடப் போதமாட்டேன். ஆகையால் நான் வரும்போது வழியில் ஓர் இடத்தில் நிறைய பணியாரம் இருப்பதைப் பார்த்தேன். உடனே யாராவது பெரியவர்களிடம் சொல்லலாம் என்று வந்தபோது தாங்களே எதிரில் வந்துவிட்டீர்கள். ஆதலால் அந்தப் பணியாரத்தைத் தின்றவுடன் என்னையும் சாப்பிட்டால் தங்கள் வயிறு நிரம்பும்" என்றது.

பணியாரம் என்றவுடன் நரிக்கு நாக்கில் ஜலம் அதிகமாக ஊற ஆரம்பித்தது. கடைசியில் பூனைக்குட்டியைத் தின்றுவிடலாம் என்று நினைத்து, பூனைக்குட்டியைப் பார்த்து, "அடே! அப்படியானால் அது இருக்கும் இடத்தைக் காட்டு. அதைத் தின்ற பிறகு உன்னைத் தின்கிறேன்" என்றது.

பூனையும் அதை ஓர் ஆழமான கிணற்றண்டை அழைத்துச் சென்றது. அங்கே கிணற்றைச் சுட்டிக்காட்டி, "அண்ணா, இதன் உள்ளே பாருங்கள். இங்கேதான் யாரோ அதை ஒளித்து வைத்திருக்கிறார்கள். நான் முதலில் இறங்கி எடுத்து வருகிறேன்" என்று சொல்லியது. அந்தக் கிணற்றின் ராட்டினத்தில் ஒரு கயிற்றில் இரு முனைகளிலும் இரண்டு வாளிகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. பூனை அதில் ஒரு வாளியில் குதித்தவுடன் அந்த வாளி கிணற்றில் இறங்கியது. பூனை ஜலத்தின் அருகில் போனவுடன் வாளியிலிருந்து குதித்துக் கயிற்றில் தொத்திக்கொண்டது.

கரையில் ஆவலுடன் காத்துக்கொண்டிருந்த நரி பூனை கயிற்றில் ஏறியிருப்பதைப் பார்த்தவுடன் கோபம் கொண்டு, "அடே மூடா! ஏன் இன்னும் எடுத்து வராமல் இருக்கிருய்?" என்று அதட்டிக் கேட்டது.

பூனை, "அண்ணு, பணியாரம் அதிகப் பளுவாக இருப்பதால் என் ஒருவனுல் தூக்க முடியவில்லை. ஆகையால் தாங்கள் மற்ருெரு வாளியில் இறங்கி வாருங்கள். இருவரும் தூக்கி மேலே எடுத்துப் போகலாம். உங்கள் பசிக்கும் ருசிக்கும் ஏற்றதாக இருக்கும்" என்றது.

பாவம்! அதனுடைய வார்த்தையை மெய் என்று நம்பிய நரி, தன் ஆத்திரத்தில் முன்பின் யோசியாமல் வாளியில் குதித்தது. உடனே நரி பூனையைவிட அதிகப் பளுவாகையால் அதனுடைய வாளி சரசரவென்று கீழே கிணற்றில் இறங்கியது. பூனையினுடைய வாளி மேலே வந்தது. மேலே வந்த பூனை சட்டென்று கரையில் குதித்துக் கிணற்றின் கரையில் உட்கார்ந்துகொண்டு, "ஓய் நரியாரே, பணியாரம் ருசி எப்படி? அதிகமாகச் சாப்பிட்டுவிடாதேயும். பாவம்! வயிற்றை



வலிக்கப் போகிறது. இனியாவது செய்வதை நன்ருக யோசித்துச் செய்வதுடன் எளியவரைக் கொல்ல நினைக்காதேயும்" என்று கூறிவிட்டு, 'மியாவ்' என்று இனிமையாகக் கூவிக்கொண்டே ஓடிவிட்டது.

பாவம்! கிணற்றில் விழுந்த மூடக் கிழட்டு நரி மேலே ஏறி வர முடியாமல் மூழ்கி இறந்தது.

(ஆங்கிலக் கதையைத் தழுவியது.)

கல்விக்கிரகம்

குன்றக்குடி மடத்தில் அப்பாப்பிள்ளை என்ற அதிகாரி ஒருவர் இருந்தார். அவர் தமிழறிவும் வாய்ந்தவர். வேடிக்கையாகவும் இரு பொருள் படவும் பேசுவதில் அவர் சமர்த்தர்.

ஒரு சமயம் ஒரு பிரபு மடத்திற்கு வந்தார். அவர் நல்ல உடல்வன்மை வாய்ந்தவர். கல்வியில் ஆர்வம் இல்லாதவர். அவர் இயல்பை அப்பாப்பிள்ளை நன்கு அறிவார். மடத்திற்கு அவர் வந்த காலத்தில் உடன் இருந்த நண்பர்களிடம் அவரை இன்னுரென்று சொல்லிவிட்டு, "இவர்கள் கல்விக்கிரகம்" என்று கூறினுர். கேட்டவர்கள் அவர் படிப்புக்கு இருப்பிடம் என்று எண்ணிக்கொண்டார்கள்.

பிரபு போனவுடன் அப்பாப்பிள்ளையின் நண்பர்களில் ஒருவர் அவரைப் பார்த்து, "என்ன ஐயா, ஒரேயடியாகப் புளுகுகிறீர்? அந்த நிரக்ஷரகுக்ஷியைக் கல்விக்கிரகம் என்று சொன்னீரே?" என்று கேட்டார்.

உடனே அவர், "நான் சொன்னதில் என்ன பிழை? நான் அவர் கல்லாலான விக்கிரகத்தைப் போன்றவர் என்றுதானே சொன்னேன்? படித்தவரல்ல என்பதைத்தான் அப்படிக் குறிப்பித்தேன்" என்று சாதுர்யமாக விடை அளித்தார்.

இப்படிப்பட்ட மரங்கள்

மற்ருெரு சமயத்தில் ஒரு பிரபுவின் அழைப்புக்கிணங்கி அவருடைய தோட்டத்தைப் போய்ப் பார்த்தார். பார்த்துச் சந்தோஷிக்கும்படியாக அது இல்லை. பிரபு அவரிடம், "தோட்டம் எப்படி?" என்ருர். "நான் இப்படிப்பட்ட மரங்களை எங்கும் பார்த்ததில்லை" என்று பதில் கூறினுர். 'இப்படிப் பட்டுப்போன மரங்களை நான் பார்த்ததில்லை' என்ற குறிப்பும் அவர் பேச்சில் அடங்கியிருந்தது.